கலைஞரின்
கடிதங்கள்



5

03.04.1977 - முதல்
04.10.1977 - வரை

சீதை பதிப்பகம்

தி.மு.க. அறிவாலயம்
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
அண்ணா அறிவாலயம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 5

03.04.1977 - 04.10.1977

தலைவர் கலைஞர்



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
சேகர் ஆப்செட், சென்னை–5.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
SEKAR OFFSET, CHENNAI - 5.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 1 மாதம் 6 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:


“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அனபுடன்,



(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

395. வேந்தனும் - விதூஷகனும்!	03-04-1977	23
396. தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்!	04-04-1977	27
397. ஏடுகள் பலவிதம்!	05-04-1977	32
398. கண்டேன் கிழச் சிங்கத்தை!	07-04-1977	35
399. "உன்னையும் என்னையும் பிரிக்க முடியாது!"	08-04-1977	39
400.""விசாரணைக் கமிஷன்" சில கருத்துக்கள்!	09-04-1977	42
401. அழுத்தம் திருத்தமாக அறிவிக்கிறேன்!	10-04-1977	49
402. நினைவுக்குக் கொஞ்சம் வேலை தர வேண்டுகின்றேன்!	13-04-1977	53
403. கோபுரத்தில் ஏறி நின்று கூவத்தான் போகின்றன!	15-04-1977	57
404. சதாசிவம் குழு அறிக்கையும், சரியான தகவல்களும்!	16-04-1977	63
405. கழகக் கருவூலம் - களவு போக விடலாமா?	19-04-1977	68
406. பெருமையைப் பிச்சையாகக் கேட்கிறேன்!	20-04-1977	75

407. அவர்கள் பணியும் நமது அணியும்!	21-04-1977	84
408. தமிழுக்கோர் காவல் குழு!	22-04-1977	92
409. கண்ணுக்கு விருந்தானாய் - மனப்புண்ணுக்கு மருந்தானாய்!	27-04-1977	96
410. இலங்கைத் தமிழரின் இணையற்ற செல்வம்!	28-04-1977	101
411. பொது எதிரியைப் புரிந்து கொள்வோம்!	30-04-1977	104
412. போர்வாளே - புறப்பட்டு வா!	08-05-1977	108
413. பயணத்தில் - பல கட்டங்கள்!	10-05-1977	111
414. ஆதித்தன் கனவு - படமல்ல, பாடம்!	11-05-1977	115
415. அண்ணா சொன்ன அர்ச்சுனன் கதை!	13-05-1977	119
416. இளவதனன் மீது ஆணை!	26-05-1977	123
417. ஓயாதே - உறங்காதே!	27-05-1977	127
418. அறைகூவலை ஏற்கிறாரா?	28-05-1977	129
419. பிறந்தநாள் செய்தி!	01-06-1977	133
420. எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்!	08-06-1977	135
421. ஏதோ ஒன்றை எதிர்பார்த்து...!	18-06-1977	140
422. இசையும் - இருமலும்!	21-06-1977	148
423. நற்பணியில் ஒரு பணி!	22-06-1977	152
424. நாடு தாங்கும் வரையில் நடக்கட்டும்!	23-06-1977	156
425. வெண்ணெய் உருகுது வெயிலில்!	24-06-1977	160

426. செயற்கைக் கொண்டைகள்! ஜாக்கிரதை!	25-06-1977	165
427. குவியட்டும் பெருநிதி!	26-06-1977	169
428. நந்தினியின் குரலும் - நமது குரலும்!	28-06-1977	172
429. பொய்மை நிறைந்த பேச்சு! பொறுப்பற்ற பேச்சு!!	02-07-1977	178
430. தொலைவில் இல்லை வெற்றிப் பூங்கா!	03-07-1977	183
431. குறுந்தொகைப் பாவைபோல!	04-07-1977	188
432. அண்ணன் காட்டிய சிலை!	05-07-1977	192
433. மெழுகுவத்தியாகப் பிறந்து விட்டால்...!	06-07-1977	197
434. வரலாறு சுட்டிக் காட்டிடும்!	07-07-1977	201
435. காஞ்சியில் நீதிதேவன் மயக்கம்!	08-07-1977	204
436. நாடகத்தில் ஒரு காட்சி!	10-07-1977	207
437. “கன்னா பின்னா கவிஞர்!”	11-07-1977	213
438. இருப்பதை இழந்திடோம்!	12-07-1977	218
439. உண்மையை உணர்ந்திடுக!	13-07-1977	221
440. சந்து முனையிலா? அல்ல! அல்ல!!	14-07-1977	224
441. நீதி விசாரணைகள் தொடங்கட்டும்!	17-07-1977	227
442. சிலரது வாயை மூடுவது நல்லது!	19-07-1977	232
443. புனித ராஜ்யம் காட்சி - 2!	21-07-1977	238
444. காதலிக்க நேரமில்லை!	22-07-1977	243
445. கழகமும் முஸ்லீம்களும்!	23-07-1977	248

446. புனித ராஜ்யம் காட்சி - 3!	26-07-1977	251
447. தமிழ் மகனே! தளராதே!!	27-07-1977	257
448. குருவித் தலையில் பனங்காய்!	28-07-1977	260
449. "விடுதலை"யின் வியப்பு!	29-07-1977	263
450. நெருப்பு வளையம் நீங்கிட...!	30-07-1977	266
451. சேலைச்சவால் வீரரும், சில செய்திகளும்!	01-08-1977	269
452. சிந்தித்தால் புரியும்!	05-08-1977	274
453. காலம் மாறுகிறது!	06-08-1977	278
454. இரத்தத் திலகம்!	11-08-1977	282
455. தேசீய நீரோட்டமும் திராவிட இயக்கமும்!	12-08-1977	286
456. மீண்ட சுதந்திரம்!	14-08-1977	291
457. அலட்சியம் கூடாது!	15-08-1977	294
458. வாளும் - கேடயமும்!	18-08-1977	297
459. புனித ராஜ்யம் காட்சி - 4!	20-08-1977	301
460. வணக்கமும், நன்றியும்! வாழ்த்தும், பாராட்டும்!	25-08-1977	305
461. வானொலி - டெலிவிஷன் திருந்துமா?	31-08-1977	311
462. கோழைகளின் கூடாரமல்ல இது!	03-09-1977	313
463. கழக வரலாற்றில் முக்கியமான கட்டம்!	05-09-1977	315
464. நாமும் தயாராகிக் கொள்வோம்!	06-09-1977	319

465. முடவன் குடித்த தேன்!	09-09-1977	323
466. பாரீர்; இதோ ஒரு பண்பாளரை!!!	13-09-1977	326
467. பெரியார் தந்த துணிவுண்டு!	17-09-1977	330
468. சென்னையில் அண்ணா சிலை - மேலும் சில விளக்கங்கள்!	19-09-1977	333
469. பிறக்கவுமில்லை பிறக்கப்போவதுமில்லை!	20-09-1977	336
470. பாவம்! தத்துவம் - பிழைத்துப் போகட்டும்!	22-09-1977	346
471. உடன்பிறப்புக்கு உருக்கமான வேண்டுகோள்!	23-09-1977	351
472. புனித ராஜ்யம் காட்சி - 5!	24-09-1977	355
473. இளைஞர் அணியினர்க்கு இரக்கம் காட்டுக!	25-09-1977	360
474. புனித ராஜ்யம் காட்சி - 6!	26-09-1977	363
475. "அண்ணா சுழற்கோப்பை" யாருக்கு?	27-09-1977	369
476. சிறைச்சாலை என்ன செய்யும்?	28-09-1977	373
477. விழித்துக் கொண்டேன்! சிரித்துக் கொண்டேன்!	29-09-1977	377
478. பச்சைக் கொடியும் - சிவப்புக் கொடியும்!	01-10-1977	381
479. வீ"ரப்பர்" பாம்பு சீறுகிறது!	02-10-1977	386
480. முரண்பாட்டின் சிகரம்; முதல்வரின் பேச்சு!	03-10-1977	390
481. பக்கத்து நாடுகள் தரும் பாடம் பாரீர்!	04-10-1977	395

395. வேந்தனும் - விதூஷகனும்!

உடன்பிறப்பே,

ஒரு வேடிக்கைக் கதையுடன் இன்றையக் கடிதத்தை எழுதத் தொடங்குகிறேன்.

மன்னன் ஒருவன் நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டதை அறிந்து, தானே நேரில் சென்று அந்த மக்களுக்கு ஆறுதல் கூறி, இனிமேல் எத்தகைய பயங்கர வெள்ளம், கடுமழை, ஏற்படினும் ஊர்ப் பகுதிகள் அழிந்திடா வண்ணம் ஏரிக்கரைகளை உயர்த்தியும், ஆறுகளுக்கு அணைகளை எழுப்பியும் தக்க பாதுகாப்புகள் தரப்படும், தடுப்பு நடவடிக்கைகள் இன்று முதலே மேற்கொள்ளப்படும் என்று கூறியதோடு, அந்த மக்களுக்கு உடனடி நிவாரணமாக உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை வழங்குமாறும் கூறிவிட்டுத் தலைநகருக்குத் திரும்பினான்.

சில நாட்கள் கழித்து அந்த பாதிக்கப்பட்ட பகுதிக்கு அவ்வூர் விதூஷகன் வந்தான். மக்களுக்குத் தேவையான துயர் தணிப்புப் பணிகள் நடைபெறுவதையும், மக்கள் மிக்க உற்சாகத்துடனும், இனி வெள்ளம் வந்தால் தடுத்து விடக் கூடும் என்ற துணிவுடனும், நம்பிக்கையுடனும் காணப்பட்டார்கள். விதூஷகனுக்கு அதைப் பார்க்கப் பொறாமையாக இருந்தது. காரணம், அவன் ஏற்கனவே அந்தப் பகுதி மக்களிடம் மன்னரைப் பற்றி மிக இழிவாக விமர்சித்துக் கொண்டிருந்தவன். அவர் மன்னராவதற்கு முன்பு அந்த நாட்டை ஆக்ரமித்துக் கொண்டிருந்த ஒரு மகாராணியின் கொலுமண்டபத்து விதூஷகனாக இருந்தவன் அவன்! மன்னர், தனது நாட்டை அண்டை நாட்டு மகாராணி அடிமைப் படுத்தியிருந்ததைச் சகிக்காது பெரும்படை திரட்டி, அயல்நாட்டு மகாராணியைத் தோற்கடித்தவர். அதற்குப் பிறகு விதூஷகன், புதிய மன்னரின் தர்பாரில் விதூஷகன் வேலையில்லாவிட்டாலும்

வேறு ஏதாவது "சாமரம்" வீசுகிற வேலையாவது கேட்டு, அதுவும் கிடைக்காத காரணத்தால் மனம் ஒடிந்து போய் ஊருக்குத் திரும்பினான்.

ஊரார் அவனைப் பார்த்துக் கேட்டார்கள், "எங்கே போய் வருகிறாய்" என்று!

"தலைநகரத்திற்கு, அரண்மனைக்குப் போய் அரசரைப் பார்த்து வருகிறேன்" என்றான்.

"நீ எதிர்பார்த்தபடி சாமரம் வீசுகிற வேலையாவது அரசு தர்பாரில் கிடைத்ததா?" என்று கேட்டார்கள் ஊர் மக்கள்!

விதூஷகன், கெட்டிக்காரத்தனமாகப் பதில் சொன்னான்;

"சே! அந்த வேலைக்கு யார் போவார்கள்? இந்த மன்னனிடம் மந்திரி வேலை கிடைத்தாலும் அதனைத் தீண்டேன்! நான் போன விவகாரம் என் சுயநலத்துக்காக அல்ல! உங்களுடைய நன்மைக்காக! இந்த ஊரின் பாதுகாப்புக்காக! சீறிவரும் வெள்ளத்தையும், சீரழியும் இல்லங்களையும், சிதறியோடும் ஏழைக் குடும்பங்களையும் இனிமேலாவது காப்பாற்ற வெள்ளத் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரசனிடம் அடித்துப் பேசினேன். முடியுமா? முடியாதா? என்று கேட்டேன். முடிமன்னன் தலைகுனிந்து ஏற்றுக் கொண்டான் என் கோரிக்கையை! நான் மட்டும் தலைநகருக்குச் சென்று நிலைமைகளை விளக்காவிட்டால் இப்போது ஏரிகளின் கரை உயருமா? ஆறுகளில் அணை வருமா? என் விரல் அசைந்தது, வேந்தன் பணிந்தான்! இங்கே வெள்ளத் தடுப்பு வேலைகள் தொடர்கின்றன! எப்படி என் திறமை?"

விதூஷகன், பேசிக் கொண்டேயிருந்தான்... அவனைச் சுற்றி நின்ற மக்கள் கேலியாகச் சிரித்தவாறு கலைந்து விட்டார்கள்.

உடன்பிறப்பே, இந்தக் கதையை நினைவில் வைத்துக் கொண்டு நாட்டு நடப்பை ஒப்பிட்டுப் பார். மக்களின் துயரம் உணர்ந்து, அவர்களின் உணர்ச்சிகளை மதித்து மன்னன் வலிய வந்து உறுதிமொழி அளிக்கிறான், உதவிகள் புரிகிறான். தலைநகருக்குத் தன் சொந்த வேலையாகப் போன விதூஷகன், மன்னன் மக்களுக்குச் செய்யும் நிவாரணப் பணிகள் அனைத்தும்,

தான் சொல்லித்தான் நடைபெறுகிறது என்று விளம்பரம் செய்து கொள்கிறான்.

நான் சொன்னது கதை!

இதோ ஒரு செய்தி!

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு திரு. மொரார்ஜி தேசாய் சென்னைக்கும், கோவைக்கும் வருகை தருகிறார். சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் அவர் பேசும் போது "இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப்பட மாட்டாது" என்று திட்டவட்டமாகக் கூறுகிறார். அந்தச் செய்தி எல்லா ஏடுகளிலும் வெளிவருகிறது. ஆனால் நடிகர் ராமச்சந்திரனும், சி. சுப்பிரமணியமும் "மொரார்ஜி ஒரு இந்தி வெறியர் - அவரைப் போய் கருணாநிதி ஆதரிக்கிறானே! தமிழ் மக்களை மொரார்ஜியிடம் அடகு வைக்கிறானே - மொரார்ஜி பதவிக்கு வந்தால் இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பார்" என்று கூக்குரலிட்டுத் தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள்.

சென்னைக் கடற்கரையில் மொரார்ஜி அளித்த உறுதி மொழியை நாம் நினைவுபடுத்தியதோடு, ஒரு வேளை அந்த உறுதிமொழிக்கு மாறாக இந்தி திணிக்கப்படுமேயானால், தி.மு.கழகம் அதனை எதிர்த்து முதல் போர்க்குரல் கொடுக்கும் என்றும் அறிவித்திருக்கிறோம்.

இதற்கிடையில் இப்போது நடிகர் ராமச்சந்திரன் டெல்லி சென்று மொரார்ஜியை சந்தித்திருக்கிறார்.

எந்த மொரார்ஜியை?

உங்களுக்கு யாருக்காவது மொரார்ஜியைத் தெரியுமா? என்று கேட்டு - கூட்டத்தினர் "தெரியாது" என்று கூறி "இப்படி ஒரு தெரியாத ஆள், இந்தியப் பிரதமர் ஆகலாமா?" என்று நடிகர் ராமச்சந்திரன் கேட்டாரே? அந்த மொரார்ஜியை!

பரவாயில்லை! பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பாவங்களை மன்னித்து விடுமாறு கெஞ்சியிருக்கிறார்.

அந்த மொரார்ஜியிடம் இவர் ஒரு உறுதிமொழியும் பெற்று விட்டாராம்! என்ன உறுதிமொழி தெரியுமா? இந்தி பேசாத

மக்கள் மீது இந்தியைக் கட்டாயமாகத் திணிக்க மாட்டோம் என்று மொரார்ஜி கூறிவிட்டாராம், அந்த உறுதி மொழியை!

சென்னைக் கடற்கரையில் லட்சக் கணக்கான மக்களுக்கு முன்பு இந்திமொழி பற்றி இதே உறுதி மொழியை மொரார்ஜி தேசாய் அளித்தபோது நம்பிட மறுத்த நடிகர் - இல்லை! இல்லை - நம்பாதது போல் நடித்த இந்த நடிகர், இப்போது தன்னால் தான் அந்த உறுதி மொழியைத் தமிழ்நாட்டுக்கெனப் பெற முடிந்தது என "தமுக்கு" கொட்டுகிறார்.

உடன் பிறப்பே - "வேந்தனும் விதூஷகனும்" பற்றி ஒரு வேடிக்கைக் கதையைத் தொடக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறேனே; அதற்கும் இதற்கும் எவ்வளவு ஒற்றுமையிருக்கிறது பார்த்தாயா?

அன்புள்ள,

மு. க.

03-04-1977

396. தடைசெய்யும்
நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்!

உடன்பிறப்பே,

ஏப்ரல் மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தமிழகத்தின் பல பகுதிகளில் நாம் எடுத்த ஜனநாயக வெற்றித் திருவிழா, சர்வாதிகாரத்தைச் சாய்த்திட்ட வீரத் திருவிழாவாகும்.

இந்த விழா கொண்டாட முடியுமோ என்று சென்ற ஆண்டு நாம் ஏங்கியது உண்டு.

வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ எனச் சங்கநாதம் செய்து விழுப் புண்களை மேனியில் ஏற்று தியாகச் செம்மல்கள் சிறைபட்டும், செக்கிழுத்தும் பெற்றிட்ட விடுதலைக்கோர் கெடுதலைச் செய்திட 1975-ஆம் ஆண்டு திட்டம் தீட்டப் பெற்றது. அதன் விளைவாக தேசத்தின் தியாகத் தலைவர்கள் சிறையில் வாடினர். லட்சோப லட்சம் குடும்பங்கள் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்திடும் நிலையில் அக்குடும்பங்களின் உறுப்பினர்கள், கூண்டுப் பறவைகளாக அடைக்கப்பட்டுக் கிடந்தனர். கைகளுக்கு விலங்கு! வாய்க்குப் பூட்டு! கட்டுப்பாடு என்ற பெயரால் சுடுகாட்டு அமைதி, நாடெங்கும் காணப்பட்டது. சிறைக்குள்ளேயே நூற்றுக்கணக்கானவர்கள் பிணங்களாக விழுந்தார்கள். மகனின் உயிரற்ற உடலைக் கண்ட தாயின் புலம்பல், மணாளன் பிணமாகத் திரும்பியது கண்டு தாலியைக் கையில் பிடித்து அழுத்திக் கொண்டு கதறிய மனைவியின் கண்ணீர்! ஜெயிலுக்குப் போனா செத்துப் போகணுமா அம்மா? என்று எதுவும் புரியாமல் தேம்பியழுதபடி தன் தாயின் முகத்தைப் பார்க்கும் - மழலைச் சிறுவனின் கேள்வி, இத்தனையும் இந்த சுதந்திர நாட்டு வரலாற்றுப் புத்தகத்தில் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், நிரபராதிகளின் இரத்தத்தைத் தோய்த்து எழுதிய பயங்கர அத்தியாயங்களாகும்.

இந்தக் கொடுமைகள் எல்லாம் தேவைதான் என்று ஆமாம் போட்டுத் தலையாட்டிய கட்சித் தலைவர்களும் இங்கே இருந்தனர். இன்னமும் இருக்கின்றனர் இரத்த வெறி பிடித்தவர்களுக்கு தாங்கள்தான் துணை என்று அறிவித்துக் கொண்டு!

இந்திரா காந்தி ஜனநாயகத் தலைவி! அதனால்தான் தனது அமைச்சரவைக்குக் கூடச் சொல்லாமல், அவ்வளவு பெரிய நெருக்கடிநிலைப் பிரகடனத்தை அறிவித்தார்கள்! என்று வாதிடுகிற வலதுகளையும், நடிகர் கட்சியினரையும் நாடு சகித்துக் கொண்டுதான் இருக்கிறது.

இந்திரா காந்தி புனிதமான தலைவி! அதனால்தான் நகர்வாலா ஊழலையும், மாருதி ஊழலையும் நாட்டுக்குத் தெரியாமல் மறைத்துவிட்டு நிரபராதிகளைப் பழிவாங்கத் திட்டம் தீட்டி வழக்குகளை ஜோடித்தார்கள் என்று வக்கணை பேசுகிற முதல்தரமான ஊழல் பிறவிகளாம் நடிகர் ராமச்சந்திரன் பேச்சையும், கலியாணசுந்தரம் பேச்சையும் நாடு, காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கிறது!

பரவாயில்லை, ஏமாற்றுக்காரர்களுக்கும் - எத்திப் பிழைப்போருக்கும் - சூதுமதியினர்க்கும் - சூழ்ச்சிக்கார துரோகிகளுக்கும் - அடுக்கடுக்காகக் கிடைக்கிற வெற்றிகள், அழியாவரம் பெற்றவை அல்ல! வஞ்சகத்தின் முகமூடி ஒருநாள் கிழிக்கப்பட்டே தீரும்! போலி வேடதாரிகள், இன்றில்லாவிட்டால் நாளை, நாளை தவறினால் மறுநாள், எப்படியும் என்றோ ஒருநாள் - பொதுமக்களின் முன்னால் நிறுத்தப்பட்டே தீருவார்கள்.

ஆயிரக்கணக்கில் அல்ல, லட்சக்கணக்கில் அல்ல, கோடிக்கணக்கில் ஊழல் புரிந்துள்ள இந்திரா காந்தி, சஞ்சய் காந்தி, பன்சிலால் ஆகியோர் தங்களை புனிதமானவர்கள் என்று காட்டிக் கொண்டு ஊரை ஏமாற்றியது போலவே, இங்குள்ள நடிகர் கட்சித் தலைவரும், வலதுகளின் தலைவரும் ஏராளமான பயங்கரக் குற்றச்சாட்டுகளுக்குத் தாங்கள் ஆளாகியிருந்துங்கூட, அவற்றுக்குத் திரைபோட்டு மூடிவிட்டு, குற்றமற்ற தி.மு.கழகத்தின் மீது அவதூறுச் சேற்றைவாரி வீசுவதாலேயே தங்களைப் பரிசுத்தமானவர்கள் என்று மக்கள் கருதிவிடுவார்கள் என்று நம்புகிறார்கள்.

அந்த நம்பிக்கையிலேதான் இனி வருகிற எந்தத் தேர்தல் களாயினும் தங்களை யாராலும் தோற்கடிக்க முடியாது என்று கொக்கரிக்கிறார்கள்.

உடன்பிறப்பே, நாம் தேர்தலைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் அல்ல! அடுத்த தலைமுறையைப் பற்றியும் சிந்தித்துச் செயல்படுகிறவர்கள்!

அந்த இலட்சியப் பயணத்தில் நமக்குக் கிடைக்கும் ஒரு கருவிதான் தேர்தல் வெற்றி வாய்ப்பு என்பதாகும்.

அந்த வாய்ப்பு அளிக்கப்படின் அதன் துணையோடு இந்தச் சமுதாயத்திற்குத் தேவையான சாதனைகளைப் புரிவோம்!

ஒன்பதாண்டுக்காலம் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாம் விளைவித்த சாதனைகளை நல்லோர் - நன்றியுள்ளோர் - பாராட்டிக்கொண்டுதானிருக்கின்றனர்.

அந்த வாய்ப்பு கிட்டாது போயின், அதற்காக நமது சமுதாயப் பணிகளில் தொய்வு விழுந்துவிடப் போவதில்லை.

இந்திய நாட்டு மக்களாட்சித் தத்துவத்திற்கு ஏற்பட்ட ஆபத்தினை, எப்படியும் போக்கிட வேண்டுமென்று நம்மையே நாம் பணயமாக வைத்துக் கொண்டு போர்க்குரல் கொடுத்தோம். அதன் பயங்கர விளைவுகளைத் தாங்கிக் கொண்டோம்.

ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்தபின்னர்

வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ?

என்று பாரதியார் கேட்டதற்கிணங்க, நாமும் நமது நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரத்தைத் தோற்றுவிட ஒப்ப வில்லை. எனவேதான் இரண்டாவது சுதந்திரப் போராட்டக் களத்திலே வீரர்களாக அணிவகுத்து நின்றோம் - வென்றோம்!

'வாழிய பாரத மணித்திருநாடு!'

என்று இந்தியாவை இரு கரம் உயர்த்தி வாழ்த்திக் களிக்கும்போது, இந்த வரியைப் பாடிய பாரதியார், இதற்கு முன்னே;

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்! வாழிய பாரத மணித்திருநாடு என்றுதானே கம்பீரமாக ஒலித்திருக்கிறார்!

ஆம், இந்திய மணித் திருநாட்டின் ஜனநாயகத்தைச் சர்வாதிகார இருள் கவ்விக் கொள்ளாமல் காப்பாற்றி விட்டோம்!

இனி, அடுத்த வேலை என்ன?

பாரதியார் பாடியது போல, வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டை நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனும் மணியாரம் படைத்த தமிழ் நாட்டை, சிங்களம், புட்பகம், சாவகமாகிய தீவு பலவினும் சென்றேறி - அங்கு தங்கள் புலிக் கொடியும், மீன் கொடியும் நின்று சால்புறக் கண்டவர் தமிழர் எனும் பெருமை மிகு தமிழ்நாட்டை வஞ்சகர் கையிலும், அரசியல் வணிகர் கையிலும், துரோகத்தின் வலையிலும், துன்மார்க்கர் வலையிலும் சிக்கவைக்கப் போகிறோமா?

இல்லை, இந்திய நாட்டு ஜனநாயகத்தைக் காத்திடும் களத்தில் வாகை சூடியதுபோல, தமிழ் நாட்டு அரசியல் பண்பாட்டையும் - கலாச்சாரப் பண்பாட்டையும் ஏதோ ஒரு மாயையிலிருந்து விடுவிக்கும் போரில் வெற்றிப் பெற போகிறோமா?

அந்த வெற்றிதான் தேவை என்றால் - அந்த வெற்றியினால்தான் தமிழனின் மானமும், மரியாதையும், கலாச்சாரமும் பாதுகாக்கப்படுமென்றால் -

இதோ புரட்சிக் கவிஞர்

பாடுகிறார் பார்!

அதையே நீ திரும்பத்

திரும்பப் பாடு!

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி

தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ் மக்கள்

தமிழ் என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே

தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை!

தமிழர்க்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத்

தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்

உடன்பிறப்பே,

இந்தப் பாடலை உதட்டளவில் பாடினால் போதாது! உள்ளத்திலிருந்து கிளம்பட்டும் இந்த எழுச்சிப் பாடல்! ஊரெங்கும் ஒலிக்கட்டும்!

அரசியலில் ஜனநாயகம் காத்தமைக்கு நேற்று விழா எடுத்தோம்!

அரசியலில் தமிழர் பண்பாட்டைக் காத்திட்ட விழா எடுக்க விரைந்து பணி ஆற்றிடுவோம்!

அன்புள்ள,

மு. க.

04-04-1977

397. ஏடுகள் பலவிதம்!

உடன்பிறப்பே,

பறவைகள் பலவிதம் என்ற ஒரு பாடலைக் கேட்டு நீ ரசித்திருப்பாய் - அதைப்போல ஏடுகள் பலவிதம், நாட்டிலே இருக்கின்றன. அந்த ஏடுகளுக்கு எண்ணங்களும் பலவிதம் என்று இருப்பதில் தவறு காண முடியாது. அதைத்தானே உரிமை என்ற பெயரால் ஆர்வத்துடன் அழைக்கிறோம்.

ஒவ்வொரு ஏட்டுக்கும் ஒவ்வொரு எண்ணம், அதாவது தனித்தனிக் கொள்கை இருக்கலாம். ஆனால் அதே கொள்கை ஒவ்வொரு கட்சியைப் பொறுத்தோ, அல்லது மனிதர்களைப் பொறுத்தோ வேண்டியவர், வேண்டாதவர் என்ற முறையில் மாறுபடுவதோ, முரண்படுவதோ கூடாதல்லவா?

எடுத்துக்காட்டுக்கு ஒன்று கூறுகிறேன்.

மாநிலத்தில் ஆட்சி புரிந்த தி.மு.க. அரசு மாறியதும் அந்த அரசின் அமைச்சர்கள் சிலர் மீது வழக்குகள் என்றாலும், விசாரணை என்றாலும் மகிழ்ச்சிப் பெருக்குடன் துள்ளிக் குதித்து, எடுத்து வா புகைப்படங்களை - எடுப்பாக முதல் பக்கத்தில் வெளியிடு! கொண்டு வா கொட்டை எழுத்துகளை, தலைப்புச் செய்தி கட்டிவிடு! என்று ஆர்ப்பரித்தவர்கள் மத்திய அரசில் இந்திரா ஆட்சி மாறியதும், அந்த ஆட்சிக்குத் தொடர்புடைய சிலர் மீது அதாவது இந்திராவின் நகர்வாலா ஊழல் - அந்த ஊழலின் தொடர்பாக விபத்துக்கு ஆளாக்கப்பட்டு மரணமடைந்த சில அதிகாரிகள் பற்றிய மர்மங்கள் - சஞ்சய் காந்தியின் மாருதி ஊழல், பன்சிலால் மீது நூற்றுக்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்த புகார்ப் பட்டியல் இவற்றைக் குறித்தெல்லாம் விசாரணை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டதும் என்ன எழுதுகிறார்கள் பார்த்தாயா?

புதிய அரசு, பதவி ஏற்கும்போது பழைய அரசின் மீது விசாரணைகள் மத்திய ஆட்சியில் நடைபெற வேண்டுமென்பது

ஒரு முன்னுதாரணமாக மாறி வருகிறது. இது எந்த அளவுக்கு வருங்கால அரசியலை பாதிக்குமென்பது போகப் போகத் தெரியும்.

இந்த வேதாந்தம், வேண்டாதவர்கள் மீது, வேண்டாத விதத்தில், வழக்குகளை ஜோடித்து, சாட்சிகளை மிசாவைக் காட்டித் தயாரித்து அரசாங்கப் பிரச்சார சாதனங்களைக் கொண்டு அவதூறுகளைப் பரப்பும் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டாரே, இந்திரா காந்தி அம்மையார் - அப்போது எங்கே போயிற்று? என்றுதான் தெரியவில்லை.

இந்திரா காந்தியையோ அல்லது பன்சிலாலையோ அல்லது மற்ற மாநிலங்களின் காங்கிரஸ் முதலமைச்சர்களையோ வழக்குகளிலோ விசாரணைகளிலோ ஈடுபடுத்துவது,

முன் உதாரணம் ஆகிவிடுமாம்!

வருங்கால அரசியலைப் பாதிக்குமாம்!

இப்படி இன்றைக்கு எழுதுகிறவர்கள், தி.மு.க. மீது இந்திரா அரசு, அரசியல் பழி தீர்த்துக் கொள்ள இழிவான நடவடிக்கைகள் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் செய்து தீர்த்ததே! அந்தச் செயலைச் செங்கரும்பு போல இந்தச் செய்தி ஏடுகள் சுவைத்ததின் நோக்கம் என்ன?

கழகம் என்றாலே சிலருக்கு ஒரு அலர்ஜி!

அதனால் கழகத்தின் மீது மாசு தூவப்படுவதை அவர்கள் மனங்குளிர வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள்!

இது ஏடுகளில் ஒரு விதம்!

இதோ மற்றொரு விதம் பார்!

ஒரு பொய்யை ஒன்பது முறை சொன்னால் மெய்யாகி விடும் என்ற உறுதியுடன் நடத்தப்படும் நடிகர் கட்சியின் ஏட்டைப் பற்றி இப்போது குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் பிப்ரவரி 20-ஆம் நாள் சென்னைக் கடற்கரையில் இந்தி பற்றிப் பேசியது பிப்ரவரி 21-ஆம் நாள் இந்து ஏட்டில் வந்துள்ளது.

It is said that I want to force Hindi on you. Infact, I do not want to force not only Hindi but anythng on you

நான் உங்கள் மீது இந்தியைத் திணிக்க விரும்புவதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் நான் இந்தியை மட்டுமல்ல எதையுமே உங்கள் மீது திணித்திட வேண்டுமென்று விரும்ப மாட்டேன். இப்படி அவர் பேசியிருக்கிறார். ஆனால் நேற்று வெளிவந்த நடிகரின் ஏடு என்ன கூறுகிறது?

இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாகும். மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்துவோம் என்று மொராஜி அவர்கள், கடற்கரைக் கூட்டத்தில் பேசியதாக மட்டும் சொல்லி இந்தியைத் திணிக்க மாட்டேன் என்ற அவர் கடற்கரைக் கூட்டத்தில் அளித்த உறுதிமொழியை அப்படியே மறைத்தும், திரித்தும் எழுதுகிறது.

முந்தாநாள் நடிகர் கட்சித் தலைவர் மொராஜியைப் பார்த்து, வாதாடிப் போராடி, அதன் பிறகுதான் இந்தியைத் திணிப்பதில்லை என்ற உறுதிமொழியைப் பெற்று வந்தார். நடிகர் கட்சிக்கு இது மாபெரும் வெற்றி என்று அந்த நடிகரின் ஏடு ஜெயபேரிகை கொட்டுகிறது!

இந்தித் திணிப்பு எந்தப் பக்கமிருந்து வந்தாலும் அதைத் தி.மு.கழகம் எதிர்க்கும். மொழிப் பிரச்சினை குறித்து நாங்கள் யாருடனும் சமரசம் செய்து கொள்ளவில்லை

என்பதாக நான் மார்ச் 7-ம் நாள் பொள்ளாச்சி கூட்டத்தில் பேசி அந்தப் பேச்சு முரசொலியிலும் வெளியாகியுள்ளது.

இந்த உண்மைகளையெல்லாம் மறைத்துவிட்டு நடிகர் ஏடு கட்டுரை தீட்டி விடுவதாலேயே உலகை ஏமாற்றிவிட்டதாக கருதுகிறது.

பறவைகள் பல விதம் - என்று
பாடவும் தோன்றுகிறது!
பாராட்டவும் தோன்றுகிறது -
ஆனால்
ஏடுகள் பலவிதம் - அவற்றின்
இந்த இழிதகை நிலை கண்டு
ஏக்கமன்றோ பிறக்கிறது!

அன்புள்ள,

மு. க.

05-04-1977

398. கண்டேன் கிழச் சிங்கத்தை!

உடன்பிறப்பே,

புதுடெல்லியில் இருந்தவாறு இந்தக் கடிதம் உனக்கு எழுதுகிறேன். ஏப்ரல் ஐந்தாம் நாள் காலை பம்பாய் நகரத்தில் "ஐஸ் லோக்" மருத்துவமனையில் பழம்பெரும் தியாகத் திலகத்தைச் சந்தித்து விட்டு அன்று மாலையே புதுடெல்லிக்கு வந்து சேர்ந்தேன். "புது டெல்லி" என்று டெல்லி மாநகரத்தை இப்போது குறிப்பிடுவதிலே ஒரு பொருள் இருக்கத் தானே செய்கிறது. "பழைய புதுடெல்லி" ஏன்? எதற்காக? என்று கேட்பவர் மீது பாயும் வேங்கையாக வன்றோ விளங்கிக் கொண்டிருந்தது. இன்றைய "புதிய புதுடெல்லி" அச்சுறுத்தல் - அடிமை போல நடத்துதல் - உரிமைகளைப் பறித்தல் - போன்ற அக்கிரம வெறியாட்டங்களுக்கு விடைகொடுத்து அனுப்பி விட்டு, விழாக் கோலமல்லவோ பூண்டிருக்கிறது!

இந்த இணையற்ற வெற்றிச் சரித்திரத்தைப் படைத்தளித்த ஜே.பி.எனும் மகாவீரரைச் சந்தித்து என் மகிழ்ச்சியையும், வணக்கத்தையும் தெரிவிக்கத்தான், டெல்லிக்கு வருவதற்கு முன்பு பம்பாய்க்குப் பறந்து சென்றேன்.

நான்கைந்து ஆண்டுக் காலத்திற்கு மேலாக அவருக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கமுண்டு. அவரின் இளைய சகோதரனாகவே அவர் என்னை நேசித்தார். நானும் அவர் மீது சகோதர பாசத்தைப் பொழிந்து அதன் காரணமாக, என் நெஞ்சுக்கோர் நிறைவைத் தேடிக் கொண்டிருப்பவன்.

அவருடன் நெருங்கி உறவாடாத காலத்தில் தொலைவில் இருந்து அவரை வணங்கிக் கொண்டிருந்தவன் நான். வாழ்த்திக் கொண்டிருந்தவன் நான். அவர் இந்த நாட்டு விடுதலைக்கு ஏற்ற தியாகத்தை எண்ணி எண்ணிப் பெருமைப் பட்டிருக்கிறேன். பதினான்கு ஆண்டுக் காலத்திற்கு மேலாக சிறைக் கொட்டடியில்

இளஞ்சிங்கமாக அடைபட்டுக் கிடந்த அவர், இன்று பழுத்த பழமாகக் காட்சி தருகிறார்.

மூன்று நான்கு ஆண்டுகட்கு முன்பு, வேலூர் மருத்துவ மனையில் அவர் சிகிச்சைக்காக வந்திருந்த போது நானும், கழக அமைச்சர்களும் அவரைச் சந்திக்க அடிக்கடி வேலூர் செல்வதுண்டு, "அவர் என்ன இந்தியாவில் பெரிய பதவியில் இருப்பவரா? அவரது உடல் நிலையைக் கவனிக்க இத்தனை அமைச்சர்கள் வேலூரில் முகாம் போடுவானேன்?" என்று நடிகர் கட்சியின் ஏடுகளில் அப்போது கழக அரசைக் கண்டித்து எழுதியதும் உண்டு.

இந்தியாவில் நேர்மையான நிர்வாகமும், ஊழலற்ற நிலையும் எல்லா முனைகளிலும் மாநிலங்களிலும் மத்தியிலும் இருந்திட வேண்டுமென்று அவர் ஓர் முழுப் புரட்சிக்கு வித்தூன்றிய போது, நான் அவரை டெல்லியில் சந்திந்த போதும் - அவர் என்னை சென்னை வந்த போது சந்தித்த நேரத்திலும், "குற்றம் குறைகளை எடுத்துக் கூறுங்கள். எல்லா மட்டத்திலும் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களை எங்களுக்குச் சொல்லுங்கள். அது பற்றி கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள எந்த நேரத்திலும் நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று நானும், நாவலர், பேராசிரியர், மற்றுமுள்ள கழக முன்னணியினரும் அவரிடம் திட்டவட்டமாகக் கூறினோம்.

அந்த அடிப்படையில் தான் அவர், நிருபர்களிடம் பேசிய போது கூட, "கருணாநிதி கலந்துரையாடத் தயாராக இருக்கிறார். மற்ற மாநிலங்களில் உள்ள முதல்வர்களோ, மத்திய அமைச்சர்களோ, என்னுடன் கலந்துரையாடத் தயாராக இல்லை" என்ற கருத்தை கவலையுடன் தெரிவித்தார்.

கோட்டூர்புரம் குடிசை மாற்று வாரியத்து வீடுகளைத் திறந்து வைத்த விழாவிலே கலந்து கொண்டு "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற நமது கொள்கைக்குப் புகழாரம் சூட்டினார்.

மூதறிஞர் ராஜாஜிக்கு, கழக அரசு கிண்டியில் அமைத்த நினைவாலயத்தைத் திறந்து வைத்த போது, "மதுவிலக்கை மீண்டும் அமல் படுத்தியதற்கு மகிழ்ச்சி! குதிரைப் பந்தயத்தை ஒழிக்கச் சட்டம் கொண்டு வந்தமைக்குப் பாராட்டு! ஆனால் இன்னும் பரிசுச் சீட்டை ஒழிக்க வில்லையே?" என்று குறிப்பிட்டார்.

உடனே நான் தயங்காமல் அதுவும் விரைவில் ஒழிக்கப்படும் என்று கூறி, அதே ஆண்டு பரிசுச்சீட்டைக் கழக அரசு ஒழித்து விட்டதாக அறிவித்ததையும் நாடு மறந்திருக்க முடியாது.

இப்போது அந்தக் காந்தியக் கொள்கைகள் எல்லாம் கவர்னர் ஆட்சியில் காற்றில் பறப்பதை, நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

1975-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அவர் சென்னை வந்தபோது, நமது கழகத்தின் சார்பில் மாபெரும் வரவேற்புக் கொடுத்தோம்.

அவர் மக்களின்
தொண்டர்!
நாட்டுக்குத் தன்னையே
அர்ப்பணித்துக் கொண்ட
தியாகத் தலைவர்!
சர்வோதயம் கண்ட
உத்தமர்!
அன்பின் உருவம்!
அருள் வடிவம்!

அவர்மீது பாய்ந்த வலிமை வாய்ந்த கணைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு, தான் சரியென எண்ணியதைச் சலியாது மக்களிடம் எடுத்துச் சொல்லி வந்தார்.

அவரைச் சகித்துக் கொள்ள முடியாத சர்வாதிகாரப் போக்கினர், அவரைச் சண்டாளர் என்றனர். வாய் கூசாது! கொள்ளைக்காரர் என்றனர் - கொடிய அரக்கரைப் போல விமர்சித்தனர்! அவரால் நாட்டுக்கே ஆபத்து என்று நடிப்பையே அரசியலாக்கிக் கொண்டவர்கள் நாத்தழும்பேறிப் பேசினர்.

இறுதியில் அவர்மீது அடக்குமுறை பாய்ந்தது! சிறையில் அடைக்கப் பட்டார்! அவர் மட்டுமா? நாடே சிறைக்கூடமாகத்தான் மாறியது!

எதேச்சாதிகாரத்தின் ரத்த வெறி கொண்ட நாக்கு, அவரது உடல் வலிவை உறிஞ்சத் தொடங்கியது. சிறையில் அவர் மாண்டு விடக் கூடாதே என்ற அச்சத்துடன் அவரை, இந்திரா அம்மையாரின் அரசு விடுதலை செய்தது.

இன்னும் பதினைந்து நாட்கள் முன்னதாக அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தால், இப்போது அவர் உடல் நலிவால் அனுபவிக்கிற இன்னல்களை அனுபவித்திருக்க வேண்டியதில்லை. அந்த இரக்க குணம் அரசுக்கு இல்லையே! அரக்க குணமல்லவா மேலோங்கி நின்றது!

எனினும், அந்தக் கிழச் சிங்கம் - தான் தொடுத்த போரில் வெற்றி பெற்று விட்டது. அந்த வெற்றியின் களிப்புடன், உடல் நலிவையும் பொருட்படுத்தாமல் பம்பாய் மருத்துவமனையில் அவர் அமர்ந்திருந்த காட்சியைக் கண்டேன். கண்டதும் என் கண்கள் குளமாகி விட்டன.

களி பேருவகையுடன் அவர் என்னை வரவேற்றார்.

நான் யார் மீது பாசங் கொண்டிருந்தேனோ - அவர் யார் மீது பாசம் வைத்திருந்தாரோ - அந்த இருவரும் தான் பம்பாயில் மருத்துவமனையில் சந்தித்தோம்!

யாரோ, பகையாக இருந்தவரிடம் போய் நான் சரணாகதி அடைந்து விட்டதைப் போல, சில ஏடுகள் கதைக்கலாம்!

பாவம், அதுகளுக்கு அவ்வளவு எரிச்சல்!

கிடக்கட்டும், அந்தக் கேலியும் தூற்றலும்!

எனக்குக் கரை காண முடியாத மகிழ்ச்சி! அதே நேரத்தில், அய்யோ! போரிட்ட சிங்கம், போரில் வெற்றி பெற்ற சிங்கம் மருத்துவமனையில் முடங்கிக் கிடக்கிறதே, என்ற மனக் கலக்கம்!

எப்படியோ, எதற்கும் தளராத மனிதரை - தலை தாழாச் சிங்கத்தை - சந்தித்த மகிழ்ச்சியை, உடன் பிறப்பே! உன்னுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

07-04-1977

399. "உன்னையும் என்னையும் பிரிக்க முடியாது!"

உடன்பிறப்பே,

"பெரும்பான்மையான இடங்களில் தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் அணிக்கு வெற்றி கிடைக்குமென்று எண்ணி யிருந்தோமே, என்ன இப்படி ஆகிவிட்டதே!" என்று வியப்புடனும் கவலை தோய்ந்த முகத்துடனும் டெல்லியில் என்னைப் பலரும் கேட்கத்தான் செய்தார்கள்.

"தி.மு.க.வுடன் சேர்ந்ததால்தான் ஜனதாவுக்குத் தோல்வி ஏற்பட்டுவிட்டதாகத் தமிழ்நாட்டில் சில ஏடுகள் எழுதுகிறார்களே! இங்கு வந்த ஓரிரு நண்பர்களும் சொன்னார்களே!" என்றுகூடச் சிலபேர் கேட்டனர். நான் அவர்களுக்குச் சொன்னேன். எங்களோடு சேர்ந்ததால் அவர்களுக்கு மூன்று இடங்கள் கிடைத்தது என்றோ, அல்லது அவர்களோடு சேர்ந்ததால்தான் எங்களுக்கு ஒரே ஒரு இடம் மட்டுமே கிடைத்தது என்றோ - நான் சொல்லத் தயாராக இல்லை.

ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட முடிவுக்கு ஒரு காரணத்தையும், தமிழ்நாட்டில் ஏற்பட்ட தேர்தல் முடிவுக்கு ஒரு காரணத்தையும் சிலர் எடுத்துக் கூறுவதும், எழுதுவதும் அவர்களுக்குத் தி.மு.க. மீது இயல்பாகவே நீண்ட நாட்களாக ஏற்பட்ட எரிச்சலின் விளைவே தவிர வேறல்ல.

நடந்து முடிந்துவிட்ட தேர்தலைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதை விடுத்து, அடுத்து விரைவில் நடக்க இருக்கிற தேர்தல் பணிகளுக்கு நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தான் மீண்டும் மீண்டும் உனக்குச் சொல்ல விரும்புகிறேன்.

கழகம், அரசுப் பொறுப்பில் இருந்த போது அடித்தளத்து மக்கள், ஏழை எளியோர், ஆதரவற்றோர், ஊனமுற்றோர், கண்ணொளியிழந்தோர், அரிஜனங்கள், பிற்படுத்தப் பட்டோர், அரசு அலுவலர், கைரிக்ஷா இழுத்தோர், குடிசையில்

குமுறியோர் - இப்படிப்பட்டவர்களுக்காக எத்தனையோ நன்மைகளை செய்திருந்தும் வாக்காளர்கள் அதனை நினைத்துப் பார்க்காமல், நேர்மாறாக நடந்து கொண்டார்களே என்றும் மிக்க உருக்கமுடன் டெல்லியில் உள்ளோர் தங்கள் மனச் சங்கடத்தை வெளிப்படுத்தினர்.

இப்படி உரையாடிக் கொண்டிருந்த போது நமது நண்பர் - முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாயவன் அருகே இருந்தார்.

அவர் மிகுந்த அடக்கமான குரலில், அவருக்கேயுரிய நடையில் ஒரு கதையைச் சொன்னார். என்ன கதை தெரியுமா அது? உனக்குச் சொல்லாவிட்டால் எனக்குத் தூக்கம் வருமா?

"ஒரு ஊரில் ஒரு குருடன் இருந்தான். அவன் பசி தாங்காமல் ஒரு கோயில் வாயிலில் உட்கார்ந்து யாராவது ஏதாவது வயிற்றுக்குத் தரமாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டிருந்தான். அந்த வழியாக அவனைக் கடந்து போன யாரும் அவனுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. ஆலயத்துக்குள்ளிருந்த ஆண்டவனுக்கு அவன் மீது இரக்கம் பிறந்தது. அவரே ஒரு பக்தனைப் போல உருவமெடுத்துக் கொண்டு அந்தக் குருடனிடம் வந்து ஒரு மாம்பழத்தை அவன் கையில் அளித்தார். குதூகலத்துடன் குருடன் அதைச் சுவைக்கத் தொடங்கினான். முக்கால் பகுதி மாங்கனியைச் சுவைத்துச் சாப்பிட்டு விட்டான்.

அந்தப் பழம் பசியைப் போக்கியது மட்டுமல்ல! மிக்க ருசியாகவும் இருந்தது. மிச்சமுள்ள கால் பகுதியில் ஒரு வண்டு இருந்தது. அதைக் குருடன் பார்க்க முடியாதல்லவா? அதையும் அவன் வாயில் வைத்து உறிஞ்சுவதற்காக உதடுகளின் அருகே கொண்டு போனான். வண்டு இருப்பது அவனுக்குத் தெரியாதே! பாவம் - என்று உடனே ஆண்டவன், அவன் விழிகளுக்கு ஒளியை வழங்கி விட்டார். குருடன் பழத்தில் இருந்த வண்டைப் பார்த்து விட்டு அந்த மீதமுள்ள பழத்தைத் தூக்கி எறிந்து விட்டான்!

குருடன் அத்துடன் நிற்கவில்லை. "பாழாய்ப் போன கடவுள் எனக்குப் பார்வையைக் கொடுத்து சுவையான மாம்பழத்தை முழுவதும் சாப்பிட முடியாமல் செய்து விட்டானே!" என்று ஆண்டவனைச் சபித்துக் கொண்டே போனான்!"

- இதுதான் மாயவன் சொன்ன கதை!

உடன் பிறப்பே, அந்தக் கடவுளின் கதையும் நமது கழகத்தின் கதையும் ஒன்றுபோலத்தானே இருக்கிறது!

குருடன்; தனக்குப் பார்வை கிடைத்ததே என்று பரவச மடையாமல் பாழும் தெய்வம் பாதி மாம்பழத்தை தின்ன

வொட்டாமல் செய்து விட்டதே என்றல்லவா, கண் கொடுத்த கடவுளை ஏசிப் பேசுகிறான். அதற்காகக் கடவுள், அவன் கண்களை மீண்டும் குருடாக்கிப் பழிதீர்த்துக் கொள்ள முடியுமா? அப்படிச் செய்தால் அவர், கடவுளாக இருக்க முடியுமா?

கதை! நடந்த நிகழ்ச்சியல்ல! கற்பனைதான்!

ஆனால் கழகத்தையோ, கழக அரசையோ பொறுத்த வரையில் ஒன்பதாண்டுக் காலத்து ஆட்சியிலும் சரி, எதிர்க் கட்சியாகப் பணிபுரிந்த காலத்திலும் சரி, யாருக்காக முழுநேரமும் பாடுபட்டதோ, அவர்களாலேயே சரிவரப்புரிந்து கொள்ளப்படவில்லை என்பதுதானே நாம் காணுகிற உண்மையாகும்.

நம்மைப் புரிந்து கொள்ளும் வகையில் நமது தொண்டு தொடர்ந்திட வேண்டும்!

நமது குறிக்கோள் தேர்தல் மட்டுமல்ல, ஏதாவது ஒரு பதவியில் இருக்க வேண்டுமென்ற "அரிப்பு" அல்ல, நமது இலட்சியம்!

இவற்றையெல்லாம் விட சிறந்த கொள்கைகளை, அண்ணன் நமக்கு வழங்கியிருக்கிறார்.

நான் இருக்கிறேனோ இல்லையோ அல்லது நீதான் இருக்கிறாயோ இல்லையோ - ஒன்று மட்டும் உறுதி! நம்மைப் போன்ற இலட்சியவாதிகள் பத்துப் பேராவது இருந்து இந்தக் கழகத்தைக் கட்டிக் காத்திடுவர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

"நீயுமா புரூடஸ்?" என்று கேட்கக்கூடிய நிலையில் யாராவது நமது கழகத்தின் மீது கட்டாரி பாய்ச்ச முன் வருவார்களேயானால், அவர்கள் "முகவரி" தெரியாமல் போய் விடுவார்கள், என்பது மட்டும் நிச்சயம்!

என் செவிக்கு எட்டிய சில செய்திகளை வைத்து ஓரிரு குறிப்புகளை இந்த மடல் மூலம் உன் மனத்தில் போட்டு வைக்கிறேன். டெல்லியிலிருந்து திரும்பியதும் விளக்கமாக எழுதுகிறேன்.

ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்வேன்! உன்னையும் என்னையும் யாராலும் பிரிக்க முடியாது!

அன்புள்ள,

மு. க.

08-04-1977

400.”“விசாரணைக் கமிஷன்” சில கருத்துக்கள்!

உடன்பிறப்பே,

மகிழ்ந்து பாராட்டத்தக்க அறிவிப்பு ஒன்றை மத்திய அரசின் உள்துறை அமைச்சர் சரண்சிங் அவர்கள், நாடாளுமன்றத்தில் செய்துள்ளார்.

நெருக்கடி நிலை, நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போது அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டோர், ஒழுங்கீனமாக நடந்து கொண்டோர், முறைகேடுகளைச் செய்தவர்கள் - யார் யார் என்பதையும், எத்தகைய கொடுமைகள் யார் யாருக்கு இழைக்கப்பட்டன என்பதையும் கண்டறிந்து கூற நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது என்பதுதான் அந்த அறிவிப்பாகும்.

அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் “இது பழிவாங்கும் நோக்கம் கொண்டது” என்ற கருத்துப்பட “கெக்கலி” கொட்டினார்கள் என்று டெல்லிப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது.

“விசாரணைக் கமிஷன்” என்றாலே அரசியலில் பழி வாங்குவது தான் என்ற இலக்கணத்தை வகுத்து இந்திய நாட்டுக்கு வழங்கிய புனிதவான்கள், சரண்சிங் அவர்கள் அறிவித்துள்ள விசாரணைக் கமிஷனை, கேலி செய்வது என்பது விந்தையினும் விந்தையன்றோ?

நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப் பட்டிருந்த 19 மாத காலத்தில் நடத்தப்பட்ட அத்துமீறல், அச்சுறுத்தல், ஒழுங்கீனம், முறைகேடு, சொல்ல இயலாத கொடுமைகள் - இவற்றைக் குறித்தெல்லாம் உண்மைகளை, உலகிற்கு அறிவிக்க வேண்டாமா?

விசாரணைக் கமிஷன் என்றால் நிச்சயமாக இதில் பொய் சாட்சிகள் யாரும் தயாரிக்கப்பட மாட்டார்கள் என்று நம்பலாம்.

ஐஸ் கட்டியில் யாரையும் படுக்க வைத்து வாக்கு மூலங்களில் கையெழுத்து வாங்கி, அவர்களைக் கமிஷன் முன் நிறுத்த மாட்டார்கள் என்று நம்பலாம்.

பெரிய அதிகாரிகளை, வீட்டைச் சோதனை செய்து பயமுறுத்தி, பிறகு வேலை நீக்க உத்தரவு பிறப்பித்து அதன் பின்னர் அவர்களிடம் தங்கள் விருப்பம் போல வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொண்டு, அதற்குப் பரிசாக பெரும் பதவிகளைக் கொடுத்து தயாரிக்கப்படுகிற போலி சாட்சிகள் யாரும் சரண்சிங் குறிப்பிடுகிற விசாரணைக் கமிஷன் முன்பு மனச்சாட்சிக்கு விரோதமாக சாட்சியம் அளிக்க வர மாட்டார்கள் என்றும் திண்ணமாக நாம் நம்பலாம்.

இந்த வாக்குமூலத்தில் கையெழுத்துப் போடுகிறாயா, இல்லையா? அல்லது உன்னையும் உன் மனைவியையும் கைது செய்து வெளி மாநிலத்து சிறைச் சாலைக்கு, நாளைக்கே அனுப்பவா என்று கேட்கிற அதிகாரிகள் யாரும் சரண்சிங் குறிப்பிடும் விசாரணைக் கமிஷனுக்காகப் பயன்படுத்தப்பட மாட்டார்கள் என்றும் உறுதியாக நம்பலாம்!

அப்பப்பா! இந்த 19 மாதங்களில் நடைபெற்றுள்ள கொடுமைகள் ஒன்றா? இரண்டா?

14 வயது பையனுக்குக் கூடக் "கருத்தடை அறுவை" நடைபெற்றிருக்கிறது.

எழுபது வயதுக் கிழவனையும் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையினர் விடவில்லை.

இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானங்களை, இந்திராவின் புதல்வர் சஞ்சய்காந்தி, தனது சுற்றுப் பயணத்திற்காக இந்தப் பத்தொன்பது மாதங்களில் 47 தடவை பயன்படுத்தியிருக்கிறார்.

1976 ஜனவரி முதல் 1977 ஜனவரி வரையில் ஓராண்டுக் காலத்தில் சஞ்சய்காந்தியைப் பற்றிய வர்ணனைச் செய்திகளை 190 தடவை அகில இந்திய வானொலி ஒலிபரப்பியிருக்கிறது.

"பரோடா" வெடிகுண்டு வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்ட எஸ்.ஆர்.ராவ் என்பவரையும் அவருடன் சில தோழர்களையும்

"போலீஸ் லாக்-அப்"பிலேயே ஐந்து வாரங்கள் பம்பாயில் வைத்திருந்து ஒவ்வொரு நாளும் ஆபாச வார்த்தைகளால் அவர்களை அர்ச்சனை செய்து, குண்டாந்தடிகளால் அடித்து, பூட்ஸ் கால்களால் மிதித்து, உத்திரங்களைப் பிடித்துக் கொண்டே நாள் முழுதும் தொங்கச் செய்து, பத்மனாப ஷெட்டி என்ற ஒரு தோழரின் கண்ணையே பெயர்த்து எடுத்து அக்கிரம வெறியாட்டமே நடத்தப் பட்டிருக்கிறது.

தொழிலாளர் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள், கைவிலங்குடனேயே சிறையிலும் அடைக்கப்பட்டிருந்தார். நீதிமன்றத்துக்கும் அவ்வாறே அழைத்து வரப்பட்டார்.

அவருடைய சகோதரர் லாரன்ஸ் பெர்னாண்டஸ், போலீசாரால் தாக்கப்பட்டு, இப்போதும் நடக்க முடியாத நிலையில் இருக்கிற பரிதாபத்தைப் பார்க்கவே சகிக்க வில்லை.

தனிமைச் சிறையில் 'மிசா' கைதியாக அடைபட்டிருந்த போது ஜெயப்பிரகாஷ் அவர்களின் சிறுநீரகம், திட்டமிட்டே கெடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

'மிசா' கைதிகளாகப் பிடிபடாமல் தலைமறைவாக இருந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களின் குடும்பங்கள் சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டன.

முகுந்தன், சி. மேனன் என்பவர் ஆங்கில ஏடொன்றில் எழுதியுள்ள கடிதத்தில், கேரளத்தில் அச்சுதமேனனுடைய ஆட்சியில் 'மிசா' எந்த அளவுக்கு உச்சகட்டமாகப் பயன்படுத்தப் பட்டது என்பதைக் குறிப்பிடுகிறார். ஒரு ஆரம்பப் பள்ளிக் கூடத்து மாணவன் சஞ்சய் காந்தியைப் போல ஒரு "கார்ட்டூன்" படத்தை கரும்பலகையில் எழுதியதற்காக மிசாவில் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டானாம்! இத்தனைக்கும் சஞ்சய் காந்தியின் எதிர்ப்பாளர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் வலது கம்யூனிஸ்ட்டுகளின் ஆட்சியில் இந்த விந்தைமிகு வேதனை நடைபெற்றிருக்கிறது என்று அவர் உருக்கத்துடன் குறிப்பிடுகிறார்.

நாடு முழுவதும் "மிசா" கைதிகள் சிறைக் கொட்டடியில் ஏறத்தாழ ஐம்பது பேர் இறந்து போயிருக்கிறார்கள் என்றும்,

அதில் உத்திரப்பிரதேச மாநிலத்துச் சிறைகளில் மட்டும் 14 பேர் இறந்து போயிருப்பதாகவும் புள்ளி விபரங்கள் கூறப்பட்டுள்ளன.

சென்னை சிறைச்சாலையில் 1976 பிப்ரவரி முதல் வாரத்திலும், பின்னர் அதனைத் தொடர்ந்தும் நமது கழகத்தினர் உட்பட அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், தாங்கொணாத கொடுமைக்கு உட்படுத்தப்பட்டனர். சிறைக் காவலர்களால் அந்தத் தோழர்கள் பந்தாடப்பட்டிருக்கின்றனர். இன்னமும் அந்தத் தழும்புகளுடன் உலவிக் கொண்டிருக்கிறவர்களை நாம் காண முடிகிறது. அதன் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபுவைச் சிறையில் பறிகொடுத்தோம். மதுரைச் சிறையில் பாலகிருட்டிணனை இழந்தோம்.

அதிகார வர்க்கத்தினர் தங்கள் விருப்பம் போல் நடந்து கொள்கிற அல்லது தாங்கள் எழுதிய அரசியல் அறிக்கைகளில் கையொப்பமிடுகிறவர்களுக்கு "பரோல்" அளிப்பதும், விடுதலைக்குப் பரிந்துரை செய்வதும் மற்ற மாநிலங்களைப் போலவே தமிழ்நாட்டிலும் நடைபெற்றிருக்கிறது.

பல 'மிசா' கைதிகளுடைய விடுதலைக்காகப் பரிந்துரை செய்த ஒரு சில அரசியல்வாதிகள் அதற்கான தக்க கையூட்டுகளையும் பெற்றிருக்கிறார்கள் என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன.

தான், எதற்காக சிறையில் அடைக்கப்பட்டோம் என்று கேட்டு வாதாடுவதற்கு இயலாமல், நீதிமன்றங்களும் கட்டுப்படுத்தப் பட்டுவிட்ட காரணத்தால், ஆள்மாறாட்டமாகப் பலரை மிசா கைதிகளாகப் பிடித்தும் அடைத்தனர்.

28 வயதுடைய "மணிமொழி" என்ற ஒருவரைக் கைது செய்யச் சொல்லி, உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்துங் கூட, அந்த ஆள் கிடைக்காத காரணத்தால் 78 வயதுடைய மற்றொரு "மணிமொழி"யை மிசாவில் பிடித்துப் பூட்டிப் போட்டனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சௌந்தர ராசன் என்ற தோழரைத் தேடிப் பார்த்துக் கிடைக்காமையால், எந்தக் கட்சியையும் சேராத ஒரு பஸ் கண்டக்டர் சௌந்தரராசன் என்பவரை மிசாவில் பிடித்து ஓராண்டுக் காலம் சிறையில்

வைத்திருந்தனர். அந்த ஆள்மாறாட்டம் குறித்து உயர்மட்டத்தில் உள்ளவர்களுக்கு எத்தனையோ முறையீடுகள் செய்து கொண்டும் யாரும் அதைக் கவனிக்க முன்வரவில்லை.

நான் பொதுக் கூட்டத்திற்குச் சென்றிருந்த போது அவர்கள் வீட்டில் எனக்குச் சாப்பாடு போட்டார்கள் என்பதற்காகச் சீர்காழியைச் சேர்ந்த குமாரசாமி என்ற நண்பரை 'மிசா' சட்டப்படி கைது செய்தும், தஞ்சை மாவட்ட துணைச் செயலாளர் மீனாட்சி சுந்தரத்தை பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்தும் அல்லற்படுத்தினார்கள்.

குடந்தையில் தன் வீட்டு திருமண விழாவுக்கு தலைமை தாங்க என்னை அழைத்த நண்பர் தமிழ் மாறனைப் பாதுகாப்பு சட்டப்படி கைது செய்து வழக்குப் போட்டார்கள்.

எனக்குத் துணையாக என் காரிலே வந்து கொண்டிருந்த தென்சென்னை மாவட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியம், ஆயிரம் விளக்கு பகுதிச் செயலாளர் உசேன் இருவருமே 'மிசா'வின் பிடியில் அகப்பட்டார்கள்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஏராளமாக குறிப்பிடலாம்.

திருச்சி சிறையில் இருந்த ஒருவருக்கு திருமணத்திற்காக "பரோல்" கொடுக்கப்பட்டதாம்! அவருடன் சென்ற அதிகாரிகள் முன்கூட்டியே தெரிவித்து விட்டார்களாம்; "திருமணம் முடிந்த அன்று 'முதல் இரவு' இருப்பதாகக் கேள்விப்பட்டோம்; அப்படியானால் நாங்களும் அந்த அறையில் ஒரு பகுதியில் இருந்திட வேண்டும்" என்று! என்ன கொடுமை பார்த்தாயா? அந்த இளைஞர் திருமணத்தையும் ஒத்தி வைத்து விட்டு - பரோலையும் வேண்டாமென்று கூறிவிட்டு உடனடியாகச் சிறைச் சாலைக்கே திரும்பி விட்டாராம்!

குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் அதிகாரிகள் பலரின் மீது 'கழக அனுதாபி' என்று பழி சுமத்தப் பெற்று வேலை நீக்கம் செய்யப்படுகிற அளவுக்கு அத்துமீறிய காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன.

அகில இந்திய வானொலியும், டெலிவிஷனும், செய்தித் துறையும் அரசாங்க விளம்பரங்களை அளவுக்கு மீறிச் செய்தது

மட்டுமல்ல! நெருக்கடி நிலையை எதிர்த்த கட்சிகளையும், கட்சித் தலைவர்களையும் திட்டமிட்டே வசைமாரி பாடிக் கொண்டிருந்தன.

தணிக்கை என ஒன்று! அதுவும் "முரசொலி" போன்ற ஏடுகளுக்கு முன் தணிக்கை! நெருக்கடிக்குத் தொடர்புடைய தணிக்கை விதிகளை மீறி எழுதினால்தான் அவற்றை அனுமதிக்கக் கூடாது என்றிருந்துங் கூட அதற்கு மாறாக, வேண்டுமென்றே விதிமுறைகளுக்கு உட்பட்ட கருத்துகளையோ, செய்திகளையோ கூட வெளியிடக்கூடாது என்று அதிகாரிகள் தடுத்துக் கொண்டேயிருந்தனர்.

முதல்வர் என்ற முறையில் சட்டப் பேரவையில் நான் ஆற்றிய உரை "வாளும் கேடயமும்" என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது. அதற்கு தடை விதிக்கப்பட்டு அந்த நூல் வைத்திருந்தவர்களைப் பாதுகாப்புச் சட்டப்படிக் கைதும் செய்தனர்.

கழக நண்பர் இராம. வெள்ளையன் வீட்டைச் சோதனை யிட்டனர் வருமான வரிக்காக! அப்போது அங்கே "வாளும் கேடயமும்" என்ற நூல் ஒன்றே ஒன்று இருந்திருக்கிறது. உடனே பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது! கைதானார்! அதிகாரிகள் சூழ்ந்து முற்றுகையிட்டனர். அவரிடத்தில் தங்களுக்குச் சாதகமாகவும், நமக்குப் பாதகமாகவும் எழுதி வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டனர். இல்லாவிட்டால் அவரையும் அவரது துணைவியாரையும் வடநாட்டு சிறைக்குக் கொண்டு போயிருப்பார்கள்! பாவம்! என்ன செய்ய முடியும்? வேறு வழியில்லை வெள்ளையனுக்கு! அதனால் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக நேரிட்டது. இப்படிப் பல விவகாரங்கள்!

வேண்டியவர்கள் வீட்டில் லட்சம் லட்சமாகக் கறுப்புப் பணம் இருந்தாலும், அந்தப் பக்கம் வருமான வரி அதிகாரிகள் திரும்பிப் பார்த்தாலும் குற்றம்!

வேண்டாதவர்கள் வீடுகளில் வருமான வரிச் சோதனை! ஆர்ப்பாட்டம்! அலங்கோலம்! அன்றைக்கே ஏடுகளில் அதிகாரிகள் மூலமாக இட்டுக்கட்டி வெளியிடப்படுகிற செய்திகள்!

இதுபோன்ற எண்ணிறந்த அட்டூழியங்களை, இப்போது சரண்சிங் அவர்கள் அறிவித்துள்ள விசாரணைக் கமிஷன்

வெளியே கொண்டு வரும் என்றாலுங் கூட, இந்தக் கமிஷன் மத்திய அளவிலே மட்டும் இல்லாமல் - அதற்குத் துணையாக மாநில அளவுகளிலும் நீதிபதிகள் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு இறுதியில் மத்திய அளவில் ஒருங்கிணைப்பான நிலையில் அறிக்கை தயாரிப்பதுதான் விரைவிலேயும், விபரங்கள் சிதறாமலும், விரிவாகவும் இந்த விசாரணைக் கமிஷன் செயல்படுவதற்கு வசதியாக இருக்கும்.

இந்தக் கருத்தையும் மத்திய அரசினர் சிந்திப்பார்கள் என நம்புகிறேன்.

இந்த விசாரணைக்கான ஆதாரங்களைத் திரட்டுகிற பணியிலும் நீ, தீவிர அக்கறை காட்ட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

09-04-1977

401. அழுத்தம் திருத்தமாக அறிவிக்கிறேன்!

உடன்பிறப்பே,

சென்ற ஆண்டு 1976 பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களில் - அதாவது, கழக ஆட்சியை ஜனநாயகத்திற்கு முற்றிலும் விரோதமாகக் கலைத்ததையொட்டி, "அய்யோ! பதவி போய் விட்டதே!" என்று வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்ட சிலரும் - 'மிசா' கைதிகளாகப் பிடிபட்டவர்களில் ஒரு சிலரும் - ஒரு வேளை தங்களையும் பிடித்து விடுவார்களோ என்று அஞ்சி நடுங்கிய ஒரு சிலரும் - திடீரென்று கழகத்தின் மீதும் கழகத் தலைமையின் மீதும் குறை கூறிவிட்டு ஓடிவிட்டார்கள் அல்லவா? அதைப் போலவே இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் கழகம் தோல்வியடைந்ததும் - வாக்கு எண்ணுகிற நாள் வரையில், கழகத்தையும், கழகத் தலைமையையும் வாழ்த்திப் பாராட்டிக் கொண்டிருந்தவர்கள், கழகத்திற்குத் தோல்வி ஏற்பட்டது எனத் தெரிந்தவுடன் வேறு கட்சிகளுக்குத் தாவி, தங்கள் சொந்த வாழ்க்கையையும், எதிர்காலத்தையும் பாதுகாத்துக் கொள்ளலாமா? என்று திட்டம் தீட்டி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிலர்தான் எண்ணிக்கையில் எனினும் பத்தை நூறாக்கிக் காட்டும் பத்திரிகைகள், ஒன்றுக்கு மூன்றாகச் செய்திகளை வெளியிட்டுக் கழகம் சின்னாபின்னமாகச் சிதறுண்டு விட்டது என்று மக்களிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முனைகிறார்கள்.

சிலரல்ல, பலரே கூட இங்கிருந்தால் பதவிகள் கிட்டாது என்ற பதைப்புடன் வேறு இடங்களுக்குத் தாவிடக் கூடும். ஆனால் ஒன்றை மட்டும் மீண்டும் மீண்டும் நான் உனக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

"தி.மு.க., ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுக்கு இந்த இயக்கம் இன்னும் ஐம்பது ஆண்டுக் காலத்திற்காவது பணியாற்றிட வேண்டியுள்ளது. தமிழ் மரபு,

கலாச்சாரம், வரலாறு, இலக்கியங்கள் இவைகளைப் பாதுகாத்திட தி.மு.க. பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது.”

என நமது அண்ணா அடிக்கடி கூறியிருக்கிறாரே! அந்தக் கருத்துகளை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டுதான் நமது பயணம் நடைபெற்றாக வேண்டும்.

கழகம் தோல்வியைச் சந்தித்து விட்டதாலேயே, அனைவரும் தன் அழைப்புக்கு ஓடிவந்து விடுவார்கள் என்று கருதிக் கொண்டு நடிகர் ராமச்சந்திரன், நமது கட்சித் தலைமைக்கு, குறிப்பாக எனக்கு ஜனநாயக இலக்கணத்தைச் சொல்லித் தருகிறார். யாரோ சிலர் அவரால் தூண்டிவிடப்பட்டு இந்த நேரம் கட்சியில் ஏதாவது குழப்பம் செய்து விட்டுப் போனால் “பதவியின் சங்கிலித் தொடர்” அறுந்து போகாமல் இருக்குமே - என்ற நப்பாசையில் நாக்கைத் தட்டிக் கொண்டு இருக்கலாம். அவர்களோடு ‘தோட்டத்துப் பேச்சு’ நடத்திக் கொண்டு என் மீதுள்ள காழ்ப்பையும், கழகத்தைப் பூண்டோடு அழித்துவிட வேண்டுமென்ற நினைப்பையும் வெற்றிகரமாக நிறைவேற்றி விடலாம் என்று நம்புகிறார்.

பாவம்! ஒருவனுடைய பொது வாழ்க்கையை அவன் ஈடுபட்டுள்ள கட்சியின் தேர்தல் வெற்றி தோல்விகளுடன் கணக்கிட்டு, அவசர முடிவுக்கு வருகிறவர்களின் பட்டியலில் நடிகர் ராமச்சந்திரன், தன்னையும் இணைத்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு கட்சி ஆளுங்கட்சியானால் அதற்குப் பொறுப்புகள் இருக்கின்றன. அதைப் போலவே எதிர்க்கட்சியானாலும் அந்தப் பொறுப்புகளைச் சுட்டிக் காட்டி அவற்றுக்காகப் போர்க்குரல் கொடுக்கும் தியாக உள்ளத்தோடு கூடிய பல கடமைகளும் அந்தக் கட்சிக்கு இருக்கின்றன.

இவற்றையெல்லாம் மறந்து விட்டோ என்னவோ எம்.ஜி. ராமச்சந்திரன், “கருணாநிதி தலைமைப் பதவியை விடமாட்டேன் என்று கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறாரே, இது நியாயமா?” என்று அங்கலாய்க்கிறார்; ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதைபோல!

ஐந்தாண்டுக் காலமாக கட்சியின் சட்டதிட்டங்களைப் பயன்படுத்தி அமைப்புகளின் தேர்தல்களை நடத்தாமல், பொதுக்குழு உறுப்பினர்களை அவரே நியமித்து, அந்த நியமன

உறுப்பினர்கள் மூலமாக தன்னையும் கட்சிப் பொதுச் செயலாளராக நியமித்துக் கொண்டு, இன்னமும் எல்லாமே நியமனங்களாகவே இருக்கும் ஒரு கட்சியை நடத்தும் இவர், ஜனநாயகம் பற்றிப் பேசுவது மிகுந்த வேடிக்கைதான்!

அலகாபாத் தீர்ப்புக்குத் தலைவணங்க மறுத்து, தனக்காகவே தேர்தல் சட்டங்களை ஒருதலைப்பட்சமாக மாற்றியமைத்து அந்தத் திருத்தங்களின் படி, பதவியில் நீடிக்க புதிய தீர்ப்பைப் பெற்ற பிரதமர் இந்திராகாந்தியின் ஜனநாயகத்திற்குப் பாயிரம் பாடியவர் அல்லவா இவர். இவரா ஜனநாயகம் பற்றிப் பேசுவது?

கட்சிக்குச் சோதனையான நேரத்தில் பொறுப்பை விட்டு ஓடுகிற தலைவன், களத்தில் வீரர்களை எதிரிப் படைகளிடம் விட்டுவிட்டுத் தான் மட்டும் தப்பியோடிப் பிழைத்துக் கொள்கிற தளபதிக்குச் சமமாவான்!

அதனால்தான் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன் பெரும்பான்மையான பொதுக்குழு உறுப்பினர்கள் என் தலைமை தேவையில்லை என்று என்றைக்கு அறிவிக்கிறார்களோ, அன்றைக்கே, அதற்குக் கட்டுப்பட்டு நடக்கத் தயாராக இருக்கிறேன் என்று!

அதுதானே ஜனநாயக மரபு! அதை விடுத்து ஒரு கட்சி வெற்றிகளைப் பெறும் போது மட்டும் இருப்பேன். சோதனைகள் வந்தால் ஓடிவிடுவேன் என்பது எப்படி முறையாகும்?

நடிகர் ராமச்சந்திரனின் கட்சிக்கு நமக்கு வந்ததைப் போல சோதனைகளில் ஒரு துளி அளவு வந்தாலும், இந்நேரம் அந்தத் தலைமை கண்டி கதிர்காமம் என்று ஓடிப் போயிருக்கும்.

நான் நீண்ட நாள் வாழவேண்டுமென்று நடிகர் ராமச்சந்திரன் விரும்புகிறாராம். இப்படியும் ஒரு நல்ல எண்ணக்காரர் போல அறிக்கையில் குறிப்பிடுகிறார். “கோபாலபுரம் செல்வேன் என் படைகளோடு! கருணாநிதி வீட்டில் நுழைவோம். அங்கே என்ன நடந்தாலும் யாரும் தடுக்க முடியாது. போலீசே இருக்காது” என்று பேசிய “அரசியல் பண்பாளர்” தான் இப்படி இப்போது கூறுகிறார்.

“கருணாநிதியின் தலையை வெட்டி எங்கள் தலைவர் எம்.ஜி.ஆரின் காலடியில் வைப்போம்” என்று இன்னமும் அவரது தளநாயகர்கள் மேடைகளில் முழங்கிக் கொண்டு

தானிருக்கிறார்கள். இதற்கிடையே நடிகர் எனக்கு வாழ்த்துக் கூறுகிறார்.

நான் நடிகர் ராமச்சந்திரனுக்குச் சொல்லிக் கொள்வேன். இந்த இயக்கத்தை அழித்துவிட, அவர் ஒரு வார காலமாகக் கையாளுகிற சாகசங்களை உணர்ந்து சொல்கிறேன். யார் யாரை இவர் ஏவி விட்டுள்ளார் என்பதை அறிந்தே சொல்கிறேன்; இந்த இயக்கம் பதவிக்கு வரப்போகிறது என்று எதிர்பார்த்து அந்தக் காலத்தில் இதில் இணைந்தவர்கள் அல்ல, நாங்கள்!

எதிர்ப்புகளைச் சமாளித்து அங்குலம் அங்குலமாக நகர்ந்து முன்னேறிய அந்தக் காலத்திலிருந்து இந்தக் கட்சியில் இருக்கிறோம்.

ஒரு சிலர், ஆசாபாசங்களால் - அவர்களுக்குச் சொந்தத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளால் - வேறு பாதைகளுக்குச் செல்லக்கூடும்.

அரசியல், பொதுவாழ்வு, தொண்டு, இவைகள் எல்லாம், ஏற்றம் - இறக்கம் இரண்டுக்கும் உட்பட்டவைகள்தான்!

இந்த ஏற்றம் அல்லது தாழ்வு ஆகிய இரண்டு கட்டங்களிலுமே அவற்றை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டும், தாங்கிக் கொண்டும் பணியாற்றும் பக்குவம் படைத்தவர்கள் தி.மு.க.வில் ஏராளமானோர் இன்னமும் இருக்கிறார்கள். அவர்களில் நானும் ஒருவன்!

எனவே என்னை "அடிச்சுவடு" தெரியாமல் அழித்து விடலாம் என நடிகர் ராமச்சந்திரனைப் போன்றவர்கள் எண்ணுவார் களேயானால், நான் இறுமாப்புடன் கூறுவதாகக் கருத வேண்டாம் - தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் எனக்குள்ள இடம் நடிகருக்குரியது போல பளபளப்பு இல்லாததாக இருக்கலாம்! ஆனால் தியாக உணர்வுடன் ஓயாது உழைத்த ஒரு தமிழ்த் தொண்டனுக்கு, ஒரு கழகத் தொண்டனுக்கு உரிய இடமாக என்றென்றும் இருக்குமென்பதை மட்டும் நான் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

10-04-1977

402. நினைவுக்குக் கொஞ்சம் வேலை தர வேண்டுகின்றேன்!

உடன்பிறப்பே,

உணர்ச்சிப் பெருங்கடலாக, எழுச்சி உருவமாக, பாசத்தின் வடிவமாக, எந்தவிதத் தியாகத்திற்கும் தயாராக நீ அளித்திட்ட காட்சி கண்டு என் நெஞ்சம் விம்முகிறது. தேர்தல் வெற்றி தோல்வியென்னும் மேடு பள்ளங்கள் தோன்றக்கூடும் எனினும், இந்த உருண்டையான உலகத்தின் வலிவைப் போலவே நமது கழக அமைப்பும் உறுதி வாய்ந்தது என்பதைக் காட்டிக் கொள்ள நடந்து முடிந்த இரண்டு நாட்களே உனக்குப் போதுமானதாக இருந்தது.

உள்ளுக்குள் பிளவு என்னும் புற்றுநோய் தோன்றாதா என எண்ணியும், எழுதியும் நமது கழக "உட்கட்சிப் பிரச்சினை"யில் தொடர்ந்து தலையிட்டுப் பேசிக் கொண்டும் வந்தவர்கள், "ஆகா! இது உட்கட்சி விவகாரம்" என நல்லவர்களைப் போல நடித்து இந்தப் புயல் வலுக்க வேண்டுமென்பதற்காகக் கோடி கோடிச் செயல்களில் ஈடுபட்டும் கூட வந்த புயல் வசந்தத் தென்றலாக மாறிவிட்டது கண்டு மனம் புழுங்குகிறார்கள்.

புயலையும், பூகம்பத்தையும் கழகத்திற்குள் ஏற்படுத்தச் சில இதழாளர்களும் தங்களால் முடிந்த அளவு பணியினைத் தீவிரமாக ஆற்றிப் பார்த்தனர்.

மஞ்சள் வண்ணம் பூசிக் கொண்டு உலவுகிற ஏடுகளின் செய்திகளைப் பற்றி, நான் என்றைக்குமே கவலைப்படுகிறவனல்ல! எதிர்ப்பையோ, கண்டனத்தையோ கூட பண்பார்ந்த முறையில் அரசியல் நாகரிகம் கெடாதவண்ணம் செய்திகளாகவோ, அல்லது எண்ணங்களாகவோ வடித்துத் தருவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ள போற்றுதற்குரியச் சில ஏடுகளே கூட கழகக் கட்டுக்கோப்பைக் குலைக்கத் தக்க வகையில் நடந்து காட்டியது தான் எனக்கு மிக்க வேதனையைத் தந்தது.

இதற்கோர் எடுத்துக்காட்டு, நான் கழகத் தலைமைப் பதவி விலகியதும் நிருபர்களைச் சந்திக்கிறேன். பேட்டி முடிகிறது. செய்திக்குரிய விஷயமாக அல்லாமல் ஒரு நிருபர் கேட்கிறார்; அந்த முன்னாள் அமைச்சர் யார் என்று! "நான் சொல்வதற்கில்லை" என்று கூறுகிறேன். ஆனால் அந்த முன்னாள் அமைச்சர், நண்பர் ராஜாராம் அவர்கள் தான் என்று நான் ஜாடையாகக் கூறியதாக ஒரு நிருபர், தான் பணியாற்றும் ஏட்டில் செய்தி வெளியிட்டுச் சிக்கலை அதிகப் படுத்துகிறார். நான் சொல்லாதது அது! இப்படிப்பட்ட தவறான தகவல்களைத் தந்து திசை திருப்பும் முயற்சியில் பொறுப்புள்ள இதழ்கள் ஈடுபடக் கூடாதல்லவா?

எப்படியோ சிலர், கழகத்தில் மேற்கொண்ட கருத்து சரியானதோ அல்லது தவறானதோ அதுபற்றிப் பிரச்சினையல்ல. ஆனால், அதற்காகக் கையாண்ட முறை கட்சிக் கட்டுப்பாட்டினைச் சீரழித்து விடக் கூடுமென்ற அச்சத்தினால் தான் நான் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். அதனால் தான் நீ, என்னைப் பார்த்துக் குமுறிக் கொந்தளிக்கிற அளவுக்கு "பதவி விலகல்" என்னும் குற்றத்தைச் செய்து விட்டேன். ஏறத்தாழ இருபத்தி எட்டு மணி நேரம் உன் முன்னால் நான் குற்றவாளியாக நின்றேன்.

"சரியா? முறையா? தேவைதானா?" என்றெல்லாம் சரமாரியான கேள்விகளை பாண்டியன் கொலு மண்டபத்தில் கண்ணீருங் கம்பலையுமாக நின்று கொண்டு கண்ணகி கேட்டதைப் போல நீ கேட்டுக் கொண்டேயிருந்தாய் என்னைப் பார்த்து!

அதற்கிடையே நமது ஆருயிர்ப் பொதுச் செயலாளர் நாவலரின் 'பதவி விலகல்' செய்தியும் கிடைத்து, மேலும் பதறிப் போனாய்! கடவுள்களின் விசுவரூப தரிசனத்தைப் புராண ஏடுகளில் படித்திருக்கிறேன். நாடக மேடை, திரைப்படக் காட்சிகளில் கண்டிருக்கிறேன். அந்தத் தரிசனத்தை உன் வடிவத்திலே நானும் நாவலரும் கண்டோம்!

பேரன்புக்குரிய பேராசிரியர் மற்றும் கழகத்தின் வைரமணிகள் செயல்பட்ட முறையும், உன் உணர்ச்சிப் பிரவாகத்திற்கு முன்னால் எங்களால் பிடிவாதமாக நிற்க முடியாத நிலையும் இணைந்தது. கழகம், காப்பாற்றப்பட்டது. கழக அமைப்பின் முழு வடிவு தெரிந்தது.

தொடர்ந்து தொய்வின்றிச் செயல்படுவோம்!

தேர்தல் வெற்றி தோல்விகளைக் கணக்கிட்டுக் கொண்டிருக்க தேவையில்லை.

கிரிக்கெட் ஆட்டத்தில் "முதல் இன்னிங்ஸ்" விளையாட்டில் "நூறு ரன்கள்" எடுத்து சதம் போடுகிற வீரர், அடுத்த "இன்னிங்ஸ்" விளையாட்டில் ஆடத் தொடங்கியவுடனே "அவுட்" ஆகிவிடுவதில்லையா?

அதனால் அந்தக் கிரிக்கெட் வீரரின் திறமை, பந்தாடும் பாங்கு, வலிமை எல்லாமே போய்விட்டது என்று யாரும் எண்ணிடுவதில்லை அல்லவா?

அப்படி எண்ணிக் கொண்டு நமது கழகத்தை வளர்ப்போம்! இலட்சியப் பயணத்தை நடத்துவோம்! வெற்றி முனை நோக்கிச் செல்வோம்!

நேரம் பார்த்திருந்த சிலர், இதுதான் சமயமென்று கழகத்தை விட்டு வெளியேறுகின்றனர். அறிக்கைகள் விடுகின்றனர்.

அவர்களைப் பற்றி நினைக்கும் போது அண்மையில் நமது கவிஞர் குடியரசு அவர்கள் ஆவேசத்துடனும் உருக்கத்துடனும் எழுதியுள்ள கவிதை வரிகள் தான் அக நிழலாடுகின்றன.

உயிரையும், மூச்சையும் ஈந்து இந்தக் கழகத்தை பல சந்தர்ப்பவாதிகளையும் வளர்த்து விட்ட கழகத் தொண்டனை அவர் படம் பிடித்துக் காட்டுகிறார் பார்!

பரிசுத்தம் ஆகிறது கழகம்! இங்கே
பாவத்தை விதைத்தவர்கள் – லஞ்சம் வாங்கி
தரிகெட்டுப் போனவர்கள் எல்லாம்; ஓடித்
தப்பிக்க முயலுகின்றார்! தப்பிக் கட்டும்!
நரி எங்கே போனாலும் பரவா யில்லை
நன்றியுள்ள மனிதரெல்லாம் இருப்போம் இங்கே
எரிகின்ற விண்மீன்கள் எரிந்த பின்னே
எஞ்சிநிற்கும் விண்மீன்கள் இரவை மீட்கும்.

கடல்வற்றிக் கருவாடு உண்பதற்குக்
குடல்வற்றிக் கொண்டிருந்த கொக்கே! நீங்கள்
அடலேறு வாயிருந்தால் கொள்கை என்னும்
அனலுக்குள் தங்கமாக விழுக்கூ டாதா?

முடத்தெங்கு போல்மாற்றார் வீட்டை நோக்கி
முட்டையிட ஓடி விட்டீர் இளநீர் காயை
நடவுநட்டோர் களைகளையோ நடுவர்! உங்கள்
நஷ்டத்தில் எங்களுக்கு இலாபம் உண்டு

பதவியினால் உயர்ந்தீர்கள் உங்களுக்கு
பாடுபட்டுக் கிழிந்துபோன கோணித் துண்டு
மதிலோரம் கிடக்கிறது! கழகத் தொண்டன்
விழிகளிலே தள்ளாடும் வெளிச்சத் துண்டு
மெது மெதுவாய் அணைகிறது! அவன்கு டும்பம்
மெருகெல்லாம் உருகிப் போய் எதிர்காலத்தின்
புதுச்சேவல் கூவினாலும் எழுந் திருக்க
முனைகிறது முடியவில்லை! ஆனால் நீங்கள்

வேலியோரம் சோரமன்றோ போகின் றீர்கள்
வீதிகளில் விழாஎடுக்க கழகத் தொண்டன்
தாலியினை அடகுவைத்தான்! சுலபமாகத்
தாண்டுகின்றீர் தாவுகின்றீர் அடுத்த கட்சி!
கோலியாடும் புத்தியெல்லாம் உங்களுக்குக்
கிழவயதில் வருமென்று நினைக்கவில்லை
கூலிக்கு மாரடித்து வாழ்வதற்கா
குழைந்தீர்கள் நெளிந்தீர்கள்! நீங்கள் எல்லாம்

வளமாக வாழ்வதற்கு பலபேர் இங்கே
வசந்தத்தைக் கிழமாக்கிச் செத்துப் போனான்
களங்கண்டான் சிறைச்சாலைப் பிணமாய் ஆனான்
கல்லறைக்குப் போனானே அவனின் பிள்ளை
இளநீர் போல் இருக்கின்றான் அவனுக் காக
நீங்கள் ஏன் தொண்டாற்ற வரக்கூடாது?
குளத்துக்குள் மீனிருந்தால் இருப்பீர் பின்பு
குளம் வற்றிப் போய்விட்டால் ஓடுவீரோ!

★

இந்தக் கவிதையுடன் இந்தக் கடிதத்தை முடிக்கின்றேன். நெஞ்சமுள்ளவர்கள் நினைவுக்குக் கொஞ்சம் வேலை தர வேண்டுகின்றேன்.

அன்புள்ள,

மு. க.

13-04-1977

403. கோபுரத்தில் ஏறி நின்று கூவத்தான் போகின்றன!

உடன்பிறப்பே,

அலகாபாத் நீதிமன்றம் "இந்திரா காந்தியின் தேர்தல். ஊழல் நிறைந்தது. அதனால் அது செல்லாது" என்று 1975-ஆம் ஆண்டில் தீர்ப்பளித்த போது நிருபர்கள் என்னைச் சந்தித்து கருத்தறிவிக்குமாறு கேட்டார்கள்.

இந்திராகாந்தி அம்மையார் பிரதமர் என்ற நிலையில் இப்போது எடுக்கிற முடிவு எதிர்கால இந்தியாவுக்கு முன்மாதிரியாக இருக்குமென்று சொன்னேன்.

"அவர்கள் பதவி விலகினால்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். "பாராட்டுவேன்" எனப் பதில் அளித்தேன்.

அவர்கள் அப்பீல் செய்து சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வருவதற்கு முன்பு இந்திராகாந்தியின் ஜனநாயகப் போக்கை நான் குறை கூறியதாக நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் எழுதியுள்ளார்.

நாமும், நாடும் கண்ட குறையெல்லாம் இந்திரா காந்தி "அப்பீல்" செய்தது குறித்து அல்ல!

சுப்ரீம் கோர்ட்டில் அப்பீலையும் செய்துவிட்டு, அதற்கிடையே நாடாளுமன்றத்தில் தேர்தல் பற்றிய விதிமுறைகளைத் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டு, அப்படி மாற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைப் பெற்றார்களே! அந்த ஜனநாயகத்தைப் பற்றித்தான் நடிகர் ராமச்சந்திரன் என்ன கூறுகிறார்? அல்லது அப்போது என்ன கூறினார்? என்று கேட்டிருந்தேன். குழப்பத்தைத்தான் பதிலாக அளித்துள்ளார்.

சர்க்காரியா கமிஷன், எட்டு குற்றச்சாட்டுகளின் மீது தந்துள்ள அறிக்கைக்கு நான் தலை வணங்கிட வேண்டுமாம். புகார் மனு கொடுத்த இந்த "புத்த பிரானும்" கம்யூனிஸ்டு "ஏசுபிரானும்"

சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, இவர்களும் இவர்களின் புகாருக்காகச் சாட்சியம் கூறும் அனைவரும் குறுக்கு விசாரணை செய்யப்பட வேண்டுமென்று கேட்ட போது எங்கள் கோரிக்கையை சர்க்காரியா கமிஷன் ஏற்க மறுத்து விட்டது. அதனை ஏற்கக் கூடாதென்று அரசுத் தரப்பிலும், மனு கொடுத்தோர் தரப்பிலும் - வழக்கறிஞர்கள் வாதாடினார்கள். இந்த வீராதி வீரர்களான எம்.ஜி.ராமச்சந்திரனும், அவர் குழுவினரும் இதோ நாங்கள் குறுக்கு விசாரணைக்குத் தயார் என்று துணிந்து கூறவில்லை. முன்னூறு சாட்சிகளை அதிகாரிகள் தயாரித்தார்களே தவிர, அவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படவில்லை. அதனால்தான், அந்த சர்க்காரியா கமிஷன் விசாரணையில் நாம் பங்கு கொள்ளவில்லை.

பல லட்ச ரூபாய் வருமான வரியை ஏய்த்தவர் எம்.ஜி. ராமச்சந்திரன்.

ஒரு படத்துக்கு ஒரு லட்சம் என்று ஒப்பந்தம் செய்து கொண்டு ஏழெட்டு லட்ச ரூபாயைக் கறுப்புப் பணமாகப் பெற்றுக் கொண்டு, தொடர்ந்து வருமான வரித் துறையை ஏமாற்றிக் கொண்டு வருபவர் இந்த எம்.ஜி. ராமச்சந்திரன்.

பல லட்ச ரூபாய்க்கு அந்நியச் செலாவணி மோசடி செய்து அந்த வழக்கிலும் ஈடுபடுத்தப்பட்டிருப்பவர் இந்த எம்.ஜி. ராமச்சந்திரன்.

இவர், தன்னைப் புத்தரென்றும், ஏசுவென்றும் கூறிக் கொண்டு ஊரை ஏமாற்றித் திரிகிறார். படங்களிலே இவரை உத்தமன் வேடத்திலே பார்க்கிற பாமர மக்கள் ஏமாந்து போகிறார்கள். இவருடைய பளபளப்பிலேயே மறைந்து கொண்டு பதவிச் சுகத்தை அனுபவித்த வரையிலே லாபம் என்று இவரது கட்சியில் உள்ள அரசியல் தெரிந்த சிலபேர், இவரை ஏமாற்றிக் கொண்டு தங்கள் ஆசையைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இல்லாவிட்டால், இவரை "அரசியல் ஞானி" என்று ஏற்றுக் கொண்டா இவர் கட்சியில் அவர்கள் இருக்கிறார்கள்?

ஆம் - அரசியல் ஞானி என்று ஏற்றுக் கொண்டுதான் அரசியல் தெரிந்த சிலர் இவர் கட்சியில் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் எல்லாம் அண்ணாயிசத்துக்கு இவர் கூறிய விளக்கத்தை ஏற்றுக் கொள்கிறார்களா?

"இந்தியாவில் இப்போதுள்ள மக்கள் அனைவரும் திராவிடர்களே தான்!" என்று நிருபர்களிடத்திலே கூறி அது அவர் கட்சியின் ஏடுகளிலேயே வந்திருக்கிறதே; அதை அவர் கட்சியில் உள்ள அரசியல்வாதிகள் ஒப்புக் கொள்கிறார்களா?

எந்தக் கட்சியிலிருந்து யார் வந்தாலும் அல்லது யார் தன் கட்சியில் சேர்ந்தாலும், அவர்களை முதலில் விசாரணைக் கூண்டில் நிறுத்தி விசாரித்து விட்டுத்தான் பிறகு தனது கட்சியில் சேர்க்க முடியும் என்று திட்டவட்டமாக அறிவித்தாரே, அந்த அறிவிப்பின் படி அவர் கட்சியின் உறுப்பினர்கள், நிர்வாகிகள் யாராவது எந்த நீதிபதியின் முன்னிலையிலாவது இதுவரையில் விசாரிக்கப்பட்ட துண்டா? இந்தக் கேள்வியை அவர் கட்சியில் உள்ள அரசியல் வாதிகள், யாராவது அவரை நோக்கிக் கேட்டதுண்டா? அவர்தான் விடை அளித்ததுண்டா?

சர்க்கார் நிலத்தை சத்யா ஸ்டுடியோவுக்கு எடுத்துக் கொண்டதை உடனடியாகத் திருப்பித் தரப்படும் என்று 1972ஆம் ஆண்டு எல்லா இதழ்களிலும் அறிக்கை விட்டாரே, இதுவரையில் திருப்பிக் கொடுத்தது உண்டா?

பதின்மூன்று நோட்டீஸ்கள் கொடுத்த பிறகும், எம்.எல்.ஏ. என்ற முறையில் சட்டசபையில் வைக்க வேண்டிய சொத்து விவரக் கணக்கை, இவர் வைக்கவே இல்லையே? இவரா நேர்மையைப் பற்றிப் பேசுவது?

எதற்கெடுத்தாலும், "சர்க்காரியா! சர்க்காரியா தீர்ப்பு!" என்று எக்காளமிடுகிறாரே? சர்க்காரியா தீர்ப்பும் வழங்கவில்லை, தண்டனையும் அளிக்கவில்லை. அறிக்கைதான் கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கையும் நமது கோரிக்கைகள் ஏற்கப்படாத நிலையில் நாம், விசாரணையில் பங்கு பெறாமல் ஒரு தலைப்பட்சமாக அளிக்கப்பட்ட அறிக்கையாகும்.

ஊழலின் விளை நிலமாக, கறுப்புப் பணத் திமிங்கலமாக, தங்கக் கடத்தல் வள்ளலாக, வருமான வரி ஏய்ப்புப் பிரபுவாக, அந்நியச் செலாவணி மோசடி நபராக - விளங்குகிறவர்கள்; அரசியலில் பழிவாங்குவதற்காக இந்திரா அரசு நம்மீது கொடுத்துள்ள வழக்குகளையும், விசாரணைகளையும் பெரிதுபடுத்திப் பொய்யிலும், புளுகிலும் சில நாட்கள் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கலாம்.

நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் காலையில் எழுந்தால் கறுப்புப் பணப் பேழைக்கே வணக்கம் செலுத்துகிறார். கப்பல் வியாபாரக் கமிஷன் மனிதருக்குத்தான் கைலாகு கொடுக்கிறார். வேலூரிலும், சென்னையிலும், மதுரையிலும், குமரியிலும் கடல்போல வீடுகளைக் கட்டிக் கொண்டு வைரங்கள் ஜொலிக்க வாழ்க்கை நடத்தும் அரசியல் வணிகர்களுக்குத்தான் வாழ்த்துக் கூறிக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில் அய்யோ பாவம்! இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா? என்பதைப் போல நாட்டுக்கு நல்லுரைகள், ஊழல் ஒழிப்பு பற்றி ஊருக்கு உபதேசம், ஒழுக்கம் பற்றி காலட்சேபம், இத்யாதி! இத்யாதி!!

இவற்றையெல்லாம் உடன் பிறப்பே, மக்களுக்கு விளக்கிச் சொல்லாமல் விட்டதால்தான், இந்த மனிதர் "தெய்வ வேடம்" புனைந்து திரிந்து கொண்டிருக்கிறார்.

இவரிடத்தில் சரணாகதி அடைகிறேன் என்று நான் தூதர்களை அனுப்பி வைத்தேனாம்!

பொய்யைச் சொல்லியே, பொது வாழ்க்கையில் தன் எதிரிகளுக்குக் களங்கம் கற்பித்து விடலாம் என்று கனவு காணுகிறார்! பாவம், ஏமாந்து போவார்!

என் மகன், இவரிடத்தில் சேர்ந்து விடுவதாகச் சொன்னானாம்; தந்தையையும் மகனையும் பிரிக்கக் கூடாது என்று இவர் பெருந்தன்மை காட்டி விட்டாராம்!

பேராசிரியரின் தம்பி அறிவழகனைத் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டு அண்ணனையும் தம்பியையும் பிரிக்கலாமாம்!

நண்பர் எஸ்.எஸ். ராஜேந்திரன் நமது கழகத்தில் இருந்த போது அவரது மகனைத் தன் கட்சியில் சேர்த்துக் கொண்டது தந்தை மகனைப் பிரித்தது ஆகாதாம்!

குடும்ப விஷயத்தை நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் இழுத்ததால் சொல்கிறேன். எத்தனையோ குடும்பங்களில் தந்தை ஒரு கட்சி, தம்பி ஒரு கட்சி என்றும் இருப்பதுண்டு! அவ்வளவு ஏன்?; எம்.ஜி.ராமச்சந்திரனின் துணைவியாரே, தனக்கு அண்ணாவிடத்திலே நம்பிக்கை கிடையாது என்று திட்டவட்டமாகப் பேசியது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு

‘அலை ஓசை’ பத்திரிகையில் ஆதாரத்துடன் வந்துள்ளதே! அதற்கு இதுவரையில் எம்.ஜி.ராமச்சந்திரன் மறுப்பு அளித்தது உண்டா?

“நண்பர் ராமச்சந்திரன் அவர்களே! வேண்டாம் இந்தப் பூச்சாண்டி! கருணாநிதியை நீங்கள் அறிவீர்கள்! அவன் கட்சிக்குத் தலைவன் மட்டுமல்ல, உயிரைப் பணயம் வைத்து உழைக்கும் ஒரு தொண்டன்! கருணாநிதியின் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமல்ல! அவன் உடல் உறுப்புகளே ஒவ்வொன்றாக அவனிடமிருந்து பிரிக்கப்பட்டாலும் - கடைசித் துளி ரத்தம் இருக்கும் வரையில் - அவன் “கழகம் கழகம்” என்றே கூறிக் கொண்டு உயிரை விடக் கூடியவன்!”

என்பதை மட்டும், உடன்பிறப்பே! உன் வாயிலாக அவருக்குக் கூறி வைக்கிறேன்.

“நள்ளிரவில் இருட்டுக்கிடையில் துப்பாக்கியைக் கொடுத்தவர் யார்? யாரை ஒழிப்பதற்காகக் கொடுக்கப் பட்டது என்பது பற்றிய உண்மைகள் வெளிவரும்.”

என்று நடிகர் ராமச்சந்திரன் எழுதியுள்ளார்! வாசக அமைப்பைக் கவனித்தாயா?

நள்ளிரவில்!

இருட்டுக்கிடையில்!!

அது கிடக்கட்டும்! நான் அவரையே கேட்கிறேன்! துப்பாக்கியைக் கொடுத்தது யார்? துப்பாக்கியைக் கொடுத்தது பற்றிச் சொல்கிறாரா? அல்லது இவரே எடுத்துக் கொண்டு போய் மற்றொரு கதாநாயகனிடம் நள்ளிரவில் எச்சரித்ததாகக் கூறப்படுகிறதே 1972-ஆம் ஆண்டு, அதைப் பற்றிச் சொல்கிறாரா?

- “கருணாநிதி, உண்மையை உலகுக்குத் துணிவோடு அறிவித்து, செய்த பாபங்களுக்கு மக்களிடமே மன்னிப்புக் கேட்கட்டும்.”

என்று அவர் தனது கட்டுரையை முடிக்கிறார்.

இதோ அறிவிக்கிறேன் ஒரு உண்மையை!

ஏழாண்டுக் காலம் தண்டனை முடிந்து எம்.ஆர்.ராதா, விடுதலையாகப் போகிற நேரத்தில் - எப்படியாவது அவரை மேலும் சில காலம் சிறையிலேயே வைத்திருக்க

வேண்டும் என்றும், அதற்கு ஏதாவது சிறைக்குள்ளேயே ஒரு அசிங்கமான குற்றச்சாட்டை அவர்மீது சுமத்த வேண்டுமென்றும் - முதலமைச்சராக இருந்த என்னைப் பார்த்துக் கேட்டவர் இந்த எம்.ஜி.ராமச்சந்திரன். "அது முடியாது! முடியவே முடியாது!" என்று மறுத்தவன் நான்.

உடன்பிறப்பே, இவரைப் பற்றியும் இவரது கட்சியில் உள்ள சில "புனிதர்"களைப் பற்றியும் ஆதாரபூர்வமானக் கடிதங்களுடன் எதிர்காலத்தில் நான் வெளியிட இருக்கிற உண்மைகளில் ஒரு துளியை மட்டும் இப்போது வெளியிட்டுள்ளேன். அதுவும் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களே கேட்டுக் கொண்டதால்!

மற்ற உண்மைகளும் விரைவில் பேசும் அவர் விரும்பினால்!

அவரது தலைவெட்டித் தளபதிகளால் நான் ஒருக்கால் இல்லாமல் ஆக்கப்பட்டுவிட்டாலும் - அந்த உண்மைகள் கோபுரத்தில் ஏறி நின்று கொண்டு கூவத்தான் போகின்றன!

அன்புள்ள,

மு. க.

15-04-1977

404. சதாசிவம் குழு அறிக்கையும், சரியான தகவல்களும்!

உடன்பிறப்பே,

மதுவிலக்கைச் சரியானபடி நடைமுறைப்படுத்துவதற்கென்று பரிந்துரைகளைச் செய்யுமாறு முன்னாள் நீதிபதி சதாசிவம் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட உயர் மட்டக்குழு, தனது அறிக்கையை அரசுக்கு வழங்கியிருக்கிறது.

அந்த அறிக்கையிலும் தி.மு.க. ஆட்சியின் மீது குறைபாடுகள் சிலவற்றைக் குறிப்பிட அந்தக் குழுவினர் தவறவில்லை.

"சதாசிவம் குழு ஏற்கனவே தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்து விட்டது" என்று ஏடுகளில் வந்துள்ள வாசகம், அதாவது தேர்தல் முடிவுகளுக்கு முன்பே - இந்திரா ஆட்சியின் போதே என்று "கடந்த காலத்தை" குறிப்பதாகும்.

"1971- ஆம் ஆண்டு அன்றைய தி.மு.க. அரசு, மது விலக்குத் திட்டத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைத்ததின் மூலம், குடிப்பழக்கமே அறிந்திராத ஒரு தலைமுறையினர் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி விட்டனர்."

என்று அந்த உயர்மட்டக் குழுவினர் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அந்தக் குழுவினர் 1971-ஆம் ஆண்டுக்கு முன்பு, மது விலக்கு நடைமுறையில் இருந்த போது தமிழ்நாட்டில் அது எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடைபெற்றது என்ற ஆராய்ச்சியையும் முறையாகச் செய்திருந்தால் பல உண்மைகளை அறிந்து கூறியிருக்க முடியும்.

மதுவிலக்கு அமலில் இருந்த 1968-ஆம் ஆண்டில்தான் சென்னையிலும், வாலாஜாவிலும் "வார்னீஸ்" என்னும் போதைப் பொருளைக் குடித்துவிட்டு, ஆடவர், பெண்டிர், முதியோர், சிறுவர்கள், வாலிபர் என்ற நிலையில் நூற்றுக்கு மேற்பட்டோர் ஒரே

நாளில் மாண்டார்கள். பலருக்குப் பார்வை பட்டுப் போய்விட்டது. இது 1971-க்குப் பிறகு அல்ல!

சென்னையில் சில மாணவர்களின் விடுதிகளில் 1971-க்கு முன்பு கலவரங்கள் நடைபெற்ற போது, அந்த விடுதிகள் சிலவற்றில் ஏராளமான "பீர்" பாட்டில்களும், "பிராந்தி" பாட்டில்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இது 1971-க்குப் பிறகு அல்ல!

மதுவிலக்கு நடைமுறையில் இருந்தபோது சாராய வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்ட கைதிகளின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் பேர், மூன்று லட்சம் பேர் என்று இருந்தது. 1967-ல் மட்டும் மதுவிலக்குக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டோர் தொகை மூன்றரை லட்சம் பேர்! இந்த விவரம் சட்டசபையிலேயே பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் 1971-க்கு முன்புதான்!

"தி.மு.க. அரசு, மதுவிலக்கைத் தற்காலிகமாக ஒத்தி வைத்ததாக அறிவிப்பதற்கு முன்பு மாநிலத்தில் சுமார் இருபத்தி ஐயாயிரம் மதுபான பர்மிட்தாரர்களே இருந்தார்கள். தமிழ்நாட்டில் மதுவிலக்குத் தளர்த்தப்பட்டு இலகுவாகக் கிடைப்பதற்கு வழி செய்யப்பட்ட பிறகு பர்மிட்த் தாரர்களின் எண்ணிக்கை சுமார் ஐம்பத்தி ஏழாயிரமாக உயர்ந்து விட்டது என்பதும் இந்த ஆய்விலிருந்து புலப்பட்டுள்ளது."

இதுவும் உயர்மட்டக் குழுவின் அறிக்கையில் காணப்படுகிற தகவல்தான்!

தி.மு.க. அரசு, 1971-ல் ஒத்திவைத்த மதுவிலக்குத் திட்டத்தை மீண்டும் பரிசீலித்து மறுபடியும் நடைமுறைக்குக் கொண்டு வந்த பிறகு பர்மிட் வழங்குவதில் கடுமையான முறைகள் கையாளப்பட்டன. மனுச் செய்து கொள்வோர் ஐநூறு ரூபாய் கட்ட வேண்டும் என்று விதிமுறை வகுக்கப்பட்டது. ஆனால், ஓரிருவர் நீதிமன்றத்திற்குச் சென்று குறைவான கட்டணம் தான் வாங்க வேண்டுமென்று தங்களுக்குச் சாதகமானத் தீர்ப்பைப் பெற்று விட்டார்கள். அதன் பிறகே பர்மிட் கட்டணம் நூறு ரூபாய் என்ற அளவில் குறைக்கப்பட வேண்டியதாயிற்று. இதனை அந்த உயர் மட்டக் குழு ஆராய்ந்ததாகத் தெரியவில்லை.

தி.மு.க அரசு, மதுவிலக்கை ஒத்தி வைப்பதற்கு முன்பு இருபத்தி ஐயாயிரம் பர்மிட்தாரர்கள் அனுமதி பெற்றுக் குடித்து வந்தார்கள் என்றும் - இடையில் ஒத்தி வைத்து மீண்டும் அமல்படுத்திய பிறகு ஐம்பத்தி ஏழாயிரம் பேராக பர்மிட் தாரர்களின் எண்ணிக்கை உயர்ந்து விட்டதென்றும் தி.மு.க. அரசு மீது பழி போடுவது போல அந்தச் செய்தியில் சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. 1976 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாள் நமது கழக ஆட்சி கலைக்கப்படுகிற வரையில் பதினைந்தாயிரம் பேர்களுக்கும் குறைவாகத்தான் "மது பர்மிட்" வழங்கப்பட்டுள்ளது. அந்த அனுமதிக்கு இறுதியாகக் கையெழுத்து போடுபவனாக நான்தான் இருந்தேன். எனவே, பர்மிட் பெற்றவர்களில் முக்கியமான பலருடைய பெயர்கள் கூட எனக்கு இன்னமும் நினைவிலே இருக்கின்றன.

இதிலிருந்து என்ன தெரிகிறது? கழக ஆட்சிக் காலம் வரையில் பதினைந்தாயிரம் பேருக்கு மட்டுமே "மது பர்மிட்" தரப்பட்டுள்ளது!

குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஓராண்டுக் காலத்தில் மட்டும் நாற்பதாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு மது பர்மிட் வழங்கப் பட்டுள்ளது!

இந்தச் சரியான தகவலையும் அந்த உயர் மட்டக்குழு வழங்கியிருக்குமானால் நாட்டு மக்கள் உண்மையை உணர்ந்திருக்க முடியும்!

மதுவிலக்கை மீண்டும் அமல்படுத்திய பிறகு, தி.மு.க. அரசு அந்தத் திட்டத்தை தளர்த்தவே இல்லை. அதற்கு ஏற்ப இறக்குமதி ஏற்றுமதி லைசென்ஸ்தாரர்களுக்கு மட்டுமே உரிமைகள் வழங்கப்பட்டன. பரவலாக எல்லா வியாபாரிகளுக்கும் அந்த உரிமை வழங்கப்படவில்லை. அதில் தவறுகள் நடைபெறக் கூடும் என்பதற்காகவே அவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டது.

இவற்றையெல்லாம் ஆராய்ந்திருந்தாலும், 1971-ல் மதுவிலக்கை ஒத்திவைக்க வேண்டிய அளவுக்கு மாநிலத்தின் நிதிநிலையில் நெருக்கடி ஏற்பட்டதை ஆராய்ந்திருந்தாலும், அப்போது நான் நிதிநிலை அறிக்கையில் கூறிய கருத்துகளை

ஆராய்ந்திருந்தாலும், உயர்மட்டக்குழு, இப்படியொரு பழியைத் தி.மு.க. அரசின் மீது சுமத்தியிருக்காது.

இந்தியா முழுமையும் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தாமல் "போலி காந்தியம்" பேசிக் கொண்டிருப்பவர்கள், 1971-ல் நான் சட்டப் பேரவையில் நிகழ்த்திய உரையின் சில பகுதிகளைப் படித்துப் பார்க்கட்டும். அந்த உரை வருமாறு:-

"நிதிப் பற்றாக்குறை மிகுந்த ஒரு சூழ்நிலையில், உத்தமர் காந்தியடிகளின் ஒப்புயர்வற்ற திட்டங்களில் ஒன்றான மதுவிலக்குத் திட்டத்தை, அவரது கொள்கைகளைப் பொன்னே போல போற்றி வந்த பல்வேறு மாநிலங்களில் படிப்படியாக கைவிட்டு இறுதியில், தென்னகத்தைப் பொறுத்த வரையில் ஆந்திரத்திலும், கேரளத்திலும், கர்நாடகத்திலும், அருகிலுள்ள புதுவையிலும் மதுவிலக்குக் கொள்கைப் பிடிப்பற்றுப் போய்விட்ட நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி, தமிழகம் மாத்திரம் தனித்து நின்று மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்த இயலாமல் தத்தளிப்பதையும் சுட்டிக்காட்டி, அண்ணல் காந்தியின் மதுவிலக்குக் கொள்கையை அனைத்திந்திய அளவில் ஏற்கவேண்டுமென்றும் அல்லது நமக்கு நேரிட்டுள்ள இழப்பினை ஈடு செய்ய வேண்டுமென்றும் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

புனித நோக்கத்தோடு, இந்தியப் புவி முழுதும் எந்தக் கொள்கை விரிவாக்கப்பட வேண்டுமென்று கூறினோமோ, அந்தக் கொள்கை - அவர் ஏந்திய கொடி நிழலில் அணி வகுத்து நின்ற, அவர்தம் தானைத் தளபதிகளாம் மாநில முதல்வர்களாலேயே பின்பற்ற முடியாமல் போனது மட்டுமல்ல! மத்திய அரசினை நடத்தும் மகாத்மாவின் வாரிசுகளாலும் புறக்கணிக்கப் பட்டு விட்டது வேதனை தரும் செய்தியாகும்.

கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ்நாடு எத்தனை நாளைக்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்?

தமிழகத்தில் மட்டும் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப்படுத்துவதால், மது விலக்கின் வாயிலாக நாம்

காப்பாற்ற விரும்பும் ஒழுக்கம், நாணயம், நேர்மை இவைகளையே பாதுகாக்க வாய்ப்பில்லாமல் போகிறது.

வரக்கூடிய வருமானத்தையும் இழந்து, கொள்கையை அமல்படுத்துவதிலும் வெற்றி காண முடியாத அளவிற்குப் புறச் சூழ்நிலைகள் உருவாகி, சிறைகள் வழிந்திடவும் கொடிய நோய்கள் பெருகிடவும் இந்தச் சட்டம், காரணமாக இருந்ததேயன்றி உற்ற பயன் ஒரு சிறிதும் விளையவில்லை என்பதை ஒப்புக் கொள்வதில் நாம் வெட்கப்படத் தேவையில்லை.

எனவே, உயர்தனிக் கொள்கையான மது விலக்கில் இந்த அரசு தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கிறதெனினும் இந்திய நாடு முழுவதுக்குமாக இந்தக் கொள்கையை அமல்படுத்த மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் வகையில் தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டம் செயல்படுவதை ஆகஸ்டு 30-ம் நாளில் இருந்து ஒத்திவைக்க இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

மற்றவர்கள் இதனைப் படித்தாலும் படிக்கா விட்டாலும் நீ படித்திருக்கிறாய் - பழி சுமத்தும் போது அவர்களுக்கு பதில் அளித்திட இதனை நீ பயன்படுத்திக் கொள்க!

அன்புள்ள,

மு. க.

16-04-1977

405. கழகக் கருவூலம் - களவு போக விடலாமா?

உடன்பிறப்பே,

நாவலர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வந்தார்கள் காஞ்சிபுரம் பொதுக்குழுவில்! அது நிறைவேறவில்லை.

என் மீது கண்டனங்களைப் பொழிந்தார்கள் மாயூரம் பொதுக் குழுவில்! அது எடுபடவில்லை.

இறுதியாக அண்ணா அவர்களையே எதிர்த்து வேலூர் பொதுக் குழுவில் போர்க்கொடி உயர்த்த முயன்றார்கள். அதற்கான தொடக்கத்தை வேலூர் செயற்குழுவிலேயே நடத்தி, "அய்யோ! வன்முறை! வன்முறை!! ஜனநாயகமே இல்லை இந்தக் கட்சியில்" என்று மேடை போட்டு முழங்கி, ஏடுகளில் அறிக்கை விடுத்துப் பின்னர் புதுக் கட்சியும் தொடங்கினார்கள்.

அவர்கள் யார் என்று நான் விவரம் சொல்லத் தேவையில்லை. உனக்கே தெரியும். மறைந்து விட்ட என் அருமை நண்பர் ஈ.வெ.கி.சம்பத்தும் மற்றும் கழகத்திலிருந்த சில முன்னணியினரும் கழகத்திலிருந்து விலகி விடுத்திட்ட செய்திகள் குறித்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்போது தொடர்ந்து விளக்கங்களை நாட்டுக்கும், கழகத்திற்கும் அளித்து வந்தார்.

அண்ணா அவர்கள் அறிக்கை வடிவிலே தந்த கருத்துக் குவியலை கோவை மாவட்டத்து நண்பர்கள், பழைய 'முரசொலி' ஏடு ஒன்றைத் தந்து எனக்கு நினைவூட்டினார்கள் இன்று!

அந்த அறிக்கையில் அண்ணா கூறியிருப்பது இப்போதும் எப்படிப் பொருத்தமாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன் உன்னை!

"உழைத்து, கூட்டு முயற்சியின் துணை கொண்டு,
தத்தமது கட்சிகளை வளரச் செய்வது சிரமமான காரியம்,

என்ன பாடுபட்டாலும் தமது கட்சி வளராது என்ற எண்ணம் கொண்டவர்கள், தத்தமது கட்சிகளை வளரச் செய்வதை விட வளர்ந்துள்ள ஒரு கட்சியைச் சதி, சாகசம் எனும் ஏதாவது ஒரு முறைகொண்டு சிதைப்பது என்று நினைப்பதும், அத்தகைய செயலிலே சுவை காண்பதும் நாம் பார்த்திருக்கிறோம். தி.மு.கழகம் அமைக்கப்பட்ட நாள் தொட்டு இம்முறையைக் கையாண்டு பார்த்தவர்கள் பலர், வெற்றி பெற்றிடவில்லை. என்றாலும் முயற்சியைக் கைவிடாமல் சமயம் பார்த்துக் கொண்டிருந்து மீண்டும் அதே செயலில் ஈடுபட்ட வண்ணமுள்ளனர்."

சதி, சாகசங்களின் மூலம் நமது கழகத்தை அழிக்க எதிர்க் கட்சியினர் சிலர் சமயம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மீண்டும் மீண்டும் அதே செயலில் ஈடுபடுகிறார்கள். ஈடுபடுவார்கள் என்று அண்ணா அவர்கள் 1962-ஆம் ஆண்டு சொன்னது, எத்துணை உண்மை என்பதை நமது கடந்த கால அனுபவங்களும், நிகழ்காலச் சம்பவங்களும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன அல்லவா?

ஆம், அந்த எதிரிகள் நமது கழகத்தில் எப்போது பிரச்சினை தோன்றும், அதைப் பெரும் பிளவாக ஆக்கி விடலாம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு திரிகிறார்கள். அவர்களுக்கு நல்ல வாய்ப்பு கிட்டியது போல நமது நாவலரும், அவருடன் வேறு சில நண்பர்களும் இப்போது கழகத்திலிருந்து வெளியேறியிருக்கிறார்கள்.

சரியான வேட்டை கிடைத்தது என்ற மகிழ்ச்சியில் வேட்டியை இழுத்துக் கட்டிக் கொண்டு கழகத்தின் எதிரிகள், தங்களால் முடிந்த அளவு கழகத்தைச் சிதைக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். கழகத்திலிருந்து விலகிச் செல்பவர்களைத் தங்களுக்குக் கருவியாக்கிக் கொண்டு, தமிழ்ச் சமுதாயத்தின் ஒப்பற்ற வழிகாட்டியாம் நமது கழகத்தை நாசமாக்கி விடலாம் என்று அவர்கள் விரும்புவது இயற்கையேயாகும். விலகிச் செல்பவர்கள், என்ன காரணம் கூறி விலகினார்கள் - அல்லது விலகுகிறார்கள்?

விலகியோர் அல்லது விலகுவோரைப் பார்த்து, அண்ணா அவர்கள் அன்று கூறிய வாசகம் இதோ:-

"தி.மு.கழகம் ஒருவர் அல்லது ஒரு சிலர் கூடி நடத்தும்
"மாளிகைக் கட்சி அல்ல." இதிலே மேற்கொள்ளப்படும்

முடிவுகள், மாற்றங்கள் யாவும் கழகத்தின் கருத்தைப் பல்வேறு கட்டங்களிலும், நிலையிலும் அறிந்து, கணக்கெடுத்துச் செய்யப்படுவன, எனவே உட்குழப்பம் எழ இடமும் இல்லை, நியாயமும் இல்லை. ஒரு முறை எடுக்கப்பட்ட எந்த முடிவு ஆனாலும், எத்தகைய மாற்றமானாலும் வேண்டாமென்றால் நீக்கிவிடும் உரிமை பெற்ற கழகத்தினர் அதற்கான குழுக்களிலே உள்ளனர். எனவே, எனக்கு அது பிடிக்கவில்லை. இது சரியென்று படவில்லை. ஆகவே நான் விலகுகிறேன் என்று கூறுபவர்கள், ஏதாவது காரணம் கிடைக்காதா விலக என்று காத்துக் கொண்டிருந்தவர்கள் என்று தான் பொருள்படும். கழகம் இன்ன விதமாகத்தான் செயல்பட வேண்டும் என்பதிலே உள்ளபடி அக்கறை கொண்டவர்களானால், தமது கருத்து, கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க விதமாக, கழகத்தில் இணைந்திருந்து பணியாற்றி தமது அறிவாற்றலால் தொண்டுகளின் சிறப்பால் செல்வாக்குப் பெற்று கழகத்தை தாம் விரும்பும் வழிநடத்திச் செல்லும் நிலையைப் பெற முனைவர்; முயற்சிப்பர்; வெற்றியும் பெறுவர். அதை விட்டு விட்டு, விலகி விட்டேன் என்று அறிவிப்பதின் மூலம் கழகத்தை ஊனப்படுத்த முயல்வது வீண் வேலை மட்டுமல்ல, தமக்கென்று ஒரு கருத்து இருந்திருந்தாலும், அதனை வெற்றி பெறச் செய்யும் வழியையும் தாமாகவே இழந்து விடுவதும் ஆகி விடுகிறது. ஆகவேதான் ஒரு ஜனநாயக அமைப்பிலே இடம் பெற்றுள்ளவர்கள், வீண்மனக் குழப்பம் காரணமாக திடீர் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை மேற்கொள்ள மாட்டார்கள்."

அண்ணன் அன்றைக்குத் திட்டவட்டமாகக் கூறியதை இன்றைக்கு விலகியுள்ளவர்கள் ஒரு முறைக்கு இருமுறை சிந்தித்துப் பார்ப்பார்களேயானால், தாங்கள் மேற்கொண்ட செயலில் இருந்து தங்களை விடுவித்துக் கொண்டு ஜனநாயக அமைப்பு முறைக்குத் தலையாய இடம் அளித்துள்ள இந்தக் கழகத்தில் மீண்டும் இணைந்திடுவர் என்றே இன்னமும் நம்புகிறேன், விலகிய அனைவரிடமும் நான் இதனை எதிர்பார்க்காவிட்டாலும், ஒரு சிலரிடம் - அதிலும் குறிப்பாக நாவலரிடம் அந்த மனமாற்றத்தை நான் எதிர்பார்க்கிறேன்.

சில நண்பர்கள் மீண்டும் வரவே முடியாது எனச் சீற்றத்துடன் விடையளிப்பர். அறிவேன் நான். அந்த விடை, நாவலரின் நாவசைவால் விளைந்த விடை என நான் கருத மாட்டேன். எனினும், சினம் கொண்டு செந்தீ மொழி கொட்டுகின்ற அந்தச் சிலர் பற்றியும் அண்ணா அப்போதே கருத்தறிவிக்கத் தவறவில்லை.

"சமயம் பார்த்திருந்து கழகத்திற்கு ஊறு தேட வேண்டும் என்ற எண்ணங் கொண்டு இருப்பவர்கள் மட்டுமே, கழகத்தில் ஒரு திருப்பம், ஒரு மாற்றம் ஏற்படுகிற போது, இது - நாம் விலகிட சரியான நேரம் என்று எண்ணிக் கழகத்தைத் தூற்றி விட்டுச் செல்வார்கள். பிற கட்சிகளால் ஏவப்பட்டு இதுபோலச் செய்பவர்களும் உண்டு. இதுபோலச் செய்தால் பிற கட்சிகளில் இடம் கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டு செய்பவர்களும் உண்டு."

அண்ணாவின் தீர்க்க தரிசனத்தைக் கண்டாயா? எவ்வளவு தெளிவாகக் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர் காலத்தையும் அப்போதே அறுதியிட்டுச் சொல்லியிருக்கிறார்!

அண்ணா தந்துள்ள அந்தப் பட்டியலுக்குரியவர் அல்ல நாவலர் – வேறு சிலர் இருக்கலாம்; நேரத்தை எதிர்பார்த்துக் கிடந்து கழகத்தைத் தூற்றிவிட்டுச் செல்ல விரும்பியிருந்தவர்கள்!

இவர்களை வைத்தே கழகத்தை அழித்து விடலாம் என்று சில ஏடுகள் இன்றைக்குத் தோள் குலுக்கி நிற்பதையும் நாம் காண்கிறோமல்லவா? இதே நிலை அன்றும் இருந்தது. அப்போது இது பற்றி அண்ணாவின் அறிக்கை என்ன குறிப்பிடுகிறது, தெரியுமா? இதோ அதையும் படித்துப் பார்!

"இதழ்களில் சிலவும் இதற்கு இடமளித்து கழகம் இருக்கும் இடம் தெரியாது போய்விடும் என்று எண்ணம் கொள்கின்றன. அத்தகைய இதழ்கள், இத்தகையச் சந்தர்ப்பத்தில் கழகத்தை எதிர்த்துப் பேசுபவர்கள், எழுதுபவர்கள், அதிலிருந்து விலகுபவர்கள் எவரெவர்? அவர்கட்கும் கழகப் பணிகளுக்கும் எத்தகையத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது? அவர்களின் போக்கினாலே, கழகம் எந்த வகையிலாவது பாதிக்கப்படுமா என்று

எண்ணிப் பார்க்காமல் - எண்ணிப் பார்க்கும் திறமை இல்லாததால் அல்ல - ஒன்றுக்குப் பத்தாகப் போட்டு வைத்தால் ஏதாவதொன்று பலிக்காதா என்ற ஆசையிலே அத்தகையச் செய்திகளை வெளியிடுகின்றன. தர்மம் அல்ல, தரம் அல்ல! ஆனால் அதைத் தமது முறை ஆக்கிக் கொண்டவர்களின் போக்கை மாற்ற நாம் யார்?

என் அறிக்கை வெளிவந்தது என்று எக்களிப்புக் கொள்ளலாம் சிலர். ஆனால், அவர்களுக்காக அல்ல, இதழ்கள் அக்கறை காட்டியது! தி.மு.கழகத்தைத் தாக்க இது உதவுகிறது என்பதுதான் அக்கறைக்குக் காரணம். அதே நண்பர்கள், ஐந்தாண்டுத் திட்ட அலங்கோலம் பற்றி புள்ளிவிவர ஆதாரத்தோடு எழுதட்டும், ஒருவரி கூட அந்த இதழ்கள் வெளியிடப் போவதில்லை.

கழகத்தைத் திட்டுகிறாயா? முதல் இடம்!!

கழகத் தலைவர்களை ஏசுகிறாயா? கொட்டை எழுத்து!!

இது அந்த இதழ்களின் முறை.

இதனை நாடு அறியும். நம் கழகத்தவர்களிலே தெளிவுள்ளவர்கள் அனைவரும் அறிவார்கள்.

எனவேதான் இத்தகைய முறைகள் பலன் தருவதில்லை; பலன் தராது.

இந்த எண்ணத்திலே உறுதிப்பாடு கொண்டவர்கள், இத்தகைய முறைகளைப் பொருட்படுத்த மாட்டார்கள்."

உடன்பிறப்பே, அண்ணன் அன்று எழுதிய அறிக்கை - ஒரு எழுத்து தவறாமல் இன்றும் சரியாக இருக்கிறதே! அது எதைக் காட்டுகிறது?

அண்ணனின் அறிவாற்றலை
என்பாய்!

அதனை யார் மறுக்க இயலும்? அதே வேளையில் வேறொரு உண்மையினையும் நமக்கு உணர்த்துகிறது அல்லவா?

திராவிட இயக்கத்துக்கு ஒரு சோதனை வந்து விட்டால், கடுகை மலையாக்கிக் கழகத்தைக் கல்லறைக்குள் வைத்துவிட

கச்சை கட்டி நிற்கிறார்களே; அவர்களுக்கு ஏன்தான் நம்மீது அவ்வளவு வெறுப்பு? இன்று நேற்றல்ல. இந்த இயக்கம் தோன்றிய காலத்திலிருந்து அத்தகையோர் அந்த வெறுப்பினை நெருப்புக் குழம்பெனக் கக்கித்தான் வருகின்றனர்.

இதோ, இங்குள்ள 'எக்ஸ்பிரஸ்' இதழ், தலையங்கம் தீட்டுகிறது நமது அத்தியாயம் முடிந்து விட்டதாக!

ஒன்றல்ல, இரண்டல்ல - ஓரிரு வாரங்களில் நான்கைந்து தலையங்கங்கள் நம்மை எதிர்த்தும், இழித்தும் தீட்டப்பட்டு விட்டன அந்த ஏட்டில்!

நமது அத்தியாயம் முடிவதில் அதற்கு அவ்வளவு மகிழ்ச்சி!

அந்த உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டால், இந்தக் கழகம், தமிழகத்திற்கு எவ்வளவு தேவையான கருவூலம் என்பதை உணர்ந்திடலாம்!

கழகக் கருவூலம் களவுபோக விடலாமா? என்ற உருக்க மிகு வினாவுக்கும் விடை காணலாம்!

மனம்தான் இருக்க வேண்டும் -
மார்க்கம் நிச்சயமாகக் கிடைக்கும்!

ஒன்றுபட்டோம் என்ற அந்த இன்பம் நுகர, மேலும் காத்திருப்போம்!

நமது முயற்சி பயனற்றுப் போய் விடுமானால், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கடமையை ஆற்றுவோம்! கண்ணியம் போற்றுவோம்! கட்டுப்பாட்டைக் காத்திடுவோம்!

முன்னேற்றக் கழகம் முடியாத
அத்தியாயம் என்பதை
நிலைநாட்டுவோம்!
அதன் தொடர் பயணத்தை
இலட்சியச் சிந்து பாடியவாறு
மேற்கொள்வோம்!

எங்கள் கதவு மூடப்பட்டுவிட்டது; இங்கே வராதீர்கள் என்கிறார்கள் - நாவலரின் உள்ளமெனும் கதவு மூடப்பட்டு விட்டது என்பதை நான் ஒருக்காலும் நம்பிட மாட்டேன்.

அப்படியே மூடப்படினும் - "தட்டுங்கள் திறக்கப்படும்" எனும் முதுமொழியை உறுதியாக நம்பியவாறு தட்டிக் கொண்டேயிருப்போம்!

நம்மை எட்டி உதைத்திடும் நெஞ்சம்
அவருக்கில்லை என்பதே என் கருத்து!

நான்கு நாட்கள் இடைவெளியில் அவர் மனம், நம்மை மறந்திடும் துணிவை பெற்றிருக்குமேயானால்....

வேண்டாம்!

அப்படி ஒரு கற்பனை கூடச்
செய்து பார்க்க வேண்டாம்!!
காத்திருப்போம்!

அன்புள்ள,
மு. க.
19-04-1977

406. பெருமையைப் பிச்சையாகக் கேட்கிறேன்!

உடன்பிறப்பே,

நான் எழுதும் இந்த மடல் நாவலருக்குப் போய்ச் சேரும் என்ற நம்பிக்கையுடன் எழுதுகிறேன். எனவே, நாவலருக்கே நேரிடையாக எழுதுகிறேன்.

அன்பு நாவலர் அவர்களே! அண்மையிலோர் புதிய கட்சி தொடங்குவதாய்க் கூறி அதற்குத் தங்களை முன் வைத்து கழகத்தின் அதிருப்தியாளர்கள் யார் யார் எனக் கண்டு, ஆதித்தனார் அவர்களை எல்லாம் வேட்டையாடி வருகின்ற செய்திகளை நான் கண்டு நாவலரா இந்த ஏற்பாட்டுக்கெல்லாம் ஒத்துக் கொண்டார் என எனக்கு நானே கேட்டுக் கொண்டு வியப்பில் ஆழ்ந்திடுகிறேன்.

அண்ணா வாழ்ந்த காலத்திலேயே கழகத்தை விட்டுப் பிரிந்து புதிய கட்சி கண்டு, அதன் பின்னர் பழைய காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என்று சென்றுவிட்ட முன்னாள் துணை மேயர் ஒருவரைத் தேடிப்பிடித்து அவர் என்னவோ நேற்று வரையில் தி.மு.கழகத்தில் இருந்தவரைப் போலவும், இன்றுதான் விலகித் தங்கள் அணியில் சேர்ந்து விட்டதைப் போலவும் ஆதித்தனாரின் ஆதிக்கத்தில் உள்ள ஏடுகள், செய்திகளைத் தருவது விந்தையினும் விந்தையேயாகும். கழக அரசு கலைக்கப்பெற்று - கழகத்தினர் பலர் சிறைப்பட்டு - கழகம் சோதனைக்கு ஆளாக்கப்பட்ட நேரத்தில் - தலைமைக் கழகம் நோக்கித் தங்கள் உறுப்பினர் விலகல் தபால்களை அனுப்பி வைத்தவர்கள் எல்லாம் இன்று காலை வரையில் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தது போலவும், மாலையில் தான் விலகியதைப் போலவும் செய்திகளைத் தருவது கண்டு தாங்களும் ஒருவிதமான மனச் சங்கடம் அடைவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அப்படி நேற்று வரையில் கழகத்தில் இருந்ததாக இன்றைக்குக் கூறுகின்றவர்களின் நிலை - அவர்கள் பற்றிய விளக்கம் - அவர்கள்

மீதுள்ள வழக்குகள் - விசாரணைகள் அவற்றையெல்லாம் இந்தக் கடிதத்தில் நான் விளக்கிடத் தேவையில்லை. தாங்கள் அறியாதவைகளும் அல்ல. காலம், அவற்றை நாட்டுக்கு அறிவிக்கத்தான் போகின்றது.

ஓராண்டுக்கு முன்பு நெருக்கடி காரணமாக விலக நேர்ந்த கழகத்தினர் சிலர், தங்கள் இயலாமை காரணமாக அப்படி விலகியிருந்தால் அவர்களை மீண்டும் கழகத்தில் இணைத்துக் கொள்ளலாம் என நாம் ஒரு முடிவினை எடுத்தோம். அவ்வாறு வலிய விரும்பி வந்தோர் இணைத்துக் கொள்ளவும் பட்டனர்.

ஆனால், அந்தப் பட்டியலிலும் சேராமல் வேறு கட்சிகளில் இடம் தேடி அலுத்துப்போன நண்பர்கள் - வேறிடங்களில் உறுதியாக இடம் கிடையாது என ஒதுக்கப்பட்டவர்கள், அவர்களில் பெரும்பான்மையோரன்றோ இன்று தங்கள் பெயர்களை இன்று உங்கள் பெயரால் உருவாக இருக்கிற அணியில் இணைத்துக் களிக்கின்றனர்.

புதிய கட்சி அமைத்தல்! தொடர்ந்து உடனடியாகத் தேர்தலில் நுழைதல்! நண்பர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களின் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கொள்ளுதல்! பதினைந்து அல்லது இருபது இடங்களில் எம்.ஜி.ஆர். ஆதரவுடன் போட்டியிடுதல்! இரண்டொரு அமைச்சர் பதவிகளைப் பெற்று கூட்டணி ஆட்சியிலும் இடம் பிடித்தல்!

இதுபோன்ற தித்திப்பான திட்டங்கள் எம்மிடமுள்ளன. வாரீர்! வாரீர்! என்று அழைத்திட்டால் பதவி சுகம் கண்டு பழக்கப்பட்டோர், இனியும் ஒருமுறை தங்கள் பொது வாழ்வில் போராட்டங்கள், தியாகங்கள் கூடாதென முடிவு கட்டிக் கொண்டோர், விரைந்து ஓடி வரத்தானே செய்வர்!

நாவலர் அவர்களே! பதவிக்காக உருவாக்கப்பட்டதல்ல நமது கழகம் என்று பன்னிப் பன்னிப் பல கூட்டங்களிலே உரையாற்றிக் கழகச் செயல்வீரர்களை உறுதி வாய்ந்தவர்களாக ஆக்கியிருக்கிறீர்களே! அப்படிப்பட்ட தாங்கள் உருவாக்க இருக்கும் ஒரு புதிய கட்சி இப்போது "பதவி வாய்ப்பை" குறிக்கோளாகக் கொண்டு அதற்காகவே தாங்களும் சேர்ந்து வளர்த்த இந்தக் கழகத்தைச் சோதனையில் ஈடுபடுத்துவது முறைதானா? எண்ணிப் பாருங்கள் நாவலரே! நன்றாக எண்ணிப் பாருங்கள்!

சோதனைகள் வரும் போது தான் கழகம் நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று தாங்கள் நிமிர்ந்து நின்று ஆற்றிய உரைகளின் ஒலி முழக்கம் தமிழகத்தின் வீதிதோறும் கேட்டுக் கொண்டிருக்கிறதே! அதற்குள்ளாகவா இப்படி ஒரு முடிவு?

1976-ஆம் ஆண்டு ஆட்சி கலைக்கப்பட்ட போது - கழகம் நெருக்கடியென்னும் நெருப்புக் குண்டத்திலே தள்ளப்பட்டபோது, இனி கரித்துண்டு கூட மிஞ்சாது எனக் கவலை கொண்ட நமது தளபதிகள் சிலர் கட்சியிலே மாற்றம் தேவை என மனக் குழப்பத்தில் ஈடுபட்டனர். அறிவீர்கள் நீங்கள், அன்று நான் சொன்னேன், நெருக்கடி நெருப்பில் வீழ்த்தப்பட்ட கழகம் "தணலில் தங்கம்" என ஒளிவிடும்! அதற்குத் தந்திடுவோம் நம் அயரா உழைப்பை என்று! "ஆம்" என்றீர்கள்! அதுவே சரி என்றீர்கள்! ஆர்த்தெழுந்தீர்கள்! நீங்களும் நானும், பேராசிரியரும், கழக முன்னணியினரும் கலந்து பேசினோம். திட்டங்கள் வகுத்தோம். அப்போதும் சிலர் ஏதேதோ காரணங்களைக் கூறிவிட்டு கழகத்தைக் குறை பேசிவிட்டு ஓடினர் நம்மை விட்டு!

அது கண்டு மனம் பொறாத நீங்கள் 1976 பிப்ரவரி எட்டாம் நாளன்று முரசொலி வாயிலாக ஒரு அறிக்கை வெளியிட்டீர்கள். அந்த அறிக்கையில் நடமாடிய எனதருமை நாவலரின் அழகு தமிழ்க் கருத்துகளை இன்னும் மறக்க முடியவில்லையே! என் செய்ய?

> "தாமரைக் குளத்தில் மீன் கொத்த வந்த பறவைகள் சில பறந்து போனாலும், தாமரைத் தண்டுகள் குளத்திலேயே வாழ்விலும் தாழ்விலும் கூடி நின்று வாழும். அப்படிப்பட்டவர்கள் தாம் அறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்ட உண்மையான தம்பிமார்கள் ஆவார்கள். தம்மை முன் நிறுத்திக் கழகத்தைப் பின்னே வைத்து வாழ்பவர்கள் சிலர் உண்டு. அவர்கள் தன்னலம் கருதிப் பறந்து போனாலும் வியப்படைவதற்கில்லை. கழகத்தை முன்னிறுத்தித் தம்மைப் பின்னே வைத்துக் கொண்டு கடமையாற்றுவோர் எண்ணிறந்தோர் இருக்கிறார்கள். அவர்களால்தான் தி.மு.கழகம் பொலிவோடும் வலிவோடும் வளர்ந்து கொண்டு வந்தது. இனியும் அவர்களால்தான் வளரும்."

நாவலரே, இந்த அறிக்கை தங்கள் கையால் எழுதப் பட்டதல்லவா? தங்களின் எண்ண ஊற்று அல்லவா? அறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்ட உண்மையான தம்பிகள், அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள் அல்லர்; அக்குளத்துக் கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் போன்றவர் என்று எவ்வளவு அழகாகச் சென்ற ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டீர்கள்? சென்ற ஆண்டு என்ன? சென்ற வாரம் கூடச் சொன்னீர்களே!

அதற்குள் அந்தப் பறவைகள் சிலவற்றினால் நீங்கள் வேட்டையாடப்பட்டுவிட்ட வேதனை, ஏன் நாவலரே நடந்தது? எப்படி நாவலரே நடந்தது? வேடன், பறவைகளை வேட்டை யாடுவது இயல்பு! இங்கே, அறுநீர்ப் பறவைகள் சில, வீரமிக்க வேடனை, வேட்டையாடி விட்டனவே - இஃதென்ன கொடுமை!

புதிய கட்சியிருக்கட்டும் - தேர்தல் உடன்பாடு எம்.ஜி.ஆர். அவர்களுடன்தான் இருக்கட்டும் - அல்லது தங்கள் இளவல் செழியன் அவர்கள் எடுத்துள்ள முடிவு என்று கூறப்படுகிறதே, அதுபோல ஜனதா கட்சியிலே அவருடன் "புதுக்கட்சி ஆர்வலர்கள்" இணைந்து விடுகிற திட்டமாகவே இருக்கட்டும், இவைகள் எல்லாம் வதந்திகளாகப் போய் - தாங்கள் தனித் தன்மையுடன் யாருடனும் இணையாது, உடன்பாடு கொள்ளாது, புதுக் கட்சியை நடத்துவது என்பதாகவே இருக்கட்டும் - எதுவாயினும் எம்மிடமிருந்து நீங்கள் பிரிந்து விட்டீர்கள் என்பது இறுதி முடிவாக இருந்தால் தானே அத்தகைய திட்டங்களில் ஏதாவது ஒன்றைத் தாங்கள் மேற்கொள்ள முடியும்?

அவை பற்றிச் சிந்திப்பதற்கு முன்பு அருமை நாவலரே! எம்மை விட்டுப் பிரிய உங்களால் முடிகிறதா? என்பதைச் சற்றுத் தனித்திருந்து சிந்தித்துப் பாருங்கள்!

பெரியார் படமும், அண்ணா படமும் பின்னணியாக இருக்க, முன்னால் மூவர் நாம் முறுவல் சிந்தி அமர்ந்திருக்கிற படம் ஒன்று உண்டே! முரசொலி மலரில் கூட வெளிவந்துள்ளதே; அந்தப் படத்தை ஒருமுறை பாருங்கள்! நீங்கள் இப்போது இருக்குமிடத்தில் அந்தப் படம் இல்லாமல் இருக்கலாம். அகக் கண்கொண்டு பாருங்கள்.

நாம் மூவரும் இணைந்து முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டனவே! அதனை முப்பதே நாழிகையில் "சில மூளைச் சலவைக்காரர்கள்" சிதைத்து நம்மைப் பிரித்து விட்டனரே!

பதவிகளில் அமருவோம் என்று எதிர்பார்த்தா பெரியார் அணியிலும், பேரறிஞர் அண்ணாவின் அணியிலும் நமது கடும் உழைப்பை நல்கிப் பணியாற்றினோம்? இல்லை. நாவலரே - இல்லவே இல்லை!

என் பிறந்தநாள் விழா எனினும், தங்கள் பிறந்த நாள் விழா எனினும், பேராசிரியர் பிறந்த நாள் விழா எனினும் மூவரும் மாறி மாறிச் சொல்லிச் சொல்லிச் சுவைத்திடுவோமே - நாம் மூவரும் திருவாரூர்க் கூட்டத்தில் 1942 ஆம் ஆண்டு சந்தித்த நிகழ்ச்சியை!

அந்த நினைவுச் சுவையை நாம் ஆண்டுதோறும் நம் பிறந்த நாள் விழாக்களில் அனுபவித்திடும் போது அந்தச் சுவை தேன் கலந்து, பால் கலந்து, தீங்கனிச்சாறு கலந்து தருகின்ற பிறந்த நாள் பரிசுகளையெல்லாம் மிஞ்சுகின்ற ஊன் கலந்த, உயிர் கலந்த உணர்ச்சிச் சுவையாகவன்றோ திகழ்ந்திருக்கிறது!

எதை நான் மறப்பது? என் திருமணத்திற்கு ஏழு கல் தொலைவு நடந்தே வந்து என்னை வாழ்த்தினீர்களே! அதனையா?

நன்னிலம் சன்னாநல்லூர் புகைவண்டி நிலையத்தில் இருவரும் அமர்ந்து ரயிலுக்காகக் காத்திருந்த போது "உம்-போனீங்க" என்று நீட்டி முழக்கி நீங்கள் விடுத்த கேள்விக்குறி முடியாத நகைச்சுவைக் கதையாக இன்னும் இருக்கும் போது "நான் போகிறேன்" என்று நீங்கள் கூறி என் நெஞ்சில் கணை தொடுப்பது நியாயந்தானா - சொல்லுங்கள்!

1952-ல் மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக் குழுவில் - சென்னை மாநில மாநாட்டுத் திறப்பாளர் யார்? என்று விவாதம் எழுந்த போது குடந்தைப் பெரியவர் நீலமேகம் அவர்கள் ஈ.வெ.கி.சம்பத்தின் பெயரை முன்மொழிய, நான் உடனே துள்ளிக் குதித்து உங்கள் பெயரை முன்மொழிந்து பிறகு, அண்ணா அவர்கள் இருவருக்கும் பொதுவாக குடந்தை நீலமேகமே திறப்பாளராக இருக்கட்டும் என்று சமரச ஏற்பாடு செய்தாரே! நினைவிருக்குமே நாவலரே உங்களுக்கு! அன்று நாவலர் மீது கொண்டிருந்த அதே நட்பு உணர்வோடுதான் இன்று இந்த மடலையும் தங்களுக்கு எழுதுகிறேன்.

நண்பர் ராஜேந்திரனை எதிர்த்து நடிகர் சங்கத் தேர்தலிலே நண்பர் எம்.ஜி.ஆர். வேறொரு நடிகருக்காக வேகமாகப் பணியாற்றுகிறார். நமதியக்கத்தைச் சேர்ந்த ராஜேந்திரனை எதிர்த்து நமதியக்கத்தைச் சேர்ந்த எம்.ஜி.ஆர். வேலை செய்வது

நியாயமா? என்று அண்ணாவிடம் முறையிடுகிறேன். அண்ணா அந்த முறையீட்டை அலட்சியப்படுத்தி விடுகிறார். எனக்கு அதனால் மன வேதனை! திருச்சி மாநாட்டுக்கு வராமலே இருந்து விடுகிறேன். தாங்கள் என்னைச் சந்திக்கிறீர்கள். இரண்டே நிமிடம் தான் இருவரும் பேசுகிறோம். நமது விழிகள் நீரைப் பொழிகின்றன! அந்தக் கண்ணீர்ச் சங்கமத்தில் கடந்தவைகள் மறைந்து விடுகின்றன. புது வேகத்துடன் கழகப் பணியைத் தொடருகிறோம்.

இப்படி எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள் நமது பொது வாழ்க்கையில் இந்த முப்பத்தைந்து ஆண்டுக் காலத்தில்!

அண்ணா மறைந்த பிறகு நான் முதல்வர் பொறுப்பை ஏற்றேன். எனினும், தாங்கள் இல்லாத அமைச்சரவையை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் தேர்தல் வந்தது. என்னையே பொதுச் செயலாளராக்கித் தங்களைக் கழகத்திலிருந்தே விரட்டிவிடச் சிலர் திட்டமிட்டனர். அதற்கானப் பணிகளைச் செய்தனர். நமது கழகத்தின் முன்னணித் தலைவர்கள் நமக்கிடையே பேசினர். நானும் நீங்களும் மனம் விட்டுப் பேசினால் எல்லாம் சரியாகி விடும் என்று அவர்கள் நம்பினர். பொதுக் குழு தொடங்குவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு நாம் இருவரும் சந்தித்துப் பேசினோம். கழகத்தின் சட்ட திட்டங்களிலேயே சில மாறுதல்களைச் செய்து, கழகக் குடும்பத்தின் ஒற்றுமையை நிலைநாட்ட அன்றைக்கு முடிவெடுத்தோம்! அன்றும் இருவரின் கண்ணீர்! நம்மை இணைக்க விரும்பிய நல் இதயங்களின் கண்ணீர்! அண்ணா உருவாக்கித் தந்த கழகத்தைப் பெரும் புயலில் செலுத்தப்படும் கப்பலைப் போல நானும் நீங்களும், பேராசிரியரும், கழக உடன் பிறப்புகளும் சேர்ந்து இதுவரையில் செம்மையான வழியில் செலுத்தினோம்.

பொறாமைத் திமிங்கலங்கள்
எதிர்ப்புப் பாறைகள்
சுழன்றடித்தச் சூறாவளிகள்
கொந்தளிப்புகள்.

இவைகளுக்கிடையேதான் கழகக் கப்பலின் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த பத்தாம் தேதியன்று பத்திரிகையில் வந்த செய்தி கண்டு நானும் உணர்ச்சி வயப்பட்டேன். நீங்களும் உணர்ச்சி

வயப்பட்டீர்கள். நெருங்கிய நண்பர்கள் ஓரிருவர், கழகச் சட்ட திட்டத்தில் "தலைவர்" என்ற ஒரு பதவியே இருக்கக் கூடாது. அதனை அகற்றிவிட வேண்டுமென்று "மகஜர்" தயாரித்து கையெழுத்து இயக்கம் நடத்துவதைக் கேள்விப்பட்டு கழகத்தின் கட்டுக்கோப்பைக் குலைக்கும் என்பதால் நான் தலைவர் பதவியிலிருந்து விலகினேன். என்னைத் தொடர்ந்து நீங்களும் தேர்தல் தோல்வியைக் காரணம் காட்டி பொதுச் செயலாளர் பொறுப்பிலேயிருந்து விலகினீர்கள்.

நாம் பிரியக் கூடாது என்பதிலே அக்கறை கொண்ட புலவரும், ப.உ.ச.வும், வீரமணியும், வீராசாமியும் நம்மைப் பெரியார் திடலிலே சந்திக்க வைத்தனர்.

நாம் எடுத்த முடிவினால் நாடு முழுதும் உள்ள கழகக் கண்மணிகளாம் அன்பு உடன் பிறப்புகள் கண்ணீர் ஊற்றுக்களாய்க் காட்சி தருவதை எடுத்துரைத்தார்கள். கழகச் செயற்குழு பேராசிரியர் தலைமையிலே கூடியது. நாம் திரும்பவும் நமது பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று செயற்குழு இட்ட கட்டளையை ஏந்திக் கொண்டு பேராசிரியர் ஓடிவந்தார். பெரியார் திடலுக்கு!

புலவர், ப.உ.ச., வீராசாமி ஆகியோர் செழியன், ராஜாராம் இருவரையும் அழைத்து வரச் சென்றனர். பிற்பகல் ஒரு மணி முதல் மாலை நாலு மணி வரையில் காத்திருந்தோம் செழியனும் ராஜாராமும் வருவார்கள் என்று! அண்ணனுடன் பழகி, அவர் வளர்த்த குடும்ப பாச மகிமையை உணர்ந்த அவர்கள் எப்படியும் நம்மை இணைத்திட வருவார்கள் என்றே நம்பினோம். என் செய்வது, சேலமும் செங்கற்பட்டும், ஜெயித்திருந்தால் இந்த வேதனையே வந்திருக்காது - அவர்கள் பெரியார் திடலுக்கு வரவில்லை. அந்த இடைக் காலத்திற்குள், ஓரிரு மணித் துளிகளில் நாம் இணைந்து விட்டோம் - அப்போதும் கண்ணீர் வெள்ளம்தான்!

மாலையில் நானும், நீங்களும், பேராசிரியரும் கூடியிருந்த கழகத்தின் செயல்வீரர்களிடம் நாம் ஒன்றுபட்டு உழைப்போம் என்ற சூளுரையை மேற்கொண்டோம்.

இது இம்மாதம் பதினோராம் தேதி மாலை!

பதின்மூன்றாம் தேதி வரையில் கூடிப் பேசிக் கழகப் பணிகளை வகுக்கிறோம் - மே தினத்தன்று தங்கள் தலைமையில் இயங்கும் தமிழ் இலக்கியக் கழகச் சார்பில் நான் ஒரு கவியரங்கத்திற்குத்

தலைமை தாங்க வேண்டுமென்று என்னிடம் தேதியும் கேட்டு அதனையும் நான் என் 'டைரி'யில் எழுதிக் கொள்கிறேன்.

அடுத்து ஒரே நாளில் பதவி சுகந்தேடிகள் சிலர், நம்மைப் பிரித்தாலும் சூழ்ச்சியில் வெற்றி பெற்றுவிட்ட மாயம்தான் என்ன?

கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த கழகம் என்று கூறுவீர்களே! நாவலரே - என்ன குறைபாடு அந்த ஒரே நாளில் ஏற்பட்டது? எதுவுமே இல்லையே!

யாரோ சிலர், நாம் ஒன்று சேர்ந்த பிறகு கடிதம் எழுதினார்கள் என்று காரணம் காட்டுகிறீர்களே! யார் அவர்கள்? கழகத்தில் எந்த இடத்திலே இருப்பவர்கள்? எந்த பொறுப்பு அவர்களுக்கு? அப்படியே எழுதியிருந்தாலும் ஜனநாயக இலக்கணப்படி அதற்கு நாம் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோமே தவிர - "விலகி விடுதல்" என்ற முடிவு எப்படிப் பரிகாரமாக இருக்க இயலும்?

கண்ணிய மற்றதும், கடுமை நிறைந்ததும், கட்டுப்பாடு குலைக்கும் தன்மை கொண்டதுமான கடிதமாக இருந்தால் அதனை எழுதியவர் மீது கழகச் சார்பில் நடவடிக்கை எடுத்திருக்கலாமே! அதை விடுத்துத் தாங்கள் இந்த முடிவு எடுக்கலாமா?

நான் பம்பாய்க்குப் புறப்படுவதற்கு முன்பே - ஏப்ரல் 4-ஆம் நாள் - கழகத்தைக் குலைத்திட ஒரு "புரூட்டஸ்" புறப்படுகிறார் என்ற சேதி கிடைத்தது. அவர் தேர்தலுக்காக இந்த இயக்கத்திற்கு வந்தவர். அப்போதே நம் நண்பர்கள் எச்சரித்தனர். நான் தான் கேட்கவில்லை. காரணம், அவர் அண்ணா அவர்களால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டவராகி விட்டவர். அது தங்களுக்கும் தெரியும். நான் அறிந்த "புரூட்டஸ் தகவலை"த் தங்களுக்குத் தெரிவிக்க இயலவில்லை. தாங்கள் ஊரில் இல்லை. எனினும் டெல்லியிலிருந்து உடன் பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் "அந்த புரூட்டஸ்" பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். ஏப்ரல் ஏழாம் தேதி இரவு அவருக்கே டெல்லியில் இருந்து தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டேன். அமைச்சர் பதவி போன பிறகு ஆண்டொன்றுக்கு மேல் நம்மைச் சந்திக்காமலே இருந்த அவர் கூறிய தகவல்களை ஏப்ரல் எட்டாம் தேதி நான் சென்னை திரும்பியதும் தங்களிடமும், பேராசிரியரிடமும் கூறினேன்.

எப்படியோ "புரூட்டஸ்" வெற்றி பெற்று விட்டார். தற்காலிகமாக!

அவர் பெற்றதாகக் கருதிக் கொண்டிருக்கிற "வெற்றி"?யைத் தகர்த்திடத்தான் இந்த வேண்டுகோள் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

என் வேண்டுகோளை ஏற்க விரும்பாத உள்ளம் அல்ல தங்கள் உள்ளம்! அது எதிரிகளைச் சந்திக்கும் எஃகு உள்ளம் என்பதையும், கழகத்தை முதுகில் குத்தும் துரோகிகளுக்குத் துணை போகாது என்பதையும், என் கனிவான வேண்டுகோள் கண்டு கசிந்திடும் தன்மை கொண்டது என்பதையும், இன்னமும் நான் உறுதியுடன் நம்பிக் கொண்டிருப்பதால்தான் நாவலர் அவர்களே! நான் இந்த மடலைத் தங்களுக்கு அனுப்புகிறேன்.

இப்படிக்கூட எண்ணுகிறது என் நெஞ்சம், அய்யோ, ஏப்ரல் பதினைந்தாம் தேதிக்கு முன்பே என் வாழ்வுக்கு ஒரு முடிவு ஏற்பட்டு - கருணாநிதி கடைசி வரையில் நாவலரையும் பேராசிரியரையும் பிரியாமலே போய்விட்டான் - என்ற பெருமை எனக்குக் கிடைத்திருக்கக் கூடாதா?

அந்தப் பெருமையை எனக்காக அல்ல நாவலரே! அண்ணன் வளர்த்த நமது கழகத்திற்காக - ஆம், "நாம் பிரியவில்லை" என்ற பெருமையைப் பிச்சை கேட்கிறேன், நாவலரே! பிச்சை கேட்கிறேன்!

"கொள்கை மறவாதீர்!
கோபத்துக்கு ஆளாகாதீர்!
கூடிவாழ்வது பொறுப்பான காரியம் - அறிவீர்!
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை."

என்று 1961-ஆம் ஆண்டு அண்ணா எழுதியதையும் நினைவுபடுத்துகிறேன்.

ஓடி வாருங்கள் நாவலரே! தங்களைத் தேடியலையும் எங்களுடன் ஒன்று சேர ஓடிவாருங்கள்! "உடன்பிறப்பு எழுதியுள்ள கடிதம் என்னை உலுக்கிவிட்டது. இதோ தடையுடைத்துக் கொண்டு எமை வளர்த்த தாயாம் எமது கழகத்தில் மீண்டும் இணைகிறேன்" எனக் கூறிவிட்டு ஓடிவாருங்கள்!

காத்திருக்கிறேன்! கண்
பூத்துப் போகும் வரையில்!

அன்புள்ள,
மு. க.
20-04-1977

407. அவர்கள் பணியும் நமது அணியும்!

உடன்பிறப்பே,

நஞ்சை குலுங்கும் தஞ்சைத் தரணியில் ஏப்ரல் 23, 24 ஆகிய இரு நாட்களில் நமது கழகத்தின் பொதுக்குழு கூடுகிறது. முகில் தொடுமளவுக்கு உயர்ந்து நிற்கும் ராஜராஜனின் ஆலயத்துக் கோபுரம் போல் கம்பீரமாகக் காட்சி தரும் கழகத்தின் ஜனநாயகத் தலைமை அமைப்புத்தான் பொதுக் குழுவாகும். தஞ்சை மண்ணைக் கொழிக்க வைக்கும் காவிரியின் துணை நதிகளைப் போலவும், கிளை நதிகளைப் போலவும் பல்வேறு ஜனநாயக அமைப்புக்களும் குழுக்களும் - தலைமைக் கழகம், செயற்குழு, மாவட்டக் கழகம், ஒன்றியக் கழகம், கிளை அமைப்புகள் என்ற வகையில் நமது கழகம் பெற்றுத் திகழ்வதை மேடை தோறும் சொல்லிச் சொல்லி, இப்படி அமைப்புரீதியாக வேறெந்தக் கட்சியும் இயங்கிடவில்லையென்று நெஞ்சுயர்த்திக் கூறும் பெருமை நமக்கு உண்டு.

கழகத்தின் பொதுக் குழுவாயினும், செயற்குழுவாயினும் முறையாகப் பிரச்சினைகளை விவாதித்து ஒழுங்காகக் கருத்துகளை எடுத்துச் சொல்லி உள்நோக்கம் எதுவுமின்றி மனம் விட்டு விவாதித்து - இறுதியாகப் பெரும்பான்மையோரின் முடிவுக்குக் கட்டுப்பட்டு நடப்பதை, இன்று நேற்றல்ல - அறிஞர் அண்ணா அவர்கள் அந்த இயக்கத்தைத் தொடங்கிய நாளில் இருந்து கடைப்பிடித்து வருகிறது.

1971-ஆம் ஆண்டு சட்டப் பேரவையைக் கலைத்து விட்டு ஓராண்டுக்கு முன்னதாகவே பொதுத் தேர்தலில் ஈடுபடுவது என்ற முடிவை, நமது பொதுக்குழுவில் நீண்ட நேரம் விவாதித்து அதற்குப் பிறகுதான் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினோம். மாறுபட்ட கருத்துகளும் வழங்கப்பட்டன. அந்தக் கருத்துகளும் மதிக்கப்பட்டன. எனினும், இறுதியில் பெரும்பான்மையான கருத்துகளுக்கே அனைவரும் உடன்பட்டு தீர்மானத்தை ஒரே மனதாக நிறைவேற்றினர்.

1971 தேர்தல் முடிந்த பிறகு, கோவையில் கூடிய பொதுக்குழு; தமிழகத்தில் மதுவிலக்கைச் சிறிது காலத்திற்கு ஒத்தி வைப்பது பற்றி ஆதரவான கருத்தையும், எதிர்ப்பான கருத்தையும் காலை முதல் மாலை வரையில் விவாதித்தது. ஒத்தி வைப்பது தவிர வேறு வழியில்லை என்பதற்கான நியாயமான காரணங்களை, அன்றையப் பொருளாளர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரைமணி நேரத்திற்கு மேலாக விளக்கினார். ஒத்திவைக்கக் கூடாது என்றும் சிலர் பேசினர். ஆனால் பெரும்பான்மையானவர்களின் கருத்தே வென்றது. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மதுவிலக்கு ஒத்தி வைப்பினால் ஏற்பட்ட சங்கடங்களைப் பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் சுட்டிக்காட்டி அறப்போரில் ஈடுபட்டார்கள்.

மீண்டும் கழகத்தின் பொதுக்குழு கூடியது. மது விலக்கை மீண்டும் தமிழகக் கழக அரசு நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியது. அப்போதும் மாறுபட்ட கருத்துகள் இருந்தன. ஜனநாயக முறைப்படி அந்த மாறுபட்ட கருத்துக்குச் சொந்தக்காரர்கள் கட்டுப்பாட்டுத் தன்மையுடன் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுத்தனர்.

நெருக்கடி நிலை 1975-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டவுடன் டெல்லியிலிருந்து செழியன், உடனடியாக நமது செயற்குழுவைக் கூட்ட வேண்டுமென்று கழகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்புவதாகக் கூறினார். உடனடியாக அடுத்த நாளே அவசர செயற்குழு கூடியது. அதற்கு முதல்நாள் இரவு முழுதும் நாவலரும், நானும், பேராசிரியரும், கழக முன்னணியினர் சிலரும் செயற்குழுத் தீர்மானம் பற்றிக் கலந்து பேசினோம். விடியற்காலை நான்கு மணி வரையிலே அந்தக் கலந்துரையாடல் நடந்தது.

மறுநாள் செயற்குழுவிலே தீர்மானம் முன்மொழியப் பெற்றது. சில உறுப்பினர்கள் இந்திரா அரசை எதிர்க்கக் கூடாதென்றும், எதிர்த்தால் நமது கழக அரசு கலைக்கப்படுமென்றும் அச்சம் தெரிவித்தனர். செயற்குழு உறுப்பினர்களின் திருத்தங்களுடன், மாற்றுக் கருத்துக் கூறுவோருக்கும் வாய்ப்பு வழங்கப்பெற்ற, பின்னர் - பெரும்பான்மையோர் முடிவுக்கிணங்க, நெருக்கடி நிலையைக் கண்டிக்கும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

அண்மையில் அன்பகத்திலே நடைபெற்ற செயற்குழுவிலே கூட, தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் பதவி விலக வேண்டுமென்று நண்பர் மதியழகன் தொகுத்தளித்த மாற்றுக் கருத்துகள், முறைப்படி எடுத்துச் சொல்லப்பட்டன. அவைகள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் தடுக்கப்படவில்லை. இறுதி வரையில் அமைதி சூழ்ந்த நிலையில் அவர் தன் மாற்றுக் கருத்துகளை எடுத்துச் சொல்லி விட்டுத்தான் அவராகவே வெளிநடப்புச் செய்தார்.

கண்ணியக் குறைவான முறையில் எந்தக் கருத்துச் சொல்லப் பட்டாலும், அதனை எந்தக் குழுவும் அனுமதிப்பது பொருத்தமாக இருக்காதே தவிர, முறைப்படி மாற்றுக் கருத்துகளைக் கூற இடமே கிடையாது என்ற நிலையில் நமது கழகம் தனது நடைமுறைகளை வகுத்துக் கொண்டிருக்கவில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் நடை பெற்ற செயற்குழுவில் கழகம், மற்ற கட்சிகளுடன் உடன்பாடு கொள்வது பற்றி இருவிதக் கருத்துகள் எடுத்துக் கூறப்பட்டன. அவற்றில் பெரும்பான்மையான கருத்துக்கு ஏற்பவே செயற்குழு, தனது முடிவினை எடுத்துத் தேர்தல் உடன்பாடு குறித்துத் தலைவரும், பொதுச் செயலாளரும் கலந்து பேசி இறுதி முடிவு எடுக்குமாறு அதிகாரம் அளிக்கப்பட்டது.

அப்படி அதிகாரம் அளிக்கப்பட்டும் கூட நாங்கள் இருவரும் மட்டுமே செயல்பட்டோமா என்றால், இல்லை! நிச்சயமாக இல்லை!

ஒவ்வொரு கட்டத்திலும் கழகத்தின் முன்னணித் தலைவர்களைக் கலந்து கொண்டுதான் முடிவினை எடுத்தோம். ஒரு கட்டத்தில் உடன்பாட்டுப் பேச்சுவார்த்தை ஜனதாவுடன் முறிந்து போகக் கூடிய சூழ்நிலையில், கோபியில் நண்பர் சாமிநாதனை "வாபஸ்" வாங்கிக் கொள்ளச் சொல்லியும், மத்திய சென்னைத் தொகுதியிலிருந்து முரசொலி மாறனை தென் சென்னைத் தொகுதிக்கு மாற்றியும் சுமுகமான முடிவினை ஏற்படுத்த வேண்டுமென்று கழக முன்னணியினரான சில வேட்பாளர்கள் விரும்புவதை உணர்ந்து அவ்வாறே ஒப்புக் கொண்டு உடன்பாட்டை வெற்றிகரமாக முடித்தோம். மாறுபட்ட

கருத்துத்தான் என்றாலும், அதற்கு மதிப்பளிக்கக் கழகத் தலைமை தவறவில்லை என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு!

தேர்தல் முடிந்தது! கழகத்திற்குத் தோல்வி கிடைத்தது! உடனே செயற்குழு கூடியது. காலை முதல் மாலை வரையில் பல உறுப்பினர்கள் பேசினார்கள். நாவலர் அவர்களே, தன் கைப்பட எழுதி "முரசொலி" ஏட்டில் கொடுத்த ஒரு மறுப்பு அறிக்கையில் கூட, நண்பர்கள் செழியனும், ராஜாராமும் செயற்குழுவில் நிறைவேறிய தீர்மானங்களுக்கு உதவிகரமாக இருந்தார்கள் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார். அவர்களோ, அல்லது அவர்களைப் போல் கருத்துக் கொண்டிருந்தவர்களோ, மாற்றுத் திட்டங்கள் எதையும் எடுத்துச் சொல்லவில்லை செயற்குழுவில்!

கழகத்தின் தேர்தல்களை இப்போதே நடத்தி, எல்லா அமைப்புகளுக்கும் பொறுப்பேற்க புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கலாம் தலைமைக் கழகம் உட்பட, என்று செயற்குழுவில் நான் கூறிய கருத்தை யாருமே ஏற்றுக் கொள்ளவில்லை. சட்டசபைத் தேர்தல் பணிகள் வருகிற நேரத்தில் அமைப்புகளில் எந்த மாற்றமும் தேவையில்லையென்று அனைவருமே ஒரே கருத்தை வெளியிட்டனர். எனவே, என் கருத்து அந்தச் செயற்குழுவில் கைவிடப்பட்டுவிட்டது.

அந்தச் செயற்குழுவின் தீர்மானங்களைத் தொடர்ந்து ஒன்றியக் கழகக் கூட்டங்கள், மாவட்டக் கழகக் கூட்டங்கள், வாக்காளர் சேர்த்தல் போன்ற கழக ஆக்கப் பணிகள் முடுக்கிவிடப் பட்டன.

இதற்கிடையே தான் கழகச் சட்டதிட்டத்தில் 'தலைவர்' என்று இருக்கிற பதவியையே அகற்றிவிட வேண்டும் என்று ஒரு 'மகஜர்' தயாரிக்கப்பட்டு - கையெழுத்து இயக்கத்தைச் சிலர் தொடங்கினர். இந்தச் செய்தி ஏடுகளிலும் வெளி வந்தது. 'மகஜர் வேண்டுகோள்' - பிரதியொன்று என் கைக்கும் ஏப்ரல் பத்தாம் தேதியன்று கிடைத்தது.

அதன் தொடர்பாக, நான் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகி கழகத்தில் பிரச்சினைகள் தோன்றின. ஒரு கட்டத்தில் மகிழ்ச்சிகரமான முறையில் முடிந்துவிட்ட அந்தச் சிக்கலை, சில நண்பர்கள் தங்கள் நலத்தை மையமாக வைத்து மீண்டும் பெரிதாக்கி விட்டனர்.

உடன்பிறப்பே, இத்தகு சூழலிலேதான் நமது பொதுக்குழு எதிர்கால ஆக்கப்பணிகளை வகுத்து ஏற்றமுடன் பணிபுரியத் தஞ்சையிலே கூடுகிறது!

இப்போது எழுந்துள்ள பிரச்சினைகளால் தி.மு.க. அழிந்து விட்டது - இனிமேல் அது தலை தூக்காது என்று நமது பழைய எதிரிகள் எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். கலந்துரையாடுகிற நேரத்திலும் இதே கருத்தை ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டு 'கெக்கலி' கொட்டுகிறார்கள்.

ஆனால் அவர்களின் சொற்பொழிவு, எழுத்து, எதுவாயினும் தி.மு.க. பற்றியே இன்னமும் சுற்றிச் சுற்றி வருகிறது என்பதைக் காணும் போது, தி.மு.கழகத்தை எந்தச் சூழலிலும் யாராலும் அழித்திட முடியாது என்ற உறுதியைத்தான் நாம் பெறுகிறோம்.

நெடுங்காலம், கொள்கை மாறுபாட்டினால் நமக்கு எதிர்க்கட்சிகளாக இருந்தவர்களை விட, அண்மைக்காலம் வரையில் நம்முடன் இருந்து அற்ற குளமாகிவிட்டது கழகம் எனத் தவறாகக் கருதிக் கொண்டு "அக்கரைப் பாய்ச்சல்" நடத்திய நமது கழகத்தின் முன்னாள் நண்பர்கள்தான் என் மீதும், கழகத்தின் மீதும் அக்கினிப் பொறிகளை வாரி இறைக்கிறார்கள். ஆபாச அர்ச்சனைகளைப் பொழிந்த வண்ணமிருக்கிறார்கள்.

1960-ஆம் ஆண்டு அண்ணாவைத் தூற்றியவாறு, கழகத்திலிருந்து விலகியோர் ஆற்றிய ஆபாச உரைகளைப் பற்றியும், எழுதிய "எடுத்தேன் கவிழ்த்தேன்" என்ற சொற்களைப் பற்றியும் அண்ணா என்ன குறிப்பிட்டார் தெரியுமா?

"இன்று வசைமாரி பொழிந்திடுவோர் என்னை ஒரு காலத்தில் வான்முட்டப் புகழ்ந்தவர்கள்தான். அந்தப் புகழுரைகளையும், இன்றைய இழிமொழிகளையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவர்கள் என்னைப் புகழ்ந்ததே மிகுதி! ஆகவே நான் இன்னமும் அவர்களிடம் கடன் பட்டிருக்கிறேன். அந்தக் கடன் கழிந்திட வேண்டுமானால் இன்னமும் அவர்கள் ஏசிப் பேசிட வேண்டியது பாக்கியிருக்கிறது."

இவ்வாறு அன்றைக்கு நமது அண்ணன் சொன்னதை எண்ணிக் கொண்டுதான் எனது முன்னாள் நண்பர்களின் ஏச்சுகளையும், இழிதகை எழுத்துகளையும் சகித்துக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, ஒரு இளம் நண்பர் - மாணவப் பருவத்திலிருந்து என்னிடம் மரியாதை கொண்டவர்கூட!! மாநகராட்சி மன்றத்திலே ஒரு வேலைக்குப் போட்டி வருகிறது. எனக்கு மிக நெருக்கமான ஒருவரின் வீட்டுப் பிள்ளைக்கு அந்த வேலை வேண்டுமென்று என்னை வற்புறுத்துகிறார்கள். நெருக்கமானவருக்குச் சமாதானம் கூறிவிட்டு அந்த இளம் நண்பருக்கு அந்த வேலை கிடைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நான் விரும்பியவாறே அவருக்கு வேலையும் கிடைக்கிறது. மாதம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஊதியம். இப்போது அவர் எம்.ஜி.ஆர். கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு என்னை அர்ச்சனை செய்து கொண்டிருக்கிறார். காரணம் எனக்கு தெரியவில்லை. அவருக்கும் தெரியாது. ஆனால் பொதுவான காரணம் ஒன்று உண்டு; அவர்கள் போயிருக்கிற இடத்தில் என்னைக் காரசாரமாகத் திட்டினால்தான் அவர்கள் மீது அங்கு நம்பிக்கை ஏற்படும். அந்த நம்பிக்கையை அங்கே பெறவும், அதன் வாயிலாகப் புதிய பலன்களை ஈட்டவும், இப்போதும் அவர்களுக்கு நானே பயன்படுகிறேன் என்பதை நினைத்து நெஞ்சம் குளிர்கிறேன். குளக்கரையில் கிடக்கும் கல்லில் துணியால் அடிக்கிறார்களே, பைத்தியக்காரர்கள் என்று யாராவது கூறுவார்களா! துணி துவைப்பவர்களைப் பார்த்து? கூறமாட்டார்கள்! கல், கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்தாலும் பரவாயில்லை, அந்தத் துணிகள் தூய்மையானால் சரிதான்! இல்லையா உடன்பிறப்பே?

அந்தக் கல்லைப்போல் நான் அடிபடுகிறேன். துணிகளைப் போல் அவர்கள் தூய்மையாகட்டும்.

அண்ணா உயிரோடு இருந்த காலத்தில் ஆயிரம் முறை நடந்திருப்பார்கள், தாங்கள் பட்ட கடனைத் தீர்க்க வழிகேட்டு என் முன்னாள் நண்பர்கள் இருவர்!

அவர்கள் பட்ட கடன்களைத் தீர்த்து, அவர்களைக் காப்பாற்ற முடியாமலே அண்ணாவும் போய்விட்டார். அதற்குப் பிறகு அந்தச் சுமை முழுவதும் இறக்க முடியாவிட்டாலும், பெரும் பகுதிச் சுமையைக் குறைத்திடக் கழகத்தின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று அவர்கள் குந்தியிருக்கும் வீடு அந்த முயற்சியால் கிடைத்ததுதான். ஆனால் விளைவு என்ன? அந்த வீட்டுக்குள் உட்கார்ந்து கொண்டு, என்னை எவ்வாறெல்லாம்

மேடையில் ஏசிப் பேசலாம் என்று குறிப்பு தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். உயிரினும் மேலாக அவர்களை நேசித்தேன். அவர்களோ அனுதினமும் உமிழ்ந்த வண்ணமிருக்கிறார்கள், என் முகத்தில்!

சில நாட்களுக்கு முன்பு நான் கழகத் தலைவர் பதவியிலிருந்து விலகியபோது, எனக்கு வந்த நூற்றுக்கணக்கானக் கடிதங்களில் நமது "பலகுரல் அரசு" முருகுபாண்டியனின் கடிதமும் ஒன்று!

அதில், அவர் என் விலகலைத் திரும்பப் பெற வேண்டும் என்று கடிந்தும், நயந்தும் கூறிவிட்டு இறுதியாகக் கடிதத்தில் குறிப்பிடுகிறார்;

"வைக்கோலைத் தின்று பாலாகத் தரும்
மாடுகளாய் உழைப்போம்!
பாலைக் குடித்து நஞ்சைக் கக்கும்
நாகமாக இருக்க மாட்டோம்"

என்பதாக!

உடன்பிறப்பே, என்னையும், கழகத்தையும் வசைப் பாடும் நமது முன்னாள் நண்பர்களையும் எண்ணிக் கொண்டேன், முருகு பாண்டியனின் சொற்கோவையையும் எண்ணிக் கொண்டேன். ஒரு உறுதி பிறந்தது உள்ளத்துக்கு!

என்னையும், கழகத்தையும் எட்டி உதைப்போர் - வெட்டித் தகர்ப்போம் என்போர் ஒரு காலத்தில் "கட்டிக் கரும்பே! தேனே! கற்கண்டே!" என இதே வாயால் புகழ்ந்து, போற்றியவர்கள்தான். அவர்களில் மிகப்பலர், நிறைந்த பயனை இந்தக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்களே தான்!

'மஞ்சள் காகிதம்' வராமல்
என் மானத்தைக் காப்பாற்றினாய்
என மண்டியிட்டுத் தொழுதோர்!

என் உயிர், நீ இல்லாவிட்டால்
இந்நேரம் இந்த உடலில் ஒட்டியிராது!
என ஓலைகள் தீட்டியோர்!

நீ தந்த பதவி பெற்று பாராளு
மன்றத்தில் அமர்ந்தவாறு கோபாலபுரம்

நோக்கி வணங்குகிறேன் என்று
உருக்கமிகு மடல் வரைந்தோர்

ஆலாய்ப் பறந்த குடும்பத்திற்கு
ஆறுதலாக வழங்கினாய் எனக்கோர் வேலை;
என்று அஞ்சல் விடுத்தோர்

குடும்பநிதி சேர்த்தளித்து என் மக்களுக்கும்
மண விழா நடத்திவைத்த உன்னை நான்
மறப்பேனா என மனமுருகப் பேசியோர்

நீ தான் தெய்வம் என்றோர்

தினம் தினம் பூஜிப்பேன் என்றோர்

கட்டுரை தீட்டிப் புகழ்ந்தோர்

கவிதை பாடிப் போற்றினோர்

உடன்பிறப்பே, இத்தகையோரில் சிலர்தான் இன்று தங்களின் "நன்றி அறிவிப்புகளை" நாராச மொழியில் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அன்று மலர் பறித்துச் சூட்டினர் - இன்று மலம் வாரி வீசுகின்றனர் - அய்யோ, கையைக் கெடுத்துக் கொள்கிறார்களே என்றுதான் இப்போதும் அந்த முன்னாள் நண்பர்களுக்காக நான் கவலைப்படுகிறேன்.

எதிர் வரிசைக்குச் சென்று, எரிதழலை நம்மீது கொட்டுவோர் - அவர்களின் சொந்த லாபத்திற்காகவே அதைச் செய்கின்றனர். நடக்கட்டும் அவர்தம் பணி! அது பற்றிச் சோர்வடையாது நடக்கட்டும் நமது இலட்சிய அணி! அந்த அணிக்கான ஆக்க வேலைகள் குறித்து ஆராய்ந்திடவே பொதுக் குழு கூடுகிறது.

அங்கே சந்திப்போம் வா!

அன்புள்ள,
மு. க.
21-04-1977

408. தமிழுக்கோர் காவல் குழு!

உடன்பிறப்பே,

பள்ளிப் பருவத்தில் முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு திருவாரூரில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் அமைத்து நடத்தியபோது அதன் ஆண்டு விழாவுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் வாழ்த்துக் கவிதையொன்று அனுப்பி வைத்திருந்தார்.

‘தண்பொழிலில் குயில் பாடும் திருவாரூரில்

தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்காண்’

எனத் தொடங்கும் அக் கவிதை வரிகள்,

‘புண்வாய்ந்தோர் அல்லர் காண் திருவாரூரின்

புலி இளைஞர்கள் காண் – தோள்கள்

பூரித்தார் காண்!’

என்று வீர முழக்கமிட்டவாறு,

‘கிளம்பிற்றுக்காண் தமிழச் சிங்கக் கூட்டம்

கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை’

என உணர்ச்சிக் கொந்தளிப்பின் சிகரத்தில் நின்று எழுச்சி முரசு கொட்டுவனவாகும்.

‘தமிழுக்கு அழுதென்று பேர் – அந்தத்

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’

எனத் துடிக்கும் இதயத்துடன் தொடங்கிய எனது பொது வாழ்க்கை, இன்று வரையில் அந்த மைய இழை அறுந்து போகாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நான் மட்டுமல்ல; லட்சக்கணக்கான இளம் உள்ளங்கள், தமிழ் மொழி காக்கவும் – தமிழர் மானம் போற்றவும் – தமிழ்

மரபு பாதுகாக்கப்படவும் - தமிழர் வரலாறும், தமிழர் இணைந்த திராவிடக் கலாச்சாரமும் மங்கிடாமல் ஒளிவிடவும் - எதையும் தாங்கித் தியாகங்கள் புரியத் தயாராக இருக்கின்றன என்பதற்கு நமது கடந்தகாலச் சரித்திர நிகழ்ச்சிகள் சான்று கூறிக் கொண்டிருக்கின்றன.

செந்தமிழுக்கொரு தீமை வந்தால்

இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ?

எனத் தோள் தட்டிக் களம்புகும் விழுப்புண் விரும்பிகள் ஏராளமுண்டு நமது கழகத்தில்!

தமிழ் காக்கத் தீக்குளித்துச் செத்தனர் எட்டுபேர்!

குண்டடி பட்டுக் குழிக்குள் குவிந்தன எண்ணற்ற தமிழர் பிணங்கள்!

எதையும் இழக்கத் துணிவர், எம் தமிழர், தம் மொழி காக்க!

இப்படியொரு தீரமிகு வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களின் பாசறைதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த இயக்கம் எதிர்க்கட்சியாக இருந்தபோது தமிழின் பெருமையைக் காத்திடப் போர்க்கொடி உயர்த்திற்று.

இந்தி எழுத்து அழிப்பு.

டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக மாற்றும் அறப்போர்.

இப்படிப் பல களங்களைக் கண்டதுதான் இந்தக் கழகம். ஆட்சிப் பொறுப்பு ஏற்ற ஒன்பது ஆண்டுக் காலத்தில் தமிழின் கீர்த்தி நிலைக்கக் கழகம் அரசின் சார்பில் உருவாக்கிய சாதனைகள் அழியாத நினைவுச் சின்னங்களாகும்.

பூம்புகார் கலைக்கூடம்,

வையம்புகழ் வள்ளுவர் கோட்டம்,

வீரபாண்டியக் கட்டபொம்மனுக்குக் கோட்டை,

வள்ளுவர்க்குக் குமரிமுனையில் சிலை அமைக்கும் முயற்சி

தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு என்ற வகையில் நாம் செய்த தொண்டுகளாகும் இவைகள்!

நமது பொதுக்குழு கூட இருக்கிற தஞ்சைத் திருநகரில் இராஜராஜன் கட்டிய கோயிலுக்குள் அவன் சிலையை வைப்பதற்கு எவ்வளவு பெரிய முயற்சி! இறுதியில் அது முடியாமற் போய் - கோயிலுக்கு வெளியே அல்லவா அந்தச் சோழப் பெரு மன்னனின் சிலையினை அமைத்துச் சிறப்புமிகு விழா எடுத்திட்டோம்.

சமுதாயத்தில் மறுமலர்ச்சி

பொருளாதாரத்தில் சமதர்மம்

அரசியலில் ஜனநாயகம்

என்ற கொள்கைகள் வெற்றி பெறப் பாடுபடுகிறோம் எனினும், இந்திய அரசமைப்புக்குள் அடங்கி - இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களில் ஒன்றானதும் திராவிடக் கலாச்சாரப் பின்னணி கொண்டதுமான தமிழ்த் தேசியத்தை வளர்த்துக் காத்திடவும் - தமிழ் மொழிக்குப் பிற மொழியால் ஆபத்து அணுவளவும் நேராமல் தடுக்கவும் பொறுப்பேற்றுக் கொண்டு பணியாற்றுகிறவர்களும் நாமாகத்தான் இருக்கிறோம்.

திராவிடக் கலாச்சாரமும் - தமிழன், தமிழ் மொழி என்ற உணர்வுகளும் அழிக்கப்பட இந்திய ஒருமைப்பாடு - என ஒன்று இருக்கவே முடியாது!

நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற இந்திய ஒருமைப்பாட்டில், தமிழனுக்குரிய திராவிடக் கலாச்சாரமும் - மொழிப் பாதுகாப்பும் - மறுக்கப்படாமல் இடம் பெற்றிருக்கின்றன என்ற நம்பிக்கையுடன்தான் இருக்கிறோம். ஒருவேளை இடம் பெறாவிட்டால், இடம் பெறாமல் செய்யப்பட்டால், இடம் பெறுவதற்கான முறையில் நமது பணிகளையும், வேலைத் திட்டங்களையும் அமைத்துக் கொள்வோம்.

இதை மனதிற்கொண்டுதான் அண்ணா அடிக்கடி கூறி வந்தார்; கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நமக்கு தமிழ் நாட்டில் இன்னும் ஐம்பதாண்டு காலப் பணி இருக்கிறது என்பதாக!

இந்தக் கருத்தை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டுதான் எத்தனை ஆழமான பிரச்சினைகளானாலும் அவற்றை நாம் அணுகிட வேண்டும்.

தஞ்சைப் பொதுக்குழு, இந்த உணர்வுக்கு ஊக்கமளிக்கும் வண்ணம் அமையும், அமைய வேண்டும்.

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்

விசையொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்

சூழ்ச்சி தனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்

தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும்

காழ்ச் சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்

கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்

என்று பாடிய புரட்சிக் கவிஞரின் எண்ணம் நிறைவேறிட - தமிழ்ச் சமுதாயம் தடைக் கற்கள் உண்டென்றாலும் தடந்தோள் உண்டெனச் சிரித்து நடந்திட - தமிழரின் மொழி, மரபு, கலை, கலாச்சாரம், இலக்கியம், வரலாறு அனைத்தும் காத்திடும் அரணாகத் தி.மு.கழகம் திகழ்கிறது. எனினும், அதற்கோர் காவல் குழு கழகத்தின் அரவணைப்போடு தோன்றிட வேண்டும். அந்தக் குழு, தமிழுக்கும் தமிழருக்கும் இலக்கியக் கலைத்துறைகளில் ஓயாது தொண்டாற்றும் புலவர் பெருமக்களையும், கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் கொண்டதாக அமையவேண்டும்.

எண்ணியதைத் தனிப்பட்ட கருத்தாகச் சொன்னேன். இணங்குகிற கருத்தாக இருப்பின் இதுபற்றி விரிவாகச் சிந்தனை செய்து கொண்டு வா! மாறுபட்ட கருத்தையும் முறையாகச் சொன்னால் வரவேற்கிற ஜனநாயக அமைப்புத்தான் நமது பொதுக்குழு!

தமிழும், தமிழ் மக்களும் தலைதாழாது நின்று - இந்திய நாட்டு ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வலிவேற்றிடும் வண்ணம், தமிழ் வளர்க்கும் திட்டங்களைத் தீட்டுவதில் தவறுமில்லை! அது அவசியமான பெரும் பணியுங்கூட!

அன்புள்ள,

மு. க.

22-04-1977

409. கண்ணுக்கு விருந்தானாய் - மனப்புண்ணுக்கு மருந்தானாய்!

உடன்பிறப்பே,

ஓராயிரம் ஊசிமுனைகளால் குத்தப்படும் உள்ளத்தில் உதிரம் கசிந்து கொண்டிருந்த போதிலும் உன் திருமுகத்தைத் தஞ்சை மாநகரில் கண்டவுடன் எல்லாத் துன்பங்களுமே எங்கேயோ ஓடி மறைந்து விட்டன. அந்த அற்புதமான மருந்தை உன் விழியால், மொழியால், நீ கள்ளங் கபடமின்றித் திறந்து காட்டிய நெஞ்சத்தால் நான் பெற்று என் இதயப் புண்களை ஆற்றிக் கொள்ள முடிந்தது.

சில நாட்களுக்கு முன்பு ஒரு ஆங்கில ஏடு, முதல் பக்கத்தில் ஒரு பெட்டிச் செய்தி வெளியிட்டு "தி.மு.கழகம் அனாதையாகி விட்டது" என்று குறிப்பிட்டிருந்ததை நீ படித்திருக்கக்கூடும். நாம் அனாதைகளாகி விட்டோமோ இல்லையோ - ஒன்று மட்டும் உறுதி - இதயம் படைத்தவர்கள், அனாதைகளை ஆதரிக்கத்தான் "நான் முந்தி, நீ முந்தி" என்று போட்டி போட்டுக் கொண்டு ஓடி வருவார்கள்.

அந்த ஆங்கில இதழாளர், தஞ்சைத் தரணியில் நீ நடத்திக் காட்டிய பொதுக் குழுவையும், "நகரம் முழுவதுமே பொதுக் கூட்டம் நடைபெற்ற மைதானம்" என எண்ணத் தக்க அளவுக்கு மக்கள் வெள்ளம் புகுந்திருந்த காட்சியையும் கண்ட பிறகாவது, நாம் அனாதைகளல்ல என்பதைப் புரிந்து கொண்டிருப்பார் என்றே நம்புகிறேன்.

கணவனுக்குக் கடுமையான நோய் ஏற்பட்டு, மனைவி அவன் அருகிலேயே இருந்து கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்து பின்னர் அவன் பிணி நீங்கி எழுந்துவிட்ட பிறகானாலும், அல்லது துணைவி நோய்வாய்ப்பட்டுக் கணவன் அவளை விட்டு விலகாமலே இருந்து பின்னர் அவள் எழுந்து நடமாடத் தொடங்கினாலும் - அந்த இருவரிடையே தோன்றிவிடுகிற

அன்பும், பாசமும், பற்றும், பிடிப்பும் இருக்கிறதே, அது ஆழமாகப் பூமியில் பதிந்துள்ள அசைக்க முடியாத ஆணி வேரைப் போன்றது என்பதைப் பல குடும்பங்களில் கண்டிருக்கிறோமல்லவா? அதைப் போலத்தான் நமது கழகத்திற்குச் சோதனையென்னும் நோய் வருகிற போதெல்லாம் அதிலிருந்து மீட்டு அதனை மிடுக்கோடு மீண்டும் நடைபோடச் செய்கிற பணியில் அகலாமல் இருந்து ஆற்ற வேண்டிய பணிகளை உணர்ச்சிப் பிழம்பாக நின்று ஆற்றிடுவதின் வாயிலாகக் கழகத்தின் மீது முன்னைக் காட்டிலும் அதிக அன்பினைப் பொழிகிறோம்.

அந்த அன்பின் பெருக்கத்தைத்தான் தஞ்சைப் பொதுக் குழுவிலும், கூட்டத்திலும் நான் கண்டேன்.

சுருக்கமாகச் சொன்னால், என் ஆருயிர் உடன்பிறப்பே, தஞ்சைப் பொதுக்குழுவிலும், பொதுக் கூட்டத்திலும் நீ என் கண்ணுக்கும் விருந்தானாய் - மனப் புண்ணுக்கும் மருந்தானாய்!

வருடத்திற்கு ஒருவர் என்று முறை வகுத்துக் கொண்டு என்னையும், கழகத்தையும் வசைபாடிக் கொண்டிருந்த நிலைமாறி, இப்போது வாரத்திற்கு ஒருவர் என்று வசையினை இசையாக்கிக் கொண்டு முறை வகுத்து என் மீதும், கழகத்தின் மீதும் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் நேசித்தவர்கள் சிலர் நம்மிடமிருந்து பிரிந்து விட்டார்களே என்பதில் இதயத்தைப் பிளந்து கொண்டு துக்கம் வெளிக் கிளம்பி நம் தொண்டையை அடைக்கத்தான் செய்தது. விழிகள் தடாகங்கள் ஆயின. அந்தப் பிரிவு பற்றிப் பேசினால் நாக்குத் தழுதழுக்கத்தான் செய்தது.

1957 - ஆம் ஆண்டு கழகப் பொதுச் செயலாளராக இருந்த நாவலர் அவர்கள் சேலத்தில் தோற்றுவிட்டார் எனக் கேள்வியுற்றதும், திருவாரூரில் என் தமக்கையார் மயக்கமுற்று விழுந்து விட்டார். அதேபோலத்தான் இப்பொழுதும் நாங்கள் பிறந்த ஊரான திருக்குவளைக்குச் செல்வதற்காகத் திருவாரூர் சென்றிருந்த தமக்கையார் 'நாவலர் விலகல்' எனும் செய்தி கேள்வியுற்று மூர்ச்சித்து விழுந்து விட்டார்கள். கிராமத்திற்குச் செல்லாமலே சென்னை திரும்பி விட்டார்கள்.

கட்சி, கொள்கை, இவற்றிற்கும் அப்பாற்பட்ட ஒரு குடும்ப பாசம் - நட்பு - உறவு - அவர்மீதும் என்றைக்கும் இருந்தது

என்பதால்தான் திடீரென மின்னல் எனத் தோன்றிய இந்தப் பிரிவைத் தாங்கிடும் சக்தியை நெஞ்சம் இழந்துவிட்டது.

கழகம் இந்த நிலையால் என்ன ஆகும் என்பதைவிட, அம்மவோ! இத்தனை ஆண்டுக்கால பாசமிகு நட்பு என்ன ஆயிற்று? என்று கேள்வியால் விழிவானத்திலிருந்து மழை பொழியத் தொடங்கிற்று.

ஆனாலும், பிரிந்தவர்களுக்கு நம்மீது எவ்வளவு ஆத்திரம் இருந்தாலும், அதன் கூடவே ஒரு அனுதாபமும் இருந்திருக்கிறது என்பது கண்டு நான் ஆறுதல் அடைகிறேன்.

"ஏதோ, காலச்சூழ்நிலை பிரிந்துவிட்டோம்" என்று அவர்களும் தங்கள் துயரத்தை வெளிப்படுத்தியிருந்தாலோ - எப்படியெல்லாம் தோளோடு தோள் நின்று பாடுபட்டோம், அந்த இனிய, இதமான உறவில் இப்படியொரு பள்ளத்தாக்கு குறுக்கிட்டு விட்டதே என்று அவர்கள் பெருமூச்சு விட்டிருந்தாலோ - நம் கண்ணீருக்கு அணையே போட்டிருக்க முடியாது. கவலைக்கு முடிவே ஏற்பட்டிருக்காது.

அவர்களுக்கு நம்மீது அனுதாபம் இருக்கின்ற காரணத்தால் தான் "அய்யோ பாவம், இவர்களை இனிமேலும் வேதனைக்கு ஆளாக்கிடக் கூடாது" என்று - நாம் அந்தப் பிரிவின் துன்பத்தை மெல்ல மெல்ல மறந்து விடுகிற அளவுக்கு நம்மீது குற்றச் சாட்டுக் கணைகளைத் தீர்மானங்களாக வடித்தெடுத்து வீசிக் கொண்டிருக்கிறார்கள்.

எத்தனை குற்றச்சாட்டுகள் என்று எண்ணிக்கை வைத்தல்லவா என்னுடைய அன்பு நண்பர்கள் கூடிக் கலந்து விவாதித்து பதினாறு குற்றச்சாட்டுகளை விளம்பரப் படுத்தியிருக்கிறார்கள்.

தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று தலைவர், பதவி விலகவில்லை என்பதுதான், முதலில் கூறப் பட்ட குறைபாடாக இருந்தது.

"அதற்குத் தயாராக இருக்கிறேன். நீங்கள் திரும்பி வந்து கட்சியை நடத்துங்கள்" என்று நான் அறிக்கை விடுத்ததும் தலைமையைப் பற்றிப் பிரச்சினை இல்லை, கொள்கைப் பிரச்சினை - உட்கட்சி ஜனநாயகப் பிரச்சினையென்று ஏடுகளுக்குச் செய்தி தந்தார்கள்.

அவைகளைக் கூட விவாதிக்கலாம் வாரீர் என்றுதான் அழைத்தோம். பின்னர், "இனிமேல் பேச்சுக்கே இடமில்லை சந்திக்கக்கூடிய இடத்தில் இருந்தால் தானே சமரசத்திற்கு வருவீர்கள், சந்திக்க முடியாத இடத்தில் ஓய்வெடுக்கிறேன்" என்ற பதில்தான் கிடைத்தது.

அழைப்புகள் உதாசினப்படுத்தப்பட்டன. அவற்றிற்கு உள் நோக்கங்கள் கற்பிக்கப்பட்டன. புதிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது என்று முடிவு கட்டிவிட்ட பிறகு என்னதான் பழைய நட்பு, உறவு, பாசம், நேசம், கட்சிக் கட்டுப்பாடு, கட்சி வளர்ச்சி, இவைபற்றிப் பேசினாலும் எடுபடுவதற்கு வழியில்லாமல் போவது இயற்கைதானே!

எனினும், நம்மை நாமே தேற்றிக் கொள்ள முடியாமல் தவித்தபோது, புதிய அமைப்பைக் கண்டுவிட்டவர்கள், பதினாறு குற்றச்சாட்டுப் பாணங்களைப் பொழிந்ததின் மூலமும், கட்சித் தொடக்க உரையிலேயே என்னைச் "சர்வாதிகாரி" என்று வர்ணித்ததின் மூலமும், கழகக் கணக்கில் வந்த பணத்தை பொதுச் செயலாளருக்கும், பொருளாளருக்கும் தெரியாமல் செலவழித்த "நாணயமற்றவன்" என்று பட்டமளிப்புச் செய்ததின் மூலமும், நம்மைத் திடப்படுத்தி, நமது பாதையில் நாம் நடந்திடத்தக்க மன வலிமையை உருவாக்கிக் கொடுத்து விட்டார்கள்.

கட்சிக்கணக்கில் வந்த பணத்தை பொதுச் செயலாளரோ, பொருளாளரோ அறியாமல் கழகத் தலைவர் தொடவே முடியாது, கழகத் தலைவருக்கு செக்குகளில் கையொப்பமிடுகிற உரிமையே கிடையாது. பொதுச் செயலாளரோ, பொருளாளரோதான் செக்குகளில் கையொப்பமிட்டு, வங்கியிலிருந்து பணத்தை எடுக்க முடியும். இது நன்கு தெரிந்திருந்துங் கூட பதினாறில் ஒன்றாக இப்படி ஒரு குற்றச்சாட்டு!

நானோ, பொருளாளர் பேராசிரியர் அவர்களோ, நம்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்கு ஆளானதால் விளக்கங்களை அளித்தோமே தவிர,

"இதோ பாருங்கள்! பதிலுக்குப் பதில்! பதினாறு குற்றச் சாட்டுக்குப் பதில் இருபத்தி ஆறு குற்றச்சாட்டுகள்!" என்று கூறிடவும் இல்லை. அந்த முறையை இன்று வரை விரும்பிடவுமில்லை.

ஆனால் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளால் மக்கள் குழப்பமுறும் போது அவற்றிற்கு விளக்கமளிக்கும் கடமைப் பொறுப்பிலிருந்து நழுவி ஓட முடியாதல்லவா?

"லாவணிக் கச்சேரி இல்லை" என்றார்கள், சொன்ன மறுநாளே தக்க பக்கவாத்தியங்களுடன், அந்தக் கச்சேரியை ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்கள் உருவாக்கிய அமைப்பை வளர்க்க, அவர்கள் அறிவித்துள்ள கொள்கைகள் போதுமானவை அல்ல என்றால் தானே, நம்மைக் குற்றம் சாட்டி அந்த அமைப்பை வளர்க்க முயல வேண்டும்?

வலுவான கொள்கைகள் அவர்கள் அமைப்புக்கு இருக்குமானால் நம்மை வலுச்சண்டைக்கு இழுக்க வேண்டிய அவசியமே இல்லையே!

உடன்பிறப்பே, எப்படியோ ஈட்டிகளை நம் நெஞ்சில் பாய்ச்சி, அதைத் தடுக்கும் கேடயங்களாக நம்மை மாற்றி விட்டார்கள். நம் கண்ணீரை, அவர்கள் எடுத்துள்ள போக்கு துடைத்து விட்டது! கடமையை எண்ணுவோம்! திகைத்து நின்றுவிட்ட நமது கால்கள் தொடர்ந்து இலட்சியப் பயணத்தை மேற்கொள்ளட்டும்!

இந்த உறுதியைத்தான் தஞ்சையில் நீ எங்களுக்கு வழங்கியுள்ளாய்! அதனால்தான் சொல்லுகிறேன், நீ கண்ணுக்கும் விருந்தானாய் மனப்புண்ணுக்கும் மருந்தானாய் - என்று!

அன்புள்ள,

மு. க.

27-04-1977

42212
கா.எ.-8116
பிரிவு எ. 5

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

410. இலங்கைத் தமிழரின் இணையற்ற செல்வம்!

உடன்பிறப்பே,

படுக்கையின் ஓரத்தில் இருந்த தொலைபேசி நள்ளிரவு பனிரெண்டு மணியளவில் ஒலித்தது. இலங்கையிலிருந்து வந்தது குரல். சுதந்திரன் பத்திரிகை நண்பர் மகேசன் தழுதழுத்த தொனியில் அந்த அதிர்ச்சிக்குரிய செய்தியைச் சொன்னார். செல்வா மறைந்து விட்டார். இலங்கைத் தமிழர்களின் செல்வம் மறைந்து விட்டது. அந்தோ! இலங்கையில் தான் அடுக்கடுக்காக எத்தனை வேதனைகள்! தமிழர்களின் உணர்ச்சி விளக்காக ஒளிவிட்டுக் கொண்டிருந்த திருச்செல்வம் பிரிந்தார். தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய பொன்னம்பலமும் திடீரென மறைந்தார். இதோ அள்ள அள்ளக் குறையாத அரும்பெரும் செல்வமாம் ஈழத்துத் தந்தையையும் இழந்து விட்டோம்.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு வாழ்வை நகர்த்திக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர்களுக்கு இவரன்றோ போர் வாளாய் - கேடயமாய்த் திகழ்ந்தார்.

அங்கு எத்தனை அடக்குமுறைகளைத் தமிழர்கள் ஏற்க வேண்டியிருந்தது. தூண்டி விடப்பட்ட கலவரங்கள் பலவற்றில் தூண்டில் மீன்களாய்த் தமிழ்க் குலத்தைச் சார்ந்த ஆடவரும் பெண்டிரும் அவதிப்பட்டுத் துடித்திட்ட போது அவர்களுக்குத் துணை நின்ற "காவல் தெய்வம்" என்ற நிலையில் அல்லவா செல்வா அவர்களின் தொய்வில்லாத் தொண்டு அமைந்திருந்தது.

பசப்பு மொழி பேசி அவரைத் தம் பக்கம் இழுத்திட நினைத்தோர் - பதவி சுகம் காட்டி அவரது பகையைத் தவிர்த்திட முனைந்தோர் - அவர்கள் யாருக்கும் வணங்காத தலையினராக - வைர நெஞ்ச வேங்கையாக - கொண்ட கொள்கையில் குன்றென நிமிர்ந்து நின்று இறுதி மூச்சு போகும் வரையில் இலங்கைத்

தமிழர்களின் நல்வாழ்வு ஒன்றையே எண்ணிக் கொண்டிருந்தார் அந்த ஈழத்துப் பெருந்தமிழர்.

மூன்று நான்கு ஆண்டுகட்கு முன்பு தமிழகம் வந்திருந்தார். எங்களையெல்லாம் சந்தித்தார். எலும்பினால் மட்டுமே உருவானதோ அந்த உடல் என வியக்கத் தக்க அளவுக்கு அவ்வளவு இளைத்திருந்தார். எனினும், இலங்கைத் தமிழர்களுக்காகப் போர் தொடுப்பதில் களைத்திருந்தார் என்று எவரும் கூறிட இயலாது!

உலகெங்கும் பரந்து கிடக்கும் தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணாக நமது தி.மு.கழகம் இருப்பது கண்டும், அந்தத் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகத் தேவைப்படும் பொழுதெல்லாம் குரல் கொடுப்பது கண்டும் - அவர் அடைந்திருந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இலங்கையில் தமிழர்கள் அவதிக்கு ஆளானபோது அறிஞர் அண்ணா அவர்களின் காலத்தில் தி.மு.க. நடத்திய இலங்கைத் தமிழர் ஆதரவுப் பேரணியும், அதன் பின்னர் இலங்கை வாழ் தமிழர்களின் துன்ப துயரங்களைப் போக்கத் தி.மு.கழகம், இந்தியப் பேரரசிடம் முறையிட்டு ஆவன செய்திடுமாறு கேட்டுக் கொண்டதையும், மறைந்துவிட்ட தமிழர்களின் மாணிக்கமாம் செல்வா அவர்கள் நன்றிப் பெருக்குடன் நினைவுகூர்ந்திடத் தவறியதே இல்லை.

இலங்கையே அழுது கொண்டிருக்கும் இன்று! ஏன், தமிழன் எங்கெங்கு வாழ்கிறானோ அங்கெல்லாம் அவனது இல்லம் இருள் சூழ்ந்துதான் கிடக்கும். உள்ளம் அழுது கொண்டுதான் இருக்கும்.

இங்கே கடந்த 15-ஆம் தேதியன்று கழகம் பிரச்சினைக்கு உட்பட்ட போதுதான் செல்வாவின் உடல்நிலை பற்றிக் கவலை தரும் செய்தி இலங்கையிலிருந்து தெரிவிக்கப்பட்டது. இலங்கை வாழ் தமிழர்களின் அன்புக் கட்டளையை ஏற்று நரம்பியல் மருத்துவ மேதை இராமமூர்த்தி அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் ஏற்பாடுகளைச் செய்தோம். அவரும் மிக்க ஆர்வமுடனும், அக்கறையுடனும் அந்தப் பணியினை ஏற்றுத் தன்னால் முடிந்த முயற்சிகளைச் செய்துவிட்டுத் திரும்பினார். இலங்கையில் உள்ள மருத்துவ மேதைகளும் செல்வாவின் உயிரை மீட்க அரும்பாடுபட்டு அயராது உழைத்தனர். ஆனால் காலம்,

தன் முழு வல்லமையைக் காட்டிச் செல்வநாயகம் அவர்களை நம்மிடமிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டது.

செல்வா மறைந்து விட்டார். எனினும் அவரால் உருவாக்கப்பட்ட ஆற்றல்மிகு தலைவர்கள், தளபதிகள், வீரக் கவிஞர்கள், இலட்சியக் காளைகள் பலர் இருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்காகச் செல்வா ஆற்றிய பணியை அவர் வழியில் மற்றவர்கள் தொடர்வார்கள்.

அவர் காத்திட்ட அமைதி - தமிழர் சிங்களவரிடையே பகை மூளாமல் தவிர்த்திடவும் - அதே நேரத்தில் தமிழர்களின் நல்வாழ்வுக்கு வழி அமைத்திடவும் அவர் ஓயாது வழங்கிய உழைப்பு -

இவை, என்றென்றும்.

அன்புள்ள,

மு. க.

28-04-1977

411. பொது எதிரியைப் புரிந்து கொள்வோம்!

உடன்பிறப்பே,

ஓட்டைகள் விழுந்த படகு எனக் கழகத்தை வர்ணித்து 'விகடன்' கேலிச் சித்திரம் தீட்டுகிறது. "பிளவுபட்ட கழகம்" என்று பேரானந்தம் பொங்கிட திரு.க. சந்தானம், 'கல்கி'யிலும், சுயராஜ்யாவிலும் கட்டுரை எழுதுகிறார். 'நாம்' இருக்கக் கூடாது என்று கருதிடும் சிலர் உலவுகிற வட்டாரத்திலே எப்படிப்பட்ட விழாக் கொண்டாட்டம் நடைபெறுகிறது பார்த்தாயா?

இன்று நேற்றல்ல, இந்த இயக்கத்திலே எந்தக் காலத்திலே இது போன்ற பிரச்சினைகள் எழுந்தாலும் "ஆடுகள் முட்டிக் கொண்டால், நரிக்கு ரத்தம் கிடைக்கும்" என்பதைப் போல ஒரு சிலர் உவகைப் பெருக்கெடுக்க அதனை உசுப்பி விட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது வரலாற்று உண்மைகளாகும்.

இன்று எழுந்துள்ள பிரச்சினைக்கு சந்தானம் அவர்கள் மிக்க அக்கறையுடன் கருத்து தெரிவிக்கவும், தலையங்கம் தீட்டவும் ஓடி வர வேண்டிய அவசியம் என்ன என்பது புரிகிறதல்லவா?

"தி.மு.க.வின் முன்னணித் தலைவர்கள் பலர், அந்தக் கட்சியிலிருந்து வெளியேறி விட்டார்கள். தமிழக அரசியலைத் தூய்மைப்படுத்த இது உதவும்."

- என்று சந்தானம் குறிப்பிடுகிறார். தூய்மை, ஒழுக்கம், நேர்மை என்ற வார்த்தைகளை யார் முதன் முதலாகச் சொல்கிறார்களோ, அவர்கள் எல்லாம் அப்பழுக்கற்ற ஒழுக்க சீலர்கள், நேர்மையாளர்கள் என்று தங்களை நாட்டு மக்களிடத்தில் காட்டிக் கொள்ள மற்றவர்கள் மீது புழுதி வாரித் தூற்றச் சற்றும் தயங்குவதில்லை.

நெருக்கடி நிலையை எதிர்த்த காரணத்தினாலேயே தி.மு.க. அரசு மீது பகை கொண்டு - 1972-ஆம் ஆண்டு தரப்பட்ட புகார்களைத் திடீரென 1976-ஆம் ஆண்டு எடுத்து, விசாரணைக்

கமிஷனை அமைத்து இந்திரா அரசு, தனது அதிகாரிகளைக் கொண்டு சாட்சியங்களைத் தயாரித்து லஞ்சக் குற்றச்சாட்டுகளை வாரியிறைத்ததே தவிர, கழகச் சார்பில், வழக்கறிஞர் சாந்திபூஷண் எடுத்து வைத்த வாதங்களையோ, கோரிக்கைகளையோ சர்க்காரியா கமிஷன் ஏற்றுக் கொள்ளக்கூடிய அல்லது சிந்திக்கக்கூடிய சூழ்நிலைகளை இந்திரா அரசு, ஏற்படுத்தியிருந்தது என்று யாராவது கூறமுடியுமா? ஏன்! திரு.சந்தானம்தான் கூற முடியுமா?

புகார் கொடுத்தவர்களைச் சாட்சிகளாக விசாரிக்க வேண்டும், அவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் - அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட வாக்குமூலங்களில் கையெழுத்திட்ட எல்லா சாட்சிகளுமே குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் - என்ற கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாமல், "ஏற்கனவே எழுதப்பட்டுவிட்ட முடிவுகளுக்கு" - விசாரணை என்ற பெயரால் ஒரு நாடகம் நடத்தி அதை விளம்பரப் படுத்திக் கழகத்தைக் களங்கப்படுத்தி அழித்து விடலாம் என்பது தானே இந்திரா அரசின் நோக்கமாக இருந்தது.

இந்திராவின் அரசு, கவிழ்ந்து இப்போது அந்த அம்மையாரின் வகையறாக்கள் மீது பல கோடி ரூபாய்க்கான ஊழல்கள் பற்றிய விசாரணைகள் தொடங்கப்பட்டிருக்கும் போது இங்குள்ள சந்தானங்கள், தி.மு.கழகத்தின் மீது தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள சர்க்காரியா விசாரணைச் சாட்சியங்களின் புனைந்துரைக்கப்பட்ட வாக்குமூலங்களைக் கருவிகளாக்கிக் கொண்டு புறப்பட்டிருப்பதன் நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

நமது கழகத்திலிருந்து வெளியேறிவிட்ட தோழர் ஒருவருக்கும், சந்தானத்திற்கும் இடையே பின்வருமாறு ஒரு உரையாடல் கூட நடைபெறக்கூடும். கற்பனைதான் இது என்றாலும், நடக்குமென்று நம்பக் கூடியதைத்தான் குறிப்பிடுகிறேன்.

சந்தானம்:- கல்கியில் நான் எழுதியதைப் படித்தீர்களா?

விலகிய தோழர்:- ஓ, சுயராஜ்யாவிலேயே படித்தேன். விளாசித் தள்ளிவிட்டீர்கள்.

சந்தானம்:- உங்களையெல்லாம் ஒரே தூக்காகத் தூக்கியிருக்கேனே!

வி.தோழர்:- ஆமாம் நன்றாயிருந்தது. ஆனால் ஒன்று. அந்தக் கருணாநிதி சும்மா இருக்க மாட்டார். தி.மு.க.மீது விசாரணைக் கமிஷன் இருப்பதால் தான் விலகி விட்டார்கள் என்றால் அப்படி விலகிய நாவலர், ஆதித்தனார், மாதவன் மீதும் விசாரணைக் கமிஷன் இருக்கிறதே என்று எழுதுவார்.

சந்தானம்:- ஆமாம் அது ஒரு 'பாயின்ட்' எழுதக்கூடும். ஆனால் ஜனங்கள், அதையெல்லாம் மறந்திருப்பார்கள். எதிர்ப்பு முழுக்க, கருணாநிதி மீதுதானே! அந்த ஆள் விழுந்தால், எல்லாம் சரியாய்ப் போய்விடும் இல்லையா?

வி.தோழர்:- எதற்கும் நாங்கள் எச்சரிக்கையாகக் கூறி விட்டோம்! அதாவது தி.மு.க.மீது போடப்பட்ட சர்க்காரியா கமிஷன் அரசியலில் பழிவாங்கும் நோக்கம் கொண்டது என்பதாக!

சந்தானம்:- அட சனியனே! அப்படியா சொல்லி விட்டீர்கள்? விசாரணைக் கமிஷன் அரசியல் நோக்கத்தோடு போடப்பட்டது என்பது பிரிந்து வந்த உங்களுக்குப் பொருந்துமென்றால் அது கருணாநிதிக்கும் தானே பொருந்தும்?

வி.தோழர்:- தி.மு.க.விலிருந்து பிரிந்து எம்முடன் வந்துள்ள சிலர் மீது வங்கித் தலைவர்கள் என்ற முறையில் வழக்குகள் வேறு இருக்கின்றன. ஆனால் ஒன்று. எந்த வழக்கானாலும் - நாங்கள் தி.மு.க.வில் இருந்தபோதும் சரி, இப்போதும் சரி - அவைகள் இந்திரா அரசில், அரசியல் வஞ்சம் தீர்க்கும் குறிக்கோளுடன் தொடரப்பட்டவை என்பதுதான் எங்கள் கருத்து!

சந்தானம்:- ஆமாம். அது எனக்குத் தெரியாமலா இருக்கிறது? ஒரிசா முதல்வராக இருந்த நந்தினியின் மீது கூட விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்கள். அதற்குள் இந்திரா அரசு நல்லவேளையாகக் கவிழ்ந்து விட்டது. அவ்வளவு ஏன்? இப்போது ஜனதா மந்திரி சபையில் அமைச்சராக இருக்கிற முன்னாள் பஞ்சாப் முதல்வர் பாதல் மீது விசாரணைக் கமிஷன் போடப்பட்டு, அதன் அறிக்கை மீது கிரிமினல் வழக்கே தொடரப்பட்டுள்ளது இந்திரா அரசில்! அவைகள் அனைத்தும் அரசியல் நோக்கம் கொண்டவைகளேதான்!

வி.தோழர்:- அதுபோலத்தான் இங்கே தி.மு.க. மீது தொடரப்பட்ட வழக்குகளும் அரசியல் நோக்கம் வாய்ந்தவை என்பது எங்கள் கருத்து.

சந்தானம்:- அடடே, என்ன இது? நீங்கள் பிரிந்து வந்த பிறகும் பழைய வாசனை போகவில்லையே!

வி.தோழர்:- அப்படியில்லை! லஞ்சம், அதிகார துஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுகளை முதல்வர் மீதும் மற்ற முன்னாள் அமைச்சர்கள் மீதும் கூறி விட்டால் மட்டும் போதுமா? சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு கொடுத்தால் தானே உண்மை வெளியாகும்.

சந்தானம்:- ஏதேது? நீங்கள் சுயமரியாதை உடையவர்கள், வெளியேறி விட்டீர்கள் என்று நான் எழுதியிருக்கிறேன். உங்கள் பதில்களைப் பார்த்தால் சுயமரியாதைக் கட்சி வாடையல்லவா இன்னமும் அடித்துக் கொண்டிருக்கிறது!

வி.தோழர்:- ஹிஹிஹி! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நான் வருகிறேன். நாளைக்குச் சந்திப்போம்.

உடன்பிறப்பே, விலகியவர் உள்ளத்தில் முழுமையாக விஷத்தைத் தூவ முடியவில்லையே என்ற விசாரத்துடன்தான் சந்தானம் அவர்கள், அன்றைக்குக் கடற்கரையிலிருந்து வீடு திரும்பியிருப்பார்.

உரையாடல் நடந்ததோ இல்லையோ - அந்த உள்ளங்களின் ஒலிகள் இப்படித்தான் இருக்கக்கூடும்.

எனவே, நாம் நமது பொது எதிரியைப் புரிந்து கொண்டால் போதும் - நம்மிடமிருந்து பிரிந்து சென்றோருக்குப் பதில் அளிப்பதையே முக்கியப் பணியாகக் கொள்ளாமல், தமிழ்ச் சமுதாயத்திற்கு நாம் ஆற்றிட வேண்டிய தொண்டினை மனத்திற் கொண்டு வீறு நடை போடுவோமாக!

அன்புள்ள,

மு. க.

30-04-1977

412. போர்வாளே - புறப்பட்டு வா!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் உனக்கு எழுதப்படும் வரையில் சட்டப் பேரவைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் நாள் குறித்துத் தேர்தல் ஆணையாளர்களிடமிருந்து எந்தவித அறிவிப்பும் வரவில்லை.

நாடாளுமன்றத்தின் தேர்தலுக்குக் கிடைத்த நேரம்கூட, இந்தத் தேர்தலில் வேட்பாளர்களை நாம் தேர்ந்தெடுத்து வேட்பு மனுக்களை அளிக்கச் செய்வதற்கோ, தேர்தல் அறிக்கையினைத் தயாரிப்பதற்கோ கிடைக்காது என நான் கருதுகிறேன்.

எது எப்படியாயினும் நாம் நமது ஜனநாயகக் கடமையினை நிறைவேற்றித்தான் ஆகவேண்டும்.

தேர்தல் நிதியாக 8, 9, 10 ஆகிய நாட்களில் வீடு வீடாக உண்டியல் ஏந்திச் சென்று அண்ணா உரைத்திட்ட கடமை, கண்ணியம், கட்டுப்பாடு குலையாமல் பணியாற்றி நிதி குவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மே 15-ஆம் நாள் மதுரை மாநகரில் கழகத்தின் பொதுக்குழு கூடி, பொதுச் செயலாளர், பொருளாளர் பொறுப்புகளுக்கான தேர்தல்களை நடத்த இருக்கிறது. அந்தப் பொதுக் குழுவில் வரலாற்றுச் சிறப்புமிக்க சில முடிவுகளையும் நாம் எடுக்க வேண்டியுள்ளது.

அந்த முடிவுகள் குறித்து அதேநாள் மாலையில் மதுரையில் நடைபெற இருக்கிற கழகச் சிறப்பு மாநாட்டில் விளக்கங்கள் வழங்கப்படும்.

கழகச் சட்டதிட்ட முறைப்படி, மாநாட்டுக்கு நான் தலைமை வகிக்கிறேன்.

கழகத்தை வீறுநடை போடச் செய்யும் வகையில் பொறுப்பினை ஏற்க இருக்கிற புதிய பொதுச் செயலாளர் மாநாட்டைத் திறந்துவைத்து எழுச்சிமிகு சொல்லோவியம் தீட்ட இருக்கிறார்.

அடலேறாம் நமது ஆசைத்தம்பி அவர்கள் தன்மான உணர்வினைத் தமிழனுக்கு ஊட்டிய தந்தை பெரியார் படத்தைத் திறந்து வைக்கிறார்.

அரசியலில் பண்பாடு - பற்று - பாசம் - இவற்றினை இணைத்துத் தமிழ்ச் சமுதாயத்தின் விடிவெள்ளியெனக் காலமெல்லாம் திகழும் நமது அண்ணனின் படத்தை, திராவிடர் இயக்கத்திற்கு ஒரு விளக்கென விளங்கும் அன்னை மணியம்மையார் திறந்து வைக்கிறார்கள்.

சிங்க இளைஞனே! திருப்பு முகம்! திற விழிகளை! எனத் தமிழனைத் தட்டியெழுப்பிய புரட்சிக் கவிஞரின் படத்தை - அழகு தமிழால் - அணிவகுக்கும் சொற்கோவையால் தமிழ்க்குலம் கவர்ந்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. அவர்கள் திறந்து வைக்கிறார்கள். கழகப் பொருளாளர் சாதிக் வரவேற்புரையாற்றுகிறார்.

மதுரை, ராமனாதபுரத்து மாவீரர்கள் மாநாட்டைச் சிறப்பிக்கும் செயல் மாமணிகளாகப் பம்பரமெனச் சுழன்று தொண்டாற்றுகிறார்கள்.

அநீதி வழங்கிய மன்னவனை எதிர்த்து வழக்குரைத்த கண்ணகியின் புகழ் பாடும் மதுரை -

நெற்றிக் கண்ணை திறந்தாலும் குற்றம் குற்றமே என்றுரைத்த நக்கீரனின் வரலாறு கூறும் மதுரை -

தமிழரின் அழியாச் செல்வங்களை உருவாக்கிய சங்கங்களை வளர்த்த பாண்டிமா மதுரை -

அந்த மதுரை நோக்கிப் புறப்பட இன்றே பயணத்தைத் தயார் செய்திடுக!

மருது சகோதரர்கள் பிறந்த மண்ணிலேயிருந்து வந்து குவியட்டும் கழகத்தின் படை வரிசை!

சூழ்ச்சியும் சூதும் அறியாத சிவகெங்கைச் சீமையின் சிங்கங்களே! வாரீர்! வாரீர்!!

வெள்ளையனை எதிர்த்து வீரப்போர் புரிந்த கட்ட பொம்மன் உலவிய நெல்லைச் சீமையின் போர்வாட்களே! புறப்பட்டு வருக, மதுரை மாநாடு காண!

தலை கொடுப்பேன் தமிழுக்கு என்ற குமண வள்ளலைத் தந்த கொங்குப் பகுதித் தங்கங்களே! வருக!!

சோழ வள நாட்டுச் சுடர்களாம் - சுயமரியாதைக் கனல்களே வருக!

பாண்டித் திருநாட்டின் பயமறியா வரிப்புலிகளே! வருக!

வந்த எதிரியை வாதாபி வரையில் விரட்டிச் சென்று வெற்றி கண்ட பல்லவ நாட்டுப் பெருவீரர்களே! வீராங்கனைகளே! வருக! வருக!

கடையேழு வள்ளல்களைக் கண்ட கவின் மிகு தமிழகத்துப் பெருமக்காள்! புத்துணர்வுக் காளையரே! புறநானூற்றுத் தாய்க்குலமே! பாட்டாளிக் கூட்டமே! மாணவர் அணியே! புலவர் வரிசையே!

அழைக்கிறது மதுரை மாநாடு!

அறிவிக்க இருக்கிறது அரிய பல திட்டங்களை!

வருக! வருக! வருக!

அன்புள்ள,

மு. க.

08-05-1977

413. பயணத்தில் - பல கட்டங்கள்!

உடன்பிறப்பே,

ஓய்வு கொள்ள நேரமின்றி உனக்கு வேலைகள் வந்து கொண்டேயிருக்கின்றன. நானும் ஓய்வின்றிக் கடமையாற்று வதால்தான் உரிமையோடு உனக்குப் பணிகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறேன். கடந்த நான்கு நாட்களாக நானும், பேராசிரியர் அவர்களும், ஆட்சிமன்றக் குழுவினரும் துணை ஆய்வுக் குழுக்களுடன் மாவட்டக் கழகச் செயலாளர்களுடனும் கலந்துரையாடி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கழக வேட்பாளர்களை நிறுத்துவது பற்றிய பணியினை மேற்கொண்டுள்ளோம். நாங்கள் அல்லும் பகலும் அயராது உழைத்தால் தானே உன்னையும் அவ்வாறு உழைக்கச் சொல்லும் தகுதியைப் பெற்றவர்களாவோம்!

இன்னும் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி முற்றுப்பெறவில்லை. மே 11, 12, 13 ஆகிய நாட்களிலும் தொடர்கிறது. இடையே ஒரு நாள்; அதற்கு மறுநாள் மதுரையிலே பொதுக்குழுவும் தேர்தல் சிறப்பு மாநாடும்!

இந்தப் பணிகளின் குவியலுக்கு நடுவே, தேர்தல் நிதி உண்டியல் ஏந்தும் செயலுக்கும் நீ, நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

போதுமான அளவுக்கு எல்லாத் தொகுதிகளிலும் கொள்கை விளக்கங்களை அளிக்கின்ற வாய்ப்பு கூட கிட்டாத நிலையில் மிகக் குறுகிய காலமே கிடைத்திருக்கிறது.

காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது - என்பதை மறவாமல் அருந்தொண்டாற்றக் கூடிய ஆற்றல்மிகு உடன்பிறப்பு என்பதால்தான் உன்னை நம்பி இந்தக் கழகம், கடும் எதிர்ப்புகள் எனும் காடுமேடுகளைக் கடந்து இலட்சியப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

பூவார் சோலையில் உலவிடும் வண்ணம் இந்தக் கழகம் இயங்குமென எண்ணி, அண்ணன் இதனை உருவாக்கவில்லை.

புயலையும், கொந்தளிப்பையும் சமாளித்துக் கடற் பயணம் நடத்தக் கூடிய வலிமை மிகு கலமாகத்தான் அவர், இந்தக் கட்சியை உருவாக்கித் தந்துள்ளார்.

கழகம் தோன்றிய இந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் எத்தனை சோதனைகளைத் தாங்கியிருக்கிறோம்.

காஞ்சிபுரம் பொதுக்குழுவிலே நண்பர் சம்பத் அவர்கள் நாவலர்மீது கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் காரணமாக ஏற்பட்ட அமளியைத் தொடர்ந்து கழகம் அழிந்துவிடக் கூடிய சூழல் ஏற்படுமோ என அஞ்சியதுண்டு. மாறாகக் கழகம் பீடுநடை போட்டது.

சேலத்தில் நடைபெற்ற பொதுக்குழுவில், எதிர்பாராமல் வடிவெடுத்த சீற்றக் கணைகளின் பாய்ச்சலால் கழகம், கவிழ்ந்தே போய்விடும் என்ற கவலை தோன்றத்தான் செய்தது. அள்ளிவீசப்பட்ட துரோகச் சுடு சரங்களுக்கு மத்தியில் அமைதியின் உருவமாக அண்ணா எழுந்து நின்று கழகப் பயணம் தடைபடாதிருக்க வழிவகுத்தார்.

வேலூர் பொதுக்குழு! அப்பப்பா! அந்த வேதனையை இப்போது நினைத்தாலும் நெஞ்சில் வேல்களன்றோ பாய்கின்றன. கழகம் ஏற்றுக்கொள்ளாத முறைகளைக் கையாண்டு, கழகத்தின் கட்டுக்கோப்பைக் குலைக்கும் முறைகளைக் கையாண்டு, கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி - அந்தத் திரை மறைவுத் துரோகத்திற்கு எதிராக ஆர்த்தெழுந்த கழகக் கண்மணிகளின் சினத்தின் முன்னே நிற்க முடியாமல், ஜனநாயக முறைப்படி பொதுக்குழுவில் கலந்து கொண்டு, தாங்கள் வலியுறுத்தும் கருத்துகளையும் எடுத்துச் சொல்லுகிற மனப்பக்குவமின்றி - செயற்குழுவில் கலகம் விளைவித்துவிட்டு, பொதுக்குழுவுக்கே வர முடியாது எனப் புறக்கணித்து விட்டு, அண்ணா ஒரு சர்வாதிகாரி என்ற அர்ச்சனையையும் நடத்திவிட்டு சம்பத் குழுவினர் பிரிந்தபோதும், பிரிந்தோர் நடத்திய கீழ்த்தரமான தாக்குதல்களை அன்றைய ஏடுகள் முக்கியத்துவம் அளித்து வெளியிட்டுக் களித்த போதும் - இனி இந்தக் கழகம் கவிழ்ந்தே தீரும் என்றுதான் மாற்று முகாம்களில் ஆரூடங்கள் கணிக்கப்பட்டன. எனினும்

கழகம், கொள்கைக் குன்றென நிமிர்ந்தே நின்றது. அறப் போர்க்களங்களுக்குச் சென்றது! வென்றது.

அண்ணன் மறைவு எனும் பெரும் சோதனைக்குப் பிறகும் - எத்தனையோ இன்னல்கள்! இடையூறுகள்!

எங்கிருந்தாலும் கத்திகளும் கட்டாரிகளும் பாய்கின்றன. அல்லது பாயும் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு, நேற்றுவரை நேசம் காட்டியவர்கள் மோசம் செய்திருக்கிறார்கள். காலையிலே களிநகை காட்டிப் பிரிந்து சென்றவர்கள், மாலைக்குள்ளாக நமது காலையே வாரி விடுபவர்களாக மாறியிருக்கிறார்கள். நட்பெனும் கிண்ணத்திலே நஞ்சு கலந்த பாலை ஊற்றி நம்மை பருகச் செய்திட முயன்றிடுவர் என நான் எண்ணியும் பார்க்காதவர்கள் எல்லாம் பகைவர் தொடுக்க அஞ்சும் பாணங்களையெல்லாம் நம் மீது தொடுத்திடத் தயங்கவில்லை. அனைத்தையும் அண்ணன் கூறிய, எதையும் தாங்கும் இதயத்துடன்தான், புன்னகையுடன் பொறுத்துக் கொள்ளக் கற்றுக் கொண்டேன்.

இதோ, ஆட்சி கவிழப் போகிறது - கழகம் கலனாகப் போகிறது என்று வேளைதோறும் கூவி வந்தார்கள் எனினும், அண்ணன் ஆண்ட இரண்டு ஆண்டுகளையும் சேர்த்து மொத்தம் ஒன்பதாண்டுக் கால ஆட்சியைக் கழகம் நாடு போற்றும் வண்ணம் நடத்திக் காட்டிவிட்டுத்தான், இந்திராவின் நெருக்கடி அறிவிப்பை எதிர்த்ததற்குப் பரிசாக - இன்னும் ஐம்பது நாட்கள் இருக்கும் போதே கலைக்கப்பட்டதையும் அமைதியோடு ஏற்றுக்கொண்டு ஆட்சி மாற்றத்துக்கு வழிவிட்டது என்பதை உலகறியும்.

இன்னும் சோதனைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

நாவினால் சுடும் போக்கினர் நம்மைக் குறி வைத்துத் தாக்கிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

நாம், நமது பணிகளைத் தொடர்வோம். நான் முன்பே குறிப்பிட்டிருப்பது போல புலி வேட்டைக்குப் புறப்பட்டதையே மறந்துவிட்டு இடையில் முயல் ஓட்டத்தில் கவனத்தைச் செலுத்திட வேண்டாம். தேவையு மில்லை.

நமது குறிக்கோள் மகத்தானது! தேர்தல்கள் இடையில் வரும் - போகும்! தேர்தல்கள் மட்டுமே நமது குறிக்கோள் என்று ஆரம்பிக்கப்பட்டதல்ல இந்தக் கழகம்.

தேர்தலில் கிடைக்கும் வெற்றி, அது கிடைத்த மட்டும் மக்களுக்கு பணியாற்றக் கூடிய ஒரு வாய்ப்பு!

அந்த வாய்ப்பு உருவாகவும் நாம் பணியாற்றுவோம்!

ஆனால், அதுவே நமது உயிர் மூச்சு என்று உருகி நிற்க மாட்டோம்!

இத்துடன் இன்றைய கடிதத்தை முடிக்கிறேன். எஞ்சியதைப் பேச, நீ உன் கொஞ்சும் கிள்ளையுடனும் குழலோசைப் பிள்ளையுடனும் மதுரைக்கு வரத்தானே போகிறாய்! அப்போது உன்னைச் சந்திக்காமலா இருக்கப் போகிறேன்! நமது பயணத்தில் பல கட்டங்கள் குறித்து அப்போது பேசலாம், வா!

அன்புள்ள,

மு. க.

10-05-1977

414. ஆதித்தன் கனவு - படமல்ல, பாடம்!

உடன்பிறப்பே,

"ஆதித்தன் கனவு படமல்ல பாடம்!" என்ற தலைப்பில் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கட்டுரை தீட்டியிருந்தார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் வெளியீடான ஒரு திரைப்படத்தின் பெயர் ஆதித்தன் கனவு! ஆனால், அண்ணா அப்போது எழுதியது அந்தப் படத்திற்கான விமர்சனமல்ல. குடந்தையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அறப் போராட்ட வீரர்கள் மீது அத்துமீறிய அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்ட ஒரு போலீஸ் அதிகாரியைப் பற்றியது அந்தக் கண்டனக் கட்டுரை. அந்த அதிகாரியின் பெயர் ஆதித்தன் என்பதாகும்.

குடந்தை நகர வீதிகளில் குருதி பெருக்கெடுக்கிற நிலை அன்றைக்கு ஏற்பட்டது. நாகலூர் சீனிவாசன் போன்ற திராவிடர் கழக நண்பர்கள் அந்தப் போராட்டத்தில் செந்நீர் சிந்தினர்.

கடந்த சில நாட்களாக 'தினத்தந்தி' ஏட்டில் வெளியிடப் படும் தி.மு.க. எதிர்ப்புச் செய்திகளையும், தி.மு.க. பற்றி திரித்து வெளியிடப்படும் தகவல்களையும் காணும் போது, எனக்கு அண்ணா எழுதிய "ஆதித்தன் கனவு" என்ற அந்தக் கட்டுரைதான் நினைவுக்கு வந்தது.

புதிய கட்சியொன்றை உருவாக்கவும், தி.மு.கழகத்தைச் சிதைக்கவும், பிளவினை ஏற்படுத்தவும் இவை போன்ற "குடும்பக்கலைப்பு" வேலையில் திரு. ஆதித்தன் அவர்கள் ஈடுபட்டிருப்பதும் - அதற்கான ரகசியக் கூட்டங்கள் ஏப்ரல் முதல் வாரத்திலேயே அவர் வீட்டில் நடைபெறத் தொடங்கின என்பதும் - எந்தெந்த முறையில் யார் யாரை அவர் அணுகினார் என்பதும் - அவர் பின்னணியிலிருந்து தொடங்கியுள்ள கட்சிப் பத்திரிகையாக "தினத்தந்தி" நடைபெறுகிறது என்பது யாருக்கும் தெரியாத செய்திகள் அல்ல!

தினத்தந்தியை, அவரது கட்சிப் பிரச்சாரத்திற்காக முழுக்க முழுக்கப் பயன்படுத்தட்டும். நாம் வேண்டாமென்று சொல்லவில்லை. சொல்லவும் நமக்கு உரிமை கிடையாது.

ஆனால் அதற்காக நமது கழகத்தைப் பற்றித் தவறாகக் கருதுமாறு பொதுமக்களை, வேண்டுமென்றே பொய் சொல்லித் திசை திருப்புவதை அவர் தனது ராஜதந்திரமாகக் கருதுவாரேயானால், பழைய 'நாம் தமிழர்' கட்சித் தலைவருக்கு நான் மிகப் பணிவுடன் சொல்லிக் கொள்வேன், அதற்கான விளக்கங்களை அளிக்க வேண்டியது எனது நீங்காக் கடமைகளில் ஒன்றாகும்.

எனதருமை நாவலர் அவர்கள் ஆரம்பித்துள்ள கட்சியில் நான் உளமார நேசித்த - நான் கள்ளங்கபடமின்றி நம்பிய சிலபேர் எங்களை விட்டுப் பிரிந்து போய்ச் சேர்ந்துள்ளார்கள். அதனை நான் மறுக்கவில்லை. அவர்கள் பிரிந்தமைக்காக இன்னமும் நான் வருந்திக் கொண்டுதான் இருக்கிறேன்.

ஆனால் தினத்தந்தியில் வருகிற செய்திகள் எவ்வாறு திரிக்கப்படுகின்றன!

அண்ணா காலத்தில் அதாவது பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.கழகத்திலிருந்து வெளியேறி புதுக் கட்சி தொடங்கிப் பிறகு காங்கிரசில் இருந்த ஒரு முன்னாள் துணைமேயர் இப்போது நாவலர் அவர்கள் தொடங்கியுள்ள கட்சியில் சேர்ந்தார் என்பதை என்னவோ நேற்றைக்குத்தான் தி.மு.கவிலிருந்து விலகினார் என்பதைப் போலச் செய்தி வெளியிடுகிறது தினத்தந்தி!

காதர்பாட்சா என்ற நண்பர், இந்தத் தேர்தலில் நிற்க விரும்பி துணை ஆய்வுக் குழுவிடம் வேட்புமனுவும் கொடுத்தார். "இடம் கிடைக்காது" என்பதைத் தெரிந்து கொண்டு "நான் தி.மு.க. இல்லை" என்று அறிக்கைவிட்டு விட்டார். நாலு நாளைக்கு முன்பு வேட்பு மனு தாக்கல் செய்கிற வரையில் மனதுக்குப் பிடித்த தி.மு.க. தலைமை, திடீரென அவருக்குக் கசந்து போய்விட்டது என்று அறிக்கை வருகிறது.

தி.மு.க.வில் இருந்த ஒரு பெண் பேச்சாளர், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரசில் இணைந்து தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்து கொண்டார். இப்போது

அவர் அங்கிருந்து விலகி, நாவலர் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால் தினத்தந்தியிலேயே செய்தி எப்படி வருகிறது தெரியுமா? "தி.மு.க. பெண் பேச்சாளர் தி.மு.க.விலிருந்து விலகிவிட்டார்" இப்படி வருகிறது செய்தி!

ஆதித்தனார் முயற்சியில் தொடங்கியுள்ள கட்சியில் யாரும் சேருவது பற்றியோ, அவர்கள் பெயர்களை அவரது தினத்தந்தி ஏட்டில் வெளியிடுவது பற்றியோ மறுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

உண்மைகளை வெளியிடுக! தேவையில்லாமல், தி.மு.க. பெயரை திரித்துச் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்த்திடுக! என்பதற்காகவே ஆதித்தனாருக்கு இதனை வலியுறுத்திக் கூறுகிறேன்!

இன்று ஒரு தலைப்புச் செய்தி!

"ஜனதா கட்சியுடன் பேச மாட்டோம்

கருணாநிதி அறிவிப்பு!"

இப்படி 'தினத்தந்தி' கொட்டை எழுத்துச் செய்தி வெளியிடுகிறது. உள்ளே உள்ள செய்தியில் நான் அப்படிக் கூறியிருக்கிறேனா என்று பார்த்தால் - இல்லவே இல்லை! பிறகு ஏன் இந்த விஷமத்தனமான தலைப்பு? ஜனதா கட்சியின் தொண்டர்களுக்கு எங்கள் மீது வெறுப்பு வர வேண்டுமாம்! அதற்காக இப்படி ஒரு மலிவான தந்திரத்தைக் கையாளுகிறார்!

தந்தியின் தலைப்புச் செய்திகளாயினும், எந்தச் செய்தியை எங்கே போடுவது! எப்படிப் போடுவது என்பதாயினும் - ஆதித்தனார் ஆறாயிரம் மைல் தொலைவில் இருந்தாலும், அவர் தருகிற குறிப்புகளின் படித்தான் தந்தியில் பிரசுரிக்கப்படும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

நண்பர் எம்.ஜி.ஆருக்கு 'பாரத்' பட்டம் கொடுத்தபோது, அதைக் கொடுத்த குழுவின் தலைவர் ஒரு "மேனன்" என்று பெரிய அளவில் செய்தி வெளியிட்டு அது கண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் தி.மு.க. நடத்திய பாராட்டு விருந்திலேயே ஆதித்தனாரை நேருக்கு நேர் வெளிப்படையாகக் கண்டித்து, சமாதானம் செய்து வைக்க நான் பட்டபாடு கொஞ்சமல்ல!

பிரதமர் மொரார்ஜியும், ஜனதா கட்சிச் செயலாளர் நானாஜிதேஷ்முக்கும், தி.மு.க.வுடன் ஜனதாவுக்கு உறவு இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்த பிறகு தான், நான் நிருபர்களிடம் சொன்னேன், "மூடப்பட்ட கதவுகளைத் தட்டுவதாக இல்லை" என்பதாக!

எல்லா ஏடுகளும் இந்தக் கருத்தை ஒழுங்காக வெளியிட்டிருக்கின்றன. நாங்கள் உறவை எதிர்பார்த்தோம். அவர்கள்தான் முறித்துக் கொண்டார்கள் என்றும் விளக்கியிருக்கிறேன்.

இவை அனைத்தையும் விட்டுவிட்டு, "ஜனதாவுடன் பேசத் தயாராக இல்லை" என்று நானே முன்கூட்டி அறிவித்ததைப் போல, தினத்தந்தி செய்தியிலே விளையாடியிருப்பது கண்டிக்கத்தக்க ஒன்றாகும்.

"உறவை முறித்துக் கொண்டால் அதற்குத் தி.மு.க. பொறுப்பல்ல! ஜனதாதான்" என்று நான் பல முறையும் கூறியிருக்கிறேன்.

எங்கே உறவு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் ஆதித்தனார் "செய்திச் சடுகுடு" நடத்திப் பார்க்கிறார்.

இதுபோன்ற மாற்றுத் தலைப்புகளாலோ, மாவட்டந்தோறும் நாலைந்து கார்களை அனுப்பி ஆள்பிடிக்கும் செயலாலோ, கழகத்தை அழித்துவிடலாம் என்று அவர் கருதுவாரேயானால், அது "ஆதித்தன் கனவா"கத்தான் முடியும். 1969 பொதுச் செயலாளர் தேர்தலின் போது நாவலரைக் கழகத்தைவிட்டே வெளியேற்றிட வேண்டுமென்று திட்டமிட்டுச் சூழ்ச்சிகளை வகுத்தவர்களில் ஆதித்தனாரும் ஒருவர்! அதற்குத் தடையாக நின்று நானும், நாவலரும் அப்போது ஒன்றுபட்டோம். இப்போது நமது நாவலரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டார். அதனால் நமது கழகத்தை அழித்து விடலாம் என்று ஆதித்தன் கருதுவது வீண் கனவே யாகும்.

அன்புள்ள,

மு. க.

11-05-1977

415. அண்ணா சொன்ன அர்ச்சுனன் கதை!

உடன்பிறப்பே,

ஒருமுறை கடற்கரைக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் பாரதக் கதையிலேயிருந்து மேற்கோள் ஒன்றினைக் காட்டினார்; உனக்கு நினைவிருக்குமென்று நம்புகிறேன்.

துரோணரிடம் போர்ப் பயிற்சி பெற்ற பாண்டவர்கள், கௌரவர்கள் எனும் இருதரப்பு மாணவர்களையும் அழைத்து, அவர் - மரக்கிளையொன்றைக் காட்டி அதில் அமர்ந்திருந்த பறவைக்குக் குறிவைத்து அம்பு எய்திடுமாறு பணித்தாராம். அந்த ஆணை கேட்டு மாணவர்கள் அம்பு விடுக்கத் தயாரான போது துரோணர் ஒவ்வொரு மாணவனாகப் பார்த்து, மரத்தில் என்ன தெரிகிறது, உன் கண்ணுக்கு? என்று கேட்டாராம். ஒவ்வொரு மாணவனும் சொன்ன பதில் என்ன தெரியுமா?

மரக்கிளை தெரிகிறது சுவாமி!

இலைகள் தெரிகின்றன அய்யனே!

தழைக் கொத்துகளுக்கிடையே ஒரு

பறவை அமர்ந்திருக்கிறது பெருமானே!

விடைகள், துரோணருக்குப் பிடிக்கவில்லை. அர்ச்சுனனைப் பார்த்துக் கேட்டார், அர்ச்சுனா உனக்கு என்ன தெரிகிறது? என்று! அர்ச்சுனன் சொன்ன பதில் என்ன?

என் கையில் உள்ள அம்பின் முனையும், அதோ அந்தப் பறவையின் கழுத்து மட்டுமே தெரிகின்றன. வேறெதுவும் தெரியவில்லை - குருநாதா!

காண்டீபனின் அந்தப் பதிலைக் கேட்டு, துரோணர் மகிழ்ச்சியுற்றார்.

எனவே நமக்கு, நமது இலக்குதான் முக்கியமே தவிர, தேவையற்ற பிரச்சினைகளில் கவனத்தைச் செலுத்தக் கூடாது!

என்பதை வலியுறுத்துவதற்காக அண்ணா அவர்கள் **அந்தக் கதையை அழகுபட எடுத்துச் சொன்னார்கள்.**

உடன்பிறப்பே,

நமது இலக்கு என்ன?

அண்ணா வழி நின்று அயராது உழைப்பது! ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவது. மக்களை, மூட நம்பிக்கைகளில் இருந்து விடுபடச் செய்திடப் பகுத்தறிவுப் பணி ஆற்றுவது. அந்தந்த மாநிலங்களின் தாய்மொழிகளை வளர்த்திடவும், பிறமொழி ஆதிக்கத்தை அகற்றிடவும் தொண்டாற்றுவது. மத்தியிலே கூட்டாட்சியும், மாநிலங்களிலே சுயாட்சியும் முழு அளவுக்கு அமைந்திடப் பாடுபடுவது. திராவிடக் கலாச்சாரத்தைப் பாதுகாப்பது. தமிழ்ச் சமுதாயத்தின் எழுச்சிக்கும், ஏற்றத்திற்கும் நம்மை ஒப்படைத்துக் கொள்வது. சமத்துவம், சமதர்மம் எல்லாத் துறைகளிலும் நிலை பெற்றிடப் போராடுவது.

இவ்வாறு நமது கழகத்திற்கென வகுத்துக் கொண்ட கொள்கை, குறிக்கோள், நோக்கங்களை மறந்துவிடவோ, அல்லது திசை திருப்புவோர் பக்கம் கவனத்தைச் செலுத்தி - நமது திராவிட இயக்கம் தோன்றிய காரணத்தை ஒதுக்கி விடவோ கூடாது என்பதை உனக்குச் சொல்லிவைக்க வேண்டிய நேரம் இது! அதனால் சொல்லி வைக்கிறேன்.

மாநில சுயாட்சி தருவதற்குத் தயக்கம் காட்டுவார்களேயானால், அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கிப் பாதுகாப்பு போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய்விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம்.

என்று 1968-ல் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அழுத்தம் திருத்தமாக மாநில சுயாட்சி மாநாட்டில் எடுத்துரைக்கிறார்.

திராவிட நாடு பிரிவினையை அறவே கைவிட்ட பிறகு, இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி என்ற இதழாசிரியருக்கு அளித்த பேட்டியில் 1965-ல் அண்ணா அவர்கள்,

கூட்டாட்சி முறை, மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சி உரிமை, சமதர்மக் குறிக்கோள் இவைகள் கழகத்தின் கோட்பாடுகள்

என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மொழிவழி தேசிய இனத்தின் வழிவந்த மாநிலங்கள், உண்மையான முழுப் பொருளும் பொதிந்த மாநில சுயாட்சி கொண்டனவாக இருக்க வேண்டும் என்பதையும் அந்த மாநிலங்கள் எல்லாம், தாமே விரும்பி ஏற்படுத்தும் முறையில், மத்தியக் கூட்டாட்சி அமையவேண்டும் என்பதையும் திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வருகிறது. மாநிலத்திலே சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி என்பதுதான் தி.மு.கழகத்தின் முழு முதல் முழக்கமாக இருந்து வருகிறது.

மாறன் எழுதிய மாநில சுயாட்சி என்ற நூலுக்கு, நாவலர் அவர்கள் எழுதிய அணிந்துரைதான் இது! கேவலம்! மாறன் எழுதிய நூல் என்றால், அது தி.மு.க. நூல் ஆகிவிடுமா? இப்படி ஒரு கேள்வி எழக்கூடும். அண்ணாவின் மாநில சுயாட்சி முழக்கம் என்று தி.மு.க. தலைமைக் கழகமே வெளியிட்ட சிறிய நூல் ஒன்றிலும் நாவலரின் இந்தக் கருத்துகள் ஒளிவிடுகின்றன.

அதுமட்டுமல்ல, சட்டப் பேரவையிலே மாநில சுயாட்சி தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய போதும் இத்தகைய கருத்தை நாவலர் அவர்கள் பேரவையிலேயே முழங்கியும் இருக்கிறார்.

உடன்பிறப்பே, இப்போது நாவலர் அவர்கள், மாநில சுயாட்சி அல்லது மாநிலத் தன்னாட்சி என்ற சொற்கள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன என்று கூறிவிட்டார் எனினும் - நாம் நமது சட்டதிட்டத்திலும், 1971-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலும் ஏற்றுக்கொண்டு சட்டப் பேரவையிலும் தீர்மானமாக நிறைவேற்றியுள்ள அந்தக் கொள்கையிலிருந்து பின்வாங்கப் போவதில்லை.

ஆனால் ஒன்று, இப்போது அரசியலில் கொள்கை வாதங்களா நடைபெறுகின்றன? அவை பற்றிக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள? என்று நீ கேட்கக் கூடும். அதற்காக, நீ குறிக்கோளை - இலக்கினை மறந்துவிடாதே!

நம்மைப் பற்றிப் பொதுமக்களைக் குழப்புகிற அளவுக்கு ஏதாவது சொல்லப்பட்டால், அப்போது நாம் விளக்கம் சொல்லிக் கொள்ளலாம்! அதற்கு நம்மிடம் இல்லாத விளக்கங்களா? தகவல்களா? பல்லாயிரம் பாலுசாமிகள் கிடைப்பார்கள், பயப்படாதே! என்ன பாலுசாமி என்று என்னைக் கேட்காதே! அது தெரிந்தவர்களுக்குத் தெரிந்தால் போதும்.

தூய்மையற்றவர்கள்

நாணயமற்றவர்கள்

நேர்மையற்றவர்கள்

சர்வாதிகாரிகள்

ஆபாசக் களஞ்சியங்கள்

கெட்டுப் போனவர்களைப் பத்தினியாக மதிப்பவர்கள்.

ஒரு வார காலத்திற்குள்ளாக இவ்வளவு அர்ச்சனையும் எனக்கும், கழகத்திற்கும் நடந்தேறிவிட்டது! தொடர்ந்து நடக்கட்டும்! இப்படிப் பேசுகிறவர்கள் யார்? அவர்கள் பெயர் என்ன? இவற்றையெல்லாம் பொதுமக்கள் மறந்துவிடவில்லை. அவர்கள் ஒருவேளை மறந்திருந்தால் சமயம் வரும்போது நினைவூட்டலாம்.

எனவே, இப்போது நமக்கு அந்த வேலை தேவையில்லை; நமது இலக்கு முக்கியம்!

அந்த இலக்கினை அடையும் வழிகளைப் பற்றித் தொடர்ந்து கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளத்தான் மதுரைப் பொதுக் குழுவும் மாநாடும் அழைக்கின்றன.

வா! வா! உன் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

13-05-1977

416. இளவதனன் மீது ஆணை!

உடன்பிறப்பே,

இடையிலே சில நாட்கள் உருண்டோடி விட்டன - என் அலுவல்களை நீ அறிந்திருக்கிறாய். எனவே, மன்னித்திடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. தேர்தல் களத்திலே நிற்கின்ற எனக்குக் கடிதம் எழுதிட நேரம் கிடைப்பதில்லை. எழுதினாலும் அதைப் படித்திட உனக்கும் ஓய்வு கிடைத்திட வழியில்லை. அதனால் தேர்தல் வரையில் நாள்தோறும் என் கடிதங்களை எதிர்பார்த்து, கடிதம் வரவில்லையே என்று என்னைக் கடிந்து கொள்ளாதே. தேர்தல் கூட்டங்களில் நானும், நமது பொதுச் செயலாளர் அவர்களும், கழகத்தின் முன்னணியினரும் எடுத்துரைக்கிற கருத்துகளை நமது ஏடுகளில் கண்டு அதன்படிச் செயல்படுவாய் என்ற நினைவோடு நான் பணிகளைத் தொடர்கிறேன்.

'அண்ணா நகர்' தொகுதியில் நானும் ஒரு வேட்பாளனாயிற்றே! காலையும் மாலையும் சென்னையில் இருக்கிற நாட்களில் மட்டும் வாக்காளர்களைச் சந்திக்க வீடு வீடாகச் செல்கிறேன். இரவு மூன்று அல்லது நான்கு கூட்டங்களில் கலந்து கொள்கிறேன். அதற்கிடையே உன்னைப் போன்ற உடன் பிறப்புகள் வேட்பாளர்களாக நிற்கும் தொகுதிகளுக்கும் செல்ல வேண்டிய நீங்காக் கடமையும் எனக்கு இருக்கிறதே! எல்லா தொகுதிகளுக்கும் செல்வது என்பது எளிதான காரியமல்லவே.

அதனால்தான் சில பகுதிகளுக்கு நான் செல்வதென்றும், சில பகுதிகளுக்கு நமது பேராசிரியர் செல்வதென்றும் திட்டமிட்டு என் சுற்றுப் பயண நிகழ்ச்சி வெளியிடப்பட்டுள்ளது.

ஒன்றா? இரண்டா? 230 தொகுதிகளில் அல்லவா நிற்கிறோம் நாம்! எவ்வளவு நாள் நீ ஆசைப்பட்டாய் எல்லாத் தொகுதிகளிலும் "உதயசூரியன்" சின்னத்திற்கு வாக்கு கேட்கும் வாய்ப்பு தர வேண்டுமென்று!

இப்போது கூட அந்த வாய்ப்பு உனக்குக் கிடைத்ததற்குக் காரணம் கழகத்தின் தலைமையல்ல!

ஜனதா கட்சித் தலைவர்களாகப் பார்த்து உனக்கு அந்த வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

சிந்தித்துப் பார். நமக்கும் ஜனதா கட்சிக்கும் உடன்பாடு ஏற்பட்டிருந்தால், 34 தொகுதிகளை பிற கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்துவிட்டு தி.மு.க. நூறு இடங்களிலும், ஜனதா நூறு இடங்களிலும் அல்லவா போட்டியிடுவதென்று முடிவு செய்யப் பட்டிருக்கும்.

அது நடைபெறாமல், தொடக்கத்திலேயே ஜனதா கட்சித் தலைவர்கள் கதவை மூடிக் கொண்ட காரணத்தால், தி.மு.க. தனித்துப் போட்டியிடுகிற சூழ்நிலை உருவாகியுள்ளது.

நாம், தனியாக நின்று போட்டியிடுகிறோம் - அது உண்மை! ஆனால் "நிராயுதபாணி"யாக நின்று போட்டியிடவில்லை.

அண்ணா தந்த கடமையெனும் கைவேல் கொண்டு, கண்ணியமெனும் கவசம் பூண்டு, கட்டுப்பாடு எனும் கேடயம் தாங்கி - தேர்தல் களத்தில் நுழைந்திருக்கிறோம்.

ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிடக் கழக உடன் பிறப்புகள் நாலைந்து பேர் ஆர்வங் கொண்டனர் என்றாலும், ஒருவரைத்தான் எங்களால் அறிவிக்க முடிந்தது! அதுதானே நிலை!

வாய்ப்புக் கிட்டாத உடன்பிறப்புகள் ஓரிருவரைத் தவிர, மற்ற அனைவரும் தலைமைக் கழக அறிவிப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு, கழக வெற்றிக்குக் கடும் உழைப்பை நல்கி வருகின்றனர். அந்த ஓரிரு உடன்பிறப்புகளும் கூட, கழக வெற்றிக்குப் பாடுபட முன்வர வேண்டுமென்று சகோதர உணர்வோடும், உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன். என்னையும் பேராசிரியரையும் வேண்டுமானால் இரண்டு 'திட்டு' திட்டிக் கொள்ளட்டும்! அதற்காகத் தி.மு.க. வெற்றிக்குக் குந்தகமாகச் செயல்பட வேண்டாமென்று அவர்தம் கரம் பற்றி வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த என் வேண்டுகோளை அந்த உடன்பிறப்புகள் மதித்திடுவர் என எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறேன்.

கடந்த காலத்தில் நாம் போட்டியிட வாய்ப்புள்ள தொகுதிகளை, வேறு கட்சிகளுக்கே கொடுத்துவிட வில்லையா? இப்போது நமது கட்சியிலேயே ஒருவருக்குத் தானே கொடுத் திருக்கிறோம் என்ற மன நிறைவு ஏற்பட வேண்டும் அவர்களுக்கு!

எத்தனையோ வாய்ப்புள்ள தொகுதிகளை, தோழமைக் கட்சிகளுக்கு வழங்கியது மட்டுமல்ல! நமது செயல்வீரர்கள்

உளப்பூர்வமாக அந்தக் கட்சிகளின் வெற்றிக்காக உழைத்தும் இருக்கின்றனர்.

ஏன், தங்கள் உயிரைக் கூடக் கொடுத்துத் தோழமைக் கட்சிகளுக்காகப் பாடுபட்ட தொண்டர்களும் உண்டு, நமது பாசறையில்!

இதோ, இந்தக் கடிதத்துடன் இணைத்திருக்கிறேனே; அந்தப் படத்தைப் பார்!

இளைஞன் ஒருவனின் படம் இது! 'இளவதனன்' என்பது அவன் பெயர்! வயது இருபத்தி ஒன்றுதான்! அதனால் அவனை என் தம்பியென்று நெஞ்சார அழைத்திடுகின்றேன்.

நேற்று முன்தினம் "அண்ணா நகர்" தொகுதியில் 61-வது வட்டத்தில் வாக்காளர்களைச் சந்திக்க வீடு வீடாகச் சென்றேன். அப்போது ஒரு வீட்டுத் தாய் எனக்கு ஆரத்தி எடுத்தார்கள். இந்தப் புகைப்படத்தையும் காட்டினார்கள். இத்துடன் இன்னொரு படத்தையும் காட்டினார்கள். அது இளவதனனின் பிணக்கோலப் படம்! மணக்கோலத்தில் காண வேண்டிய மைந்தனைப் பிணக் கோலத்தில் படம் எடுத்து வைத்துக் கொண்டு அந்தத் தாய் கண்ணீர் உகுத்தார்கள். இளவதனனின் மூச்சற்ற புகழ் உடல் மீது இரு வண்ணக் கழகக் கொடியும், மூவண்ணப் பழைய காங்கிரஸ் கொடியும் போர்த்தப்பட்டிருந்தது.

விபரம் புரிகிறதா? அந்த வீரன் மாண்டதற்குக் காரணம் தெரிகிறதா?

ராஜசிவன் - ஏகவல்லி என்ற பெற்றோர்க்கு இளவதனன் அருமை மகனாக, 7.3.57-ல் பிறந்தான். 21.3.77-ல் அவர்களைத் தவிக்க விட்டு மறைந்தான்.

பேராசிரியர் ராமச்சந்திரன் அவர்கள் போட்டியிட்ட மத்திய சென்னைத் தொகுதியில், அண்ணா நகர்ப் பகுதியில் அவன் ஓடியாடிப் பணிபுரிந்தான். அவன் யாருக்காக அல்லும் பகலும் உழைத்தானோ அந்த வேட்பாளர் பா. ராமச்சந்திரன் அவர்கள் வெற்றி பெற்றார்.

தேர்தல் முடிவுக்குப் பிறகு அவன் தெருவில் கட்டியிருந்த பதாகைகளை அப்புறப்படுத்துமாறு ஆணையிடப்பட்டான். அவ்வாறே பதாகைகளை அவன் அவிழ்த்துக் கொண்டிருந்தான். உயரமான மரத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு பதாகையை நீக்கிடச் சென்றபோது மரத்திலிருந்து கீழே விழுந்து அந்த இடத்திலேயே

மடிந்து போனான் இருபதே வயது நிரம்பிய இளம்காளை! அவனது எதிர்காலத்தை நோக்கியிருந்த எளிய குடும்பம்! அவனோ இயக்கத்தின் முடிவுக்குக் கட்டுப்பட்டு தோழமைக் கட்சியான ஜனதாவுக்குத் தொண்டாற்றினான், இன்று நம்மிடையே இல்லாமற் போய்விட்டான். தோழமைக் கட்சிகளின் உறவை, உணர்ச்சி பூர்வமாக உளமார ஏற்றுக் கொண்டு உயிரைக் கொடுக்கவும் தயார் என்ற அளவில் நமது கழக உடன்பிறப்புகள் இருக்கிறார்களே என்பதை எண்ணியபோது என் இதயம் பெருமையால் பூரித்திடுகின்றது!

ஆனாலும், இளவதனனின் முடிவு, என் கண்களை அடிக்கடி குளமாக்கிக் கொண்டுதான் இருக்கின்றது.

என் செய்வது; உறவுகள் நீடிக்கும் என்றுதான் இளவதனன், உயிரையே பணயமாக வைத்தான்.

கழகத்தின் ஜாதகம் உனக்கும், எனக்கும் தெரியாதா, என்ன?

தேர்தல் கூட்டு இல்லை எனினும் - நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டப் பாடுபடுகிற எந்தக் கட்சியுடனும் நமக்கு நட்பு உண்டு!

ஜனநாயகத்தைக் காப்பாற்றிய பெருமை 'ஜனதா'வுக்கு உண்டு!

தி.மு.க. ஜனநாயகத்தைக் காக்கக் கொடுத்துள்ள "விலை" மகத்தானது என்பதையும் "மனச்சாட்சி" உள்ள யாரும் மறுத்திட முடியாது!

அது மட்டுமல்ல, கழகம் தொடர்ந்து அந்தத் தொல்லை துயரங்களை இப்போதும் அனுபவித்துக் கொண்டுதான் வருகிறது.

உடன்பிறப்பே, எதுவரினும் - எதையும் தாங்கும் இதயமுடன் தேர்தல் களத்தில் ஜனநாயகப் பணியை நிறைவேற்றக் கிளம்பிடுக!

உறுதியுடன் புறப்படுக! 'வெற்றி நமதே' என்று சூளுரைத்து எழுந்திடுக!

"இளவதனன் போன்ற தியாகிகளின் மீது ஆணை! கழக அரசை மீண்டும் அமைப்போம்!" என்று முழங்கிடுக!

அன்புள்ள,

மு. க.

26-05-1977

417. ஓயாதே - உறங்காதே!

உடன்பிறப்பே,

இன்று சுற்றுப்பயணம் மேற்கொள்கிறேன். உன் சுடர் விழிகளைக் கண்டு களிப்பேன். நீ சுழலும் பம்பரமாகத் தேர்தல் பணி ஆற்றுவதை நேரிலேயே பார்த்து மகிழ்வேன். நான் உன்னை அடிக்கடி கேட்டுக் கொண்டதைப்போல இப்போதும் கேட்டுக் கொள்கிறேன். பாசமிகுதியால், என்னைத் தயவு செய்து பந்தாடாதே! குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைத் தவிர நீ கூப்பிட்ட இடத்திற்கெல்லாம் நான் வந்தே தீரவேண்டுமென்று பிடிவாதம் செய்யாதே! ஒரு ஊரில் என் நிகழ்ச்சி திசை திருப்பப்பட்டுவிட்டால், முழுமையாக சுற்றுப்பயணத் திட்டமே நிலைகுலைந்து விடும்.

230 கழகத்தினர் போட்டியிடுகின்றனர் ஆம் - தேர்தல் களத்தில் நிற்கின்றனர். எல்லா இடங்களுக்கும் சென்றிட இயலவில்லை. அதற்கு நாட்கள் போதவில்லை.

பல வேட்பாளர்கள், தங்கள் தேர்தல் வெற்றிக்குப் பிரச்சாரத்தையே நம்பி உள்ளனர்.

வசதி படைத்தவர்கள், தேர்தல் செலவைத் தாராளமாகச் செய்யக் கூடியவர்கள் யாரும் நமது கழக வேட்பாளர்களிலே இல்லை.

தலைமைக் கழகத்திலும் நிதித் தட்டுப்பாடு! பொதுவாக சுவரொட்டிகளை அச்சிட்டு அனுப்பக்கூட முடியாத சூழ்நிலை!

இவ்வளவு வசதிக் குறைவிலும் - நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகும் கழக வேட்பாளர்களாக நிற்க, நான் - நீ என்று போட்டி போட்டவர் எண்ணிக்கை மிக அதிகம் என்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

வேட்பாளர்களின் பட்டியலை ஒருமுறை பார்த்தேன். அவர்களில் மிசா கைதிகளாக இருந்தவர் மட்டும் நாற்பது பேர்!

பட்டதாரிகள் நாற்பத்தி ஆறு பேர்! மாவட்டச் செயலாளர்கள் ஒன்பது பேர்! ஒன்றியச் செயலாளர்கள் நாற்பத்தி நாலு பேர்! நகரச் செயலாளர்களும் பகுதிச் செயலாளர்களும் இருபது பேர்! எண்பதுக்கு மேற்பட்டோர் பொதுக்குழு உறுப்பினர்கள்!

இவ்வாறு கழகத்தின் செயல்வீரர்களாகவும், தியாக மறவர்களாகவும், கழகத்தை உயிரெனக் கருதும் தொண்டுள்ளம் படைத்தவர்களாகவும் நமது வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த அணிக்கு பெருவாரியான வெற்றியை ஈட்டித்தருவது உன் பொறுப்பு! இதுவரை நடந்துள்ள தேர்தல்களில் பெற்ற அனுபவங்களையும், பாடங்களையும் மனத்திற்கொண்டு - நமது கழக மாமணிகள் வெற்றிபெற்றிட ஓயாது உழைத்திட வாராய், என் உடன்பிறப்பே!

உன் உழைப்பில்தான் இருக்கிறது கழகத்தின் வெற்றி!

உன்னைத்தான் நம்பியிருக்கிறது இந்தக் கழகம்!

ஓய்ந்திடாதே, ஒரு கணமும்!

உறங்கிடாதே, உதயசூரியனுக்கு

வெற்றி கிட்டும் வரையில்!

அன்புள்ள,

மு. க.

27-05-1977

418. அறைகூவலை ஏற்கிறாரா?

உடன்பிறப்பே,

மதுரையில் நடைபெற்ற தேர்தல் சிறப்பு மாநாட்டில் பேசும்போது நான், தேர்தலுக்கான வசதிகள் குறைவாகவுள்ள இந்த நேரத்தில் உதயசூரியன் சின்னம் எழுதுவதற்கு வண்ணம் வாங்க முடியாவிட்டால் அல்லது அதற்கேற்ற ஓவியர் கிடைக்காவிட்டால் - சில கட்சித் தலைவர்கள் இரண்டு விரலைக் காட்டுவதுபோல நமது செயல்வீரர்கள் ஐந்து விரல்களை விரித்துக் காட்டினாலே, அது உதயசூரியன் சின்னத்தை ஏறத்தாழ ஒத்திருக்கும் என்று குறிப்பிட்டேன். வண்ணம் நிரப்பிய வாளியில் கையை அழுத்தி எடுத்து சுவர்களிலே பதித்து - இருபுறமும் மலைகள்போல் இரண்டு கோடுகளை இழுத்துவிட்டால் வேலை சுலபமாக முடிந்துவிடும் என்றும் சொன்னேன்.

நாம் எழுப்பிய எத்தனையோ பிரச்சினைகளுக்கு இதுவரை பதில் சொல்லாத நண்பர் எம்.ஜி.இராமச்சந்திரன் நான் மதுரையில் பேசிய ஐந்து விரல் காட்டல் குறித்து திருப்பூர் கூட்டத்தில் கேலி பேசியிருக்கிறார்.

கருணாநிதி காட்டச் சொல்கிற ஐந்து விரல்களும் கருணாநிதியின் பஞ்சமா பாதகத்தைத்தான் சுட்டிக் காட்டுகின்றன

- இது எம்.ஜி.ராமச்சந்திரன் விளக்கம். என் செய்வது! அவரவர்கள் இயல்புக்கேற்ற விளக்கம்தானே வரமுடியும். பஞ்சமாபாதகத்தை அன்றாட வேலையாகக் கொண்டிருக்கும் அவருக்கு ஐந்து என்றதும் அதுதான் நினைவுக்கு வருகிறது.

கத்தரிக்கோலைப் பார்த்தால் ஜேப்படிக்காரனுக்கு மற்றவர்களின் சட்டைப்பை தானே நினைவுக்கு வரும்!

ஐந்து என்றதும் தமிழனுக்கு ஐவகை நிலம் அல்லவா நினைவுக்கு வருகிறது.

குறிஞ்சி

முல்லை

மருதம்

நெய்தல்

பாலை

என நிலத்தை ஐவகையாகப் பிரித்து வாழ்ந்தான் தமிழன் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

ந - ம - சி - வா - ய

எனும் ஐந்தெழுத்து மந்திரம் குறித்து விளக்கம் தருவர், தத்துவ ஞானிகள்!

நேருவின் பஞ்சசீலம் பற்றிய நினைவுடன் அரசியல்வாதிகள் விளக்கம் கூறுவர்.

பாண்டவர்கள் ஐவர் ஆயிற்றே எனப் புராணீகர் கூறி மகிழ்வர்.

1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்.

2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்.

3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்.

4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்.

5. மாநிலத்தில் சுயாட்சி - மத்தியிலே கூட்டாட்சி.

என்ற கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்கள், திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் எழுப்பப் பெற்றதே! அதனை நினைவு கொள்வர் கழக உடன்பிறப்புகள்!

ஐம்புலன்கள் என்பார் -

பஞ்சபூதங்கள் என்றும் உரைப்பார் -

ஆனால் நண்பர் எம்.ஜி. இராமச்சந்திரன் ஒருவர் தான் பஞ்சமா பாதகம் எனும் விளக்கத்தை அளிக்கிறார்!

உடன்பிறப்பே, எம்.ஜி.ஆர். - தயாராக இருப்பாரேயானால் நான் தயாராக இருக்கிறேன். தேர்தல் பிரச்சாரம் செய்ய வானொலி,

டெலிவிஷன் போன்றவை எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் நேரம் ஒதுக்குகிற ஏற்பாட்டினை ஜனதா அரசு அறிவித்திருக்கிறது.

டெலிவிஷனிலோ, அல்லது வானொலியிலோ - ஒருநாள் நானும் அவருமே பஞ்சமா பாதகர் யார்? என்ற தலைப்பில் விவாதித்து விடலாமே!

சட்டசபைக்கு விவாதத்திற்கு அழைத்த போதெல்லாம் சட்டசபை செத்துப்போய் விட்டது என்று கூறி தான் மட்டும் தப்பித்துக் கொண்டு - தன் கட்சி உறுப்பினர்களை மட்டும் செத்துப்போன ? சட்டசபைக்குள் அனுப்பி வைத்தார். அந்த செத்துப் போன சட்டசபைக்கு வராமலே என்றாவது ஒருநாள் தாழ்வாரத்திலே வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு ஊதியத்தை மட்டும் பெற்றுக் கொண்டு, பதவியை விடாமல் பற்றிக் கொண்டிருந்தார்.

சட்டசபை வேண்டாம், ஒரே மேடையில் விவாதிக்கலாம் என அழைத்தோம்.

அண்ணா, சோமசுந்தர பாரதியாரோடு விவாதித்தார் - சேதுப்பிள்ளையோடு விவாதித்திருக்கிறார். அண்ணாவின் பெயரால் கட்சி நடத்துகிறவர், பொதுமேடை விவாதத்திற்கு வரமறுத்துவிட்டார்.

இப்போது கிடைத்திருப்பது அருமையான வாய்ப்பு! தேர்தல் நேரம் வேறு - தேர்தல் நேரத்தில் இரண்டு கட்சித் தலைவர்கள் டெலிவிஷனிலோ, வானொலியிலோ விவாதிப்பது மற்ற நாடுகளில் உள்ள வழக்கம்தான்.

எனவே, நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் - ஐந்து விரல் பற்றியோ, அல்லது பஞ்சமா பாதகர் யார்? என்பது பற்றியோ, வானொலி அல்லது டெலிவிஷனில் நம்முடன் விவாதிப்பதால் வாக்காளப் பெருமக்களுக்கு நல்லதோர் விளக்கம் கிடைக்க வழிபிறக்கும்.

சர்க்காரியா கமிஷனுக்கு சாட்சி சொல்ல வரமாட்டேன் என்று நழுவிவிட்டதைப் போல, இந்த அழைப்புக்கும் பதில் சொல்லாமல் அவர் நழுவி விடக்கூடாது. நழுவிட மாட்டார் என நம்புகிறேன்.

அந்த விவாதத்தில் நேருக்குநேர் பல விஷயங்களைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் அல்லவா?

மாறன் படிக்க இவர்தான் பணம் கொடுத்தாராம்!

கோவையில் பிளேக் பரவியபோது, இவர் வீட்டில் நான் வந்து இவரோடு சிலநாள் வசித்ததையும் குறிப்பிட்டுத் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்.

சென்னை ஆனைக்கவுனியில் இவர் ஏதோ அந்தக் காலத்தில் ஆறு அடுக்கு மாளிகை கட்டி வசித்ததைப்போல என்னுடைய ஆரம்பகால வாழ்க்கையைக் கேலி செய்திருக்கிறார்.

மாறன் படிக்க பணம் கொடுத்தேன் என்று நீண்ட நாட்களாகச் சொல்லிக் கொண்டே வருகிறாரே! எப்போது கொடுத்தார்? எங்கிருந்து எடுத்துக் கொடுத்தார்? மேகலா பட நிறுவனத்தில் 1953-ல் நான் பங்குதாரர். இவரும் பங்குதாரர். நான் சிறையிலே இருந்தபோது கல்லக்குடி போராட்டத்தில் மேகலா நிறுவனத்திலிருந்து எனது கணக்கில் எனக்குச் சேரவேண்டிய தொகையிலிருந்து ஒரே ஒருமுறை மாறன் தனது கல்லூரிக் கட்டணத்திற்காக சுமார் முந்நூறு ரூபாய் வாங்கிச் சென்றான். இதை இவர் ஏதோ தன் கையிலேயிருந்து இனாமாகக் கொடுத்தது போல் கதை கட்டுகிறாரே! எதற்காக?

இவற்றையெல்லாம் நேருக்குநேர் விவாதித்து - யார் பொய்யன்? என்பதைத் தேர்தல் நேரத்திலே நாட்டுக்கு விளக்க இந்த அறைகூவலை எம்.ஜி.இராமச்சந்திரன் ஏற்றுக் கொள்கிறாரா?

உடன்பிறப்பே, இதற்கு மௌனம் சாதிப்பார் - அல்லது மழுப்புவார்; அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

28-05-1977

419. பிறந்தநாள் செய்தி!

உடன்பிறப்பே,

ஜூன் 3-ஆம் நாள் எனக்கு, ஆம்! உன் சகோதரனுக்கு - இந்தச் சாமான்யனுக்குப் பிறந்த நாள் வருகிறது.

இதற்கு முன்பு நடைபெற்ற பிறந்த நாள் விழாக்கள் அனைத்திலும் அடித்தளத்து மக்களுக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டனவே தவிர - ஆடம்பரங்களோ, வீட்டிலோ, வெளியிலோ அலங்காரங்கள் எவையுமோ இடம் பெறவில்லை என்பதை நீ அறிவாய்!

இந்த ஆண்டு நான் அறிவிக்கிற திட்டம், தேர்தல் வெற்றிக்காக நீ அயராது பணியாற்றுகிற திட்டம்தான்!

ஜூன் 3-ஆம் நாள் வெளியூர்களில் இருக்கிற எந்த உடன்பிறப்பும் சென்னைக்கு நேரிலே வந்து வாழ்த்திட வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்காங்கு இருந்தவாறே தேர்தல் பணிகளைத் தொய்வின்றி ஆற்றுவதையே எனக்கு வழங்கப்படும் உற்சாக வாழ்த்துகளாக நான் கருதுகிறேன்.

இந்த எளியவனின் பிறந்த நாளில் ஏழை எளியோர்க்கு உணவளித்தல், அங்கிங்கெணாதபடி எங்கெங்கும் அண்ணன் தந்த இருவண்ண இலட்சியக் கொடியை ஏற்றுவித்தல், பொதுக் கூட்டங்கள் நடத்தி அண்ணா வழியில் அயராது உழைக்கும் நமது கழகக் கொள்கைகளை விளக்குதல், தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோர்க்கு அதிகாரிகளின் அனுமதி பெற்றுப் பொங்கல் வழங்குதல், கருணை இல்லங்களில் உள்ள அனாதைக் கண்மணிகளுக்கு இனிப்புப் பண்டங்கள் அளித்தல், வசதியற்ற இளம் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வாங்கித் தருதல், ஊனமுற்றோருக்கு கைத்தறி ஆடைகளைப் பரிசாகத் தருதல் இன்னும் இவைபோன்ற சமுதாயப் பணிகளிலும்,

கழகக் கொள்கை பரப்பும் பணிகளிலும் ஈடுபட வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

உடன்பிறப்பே, பிறந்த நாளன்று எனக்கு அணிவிக்கும் மாலைகளுக்குச் செலவிடும் பணத்தையும், என் கையில் தரும் ஐந்து ரூபாய், பத்து ரூபாய், நூறு ரூபாய்களையும் ஆங்காங்கு போட்டியிடும் கழக வேட்பாளர்களின் தொகுதியில் கழகப் பிரச்சாரத்திற்காகச் செலவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நீ, இந்தத் தேர்தலில் குவிக்கும் வெற்றிகளே, என் பிறந்த நாளுக்காக நீ என் கழுத்தில் அணிவிக்கும் மாலைகளாகும் என்பதை மறவாதே!

ஜூன் 3-ஆம் நாள் சென்னையிலே காலையில் சிறிது நேரம் தங்கியிருந்து அன்று பிற்பகலிலேயே வெளி மாவட்டங்களுக்கான தேர்தல் பிரச்சாரத்துக்குச் செல்கிறேன்.

தமிழ்ச் சமுதாயம் தன்மானத்துடன் வாழ வீறுகொள்ள, இந்தப் பிறந்த நாளில் தொடர்ந்து உழைத்திடுவோம் என்ற உணர்வை உனக்கு, என் பிறந்த நாள் செய்தியாக வழங்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

01-06-1977

420. எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்!

உடன்பிறப்பே,

தொண்டின் உறைவிடமே! துணிவின் இருப்பிடமே! தியாகத்தின் திருவுருவே! தி.மு.கழகத்தின் செயல்வடிவே! உன்னைத்தான் அழைக்கிறேன்! உடல்வருத்தம் பாராது கண்துஞ்சாது இடையில் உள்ள ஆறு ஏழு நாட்கள் ஓய்வின்றி உழைத்திட உன்னைத்தான் அழைக்கிறேன். இருநூற்றிமுப்பது இடங்களிலே நமது கழக வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் நிற்கின்றனர். அவர்தம் வெற்றிக்குப் பாடுபட்ட உன்னை அழைக்காமல் நான் வேறு யாரை அழைத்திடுவேன்! கூட்டங்களில் உன்னைச் சந்திக்கும் போது கூரிய போர்வாள் என என் கண்ணுக்கு நேராக மின்னுகிறாய் - உன் சுடர்முகம் கண்டதும் என் உடல்நலிவு கூடப் பறந்தோடிப் போகிறது - வானைப்பிளக்கும் உன் வாழ்த்தொலி கேட்டால் கழகமெனும் காவல் அரணின் வலிமை எனக்குப் புரியத்தான் செய்கிறது. நீ, கை உயர்த்திக் காட்டி அண்ணா வாழ்க! அண்ணா வளர்த்த கழகம் வெல்க! என்று நிமிர்ந்து நிற்கும்போது என் நெஞ்சமெலாம் நெகிழத்தான் செய்கிறது. ஆனாலும் உடன்பிறப்பே, அப்போது எனக்கோர் ஐயப்பாடு எழாமல் இல்லை! அதற்காக, நீ என்னை மன்னித்துக் கொள்ளவேண்டும். கூட்டத்தில் காணும் எழுச்சி அலை, அந்தக் கூட்டத்தோடு அடங்கி விடுகிறதா? அல்லது தொடர்ந்து தொய்வின்றித் தேர்தலுக்குத் தேவையான பணிகளில் நீயும் மற்ற உடன்பிறப்புகளும் ஈடுபடுகிறீர்களா? என்பதுதான் அந்த ஐயப்பாடு! என் ஐயப்பாடு ஆதாரமற்றது என்றாலோ அல்லது யாரோ தவறாகச் சொல்லி அந்த அடிப்படையில் தோன்றியது என்றாலோ, என்னைப்போல மகிழ்ச்சி அடைபவர் யாரும் இருக்க முடியாது.

தேர்தல் பணி என்பது ஆரவாரத்தால் அமைவதல்ல; அமைதியான முறையில் அணுகவேண்டிய வேலைகள்

எண்ணிலடங்காமல் இருக்கின்றன. அந்த வேலைகளை தொகுத்துப் பின்னர் வகுத்து அவரவர்க்கும் பிரித்துக் கொடுத்து, தேர்தல் களத்திலே ஒவ்வொரு விநாடியும் விலைமதிப்பற்றது என்ற உணர்வுடன் ஈடுபட்டால்தான் ஈட்டலாம் வெற்றிகளை என்பது நீ அறியாத ஒன்றல்ல! இருப்பினும் நினைவூட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன் அல்லவா?

இப்போதுதான் என்ன நீ பம்பரமாகச் சுழன்று பணியாற்றிக்கொண்டுதான் இருக்கிறாய் - மறுக்க முடியுமா என்னால்!

முயலின் வேகத்துடன் முழுமூச்சாகப் பணியில் ஈடுபடுவாய்! அறிவேன் நான்! ஆயினும் தூங்கிவிட்ட முயல் ஒன்று ஆமையிடம் ஓட்டப்பந்தயத்தில் தோற்றுவிட்டதாக ஆரம்பப் பள்ளியிலே படித்த கதையொன்று நினைவுக்கு வந்துவிடுகிறதே! நான் என்ன செய்ய?

ஆர்வமிருக்கிறது உழைப்பதற்கு! அக்கறை இருக்கிறது, கழகம் வெற்றிகாண வேண்டுமென்று! ஆயினும் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்ற அலட்சியம் வந்து விடக்கூடாதே என்ற கவலையால் தான் உனக்கு உரிமையுடன் எழுதுகிறேன். உடனே எழுந்து பணிபுரியப் புறப்படவேண்டும் நீ என்பதற்காக விடுக்கப்படும் அழைப்புதான் இது!

எத்தனை அறைகூவல்கள் நம்மை நோக்கி விடப்படுகின்றன பார்த்தாயா? அழிந்துபோய் ஆறெட்டு திங்களாயிற்று கழகம் என ஆணவமொழி பேசியோர் எல்லாம் இன்னமும் கழகத்தைக் குறிவைத்துத்தானே ஏசுகின்றனர் - எழுதுகின்றனர் - எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எதிர்ப்புக் குரல் கொடுக்கின்றனர்; அதற்குக் காரணம் புரிகிறதல்லவா உனக்கு?

ஆம்! அவர்களால் அசைத்துப் பார்த்தும் நமது கழகத்தை அசைக்க முடியவில்லை. வலிவு மிகுந்த கற்கோட்டையாம் கழகத்தை யாராலும் அசைத்திட இயலாது. எத்தனையோ புயலுக்கும், பெருமழைக்கும் ஈடுகொடுத்து - பூகம்பத்திலேகூட தகர்ந்திடாமல் கொள்கைக் கோபுரமெனத் தோற்றமளிக்கும் இந்தக் கழகத்தைத் தேர்தல் தோல்விகள் வீழ்த்திவிடும் என்று ஆரூடம்

கணித்த அவசரக்கார அரசியல்வாதிகளுக்கு விடையளிக்கும் விதத்தில், கழகம் இன்று விசுவரூபம் எடுத்து நிற்கிறது.

குன்றின் மீது முட்டிப்பார்த்தவன் குருதிவழியும் தலையுடன், ஆத்திரமிகுதியால் - இது குன்றே அல்ல! குப்பைமேடு! எனக் கூறுவது போல் - நம்மை அரசியல் களத்தில் அங்குலம் அங்குலமாகக் கூட பின்வாங்கிடச் செய்திட இயலவில்லை எனத் தெரிந்துகொண்டு நாம் நமது உயிரைப் பணயமாக வைத்து நடத்திடும் இந்தக் கொள்கைக் கட்சியை ஊழல் கட்சி என்கின்றனர். அந்த அவதூறுப் பிரச்சாரத்துக்கு இந்திரா அரசு தனது நால்வகைச் சேனைகளையும் பயன்படுத்தியது. இன்று அந்த அம்மையார் தோல்வியுற்றது மட்டுமல்ல; விசாரணைக் கமிஷன்கள் என்ற வேல்கள் தைத்திட வேதனையின் வடிவமாக வீழ்ந்து கிடக்கிறார்கள்.

தமிழகத்திலே இருக்கிறார்களே, சில உத்தம புத்திரர்கள் - அவர்கள் நம்மை நோக்கி வீசும் பழிச் சொற்கள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டே போவதைப் பார்த்தாயா?

நான் தமிழன் அல்லவாம்! அதற்குக் கூறியுள்ள அதே காரணத்தின்படி, அறிஞர் அண்ணாவும் தமிழர் அல்ல! புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் தமிழர் அல்ல! இப்படியொரு ஈட்டியின் பாய்ச்சலைத் தமிழர்களின் இதயத்தின் மீது நடத்தியிருக்கிறார் நடிகர் கட்சித் தலைவர். இந்தத் தாக்குதலைத் தமிழ்ச் சமுதாயம் தன் மானமரியாதைக்கு விடப்பட்ட சவாலாக எடுத்துக்கொள்ளத்தான் போகிறது. எனவே தேர்தல் முடிந்தபிறகும் நமக்கு நிறைய வேலை இருக்கத்தான் செய்கிறது.

தமிழன் என்று சொல்லடா!

தலைநிமிர்ந்து நில்லடா!

எனப் பாடி மகிழ்ந்த தமிழனின் நாடி நரம்புகளுக்கு முறுக்கு தளர்ந்து போய் விடவில்லை என்பதை முறைப்படி, அறநெறிப்படி காட்டிட வேண்டாமோ?

தமிழன் என்றோர் இனமுண்டு!

தனியே அவர்க்கோர் குணமுண்டு!

என்று நாமக்கல்லார் எழுதிய கவிதை வரிகளை உண்மையாக்கிக் காட்டும் உணர்ச்சி பரவிட வேண்டாமோ?

வள்ளுவர் கோட்டம் எதற்காக? தேவைதானா? என நடிகர், வாய்நீளம் காட்டிப் பேசியிருக்கிறார் பார்த்தாயா ஏடுகளில்?

தமிழ் உணர்வு உள்ளோரின் உதட்டிலிருந்து குதிக்கிற வார்த்தையா அது?

வள்ளுவர்க்குக் கோட்டம் ஏன்? எத்துணை பயங்கரமான கேள்வி இது! இந்தக் கேள்வியின் விளைவு என்ன ஆகும் என்று எண்ணுகிறாய்?

நடிகர் கட்சியினர் நாடாள வந்து விட்டால், வையம் புகழ் வள்ளுவர் கோட்டத்தில் தான் முதன்முதலாகக் கைவைப்பார்கள் என்று புரிகிறதல்லவா? அடுத்தது பூம்புகார்! அதனையும் அழித்திடக்கூடும்! அதற்கடுத்துப் பாஞ்சையில் உள்ள கட்டபொம்மன் கோட்டையும் தரைமட்டமாக்கப் படலாம்! தமிழ், தமிழ் உணர்வு, மரபு, வரலாறு, கலாச்சாரம் இவையனைத்தும் மெல்லச் சாகும் என்பது உறுதியாகி விடும்.

தேர்தல் பிரச்சாரத்தில் பொய் சொல்லியே அரசியல் நடத்துவது என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். அந்தப் பொய்யர்களைப் புளுகு மூட்டை அவிழ்ப்பவர்களை இந்தத் தேர்தலில் பொட்டுப் பூச்சிகளாக - புன்மைத் தேரைகளாக ஆக்கிடல் வேண்டாமா?

அதற்குரிய பணிகள் அல்லும் பகலும் நடைபெற வேண்டாமா?

கடந்த 27-ம் நாள் முதல் ஒவ்வொரு நாளும் விடியற் காலை ஐந்து மணி வரையில் ஊர் ஊராகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்துவிட்டேன். நமது பொதுச்செயலாளரும் அவ்வாறே சுற்றுப்பயணத்தில் இருக்கிறார். கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நீயும், உன் சக்திக்கு மீறிய வகையில் உழைக்கிறாய். இல்லையென்று நான் சொல்லவில்லை. இன்னும் கொஞ்சம் உழைக்கலாம் என்று கூறிட எனக்கு உன்பால் உரிமை இருக்கிறதல்லவா? அதனால்தான் அந்த பந்தபாச உணர்வோடு உன்னை அழைக்கிறேன். நீ நினைத்தால் முடியாத காரியம் என்று ஒன்று இருக்கிறதா? இல்லை உடன்பிறப்பே, இல்லவே இல்லை!

எனவே, களைப்பு பற்றிக் கவலைப்படாமல் அசதியை உதறிவிட்டு அண்ணாவின் கொள்கைகளுக்கு வெற்றி தேடப் புறப்படு!

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்! என்ற புரட்சிக் கவிஞரின் பாடலை உண்மையாக்கிட உழைத்திட வாராய்! என உடன்பிறப்பு அழைக்கிறேன்.

தமிழ்ச் சமுதாயத்திற்கு விடப்பட்டுள்ள அறைகூவலுக்கு விடையளிக்க,

வீரத்தின் நிளைநிலமே! தீரத்தின் எடுத்துக்காட்டே! உன் விழியில் கிளம்பும் கனல், விபரீத வாதங்களைச் சுட்டெரிக்கட்டும்! தமிழனின் தன்மானத்திற்குச் சூடேற்ற உதவட்டும்! அதில் தோன்றும் மௌனப்புரட்சி, நாம் கடைப்பிடிக்கும் ஓட்டு முறை மூலம் வெற்றி பெறட்டும் - உம்! உடனே தொடங்கட்டும் உன் அற்புதப் பணிகள்!

அன்புள்ள,

மு. க.

08-06-1977

421. ஏதோ ஒன்றை எதிர்பார்த்து...!

உடன்பிறப்பே,

கழகமா? அதனை இனிமேல் பூதக்கண்ணாடியின் உதவி கொண்டுதான் தேடிப் பார்க்க வேண்டும். அந்த அளவுக்குக் கடுகினும் சிறியதாகத் தேய்ந்து போய்விட்டது எனக் கணக்கிட்டு மகிழ்ந்தவர்கள், தங்கள் தலைகளைத் தொங்கப் போடும் அளவுக்குக் கழகத்தின் வலிமையினை உலகிற்கு உணர்த்தி விட்டாய்!

நிற்காமல் சுற்றிக் கொண்டிருக்கும் பூமியைப் போல், அலைக் கரங்களை நிறுத்தாமல் ஆட்டிக் கொண்டிருக்கும் கடலைப் போல், நீயும் ஓயாமல் உழைத்து அண்ணா உருவாக்கிய கழகத்தின் சக்தியை யாராலும் அழித்துவிட இயலாது என்பதை ஆணித்தரமாக அறிவித்து விட்டாய்!

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியுடனும், அகில இந்திய முஸ்லிம் லீக்குடனும், உழைப்பாளர் கட்சியுடனும், பார்வர்ட் பிளாக்குடனும் தேர்தல் உடன்பாடு கொண்ட அ.இ.அ.தி.மு.க. சுமார் ஐம்பத்தி இரண்டு லட்சம் வாக்குகளை இந்தச் சட்டப் பேரவைத் தேர்தலில் பெற்றிருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கொண்டு காங்கிரஸ், சுமார் இருபத்தி ஒன்பது லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

தமிழ்நாடு முஸ்லிம் லீக்குடன் உடன்பாடு கொண்ட ஜனதா கட்சி சுமார் இருபத்தி எட்டு லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

எந்தக் கட்சியுடனும் உடன்பாடு கொள்ளாமல் திராவிட முன்னேற்றக் கழகம் சுமார் நாற்பத்தி இரண்டு லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

உடன்பிறப்பே, நான் இந்தக் கணக்கைக் காட்டுவது விகிதாசாரப் பிரதிநிதித்துவம், தேர்தல்களில் கடைப்பிடிக்கப்படும்

முறையாக இருந்திருக்குமேயானால், ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு இடங்கள் கிடைத்திருக்கும் என்று விவரிப்பதற்காக அல்ல! விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் தேவையென்பதை நமது கழகம் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறது எனினும், இப்பொழுது அந்த விவாதத்திற்கு நான் உன்னை அழைத்துக் கொண்டு போக விரும்பவில்லை. நான் கூற விரும்புவது, உன்னைப் போன்ற உடன்பிறப்புகளின் உழைப்பாலும், உறுதி மாறாத உள்ளத்தாலும், குழப்பமற்ற கொள்கைத் தெளிவாலும், அற்ற குளத்து அறுநீர்ப் பறவைபோல் இல்லாது, கொட்டியும், ஆம்பலும் போல் ஒட்டியே வாழும் உறவின் பெருமையாலும், கழகத்தின் பக்கம் தமிழகத்தில் நாற்பத்தி இரண்டு லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்பதை நிலைநாட்டி விட்டாய் அல்லவா?

இந்த நாற்பத்தி இரண்டு லட்சமும் எத்தனை இடர்பாடுகளுக்குப் பிறகு கிடைத்தது?

அவசர காலச் சட்டத்தை எதிர்த்ததால் "ஆட்சி கவிழ்ப்பு" என்ற தண்டனைக்கு ஆட்படுத்தப்பட்டோம். அன்றாடம் இடைவிடாது அவதூறுப் பிரச்சாரம் நம்மீது நடைபெற்றது. 'மிசா'க்கள் நமது கழகத்தினரைக் குடும்பம் குடும்பமாக மிரட்டிச் சீரழித்த கொடுமையைத்தான் விவரிக்க இயலுமா? கழகத்திலிருந்த சில நண்பர்கள், தாங்கள் தப்பித்துக் கொள்ள வேண்டுமானால் என் மீதும், கழகத்தின் மீதும் கோபாக்கினியைக் கொட்டிட வேண்டியிருந்தது. இல்லையேல் அவர்கள் குடும்பம் கோரமாகத் தண்டிக்கப்பட்டிருக்கும் - அதனால் பாவம்! அவர்கள் நம் விரோதிகளாகவே தங்களை ஆக்கிக் கொண்டார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வும், ஜனதாவும் கூட்டுச் சேர்ந்துங்கூட எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லையென்றதும், எங்கே சென்றால் வெற்றி கிடைக்கும் என்று கணக்குப் பார்த்துத் தாங்களாகவே ஒதுங்கிக் கொண்டவர்கள் தங்கள் முடிவுக்குக் காரணம் சொல்ல நம்மையேதான் தாக்கினார்கள், தாக்குகிறார்கள். தரக் குறைவாகவும் பேசத் தொடங்கினார்கள். இத்தனை சூழ்நிலைகளுக்கிடையே அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன்கள், ஜோடிக்கப்பட்ட வழக்குகள் அப்பப்பா! இத்தனை சோதனைகளையும் தாங்கிக் கொண்டு உடன்பிறப்பே, நீ துவளாத நெஞ்சத்துடன் ஆற்றிய

பணியின் விளைவு அல்லவா, நாற்பத்து இரண்டு லட்சம் வாக்குகளும் - நாற்பத்து எட்டு தொகுதிகளின் வெற்றியும்?

தேர்தல் செலவுக்குப் போதுமான நிதி வசதி இல்லை. நீ, திண்டாடினாய்! திணறினாய்! நானும், நமது பொதுச் செயலாளரும், பொருளாளரும் திகைத்து நின்றோமே தவிர, உன் தேவைக்கேற்ற செலவுத் தொகையை வழங்க முடிந்ததா எங்களால்? இயலவில்லை! என் செய்வது? இருந்தால் அல்லவா இந்தா எடுத்துக் கொள் என்று அளித்திடுவதற்கு!

எப்படியோ, கருமமே கண்ணாக இருந்து கழகத்தின் வலிமையைச் சரியான நேரத்தில் தெளிவாகத் தெரிவித்த உன் தீரத்துக்கும், தியாக மனப்பான்மைக்கும் நான் தலை வணங்குகிறேன்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் ஆளுங் கட்சித் தகுதியைப் பெற்றுள்ள நண்பர் எம்.ஜி.ஆர் கூட, வெளியிடாத ஒரு அறிக்கையை நமது நாவலர் அவர்கள் அவசர அவசரமாக வெளியிட்டிருக்கிறார், பார்த்தாயா? நாவலரின் அறிக்கையில் எம்.ஜி.ஆரின் வெற்றிக்கான வாழ்த்துரை, பாராட்டுரை ஆகியவற்றை விட, என்னைப் பற்றிய வசையுரைக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதைக் கவனித்தாயா? என் செய்வது! எதையோ எதிர்பார்ப்பவர்களுக்கெல்லாம் என்மீது அர்ச்சனை செய்வது தானே பலன் கொடுக்கும் காரியமாக இருக்கிறது! அதற்கும் நான்தான் அவர்களுக்குப் பயன்படுகிறேன் என்பதை எண்ணிடும் போது எனக்கு மகிழ்ச்சிதான்.

> "அ.தி.மு.க. ஆட்சி, தி.மு.கழகத் தொண்டர்களை வெறியூட்டி, உசுப்பிவிட்டு, ரத்தம் சிந்த வைத்து தியாகச் சிந்து பாடுவதில் வன்கண்மை படைத்த கலைஞரின் போக்கினை உணர்ந்து செயல்பட வேண்டும்."

இது நாவலர் அறிக்கையில் ஒரு பகுதி. ஆமாம், "கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த கழகம்" என்று நூல் எழுதினாரே, அந்த நாவலர் அவர்களின் இன்றைய வாசகம் தான் இது! இதே நாவலர் அவர்கள் 1962-ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராகச் சட்டசபையில் வீற்றிருந்த போது தானே விலைவாசிப் போராட்டம் நடைபெற்று அண்ணாவும், நாவலரும் மற்றும் நான் உட்பட இருபதாயிரம் கழகத் தோழர்களும் சிறைப்பட்டோம்! சென்னை

மறியலில் பலர் ரத்தம் சிந்தியதும் அப்போது தானே! சென்னைச் சிறையில் அமளி நடைபெற்று பலர் கை கால்கள் முறிந்ததும், கோ.சு. மணி பிணமானதும் அப்போது தானே!

இதே நாவலர் பொதுச் செயலாளராக இருந்த போது தானே நேருவுக்குக் கறுப்புக்கொடி! நூற்றுக் கணக்கானத் தோழர்களுக்குத் தடியடி! ரத்த ஆறு! காவல்துறையின் குதிரை மிதித்து மொய்தீன் பிச்சை என்ற கழகத் தோழர் நடுவீதியில் பிணமாக விழுந்தார்!

இதே நாவலர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது தானே இந்தியை எதிர்த்து கழகத் தோழர்களின் வீடுகளில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டதும் - அதனையொட்டி அடிதடிகளும், கலகங்களும் ரத்தவெறித் தாண்டவமும் போன்ற காரியங்கள் 1965ஆம் ஆண்டு நடைபெற்றன! என் செய்வது! கடந்த கால நிகழ்ச்சிகள் எல்லாம் மறந்து போய் விடுகின்றன, எதையோ ஒன்றை பார்த்து ஏங்கித் தவித்திடும் போது!

“ஆந்திராவிலும், கேரளத்திலும் அந்தந்த மாநிலத்தவரே முதல்வராக இருப்பதைப் போலத்தான் தமிழ்நாட்டிலும் இருக்க வேண்டும் என்ற உணர்வு, தமிழர்களின் இரத்தத்தில் ஊறிப் போயிருக்க வேண்டும்”

என்று இரண்டு மாதங்களுக்கு முன்பு திருப்பூரில் பேசிய நாவலரின் பேச்சு எல்லா ஏடுகளிலும் வெளி வந்தது. இன்று “அண்ணாவின் உண்மைத் தம்பி எம்.ஜி.ஆர். தான்” என்று சான்றிதழ் வழங்கி வாழ்த்துரைக்கிறார் அதே நாவலர்!

“நாங்கள் அண்ணாவுடன் பழகி அண்ணாவை உணர்ந்தவர்கள் - எம்.ஜி.ஆர். அண்ணாவைப் பார்த்தவரே தவிர, அண்ணாவுடன் பழகி அவரை உணர்ந்தவரல்ல”

இந்தக் கருத்தை நாவலர் அவர்கள் விளக்கிச் சொல்லாத கூட்டமே இருந்ததில்லை. இன்று, திடீரென்று எம்.ஜி.ஆர். தான் அண்ணாவின் கொள்கையை ஒழுங்காக உணர்ந்தவர் என்று ஊராருக்கு அறிவிக்கிறார்! ஒன்றை எதிர்பார்த்து விட்டால் எப்படியெல்லாம் பேசத் தோன்றுகிறது பார்த்தாயா?

“தனி நபர் தலைமையின் சர்வாதிகாரப் போக்கு! தன் புகழ் வளர்த்திடப் பின்பற்றிய தவறான முறைகேடான செயல் திட்டங்கள்!”

இந்த நாமாவளியும் நாவலர் அவர்களால் இயற்றப் பட்டுத்தான் அறிக்கையில் ஒரு பகுதியாக விளங்குகிறது.

எந்த முக்கிய பிரச்சினையானாலும் செயற்குழுவையோ, பொதுக் குழுவையோ கூட்டிக் கலந்து பேசி அதன் பிறகே முடிவுகளை எடுக்கிற தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த ஒருவர் இப்போது விலகிச் சென்றதும், என்னைச் சர்வாதிகாரி என்று கூறித் திருப்திப்பட்டுக் கொள்வது விந்தையான கதைதான்!

"தன் புகழ் வளர்த்திடப் பின்பற்றிய

தவறான முறைகேடான செயல்திட்டங்கள்!"

இது என் மீது இன்றைய அறிக்கையில் நாவலர் பொழியும் குற்றச்சாட்டு!

உடன்பிறப்பே, கழக ஆட்சிக் காலத்தில் எங்கே கல்லூரி அமைப்பதாக இருந்தாலும், அந்தப் பகுதி மக்களின் சார்பாக ஐந்து லட்ச ரூபாய் முன் தொகை கட்ட வேண்டும் என்பது ஒரு விதி.

அதற்கு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து நிதி உதவக் கூடாது என்பதில் நாவலர் கண்டிப்பாக இருந்தார். ஆனால் திருச்சி திருவெறும்பூரில் ஒரு கல்லூரிக்கான முயற்சி நடைபெற்றது. அதற்குப் பெயர் "நாவலர் கல்லூரி!" விதிப்படி ஐந்து லட்சம் குறித்த காலத்தில் வசூலாகவில்லை. ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒரு லட்ச ரூபாய் அந்தக் கல்லூரிக்குத் தரலாம் என்பதில் நாவலர் மிகுந்த அக்கறை காட்டினார். அவ்வாறே வழக்கத்திற்கு மாறாக பெற்றுக் கொள்ளப்பட்டது. இது நாவலரின் புகழ் வளர்த்திட என்று நான் கூற மாட்டேன்! திருவெறும்பூரில் ஒரு கல்லூரி அவசியம் என்பதற்காகச் செய்யப்பட்டது என்றே எண்ணிக் கொள்கிறேன். நீயும் அவ்வாறே கருதிக் கொள்ளக் கடவாயாக!

"சரியாகவோ, தவறாகவோ தவறு செய்தவர்கள் என்று கருதப்படுகிறவர்கள் மக்களின் உணர்வை அறிந்து ஒதுங்கி நின்று திராவிட இயக்கங்களின் ஒற்றுமைக்கு வழிவகுத்திருக்க வேண்டும்."

இதுவும் நாவலரின் அறிக்கையில் ஒரு பகுதிதான்!

அதாவது சரியாகவோ, தவறாகவோ யார் குற்றம் சாட்டினாலும் உடனே அந்த நபர் ஒதுங்கி நின்று கொள்ள வேண்டுமென்கிறார்.

கீழக்கரை பள்ளிக்கூட விவகாரமாக நாவலர், ஒரு வைர நெக்லசை லஞ்சமாகப் பெற்றதாக எம்.ஜி.ஆர்., கலியாண சுந்தரம் இருவரும் ஜனாதிபதியிடம் கொடுத்துள்ள குற்றச்சாட்டில் தெரிவித்திருக்கின்றனர்.

திருச்சி நாதன் கம்பெனி புத்தக விவகாரத்திலும் கல்வி அமைச்சராக இருந்த நாவலர் தவறாக நடந்து கொண்டார் என்று எம்.ஜி.ஆர். அவர்களும், கல்யாணசுந்தரம் அவர்களும் குற்றச்சாட்டு அளித்து விசாரணைக் கமிஷனுக்கும் அந்த விவகாரம் வந்தது. "சரியாகவோ, தவறாகவோ எந்த வகையில் குற்றம் சாட்டப்பட்டாலும் உடனே ஒதுங்கி நிற்க வேண்டும்" என்று இப்போது சொல்கிற நாவலர் அவர்கள், அப்போதே கல்வி அமைச்சர் பொறுப்பிலிருந்து ஒதுங்கி நின்று மற்றவர்களுக்கு வழிகாட்டியிருக்கலாமே, என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

"சரியாகவோ தவறாகவோ ஒருவர் மீது குற்றம் சாட்டப் பட்டால் ஒதுங்கி நிற்க வேண்டும்" என்ற இந்தக் கொள்கையை நாவலர் அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி எம்.ஜி.ஆர். மீது யாராவது சரியாகவோ, தவறாகவோ புகார் தரும்படிச் செய்து அவரையும் ஒதுங்கி நிற்குமாறு வலியுறுத்தி அந்த இடத்திற்குத் தான் வந்து விடுவதற்கான தந்திரத்தைக் கையாளுகிறார் என்று நான் நினைக்கவில்லை! எனினும் சம்பந்தப்பட்டவர்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது!

தன்னிடம் பத்தாயிரம் ரூபாய் லஞ்சம் கொடுக்க வந்தார் என்று ஒரு நண்பரைப் போலீசில் பிடித்துக் கொடுத்தார் நாவலர்! பிறகு அந்த நண்பர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு குற்றம் சுமத்தப்பட்டார்! இப்போது அந்த நண்பர் எம்.ஜி.ஆர். கட்சியின் முக்கியப் பேச்சாளர்களில் ஒருவராக விளங்குகிறார். அவரையும் சேர்த்துத்தான் அண்ணாவின் உண்மையான தம்பிகள் என்று நாவலர் இப்போது வர்ணிக்கிறார்! என்னே காலம் பார்த்தாயா? ஏதோ ஒன்றை எதிர்பார்ப்பதால் எப்படியெல்லாம் எழுதத் தோன்றுகிறது பார்த்தாயா?

1972-ஆம் ஆண்டு சென்னை சேப்பாக்கம் விருந்தினர் விடுதியில் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூடி, எம்.ஜி.ஆர். மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆவேசமாகப் பேசுகிறார்கள். செழியன், மாறன் இருவரும், திருமதி சத்தியவாணி முத்து, நண்பர் ப.உ.ச. ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களின் கருத்தை ஏற்காமல் அவர்களை அமைதிப்படுத்த முயலுகின்றனர். இதற்கிடையே, கீழே வந்து காத்திருந்த பத்திரிகை நிருபர்களுக்கு திரு.என்.வி.என். மூலமாக நாவலர் செய்தி அனுப்பி விடுகிறார். எம்.ஜி.ஆர். அவர்களைக் கழகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கி வைத்திருப்பதாக!

"சரி, செயற்குழு உறுப்பினர்கள் சமாதானமாகி விட்டார்கள். நாளை எம்.ஜி.ஆரிடம் நேரில் பேசி, செயற்குழு உறுப்பினர்களின் மன வேதனையைத் தெரிவிக்கலாம் என்ற முடிவோடு இன்று கலையலாம்" என்று நான் கூறுகிறேன்.

"இல்லை! இல்லை! பத்திரிகைக்குச் செய்தி போய் விட்டது."

என்கிறார் நாவலர். "ஆமாம்! நாவலர்தான் என்னைக் கீழேயுள்ள நிருபர்களிடம் அனுப்பி வைத்தார்" என்கிறார் என்.வி.என்.

இந்த உண்மையை மனச்சாட்சியுள்ள செயற்குழு உறுப்பினர்கள் யாரும் மறுக்க முடியாது.

அன்று எம்.ஜி.ஆர். மீது நடவடிக்கை எடுப்பதில், கழகக் கட்டுப்பாடு காப்பதில் அவ்வளவு வேகமும், அவசரமும் காட்டிய நாவலர் அவர்கள், இன்று திராவிடர் இயக்கத்தின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவது எத்துணை வேடிக்கையாக இருக்கிறது! என் செய்வது, எதையோ ஒன்றை எதிர்பார்க்கும் போது எப்படியெல்லாமோ பேசச் சொல்கிறது!

இன்னொரு முரண்பாடு கண்டாயா? எம்.ஜி.ஆர். தன் கட்சியை அகில இந்தியக் கட்சி என்று மாற்றிக் கொண்டு, அது ஒரு மாநிலக் கட்சியல்ல என்று பல விளக்கங்களைப் பல நேரங்களில் அளித்துள்ளார். ஆனால் நாவலர் அறிக்கை என்ன கூறுகிறது தெரியுமா?

"மாநிலக் கட்சிகளுக்கு மக்களிடத்தில் சிறப்பான இடம் இருக்கிறது என்பதையும் இந்தத் தேர்தல் முடிவு தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியுள்ளது."

கட்சியை உருவாக்கியவர் அகில இந்தியக் கட்சி என்கிறார்! அங்கே ஒட்டிக் கொள்ள முயற்சிப்பவர் மாநிலக் கட்சி என்கிறார்! அவலை நினைத்து உரலை இடித்தால் இப்படிப்பட்ட அவல நிலைகள் எல்லாம் ஏற்படத்தான் செய்யும்!

என்ன இருந்தாலும் எனக்கு ஒரே ஒரு வருத்தம் நாவலர் அவர்கள் மீது!

130 இடங்களைப் பெற்றுள்ள அ.இ.அ.தி.மு.க.வுக்கு வாழ்த்தும் பாராட்டும் வழங்கி, பெரு மகிழ்ச்சி அடைந்துள்ள நாவலர் அவர்கள், ஒரு இடம் கூடக் கிடைக்காது என்று அவரால் கருதப்பட்ட தி.மு.க.வுக்கு 48 இடங்கள் கிடைத்தமைக்கு ஒரு வாழ்த்து சொல்லியிருக்கக் கூடாதா? என்பதுதான் அந்த வருத்தம்!

அந்த ஒரு வாழ்த்தை அவர் கூறியிருப்பாரேயானால், என் பிறந்த நாளுக்கு ஒரு வாழ்த்துத் தந்தி கூட அனுப்பாமல் இருந்து விட்டாரே! அதைப் பற்றிக் கவலைப்படாமல் இந்த வாழ்த்தை எண்ணிக் களிபேருவகை அடைந்திருப்பேன்!

எதையோ எதிர்பார்த்திடும் நேரத்தில் என் குரல் அவர் காதிலா விழப் போகிறது? இருந்தாலும் சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லி வைப்பது என் கடமை என்பதால் சொல்லி வைத்தேன்!

அன்புள்ள,

மு. க.

18-06-1977

422. இசையும் - இருமலும்!

உடன்பிறப்பே,

மறைந்துவிட்ட நண்பர் சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் கழகத்தை விட்டுப் பிரிந்து சென்று புதுக்கட்சி தொடங்கி, அண்ணா அவர்களைப் பற்றிக் கடுமையாக விமர்சனம் செய்து, இல்லாத கற்பனைச் செய்திகளையெல்லாம் இட்டுக்கட்டி அறிக்கைகள் விடுத்துத் தனது எரிச்சலைத் தீர்த்துக் கொண்டபோது அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதும் கடிதம் என்ற கட்டுரைகள் பலவற்றில் நண்பர் சம்பத்தின் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் விடையெழுதி விளக்கம் தந்து வந்தார் மிக உருக்கமாக! அதில் ஒரு பகுதியை இப்போது உனக்கு நினைவூட்டுகிறேன்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு பேசியதற்கு மாறாக இப்போது பண்டித நேரு பேசுகிறார். மாறிப்பேசலாம் - ஆனால் பத்து ஆண்டுகள் என்னும் இவ்வளவு குறுகிய காலத்திலா? என்று இடித்துக் கேட்டவர் சம்பத் இவர்! ஆனால் இவர், தம்பி! பத்து நாட்கள் கூடப் பொறுத்துக் கொள்ளவில்லை. 7-4-61-ல் தி.மு.க. வரலாற்று வெளியீட்டு விழா! 9-4-61-ல் தி.மு.கழகம் பயனில்லை, அதை விட்டு விலகி விடுகிறேன் என்று அறிக்கை! இவர்தான் பத்தாண்டுக் கணக்கை எடுத்து வைத்துக் கொண்டு நேருவைப் பிய்த்து எறிந்தவர் .. .. நமது கழகத்தை விட்டு விலகிப் புதுக்கட்சி அமைப்பது மட்டுமல்ல! புதுக்கட்சியின் வளர்ச்சி கூடப் பிறகு; முதலில் தி.மு.கழகத்தை அழிக்க வேண்டுமாம்! ஏனெனில் இவர் வெளியேறி விட்டார் அல்லவா, அதனால்!

தம்பி! அவர் பேசியவற்றைக் கொண்டு அவருக்கு அவரே பதில் சொல்ல ஏற்பாடு செய்! அப்போதுதான் அவரையும் மக்கள் புரிந்து கொள்ள முடியும்!

இப்படிப்பட்டவர்களால் தி.மு.கழகத்தை எதுவும் செய்ய முடியாது என்பதும் விளங்கும்.

என் செய்வது! கேட்போரைச் சொக்கவைக்கும் இசை வாணனுக்குக் காய்ச்சல் கண்டால், பக்கத்திலே உள்ளவர்களின் காது குடையும் விதமாக இருமுகிறார்! அதற்காக அவர் மீது கோபித்துக் கொள்கிறோமா? பரிதாபப்படுகிறோம்! காது குடைச்சல் எடுக்கும்படியாக அவர் இருமும்போதுகூட அவர் நன்றாக இருந்தபோது பாடிய பண்ணின் இனிமையை எண்ணிக்கொள்கிறோம். ஆகவே தம்பி! ..... தூற்றிப் பேசுகிறார்களே, என்று துயரப்படாதே! தூற்றிப் பேசுவோரின் பட்டியலில் சில புதிய பெயர்கள் இணைக்கப்படுகின்றன. வேறொன்றுமில்லை என்று எண்ணிக்கொள் .....

இவ்வாறு அண்ணா அவர்கள் 1961-ஆம் ஆண்டு எழுதிய வாசகம், பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறதல்லவா?

நமது கழகம் தோன்றிய நாள் முதல் ஏச்சுகளும், பேச்சுகளும், இழிதகை எதிர்ப்புக்களும் நம்மை அழித்திடும் போர்க் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டு அவை முனை மழுங்கிப் போயிருக்கின்றனவே அல்லாமல் கழகத்தின் கொள்கை வலிவை, அமைப்பு ரீதியான செயல்வீரர்களின் கட்டுக்கோப்பை ஒரு சிறிதும் அழித்திட இயலவில்லை என்பதைக் காலக் கணக்கு காட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

தேர்தல் கணக்குகளை மாத்திரம் பார்த்து இடம் தேடி அலைவோர்க்கு - இக்கரைக்கு அக்கரை பச்சை என ஓடுவோர்க்கு - கொள்கை உறுதியில்லாதோர்க்கு வேண்டுமானால் கழகம் சந்திக்கும் இன்னல்களும், இடையூறுகளும் கழகத்தை இனி தலைதூக்க விடாது என்ற அச்சத்தை மூட்டிடக் காரணங்களாக இருந்திருக்கலாம். அவர்கள், கழகத்தினால் தனக்கென்ன லாபம் எனக் கணக்குப் போட்டவர்கள்; அவர்களால் எந்தக் கட்சியிலும் நிலையாக இருக்க முடியாது. அற்றகுளத்து அறுநீர்ப்பறவை போல அரசியலில் இடம் மாறிடும் பண்பினராகவே இறுதி வரையில் வாழ்ந்து முடிப்பார்கள்.

அவர்கள், தாங்கள் தாவிச் சென்று பிடித்த இடங்களில் தற்காலிகமாகவாவது காலூன்றிக் கொள்ள தாங்கள் வளர்ந்த

இடத்துக்கு நன்றிக் கடனாக நாராச மொழிகளில் பேசிட வேண்டியிருக்கிறது! நரகல் நடையில் எழுதிட வேண்டியிருக்கிறது!

எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிடுகிறேன் உனக்கு!

தமிழகச் சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிப் பொறுப்பை ஏற்றிடும் தி.மு.கழகம் அண்ணா வழியில் பொறுப்பான எதிர்க்கட்சியாக செயல்படும் என்றும், நண்பர் எம்.ஜி.ஆர். அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றிடத் தொடங்குவதற்கு ஆறு மாதம் வரையில் காத்திருப்போம் என்றும் அறிவித்துள்ளது. முதன்மையான எதிர்க்கட்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரு கட்சி இத்துணை அடக்கமும், பண்பாடும் காட்டுகிற வகையில் நடந்துகொள்கிறபோது - ஆளுங்கட்சியாகப் பொறுப்பேற்றிடப் போகும் நண்பர் எம்.ஜி.ஆர். கட்சியினர் அந்த அடக்கத்துடனும், கண்ணியமான போக்குடனும் நடந்து கொள்கிறார்களா - என்பதை எம்.ஜி.ஆர். அவர்களை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகையைப் பார்த்தாலே புரியும்!

அந்த இதழ் உதிர்த்திருக்கும் அருமையான தமிழ் முத்துக்களைப்பார்!

கோபாலபுரத்துக் குடமுருட்டி!

கன்னக்கோல் திருடர்கள்!

கொள்ளைக் கூட்டம்!

இவையெல்லாம் ஆளுங்கட்சிப் பொறுப்பை ஏற்கும் ஒரு கட்சியின் அதிகாரபூர்வமான ஏட்டில் - அதுவும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஜி.ஆர். அவர்களை ஆசிரியராகக் கொண்ட ஏட்டில் - என்னைப் பற்றியும், கழகத்தினரைப் பற்றியும் தீட்டப்பட்டுள்ள எழுத்தோவியங்கள்?

எதிர்க்கட்சிகள் எப்படிச் செயல்பட வேண்டும். எப்படி எழுதிடவேண்டும், எப்படிக் கேலிச்சித்திரங்கள் வெளியிட வேண்டும் என்பதற்கு - இந்தப் புதிய ஆளுங்கட்சியினர் இப்படித்தான் வழிகாட்டுகிறார்கள் போலும்!

அரசு எவ்வழியோ குடிகளும் அவ்வழியே என்ற நிலை ஏற்பட்டு விடக்கூடாது. ஏனெனில், அரசோச்சப்போகும் கட்சியின்

வழி - அரசியல் நாகரிகம் சிறிதுமற்ற வழியாக அமைந்திடத் தொடங்குகிறது. ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டுவது, கடமை என்பதற்காக இதனைக் குறிப்பிட்டேன்.

ஏடும் எழுதுகோலும் யாரோ சிலருக்கு மட்டும் சொந்தமானவைகள் அல்ல!

கருத்துக்குக் கருத்து!

கொள்கைக்குக் கொள்கை!

அபிப்பிராய பேதங்கள்!

ஆணித்தரமான விவாதங்கள்!

சுவையும் சூடும் குறையாத

எண்ணப் பரிமாற்றங்கள்!

இந்த முறையில் நம்பிக்கையில்லாதவர்கள் இழிதகைச் சொற்களை ஈட்டிகள் என வீசுவார்களேயானால், அவற்றைத் தடுத்திடும் கேடயங்கள் ஏந்திய வீரர்கள் மட்டுமல்ல! தி.மு.கழகத்தினர் பதிலுக்குப் பல்லாயிரம் ஈட்டிகளைக் குறிதவறாமல் வீசிடும் ஆற்றல் பெற்றவர்கள்தான்! எனினும் அந்த நிலை தோன்றிடலாகாது என விரும்புவதால் - அண்ணா கூறியது போல, இனிய இசை பொழிந்த வித்துவான் இப்போது இருமுகிறார் பாவம்! என்று பரிதாபப்பட வேண்டியதுதான்! பொறுத்திருந்து பார்ப்போம், இருமல் நிற்கிறதா என்று!

அன்புள்ள,

மு. க.

21-06-1977

423. நற்பணியில் ஒரு பணி!

உடன்பிறப்பே,

கழகத்தின் உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை முடித்து, எல்லா அமைப்புகளின் தேர்தல்களையும் நடத்திட இரண்டு மூன்று தடவைகள் தலைமைக் கழகம் முயற்சிகளை மேற்கொண்டு அறிக்கைகளை விடுத்தது. ஆனால் இடையிடையே குறுக்கிட்ட நாடாளுமன்றத் தேர்தல், சட்டப்பேரவைத் தேர்தல் போன்றவைகளாலும் கழகத்திற்குள் ஏற்பட்ட வேறு சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகளாலும் கழகத்தின் பொதுத் தேர்தலை தள்ளிவைக்க வேண்டியதாயிற்று.

விரைவில் உறுப்பினர் சேர்க்கும் வேலையை முடித்து அமைப்புகளின் தேர்தல்களை நடத்திட வேண்டுமென்று நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் கழக உடன்பிறப்புகளுக்கு வேண்டுகோள் தந்துள்ளார்.

அதற்கேற்ப வரும் ஜூலை 31-ஆம் நாள் வரையில் உறுப்பினர் சேர்த்தல், புதுப்பித்தல் ஆகியவற்றுக்கான கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கால நீடிப்பைப் பயன்படுத்திக்கொண்டு, மேலும் இலட்சக்கணக்கான உறுப்பினர்களைக் கழகத்திற்குள் சேர்த்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர் சேர்ப்பதில் சில இடங்களில் ஏற்படுகின்ற குறைபாடுகளையும் நான் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை.

ஓரிரு கிளை அமைப்புக்களில் நிறையப்பேர் உறுப்பினர்களாகச் சேருவதற்கு முன்வந்தாலும்கூட அந்தக் கிளை கழகச் செயலாளரோ அல்லது நிர்வாகிகளோ, ஒரு கிளை அமைப்பதற்குத் தேவையான உறுப்பினர்களை மட்டுமே சேர்த்துக் கொண்டு மற்றவர்களை உதறி விடுகிறார்கள். இது

எல்லா இடங்களிலுமல்ல! ஒரு சில இடங்களில்! தாங்களே அந்தக் கிளையின் நிர்வாகப் பொறுப்புக்கு வர வேண்டுமென்ற ஆசையின் காரணமாக அப்படிச் செய்து விடுகிறார்கள். இதுபோன்ற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி வந்துள்ள முறையீடுகளை மனத்திற் கொண்டு உறுப்பினர்கள் சேர்ப்பதில் சில நடைமுறைச் சீர்திருத்தங்களைத் தலைமைக் கழகம் ஆராய்ந்து விரைவில் அறிவிக்க இருக்கிறது.

உடன்பிறப்பே, நீ உறுப்பினர்களைச் சேர்க்கும் பொறுப்பில் இருந்தால் உடனடியாக அந்தக் கடமையை முழுமைப்படுத்தி, அந்தப் பட்டியலை உரிய முறையில் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்திடு!

நீ, இன்னும் உன் உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக் கொள்ளவில்லையென்றால், பொதுச் செயலாளரின் அறிக்கையைக் கண்ட அடுத்தகணமே, உரியவர்களிடம் சென்று முறையாகப் புதுப்பித்துக் கொள்!

புதிதாகச் சேரவிரும்புகிறவர்களையும் உறுப்பினர்களாக்கி, நமது உடன்பிறப்புகளின் பட்டாளத்தை விரிவு படுத்திட இப்போதே விரைந்து எழுந்திடு!

நடந்து முடிந்த தேர்தலிலேகூட கேள்விப்படுகிறேன்; உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் உயிரையும் பணயம் வைத்துக் கழக வெற்றிக்காக உழைத்திட்டபோது, சில பேர் - ஆம்; மிகச் சிலபேர் - ஆனால் நமது உடன்பிறப்புகள்தான் - வெறும் தோற்றத்துக்காகத் தேர்தல் வேலை செய்ததுபோலக் காட்டிக் கொண்டு - கடமை உணர்வைக் கைகழுவி விட்டார்கள் என்பதாக!

அதைக் கேள்விப்படும் போதும் - அவர்கள் யார் யார் என்று அறிந்திடும் போதும் - உள்ளம் வேதனை அடையத்தான் செய்கிறது - இருப்பினும் அது அவர்கள் இயல்பு; அவர்கள் அப்படித்தானிருப்பார்கள் - அவர்களின் வேலையையும் சேர்த்து நாம்தான் செய்ய வேண்டும் - என்ற உணர்ச்சியுடன்தான், தேர்தல் பணியை மட்டுமல்ல - கழகப் பணி எதுவாயினும் அவற்றைச் செய்து முடித்திடுவோம் எனச் சூளுரை மேற்கொண்டிட வேண்டும்.

இப்போது நம் முன்னால் இருக்கிற பணி, கழகக் கோட்டையை இன்னும் வலிவுடையதாக ஆக்கிடும் பணியாகும்!

ஆதிக்க யானைகள் ஆயிரம் ஒன்று சேர்ந்து மத்தகங்களால் முட்டினாலும் அசைந்து கொடுக்காதக் கதவுகளை நமது கழகக் கோட்டைக்கு அமைப்போம்.

அவதூறுப் பிரச்சாரமெனும் பீரங்கிகள் இடைவிடாது குண்டுகளைப் பிரசவித்துக் கொண்டிருந்தாலும், நமது கோட்டையின் ஒரு கல்லைக்கூட உடைக்கமுடியாது என்று நிரூபித்துக் காட்டுவோம்.

சலனங்கள், சபலங்கள் எனும் படைவரிசைகள் நமது அரணை அணுக முடியாதபடி நமது அமைப்புகளாம் அகழ்களை அகலப்படுத்தி ஆழப்படுத்துவோம்.

கழகக் கோட்டை நாம் பதவிக் கொலு வீற்றிருக்க அல்ல! தமிழ்த்தாய்க்கு அரியாசனமிட்டு அவள் ஈன்ற மக்களை அவனியில் புகழ்மிக்கச் சமுதாயத்தினராக விளங்கிடச் செய்ய நமது ஆருயிர் அண்ணன் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

அந்த அண்ணனின் கொள்கைகளை அணுப்பிசகாமல் நிறைவேற்றிடத்தான் கடுஞ் சோதனைகளையும் தாங்கிக் கொண்டு கழகக் கோட்டையின் காவலர்களாக உலவிக் கொண்டிருக்கிறோம்.

ஜனநாயகம் - அவரது வாழ்க்கை நெறி!

அந்தத் தூய கொள்கைக்கு இந்தியாவில் கடந்த காலத்தில் தூக்குக் கயிறு கட்டப்பட்ட போது அதனை அறுத்தெறிந்த முயற்சியில் நம் கரங்களிலே ஏற்பட்ட காயத்தில் இன்னமும் குருதி கொட்டிக் கொண்டுதானிருக்கிறது!

சமதர்மம் - அவரது இலட்சியம்!

உதட்டளவில் அந்த முழக்கமில்லாது செயலில் காட்டிட ஒன்பதாண்டுக் காலக் கழக ஆட்சி, எத்தனையோ சீமான்கள், பூமான்களின் சீற்றத்துக்கு ஆளாகியிருக்கிறது!

ஒளிமிகு தமிழ்ச் சமுதாயம் - அவரது உயிர்மூச்சு

அந்தச் சமுதாயத்தின் மேன்மைக்கு ஏற்பட்ட இடையூறுகளையெல்லாம் புறங்காண்பதில் கழகம் அடைந்த வெற்றி கொஞ்சமா? இன்னமும் தமிழ்ச் சமுதாயத்தின் மொழி

உணர்வையும், கலாச்சாரப் பெருமையையும் காத்திடும் போர்க்கோலம் பூண்டு தானே கழகம் நடமாடிக் கொண்டிருக்கிறது!

எனவே, என்னுயிர் உடன்பிறப்பே! நமது கழகத்தின் வலிமையை நாள்தோறும் பெருக்கிடும் நற்பணியில் ஒரு பணிதான் உறுப்பினர் சேர்க்கும் பணி!

அப்பணியில் அயராது ஈடுபட வேண்டுகிறேன் உன்னை!

அடிக்கடி ஒன்று சொல்வேனே! அதனையும் மீண்டும் ஒருமுறை நினைவூட்டி இன்றைய கடிதத்தை முடிக்கிறேன்.

தன்னால் கழகத்திற்கு என்ன இலாபம் என்று கணக்கிடுவோன், கழகத்தின் இரத்த நாளம்!

கழகத்தால் தனக்கு என்ன இலாபம் என்று கணக்கிடுவோன், கழகத்தில் வளரும் புற்றுநோய்!

அன்புள்ள,

மு. க.

22-06-1977

424. நாடு தாங்கும் வரையில் நடக்கட்டும்!

உடன்பிறப்பே,

* “நாடி விழுந்து நரம்பறுந்து போக நாட்டின் நாயகனாய் - இந்த நாலரைக் கோடி மக்களின் முதல்வனாய் புரட்சித் தலைவர்.
* ராஜநடை போட்டுச் சிங்காசனம் ஏறும் காட்சியைக் கண்ணாரக் காணாத கண் என்ன கண்ணோ?
* கண்மணித் தலைவனின் கருணைப் பேருரையைக் காதாரக் கேட்காத காதென்ன காதோ?”

யாரையும் கேலி செய்து நான் எழுதிய வாசகங்கள் என்று தயவு செய்து நீ எண்ணிக் கொண்டு “என்ன நமது கருணாநிதி இப்படியெல்லாம் எழுத ஆரம்பித்து விட்டான்” என்று முணு முணுக்காதே!

நான் எழுதினால் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களை
“நாடி விழுந்து நரம்பறுந்து போக
நாட்டின் நாயகனாய்”

என்கிற அளவுக்கு விரசமாகவோ, தரக்குறைவாகவோ எழுதியிருக்க மாட்டேன் என்பது உனக்கு நன்றாகத் தெரியும்.

இந்த வரிகளை, எம்.ஜி.ஆர் அவர்கள், அவரே நடத்துகிற பத்திரிகையில் “இரத்தத்தின் இரத்தமே!” என அழைத்து விடுத்துள்ள அழைப்பிலேதான் நான் கண்டேன்.

நாடி விழுந்து
நரம்பறுந்து போக
நாட்டின் நாயகனாய்

என்றெல்லாம் கைகூசாது எழுதிட என்னால் இயலாது!

நானும் யோசித்துப் பார்த்தேன். “நரம்பறுந்து போன” என்பதற்குப் பதிலாக “நரம்பறுந்து போக” என்று அச்சுப் பிழை ஏற்பட்டிருக்குமோ என்று! அப்படியிருந்தாலும் திருத்திக் கொண்டு சேர்த்துப் படித்தால்,

"நாடி விழுந்து நரம்பறுந்து போன" என்று "நாட்டின் நாயகனுக்கு" அடைமொழிகளாகவன்றோ அந்தச் சொற்கள் அமைந்திடுகின்றன.

"ராஜநடை போட்டுச் சிங்காசனம்
ஏறுகிறார்.
கருணைப் பேருரையாற்றுகிறார்."

என்று நண்பர் எம்.ஜி.ஆர். அவரது ஏட்டிலேயே எழுதிக் கொண்டிருப்பது பற்றியோ அல்லது நாடி விழுந்தது - நரம்பு அறுந்தது போன்ற சொல்லாடல்களைப் பற்றியோ கூட நான் அக்கறை காட்டிடவில்லை.

"திராவிட இயக்கத்திற்கு தீராத நோய் என வந்த புல்லர்கள் சிலர் ஏழாண்டுகளாய் மண்ணில் புதைத்த அண்ணன் புகழை, அண்ணன் அரசைச் செதுக்கிப் புதுப்பொலிவு ஊட்டிடும் திருநாள்."

என்று எம்.ஜி.ஆர். பதவியேற்கும் நாள் பற்றி அவரது ஏடு குறிப்பிட்டுள்ளதே! அது பற்றிச் சில சொல்ல நினைக்கிறேன்.

"அண்ணா" என்ற பெயரை அடிக்கடி உச்சரிப்பதாலேயே அண்ணாவின் கொள்கையைக் காப்பாற்றி, அண்ணாவின் புகழை ஓங்கச் செய்கிறவர்கள் என்று மக்கள் எண்ணி ஏமாறுவர் என்று இவர்கள் கருதுகின்றனர்.

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு ஏழாண்டுக் காலத்தில் அண்ணாவின் புகழை மண்ணில் புதைத்து விட்டோமாம், நாம்!

சென்னையில் அண்ணா சாலை,
அண்ணா மேம்பாலம்
அண்ணா சதுக்கம்
தமிழக முழுதும் அண்ணா சிலைகள்
அண்ணா பெயரால் கல்லூரிகள்
அண்ணா பெயரால் மருத்துவமனைகள்
அண்ணா பிறந்த நாளில் காவல் துறையினர்க்குப்
பதக்கம்அளிக்கும் விழா.

அப்படி ஆயிரமாயிரம் நினைவுச் சின்னங்கள், அண்ணாவின் புகழ் பரப்பிட ஏழாண்டுக் காலத்திலே கழக ஆட்சியிலே தான் உருவாக்கப்பட்டன.

அண்ணாவின் கொள்கைக்குத்தான் என்ன ஊனம் ஏற்பட்டது?

"கேப்டலிசம்
கம்யூனிசம்
சோஷலிசம்
மூன்றும் சேர்ந்ததுதான் அண்ணாயிசம்" என்று சொல்லி நானோ நமது பேராசிரியரோ கடந்த ஏழாண்டுக் காலத்தில் அண்ணாவின் கொள்கையைக் குழம்பிய குட்டையாக ஆக்கியதுண்டா?

அந்த அரும்பெரும்? காரியத்தைச் செய்தவர் நண்பர் எம்.ஜி.ஆரைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும்?

மாநிலங்கள் அவையில் 1966-ல் அண்ணா இருந்த போது அப்போதிருந்த நெருக்கடி நிலையையும், பாதுகாப்புச் சட்டத்தையும் ரத்து செய்யாமல் இந்திரா அரசுக்கு ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவதற்கே தகுதியில்லை என்று ஆணித் தரமாகவும் அழுத்தம் திருத்தமாகவும் உரத்த குரலெடுத்து முழங்கினார்!

ஆனால் அண்ணா பெயரை அடிக்கடிப் பயன்படுத்துகிற "உண்மைத் தம்பி"? எம்.ஜி.ஆர். அவர்கள், அன்றைக்கிருந்ததை விட, பயங்கரமான 'மிசா' சட்டத்தையும் - நெருக்கடி நிலைப் பிரகடனத்தையும் வரவேற்று, ஆதரித்து, அதற்குப் பெயர்தான் "உண்மையான ஜனநாயகம்" என்று வாதிட்டும் வந்தார்.

தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சிகள், நெருக்கடி காலக் கொடுமைகளைக் கண்டித்தபோது - மிசாவுக்குப் பலியானபோது - "இவர்கள் எல்லாம் பாசிஸ்டுகள்" என்று மாநாடு போட்டு வசைபாடிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணாவின் கொள்கைக்குப் பாதுகாவலராம்! அண்ணா போற்றி வளர்த்த ஜனநாயக நெறிக்காகப் பாடுபட்டு, துன்பங்களை ஏற்றுக் கொண்ட தி.மு.கழகத்தினர், அண்ணாவின் புகழை மாய்த்தவர்களாம்!

மாநில சுயாட்சிக் கொள்கையை ஏற்றிட முடியாது என மறுத்துரைத்தோர் அண்ணாவின் தம்பிகளாம்!

1968-ல் அண்ணா அவர்கள் 'மாநில சுயாட்சி' பற்றி முழங்கியதை எடுத்துக் காட்டிடும் நாம், அண்ணாவுக்கு தம்பிகள் அல்லவாம்!

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவையற்றது என சட்டமன்றத்தில் வாதிட்டோர் அண்ணாவின் தம்பிகளாம்!

அதுதான் அடித்தளத்தில் வீழ்ந்து கிடக்கும் பிற்பட்ட மக்களுக்கு "வரப்பிரசாதம்" என்று கூறிவரும் நாம், அண்ணாவுக்குத் தம்பிகள் அல்லவாம்!

தமிழ் இலக்கியம், வரலாறு, கலாச்சாரம் மங்காமல் மறையாமல் போற்றிக் காக்கப்பட வேண்டும் என்று அண்ணா கூறியதற்கேற்ப புதிய பூம்புகாரும், வள்ளுவர் கோட்டமும் அமைத்திட்ட நாம், அண்ணாவுக்குத் தம்பிகள் அல்லவாம்!

"வள்ளுவர் கோட்டமும் பூம்புகாரும் தேவைதானா" என்று தேர்தல் நேரத்துக் கூட்டங்களில் இடித்துரைத்த நண்பர் எம்.ஜி.ஆர். தான் அண்ணாவுக்குத் தம்பியாம்!

உடன்பிறப்பே! அண்ணாவின் கொள்கைகளை நெஞ்சுறுதியுடன் நின்று நிறைவேற்றுகிற நம்மை நோக்கி,

தீராத நோய் என்றும் -
புல்லர்கள் என்றும் -

நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஏடு இழிசொற்களால் தாக்குவதைக் கண்டு சீற்றம் கொண்டிடத் தேவையில்லை!

ஒருமுறை அண்ணா எழுதியதை உனக்கு நினைவூட்டுகிறேன்.

"இழிமொழி பேசுவோர்க்குப் பதில்மொழி, அதனினும் இழிந்ததாகப் பிழிந்தெடுத்துத் தருவது என்பது இயலாததல்ல! எவரிடமும் பாடம் கேட்கவும் தேவையில்லை. யானை, துரத்திக் கொண்டு வந்தால் அச்சத்துடன் "அய்யோ" என்று அலறுவர். பன்றி, பாய்ந்தோடிவரின் அருவருப்புடன் "ஐயய்யே!" என்று கூறியபடி ஒதுங்கிக் கொள்வர்."

உடன்பிறப்பே, அண்ணாவின் இந்தக் கருத்தின் ஆழமான பொருளை உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டு, நமது கடமையினைச் செய்வோம்! என் செய்வது! யாருக்கோ அதிர்ஷ்டம் வந்தால் அர்த்தராத்திரியில் மழையில்லாத வேளையில் - குடை பிடித்துக் கொண்டு போவார்களாம்! அதுதான் நடக்கிறது இப்போது! நடக்கட்டும்! நாடு தாங்கும் வரையில் நடக்கட்டும்!

அன்புள்ள,
மு. க.
23-06-1977

425. வெண்ணெய் உருகுது வெயிலில்!

உடன்பிறப்பே,

இலக்கியக் கடிதம் எழுதி எத்தனையோ நாட்கள் ஆயிற்றல்லவா? அந்தக் குறை உனக்கு உண்டு என்பதால் இன்று எழுதுகிறேன்.

நெருக்கடி காலத்தில் இலக்கியம் எவ்வளவு பெருந்துணையாக விளங்கியது நமக்கு! தணிக்கை அதிகாரிகளைத் தவிப்புக்கு உள்ளாக்கி அவர்களால் வெட்டப்பட்டதுபோக எஞ்சிய எழுத்துகளும் உனக்கு இன்ப மூட்டின, எழுச்சியூட்டின என்று என்னைக் காணும் போதெல்லாம் சொல்வாயே நீ! கடிதங்களில் என்னை உற்சாகப்படுத்துவாயே நீ!

ஆமாம்! கரும்பைப் பல துண்டுகளாக வெட்டி - அதில் ஒரு துண்டைத் தின்றாலும் சுவை மாறுவதில்லையே - அதைப் புரிந்து கொள்ளாமல்தான் தணிக்கை அதிகாரிகள் நான் எழுதிய இலக்கியக் கடிதங்களைத் துண்டு துண்டாக வெட்டினர். ஆனால் நீயோ, வெட்டியதால் கரும்பு, எட்டியாகி விடாது என உரைத்துச் சுவைத்து மகிழ்ந்தாய்!

யசோதர காவியம் எனும் வடமொழி நூல் ஒன்றின் கதைச் சுருக்கத்தை எழுத்தில் வடித்துக் கடிதமாக தீட்டினேன் உனக்கு! அதைத் தீட்டியதின் நோக்கம் என்ன தெரியுமா? நல்ல தமிழ்ச் சொற்கள் பழக்குலைகள் போலக் குவிந்து கிடக்கும்போது அவற்றை விடுத்து ஆபாசச் சொற்களைத் தேடிப்பிடித்து நம்மீது அவதூறு அர்ச்சனை செய்கிறார்களே; அவர்களது இயல்பை விளக்க வேண்டும் என்பதுதான் அந்தக் கடிதத்தின் நோக்கம். அத்தகைய இழிதன்மை கொண்டோரின் - போக்கு பற்றி உரைத்திடத்தான் யசோதர காவியத்தில் வரும் மகாராணி ஒருத்தியை அவர்களோடு ஒப்பிட்டுக் காட்டினேன்.

அவள் அழகி! பேரழகி! அமிர்தமதி என்பது அவள் பெயர் மட்டுமல்ல; அவளையே அமிழ்தமென அருந்தி மகிழ்ந்தான் அவளை மணந்த மன்னவன். அவனும் அவளுக்குக் குறைவான அழகுபடைத்தவனல்ல! அந்த ஆண்மையாளனின் விரிந்து பரந்த மார்பகத்தில் அவள் முகம் புதைத்தால் நீலவானத்தில் நிலவு தோன்றுவது போலத்தான் இருக்கும். அவனது அகன்ற தோள்களிலே அவளோர் கிள்ளை போல் தொத்திக் கொள்ள முடியும். அவளை, அவன் தன் காதல் தெய்வமாகத்தான் போற்றினான் - புகழ்ந்தான் - முகில் தழுவும் அரண்மனை உப்பரிகையின் உச்சிமாடத்தில் அம்ச தூளிகா மஞ்சத்திலே அவனோடு படுத்திருக்கும் பேறுபெற்ற அவள் நினைவு மட்டும் அங்கே இருந்ததில்லை. இன்பமே என்று கொஞ்சுவான். அவளோ இன்பத்தை வேறு எங்கேயோ எதிர்பார்த்தாள். தொடுவான்! துவள மாட்டாள். தொலைநோக்குடன் ஆகாயத்தை வட்டமிடும் அவள் விழிகள்! என் உயிர் மூச்சே! என்று அணைப்பான்! அவளோ, ஒரு பெருமூச்சுடன் புரண்டு படுத்துக் கொள்வாள் வேறு பக்கமாக! துடியிடையடி உனக்கு! என்று தடவிக் கொடுப்பான். துடித்திடும் அவள் நெஞ்சம்! ஆனால் அவனை நினைத்து அல்ல! வேறு ஒருவனை நினைத்து!

நாட்டின் மகாராணி - மாடமாளிகைக்குச் சொந்தக்காரி - மன்னன் பட்டமகிஷி - கொற்றக்குடை கொண்டவனுக்குத் துணைவி - கொலுமண்டபத்தில் அரசனுடன் வீற்றிருந்து குடிமக்களின் குறை கேட்கும் பேரரசி!

இமைத்திடும் நேரத்தில் இட்ட கட்டளை என்னவென்று கேட்டு ஓடிவர ஏராளமானப் பணியாட்கள் உண்டு! மாற்றான் தலைகளைப் பந்தாடும் மாவீரர்களும் மண்டியிட்டுப் பணிந்து நிற்பர், அவள் மாளிகைத் தாழ்வாரத்தில் நடந்து வந்தால்! மகாராணியாயிற்றே! வீரர்கள் வணங்குவதில் வியப்பென்ன வந்தது?

சீர், சிறப்பு, கூடகோபுரம், கொற்றவனின் மடியில் இடம், இத்தனையிருந்தும் அவள் இதயம், எதையோ ஒன்றை தீராத பசியோடு தேடிக் கொண்டிருக்கிறது.

அமிர்தமதி தந்த சுகம் போதுமென்று அரசன் அயர்ந்து தூங்கிடுவான். அதன்பிறகு அவள் மெல்ல எழுந்து பூனைப்

பாதங்களால் நடை போடுவாள். அவள் மனங்கவர்ந்த யானைப் பாகனுக்காகத்தான் இத்தனை தவிப்பும்!

அரண்மனை தோட்டத்திலேயே அவன் காத்திருப்பான். அமிர்தமதி ஆசையுடன் அவனை நெருங்குவாள்! அந்த யானைப்பாகன், அதற்குள் தன் கையிலிருக்கும் சவுக்கால் அவளை நையப்புடைப்பான். அவள் தாமதமாக வந்ததற்காக அவன் தரும் தண்டனை அது! அந்தச் சவுக்கடிகளால் அவள் ஆடைகள் கிழிந்து நிலவொளியில் அவள் அங்கங்கள் தலைகாட்டிச் சிரிக்குமே அல்லாது அழத் தொடங்கிடாது! மன்னித்து விடு என் மன்மதனே என்று மகாராணி, அந்த யானைப் பாகனை ஆரத் தழுவி, ஆயிரம் முத்தங்களை அவன் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பொழிந்திடுவாள்.

பின்னர் இருவரும் பசும்புற்றரையில் வீழ்ந்தவாறே பரலோகப் பயணம், சொர்க்கலோகச் சுற்றுலா அனைத்தையும் நடத்துவர். யானைப் பாகனின் உடலில் கசியும் சீழும், ரத்தமும் அமிர்தமதியின் தங்கமேனியில் ஆங்காங்கு படிந்திருக்கும். அது அவளுக்கு வைரமும் பவளமும் போலத் தோன்றும்! வேறொன்றும் அந்த யானைப் பாகனுக்கு நோயில்லை, தொழுநோய்தான்!

இதுதான் உடன்பிறப்பே, அமிர்தமதியின் கதை! நல்ல கணவன் - நாடாளும் மன்னன் - ஆண்மையாளன் - அழகரசன் - அவனிருக்க, அவனை விடுத்து - தொழுநோய் கொண்ட யானைப் பாகனிடம், சவுக்கடிகளையும் தாங்கிக்கொண்டு சல்லாபத்திற்குத் தவங்கிடந்த அந்த மகாராணியைப் போலத்தானே, சில பேர் நல்ல தமிழ் இருக்க, அதை விடுத்து நாற்றமெடுத்த குட்டையில் நனைந்த சொல் எடுத்து எழுதுகின்றார் - ஏசுகின்றார் - என வேதனைப்பட்டு எழுதியிருந்தேன்.

அந்தக் கடிதமே உன் கைக்குக் கிடைக்காமல் தணிக்கை அதிகாரிகள் தடுத்து விட்டனர். நீதிமன்றம் வரையிலே நடக்க வேண்டியிருந்தது. உரிமைகள் பறிக்கப்பட்டிருந்த நேரம் - ஆதலால் நமது வழக்கை எடுத்துக்கொள்ளவே யாரும் தயாராக இல்லை!

அழகிய நாதனை விட்டு, அழுகிய பாகனை நாடி ஓடுகிறாளே ஒருத்தி - அதைப் போல எழிலார் தமிழ்ச் சொற்களை விட்டு, எருக்கம்பூ வார்த்தைகளைத் தேடுவது தீது என்று கூறுவதற்காக

எழுதிய கடிதம், ஏதோ சந்தேகப் பார்வைக்கு ஆளாகி - அதிகாரிகளால் அறவே தடுக்கப்பட்டு விட்டது! இந்தக் கதையின் குறிப்பை ஏற்கனவே ஒரு கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். இன்று சற்று விரிவாக எழுதினேன்.

முன்பு ஒரு சில எழுத்தாளர்களின் போக்கினைச் சுட்டிக் காட்ட நான் மேற்கோள் காட்டிய இந்தக் கதை இப்பொழுது அந்த எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல, நம்மை வெறுத்து வேறிடம் சென்றுள்ளார்களே சில பேர், அவர்களுக்கும் பொருந்தும் வண்ணம் அமைந்துள்ள தன்றோ!

காவியங்கள், கவிதைகள் எத்துணைச் சுவை கூட்டு பவைகளாக இருக்கின்றன; அதே சமயத்தில் மறைமுகமாக நாம் தெரிவிக்க வேண்டிய அரசியல் கருத்துகளுக்கும் அவை எவ்வளவு பயன்படுகின்றன பார்த்தாயா?

இன்று உனக்குக் கடிதம் எழுதத் தொடங்குவதற்கு முன்பு குறுந்தொகையைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். கவிஞர் வெள்ளிவீதியார் என்பார், ஒரு பாறையை நோக்கி என்னை அழைத்துச் சென்றார். எந்தப் பாறை? எந்த ஊரில்? மணப்பாறையா? வால்பாறையா? என்றெல்லாம் கேட்டு விடாதே! ஒரு மலைக்கருகில் உள்ள சிறிய பாறை! அதனை நோக்கி என்னை அழைத்துச் சென்று அதோ பார்! என்று சுட்டிக் காட்டினார். ஆவலுடன் நானும் பார்த்தேன். கண்ட காட்சியைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நான் சொல்லி விடுகிறேன், நீ எந்த நிகழ்ச்சியுடன் அதனை பொருத்திக் கொண்டாலும் பரவாயில்லை - நான் பார்த்த நிகழ்ச்சியை அப்படியே உனக்குப் படம் பிடித்துக் காட்டி விடுகிறேன்.

சிறியதோர் பாறை! அந்தப் பாறை மீது பெரியதோர் வெண்ணெய் உருண்டை இருக்கிறது! அந்த வெண்ணெய்க்கு ஒருவன், காவல் இருக்கிறான். அவனுக்கு இரண்டு கைகளும் கிடையாது. வாயும் பேச முடியாது - ஊமை! அந்த வேளையில் வெயிலும் ஏறுகிறது. வெயில் ஏற, ஏற பாறை மீதுள்ள வெண்ணெய் உருகுகிறது. அதை எடுத்து வேறிடம் கொண்டு போகலாம் என்றாலோ, காவல்காரனுக்குக் கைகள் இல்லை! யாரையாவது உதவிக்கு அழைக்கலாம் என்றாலோ, வாயும் இல்லை! வெண்ணெய் உருகிக்கொண்டேயிருக்கிறது.

உடன்பிறப்பே, கையில்லா ஊமையரிடம் வெண்ணெயைக் காவல் காத்திடுமாறு பணித்தால் என்ன ஆகும் - என்பதற்கு நான் கண்ட காட்சி விளக்கமான பதிலாக அமைந்திருக்கிறது அல்லவா?

இதைத்தான் வெள்ளி வீதியார், குறுந்தொகையில் அழகு தமிழ் எடுத்துச் சித்தரித்துள்ளார்.

ஞாயிறு காயும் வெவ் அறை மருங்கில்

கை இல் ஊமன் கண்ணின் காக்கும்

வெண்ணெய் உணங்கல் போல...

கையில்லா ஊமையை வெண்ணெய்க்குக் காவல் வைத்து, அதனை வெயிலிலும் வைத்து விட்டால்?

உடன்பிறப்பே, வெள்ளிவீதியார், குறுந்தொகையில் வேடிக்கையாகக் காட்டும் இந்த நிகழ்ச்சி, நாட்டில் உண்மையாகவே நடந்தால் எவ்வளவு வேதனையாக மாறிவிடும், புரிகிறதா?

அன்புள்ள,

மு. க.

24-06-1977

426. செயற்கைக் கொண்டைகள்! ஜாக்கிரதை!

உடன்பிறப்பே,

கேரளத்துச் சோக நிகழ்ச்சியொன்றை ஏடுகளில் படித்திருப்பாய்!

தங்கம்மா என்பது அந்த மங்கை நல்லாளின் பெயர்! தளிர்க்கொடி அவள். கற்புக் கனியாம் அந்தப் பொற்புடை மாதரசி, துணைவன் ஒருவனைக் கைபிடித்து இல்வாழ்வு தொடங்கப் போவதை எண்ணி எண்ணி மகிழ்ந்திருந்தாள். செவ்வாய்க் கிழமையன்று திருமண விழா! அதன் பிறகு தித்திக்கும் தேன்நிலவு! தொடர்ந்து முறையான வாழ்க்கை! இரண்டாண்டு இடைவெளிக்குப் பிறகு கையிலோர் தங்கப் பதுமை - அது ஆணாகவும் இருக்கலாம் அல்லது பெண்ணாகவும் இருக்கலாம். இப்படியெல்லாம் இன்பக் கனவுகள்! திங்கள் இரவெல்லாம் அந்தத் திங்கள் முகத்தழகிக்கு உறக்கமே வந்திருக்காது. எதிர்காலத்தைப் பற்றிய எத்தனையோ திட்டங்கள், எவ்வளவோ மனக் கோட்டைகள்!

வாழ்வின் சுவையை முதன் முதலாக உணர்த்தப் போகும் அந்த நாள் பொழுதும் விடிந்து விட்டது. மணமக்கள், கோட்டயத்திலுள்ள மாதா கோயிலுக்குச் சென்று தங்கள் மணவிழாவை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

மணமகள் தங்கம்மாவை அலங்கரிக்க அவள் தோழிகள் போட்டி போட்டுக் கொண்டு ஓடிவந்தனர். பொன் ரதமொன்று நகர்வது போல் இருக்க வேண்டும். அவ்வளவு பொலிவுடன் தங்கம்மாவைச் சிங்காரிக்க வேண்டும் என்று ஆர்வம் காட்டினர். வளையலை ஒருத்தி சரி செய்தாள். காதுக் கம்மலையொருத்தி எடுத்து மாட்டினாள். வருங்காலத்தைப் பற்றிய நினைவுப்

பரபரப்பில் தங்கம்மாளின் நெற்றியில் துளிர்த்த வியர்வைத் துளிகளை ஒருத்தி துடைத்திட்டாள்.

"தங்கம்மா! நேற்று வாங்கிய அந்தப் பின்னல் கொண்டை எங்கே?"
என்று ஒருத்தி கேட்டாள்.

"அதோ அங்கே இருக்கிறது பார்!" என்று காட்டினாள் தங்கம்மா.

உடனே ஓடிச் சென்று அந்தச் செயற்கைக் கொண்டையை இயற்கைத் தலைமுடியுடன் ஒழுங்குறப் பொருத்திக் களித்தாள் அந்தத் தோழி!

அலங்காரம் முற்றுப் பெற்றது! ஆனால் அந்தச் செயற்கையான பின்னல் கொண்டைக்குள் ஒரு ஆபத்து ஒளிந்திருப்பது யாருக்கும் தெரியவில்லை. எப்போதுமே இயற்கையானதுடன் செயற்கையானதை ஒட்டுவது என்பது அவ்வளவாக பொருந்தி வருவதில்லை. அதிலும் அப்படி வந்து ஒட்டப்படுகிற செயற்கைப் பொருளில் ஆபத்து ஒளிந்திருப்பது தெரியாமல் போய்விட்டால் - விளைவுக்குப் பின்தானே வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

செயற்கை முடிக்குள் அபாயம் ஒளிந்திருப்பது தெரியாமலே - மணமகளை ஊர்வலமாக மாதா கோயிலுக்கு அழைத்துச் சென்றனர்.

அப்போதுதான் அந்த ஆபத்து, தன் வேலையைத் தொடங்கியிருக்கிறது.

கழுத்தை அப்படியும் இப்படியும் அசைத்திருக்கிறாள். அதைச் சிலர் கவனித்தனர். ஆனாலும் மணப்பெண் நாணிக் கோணுகிறாள் என்று கருதிக் கொண்டனர். ஆலயத்துக்குள் நுழையும் போது அவள் முகம் சோர்ந்து போயிற்று - எதிர்கால இல்வாழ்வின் இன்ப துன்பங்களை எண்ணி அதிர்ச்சி அடைந்திடுகிறாள் என நினைத்தனர்.

புதிதாக வாங்கிய பின்னல் கொண்டையில் ஒளிந்திருந்த மிகச் சிறிய நாகமொன்று அவள் தலையிலேயே விஷத்தைச் செலுத்தி விட்டதை யாருமே உணரவில்லை.

மாதா கோயிலில், மணமகன் மாலையை அவள் கழுத்தில் அணிவித்த போது, அப்படியே சுருண்டு விழுந்தாள். மண வாழ்த்துக் கூற வந்தோர், அலறினர்! துடித்தனர்! தங்கம்மா, ஒரு நொடிக்குள் பிணமானாள். மண ஊர்வலம் நடத்த வந்தோர், பிண ஊர்வலத்திலேதான் கலந்து கொள்ள முடிந்தது.

உயிரற்ற தங்கம்மாவின் உடலைக் குளிப்பாட்டும் போது தான் அந்தச் செயற்கைக் கொண்டையிலிருந்த நாகம், வெளியே தலைநீட்டி ஊர்ந்து சென்றதாம். அதுவரையில் அவளது திடீர்ச் சாவுக்குக் காரணம் புரியவில்லை யாருக்கும்!

"நடந்துவிட்ட ஒரு சோக நிகழ்ச்சியை, இவ்வளவு விரிவான கடிதமாக ஏன் எழுதுகிறாய்? எனக்குத்தான் தெரியுமே - ஏடுகளில் படித்தேனே!"

என்று நீ கூறக்கூடும்! என்னதான் நீண்ட கருங்கூந்தல் இருந்தாலும் இந்தக் காலத்துப் பெண்களுக்குச் செயற்கைக் கொண்டை வாங்கிப் பொருத்திக் கொள்வதிலே ஒரு தனி ஆர்வம்! என் செய்வது, அது இப்போது நாகரிகமாக ஆகி விட்டது!

ஆரணங்குகளின் தலையலங்காரத்துக்கு மட்டுமல்ல! அரசியல் கட்சிகள் கூட "செயற்கைக் கொண்டை"களை வாங்கிப் பொருத்திக் கொள்வது இக்காலத்தில் தவிர்க்க முடியாததாகி விட்டது.

ஆனால், செயற்கைப் பின்னல் கொண்டைகளை வாங்குவோர், தங்கம்மாள் செய்த தவறைச் செய்துவிடக் கூடாது!

தன் கூந்தல் அழகு போதாதென்று செயற்கைக் கூந்தலால் ஆன கொண்டையை வாங்கினாள், அதுவரையில் சரி! அதனை எடுத்துத் தலையில் வைத்துக் கொள்ளும் போது ஒரு தட்டுத் தட்டிப் பார்த்திருக்க வேண்டாமா? அப்படிச் செய்திருந்தால், மறைந்திருந்த அந்தக் கொடிய நாகத்தை அப்போதே கண்டு பிடித்திருக்கலாமே!

தங்கம்மா, நாகத்தைத் தலையில் கட்டிக் கொண்டது போலத்தான், அரசியல்வாதிகளும் சிலபோ், விஷ நாகங்களை மடியில் கட்டிக் கொள்கிறார்கள்.

அனுபவத்தைச் சொல்கிறேன், அவ்வளவுதான்! நாகம் இருக்கிறதென்று தெரிந்திருந்தால் அந்தச் செயற்கைக் கொண்டையைத் தங்கம்மா, தலையில் வைத்திருக்க மாட்டாள். ஆனால் நாகம் இருக்கிறதென்று தெரிந்தும் சில அரசியல்வாதிகள் "செயற்கைக் கொண்டை"களைத் தங்கள் முடியில் இணைத்துக் கொள்ளத் துணிகிறார்களே, பாவம்! அவர்களுக்காகப் பரிதாபப் படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் நாம்?

இப்போது புரிகிறதா?

தங்கம்மாவின் சோகக் கதை,

உனக்காகச் சொல்லப்பட்டதல்ல!

யாருக்காக என்பதைக்

காலம் உணர்த்தும்!

அன்புள்ள,

மு. க.

25-06-1977

427. குவியட்டும் பெருநிதி!

உடன்பிறப்பே,

அரசியல் வஞ்சம் தீர்க்க இந்திரா அரசு நியமித்த விசாரணைக் கமிஷன்!

பழிவாங்கும் இயல்பு மாறவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக ஜோடிக்கப்பட்ட பொய் வழக்குகள்!

இவற்றுக்குச் செலவானது மட்டுமல்ல, நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் இவற்றையும் ஓரளவு சமாளிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளால் கழகத்தின் கருவூலம் காலியாகி விட்டது. கழகப் பணிமனையின் அன்றாடச் செலவுகளுக்கே நிதிவசதி இல்லை.

நிதி தேவை என்று கேட்டபோதெல்லாம் நீ அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறாய்!

இன்னும் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வேண்டுகோள்!

என்னையோ, பொதுச் செயலாளரையோ, பொருளாளரையோ, துணைப் பொதுச் செயலாளர் மற்றும் கழக முன்னணித் தலைவர்களையோ காண வரும்போது மாலையொன்று கொண்டு வருவதற்குப் பதிலாக - கைத்தறி ஆடையொன்று கொண்டு வருவதற்குப் பதிலாக - ஐந்தோ அல்லது பத்தோ என்று கழக வளர்ச்சி நிதி கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேடைகளில் மாலையும், துண்டுகளும் அணிவித்து முடியவே அரைமணி நேரமாகிறது. அரைக்கணம்கூட கழுத்திலோ தோளிலோ இல்லாத அந்த மாலைக்கும், துண்டுக்கும் செலவழிக்கும் பணத்தைக் கழக நிதியாகக் கையிலே கொடுத்திடுக!

தரும் நிதியுடன் உன் பெயரையும் ஒரு துண்டுத் தாளில் எழுதி இணைத்து அளித்திடுக.

மாலை அணிவித்தால் மேடையுடன் போய் விடுகிறது!

கைத்தறி ஆடை எங்கள் வீட்டுக்குத்தான் போய்ச் சேருகிறது.

அவற்றுக்குப் பதிலாகப் பணம் கொடுத்தால், அது கழக நிதிக்கு தலைமை அலுவலகத்திற்கு வந்து சேருகிறது.

என்னைப் பொறுத்தவரையில் கழக நிதி திரட்டுவதற்காகச் சில கண்டிப்பான நிபந்தனைகளை வெளியிடுகிறேன்.

தயவு செய்து கோபித்துக் கொள்ளாதே! கழகத்தின் நிதி நெருக்கடி அந்த அளவுக்கு இருக்கிறது.

பொதுக் கூட்டங்களுக்கு அழைப்பவர்கள், யார் அதிக நிதி திரட்டித் தருகிறார்களோ - அவர்களுக்குத்தான் தேதி தருவதில் முதலிடம் தரப்படும். குறைந்தபட்சம் கழக வளர்ச்சி நிதியாக ஆயிரம் ரூபாயாவது தந்திட வேண்டும். திருமண விழாக்களுக்கும் இது பொருந்தும். வசதியற்ற குடும்பங்களின் திருமணங்களைச் சுட்டிக் காட்டுவாய், எனக்குத் தெரியும் - அவற்றைப்பற்றி நேரில் பேசி, கழகத்திற்கு எவ்வளவு பயன் கிடைக்கிறது என்பதைக் கணக்கிட்டு முடிவு செய்து கொள்ளலாம்!

1967 தேர்தலுக்கு நிதியாகப் பத்து லட்சம் ரூபாய் வசூலிக்கும் பொறுப்பைப் பொருளாளர் என்ற முறையில் ஏற்றுக் கொண்டிருந்தபோது,

கொடியேற்று விழா என்றால் நூறு ரூபாய்!

உணவு அருந்துவது என்றால் இருநூறு ரூபாய் முதல் ஐநூறு ரூபாய் வரை!

என்று இப்படியெல்லாம் நமது கழக உடன்பிறப்புகளிடம் வசூல் செய்துதான் பதினோரு இலட்சத்தை தேர்தல் நிதியாகத் திரட்ட முடிந்தது.

அதைப்போலவே இப்போது கழக வளர்ச்சிக்கும், எதிர்காலத்தில் தேர்தல்களை சந்திப்பதற்கும், அலுவலகச் செலவுகளுக்கும் பெரும் நிதி தேவைப்படுகிறது.

உன் கையில் கிடைத்த ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் முதல் அன்புக் காணிக்கையை, அண்ணன் உருவாக்கிய கழகத்திற்கு அளித்திடத் தயங்காதே!

நீ, நேரில் கண்டால்தான் என்றில்லாமல், எங்கிருப்பினும் அங்கிருந்து தலைமைக் கழகப் பொருளாளர் முகவரிக்கு உன்னால் இயன்ற தொகையை அனுப்பிக்கொண்டே இரு!

நேரில் வழங்கும் தொகையுடன் உன் பேர், முகவரி இணைத்த துண்டுத் தாளையும் சேர்த்துக் கொடுத்திட வேண்டுகிறேன்.

அப்போதுதான் நீ வழங்கிய தொகை தலைமைக் கழகத்தில் சேர்ந்து விட்டது என்பதை ஏடுகளின் வாயிலாக அறிவிக்க இயலும்! நிதிக் கணக்கில் உன் பெயரைப் பார்த்தால் உனக்கும் ஒரு மகிழ்ச்சி ஏற்படும். தமிழ்ச் சமுதாயத்தின் அணையா விளக்காம் கழகத்திற்குத் துணை நிற்கிறோம் என்ற பெருமிதம் தோன்றும்!

என்ன! இன்னும் விரிவாக எழுதவேண்டும் என்று கருதுகிறாயா?

என் அன்பு உடன்பிறப்புக்கு ஒரு குறிப்புக் காட்டினால் போதாதா?

குன்றனையக் கொள்கை காக்கக் குவியட்டும் பெரு நிதி!

அன்புள்ள,

மு. க.

26-06-1977

428. நந்தினியின் குரலும் - நமது குரலும்!

உடன்பிறப்பே,

ஒரிசா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் நந்தினி சத்பதி, வெளியிட்டுள்ள அறிக்கையை வரி பிசகாமல் படித்திருப்பாய்!

அந்த அம்மையார் முன்னொரு காலத்தில் இந்திரா காந்திக்கு உண்மைத் தோழியாக இருந்தவர். பெரும் பதவிப் பொறுப்புகள் எதுவும் ஏற்காமல் துணைப் பொறுப்புகள் வகித்த போது, புதுவை அரவிந்தர் ஆஸ்ரமத்தோடு அதிகத் தொடர்பு கொண்டிருந்தவர். புதுவைக்கருகே அமைந்து வளர்ந்து வரும் "ஆரவில்" எனும் பகுதிக்கான பரிந்துரைகளுக்காக என்னையும் இரண்டொரு முறை சந்தித்து உரையாடியிருக்கிறார். அந்த நேரத்தில் கூட, தனக்கு இந்திரா காந்தியின் மீதுள்ள உண்மையான நேசத்தை மிக உருக்கமாக எடுத்துக் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டதுண்டு, அந்த அம்மையார்!

ஒரிசா மாநிலத்தில் உட்கட்சி அமளி ஏற்பட்ட போது, டெல்லியிலிருந்த நந்தினி ஒரிசாவின் முதல் அமைச்சராகப் பதவியேற்க அனுப்பி வைக்கப்பட்டார். அந்தப் பதவியினையேற்று, இந்திரா காந்தியைச் சந்தித்த நந்தினி, மாலையிட்டு மரியாதை செய்த குதூகலமான காட்சி, எல்லா ஏடுகளிலும் பலவித வண்ணப் படங்களாக வெளியிடப்பட்டன. ஏற்கனவே கம்யூனிஸ்டு கட்சி முகாமிலிருந்து காங்கிரசுக்குள் தங்களை இணைத்துக் கொண்டவர்களில் நந்தினியும் ஒருவர். எனவே, இந்திரா காந்தி அம்மையார் இட்லரின் பாணியில் நெருக்கடி காலப் பிரகடனத்தைக் கட்டவிழ்த்து விட்டபோது அந்த அறிவிப்பை ஆதரிப்பவர்களில் ஒருவராகவே நந்தினி விளங்கினார். பிறகு சில மாதங்கள் செல்லச் செல்ல நெருக்கடி நிலைத் தொடர்பான மத்திய அரசின் உத்தரவுகளை ஒரிசா மாநிலத்தில் நிறைவேற்றுவதில் சில கருத்து மாறுபாடுகள் எழுந்தன.

இந்திராவின் அருமைச் செல்வன் சஞ்சய் காந்தியின் கோபத்திற்கும் நந்தினி ஆளாக நேரிட்டது. சஞ்சய் ஒரு மாநிலத்திற்கு வருகிறார் என்றால், ஓடோடிச் சென்று விமான நிலையங்களில் கவர்னர்களும், முதலமைச்சர்களும் மண்டியிட்டு மரியாதை செலுத்திய காலத்தில், நந்தினி அதற்கு மாறான நிலையிலே நடக்கத் தொடங்கியது, இந்திராவுக்கும் எரிச்சலை மூட்டியது.

கசப்பும், காழ்ப்பும் உச்ச நிலைக்கு எட்டவே, நந்தினியின் முதலமைச்சர் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டது. நந்தினிக்குப் பதிலாக வினாயக் ஆச்சார்யா, முதல்வராக அமர்த்தப்பட்டார். அத்துடன் இந்திரா அம்மையாரின் பழி வாங்கும் படலம் நிற்கவில்லை.

தனக்கு விரோதமாகப் பஞ்சாப் மாநிலத்தில் செயல்பட்ட அகாலிதளத் தலைவர் முன்னாள் முதல்வர் பாதல் அவர்கள் மீது; எப்படி ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்து அவர் குற்றவாளி எனக் கூறி கிரிமினல் வழக்குகளும் இந்திரா காந்தியின் திட்டப்படி தொடுக்கப்பட்டதோ, அதே போல நந்தினியின் மீதும் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு விட்டது! நந்தினி அரசியலில் வஞ்சம் தீர்க்கும் படலத்திற்கு உட்படுத்தப்பட்டார்.

நெருக்கடி நிலையை வரவேற்று ஆதரித்து விட்டு மத்திய அரசின் சில உத்தரவுகளை நிறைவேற்றுவதில் உருவான கருத்து வேறுபாடுகளுக்கே நந்தினிக்கு இப்படியொரு விசாரணைக் கமிஷன் என்றால், நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட மறுநாளே அதனை மறுத்துச் செயற் குழுவில் தீர்மானம் நிறைவேற்றிய நம்மை, இந்திரா காந்தி அம்மையார் சும்மா விடுவார்களா? அந்தக் கொடுமைகள் அனைத்தையும் கடந்த காலத்தில் நமது கழகம் தாங்கத் தானே வேண்டியிருந்தது!

இதோ, இந்திராவின் இன்னுயிர் தோழியாக இருந்த நந்தினி பேசுவதைக் கேள்!

“எனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டிருக்கும் விசாரணை, திட்டவட்டமாக அரசியல் நோக்கத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு வரப்பட்டதாகும். இந்த விசாரணை, உண்மையைக் கண்டறிய வேண்டும் என்பதற்காகப் போடப்பட்ட ஒன்றல்ல! மாறாக அந்த விசாரணைக்கு விளம்பரம் தந்து, என் மரியாதையைக் குறைக்க வேண்டும் - மக்களுக்கு என் மீதிருக்கும் நம்பிக்கையைக் குலைக்க வேண்டும் என்பதற்காகவே அதைப் போட்டார்கள்.

டெல்லியின் அன்பை நான் இழந்ததற்குக் காரணம், நெருக்கடி நிலை துஷ்பிரயோகத்தை எதிர்த்ததேயாகும்.”

உடன்பிறப்பே, நந்தினியின் குரலைக் கேட்டாயா? இதே கருத்தைத்தான் கழகத்தின் சார்பில் நாமும் எடுத்துக் கூறினோம். அன்று நம்முடைய விளக்கங்கள், வெளியிடப்பட முடியவில்லை. “விசாரணைக்குத் தயார் - ஆனால் புகார் கொடுத்தவர்களும், அடித்து மிரட்டித் தயாரிக்கப்பட்ட எல்லா சாட்சிகளும் குறுக்கு விசாரணை செய்யப்பட வேண்டும்” என்ற நமது வேண்டுகோளை சர்க்காரியா ஏற்றுக் கொள்ளவில்லை. புகார் கொடுத்தோரும் குறுக்கு விசாரணைக்கு வர இயலாது என வழக்கறிஞரை வைத்து வாதாடினர். நாம் சர்க்காரியா கமிஷனிடம் என்ன கோரிக்கைகளை முன் வைத்தோம் என்பதைக் கூட பத்திரிகைகளில் வெளியிட முடியாமல் அவசர காலச் சட்டம் தடுத்து நிறுத்தி விட்டது.

எம்.ஜி.ஆரும், கலியாணசுந்தரம் ஆகியோரும் கழக அமைச்சர்கள், மேயர்கள், வாரியத் தலைவர்கள் மீது ஐம்பதுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகளை, ஜனாதிபதி மூலமாகப் பிரதமருக்கு அனுப்பினர். 1972-ல் தரப்பட்ட அந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே தெரிகின்றது - சொல்லப்படுகின்றது - பரவலாக பேசப்படுகின்றது என்ற வகையில் தான் எழுதப்பட்டு டெல்லியில் அளிக்கப்பட்டன. ஒன்றிரண்டல்ல, பெரும்பான்மையான குற்றச்சாட்டுகளைப் பற்றி, அவ்வாறுதான் புகார் கூறியவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். நான்கு ஆண்டுகளுக்கு மேலாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த அந்தப் புகார்களுக்குத் திடீரென உயிர் வழங்கி, கழக ஆட்சியைக் கலைக்கிற நேரத்தில் அந்த முடிவுக்கு வந்ததால், இருபத்தேழு அல்லது இருபத்தெட்டு புகார்களை மட்டும் அவசர அவசரமாகப் பொறுக்கியெடுத்து அவற்றைக் கமிஷனுக்கு அனுப்பினர். அதிலும், அப்போது தி.மு.கழகத்தை விட்டு விலகிவிட்ட மதுரை முத்து, சத்தியவாணி முத்து போன்றவர்களையும், ஒதுங்கியிருக்கிறோம் என்று ரகசியமாக உறுதிமொழி கொடுத்தவர்களையும் - உள்ளுக்குள்ளேயே இருந்து கட்சிக்குத் தொல்லை கொடுத்தவர்களையும் விசாரணைக் கமிஷனிலிருந்து விலக்கி விட்டார்கள்.

படகுபோர ஊழல் என்று குற்றம் சுமத்தப் பெற்ற சத்தியவாணி அம்மையார் புகார் கொடுத்த எம்.ஜி.ஆர். கட்சியின் வேட்பாளராகவே ஆகிவிட்டார்.

மதுரையில் குண்டர்களின் அரசராக விளங்குகிறார் - கோட்டைகள் போல பங்களாக்களைக் கட்டியிருக்கிறார் - என்று குற்றம் சாட்டப்பட்ட மதுரையின் முன்னாள் மேயர் முத்து இன்றைக்கு, புகார் கொடுத்த எம்.ஜி.ஆரின் கட்சிக்குத் தானைத் தளபதியாக விளங்குகிறார்.

இவற்றையெல்லாம் எடுத்துச் சொன்னபோது, இரண்டொரு வாரங்களுக்கு முன்பு இதுபற்றி எம்.ஜி.ஆர். ஒரு விளக்கம் கொடுத்தார்.

அதாவது, "மதுரை முத்து மீதும், சத்தியவாணி மீதும் கொடுத்த புகார்களுக்கு அடிப்படை ஆதாரம் Prima-Facie இல்லையென்றும், அதனால் அவை நிரூபிக்கப்படவில்லை யென்றும் மத்திய அரசு அறிவித்து விட்டது" என்று எம்.ஜி.ஆர். கூறினார்.

"அப்படி மத்திய அரசு அறிவிக்கவேயில்லை. அறிவித்திருந்தால் எந்தத் தேதியில் அறிவித்திருக்கிறது? உண்மையிலேயே அவ்வாறு அறிவித்திருக்குமேயானால்; தவறான புகார்களைச் சொன்னதற்கு - எம்.ஜி.ஆர். வருத்தமாவது அவர்களிடம் தெரிவித்துக் கொண்டிருக்கிறாரா?"

என்று நான் பல கூட்டங்களில் கேள்வி எழுப்பினேன். ஒருவேளை, அதற்கெல்லாம் பதில் சட்டசபையில் வந்து சொல்லலாம் என்று இருக்கிறாரோ, என்னவோ! இதுவரையில் பதிலைக் காணவில்லை.

நம்முடைய முக்கியமான வாதமே, நம்மீது கொடுக்கப்பட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட புகார்கள் மீதும் - விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட புகார்களையும் சேர்த்தே சொல்லுகிறேன், எந்தப் புகாரும் அடிப்படை ஆதாரம் Prima-Facie இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து விசாரணைக்கு எடுக்கப்பட்ட புகார்கள் அல்ல.

உதாரணம் கூறவேண்டுமேயானால், திருவாரூர் தெற்கு வீதியில் 94 ஆம் எண்ணுள்ள வீட்டைப் பல லட்ச ரூபாய் செலவில் கட்டியுள்ளேன் என்று எம்.ஜி.ஆர். புகார் கொடுத்திருக்கிறார். அந்த வீட்டைப் போய் நேரில் பார்த்தவர்களுக்கு அது ஒரு பாழடைந்தும், இடிபாடுகள் நிறைந்ததுமான ஒரு சிறிய ஓட்டுவில்லை வீடு என்பது நன்றாகத் தெரியும். புகார்களுக்கு அடிப்படை ஆதாரம் இருக்கிறதா என்று பார்த்திருப்பார்களேயானால், அந்தக் குற்றச்

சாட்டைடப் பட்டியலில் கொண்டு வந்திருக்கவே மாட்டார்கள்! இப்படிப் பல உதாரணங்களைக் கூறமுடியும்!

எனவே "அடிப்படை ஆதாரங்கள் இல்லை! எங்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளை எடுத்துக் கொள்ளவில்லை" என்று இப்போது எம்.ஜி.ஆரின் நிழலில் போய் ஒண்டிக் கொண்டிருக்கிற மதுரை முத்துவோ சத்தியவாணி முத்துவோ - அல்லது வேறு யாரோ வாதாடுவது நகைப்புக்குரிய கிறுக்குத்தனமான வாதமே தவிர, வேறில்லை என்பதை - எதிர் எதிரே நின்று விவாதிப்பதற்குக் கழகத்தினர் தயாராகவே இருக்கிறார்கள்! அடிப்படை ஆதாரம் இல்லை என்றோ, அதனால் அவர்கள் குற்றச்சாட்டுப் பட்டியலில் இருந்து நீக்கப்படுகிறார்கள் என்றோ இந்திராவின் அரசு என்றைக்கு நாட்டுக்கு அறிவித்தது என்பதையாவது அந்தத் "தூய்மை"?யாளர்கள் கூறுவார்களேயானால் நலமாக இருக்கும்!

1976-ல் நடிகர் கட்சியின் தலைமைக் கழகச் செயலாளர், கழக அமைச்சராக இருந்த ஒருவரைப் பற்றி கப்பல் வாங்கிய பேரத்தில் முப்பத்தி ஐந்து லட்ச ரூபாய் ஊழல் நடந்துள்ளது என்ற புகாரைக் கவர்னரிடம் கொடுக்கிறார். இந்த ஆண்டு அந்தக் கப்பல் மந்திரி, நடிகர் கட்சியெனும் நாவாய்க்கு நான்தான் மீகாமன்! என்று மார் தட்டிக் கொள்ள முடிகிறது. அதாவது அங்கே சென்று விட்டால் அவர்கள் புனிதர்களாகி விடுகிறார்கள்.

மிசாக் கைதிகளை விடுவிக்க ஒருவர் லட்சக்கணக்கில் லஞ்சம் பெற்றார் என்று நாலு மாதங்களுக்கு முன்பு நாப்பறை கொட்டுகிறார் நடிகர்!

நான் இவற்றைச் சொல்வதால் - சுட்டிக்காட்டுவதால் நடிகரால் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் மெய் என்று நான் ஒப்புக் கொண்டதாக அர்த்தமல்ல!

எம்.ஜி.ஆர். தன்னுடன் வந்து விடுகிறவர்களைப் புனிதர் என்றும் - தனக்கு எதிர் அணியில் இருப்பவர்களைப் புல்லர் என்றும் வர்ணிக்கிறாரே! அது பொருத்தம் தானா என சிந்தித்திட வேண்டுமன்றோ?

அப்படி அவர் "பாதக் கமலங்களை"ச் சேர்ந்து விடுகிறவர்களும் - தங்களைப் போன்ற நெறி தவறாத நேர்மையாளனே உலகத்தில் இல்லை என்று உரக்கக் கூவுகிற காரணத்தாலேயே - மற்றவர்கள் எல்லாம் மாசு படிந்தவர்கள் என்றும் பொருளாகி விடாது!

அடிப்படை ஆதாரமில்லை - எனவே குற்றம் நிரூபிக்கப் படவில்லை என்று அரசாங்கம் இதுவரை அறிவித்ததாக ஒருசிலர் தங்களைப் பற்றிக் கூறிக் கொள்வதற்குச் சான்றில்லை. அப்படியே, அரசாங்கம் அறிவித்திருக்குமேயானால், கடைந்தெடுத்த - கயமைத் தன்மை கொண்ட - கீழ்த்தரமான கட்டுக் கதைகளை - புகார்களாகக் கொடுத்த நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவரால் வேண்டுமென்றே குற்றம் சாட்டப்பட்ட நிரபராதிகளான அந்தப் பரம பரிசுத்தவான்களிடம், தான் செய்த தவறுக்காக வாயளவிலாவது ஒரு வருத்தம் தெரிவித்துக் கொண்டிருக்கிறாரா?

இல்லை. உடன்பிறப்பே! அப்படி எதுவும் நடைபெற வில்லை. இவர்கள்தான் பாவம்! பரிதாபமாகக் குதித்துக் கொண்டிருக்கிறார்கள்!

கழக அரசுக்கும், கழகத்தினர்க்கும் களங்கம் கற்பித்துக் கழகத்தை மாய்க்க வேண்டுமென்று அரசியல் நோக்கத்தோடு மோகன் குமாரமங்கலம் முன்னின்று நடத்திய மோசடி நடவடிக்கைக்கு அம்மையார் இந்திரா காந்தி 1972-ல் முத்திரை பதித்தார்! அதற்கு எம்.ஜி.ஆர். முன்னோடும் பிள்ளையாக ஆக்கப் பட்டார்!

அப்போதெல்லாம், இந்த அக்கிரமங்களுக்குத் தலையசைத்துக் கொண்டிருந்த நந்தினி சத்பதி போன்றவர்கள், இன்று பழிவாங்கும் படலம், தங்களையே வளைத்துக் கொண்டவுடன்,

பாதலுக்கு ஒரு நீதி,
எனக்கொரு நீதியா?
பொன்னாண்டசுக்கு ஒரு நீதி,
இந்தப் பெண்ணுக்கு ஒரு நீதியா?

என்று உலகமதிரக் கேட்கிறார்கள்.

உடன்பிறப்பே, உண்மைகள் பேசத் தொடங்கியிருக்கின்றன!

உரிமைக்குரல் கேட்க ஆரம்பித்திருக்கிறது!

நந்தினியின் குரலைவிட நமது குரலில் நியாயம் அதிகம் என்பதை மட்டும் நாட்டுக்கு நாள்தோறும் எடுத்துச் சொல்லிக் கொண்டேயிரு!

அன்புள்ள,
மு. க.
28-06-1977

429. பொய்மை நிறைந்த பேச்சு! பொறுப்பற்ற பேச்சு!!

உடன்பிறப்பே,

முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட முதல் நாளிலேயே சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் உரையாற்றிய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், எதிர்க்கட்சிகளுக்கு - குறிப்பாகத் தி.மு.கழகத்திற்கு சவால் விட்டிருக்கிறார்! இப்படியொரு பேச்சை, புதிய முதலமைச்சரிடம் எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, அவருடைய தோழமைக் கட்சியினர்களே கூட, ஏன் - அவரது சொந்தக் கட்சியினர்களேகூட எதிர்பார்த்திடவில்லை. தேர்தல் நேரத்திலேகூட, அவர் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்கு ஒரு சவால் விடுத்தார். அதாவது, அவரது கட்சி ஆட்சிக்கு வந்ததும் இந்தியக் கம்யூனிஸ்டுகள் போராட்டம் நடத்துவார்களேயானால் அவர்களை அடக்கப் போலீசைப் பயன்படுத்தமாட்டேன். தன் கட்சிக்காரர்களே அதனை அடக்குவார்கள் என்று முழக்கம் செய்தார்.

உடனே நண்பர் கலியாணசுந்தரம், எம்.ஜி.ஆர். கட்சியினர், அப்படிச் செய்தால் எங்கள் கைகள் பூப்பறித்துக் கொண்டிருக்காது என்று பதில் அளித்ததாக ஏடுகளிலே செய்தி வந்தது.

இப்போது எம்.ஜி.ஆர். அவர்கள் ஆளுங் கட்சியின் தலைவராக வந்த பிறகு அடக்கத்தோடு தனது ஆட்சியைத் தொடங்குவார் என்றுதான் எதிர்பார்த்தோம். அதற்கு மாறாக ஆடம்பரமாகவும் - ஆர்ப்பாட்டங்களோடும் தொடங்கியது மட்டுமல்ல; ஆணவத்தோடும் தனது ஆட்சித் தொடக்கத்தைச் செய்துள்ளார் என்பதற்கு அவரது கடற்கரைப் பேச்சு சான்று கூறுகிறது.

தி.மு.கழகம் பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயல்படும் என்று அறிவித்திருக்கிறோம். எம்.ஜி.ஆர். தேர்தல் நேரத்து வாக்குறுதிகளைச் செயல்படுத்த ஆறுமாத காலமாவது அவகாசம் தேவை என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

அதுவரையில் பொறுமையாக இருந்து புதிய ஆட்சியின் நடைமுறைகளைக் கவனிப்போம் என்று கூறியிருக்கிறோம். காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய பிரச்சினைகளில் புதிய அரசு எடுக்கும் நல்ல முயற்சிகளுக்குத் தி.மு.கழகம் ஒத்துழைப்பு தரும் என்றும் உறுதி கூறியிருக்கிறோம். இத்தனையும் கூறிய ஒரு எதிர்க்கட்சி, தமிழுக்கோ, தமிழ்க் கலாச்சாரத்திற்கோ ஆபத்துகள் நேரிடக் கூடிய சூழ்நிலைகள் தோன்றினாலும், வேறு பிரச்சினைகள் மக்கள் வாழ்வைப் பாதிக்குமளவுக்குக் கிளம்பினாலும் அதை எதிர்த்துப் போராடத் தயங்காது என்றும் அறிவித்திடுகின்றது என்றால், பொறுப்பேற்றுள்ளவர் என்ன கூறவேண்டும்?

எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்துகிற அளவுக்கு எங்கள் ஆட்சி நடந்து கொள்ளாது

என்றல்லவா அடக்கத்துடன் அறிவித்திட வேண்டும். அதைவிடுத்து ஆகா! ஊஹூ! வா! ஒருகை பார்க்கிறேன்! என்று முண்டா தட்டுகிற பாணியில் ஒரு முதலமைச்சர் அதுவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட முதல் நாளிலேயே பேசுவது வேடிக்கையான வேதனையாகவன்றோ இருக்கிறது.

போராட்டங்களை எதிர்க்கட்சிகள் ஆரம்பித்து, அந்தக் கிளர்ச்சிகள் வன்முறையிலே சென்று, அமைதியும் ஒழுங்கும் சட்டமும் குலைக்கப்படுகிற நேரத்திலே ஒரு முதலமைச்சர் விடுக்க வேண்டிய எச்சரிக்கையை முதல் நாள் பதவி ஏற்கும்போதே விடுத்திடுவது என்பது, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலாது எனத் தெரிந்து, மக்களைத் திசை திருப்புகிற காரியம் போலத் தோன்றுகிறது.

1971-ல் தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. ஆட்சியை எதிர்த்து 1972-ல் எம்.ஜி.ஆர். கலவரங்கள் நடத்தியதை மறந்து விட்டாரா? கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் வீட்டுக்குக் கிளர்ச்சி ஊர்வலங்கள் எம்.ஜி.ஆரின் தூண்டுதலால் நடைபெறவில்லையா? என் பிறந்த நாள் விழாக்களில் எனக்குக் கொடும்பாவி கட்டி இழுக்குமாறு எம்.ஜி.ஆர். கட்சி அறிக்கை விடவில்லையா? கழக அமைச்சர்கள் செல்லும் இடமெல்லாம் கறுப்புக்கொடி காட்டும் போராட்டங்களை நடத்துமாறு எம்.ஜி.ஆர்.

திட்டம் தீட்டித் தரவில்லையா? போராட்டம் நடத்துவதில் அவருக்கு ஒரு நியாயம் - மற்றவர்களுக்கு ஒரு நியாயமா? இதற்கு அவரேதான் பதில் கூற வேண்டும்.

போராட்டம் என்று சொல்லிக்கொண்டு அப்பாவித் தொண்டர்களை சிறைக்கு அனுப்ப நினைக்கிறார். அவசர நிலை காலத்தில் அவர் மட்டும் வெளியிலே இருந்து கொண்டு தொண்டர்கள் சிறையிலே இருந்தபோது, தனது மகனையும், மருமகனையும் மட்டும் விடுதலை செய்ய வேண்டுமென்று முயற்சித்த கருணாநிதி போராட்டம் நடத்தப் போகிறாராம்.

இதுவும் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள திரு. எம்.ஜி.ஆரின் பேச்சுத்தான்!

சுமார் ஐநூறு மிசாக் கைதிகளையும் விடுதலை செய்திடுக என்று தி.மு.கழகத்தின் சார்பில் மத்திய அரசுக்குக் கடிதங்கள் எழுதப்பட்டன. மத்திய அமைச்சர்களை நேரிலே சந்தித்துப் பேசிய நண்பர்கள் ராஜாராம், மாதவன் ஆகியோரிடம்கூட நான் மாறனைப் பற்றியோ, மகன் ஸ்டாலினைப் பற்றியோ தனிப்பட்ட முறையில் சொல்லி, எப்படியாவது அவர்கள் இருவரையும் விடுவிக்க வேண்டுமென்று கூறியதில்லை என்பது மாதவன், ராஜாராம் இருவரின் மனச்சாட்சிக்கும் நன்றாகத் தெரியும்.

திருமணமாகி ஐந்தாவது மாதம் மிசாக் கைதியாக சிறை பிடிக்கப்பட்டு, சிறைச்சாலையில் அடித்துத் துவைக்கப்பட்டோர் பட்டியலிலும் இடம்பெற்று, பிறகு வயிற்றில் ஒரு ஆபரேஷன் நடைபெற்றபோதும் பத்து நாள் பரோலில் கூட வீட்டுக்கு வரமாட்டேன் என்று மிசாக் கைதியாகவே ஓராண்டு சிறையிலேயிருந்து வந்தான் என் மகன் ஸ்டாலின்! அவ்வாறே மாறனும் ஓராண்டு கழித்தே சிறை மீண்டு இன்னும் உடல் நலிவுற்ற நிலையிலே இருப்பது அனைவருக்கும் தெரியும். நண்பர் எம்.ஜி.ஆர். மனிதாபிமான உணர்ச்சியைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டு; நான் கழகக் கண்மணிகளாம் தொண்டர்களைச் சிறையிலே வாடவிட்டு மகனையும், மருமகனையும் விடுவிக்க முயன்றேன் என்று கூறுவது அவரது அரசியல் லாபத்துக்கு வேண்டுமானால் பயன்படலாம்! என்னை உணர்ந்தவர்கள், அவரது இந்தப் பொய்க்கூற்றை நம்ப மாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

போராட்டங்களைத் தூண்டிவிட்டு நான் வெளியிலே இருப்பவன் என்று நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்னைப் பற்றிக் கடற்கரையில் பேசியபோது - அதே கடற்கரையில், அதே மேடையில் 1972-ஆம் ஆண்டு நடந்த கழகக் கூட்டத்தில் எம்.ஜி.ஆரும் இந்தி எதிர்ப்புப் போராட்டமும் என்ற தலைப்பில் பேசிய மதுரை முத்து போன்றவர்கள் - இப்போதும் எம்.ஜி.ஆரின் அந்தப் பேச்சைக் கேட்டு உள்ளுக்குள்ளாகச் சிரித்துக்கொண்டுதான் இருந்திருப்பார்கள். பாவம், அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்?

கருணாநிதி, முதல்வராக இருந்தபோது வேறு எந்த அமைச்சரும் அவர்கள் இலாக்காக்கள் குறித்து பேச முடியவில்லை. அறிக்கைகள் விட முடியவில்லை. எல்லா இலாக்கா பற்றியும் முதல்வர் கருணாநிதியே தான் அறிக்கை தந்தார். இதோ நாவலரையும் வைத்துக் கொண்டு சொல்லுகிறேன், அதுதான் உண்மை!

என்றும் கடற்கரையில் எம்.ஜி.ஆர். அடித்துப் பேசியுள்ளார். நான் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தபோது எல்லா அமைச்சர்களும் அவரவர் இலாக்காக்கள் குறித்து அறிவிப்புக்களைச் செய்யவும், செய்தியாளர்களைச் சந்தித்து தங்கள் இலாக்காக்களின் புதிய திட்டங்கள் பற்றிக் கூறவும் முழு உரிமை பெற்றிருந்தார்கள் என்பதற்கு நூற்றுக்கணக்கான ஆதாரங்களை எடுத்துக்காட்ட முடியும்.

தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் செய்ய இரண்டு தடவை வானொலியிலும், ஒருதடவை டெலிவிஷனிலும் வாய்ப்பு கொடுத்தபோது அந்த மூன்று வாய்ப்புகளையும் தான் ஒருவரே பயன்படுத்திக் கொண்டு தனது கட்சியின் துணைப் பொதுச் செயலாளருக்கோ மற்றவர்களுக்கோ ஒரு வாய்ப்பு கூட வழங்காத நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், நமது கழக அமைச்சரவையில் என்னைத் தவிர மற்ற அமைச்சர்கள் பேசியதில்லை. அறிக்கை விட்டதில்லை என்று என்மீது குறைகூறுவது எவ்வளவு பெரிய பொய் என்பதும் நாட்டுக்கும் தெரியும், தொடர்புடைய முன்னாள் அமைச்சர்களுக்கும் தெரியும்.

எனவே உடன்பிறப்பே, எந்த வகையில் பார்த்தாலும் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் பேசிய முதல் பேச்சு -

பொய்மை நிறைந்தது!

பொறுப்பற்றது!

பொல்லாங்கு மிகுந்தது!

எனக் கூறினாலும் அதில் சிறிதும் தவறில்லை. இனியாவது அவர் அடக்கத்துடன் பேசத் தொடங்குவது நல்லது என்று பழைய நண்பர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

02-07-1977

430. தொலைவில் இல்லை வெற்றிப் பூங்கா!

உடன்பிறப்பே,

"தி.மு.க.வையும் அக்கட்சியின் ஆட்சியையும் கடுமையாக விமர்சனம் செய்து கொண்டேயிருந்த பத்திரிகை என்ற முறையில், சொல்கிறோம்-இந்த சட்டசபைத் தேர்தல்களில் கருணாநிதியும் அவர் கட்சியினரும் நடத்திக் காட்டியிருக்கும் சாதனை சாதாரணமானதல்ல. ஊழல் புகார்கள், விசாரணைக் கமிஷன், பத்திரிகை விமர்சனங்கள், எம்.ஜி.ஆரின் எதிர்ப்பு-இப்படி எல்லாவற்றையும் மீறி, தி.மு.க. நாற்பத்தெட்டு இடங்களைப் பிடித்திருப்பது அக்கட்சியின் கடுமையான உழைப்புக்குக் கிடைத்துள்ள வெற்றி. இப்படி உழைக்கக் கூடியவர்கள் அந்த உழைப்பைத் தேசியப் பாதையில் செலுத்தினால்...?"

இப்படி ஒரு கருத்தினை 'துக்ளக்' இதழ் வெளியிட்டு அந்த உழைப்பைத் தேசியப் பாதையில் செலுத்தினால்?...என்ற கேள்வியுடன் முடித்திருக்கிறது.

தி.மு.கழகம் தேசியப் பாதையில் செல்லவில்லை என்பதும், உழைக்கும் செயல்வீரர்கள் நிறைந்த அந்தக் கழகம் தேசியப் பாதைக்கு வரவேண்டும் என்பதும்தான் 'துக்ளக்' வெளியிட்டுள்ள கருத்தின் அடிப்படையாகும்.

ஊழல் புகார்

விசாரணைக் கமிஷன்

பத்திரிகை விமர்சனங்கள்

எம்.ஜி.ஆரின் எதிர்ப்பு பிரச்சாரம்.

இத்தனைக்குமிடையே தி.மு.கழகத்திற்குக் கிடைத்துள்ள வெற்றியைக் கழகத்தவரின் சாதனையென்று 'துக்ளக்'

ஆசிரியர் மனந்திறந்து பாராட்டியிருப்பதற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆம், 1976-ஆம் ஆண்டு கழக ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து ஓராண்டு காலத்திற்கு மேலாகத் தி.மு.கழகத்தின் மீது ஏவி விடப்பட்ட கொடுமைகள் எண்ணிக்கையில் அடங்கக் கூடியதா? இன்று ஜனதா கட்சி அரசின் அமைச்சர்களாக இருப்போர் சிலர், தமிழகத்தில் தி.மு.க. அரசினால் தான் நெருக்கடி காலத்தில் பாதுகாக்கப்பட்டார்கள் என்று குற்றம் சுமத்தியும், தமிழ்நாட்டில் இரு காங்கிரஸ் கட்சிகளும் இணைவதற்குக் குறுக்கே நிற்பது தி.மு.க. ஆட்சிதான் என்று கோள் சொல்லியும், யாரும் எதிர்த்திடத் துணியாமல் ஒடுங்கிக் கிடக்கும்போது ஒரு மாநில அரசின் ஆளுங்கட்சியான தி.மு.கழகம் மத்திய அரசின் அவசர காலச் சட்டத்தை வரவேற்று ஆலவட்டம் சுழற்ற வேண்டியதற்குப் பதிலாக அரிமா என எழுந்து நின்று எதிர்ப்புக் குரல் கொடுப்பதா எனச் சீற்றம் கொண்டும்- இந்தியாவிலே இந்திராவுக்கு எதிராக இரு தீவுகள்; ஒன்று குஜராத்! மற்றொன்று தமிழ்நாடு என ஆர்ப்பரித்தும்- கழகத்தைச் சுவடு தெரியாமல் அழித்துவிடக் கங்கணம் கட்டிக் காரியத்திலும் ஈடுபட்டனர் டெல்லி வட்டாரத்தினர்!

தமிழ்நாட்டில் உள்ள இந்திரா காங்கிரஸ்காரர்களே கூட, அய்யோ! ஒரு எதிர்க்கட்சிக்கு இவ்வளவு தொல்லை கொடுக்க வேண்டுமா? என்று தங்களுக்கும் இதயம் இருப்பதைத் தனிப்பட்ட முறையிலே பலரிடம் மெய்ப்பிக்கிற அளவுக்கு வருத்தப்பட்டார்கள் என்றால் கழகத்தின்மீது எவ்வளவு பெரிய தாக்குதலை டெல்லிச் சர்வாதிகாரிகள் அப்போது நடத்தியிருக்கிறார்கள் என்பது தெளிவாகும்.

அத்தனைக்கும் கழகம் ஈடுகொடுத்தது. கழகத்தில் உறுதி படைத்தவர்களாயிருந்தவர்களைக்கூட 'மிசா'க்களைக் காட்டி மிரட்டி உறுதி குலைய வைத்திட அதிகாரிகள் தூண்டப்பட்டனர். அவர்கள் போட்ட தூண்டிலில் சில மீன்களும் சிக்கிடத்தான் செய்தன.

ஆட்சியிலிருந்தவரையில் அனுபவித்த சில பேர், இனிமேல் எதற்கு வம்பு என்று ஒதுங்கிக் கொண்டனர். ஒதுங்கிக் கொள்வதில் ஏற்பட்ட வெட்கத்தால் சிலபேர் காரணங்களைக் கற்பித்து உறுமிக் கொண்டு வெளியேறினர். கழகத்தின் முன்னணியிலேயே

பெரும் பிளவை ஏற்படுத்தி, இந்தக் கொள்கைக் கோட்டையைத் தகர்த்து விடவும் டெல்லி வட்டாரம் தனது தளபதிகளைப் பணப் பேழையுடன் அனுப்பி வைத்தது. கழகத்தின் செயற்குழு கூடுகிற தென்றால் அதற்கு நாலு நாட்கள் முன்னதாக யஷ்பால் கபூர், கரன்சி எனும் அணு ஆயுதங்களுடன் சென்னை நகரை முற்றுகையிடுவார். முடிந்ததைச்செய்வார். இப்படிப்பல முயற்சிகள்! மோசடிகள்! அதற்கும் கழகத்தின் அடித்தளம் அசைந்து கொடுக்கவில்லை. கோபுரத்துப் பொம்மைகள் ஒன்றிரண்டு சிதறி வீழ்ந்தனவே தவிர, அண்ணன் கட்டிய இலட்சியக்கோயிலை யாராலும் இடித்திட இயலவில்லை. கழகத் தொண்டன், தன் கையை உயர்த்திக் கழகத்தைக் காப்போம் எனச் சபதம் பூண்டான்! பிறகு அவன் ஓயவே இல்லை! உறங்கவே இல்லை! உழைத்தான்! உழைத்தான்! உழைத்துக் கொண்டேயிருக்கிறான்.

தலைவர்களைச் சிறை பிடித்தால் தியாகியாகி விடுவர்- தி.மு.க. மேலும் வளர்ந்து விடுமென அஞ்சி, விசாரணைகள் - வழக்குகள் - நாள்தோறும் அவதூறுப் பிரச்சாரங்கள் - இவற்றின் வாயிலாகக் களங்கப்படுத்தி, பொது மக்கள் மத்தியிலே செல்லாக் காசுகளாகவும், தொண்டர்கள் மத்தியிலே சந்தேகத்திற்குரியவர் களாகவும் ஆக்கிவிடலாம் என்று அந்த விளம்பரத்திற்கென பல லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவிட்டனர். தலைவர்களைச் சரியாக எடை போட்டு வைத்திருக்கும் தொண்டன் அந்தச் சதி வேலைக்கும், சாகசத்திற்கும் ஏமாறவில்லை. அந்தக் கண்மணித் தொண்டர்களின் அயராத பணியினால் பொது மக்களும் விழிப் புற்றனர். ஒரு பெரிய வரலாற்றுக்குரிய இயக்கத்தை ஒழித்துக் கட்டும் சதிச்செயலைத் தமிழ்நாட்டு மக்களும் புரிந்து கொண்டனர்.

தேர்தல் பிரச்சாரத்தில் கழகத்தைப்பற்றி எத்தனையோ கட்டுக் கதைகள்! கணக்கிட முடியாத அளவுக்கு களங்கப் புகார்கள்! அருகிருந்தோர், அன்பொழுகப் பேசியோர், ஆருயிர் நண்பரென நாம் எண்ணியிருந்தோர் - அற்றகுளத்து அறுநீர்ப் பறவை ஆயினர் - அப்போது நம் விழியில் வடிந்த நீரைத் துடைத்து "நானிருக்க பயமேன்?" என்று சிங்கக் குரல் கொடுத்த தொண்டருக்குத் தொண்டு செய்ய என் ஆயுட்காலம் போதாதே என்பதுதான் என் கவலை! எனினும் இறுதி மூச்சு என்னுடலை விட்டு நீங்கும் வரையில் அந்தத் தொண்டர்தம் நல் உள்ளங்களை வாழ்த்திக் கொண்டிருப்பேன்! வணங்கிக் கொண்டிருப்பேன்!

அந்த மேன்மைமிகு உழைப்பை நான் பாராட்டுவதைவிட, மாற்றார் முகாம்களிலேயிருந்து பாராட்டுக்கள் கிடைக்கும் போதுதான் எனக்கு ஒரு ஆறுதல்!

நம் கண்மணிகள் களத்திலே பட்ட காயங்கள், புகழுக்குரியவை தான்! அந்த விழுப்புண்களை மதிப்போரும் இருக்கிறார்கள் என எண்ணும்போது உடன்பிறப்பே! உன்னைப் போன்ற தொண்டர் களுக்கு ஏற்படும் பூரிப்பைவிட எங்களுக்குத்தானே அதிக பூரிப்பு!

இதில் பூரிப்படைவதற்கு என்ன இருக்கிறது என்று கூட யாராவது கேட்கக் கூடும்!

“கழகமே இல்லை” என்று சிலர் முடிவு கட்டி, எழுதியும் பேசியும் அலட்சியப்படுத்தப்பட்ட பிறகன்றோ, உன் போன்றோர் உழைப்பினால் கழகத்தின் வடிவத்தையும், வலிவையும் நாடு கண்டிடுமாறு செய்துள்ளோம்!

நாற்பத்தெட்டுதானே! இதற்கேன் பூரிப்பு? நவில்வாரும் உளர்! நானறிவேன் அவர்களை! நாற்பத்தி இரண்டு லட்சம் வாக்குகள்! அவை சாதாரணமல்ல! அதுவும் தனியொரு கட்சியாக நின்று பெற்ற வாக்குகள்!

நாற்பத்தெட்டுதானே! ஆமாம்! நாற்பத்தெட்டுதான்! நம் வீட்டுக் குழந்தை கறுப்பு நிறம்தான்! அவ்வளவு அழகு கூட இல்லைதான்! பெற்றவர்கள் பெரு மகிழ்ச்சியுடன் குழந்தையைக் கொஞ்சிடும்போது பிறர் ஏன் வீணாக அலட்டிக் கொள்ள வேண்டுமோ தெரியவில்லை!

என் செய்வது-நம் பிரியமுள்ளவர்கள்தான் இன்று அவர் களாகவே ‘பிறர்’ ஆகிக் கொண்டனர்!

அவர் போன்றோர்க்குமிடையிலே நமது கழகத்தின் வெற்றியை குறைத்து மதிப்பிடாத துக்ளக் ஆசிரியர் போன்றவர்களும் இருக்கிறார்களே என்பதில் நாம் ஊக்கம் பெறுகிறோம்! தொடர்ந்து உழைத்தால் தொலைவில் இல்லை வெற்றிப் பூங்கா என்ற உறுதியும் எழத்தான் செய்கிறது.

கழகத்தின் உழைப்பு தேசியப் பாதைக்குத் தேவை என்று ‘துக்ளக்’ சுட்டிக் காட்டுகிறது!

தேசியப் பாதை என்பது அனைத்திந்திய நீரோட்டம் என்ற பொருளில் கையாளப்பட்டிருப்பதாகக் கருதுகிறேன்.

"தேசிய நீரோட்டம்" என்ற சொல் இப்போது அடிக்கடி அரசியல் வட்டாரத்தில் அடிபடுகிற ஒன்றாக ஆகியிருக்கிறதல்லவா?

தி.மு.க. மாநிலக் கட்சியாக இருந்தாலும் கூட அனைத்திந்திய பிரச்சினைகளில் அது ஈடுபட வேண்டிய நேரத்தில் அந்தப் பொறுப்பினைத் தட்டிக் கழித்ததே இல்லை. அவசர காலச் சட்டம்! அனைத்திந்தியப் பிரச்சினைதானே! அதனை எதிர்த்து அமைப்பு ரீதியாக முதல் குரல் கொடுத்தது தி.மு.கழகம் தானே!

இந்தியாவில் வெளியார் ஆக்கிரமிப்புக்கள் தலைகாட்டிய போதெல்லாம் அதனை எதிர்த்து, இந்திய நாட்டு மக்களின் ஒற்றுமையை உலகுக்கு அறிவித்திடத் தி.மு.கழகம் முன்னணியில் நின்றிடவில்லையா?

இந்தியா, பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு! பல மொழி பேசும் மக்களைக் கொண்ட ஒரு நாடு!

அந்த தேசிய இனங்களின் கலாச்சாரம், மொழி ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பும், பிற மொழி ஆதிக்கத்தால் அவை அழிந்திடாமல் காத்திடும் கடமையும் அலட்சியப்படுத்தப்படக் கூடியவை அல்ல!

அந்த வகையில் தி.மு.க.வின் தொண்டு இதே நிலையில் தொடரவேண்டியுள்ளது.

தேசியக் கட்சி என்று சொல்லிக் கொள்ளாத காரணத்தாலோ-அனைத்து இந்தியக் கட்சி என்று பெயர் வைத்துக் கொள்ளாத காரணத்தாலோ தி.மு.க. இந்திய தேசியப் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டது என்று யாரும் கூறிவிட முடியாது!

> "ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், தி.மு.க.வின் பணி, தமிழ்நாட்டு மக்களுக்கு இன்னும் ஐம்பதாண்டுக் காலத்திற்குத் தேவைப்படுகிற ஒன்று!"

என, அண்ணா அவர்கள் கூறியதை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு நமது உழைப்பின் பெருமையால், உண்மை வென்றிடச் செய்வோம்.

அன்புள்ள,

மு.க.

03-07-1977

431. குறுந்தொகைப் பாவைபோல!

உடன்பிறப்பே,

நீர் காய்யாத்த நிரை இதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடா தாகும்.
கவணை அன்ன பூட்டுப் பொருது அசா அ
உமண் எருத்து ஒழுகைத் தோடு நிரைத் தன்ன
முளிசினை பிளக்கும் முன்பு இன்மையின்
யானை கைம் மடித்து உயவும்
கானமும் இனிய ஆம், நும்மொடு வரினே

ஔவையார் பாடியதாகக் கூறப்படும் குறுந்தொகைப் பாடல் இது! பாலை நிலத்தின் துன்பம் நிறைந்த பயணத்தையும், தானும் துணையாக வருவேன் என்று கூறுகிற தோகையொருத்தியின் காதல் நெஞ்சத்தையும் விளக்குவதற்காக இயற்றப் பெற்றது!

பாவாய்! நான் கடந்து செல்ல இருப்பதோ பாலை நிலப் பகுதி! நீரில்லாமல் வறண்டு கிடக்கும் நிலத்தொகுப்பு! உப்பு வணிகர்கள் மூட்டையேற்றிச் செல்லும் மொட்டை வண்டிகளைப் போன்ற இலை தழையற்ற மரங்கள்தான் வழியெங்கும் காணப்படும். நிழலையே காண்பதரிது. நீரைத் தேடி அலையும் யானைகள் மரத்தின் பட்டைகளை உரித்துக் கடிக்கும். அதிலும் நீரைக் காணாமல் துதிக்கைகளை உயர்த்தி ஏக்கத்தைத் தெரிவித்திடும். இத்துணை வறண்ட பாலை நிலத்தில் நீயும் என்னுடன் வருதல் வேண்டாம்.

இப்படிக் கூறுகிற, தன் உயிரனையக் காதலனைப் பார்த்து அவள் என்ன பதில் சொல்லுகிறாள் தெரியுமா?

அடிப்பாகத்திலே தண்ணீர் உள்ள குவளை மலர், வறண்ட கோடைக் காற்றிலே வாடுவதில்லை இல்லையா? அதுபோலப் பாலை நிலத்தில் உன்னுடன் பயணம் செய்கிற நான் வாடிவிட மாட்டேன். பாலை நிலத்தில் நீரில்லை, நிழல் இல்லை, தாகம் தாங்கமாட்டாமல் யானைகள் துதிக்கைகளைத் தூக்கி நிற்கின்றன என்றெல்லாம் இன்னல்களை அடுக்கிக் காட்டி, நான் உன்னுடன் வருவதைத் தடுத்து விடாதே! என் இலட்சியம் உன்னுடன் இருப்பதுதான்! உன்னைப் பின்தொடர்ந்து வந்தால் பாலைநிலக் கொடுமைகூட எனக்கு இன்பமாகவே இருக்கும். உன்னுடன் வராமல் இருப்பதுதான் எனக்குத் துன்பம்! கானமும் இனிய ஆம், நும்மொடு வரினே.

இப்படியொரு பாசமிக்க பேச்சைக் கேட்ட பிறகும் அவன் என்ன அவளை விட்டு விட்டுச் செல்ல முடியுமா?

நீரில்லாப் பாலை நிலத்தில் அவள்தான் நீரருவி! நிழலில்லா வறண்ட பாதையிலே அவள்தான் குளிர்தருவின் நிழல்! என எண்ணிக்கொண்டு அவளுடன் தானே பயணத்தைத் தொடங்குவான்.

கம்பனின் சீதை, கஷ்டங்கள் மிகுந்திருந்தாலும் கணவனுடன் காட்டுக்குச் செல்லவே விரும்பினாள். அவன் தடுத்தும் கேளாது அவனுடன் புறப்பட்டாள்.

வால்மீகியின் சீதை, மரவுரி தரித்துக் காட்டுக்கு இராமனுடன் புறப்படத் தயங்கினாள் என்று அவரது இராமாயணமே கூறுகிறது.

பாலை நிலமாயினும் சோலைவனமாயினும் இரண்டையும் ஒன்றாகவே கருதி கணவனுடன் பயணம் செய்வேன் என்று கூறுகிற தமிழ் இலக்கியப் பாவையாகத்தான் சீதையைச் சித்தரிக்கிறார் கம்பர்!

கொடுமையான வழி! குளிர் மரங்களற்ற வழி! நீர் நிலைகள் இல்லாத வழி! வளமற்ற வழி! வறண்டு கிடக்கும் வழி! இத்தனையும் தெரிந்தும்கூட, காதலனுடன் செல்வது ஒன்றே எல்லா இடையூறுகளையும் மறக்கச் செய்துவிடும் - செல்லாமல் இருந்தால்தான் மனவேதனையைத் தாங்க இயலாது - எனக் கூறுகிற குறுந்தொகைப் பாவையை ஒருக்கணம் எண்ணிப் பார்த்தேன்!

காதல் - என்ற சொல்லுக்குப் பதிலாகக் கடமை என்ற சொல்லைப் பொருத்திப் பார்த்தேன்.

கடமையை நிறைவேற்றிட நமது கழகம் நடத்துகிற பயணம் பாலைநிலத்துப் பயணம் தானே!

அந்தப் பயணத்தில் இணைந்து கொண்டால்தான் இன்பம் - இல்லையே துன்பம் என்று எத்தனை இலட்சம் தொண்டர்கள், குறுந்தொகைப் பாவை போலவும் - கம்பனின் சீதை போலவும் - உள்ளம் படைத்தவர்களாக உடன் வருவோம் என உரைத்து அணி திரண்டு வருகிறார்கள்.

சோலை வனத்தில் மட்டுமே உன்னுடன் ஆடுவேன் பாடுவேன் ஆனந்தம் பெறுவேன் - பாலை நிலத்துப் பயணம் என் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஒத்துவராது என ஓடிவிடுவோர் - ஒதுங்கிக் கொள்வோர் - எத்தனையோ பேரைச் சில இயக்கங்களிலே நம்மால் காண முடிகிறது!

அத்தகையோரைப் பார்த்துக் குறுந்தொகைப் பாவை குறுநகை புரிந்து நீவிர், கொள்கை முழக்கம் செய்ததெல்லாம் வசதிவாய்ப்புகளைப் பெற்றிருக்கும் வரையில்தானா? சோலையைக் கடந்து பாலையில் புகுந்தால் தொடர்ந்து செல்லமாட்டீரா? என்றுதானே கேட்பாள்!

உடன்பிறப்பே, குறுந்தொகைப் பாவையின் உள்ளத்தை ஔவையார் எவ்வளவு அழகுறச் சித்தரிக்கிறார்!

காதலர்க்கு மட்டும் தேவையான உள்ளமல்லவே அது! கடமை புரிவோர்க்கும் தேவையான நெஞ்சமல்லவா அது!

இந்தப் பாடலை இப்போது ஏன் நினைவுபடுத்துகிறேன் தெரியுமா?

ஆண்டுகொண்டிருந்த கட்சியில் இருந்தவர்கள் ஆளுங்கட்சிக்குத் தாவுவார்கள்! சிலர் தாவியும் உள்ளனர்! அவர்களிடம் ஆளுங்கட்சியின் தலைவர்கள் சற்று எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!

அந்தச் சந்தர்ப்பவாதிகளின் கடந்த கால வரலாறு என்ன? வாழ்ந்த இடத்தில் வாழ வைத்தவர்களைப் பாராட்டி எப்படியெல்லாம் வர்ணனைகளைக் கொட்டினார்கள்?

அப்படிப் புகழ்ந்து கொண்டே, திரைமறைவில் அவர்கள் நடத்திய திருக்கூத்துக்கள் எவை எவை? புரிந்த மாய்மாலங்கள் என்ன? என்ன? அடைக்கலம் புகுந்த இடத்தில் அர்ச்சனை செய்து ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டவர்களிடத்தில் எப்படி நாம் நடந்து கொள்ளவேண்டும்!

தாங்கள் இருந்த கட்சியில் தாங்கள்தான் பெரிய தீவிரவாதிகள் பகவத் சிங்குகள் என்பது போலக் காட்டிக் கொண்டு அந்தக் கட்சிக்கு எவ்வளவு சிக்கலை ஏற்படுத்தினார்கள்? பிறகு எப்படி டன்கர்க் செய்து விட்டுக் கட்சியைக் காட்டிக் கொடுத்தார்கள்! இப்படிப்பட்டவர்களை எந்த இடத்தில் வைக்க வேண்டும்!

என்பதையெல்லாம், அவர்களுக்கு இப்போது அபயம் கொடுத்திருக்கிறவர்கள் சிந்தித்து ஜாக்கிரதையாகச் செயல்பட வேண்டும்! இல்லையேல் அங்கும் ஆரம்பித்து விடுவார்கள் தங்கள் திருவிளையாடல்களை!

ஏனெனில், கஷ்டமோ நஷ்டமோ எதனையும் ஏற்று கணவனுடன் பாலை நிலத்திலும் பயணம் செய்வேன் என்று பாச இதயம் காட்டுகிற குறுந்தொகைப் பாவைக்கு முற்றிலும் எதிரான இயல்பு கொண்டவர்கள் அவர்கள்!

அவர்களை மறப்போம்! உடன்பிறப்பே! நானும் நீயும், கழகம் நடத்துகிற கடும் பயணத்தில் குறுந்தொகைப் பாவை போலக் கொள்கைப் பற்றினை எள்முனையும் இழந்திடாது தொடர்ந்து நடந்திடுவோம்!

அன்புள்ள,

மு. க.

04-07-1977

432. அண்ணன் காட்டிய சிலை!

உடன்பிறப்பே,

அண்ணன் உருவாக்கிய கொள்கைப் பாசறையாம் தி.மு.கழகம், இருமுறை எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்து, தனது இலட்சியங்களைச் சட்டப் பேரவையிலே எதிரொலித்தது. பின்னர் இரண்டு முறை ஆளுங் கட்சிப் பொறுப்பை ஏற்று அண்ணா வழியில் பல சாதனைகளைப் புரிந்தது. இப்போது மீண்டும் எதிர்க்கட்சி வரிசையிலே தி.மு.கழகம் அமர்ந்திருக்கிறது என்றால், ஜனநாயகக் கடமையைப் பொறுப்புடன் நிறைவேற்றி தமிழ் மக்களின் பாதுகாவலனாக விளங்கும் என்பதில் யாருக்குமே ஐயப்பாடு இருக்க முடியாது.

1976-ஆம் ஆண்டு வரையில் ஆளுங்கட்சியாக இருந்த நாம்-ஒன்பதாண்டு காலம் தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகப் பணியாற்றிய நாம், டெல்லிச் சர்வாதிகாரிகளின் பழிவாங்கும் படலத்திற்கு ஆளாகி, பதவியிலிருந்து இறக்கப்பட்டு, பழி தூற்றப்பட்டு, ஓராண்டு காலத்திற்கு மேலாகச் சொல்ல முடியாத அளவுக்கு மத்திய அரசின் கொடுங்கோன்மையால் நசுக்கப்பட்டு, "தலையெடுக்கவே முடியாது இனிமேல்" என்று அரசியல் வட்டாரங்களில் ஆரூடங்கள் கணித்த பிறகும் நாற்பத்தி இரண்டு லட்சம் வாக்குகளையும் - நாற்பத்தி எட்டு இடங்களையும் பெற்றிருக்கிறோமென்றால், தலையாய எதிர்க்கட்சிக்குரிய தகுதியையும் அடைந்திருக்கிறோ மென்றால், இது கவலை கொள்ளத்தக்க ஒன்றல்ல என்று நான் உறுதியாகக் கூறுவேன்.

மீண்டும் ஆளுங் கட்சியாக வரமுடியாமல் தோற்றுவிட்டோமே என்று ஆதங்கம் கொள்வோர் இருந்திடுவர் நமது கழகத்தில்! நான் அவர்களை அறியாமல் இல்லை! பட்டுப்போய்விட்டது என்று

புறக்கணிக்கப்பட்ட மரத்தில் துளிர்கள் தோன்றியது மட்டுமல்ல; ஓரளவு நிழல் தருமளவுக்கு அது தழைத்தும் இருக்கிற காட்சியை அன்றோ இன்றைக்குக் காணுகிறோம்.

நமக்குத் தோல்வி ஏற்பட்டது என்பதை நாம் மறைத்திட வில்லை. அந்தத் தோல்விக்கான காரணங்களும் நமக்குப் புரியாமல் இல்லை. முதல் காரணமாகச் சொல்ல வேண்டுமேயானால், கழகத்தின் மீது புழுதியை வாரி இறைத்தவர்கள், அதற்கான பக்கத்துணையை டெல்லிப் பேரரசிடம் பெற்றுக் கொண்டார்கள். நாள் தவறாமல் நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்டது நம்மைப்பற்றி!

ஒரு விசாரணைக் கமிஷன் - அதற்கு அதிகாரிகளால் தயாரிக்கப் பட்ட சாட்சிகள்-அந்தச் சாட்சிகள், கிளிப் பிள்ளைகளைப்போல அதிகாரிகள் சொல்லிக் கொடுத்ததைச் சொன்னார்கள். இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதும் அந்த ஒத்திகை பார்க்கப்பட்ட நாடகம் நடத்தப்பட்டுத்தான் வருகிறது. பரவாயில்லை! அவர்கள் எரிச்சலைத் தீர்த்துக் கொள்ளட்டும். அப்படியாவது டெல்லியில் உள்ளவர்களின் மன அரிப்பு அடங்கினால் நமக்கு மகிழ்ச்சிதான்! நம்மைப் பொறுத்தவரையில் எந்த வகையான தாக்குதல்களாக இருந்தாலும், அவற்றை அரசியல் ரீதியாகச் சந்திப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டபடியால் சில நாட்களுக்குப் பொறுமையுடன் இருப்போம். 'பொறுத்தது போதும்' என்கிற நிலையை அவர்களே உருவாக்குகிற வரையில் பொறுமை யுடனேயே இருப்போம்!

வழக்குகள், விசாரணைகள், அவதூறுச்செய்திகள் பரப்புதல்- ஆகிய இவற்றால் அவர்களால் செய்ய முடிந்தது நமக்குத் தேர்தலில் அதிக இடம் கிடைக்காமல் போயிற்றே, அது ஒன்றுதான்!

இதற்குமேலும் என்ன வந்துவிடும்?

எட்டுவருடம் பத்துவருடம் சிறையில் போடுவோம் என்று என்னை மிரட்டுகிறார்கள். அதற்காகவே ஏற்பாடுகள் நடைபெறுகின்றனவாம்! எட்டு பத்து ஆண்டுகள் என்ன! ஆயுள் வரையில் அடைக்கட்டுமே காராக்கிரகத்தில்! அல்லது அவர்களது ஆவல் தீரவில்லையென்றால் தூக்குக் கயிற்றில்தான் என்னைத் தொங்கவிடட்டுமே!

உடன்பிறப்பே! "ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான் ஆனது ஆகட்டுமே!" என்று கூறிக்கொண்டு நான் பொது வாழ்வுக்கு வந்தவன். சட்ட சபை கூடுகிற நேரமாகப் பார்த்து சர்க்காரியா கமிஷன் சென்னைக்கு வருகிறதாம்! விளம்பரங்கள் விடுத்துள்ளனர்! அது என்னவென்று நாட்டுக்குத் தெரியாதா? பழைய பாரதப் பிரதமர் இந்திரா அம்மையார் தூண்டுதலால் பஞ்சாப் அகாலிதளத் தலைவர் முன்னாள் முதல்வர் பாதல் மீது போடப்பட்ட விசாரணைக் கமிஷனுக்கு அண்ணன்தானே! இன்று அந்த விசாரணைக் கமிஷனின் கண்டுபிடிப்புகள் என்ன ஆயின? பாதல் மீது போடப்பட்ட கிரிமினல் வழக்குகளின் கதி என்ன? எல்லாம் திரும்பப் பெறப்பட்டன. அவரும் மத்திய அமைச்சராகி இப்போது பஞ்சாப் மாநில முதலமைச்சராக ஆகிவிட்டார். ஆனால் இங்கே மட்டும் "அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடைபெறும்" என்று அறிவிக்கப்படுகிறது.

எத்தனை தொல்லைகள் தொடர்ந்தாலும் அதனை உறுதி யுடன் தாங்கும் உள்ளத்தைப் பெற்றுள்ளோம் நாம்.

நீ படித்திருப்பாயே; நினைவிருக்கிறதா உனக்கு?

நமது அண்ணன் காஞ்சியிலே தேர்தலிலே தோற்றுவிட்ட நேரம்- அப்போது தம்பிக்கு எழுதிய கடிதத்திலே என்ன குறிப்பிட்டார் தெரியுமா? அவர் தீட்டியுள்ள கருத்து, தேர்தலில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காததால் ஏற்படும் உணர்ச்சிக்கு மட்டு மல்ல; தொடர்ந்து கொடுக்கப்படும் தொல்லைகளையும் எப்படித் தாங்கிக் கொள்வது என்பதற்கும் பயன்படக்கூடிய ஒன்றாகும். இதோ அண்ணன், அன்றைக்கு எழுதியதைப் படித்துப் பார்!

> "அரசியல் உலகு அற்புதங்கள், உற்பாதங்கள், அதிர்ச்சிகள் ஆக மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சிகள், எக்களிப்புக்கள், எரிச்சலூட்டும் சம்பவங்கள், வெற்றிகள் தோல்விகள் யாவும் நிரம்பிய இடம்! எல்லாத் துறைகளும் அவ்விதம்தான் என்பாய்! ஒரு மாறுபாடு உண்டு. மற்ற எந்தத் துறையினையும்விட அரசியல் துறையிலே எதிர்பாராத நிகழ்ச்சிகள், ஏமாற்றங்கள், எரிச்சல்கள் நிரம்ப ஏற்படும்; விசித்திரமான உலகு! விசித்திரமானது அரசியல் உலகு என்பதற்கு வேறெந்த எடுத்துக் காட்டும் வேண்டாம்.

நான் இப்போது எங்கு சென்று வந்திருக்கிறேன் என்பதைக் கூறுகிறேன், கேளேன். அதுபோதும்! பெங்களூர் நகரிலிருந்து நூறுகல் தொலைவில் உள்ள சீரூர் 'சிரவணபெலகோலா' என்பது! அங்குதான் வெளிநாட்டு விற்பன்னர்களும் கண்டு வியந்திடும் அந்தச் சிற்பம் இருக்கிறது. குன்றின் மீது அறுபது அடி உயரம் அந்தப் பேருரு! பிறந்த மேனி! திறவாக் கண்கள்! எனினும் கனிவு வழிகிறது. நின்ற நிலை! காண்போரை நின்ற நிலையினராக்கிவிடும் கவர்ச்சி! தன்னை மறந்த நிலையில் பிறந்த மேனியாய் நிற்கும் அந்தப் பேருரு, மனதினை ஓரிடத்தில் பதியவைத்து மற்ற எதனையும் எண்ணிட முடியாத நிலை பெற்று இருக்கும் காட்சி கண்டாரே கருத்தறிவார்; கண்டதனை விளக்கிட இயலாது; உண்மை. காலடியில் புற்றுகள்! செடி கொடிகள், 'கோமடீஸ்வரர்' எனப்படும் அந்தச் சிலையின் காலிலும் கரத்திலும் மார்பிலும் படருகின்றன! அசையா நிலை! உணராநிலை! மனம் ஓரிடத்திலே முழுக்க முழுக்க ஒன்றி விட்டதனால் செடி கொடி படருவது பற்றிய உணர்ச்சியே எழவில்லை. செடி கொடிகள் மட்டுமல்ல தம்பி, சீறிடும் பாம்புகள் சிலையின் உடலைச் சுற்றிக் கொண்டுள்ளன. உணர்வு இல்லை! கனிவும் கவர்ச்சியும் மிக்கதோர் நிலையில் பேருரு!!

உற்று உற்றுப் பார்த்தேன். நெருங்கி நின்று பார்த்தேன். தொலைவிலிருந்து பார்த்தேன்! உறுதி, ஒன்றில் இலயித்து விட்டால் வேறு எந்த உணர்வும் தீண்ட முடியாத நிலைபெறும் இயல்பு! பேருரு காட்டிடும் அரும்பெரும் பாடம்! ஆமாம் தம்பி, தேர்தலிலே தோல்வி என்றால் நெஞ்சிலே துக்கம் துளைக்கிறது என்கிறோமே! பாம்பு சுருட்டிக் கொள்கிறது உடலில்- மனம், ஒன்றினிலே இலயித்துப் போனதால் அரவம் தீண்டுவது பற்றி உணர்வே இல்லை! கண்ட நான், எண்ணிக் கொண்டேன். அந்த உறுதி வேண்டும்! ஒன்றில் மனதைப் பதியவைத்துவிட்டால் வேறு உணர்வுகள் நம்மைத் தீண்டிடும் வலிவற்றுப் போகும்

நிலை ஏற்பட வேண்டும் என்று விரும்பினேன். எனக்கு மட்டுமல்ல தம்பி! உனக்கும் அந்த நிலை, உறுதி இருந்திட வேண்டுமென்று விரும்புகிறேன்”

உடன்பிறப்பே, அண்ணன் அந்தச் சிலையைக் காட்டி, எந்த நிலையிலும் நாம் உறுதி குலையாமல் இருக்க வேண்டுமென்ற அறிவுரையையும் சுட்டிக் காட்டியுள்ளாரே! அதனை மறந்து விடாமல் பணியாற்றினால்-தொல்லைகளோ, தோல்விகளோ-நமது குறிக்கோளுக்குக் குறுக்கே வந்துவிட முடியாது!

அன்புள்ள,

மு.க.

05-07-1977

433. மெழுகுவத்தியாகப் பிறந்து விட்டால்...!

உடன்பிறப்பே,

நடந்து முடிந்த கழகச் செயற்குழுவின் கூட்டத்தில் உறுப்பினர்களைச் சேர்ப்பதை விரைவுபடுத்துமாறும், பரவலாக அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் கிளைக் கழகங்களை உருவாக்குமாறும், வட்டாரக் கொள்கை பரப்புச் செயலாளர்கள், தங்கள் பகுதிகளில் கழகக் கொள்கை விளக்கக் கூட்டங்களை நடத்துவதுடன், மாவட்டக் கழக ஒன்றியக் கழகச் செயலாளர்கள்-மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து தி.மு.க. சட்டமன்றக் கட்சிக்கு அவ்வப்போது தெரிவித்திடுமாறும், கழக வளர்ச்சி நிதிக்கு ஆங்காங்கு இயன்ற அளவு தொகையினைத் திரட்டித் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் - இப்படிப் பல்வேறு கருத்துக்கள் வழங்கப்பட்டு அனைத்தும் உடனடியாகச் செயல் வடிவம் பெற வேண்டுமென்று நானும், நமது பொதுச் செயலாளரும் செயற்குழு உறுப்பினர்களிடத்திலே கேட்டுக் கொண்டுள்ளோம்.

உறுப்பினர் சேர்க்கும் தாள், நாள்தோறும் ஆயிரக்கணக்கில் உரியவர்களால் வாங்கிச் செல்லப்படுகின்றன. அதே வேகத்தில் அந்தத் தாளில் உறுப்பினர்களைப் பதிவு செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்பதையும் நினைவு படுத்துகிறேன்.

அமைப்புகள் இன்னும் சீராகச் செயல்பட செயற்குழு உறுப்பினர்கள் வழங்கியுள்ள செழுமிய கருத்துக்களின் அடிப்படையில் கழகத்தின் சட்டதிட்டத் திருத்தக்குழு, தனது பணியினைத் தொடங்கி விட்டது.

உறுப்பினர் சேர்த்தல், முறையாகக் கிளைகளை அமைத்தல், அவற்றுக்கு மேல் அமைப்புகளை உருவாக்குதல், கிளையிலிருந்து தலைமைக் கழகம் வரையில் உள்ள நிர்வாகிகளைத் தேர்ந் தெடுத்தல் - எனப்படும் அமைப்பு ரீதியாக இயங்குகிற

கட்சி, தி.மு.கழகம் எனச் சொல்லிக் கொள்வதில் நமக்கோர் பெருமையுண்டு!

அட்ஹாக் கமிட்டிகளையும், அமைப்பாளர்களையும் மட்டுமே வைத்துக்கொண்டு எந்தவிதக் கட்டுக்கோப்புமற்ற நிலையில் பல கட்சிகள் இயங்கிடும் பொழுது, அவற்றிற்கு நேர்மாறாக பலமான அடித்தள அமைப்புடன் கட்டப்பட்டுள்ள இலட்சியக் கோட்டையாக நமது கழகம் திகழ்கிறது.

இந்தக் கோட்டை மேலும் வலிவுடன் அமையவும், பொலிவுடன் விளங்கவும் நாம் கட்டிக் காத்துவரும் ஜனநாயக நெறியுடன் ஆக்கப் பணிகளை ஆற்றிட வேண்டும். கழகத் தருவுக்கு ஆணிவேராக இருப்பது உறுப்பினர்களின் எண்ணிக்கை என்பதை மறந்துவிடக் கூடாது.

நமது ஊர்க்கிளைக்கு இத்தனை உறுப்பினர்கள் போதும், என்று கட்டுப்படுத்தி விடாமல் ஏராளமான உறுப்பினர்களைச் சேர்த்திட வேண்டும். ஆடவரும் மகளிரும் ஒவ்வொரு ஊரிலும் ஆயிரக்கணக்கில் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள் என்ற கணக்கினைக் காட்டுதல் வேண்டும். அது நமது கழகத்திற்கு எதிர்காலப் பெரும் பணிகளுக்கான ஊக்கத்தையும் உறுதியையும் தரவல்லதாகும்.

எங்கே பார்க்கலாம், எனதருமை உடன்பிறப்பே! இந்த ஒரு மாத காலத்திற்குள் நீ போட்டி போட்டுக் கொண்டு இலட்சக் கணக்கில் உறுப்பினர் பட்டியலைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கிறாயா என்பதைப் பார்க்கிறேன். நீ நினைத்தால் அது என்ன பெரிய காரியமா? உன்னால் முடியாததும் உண்டோ? உடன் எழுந்திடு! காரியமாற்றிடு!

கழகப் பிரச்சாரம், நாம் எதிர்க்கட்சி என்ற முறையில் மக்களின் பிரச்சினைகளை ஆளுங்கட்சிக்கு எடுத்துக்காட்டும் வகையில் அமைந்திடல் வேண்டும்.

அன்றாடப் பிரச்சினைகள் மட்டுமல்ல, நமது தமிழ்ச் சமுதாயத்தின் வீர வரலாறுகளை நினைவூட்டி, முகில் முட்டப் பறந்த தமிழனின் கீர்த்திக் கொடியை ஞாபகப்படுத்தி அந்த இனம் தாழ்வதோ? ஏ! தாழ்ந்த தமிழகமே! இது நியாயம்தானோ? எனக் கேட்டு அவர்தம் உள்ளத்தில் தமிழ் உணர்வைப் பயிர்செய்யும் வகையிலும், நமது கொள்கை விளக்கக் கூட்டங்கள்

குக்கிராமங்கள் தானே என்று விட்டு விடாமல் எல்லா இடங்களிலும் நடைபெற்றாக வேண்டும். அவதூறும் ஆகாயப்புளுகுகளும் கூறி நமது இனத்தையே அழித்திடத் துடிக்கும் பொல்லாப் போக்கினரின் உள்நோக்கத்தை ஊருக்கு ஊர் - ஐம்பது பேர் நூறு பேர் கூடுகிற கூட்டமாயினும் பரவாயில்லை என்று அங்கெல்லாம் விளக்கிக் கூறிட வேண்டும்.

கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தோர், சிக்கனத்தைக் கடைப் பிடித்தல் தேவை! சிக்கனமாக நிறையக் கூட்டங்கள் நடைபெற வழி வகுக்கும் வண்ணம் சொற்பொழிவாளர்களும், கலைநிகழ்ச்சி யாளர்களும் நடந்திடுவதும் முக்கியமாகும்!

வருகை தந்த பேச்சாளருக்கோ, கலைநிகழ்ச்சியாளருக்கோ "நியாயமான வழிச்செலவு" தருவதற்குத் தயங்காதீர்!

வருவதாகச் சொல்லி விட்டு, தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தாலன்றி கடைசி நேரத்தில் "வர இயலவில்லை" எனத் தந்தி தரும் வழக்கத்தையும் நிகழ்ச்சிக்கு ஒத்துக் கொண்டோர் இனி நிறுத்திக் கொள்ளுங்கள்!

இந்த நிலைகள் சிந்திக்கப்பட்டுச் சீர்பட்டால் ஊர்தோறும் தவறாது ஒலித்திட வழி காணலாம் கழகக் கொள்கை!

கழகத்தின் அன்றாடச் செலவினங்களுக்கே நிதியில்லை என்று கைவிரித்துக் காட்டினேன். ஏதோ, ஓரளவு நாள்தோறும் உடன்பிறப்புகள் வழங்கி வருகின்றனர்.

இன்று கோவை நகருக்குத் தேதி கேட்டிருக்கிறார்கள். ஒரே நாள் காலை முதல் மாலைவரையில் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டால் பத்தாயிரம் ரூபாய் தருவதாக!

இந்தத் திங்கள் கடைசி வாரத்தில் அங்கு ஓடுவதாக இருக்கிறேன்.

பத்தாயிரமல்லவா? பறந்துகூடப் போவேன்!

இப்படி எல்லா நகரங்களிலும்-ஏன்! சிற்றூர் பேரூர்களிலும்கூட, கழக நிதி தரும் ஏற்பாடுகள் பெருமளவில் ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

இப்போதுதானே நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து- அதற்குள் சட்டமன்றத்தேர்தலில் இவ்வளவு அலைந்தாய். மீண்டும்

அலைவதற்கு உடலில் வலுவிருக்கிறதா? என்று வியப்புடன் கேட்கிறாய். புரிகிறது!

இல்லைதான் உடலில் வலிமை! ஆனால் உள்ளத்து வலிமை, குறையவில்லை! அந்த வலிமை, அண்ணனையும் உன்னையும் நினைத்து விட்டால் குறையவே குறையாது!

மெழுகுவத்தியாகப் பிறந்து விட்டால் ஒளிகொடுக்க உருகித்தானே தீரவேண்டும்!

கழகம் காப்பாற்றப்பட, என் கண்ணினும் மேலான உடன் பிறப்பே! என்னை நீ கசக்கிப் பிழிவதைப் பற்றி நான் கவலைப்பட மாட்டேன்! நன்றாகப் பயன்படுத்திக் கொள் என்னை!

அதேபோல் நீயும் உன் கடமைகளை ஆற்றிக் காட்டு! அதுவே எனக்கு மகிழ்ச்சி! உம்! தொடங்கட்டும் உன் தூய பணிகள்!!

அன்புள்ள,

மு.க.

06-07-1977

434. வரலாறு சுட்டிக் காட்டிடும்!

உடன்பிறப்பே,

ஒரு மன்னனின் கொலுமண்டபம்! அவனது அமைச்சர்களும் பிரதானியரும் வீற்றிருக்கின்றனர். அன்றாடம் நீதி கோரி கொலுமண்டபத்திற்கு வரும் வழக்குகளைப் போல அன்றும் பல வழக்குகள் வந்தன. அவற்றையெல்லாம் விசாரித்து, ஏற்ற தீர்ப்புக்களை வழங்கினான் அந்தக் கொற்றவன்! ஒரே ஒரு வழக்கில் மட்டும் பெரிய சிக்கல் ஏற்பட்டுவிட்டது. தீர்ப்பளிக்க இயலாது தவித்தான் அந்தத் தரணியாளும் கோமான்!

வளவன் என்பவன் வல்லூறு என்பவன் மீது தொடுத்த வழக்காகும் அது! வளவனின் மாட்டை வல்லூறு திருடிக்கொண்டு போய் வெளியூரில் விற்று விட்டான் என்பதுதான் குற்றச்சாட்டு!

வல்லூறு அந்தக் குற்றச்சாட்டை மறுத்தான். தன் கரம், களவாடும் கரமல்ல என்று கடவுளுக்குத் தெரியும் என்றான். தூய்மையின் பிறப்பிடம் தன்னைப் போல் யாருமில்லை யென்றும், அதற்கு அடையாளமாகத்தான் தன்னுடைய தலையில் வெள்ளைத் துணியாலான பட்டையொன்றைக் கட்டிக் கொண்டிருப்பதாகவும் சொன்னான். வளவனின் மாட்டைத் தான் பார்த்ததேயில்லையென்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு சத்தியம் செய்தான். அவன் அழுவதையும், அலறுவதையும், ஆணையிட்டுக் கூறுவதையும் கண்ட அரசனுக்கு எப்படித் தீர்ப்பளிப்பது என்றே புரியவில்லை. ஆலோசனை கூறும் ஆற்றல் பெற்ற அமைச்சர்களும் அவ்வாறே திகைத்துப் போயிருந்தனர். சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு மன்னன், வளவனையும் வல்லூறையும் பார்த்து "நீங்கள் இருவரும் இன்று போகலாம். நாளை மீண்டும் விசாரணை தொடரும்" என்று கூறினான். இருவரும் அரசனை வணங்கிவிட்டு கொலு மண்டபத்தைவிட்டு வெளியேறத் தொடங்கினார்கள். அவர்கள் திரும்பிச் செல்லத் தொடங்கியதும் அரசன், சற்று உரத்த குரலில்,

"ஏ! மாடு திருடியவனே!

இங்கே வா!"

என்று கூப்பிட்டான். அந்தக் குரல் காதிலே விழுந்ததும், வல்லூறு தன்னை மறந்து அரசன் பக்கம் திரும்பிவிட்டான். அரசனுக்கு தீர்ப்பளிக்கும் வேலை, சுலபமாகி விட்டது. வல்லூறுக்கு வழங்கவேண்டிய தண்டனை வழங்கப்பட்டது.

உடன்பிறப்பே, உனக்குத் தெரிந்த இந்தச் சிறுகதையை இப்போது சொல்ல வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது தெரியுமா? உனக்கு நான் எழுதும் கடிதங்கள் கழகத்தை வலிவூட்டுவதற்காகவும், கழகத்துக்கு ஏற்படும் சோதனைகளைக் கடந்து, சோர்வடையாமல் நமது பயணம் தொடரவேண்டும் என்பதற்காகவும்தான் என்பதை நீ அறிவாய்! ஒன்றிரண்டு கடிதங்களைத் தவிர பெரும்பாலான கடிதங்கள் பொதுவாக எழுதப்பட்டவைகள்தான்! எழுதப்படுபவைகள்தான்! ஆனால், குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பதைப் போல சில பேர், அந்தக் கடிதங்களைப் படித்துவிட்டுத் தங்களைத்தான் நான் குறிப்பிட்டு எழுதியிருக்கிறேன் என எடுத்துக்கொண்டு என்மீது காய்ந்து விழுகிறார்கள்! கடுங்கோபம் கொள்கிறார்கள்.

அரசியல் மேடைகளிலும் சரி, எழுதுவதிலும் சரி, நான் கண்ணியமாகப் பேச வேண்டுமென்றும், எழுதவேண்டுமென்றும் எனக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள்! யார் அவர்கள்? என்று கேட்காதே! நான் அந்தப் பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை.

கோடிட்டுக் காட்டுகிறேன், புரிந்துகொள்க!

> காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மேடைக்கு மேடை அந்த ஆட்சியின் அமைச்சர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது காமன், கக்கன், சுப்பன், பக்தன், வெங்கன் என்று அடுக்கிக் கொண்டே போவாரே ஒருவர்! அவர்தான் எனக்கு "அரசியல் கண்ணியம்" போதிக்கும் ஆசானாகப் புறப்பட்டிருக்கிறார்.

காமன் என்று காமராஜரையும், கக்கன், சுப்பன் என்று கக்கன், சுப்பிரமணியம் ஆகியோரையும், பக்தன் என்று பக்தவத்சலனாரையும், வெங்கன் என்று வெங்கட்ராமனையும் நாக்கூசாமல் பேசி, தனது நாவன்மை காட்டியவர், இன்று எனக்கு

"கண்ணியம்" கற்றுத்தருவதாகக் கூறுவது வேடிக்கையா? அல்லது வேதனையா? விளைந்த காட்டுக் குருவிகளானவர்களுக்கு உள்ளம் எப்படியெல்லாம் காற்று மோதும் மேகங்களாக உருக்குலைந்து விடுகிறது பார்த்தாயா?

பை நிறையக் குறிப்புகள்! இன்றைக்கு யாரைத் தஞ்சம் புகுந்து நிற்கிறார்களோ அவரையும், அவருடன் சில அழகிகளையும் இணைத்த புகைப்படங்கள் நிறைந்த பத்திரிகைகள்!

இவற்றை முறையே மேடையிலே படித்துக் காட்டி, பத்திரிகைகளையும் அதிலுள்ள படங்களையும் விரித்துக் காட்டி நாடு முழுதும் பிரச்சாரம் செய்தவர்தான். இன்றைக்கு "மேடை நாகரிகம்" பற்றி நமக்குச் சொல்லித் தருவேன் என்று துள்ளிக் குதிக்கிறார்!

கடிதம் எழுதுகிறேன், உடன்பிறப்பாம் உனக்கு! அதில் நான் கோடிட்டுக் காட்டுகிற சில இயல்பினர், தாங்கள்தான் என்று எடுத்து வைத்துக்கொண்டு ஏசிப் பேசுவானேன்? இவர்களுக்கு ஏன் உள்ளக் குடைச்சல் ஏற்படுகிறது? "மாடு திருடியவனே?" என்று மன்னன் கூப்பிட்டதும் திரும்பிப் பார்த்து அகப்பட்டுக் கொண்டவனின் கதையாக அல்லவா இது இருக்கிறது!

உடன்பிறப்பே, அவர்களின் மனப்புயல் எனக்குப் புரிகிறது! எரிச்சலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்; அதுவும் தெரிகிறது! அவர்கள் எதையோ எதிர்பார்க்கட்டும்; ஏதோ ஒன்று கிடைக்கட்டும்! அதற்காக நாம் கவலைப்படப் போவதில்லை! சாமர்த்தியசாலிகள்; எப்படியோ சங்கடமின்றி வாழ்க்கை நடத்தட்டும்! அதற்காக மகிழ்ச்சி அடைவோமே தவிர மனமொடிந்திட மாட்டோம்! நமது வழி தெளிவானது! துணிவுடன் பயணம் நடத்தவேண்டியது! வழி தவறியவர்கள் யார் என்பதை, வரலாறு இன்றில்லாவிட்டாலும் – ஒரு நாள் சுட்டிக்காட்டத்தான் போகிறது!

அன்புள்ள,

மு.க.

07-07-1977

435. காஞ்சியில் நீதிதேவன் மயக்கம்!

உடன்பிறப்பே,

இன்று நண்பர் சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் என்னைச் சந்திக்க வந்தார். முரசொலி அலுவலகத்தில் அவரை என் எதிரே உட்கார வைத்துக்கொண்டே இந்தக் கடிதம் உனக்கு எழுதுகிறேன். காஞ்சிபுரத்தில் 'நீதிதேவன் மயக்கம்' நாடகம் நடத்தலாம் என்றிருக்கிறோம் எனக் கூறினார். "காஞ்சியில் நீதி தேவன் மயக்கம்" நாடகம் என்றதும் எனக்கு எத்தனையோ பழைய நினைவுகள்! காஞ்சிக் கழகத் தோழர்களுடன் இணைந்து கழகக் கொள்கைப் பிரச்சாரத்திற்காகவும், கழக நிதி திரட்டுவதற்காகவும் பல ஆண்டு களுக்கு முன்பு தமிழகம் முழுவதும் நாடகங்கள் நடத்தியதையும், அந்த நாடகங்களில் நண்பர் சிவாஜி கணேசன் அவர்கள் எந்த ஊதியமும் தேவையில்லையென்று கூறி ஒத்துழைத்ததையும் மறந்துவிட முடியுமா?

"காஞ்சியில் நீதிதேவன் மயக்கம்" என்றதும், அந்த அருமை யான இலக்கிய நாடகத்தை அண்ணா அவர்கள் எவ்வளவு அற்புதமாகத் தீட்டியிருந்தார் என்பதை நினைத்தாலே இப்போதும் நெஞ்சு இனிக்கத்தான் செய்கிறது.

இராவணனை இரக்கமற்ற அரக்கன் என்று கம்பர், வீண்பழி சுமத்துகிறார்! அவரது இராம காதை, நாடெங்கும் பரவுகிறது. இராவணன் கொடியவன் என்றும், அரக்கன் என்றும் பிரச்சாரம் செய்யப்படுகிறது. அவனைக் காட்டிக் கொடுத்துத் துரோகியான வீடணனுக்கு ஆழ்வார் பட்டம் சூட்டப்படுகிறது. இராவணன், தன் மீது வேண்டுமென்றே திட்டமிட்டு "இரக்கமற்ற அரக்கன்" என்று வீண்பழி சுமத்தப்படுகிறது என வாதாடுகிறான் நீதிமன்றத்தில். நீதிதேவனின் முன்னிலையில்! அவனை அரக்கன்தான் என்று கூறவும், இரக்கமற்றவன்தான் என்று இழித்துரைத்து சாட்சிய மளிக்கவும் முனிவர்கள் எல்லாம் நீதிமன்றத்துக்கு வருகிறார்கள்! இராவணன் வேடத்திலே அண்ணா குற்றவாளிக் கூண்டிலே நின்று கொண்டு "விசுவாமித்திரரே! என்னை இரக்கமற்றவன்

என்று கூறுகிறீரே! பெற்ற குழந்தையையும் பிரியமுள்ள மேனகையையும் கானகத்திலிருந்து துரத்திய நீர் இரக்கமுள்ளவர்! நான் இரக்கமற்றவனா?" என்று கேட்பார். விசுவாமித்திரர் விழிப்பார்! "சிவபூஜைக்கு என்றிருந்த மலர்களை யாரோ தொட்டு விட்டார்கள் என்று அவர்களின் கையை வெட்டியெறிந்த கோட்புலி நாயனார் இரக்கமுள்ளவர் - நான் இரக்கமற்ற அரக்கனா?" என்று கோட்புலியைச் சுட்டிக்காட்டி இராவணன் கேட்பான்! "என் தங்கையின் மூக்கையும் மார்பையும் அறுத்தெறிந்தானே - பெண் என்றும் பாராமல் இந்த இலட்சுமணப் பெருமாள் - இவன் இரக்கமுள்ளவன்! சீதையைத் தொடாமலே விமானத்திலே தூக்கிச் சென்ற இராவணனாகிய நான் இரக்கமற்ற அரக்கனா?" இப்படி அம்பு மழை பொழிவது போல கேள்விகள் கிளம்பும். இராவணனின் வாயிலிருந்து! விடையளிக்க முடியாமல் கம்பரும் திகைப்பார். தீர்ப்பளிக்க முடியாமல் நீதிதேவனும் மயக்கமுற்றுக் கீழே சாய்வார்! இந்த இலக்கிய ஓவியத்திற்குத்தான் "நீதி தேவன் மயக்கம்" என்று அண்ணா பெயர் சூட்டியிருந்தார். காஞ்சியில் இப்போது நீதிதேவன் மயக்கத்தை நடத்திடப் போகிறார்களாம்! காண வேண்டிய நாடகம்! கருத்து விளக்க நாடகம்!

நமது பேராசிரியர் அன்பழகன் அவர்கள்தான் அந்த நாடகத்தில் நீதிதேவனாக நடிப்பார்! தீர்ப்பளிக்க முடியாமல் மயங்கி விழும் கட்டம் மிகப் பிரமாதமாக இருக்கும். இராவணனின் குறுக்குக் கேள்விகளுக்கு இராம காதை எழுதிய கம்பராலேயே பதில் அளிக்க முடியவில்லை. அவர் என்ன செய்வார் பாவம்! வால்மீகியைத் தழுவி அவர் எழுதிய காதைதானே அது! வடமொழி இராமாயணம், தமிழ்மொழி இராமாயணமாக உருப்பெற்ற போது சில நல்ல மாற்றங்களைப் பெற்றது என்றாலும் கம்பரும், "இராவணனை இரக்கமற்ற அரக்கன்" என்று கூறிடத் தவறவில்லை.

இராவணன் மீது பழி சுமத்திட வால்மீகி கையாண்ட
அதே முறைகளைத்தான் கம்பரும் கையாண்டார்!

இன உணர்வை வீழ்த்துவதற்காகத்தான் தமிழர் தலைவனாம் தென்னிலங்கை வேந்தன் இராவணன் மீது களங்கம் சுமத்தி அழித்திட முனைந்தார்கள். அதற்குத் தமிழ்க் கவிவேந்தர் கம்பரும் துணைபோனார் என்பதே நமது அண்ணாவின் குற்றச்சாட்டு! ஏன்? தமிழ் கற்றுத் தன்மான உணர்வு பெற்றோர் அனைவரின் குற்றச்சாட்டும் அதுவே தான்!

தன்மீது சுமத்தப்பட்ட பழியைத் தீர்த்துக் கொள்ள அண்ணா உருவாக்கிய இராவணன், நீதிதேவனுக்கு முன்னால் கம்பரையும், மற்றும் புராணீகர்களால் தயாரிக்கப்பட்ட சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்கிறான்.

நீதிதேவனுக்கு உண்மை தெரிகிறது. சாட்சியங் கூற வந்தோர் தான் குற்றவாளிகள் என்பதும் புரிகிறது! ஆனாலும் தெளிவான – துணிவான – தீர்ப்பு எழுதும் தூய்மையான கை அந்த நீதிதேவனுக்கு இல்லை!

குறுக்கு விசாரணையால் அவதூறுக்கோட்டை 'பொல பொல' வென உதிர்ந்து போனது எனக் கண்டும்கூட, அந்த நீதிதேவனின் கை, நல்ல தீர்ப்பு எழுதத் தயங்குகிறது!

ஒருபக்கம் கம்பன்! மற்றொரு பக்கம் இராவணன், பாவம், வேண்டுமென்றே பழி சுமத்தப்பட்டவன்! நீதிதேவனின் விழிகள் சுழலுகின்றன! ஏன்? அவருக்குமுன் உலகமே இருள் சூழ்கிறது! மயங்குகிறார்! கீழே விழுகிறார்!

நீதிதேவனுக்கு உடல் நலமில்லையென்று நீதிமன்ற நடவடிக்கை ஒத்திவைக்கப்படுகிறது.

இந்த நாடகத்தைக் காணும் மக்கள்; இப்படிப்பட்ட நீதிதேவனிடமிருந்து நல்ல தீர்ப்பை எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என்று பேசியவாறு கொட்டகையை விட்டு வெளியேறுகின்றனர்.

"காஞ்சியில் நீதிதேவன் மயக்கம்" நடத்தப் போகிறோம் என்று நண்பர் சி.வி.எம்.அண்ணாமலை சொன்னதும் அன்று நடந்ததும் – இன்று நடப்பதும் என் உள்ளத்தில் நிழலாடின. அதைத்தான் கடிதமாகத் தீட்டியிருக்கிறேன். தயாராகிக் கொள்வோம்; "காஞ்சியில் நீதிதேவன் மயக்கம்", விரைவில் கண்டு களித்திட!

அன்புள்ள,

மு.க.

08-07-1977

குறிப்பு:- உடன்பிறப்பே, இந்த கடிதத்தை ஒரு முறைக்கு இருமுறை ஊன்றிப் படித்தால் உன்னால் புரிந்துகொள்ள முடியும் சில உண்மைகளை.

436. நாடகத்தில் ஒரு காட்சி!

உடன்பிறப்பே,

ஒரு நாடகத்தின் தெருக்காட்சியை மட்டும் இந்தக் கடிதத்தில் தீட்டிக் காட்டுகிறேன். அடுத்தடுத்த காட்சிகள் எப்போது என்று அவசரப்படாதே! வேளை வரும்போது அந்தக் காட்சிகளும் சித்தரிக்கப்படும். பின்னர் ஒரு நாள் அனைத்துக் காட்சிகளையும் தொகுத்து நீயே ஊருக்கு ஊர் சென்று சில நடிகர்களின் துணையுடன் அந்தச் சிறு நாடகத்தை நடித்துக் காட்டலாம். இப்போது முதல் காட்சியைக் காண்போம்; வா!

நாடகக் கொட்டகை, மக்கள் வெள்ளம் பொங்கி வழிகிறது! நாடகம் தொடங்குவதற்கு முன்பு இசைத் தட்டுகள் முழங்குகின்றன. சோடா, முறுக்கு, வெற்றிலை பாக்கு, பீடி சிகரெட் என்று வியாபாரச் சிறுவர்கள் நாடகக் கொட்டகையில் மக்கள் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு அங்குமிங்கும் அலைந்தவாறு இருக்கின்றனர். நடக்க இருக்கும் புனித ராஜ்யம் என்ற நாடகத்தின் கதைச் சுருக்கப் புத்தகங்களும் நாடகக் கொட்டகையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. நாடகம் ஆரம்பிக்க என்ன காரணத்தாலோ காலதாமதமாகிறது. குறித்த நேரம் தாண்டியும் நாடகம் தொடங்காததால் ரசிகர்களில் ஒரு பகுதியினர் பொறுமையிழந்து விசில் ஒலியைக் கிளப்புகின்றனர். நீண்ட நேரம் பொறுமையைச் சோதித்த பிறகு டாண்! டாண்! என்று நாடக மேடையில் மணி அலறுகிறது! அதனைத் தொடர்ந்து விளக்குகள் அணைந்து மேடையிலும் கொட்டகையிலும் இருள் சூழ்கிறது.

அந்த இருள் மறைந்து ஒளி பரவுகிற வரையிலே நாடகத்தின் கோரஸ் பாட்டு கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஊழல் என்பதை ஒழித்தே தீருவோம்

லஞ்சம் என்பதை அழித்தே தீருவோம்

கொட்டகை அதிரும் வண்ணம் கோரஸ் பாட்டு நீண்ட நேரம் பாடப்படுகிறது. இடையிடையே ரசிகர்களின் விசில் ஒலி!

ஒருவாறு இருள் நீங்கி, விளக்குகள் எரிகின்றன. நாடக மேடையின் முகப்புத்திரை விலகுகிறது!

அடுத்தது தெருக்காட்சி சித்தரிக்கப்பட்ட ஒரு திரை!

தடித்துப் பருத்த ஒரு ஆள், முரட்டு மீசைகளுடன், தள்ளாடி நடந்தவாறு வருகிறான். அவன் வாய், ஒரு பாடலை முணு முணுக்கிறது.

நிறையக் குடிச்சாலும்

நிதானம் தவற மாட்டேன் -

நெருப்புப் பெட்டி எங்கே வச்சேன்?

இந்தப் பாட்டை அவன் திரும்பத் திரும்ப அபஸ்வரத்தில் பாடுவதைக் கேட்டு, ரசிகப் பெருமக்கள் ஆரவாரம் செய்கிறார்கள்.

அப்போது, என்னா அண்ணாச்சி! எதைத் தேடிக்கிட்டிருக்கே தெருவிலே? என்று கேட்டவாறு மெலிந்த உடல் கொண்ட ஒரு வாலிபன் வருகிறான். அண்ணாச்சி, அந்த வாலிபனை உற்றுப் பார்க்கிறான். அவனைச் சுற்றி சுற்றி வருகிறான்.

அண்ணாச்சி :- அடே! பொடியா! வாடா, வா! நல்ல சமயத்திலே வந்தே!

பொடியன் :- அண்ணாச்சி! என்னா வாயிலே ரொம்ப நாறுது?

அண்ணாச்சி :- பொடியா! மணக்குதுன்னு சொல்லுடா! மது மணமடா! மது மணம்!

பொடியன் :- என்ன அண்ணாச்சி அக்கிரமம் இது? இப்பத்தானே மதுவிலக்கு மகாநாட்டிலே மதுவை ஒழித்தே தீரவேண்டும் என்று மார்தட்டிப் பேசினே? அதுக்குள்ளே ஆளே மதுக்குடமா ஆயிட்டியே?

அண்ணாச்சி :- முட்டாளே, கேளுடா! மகாநாட்டிலே பேசிட்டுப் புறப்பட்டேனா? புறப்பட்டு

வந்த வழியிலே என் நண்பன் வீட்டுக்குப் போனேன். அவன் மேஜை மேலே ஒரு பிராந்திப் பாட்டிலை வச்சுகிட்டு வாடாவான்னு என்னை கூப்பிட்டான். அந்தப் பாட்டிலை பார்த்ததும் அதை ஒழித்தே தீரணும்னு நெனைச்சேன். எப்படி ஒழிப்பது? சிந்தனை செய்தேன்! எடுத்தேன் பாட்டிலை! கவிழ்த்தேன் என் வாயில்! மது ஒழிஞ்சது! மது ஒழிஞ்சது! இப்ப நீ என்னடா சொல்றே? மதுவை ஒழிப்போம் என்று வாயளவில் பேசினால் போதுமா? என்னைப் போலச் செயலில் அல்லவா காட்ட வேண்டும்?

இந்த வசனத்தைக் கேட்டு, நாடகக் கொட்டகையில் இருந்த ரசிகப் பெருமக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் விண்ணைப் பிளந்தது.

பொடியன் :- அண்ணாச்சி! நான்கூட மதுவை எப்படி ஒழிக்க முடியும் என்று தெரியாமல் இதுவரையில் தவித்துக் கொண்டிருந்தேன். நீ, அதற்கு ஒரு வழி கண்டுபிடித்து விட்டாய்! சரியான வழி! நானும் இப்போதே உன் முன்னிலையில் சபதம் எடுத்துக் கொள்கிறேன். சாராயம் காய்ச்சப் பயன்படுகிற எந்தப் பொருளாக இருந்தாலும் அவற்றை அழிப்பதையே குறிக்கோளாகக் கொள்வேன்! அவற்றை சேகரித்துக் கொப்பரைகளிலே போட்டுக் கசக்கிப் பிழிந்து கொதிக்க வைப்பேன்! அந்தக் கொடிய மதுபானத்தை நாட்டிலே விட்டு வைக்காமல் - அனைவரையும் குடிக்கச் செய்வதின் மூலம் மதுவை ஒழிப்பேன்! ஒழித்தே தீருவேன்! எப்படி அண்ணாச்சி என் திட்டம்?

அண்ணாச்சி :- அருமையான திட்டம் - நான் ரொம்ப நாளா நடத்திக்கிட்டிருக்கிற திட்டம். வாடா வா! நீயும் என்னோட பங்குதாரனாக சேர்ந்துக்கலாம். சட்டசபையிலே கூட ஒருத்தர் பேசியிருக்கார்

பார்த்தியா? முன்னெல்லாம் போலீஸ்காரர்கள் சாராயம் காய்ச்சினார்கள் என்றும், இப்போது பொதுமக்களே பல பேர் அந்தத் தொழிலை நடத்துகிறார்கள் என்றும் பேசியிருக்காரே! அந்தப் பொதுமக்கள் யாருடா? யாரு? நாமதானே அந்தப் பொதுமக்கள்?

பொடியன் :- ஆமாம்! ஆமாம்! புனித ராஜ்யத்தின் பொதுமக்கள்! வாழ்க புனித ராஜ்யம்! வெல்க புனித ராஜ்யம்!

அண்ணாச்சி :- சரி! மதுவை ஒழிச்சாச்சு! மேலும் ஒழிக்க வழியும் கண்டு பிடிச்சாச்சு! இனி அடுத்தது ஊழலை ஒழிப்பது - அதற்கு அடுத்தது லஞ்சத்தை ஒழிப்பது -

பொடியன் :- ஆமாம் அண்ணாச்சி! ஊழலை ஒழிக்க நீ வழி சொல்லு! லஞ்சத்தை ஒழிக்க நான் வழி சொல்றேன்!

அண்ணாச்சி :- முதல்ல நீ சொல்லுடா லஞ்சத்தை ஒழிக்கிற வழியை!

பொடியன் :- பாடுகிறான்

சொல்லட்டுமா? சொல்லட்டுமா?

சுவையான ஒரு வழியைச் சொல்லட்டுமா?

கள்ள மார்க்கெட்டு, கறுப்பு மார்க்கெட்டு,

கொள்ளை மார்க்கெட்டு எல்லா மார்க்கெட்டும்

துள்ளிக் குதிக்கும் வழியைச் சொல்லட்டுமா?

சொல்லட்டுமா? சொல்லட்டுமா?

சுவையான ஒரு வழியைச் சொல்லட்டுமா?
பாட்டு முடிகிறது.

அண்ணாச்சி :- சொல்லுடா! சொல்லு!

பொடியன் :- சொல்றேன்! அண்ணாச்சி! உலகத்திலே எவனுமே லஞ்சம் வாங்க முடியாமல் எல்லா

லஞ்சத்தையும் நாமே வாங்கிவிட்டால் லஞ்சம் ஒழியுமா? ஒழியாதா?

அண்ணாச்சி :- அச்சா! பகுத் அச்சா! அருமையான யோசனை! –

பொடியன் :- சரி! ஊழலை ஒழிக்க நீ வழி சொல்லு!

அண்ணாச்சி :- ஒரு வழியா இரண்டு வழியா? கப்பல் கப்பலா இருக்கு வழி! மதுவைக் குடிச்சே ஒழிப்போம்! லஞ்சத்தை வாங்கியே ஒழிப்போம்! ஊழலைச் செய்தே ஒழிப்போம்! ஏ, பொடியா! ஐயாயிர ரூபாய் லஞ்சமாக் கொடு! அதை வாங்கிக் கொள்வதன் மூலம் நான் லஞ்சத்தை ஒழிக்கிறேன். நீ சும்மா கொடுக்க வேண்டாம் – உன்னை ஒரு தொகுதியின் அபேட்சகராக்க – அதாவது சீட்டு வாங்கித் தர, பிரதியுபகாரமாக அதைக் கேட்கிறேன். உனக்குச் சீட்டு கிடைச்சால் பிறகு நமது முறைப்படி நீ ஊழலை ஒழிக்கலாம் அல்லவா?

பொடியன் :- அட, போ - அண்ணாச்சி! நான் இப்பத்தான் ஒருத்தன்கிட்ட, அவனுக்கு சீட்டு வாங்கித் தர்ரேன்னு நாலாயிர ரூபாய் வாங்கிட்டு வர்ரேன்! நீ என்கிட்டேயே கேட்கிறே!

அண்ணாச்சி :- பலே, கில்லாடிதான்! டே, பொடியா! ஆனா ஒண்ணு நினைவிலே வச்சுக்கோ! நம்ப, லஞ்சம் வாங்குறதையும், ஊழல் செய்றதையும், மறைக்கணும்னா ஒருமித்த குரலில் நாம் சொல்லிக் கொண்டேயிருக்கணும் –

பொடியன் :- என்ன அண்ணாச்சி!

அண்ணாச்சி :- லஞ்சத்தை ஒழிப்போம்! ஊழலை ஒழிப்போம்! இதைச் சொல்லிகிட்டே இருந்தாத்தான் ஊரை ஏமாற்ற முடியும்? இந்திரா காந்தி, பன்சிலால், சஞ்சய் காந்தி இவுங்கள்ளாம்

இப்படியே சொல்லிகிட்டுத் தானே ஊரை ஏமாத்திகிட்டு இருந்தாங்க!

பொடியன் :- ஆனா, அவங்க அகப்பட்டுக் கிட்டாங்களே!

அண்ணாச்சி :- சே! அறையப்போறேன்! அதைச் சொல்லாதேடா! வாடா! வா!

என்றவாறு, அண்ணாச்சி, பொடியனைப் பரபரவென்று இழுத்துக்கொண்டு ஓடுகிறான். திரை விழுகிறது.

உடன்பிறப்பே, முதல் காட்சியோடு இன்று நிறுத்திக் கொள்வோம் - அடுத்தடுத்த காட்சிகளைத் தேவைப்பட்டால் பிறகு, கண்டு களிக்கலாம் - இப்போது நமது பணிகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. வா, போகலாம்!

அன்புள்ள,

மு. க.

10-07-1977

437. "கன்னா பின்னா கவிஞர்!"

உடன்பிறப்பே,

நேற்று ஒரு நாடகக் காட்சி! இன்று ஒரு சிறுகதை சொல் கிறேன்.

அவன் ஒரு விறகு வெட்டி! அன்றாடம் காட்டுக்குச் சென்று அவன் தொழிலைத் தொய்வில்லாமல் நடத்தினால்தான் வாழ்க்கை நடத்த முடியும் என்ற நிலையில் உள்ள குடும்பம். அவன் மனைவிக்கு உள்ளத்திலே பெருங் குமுறல்! மற்றவர்களைப்போல பெரிய வீட்டில் வாழ வேண்டும். ஆடம்பரமாக இருக்க வேண்டும். இப்படி ஆசைகளை வளர்த்துக் கொண்டிருப்பவள். ஒருநாள் தன் னுடைய ஆசையைத் தன் கணவனிடமும் மெதுவாகச் சொல்லிப் பார்த்தாள். "எல்லாம் விதிப்படிதான் நடக்கும். அன்றைக்கு எழுதிய எழுத்தை அழித்து எழுத முடியுமா? விறகு வெட்டித்தான் பிழைக்க வேண்டுமென்று நம் தலைச்சுழி இருக்கும்போது அதிக ஆசைப்பட்டு முடியுமா?" என்று கூறிக்கொண்டே கோடரியை எடுத்துத் தோளில் சாய்த்துக் கொண்டு காடு நோக்கிக் கிளம்பி விட்டான். அவன் மனைவியும் வீட்டுக்குத் தேவையான பொருட் களை வாங்கிட கடைவீதிக்குச் சென்றாள். அங்கு அரசாங்க சார்பில் முரசறைவோன் ஒரு மேடையில் நின்றவாறு கூவினான்.

> "இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்ன வென்றால் யார் ஒருவர், நான்கே வார்த்தைகளில் நமது மன்னரைப் பற்றி "பாராட்டுப் பா" ஒன்றை மன்னருக்கு நேரே வந்து கூறுகிறார்களோ அவர்களுக்குப் பத்தாயிரம் வராகன் பொன் - பரிசாக வழங்கப்படும்"

இந்த அறிவிப்பைக் கேட்டதும் விறகு வெட்டியின் மனைவிக்கு ஒரே பரபரப்பு! இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது! பத்தாயிரம் வராகன் - பத்தாயிரம் வராகன் - ஆகா! நம் மச்சான் வந்ததும், எப்படியாவது இந்தப் போட்டியில் கலந்துகொள்ளச் சொல்ல வேண்டும், என்ற அடங்காத

ஆவலோடு ஓட்டமும் நடையுமாக வீடு போய்ச் சேர்ந்தாள். அந்தி சாய்ந்ததும் அவனும் அயர்வுடன் விறகுகளைச் சுமந்துகொண்டு வீட்டுக்குத் திரும்பினான். அவன் துணைவி, என்றுமில்லாமல் அன்றைக்கு அவனை எதிர் கொண்டழைத்து, விறகுச் சுமையை வாங்கிக் கீழே வைத்து விட்டு - தன் சேலை முந்தானை எடுத்து அவன் நெற்றியிலும், மார்பிலும், தோளிலும், முதுகிலும் வழிந்துகொண்டிருந்த வியர்வையையெல்லாம் துடைத்துவிட்டு - அவன் எதிர்பாராமலே 'இச்' என்று ஒன்றும் கொடுத்துவிட்டு - "உட்காரு மச்சான்" என அன்பொழுகக் கூறி, உட்கார்ந்தவனின் கால்களையும் அமுக்கிவிடத் தொடங்கினாள். விறகு வெட்டிக்குத் தன் மனைவியின் செயல், புதுமையாக இருந்தாலும் களைப்பைப் போக்கும் மாமருந்தாகவே இருந்தது!

"என்ன, குட்டி! இன்னைக்கு ஏக தடபுடலா இருக்கு?"

"ஒண்ணுமில்லை மச்சான்! ஒரு சந்தோஷமான சேதி!"

"ஓகோ! வாய்க் குமட்டலா? எலுமிச்சம் பழம் திங்கிறியா? இல்லை மாவடுவைக் கடிக்கிறியா?"

"ஆமாம்! அதுவேற - நாம இருக்கிற இருப்புக்கு!"

"ஏன் வேண்டாமா? 'குவா குவா' சப்தம் இருந்தாதானே வீடே களையா இருக்கும்!"

"அதிருக்கட்டும் மச்சான். ஒரு அதிர்ஷ்டம் வரப்போவுது நமக்கு! பத்தாயிரம் வராகன் கிடைக்கப் போவுது!"

"எப்படி? எப்படி? என்ன ஒரேடியா அண்டப் புளுகு புளுகிறே?"

"நம்ப மகாராஜாவைப் பத்தி - நாலே நா வார்த்தையிலே பாராட்டிப் பாடினா, பத்தாயிரம் வராகன் பொன்னு பரிசு கொடுக்கப் போறாராம்!"

"அது யாராவது புலவர்கள் கலந்துக்க வேண்டிய போட்டியில்லே! இரும்பு அடிக்கிற இடத்திலே ஈக்கு என்னடி வேலை?!"

"அட, போ மச்சான்! அதெல்லாம் அந்தக் காலம்! இந்தக் காலத்திலே இரும்பு அடிக்கிற இடத்திலே ஈக்குத்தான் வேலை! நான் சொல்றதைக் கேளு-யாராவது ஒரு

கவிராயரைப் பார்த்து, எப்படியாவது ஒரு பாட்டை எழுதி வாங்கிட்டுப் போயி, அந்தப் பரிசைத் தட்டிகிட்டு வந்துடு!”

“யாரு இருக்கிறா கவிராயரு?”

விறகுவெட்டி இந்தக் கேள்வியை முணுமுணுத்துக் கொண்டே சிந்தனையை ஓட்டினான். சற்று நேரத்திற்குப் பிறகு அவனே ஒரு குதிகுதித்து “உம்! ஒரு ஆள் இருக்கிறார்! அவரை பிடிக்கிறேன்” என்று கூறிவிட்டு- வேட்டியை வரிந்து கட்டியவாறு வெளியே புறப்பட்டான். அவன் மனைவிக்கு மட்டில்லா மகிழ்ச்சி! அப்படியே ஆரத்தழுவிக் கொண்டு அவனைத் திணற அடித்துவிட்டாள்.

விறகுவெட்டி தேடிச்சென்ற கவிராயர் யார் தெரியுமா? தனக்கு நிகர் உலகில் எந்தக் கவிஞனுமே இல்லை என்று எண்ணியிருப்பவர். அரசனையே மதிக்காதவர். நல்ல ஆற்றல் வாய்ந்த புலவராக இருந்தார் என்றாலும், “இந்த உலகத்தில் உள்ள முட்டாள்களுக்காக எதற்காகக் கவிதைகள் எழுத வேண்டும்?” என்ற நினைப்போடு இருப்பவர்! சரியான முன் கோபக்காரர்! அவர் வீட்டுக்கு விறகு கொண்டுபோய் கொடுத்த வகையில் அவனுக்கு அவரைத் தெரியும். அந்த தைரியத்தில் அவர் வீட்டுக்குப் போனான். அவரிடம் விபரத்தையும் சொன்னான். கவிராயருக்கு, விறகுவெட்டியின் மீதும் கோபம் - பாராட்டுப் பாடல் கேட்டுப் பறை அறிவித்த அரசன் மீதும் வெறுப்பு. அந்நிலையில், விறகுவெட்டி ஏதோ கேட்டுத் தொலைக்கிறானேயென்று,

“ஏண்டா உனக்குக் கவிதையா வேண்டும்!

இதோ இதைப் போய்ச் சொல்லு!

கன்னா

பின்னா

மன்னா

தென்னா

என்று போய்ச் சொல்லு! பரிசு, உடனே கிடைக்கும், போ! போ!”

என்று கூறி அனுப்பினார். விறகு வெட்டியும் கவிராயர், தனக்காக அழகான கவிதையொன்று இயற்றித் தந்திருப்பதாக

எண்ணிக்கொண்டு, நேரே வீட்டுக்குக்கூடப் போகாமல் அரண்மனைக்குச் சென்று வாயிற்புறத்தில் உள்ள "பாட்டுப் போட்டி"க்கான மணியை அடித்தான். உடனே அவனை வீரர்கள் கொலு மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு நூற்றுக்கு மேற்பட்ட புலவர்களின் பாடல்கள் ஆராயப்பெற்று எதுவுமே பரிசுக்குப் பொருத்தமில்லை யென்று அரசாங்கக் கவிவாணர்கள் அறிவித்துள்ள நேரம், அந்தச் சமயத்தில் விறகுவெட்டி உள்ளே நுழைந்தான்.

அரசன் உள்ளிட்ட அனைவரும் அவனை வியப்புடன் நோக்கினர். "எங்கே வந்தாய்?" என்றான் மன்னன்! "பாட்டுப் போட்டிக்குப் பாடலோடு வந்திருக்கேன் மகாராஜா!" என்றான் விறகுவெட்டி!

"என்ன பாடல்? நீயா எழுதியிருக்கிறாய்? எங்கே கூறு கேட்போம்!"

உடனே, விறகுவெட்டி சிறிதும் தாமதிக்காமல், "கன்னா, பின்னா, மன்னா, தென்னா" - என்று உரக்கக் கத்தினான்.

> மன்னனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை, "என்ன உளறுகிறான்? இவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் நாடு கடத்துங்கள்! தமிழையே கொலை செய்யும் இவனை நமது நாடு மன்னிக்காது!" என ஆணை பிறப்பித்தான்.

அரசாங்கப் புலவருக்கு விஷயம் விளங்கிவிட்டது. யாரோ வேண்டுமென்றே அந்த விறகுவெட்டியை இப்படி ஆபத்தில் சிக்கவைத்துவிட்டார்கள் என்று அவர் புரிந்து கொண்டார்! எனவே அவருக்கு அப்பாவி விறகுவெட்டியின் மீது அனுதாபம் பிறந்தது! மனிதாபிமான உணர்வுடன் அவனைக் காப்பாற்ற வேண்டுமென்று கருதினார். அவன் தவறாகக் கூறிய சொற்களுக்கே புதிய வியாக்கியானம் அளித்து அவனை மீட்கத் துணிந்தார். எனவே அந்தப் புலவர் அரசனைப் பார்த்துச் சொன்னார், மிக்க அமைதியுடன்!

> "அரசே! இந்தப் பாடல் தவறுடையதல்ல! போட்டிக்கு வந்துள்ள பாடல்களில் இதுவே தலைசிறந்ததாகும்! அதாவது "கன்னா" என்றால், குந்திதேவியின் கன்னத்தின்

வழியாகப் பிறந்த "கர்ணனே!" என்று தங்களைப் பாராட்டுகிற சொல்லாகும் அது! "பின்னா" என்றால், அந்தக் கர்ணனுக்குப் பின் பிறந்த "தருமனே!" என்று தங்களைச் சிறப்பித்துக் கூறுவதாகும்! 'மன்னா' - எனில் "மன்னவனே!" என்றும், 'தென்னா'-எனில் "தென்ன வனே!" என்றும், பொருள் கொண்டிட வேண்டும்."

அவைப் புலவரின் இந்த விளக்கத்தைக் கேட்டு, உடனே மன்னன், விறகுவெட்டியை அருகே அழைத்து பத்தாயிரம் வராகன் களை பரிசாக வழங்கி, தன் மார்பில் புரண்ட முத்துவடத்தையும் கழற்றி அவன் கழுத்தில் அணிவித்துப் பாராட்டி மகிழ்ந்தான்.

கன்னா, பின்னா, மன்னா, தென்னா - என்று கூறிய விறகு வெட்டிக்கு, தான் என்ன சொன்னோம் என்று நிச்சயமாகத் தெரியாது!

இரக்கம் கொண்ட அவைப் புலவர், விளக்கமளித்துக் காப்பாற்றிய காரணத்தால்

"கன்னாபின்னா கவிஞர்"

என்று நாடு புகழும் பட்டத்தோடு, வீடுபோய்ச் சேர்ந்தான். அங்கு, அவன் மனைவியின் வரவேற்பு எப்படி இருந்திருக்கும் என்று கேட்கவா வேண்டும்?

அன்புள்ள,

மு.க.

11-07-1977

438. இருப்பதை இழந்திடோம்!

உடன்பிறப்பே,

முதல்வர் பொறுப்பில் உள்ள நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், பெங்களூர் சென்று கைம்மாறாக மின்சாரம் தரவேண்டும் என்ற நிபந்தனையை ஒப்புக்கொண்டு, ஏதோ தயவு தாட்சண்யத்திற்காக கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்ஸ் தமிழகத்திற்குக் காவேரித் தண்ணீரைத் தருவதாகச் சொன்ன செய்தியுடன் திரும்பியுள்ளார். தேவைக்கு இப்போது தண்ணீர் கிடைக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பாராட்டவும் தவறவில்லை. ஆனால், தமிழ்நாடு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி தனக்குள்ள உரிமைகளை இழந்துவிடக் கூடிய சூழ்நிலைக்கு ஆளாகிவிடக் கூடாது. கர்நாடக மக்களின் நலன்களும், தமிழ்நாட்டு மக்களின் நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் நமக்கு வேறுபாடான கருத்து கிடையாது. ஆனால் மூவேந்தர் காலத்திலிருந்து முறைப்படுத்தப்பட்டு வந்துள்ள தமிழகத்துப் பாசன ஆயக்கட்டுக்கள், பாலை நிலமாக ஆகிவிடக் கூடிய நிலை தமிழ்நாட்டுக்கு ஏற்படுமேயானால் அதன் விளைவுகளை எண்ணிப் பார்த்திடவே இயலவில்லை.

அதனால்தான் எத்தகைய பெயரால் ஒப்பந்தம் ஏற்பட்டாலும் அந்த ஒப்பந்தம், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை அம்சங்களைப் புறக்கணித்திடும் ஒன்றாக இருந்திடக் கூடாது என்பதில் கழக அரசு, கண்ணும் கருத்துமாக இருந்தது.

அந்தக் கவலையும், அக்கறையும் இருந்த காரணத்தினால்தான் கழக அரசு, இந்த உயிர்ப் பிரச்சினையில் தானே எந்தவொரு முடிவையும் எடுக்காமல், அனைத்துக் கட்சித் தலைவர்களின்

கூட்டத்தை அரசின் சார்பில் அடிக்கடி கூட்டி, அந்தக் கூட்டத்தின் முடிவுகளுக்கேற்ப நடந்து வந்தது. சட்டமன்றத்திலோ, மேலவையிலோ இடம்பெறாத நிலையில் இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடமும், முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலனார் அவர்களிடமும் அடிக்கடி காவிரிப் பிரச்சினை பற்றிய கருத்துக்களைக் கேட்டு, அதற்கேற்பவும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்த மிகப்பெரும் பிரச்சினையில் தனக்கு மிஞ்சியவர் யாருமில்லை என்ற கித்தாப்புடன் தி.மு.க. அரசோ, அதன் தலைமைப் பொறுப்பில் இருந்த நானோ நடந்து கொண்டதில்லை.

ஏதோ ஒரு ஒப்பந்தம் நமது காலத்தில் முடிந்துவிட்டது என்ற பெருமையைத் தற்காலிகமாகப் பெற்றுக்கொண்டிருக்க முடியும், கர்நாடக அரசு சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டிருந்தால்!

ஆனால் இது நம்முடைய வாழ்நாளுடன் முடிந்துவிடுகிற பிரச்சினை அல்ல! எதிர்காலத் தமிழகத்தை வறண்ட பூமியாக்கவும், வேளாண்துறையினர் வயிற்றில் அடித்து வறுமைக் காடாக்கவும் நாம் காரணமாக இருந்தோம் என்ற குற்றத்திற்கு ஆளாகிவிடக் கூடாது!

இது, தற்காலிகமாகப் பெறுகிற பாராட்டுதலைப் பொறுத்த விவகாரமல்ல! நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக உழவுத் தொழிலை நம்பி வாழுகிற நமது தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களை, அவர்களின் வருங்கால சந்ததியினரை உறுதியுடன் வாழச் செய்ய வேண்டியது நமது பொறுப்பை மறந்துவிடக் கூடாது!

ஆயிரங்காலத்துப் பயிர் என்பார்களே! முன்னோர்கள் - அதைவிட முக்கியமான பிரச்சினை இது!

இதில் அவசரத்திற்கோ, அல்லது முன்பு இருந்த அரசின் மீது பழி தூற்றும் போக்கிற்கோ இடமில்லை.

முன்பிருந்த கழக அரசு, தமிழ்நாட்டு மக்களின் “வாழ்வா? சாவா?” என்ற பிரச்சினை, காவிரிப் பிரச்சினை என்பதை மறந்துவிடாமல் செயலாற்றியது என்பதை இதயமுடைய எவரும் மறுக்க மாட்டார்கள்.

எனவே, இன்றுள்ள அரசு தமிழர்கள் பெற்றிருந்த காவிரி உரிமை பறிபோகாத வண்ணம் பாதுகாத்திடும் பணியிலிருந்து விலகிவிடலாகாது என வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

கர்நாடக மக்கள், தமிழ் மக்கள் ஆகியோர் நலன் பொதுவானது என்பதையும் அதே நேரத்தில், "இருப்பதை இழக்கத் தமிழ்நாடு சம்மதிக்கக் கூடாது" என்பதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

அன்புள்ள,

மு.க.

12-07-1977

439. உண்மையை உணர்ந்திடுக!

உடன்பிறப்பே,

கருணாநிதிக்கு, சர்க்காரியா கண்டனம் என்ற தலைப்பிட்டு மாலை ஏடு ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. என்னை ஏன் சர்க்காரியா கண்டித்திருக்கிறார் என்று செய்தி முழுவதையும் படித்துப் பார்த்தேன். சர்க்காரியா கூறியிருப்பது பின்வருமாறு:-

தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் ராயப்பா இந்தக் கமிஷனுக்கு ஒரு பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார். அந்தப் பிரமாணப் பத்திரத்தின் நகல் வேண்டும் என்று கோரி, கருணாநிதி ஒரு விண்ணப்பம் போட்டிருந்தார். அந்த விண்ணப்பம் பற்றி நான் எனது முடிவை இன்னும் அறிவிக்கவில்லை. ஆனால் எனது முடிவை அறிவிக்கும் முன்னாலேயே, எந்த மனு தமக்கு வேண்டுமென்று கருணாநிதி கோரியிருந்தாரோ அந்த ராயப்பாவின் மனுவை முரசொலி வெளியிட்டிருக்கிறது. அவரது சத்தியப் பிரமாண வாக்குமூலம் பற்றி விமர்சனங்களும் வந்திருக்கின்றன. ஒரு மனு பற்றி நீதிபதி முடிவை அறிவிக்காத நிலையிலேயே அதை வெளியிடுவதும் அதுபற்றிக் கருத்து தெரிவிப்பதும் விசாரணைக்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடியது.

இந்தச் செய்தியில் ராயப்பாவின் மனுவை முரசொலி வெளியிட்டது பற்றித்தான் சர்க்காரியா கருத்து தெரிவித்துள்ளாரே தவிர, கருணாநிதிக்கு எங்கே கண்டனம் தெரிவித்துள்ளார்?

அந்த ராயப்பாவின் பிரமாணப் பத்திரத்தின் நகலைக் கோரி நான் மனுச் செய்திருக்கிறேன். அதை எனக்குத் தரலாமா? தரக்கூடாதா? என்று நீதிபதி இன்னும் தீர்ப்புக் கூறவில்லை. எப்போது தீர்ப்புக் கூறுகிறாரோ அதுவரையில், நான் அந்தப் பிரமாணப் பத்திரத்தின் நகலுக்காகக் காத்திருக்க

வேண்டியவன்தான்! நிச்சயமாகக் காத்திருப்பேன்! நான் கேட்டவுடன் அந்த நகல் கிடைத்து விடுமா என்ன? அது சி.பி.ஐ. அதிகாரிகளின் செயல்கள் எத்தகையவை என்பதை விளக்கி அளிக்கப்பட்ட பிரமாணப் பத்திரமல்லவா? எனவேதான் நான் அதன் நகலைப்பெற ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறேன்.

அதற்கிடையே அந்த நகல் முரசொலி ஏட்டுக்குக் கிடைத்து அவர்கள் அதனை வெளியிட்டால் நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?

அதை நீதிபதி சர்க்காரியா உணர்ந்திருக்கிற காரணத்தால்தான் முரசொலியைப் பற்றி மட்டும் கருத்துக் கூறியிருக்கிறார்.

அதில் நீதிபதி மிக முக்கியமாகக் குறிப்பிடுவது எந்த மனு தமக்கு வேண்டுமென்று கருணாநிதி கோரியிருந்தாரோ அந்த ராயப்பாவின் மனுவை முரசொலி வெளியிட்டிருக்கிறது என்பதாகும்.

அந்த உண்மை நகலை முரசொலி வெளியிட்டதற்கும், எனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை.

அதுமட்டுமல்ல, என்னைப்பற்றிச் சர்க்காரியா கூறிடாத ஒன்றை அந்த மாலை ஏடு, திரித்து மாற்றி - கருணாநிதிக்கு சர்க்காரியா கண்டனம் என்று வெளியிட்டிருப்பது உண்மைக்கு மாறானதாகும். இது, நீதிபதி சர்க்காரியா அவர்களின் மேலான கவனத்திற்குச் செல்லுமென்று நம்புகிறேன்.

இன்னொரு விவகாரம், ஏதோ ஒரு பிரமாணப் பத்திரத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் ஒருவர் கருணாநிதிக்கு மிக நெருக்கமானவர் என்று யாரோ குறிப்பிட்டிருக்கிறார்களாம். எக்ஸ்பிரஸ் ஏதோ ஒரு செய்தியைத் தவறாக வெளியிட்டதாகக் குறிப்பிட்டு அந்த எக்ஸ்பிரசின் நிருபர் எனக்கு வேண்டியவர் என்று கூறப்பட்டதாக நீதிபதி அவர்கள் சுட்டிக் காட்டியிருப்பது அதிர்ச்சி அடையக்கூடிய ஒன்றாகும். எல்லாப் பத்திரிகை நிருபர்களும் எனக்குத் தெரிந்தவர்கள்தான்! எனவே எந்த ஒரு ஏட்டின் நிருபரும் எனக்கு மிக வேண்டியவர் எனக் கூறுவது சரியாகாது! எக்ஸ்பிரஸ் ஏட்டில் வந்த செய்தியை விமர்சிக்கும்போது இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் ஒருவர் எனக்கு நண்பர் என்ற ஒருவரின் கூற்றை நீதிபதிப் பொறுப்பில் உள்ளவர் இணைத்துக் கூறியிருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும்.

எக்ஸ்பிரஸ் ஏட்டில் வந்த செய்தியை எல்லோரையும் போலத்தான் நானும் படித்துத் தெரிந்து கொண்டே னேயல்லாமல் - எந்த நிருபர் மூலமும் நான் அப்படி ஒரு செய்தியைத் தரவில்லை. எந்த நிருபரையும் நான் சந்திக்கவுமில்லை.

இந்த உண்மையை வெளியிடுவது எனக்குரிய பொறுப்பு!

அன்புள்ள,

மு. க.

13-07-1977

440. சந்து முனையிலா? அல்ல! அல்ல!!

உடன்பிறப்பே,

வீராணம் திட்டத்தையொட்டி சென்னையில் நடைபெற்ற தொடக்க விழாவின்போது அடையாளத்திற்காக வைக்கப்பட்டது ஒரு காவிரித் தாயின் சிலை!

அந்தச் சிலை, தொடக்க விழா நடைபெற்ற இடத்திலேயிருந்து விழா நடைபெற்ற மறுநாளே மாற்றப்பட்டு, சென்னையில் ஒரு முக்கியமான இடத்தில் வைக்கப்பட்டது.

அந்தத் தொடக்க விழா நடத்தியது அப்போது முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள்தான்!

அண்ணா காலத்திலேதான் வீராணம் திட்டம் பரிசீலிக்கப் பட்டு திட்டத்தை தொடங்குவதற்கான ஏற்பாடுகளும் விரைந்து மேற்கொள்ளப்பட்டன.

வீராணம் திட்டம், பல்வேறு சூழ்நிலைகளால் கால தாமதம் ஏற்பட்டது. அதனை விளக்க வேண்டிய நேரத்தில் விளக்கிக் கூறுகிறேன். ஒப்பந்தக்காரர்கள் திட்டத்தை விரைவில் முடிக்காத காரணத்தால் அதனை அரசே எடுத்து நடத்துவதென்று கழக அரசு முடிவெடுத்து அதற்கான மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியது.

மத்திய அரசு அந்த ஒப்புதலை வழங்கவில்லை. கால தாமதம் செய்தது. பின்னர் கழக அரசும் கலைக்கப்பட்டது.

இப்போது ஒரு பெரிய மனிதர்? ஒரு பெரிய இடத்தில் பேசியதாகக் கேள்விப்பட்டேன். வீராணத்தில் கொள்ளை! கொள்ளையோ, கொள்ளை!! என்று!

மதுரை நகரமே அந்தப் பெரிய மனிதரின் வாய்க்குள் போய்விடுமோ என்று மக்கள் பயந்துகொண்டிருந்தனர். அவர்தான்

ஊழலைப்பற்றி பேசுகிற உத்தம சிகாமணியாக இன்றைக்கு வேடம் போடுகிறார்.

> "பதினைந்து லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பெரிய பங்களா கட்டியிருக்கிறார் - என்னைச் சாப்பிட அழைத்தார். எனக்கு சாப்பிடவே மனமில்லை. ஏ, அப்பா! எவ்வளவு பெரிய கொள்ளை! என்று நெஞ்சு எரிந்தது எனக்கு!"

இப்படி ஒரு நண்பர், அவர் வீட்டு விருந்துக்குப் போய் வந்தவர் என் நண்பரிடம் சொல்லி அந்த நண்பர் என்னிடம் சொன்னார்.

அந்தப் பெரிய மனிதர்தான், ஊரிலே உள்ளவர்கள் மீது ஊழல் புகார் கூறி, தன்னைப் பத்தரை மாற்றுத் தங்கம் என்று மார் தட்டிக் கொள்கிறார்!

அவர் யார் காலடியை இன்று நத்திக் கிடக்கிறாரோ, அவர் இவரை நன்கு புரிந்து கொண்டிருக்கிறாராம்!

துண்டுச் சீட்டு, சிபாரிசு கடிதம் - இவைகளுடன் அந்த பெரிய மனிதர் வந்தால் ஜாக்கிரதை - என்று எச்சரிக்கை செய்யப் பட்டிருக்கிறதாம் எல்லோருக்கும்!

உடன்பிறப்பே, அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட காவேரி அன்னைச் சிலையைப் பற்றி, அவர் என்ன பேசினாராம் தெரியுமா?

> "அதிகாரிகள் தடுத்தும் கேளாமல் அண்ணா ஆட்சியிலே கிருஷ்ணா நதித் திட்டத்தைப் புறக்கணித்துவிட்டு வீராணம் திட்டத்தை எடுத்துக் கொண்டு விழா நடத்தினார்கள். நடுத் தெருவிலே ஒரு காவேரி சிலையை வைத்தார்கள். காவிரித் தாயிடம் நீர்வரும்! நீர்வரும்! என்று அந்த வழியில் போகிறவர்கள் எல்லாம் பார்த்தார்கள். என்னவோ தெரியவில்லை, நீர் வரவில்லை, காவேரித் தாய்க்கு "கிட்னி" கோளாறோ என்னவோ?"

அண்ணா வைத்த சிலையைப் பற்றி அந்தப் பெரிய மனிதரின் ஆபாசப் பேச்சு இதுதான்!

எங்கே? சந்துமுனையிலா இந்தச் சிந்து பாடினார்? இல்லை! இல்லை!!

சான்றோர் அவை என்பார்களே; அப்படிப்பட்ட ஒரு இடத்திலே!

என் செய்வது! முரட்டுக்குரலும், முண்டா தட்டலும் எடுபடுகிற காலத்திலே, இவையெல்லாம் தவிர்க்க முடியாத தண்டனைகள்தான் ஜனநாயகத்திற்கு!

அன்புள்ள,

மு.க.

14-07-1977

441. நீதி விசாரணைகள் தொடங்கட்டும்!

உடன்பிறப்பே,

ஆளுநர் உரையின் மீது தமிழக சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளித்த முதலமைச்சர் உரையில் மொழிப் பிரச்சினை குறித்தும், மத்திய மாநில உறவு குறித்தும், தேர்தல் கால வாக்குறுதிகள் குறித்தும், அவசரகாலச் சட்டத்தை அ.தி.மு.க. ஏன் ஆதரித்தது என்பது குறித்தும் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கெல்லாம் தலைப்புகள் எதுவும் கட்டிச் செய்திகளைப் போடாமல் சில நாளேடுகள், ஆம் - குறிப்பிட்ட சில நாளேடுகள்,

> “தி. மு. க. ஆட்சியின்போது நடைபெற்ற அத்துமீறல் களும் விசாரணைக்குக் கொண்டு வரப்படும்” என்று கொட்டை எழுத்துச் செய்திகளைப் போட்டுத் தங்கள் நெஞ்சத்துக்கு ஆறுதலைத் தேடிக் கொண்டுள்ளன.
>
> தமிழக முதலமைச்சர் கடந்த ஜூலை இரண்டாம் நாளன்று டெல்லி சென்றிருந்தபோது மத்திய உள்துறை அமைச்சர் சரண்சிங் அவர்கள், “நெருக்கடி காலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் நடைபெற்ற அத்துமீறிய காரியங்களை விசாரிக்க வேண்டுமென்று தெரிவித்தார்” என்று வந்துள்ள செய்திகளை நான் சட்டப்பேரவையில் என் பேச்சின்போது சுட்டிக்காட்டி, மத்திய அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள “ஷா” கமிஷனுக்கு ஒத்துழைப்பு தரும் வகையில், அரியானா, உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்களைப் பின்பற்றி தமிழ் நாட்டிலும் ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்று குறிப்பிட்டேன்.

தமிழ்நாட்டில் நெருக்கடி காலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் நடைபெற்ற பல அக்கிரம நிகழ்ச்சிகளையும் தொகுத்துச் சொன்னேன். உதாரணமாக என்னோடு காரில்

துணையாக வந்தார்கள் என்பதற்காக கண்ணப்பன், எல்.கணேசன், சுருளிவேலு, சா.கணேசன், டி.ஆர்.பாலசுப்பிரமணியம், ஆயிரம் விளக்கு உசேன் போன்றவர்கள் மிசாக் கைதிகளாக ஆக்கப்பட்ட நிலைமைகளையும், எனக்குத் தந்தி கொடுத்தவர்கள், உணவு வழங்கியவர்கள், மிசாக் கைதிகளாக ஆனார்கள் என்பதையும், இவற்றைப் போலவே பல்வேறு கழகத் தோழர்கள் வேதனைக்கு ஆட்படுத்தப்பட்டார்கள் என்பதையும் வரிசைப்படுத்தி விவரித்தேன்.

பதில் அளித்த முதலமைச்சர், குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்திலே மட்டுமன்றி அதற்கு முன்பு 1972-ஆம் ஆண்டி லிருந்தே நடைபெற்றதாகக் கூறப்படும் கொடுமைகளுக்கும் சேர்த்து விசாரணைகள் நடைபெறும் என்று சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்.

> அந்த அறிவிப்பை நான் வரவேற்கிறேன். 1972 முதல் நடைபெற்ற சம்பவங்களுக்கு மட்டும் விசாரணை வைப்பானேன்? நான் முதல்வராகப் பொறுப்பேற்றது 1969-ஆம் ஆண்டு! எனவே 1972 என்று தொடங்கு வதற்குப் பதிலாக 1969-ஆம் ஆண்டு முதலே நடைபெற்றதாகக் கூறப்படுகிற அத்துமீறல் நிகழ்ச்சிகள் அனைத்தையும் விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், அவருடன் பிரிந்து சென்றவர்களும் தி.மு.கழகத்தைவிட்டு வெளியேறியது அல்லது வெளியேறும் நிலை ஏற்பட்டது 1972-ஆம் ஆண்டு என்பதற்காக, அந்த ஆண்டிலிருந்து கணக்கிடுவது முறையாக இருக்காது! எனவே இன்னும்கூட ஒருபடி மேலே போய் 1969 முதலே அதிகார வர்க்கம் எத்தகைய அத்துமீறல்களில் ஏழாண்டுக் காலம் ஈடுபட்டது என்பதுபற்றியும், அப்படி அந்த அதிகாரிகள் நடந்து கொண்டமைக்கு யார் யார் காரணம் என்பது பற்றியும், அவர்கள் அமைச்சர்களா - சட்டமன்ற உறுப்பினர்களா - நாடாளுமன்ற உறுப்பினர்களா - அல்லது அரசின் அங்கங்களாக விளங்கிடும் அமைப்புகளில் தலைவர்களின் பொறுப்புக்களில் இருந்தவர்களா - எந்தெந்த வகைகளில் அதிகாரிகள் அத்து மீறிட அவர்கள் காரணமாக இருந்தார்கள் என்பது பற்றியும் விசாரணைகள் நடைபெறுவது நலமாக இருக்கும்.

மத்திய அரசும், அதைத் தொடர்ந்து நமது கழகமும் வலியுறுத்துவது நெருக்கடி காலக் கொடுமைகள் நிறைந்த அசாதாரணமான ஒரு கால கட்டத்தில், என்ன நடைபெற்றாலும் முறையிட்டுக்கொள்ள நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாத அளவுக்குச் சட்டங்கள் குறுக்கிட்ட ஒரு சூழ்நிலையில் ஏற்பட்ட அத்துமீறல்களை விசாரிக்க வேண்டும் என்பதாகும்.

ஆனால் இன்றுள்ள தமிழக அரசும், ஆளுங்கட்சியினரும் தாங்கள் விரும்பி வரவேற்ற அவசர காலச் சட்டத்தின் மீது இன்னமும் வைத்திருக்கிற பாசத்தின் காரணமாக, அதன் மீது விசாரணை கேட்ட நம்மீது எரிச்சலைக் கொட்டிக்கொண்டு 72-ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கும் சேர்த்து விசாரணை என்கின்றனர். நாம் 1969 முதலே எல்லா நிகழ்ச்சிகளுக்கும் விசாரணை வைத்தாலும் வரவேற்கிறோம் என்கிறோம்.

நாட்டின் இயல்பான சூழ்நிலையில் நடைபெறும் எந்தக் கொடுமையான நிகழ்ச்சிகளையும் எதிர்த்து நீதிமன்றத்துக்கு செல்ல முடியும். அப்படிப்பட்ட வாய்ப்புக்கள் இருந்த அவசர காலச் சட்டமில்லாத காலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படுகிற நிகழ்ச்சிகளுக்கும் விசாரணை என்று அறிவிப்பது எந்த நோக்கத்துடன் இருந்தாலும் அதனை நாம் வரவேற்கிறோம். பாராட்டுகிறோம்.

கடந்த ஜூன் மாத இறுதியிலும், இந்த ஜூலை மாதத் தொடக்கத்திலும் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளையும், அத்தகைய நீதி விசாரணைகளில் இணைத்துக் கொள்ளத் தவறிவிடக் கூடாது.

★ ஜூன் 15-ஆம் நாள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, அ.தி.மு.க. ஆளுங்கட்சியாகும் என்ற செய்தி அறிவிக்கப்பட்டாகி விட்டது.

★ ஜூன் 26-ஆம் நாள் நெல்லை மாவட்டம் திருவைகுண்டம் காவல்நிலையத்தில் ஒரு பெண்ணை மூன்று போலீஸ் காரர்கள் கற்பழித்துள்ளார்கள். ஆம், கற்பழிக்கப்பட்ட இடம் காவல் நிலையம்! அந்தப் போலீஸ்காரர்கள் மீது வழக்கு தொடரப் பட்டுள்ளது. அது போதாது! நீதிவிசாரணையும் நடைபெற்றாக வேண்டும்!

★ ஜூன் 29-ஆம் நாள் சென்னைக்கு அடுத்த செங்குன்றத்தில் தடியடி, கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப் பிரயோகம், ஆயுதம் தாங்கிய ரிசர்வ் போலீசார் வீடுவீடாக நுழைந்து மக்களைத் தாக்கினர். துப்பாக்கிச் சூட்டில் ஐந்துபேர் காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதற்கு நீதி விசாரணை கேட்டும், இன்றுவரையில் வைக்கப்படவில்லை.

★ மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் நெல்லிக்குப்பம் கோவிந்தராசனுக்கு ஜூன் கடைசி வாரத்தில் கைவிலங்கு பூட்டப்பட்டது! விலங்கு மாட்டவில்லை என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் விளக்கம் கொடுத்திருக்கிறார். விலங்கு மாட்டப்பட்டது உண்மையென்று சட்டமன்றத்திலேயே அந்த எம்.எல்.ஏ. சொல்கிறார். இதற்கும் ஒரு நீதி விசாரணை தேவையல்லவா?

★ மேட்டூர் மில் தேசியப் பஞ்சாலை யூனியனின் முன்னாள் பொதுச் செயலாளர் சாமிவேல் என்பவரை, கருமலைக்கூடல் காவல் நிலையத்தில், போலீஸ் அதிகாரிகள் கடுமையாகத் தாக்கினார்கள். தாக்கப்பட்டது ஜூலை எட்டாம் நாள்! அதாவது அ.தி.மு.க. அரசு வந்தபிறகு தான்! அடி தாங்காத அவர் ஜூலை பத்தாம் தேதி மரணமடைந்துவிட்டார்! இந்த விவகாரத்திலும் ஒரு நீதி விசாரணை தேவைப்படும்.

★ ஜூன் ஒன்பதாம் நாள் திருமுடிவாக்கத்தில் ஒரு கலவரம் - முன்னாள் கழக எம்.பி. இலட்சுமணன் கைது செய்யப்படுகிறார். ஒரு இளம்பெண்ணின் சாவை, இந்த நிகழ்ச்சியுடன் இணைக்க முயற்சி- ஆனால் பிரேத பரிசோதனை அறிக்கை வேறு விதமாக வந்துள்ளதாகத் தெரிகிறது. இதையும் அதிகாரிகள் பொறுப்பில் விடாமல் நீதி விசாரணைக்கும் உட்படுத்துவதுதானே முறையாகும்.

★ ஜூன் ஒன்பது! சென்னை, வண்ணைக் காவல் நிலையத்தில் இருபான் என்ற கைதி தீக்குளித்துச் செத்ததாகச் செய்தி. அவர் காவல் நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்டதாக சட்டமன்றத்திலேயும், வெளியிலேயும் அனைத்துக் கட்சியினரும் குற்றம் சாட்டுகிறார்கள். இதற்குச் சாதாரண விசாரணை போதுமா? நீதி விசாரணை இன்னும் வைக்காமல் இருப்பது நியாயமா? கடந்த முப்பது நாட்களுக்குள்ளேயே இத்தனை நிகழ்ச்சிகள், தமிழ்நாட்டில்!

எனவே, நெருக்கடி கால அத்துமீறல்கள் மட்டுமன்றி 1969 முதல் நடைபெற்ற எல்லா அத்துமீறல்களுக்கும் நீதி விசாரணை களை உடனடியாகக் கொண்டு வருவதை நாம் ஆவலுடன் எதிர் பார்க்கிறோம். பொதுமக்கள், தங்களுக்குத் தெரிந்த எல்லாத் தகவல்களையும் அந்த நீதி விசாரணைக்குக் கொண்டு வருவதற் கான வாய்ப்புகளையும் வழங்கிட வேண்டும். இது மிக மிக முக்கியம்.

உடன்பிறப்பே, ஒரு நடனக்காரர் - ஒரு நடிகை - இவர்க ளுடைய மரணம் பற்றிக்கூட விசாரணைகள் நடத்த வேண்டு மென்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பல பேர், இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலே பேசியிருக்கிறார்கள்.

> அதென்ன ஓரிரு நடிகைகள், ஒரு நடனக்காரர் - அவர்கள் மட்டுமல்ல; கடந்த ஏழெட்டு ஆண்டுக் காலத்தில் எத்தனை நடிகைகள், நடிகர்கள், நடனக்காரர்கள், படமுதலாளிகள், டைரக்டர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரின் சாவு பற்றிச் சந்தேகமாகச் செய்திகள் வந்தனவோ - அத்தனை சாவுகள் பற்றியும் நீதி விசாரணை நடத்துவது வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கும்.

எனவே, தமிழக அரசு இந்த நீதி விசாரணைகளை 1969 பிப்ரவரி முதல் தொடங்கி இதுவரையில் - ஏன்? இன்னமும் நடைபெறுகிற அத்துமீறல் நிகழ்ச்சிகள் உட்பட விசாரித்திட முன்வர வேண்டுமென்று விரும்புகிறேன்.

> முன்னர் நடந்த ஆட்சியில் அத்துமீறிய செயலில் ஈடுபட்ட அதிகாரிகள் மீதும், பொறுப்பானவர்கள் மீதும் அடுத்து வரும் ஆட்சியாளர்கள் இதுபோன்ற விசாரணைகளை நடத்தி, மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கும் முறை சிலாக்கியமானதுதான்! ஏனெனில் எந்தக் கட்சி ஆட்சியுமே மாறாமல் நிலைத்திருப்பதல்ல! அதனால் அதிகாரிகள் அடுத்து எந்தக் கட்சி ஆட்சி வருமோ என்ற அச்சத்தோடும், அவர்கள் எப்படி விசாரணை நடத்துவார்கள் என்ற எண்ணத்தோடும் அடக்கமாகவும் நியாயமாகவும் செயல்படுவார்கள்!

அன்புள்ள,

மு.க.

17-07-1977

442. சிலரது வாயை மூடுவது நல்லது!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டு அமைச்சர்களின் முதற்கட்ட சுற்றுலா நடந்து முடிந்திருக்கிறது. அதற்குள்ளாகவே அவர்களில் சிலர், பொதுக் கூட்டங்களில் முறைகேடாகவும், தரக் குறைவாகவும் பேசுவதில் தங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஒரு அமைச்சர், தன்னைப் பெரிய அரசியல் சிந்தனையாளர் என்றும், ரஷ்யாவில் பிறந்திருக்க வேண்டியவன், தவறித் தமிழ்நாட்டில் பிறந்து விட்டேன் என்றும், தொழிலாளர் பிரச்சினை களைத் தன்னைப்போல் உணர்ந்தோர் யாருமில்லையென்றும் - எண்ணிக் கொண்டிருப்பவர் மட்டுமல்ல, யாரும் கூறாத காரணத்தால் தானே கூறிக் கொண்டிருப்பவர்! அவர் ஒரு கூட்டத்திலே எம்.ஜி.ஆர். நடித்த படங்களின் பாட்டுக்களை யெல்லாம் பாடிக்காட்டி, அந்த அடிப்படையிலே புதிய அரசு காரியங்களைச் செய்யும் என்று கூறியிருக்கிறார். இப்படி எம்.ஜி.ஆர். படத்துப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்த அமைச்சர் திடீரென்று ஒரு வசனம் பேசியிருக்கிறார். என்ன வசனம் தெரியுமா?

> “கருணாநிதி, சட்டசபையில் எம்.ஜி.ஆரைக் “காக்கா” பிடிக்கிறார்!”

இதுதான் அந்த வசனம்! கூட்டம் கேட்ட மக்கள் “இவ்வளவு நேரம் இந்த மந்திரியல்லவா எம்.ஜி.ஆர். பாட்டுக்களைப் பாடி அவரைக் “காக்கா” பிடித்தார். இவர் போய் யாரையோ சொல்கிறாரே?” என்று ஒருவருக்கொருவர் முணுமுணுத்துக் கொண்டிருப்பார்கள்.

அந்த அமைச்சர் ‘காக்கா’ பிடிப்பதில் எவ்வளவு கெட்டிக்காரர் என்பதை முரசொலி அலுவலகத்திலேயிருக்கிற சிறிய பையன் முதல், மேலாளர் வரையிலே அனைவரும் அறிவார்கள்.

அண்ணா தடுத்தும் கேளாமல், அறிக்கை விடுத்தும் கேளாமல் தொழிலாளர்களுக்காக ஒரு உண்ணாவிரத நாடகம் நடத்தினார். பிறகு உண்ணாவிரதத்தை எப்படியாவது நிறுத்தி உயிர் பிழைக்க வேண்டும் என்று துடியாய்த் துடித்தார். நானும் நண்பர் ஆசைத்தம்பி அவர்களும் அண்ணாவிடம் சென்று அந்த மனிதரை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட பிறகு, அண்ணா அவர்கள் எங்களைக் கடிந்துகொண்டே இறுதியாக அவரை மன்னித்தார். அப்படிப்பட்ட புரட்சிகரமான தொழிற்சங்கத் தலைவர்? இன்று அமைச்சர் ஆசனத்தில் அமர்ந்ததும் "கருணாநிதி, காக்கா பிடிப்பவன்" என்று நாக் கூசாமல் சொல்லுகிறார்! இப்படிப்பட்டவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போதுதான் அண்ணா ஒரு முறை 'திராவிட நாடு' இதழிலே எழுதினார், நரகல் நடையழகர்-நடுங்கா நாக்கழகர் என்று! இந்த அமைச்சரின் பேச்சை நோக்கிடும்போது அந்தச் சொற்கள் எவ்வளவு பொருத்தமுடையவைகளாக இருக்கின்றன பார்த்தாயா?

பொதுமக்களின் வரிப்பணத்தை நான் எடுத்துக் கொண்டேன் என்றும் என்னைப்பற்றி அதே அமைச்சர் குற்றம் சாட்டிப் பேசியுள்ளார். பொதுமக்களுக்கு சாலை வசதி, விளக்கு வசதி, குடிநீர் வசதி- இப்படிப் பல வசதிகளுக்குச் செலவழிக்கப்பட வேண்டிய வரிப்பணத்தைக் கறுப்புப் பணம் என்ற பெயரால் முடக்கி வைத்திருப்பவர்கள் யார் என்று தெரிந்திருந்தும், அந்த அமைச்சர் என்னைப் பார்த்து பொதுமக்களின் வரிப்பணத்தை எடுத்துக் கொண்டவன் எனக் கூறுவது அவரது மனச்சாட்சிக்கே ஏற்புடைய ஒன்றாக இருக்க முடியாது. தொழிலாளிகளிடம் சந்தா வசூலித்து, அவர்களுக்காகப் போராடுவது போல நடித்து, அந்த நடிப்பில் 'திரும்பிப் பார்' படத்துப் பரந்தாமன் என்ற தொழிற் சங்கத் தலைவனையும் தோற்கடிக்கக் கூடிய ஆற்றல் பெற்ற இந்த நண்பர், திரைமறைவில் முதலாளிகளிடம் பேரம் பேசி, தொழிலாளிகளிடம் வீரம் காட்டும் இந்தத் தோழர் - இன்று அமைச்சராகிவிட்ட காரணத்தால், பரமசிவன் கழுத்திலே இருந்த பாம்பு, கருடனைப் பார்த்து "என்ன கருடா! சுகமா?" என்று கேட்டதைப்போல - இன்று நம்மை நோக்கிக் கணை தொடுக்கப் புறப்பட்டிருக்கிறார்.

இன்னொரு அமைச்சர், திருச்சியில் "பேருரை" ஆற்றி யிருக்கிறார். "எங்கள் ஆட்சியில் ஊழலை ஒழித்தே தீருவோம்"

என்று கர்ச்சனை செய்துள்ளார். வரவேற்கிறோம் அவரது உறுதியை! ஆனால் வேடிக்கை என்ன தெரியுமா? சட்டமன்றத்தில் ரகுமான்கான் பேசும்போது "வெங்கடாத்திரி கமிஷன் முன்னால் குற்றம் சாட்டப் பெற்று நிற்கும் ஒருவர் அமைச்சராக இருக்கிறாரே - "மது பர்மிட்" வைத்திருப்போர் அமைச்சரவையில் இருக்கலாமா?" என்று கேள்விச் சரம் தொடுத்தார். 'மது பர்மிட்' விவகாரம் பற்றி யாரும் பதில் கூறி விளக்கமளிக்கவில்லை. ஆனால் வெங்கடாத்திரி கமிஷன் முன்னால் ஒரு அமைச்சர் மீது ஒரு குற்றச்சாட்டு விசாரணையில் இருப்பது உண்மைதான் என்று அமைச்சர் எட்மண்ட் அவர்களே ஒப்புக்கொண்டார், சட்டமன்றத்தில்! குற்றச்சாட்டு கொடுத்தவர், விசாரணை மன்றத்துக்கு வரவில்லையே தவிர, சாட்சியமெல்லாம் விசாரிக்கப்பட்டு வழக்கு அப்படியே இருக்கிறது! அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளான அமைச்சர்தான் திருச்சியில் லஞ்ச ஒழிப்புப் பேருரை ஆற்றியுள்ளார்.

அ.இ.அ.தி.மு.க. எடுத்துச் சொல்லி வருகிற அழுத்தம் திருத்தமான கொள்கையின்படி ஒரு அமைச்சர் மீது புகார் கூறப்பட்டு அது விசாரணையில் இருந்தாலே அவர் பதவியில் இருக்கக்கூடாது! இது அவர்களது கட்சியின் நீண்டநாள் புனித? முழக்கம்!

அந்தப் புனித ? முழக்கத்திற்கு மாறாக பதவியில் ஏறிக் கொண்டுள்ள அந்த அமைச்சர், திருச்சியிலே வேறொரு வெடி குண்டையும் வீசியுள்ளார். வேடிக்கையைப் பார்!

> "1968-ல் அண்ணாவின் அமைச்சரவையில் கருணாநிதி பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். அப்போது டெல்லி சென்றிருந்தபோது புதுமோகம்-வரவேற்பு-ஆடம்பரங்களின் மயக்கத்தில், அப்போதைய மைசூர் மாநில முதல்வராக இருந்த வீரேந்திர பட்டீலுடன் மைசூரில் காவிரியின் குறுக்கே 'ஹேமாவதி' அணையைக் கட்டுவதற்காக ஒப்பந்தத்தில் கருணாநிதி கையெழுத்துப் போட்டுவிட்டு வந்தார். வந்தவுடன் சட்டமன்றக் கட்சிக் கூட்டத்தில் கருத்திருமன் இதுபற்றிக் கேட்டார். "ஆம்! கையெழுத்துப் போட்டுவிட்டு வந்தேன்" என்று கருணாநிதி சொன்னார். இதைக் கேட்டு முதலமைச்சராக இருந்த

அண்ணா துடிதுடித்து மன வேதனைப்பட்டார். எனவே காவிரிப் பிரச்சினைக்கு முதல் காரணமாக இருந்தவர் கருணாநிதிதான்!"

இப்படி யாராவது ஒருவன் நாட்டுப்புறத்து முச்சந்தியில் போதை தலைக்கேறிய நிலையில் உளறிக் கொட்டிக் கொண்டு போவானேயானால் அவனை நாம் பொருட்படுத்தாமல் போய் விடலாம்!

ஆனால் ஒரு பொறுப்பான பதவியில் இருக்கிற அமைச்சர் இப்படிப் பேசியிருக்கிறார்.

இந்த விஷயங்களை முதலமைச்சர் நிலையிலே உள்ளவர் ஆராய்ந்து உண்மை நிலவரங்களை மக்களுக்குச் சொல்லலாம்! அல்லது அந்தத் துறைக்கென இருக்கிற பொதுப்பணி அமைச்சர், கடந்த கால காவிரிப் பேச்சுவார்த்தைகள் குறித்து எடுத்துரைப்பது நலம்! அமைச்சரவை என்றால் கூட்டுப் பொறுப்புதான்; யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டு மானாலும் திரித்துப் பேசலாம் என்று பொதுமேடைகளில் பொய் யுரைகளைப் பொழிவது கடுங்கண்டனத்திற்குரிய ஒன்றாகும்.

முதலில் இந்த அமைச்சர் 1924 ஆம் ஆண்டு காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய ஒப்பந்த ஷரத்துக்களைப் படித்துப் பார்க்க வேண்டும்.

மைசூரிலும், தமிழ்நாட்டிலும் காவிரியின் குறுக்கே அணைகள் கட்டுவதல்ல பிரச்சினை! ஒப்பந்த ஷரத்துப்படி அந்த அணைகளில் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள் Rules of Regulations விவாதிக்கப்பட்டு தமிழ்நாட்டில் என்றால் மைசூர் அரசாலும், மைசூர் என்றால் தமிழ்நாட்டு அரசாலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். அந்த விதிமுறைகள் பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வராமல், தமிழ்நாட்டு அரசின் ஒப்புதலைப் பெறாமல் ஹேமாவதி என்றாலும், வேறு எந்த அணை என்றாலும் கட்டப்படுவதை எதிர்த்தே தீருவோம் என்பதுதான் நமது தமிழக அரசின் நிலையாக இருந்து வந்திருக்கிறது. "விதிமுறைகளைப் பற்றிக் கவலையில்லை - நீங்கள் எவ்வளவு தண்ணீர் வேண்டுமென்றாலும் ஹேமாவதியில் தேக்கிக் கொள்ளுங்கள், நிபந்தனையின்றி ஹேமாவதி கட்ட நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்" என்று தமிழகத்தின் சார்பில் நான் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்தேன் என்று ஒரு அமைச்சர்,

பொறுப்பற்ற முறையில் பேசுவது நமது மாநில நன்மைக்கு உகந்தது ஆகாது! வேண்டுமென்றே என்மீது குற்றம் சுமத்துவதன் மூலம், தமிழக விவசாயப் பெருங்குடி மக்களை கர்நாடகத்தின் இன்றைய அரசினரிடம் காட்டிக்கொடுக்கிற காரியமாகும். அமைச்சர்கள், தங்கள் அரசியல் விளையாட்டுகளை வேறு விவகாரங்களில் நடத்தலாம். மிக எச்சரிக்கையாகவும், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டங்களில் அவ்வப்போது எடுத்த முடிவுகளுக்கு இணங்கவும் காவிரிப் பிரச்சினையில் தி.மு.க. அரசு செயல்பட்டது என்பதை நடுநிலையாளர்கள் எவரும் மறுத்திடமாட்டார்!

எந்த நிபந்தனையுமின்றி "ஹேமாவதி" அணையைக் கட்டிக் கொள்ளுங்கள் என்று நாம் ஒப்புக் கொண்டிருந்தால், பிறகு அந்த அணை கட்டப்படுவதை எதிர்த்து அரசின் சார்பில் ஒரு வழக்கு போட்டிருக்கவே முடியாதே!

"பேச்சுவார்த்தையில் நல்ல முடிவு காணலாம். வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்க!" என்று அன்றைய பிரதமர் இந்திராகாந்தி கூறியதற்கு ஏற்பவே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து வழக்கைத் திரும்பப் பெற்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்!

பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு கட்டத்திலும், கர்நாடக அரசு அணைகளைக் கட்டுவதை மறுத்தும்-விதிமுறைகளையும் தேக்கி வைக்கப்படும் தண்ணீர் அளவையும் நிர்ணயித்துக் கொண்டுதான் தமிழகத்துக்குச் சிறுபாதகமும் ஏற்படாதவகையில் முடிவெடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி வந்துள்ளோம்.

நான் பொதுப்பணி அமைச்சராக இருந்தபோதும் சரி, முதல் வராகப் பொறுப்பேற்றிருந்த போதும் சரி- இந்த நிலையிலேயிருந்து தமிழ்நாடு பின்வாங்கவே இல்லை.

மத்திய அரசு தலையிட்டு நல்ல முடிவு காணவேண்டும் அல்லது நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்றே கோரி வந்திருக்கிறோம்.

உண்மை இவ்வாறு இருக்க, நான் கையெழுத்துப் போட்டேன் என்றும், அண்ணா அதுகேட்டு துடிதுடித்தார் என்றும் இப்போது ஒரு அமைச்சர் பேசுவது-அந்த நேரத்துக் 'கையொலி' கேட்கப் பயன்படுமேயன்றி, வேறு எந்த நல்விளைவையும் தராது!

என்னையோ, கழகத்தையோ அவதூறு கூறுவதைத் தொழிலாகக் கொண்டிருக்கிறவர்கள், அதையே தொடர்ந்து செய்யட்டும்; நான் கவலைப்படவில்லை!

ஆனால், கர்நாடகத்தின் நிலையை நாம் ஏற்கனவே ஒப்புக் கொண்டு விட்டோம் என்று இப்போது ஒரு அமைச்சர் கூறினால் - அதையே தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு கர்நாடக அரசினர், தமிழகத்து மக்களுக்குப் பாதகம் விளைவித்துவிட இந்த அமைச்சரின் கூற்று பயன்பட்டுவிடும் என்பதை எச்சரிக்க விரும்புகிறேன்!

இப்படிப்பட்டவர்கள், தங்கள் வாய்களைக் கொஞ்சம் மூடிக் கொண்டிருக்குமாறு இவர்களுக்கு மேலேயிருக்கும் பொறுப்புள்ளவர்கள் ஆணையிடுவது நல்லது.

அன்புள்ள,

மு.க.

19-07-1977

443. புனித ராஜ்யம் காட்சி - 2!

உடன்பிறப்பே,

புனித ராஜ்யம் நாடகத்தின் இரண்டாவது காட்சியை இன்று கண்டு களிக்கலாம் வருகிறாயா?

நாடகத்தில் ஒரு காட்சி என்ற தலைப்பிட்டு நான் எழுதிய கடிதத்தில் இறுதியாக, பொடியனை இழுத்துக்கொண்டு அண்ணாச்சி ஓடுகிறான் அல்லவா? அத்துடன் திரையும் விழுகிறது - அதற்கு அடுத்த காட்சிதான் இப்போது தொடங்குகிறது.

நாடக மேடையில் புகை சூழ்ந்திருக்கிறது. பெரிய பெரிய கொப்பரைகள், அவற்றிற்குரிய அடுப்புகளில் கொதித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு சாய்வு நாற்காலியில் நொண்டி ஒருவன் உட்கார்ந்து கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

அவனது பட்டுச் சட்டையும், பட்டு வேட்டியும் பளபளவென மின்னுகின்றன அடுப்புத் தீயின் வெளிச்சத்தில்! கந்தலாடையணிந்த ஆண்கள் சிலரும், பெண்கள் சிலரும் ஏதோ பட்டைகளை நறுக்குவதும் - நசுக்குவதுமான வேலையிலும், கொப்பரைகளை ஜாக்கிரதையாக கவனிக்கிற பணியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

நொண்டி :- டேய் குட்டி!... டேய் தடிப்பசங்களா! சீக்கிரம் ஆகட்டும்... எவனாவது சிகப்புத் தொப்பிக்காரன் வந்து தொலையப் போறான்...

பெண்கள் :- இதோ... ஒரு நொடியிலே முடிக்கிறோம் முதலாளி!...

நொண்டி :- சரி... சரி... ஏ... சொக்கீ!... இந்தாடியம்மா! அந்த பெரிய பாட்டில் இருக்கே... அதை எடு இப்படி!...

சொக்கி, ஒரு சாராயப் புட்டியை எடுத்து வந்து நொண்டியிடம் கொடுக்கிறாள்.

நொண்டி :- புட்டியைப் பார்த்துக் கொண்டே உம்!
கையிலே புட்டி! பக்கத்திலே குட்டி!

சொக்கி :- சிரித்துக் கொண்டே அடேடே!... நம்ம
அண்ணனுக்கு அடுக்கடுக்காப் பேச வருதே!
புட்டி! குட்டி!

நொண்டி :- சொக்கி! இதபாரு! என் திறமையை -
இதுவரையிலே நம்ப தயாரிக்கிற
சரக்குமேலே ஏதாவது லேபிள்
ஒட்டியிருக்கிறோமா? இல்லை -
இல்லவே இல்லை! இப்பப்பாரு!

எவ்வளவு பொருத்தமான லேபிளு!

சொக்கி :- லேபிளா? நான் பார்க்கலியே அதை! அது
என்னா, லேபிளுங்க?

நொண்டி :- பாரேன்! நீயே பாரேன்!... நீ லேபிளை பாரு...
நான் பாட்டிலை பார்க்கிறேன்...

என்றவாறு, லேபிளைக் கிழித்து அவள் கையில் கொடுத்து விட்டு - பாட்டிலை மடமடவென்று காலியாக்குகிறான்.

சொக்கி :- இந்த லேபிளைப் பார்த்தா ஒரே குழப்பமாவுல்ல இருக்கு! தலைமாதிரியும் தெரியுது - மலைமாதிரியும் தெரியுது - மரம் மாதிரியும் தோணுது - அட என்னா உருவந்தான் இருக்கு இந்த லேபிள்ளன்னு கண்டுபிடிக்க முடியலியே -

நொண்டி :- ஏ, குட்டி சொக்கி! ஒனக்கு ஏதாச்சும் அறிவு கிறிவு இருக்கா? நம்ப தயாரிக்கிற நாட்டுச் சரக்கிலே ஒரு துளி நாக்கிலபட்டு, அது எச்சியிலே கலந்து... மனுஷன் குடல்ல போயி சேர்ந்துதுன்னா... அப்பறம் அவனுக்கு இந்த உலகத்திலே மரம், மாடா தெரியும்! மாடு மரமாத் தெரியும் - தலை மலையாத் தெரியும் - மலை.....?

சொக்கியிடம் நெருங்குகிறான்.

சொக்கி :- விலகிப் போய் நின்று கொண்டு நான் உன்னை அண்ணன்னு கூப்பிட்டுகிட்டு இருக்கிறது

நினைவிலே இருக்கட்டும். லேபிளைப் பற்றி மாத்திரம் சொல்லு - இப்படி ஒரு குழப்பமான லேபிள் எதுக்காக?

நொண்டி :- எழுந்து நின்று இளித்தவாறு இப்ப, நம்ப நாட்டிலே குழப்பத்துக்குத்தான் அதிகமான செல்வாக்கு! தெளிவாகப் பேசுகிறவனை தெருவிலே நிறுத்திடுவாங்க! குழப்பமா பேசுறவனைக் கோயில் கட்டிக் கும்பிடுவாங்க? இந்த லேபிளுக்குப் பெயர் என்ன தெரியுமா?... புனித ராஜ்யம்! புனித ராஜ்யம்!! சொக்கி! இதப்பாரு - இனிமே நம்ப சரக்குகளை எவனும் பிடிக்க மாட்டான்... ஏன் தெரியுமா? புனித ராஜ்யம் பேர் போட்டு லேபிள் ஒட்டியிருக்குல்லே; இதப் பார்த்தாலே போலீஸ்கார அதிகாரிங்க நடுங்குவாங்க!

சொக்கி :- அப்பறம் ஏன் யாராவது சிகப்புத் தொப்பிக்காரனுங்க வருவானுங்கன்னு நீ நடுங்கிக்கிட்டு இருக்கே?

நொண்டி :- சில போலீஸ் அதிகாரிங்க கறார் பேர் வழிகளா இருப்பாங்க... மாட்டிக்கிட்டா விடமாட்டாங்க...

சொக்கி :- சரி! சரி!... நான் வேலையைக் கவனிக்கிறேன்...

நொண்டி :- சொக்கீ!... சொக்கீ!...

சொக்கி :- என்னா?

நொண்டி :- உனக்கு ஏன் சொக்கின்னு பேர் வந்துச்சு அதைச் சொல்லு...

சொக்கி :- எனக்கு என்னா தெரியும்?... எங்க அப்பா அம்மாவைக் கேட்கணும்...

நொண்டி :- நான் சொல்றேன் காரணம்!... ஒரு காலத்திலே உன்கிட்ட நான் சொக்கப் போறேன்னு தெரிஞ்சி உங்க அம்மா அப்பா உனக்கு அந்தப் பேரை வச்சிருக்காங்க... என்ன சரிதானா?....

கையைப் பிடிக்கிறான்

சொக்கி :- அவள் கையை விடுவித்தவாறு

சரிதான்! கொப்பரை கொதிக்குது விடு!....

நொண்டி :- கொப்பரை மாதிரி என் நெஞ்சமும் கொதிக்குது... ஏன் என் உடம்பே கொதிக்குது... உயிரே கொதிக்குது... தொட்டுப்பாரேன் என் உடம்பை...

அப்போது டேய்! விடாதே! என்ற பயங்கரக் கூச்சலுடன் ஒரு போலீஸ் அதிகாரியும், அவருடன் ஒரு போலீஸ்காரரும் வருகிறார்கள். அவர்கள் கையில் துப்பாக்கிகள் குறிபார்த்தபடி இருக்கின்றன.

நொண்டியும், அங்கு பணியாற்றிக் கொண்டிருப்பவர்களும், நடுநடுங்கிப் போகிறார்கள். நொண்டி, போலீஸ் அதிகாரியின் அருகே வருகிறான்.

நொண்டி :- என்ன வேணும் உங்களுக்கு?...

அதிகாரி :- கள்ளச் சாராயம் காய்ச்சும் உன் கூட்டத்தைக் கூண்டோடு கைது செய்ய வேண்டும் அவ்வளவுதான்!

நொண்டி :- மன்னிக்கணும் - மாமூல் கொடுத்தா சமரசமாப் போக மாட்டீங்களா?

அதிகாரி :- ஆகா! என்ன வார்த்தை சொன்னாய்? ஊழலையும் லஞ்சத்தையும் ஒழிக்கப் புறப்பட்டிருக்கும் புனித ராஜ்யத்தில் இப்படியும் சில திருஷ்டி பரிகாரமா?... உம்... இப்போது காய்ச்சப்படுகிற சாராயம் மட்டுமல்ல... இதற்கு முன்பு காய்ச்சப்பட்டு - கார் டயர்களின் டியூப்களிலும் - சைக்கிள் டியூப்களிலும் நீ ஒளித்து வைத்திருப்பதாகக் கூறப்படும் அந்தத் திருட்டுச் சாராயமும் வெளிவந்தாக வேண்டும்...

நொண்டி :- சார்! இதோ பாருங்க எங்க சரக்கின் லேபிளை!! புனித ராஜ்யத்தின் லேபிள் சார்!

அதிகாரி :- ஆகா! புனித ராஜ்யத்தின் பேரை வேறு கெடுக்கிறாயா?

நொண்டி :- இதோ பாருங்க பச்சை!

கையைத் தூக்கி, சட்டையை வழித்துக் காட்டுகிறான்.

அதிகாரி :- இந்தப் பச்சைக்கெல்லாம் நாங்க பயப்பட மாட்டோம்...

நொண்டி :- சரி... இந்தப் பச்சையைப் பாருங்க சார்!...

ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் காட்டுகிறான்

அதிகாரி :- ஓகோ! ஒரு ஆயிர ரூபாயை வைத்துக் கொண்டு என்னை மடக்கி விடலாமென்று நினைக்கிறாயா?

நொண்டி :- எவ்வளவுக்கு சார் மடக்கலாம்?

போலீஸ்காரர் :- இரண்டாயிரம் கூட இல்லேன்னா என்ன செய்ய முடியும்? எனக்கு ஐநூறாவது வேண்டாமா?

நொண்டி :- அப்படியா? இதோ தர்ரேன் சார்! ஆளை விடுங்க...

மடியிலிருந்து பணத்தை எடுத்து நீட்டுகிறான்

அதிகாரி :- லஞ்சப் பணம்! சே! நான் அதைக் கையால் தொடமாட்டேன். நீயே சட்டைப் பையில் வைத்துத் தொலை! அவன் பையில் ஐநூறைத் திணி!

நொண்டி அப்படியே செய்கிறான்.

அப்போது அதிகாரியும், போலீஸ்காரரும் கலகல என்று சிரித்துக் கொண்டே - தங்கள் வேடங்களைக் களைகிறார்கள்! அதிகாரிக்குப் பதிலாக அண்ணாச்சியும் - போலீஸ்காரருக்குப் பதிலாக பொடியனும் நிற்கிறார்கள்.

நொண்டி :- டேய்!... என்னை ஏமாத்திட்டிங்களா? பலே ஆளுடா நீங்க!...

அண்ணாச்சி :-எப்படி எங்க தமாஷ்!...

சொக்கி :- அப்பாடா! பெருமூச்சு விட்டவாறு இந்தப் புனித ராஜ்யமே ஒரே தமாஷாத்தான் இருக்கு...

எல்லோரும் சிரிக்கிறார்கள்... ரசிகர்கள் ஆரவாரம்... திரை விழுகிறது. இரண்டாம் காட்சி முடிகிறது...

உடன்பிறப்பே, விரைவில் புனித ராஜ்யத்தின் மூன்றாம் காட்சியினைக் காட்டுகிறேன். பொறுத்திரு.

அன்புள்ள,

மு. க.

21-07-1977

444. காதலிக்க நேரமில்லை!

உடன்பிறப்பே,

கருணாநிதி, புரட்சித் தலைவரோடு அடிக்கடி பேசுகிறார். என்னை, ஆசையோடு அடிக்கடி பார்க்க ஆரம்பித்தார். அவருக்கே உரிய பாணியில் சொல்வதானால் காதலிக்க ஆரம்பித்தார் என்றே சொல்லலாம். நானும் அவரின் காதலிலே வயப்பட்டேன். காதலிக்கத் தெரிந்த கலையில் கருணாநிதி கெட்டிக்காரர்.

தமிழ்நாட்டு நிதியமைச்சரும், அவையின் முன்னவருமான நண்பர் மனோகரனின் சென்னைப் பேச்சில் ஒரு பகுதி இது!

புதிய பொறுப்பை ஏற்றிருக்கிறார்களே! ஏற்றுள்ள இடத்தில் மக்களுக்காக எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்பதையெல்லாம் விளக்குவார் நிதியமைச்சர் மனோகரன் என எதிர்பார்த்துத் தேனாம்பேட்டையில் கூடிய மக்களிடம் சட்டசபையைப் பற்றி ஒரு காதல் இலக்கியமே அல்லவா தீட்டிக் காட்டியிருக்கிறார் அவர்!

கூளப்ப நாயக்கன் காதல் - விறலிவிடு தூது - போன்ற சரச சல்லாப இலக்கியங்களை யெல்லாம் மிஞ்சக்கூடிய அளவுக்கு மனோகரனின் சட்டசபை இலக்கியம் அமைந்திருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

Leader of the House அவையின் முன்னவர் பொறுப்பிலேயிருக்கிற ஒருவர், அங்கே யார் - யாருடன் பேசுகிறார்கள்? யார், யாரைப் பார்க்கிறார்கள்? அந்தப் பார்வை காதல் பார்வையா? அதில் காந்தமுள்ளதா? கவர்ச்சி மேலிடுகிறதா? அன்புப் பேச்சா? அரசியல் பேச்சா? அல்லது அந்தரங்கப் பேச்சா? என்பன போன்ற அதிக முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புப் பிரச்சினைகளில் தன் சிந்தனையைச் செலுத்தி வருவது ரசிகப் பெருமக்களால் பெரிதும் பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும்.

1957-ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் அண்ணாவும், காமராஜரும் எதிர் எதிரே அமர்ந்திருந்த போது இருவரும் அருகருகே தலையை வைத்துக் கொண்டு எத்தனையோ விஷயங்களைப் பேசியிருப்பார்கள்! நிதி அமைச்சராகவும், அவை முன்னவராகவும்

விளங்கிய சுப்பிரமணியம் அவர்களிடமும் அண்ணா அவர்கள் எத்தனையோ கருத்துகளை அவையில் தனிப்பட்ட முறையில் ரகசியமாகப் பேசியிருப்பார்கள். அந்த நிலைமைகளைக் குறித்து அண்ணாவோ, மற்றவர்களோ மேடை போட்டு காதல் இலக்கியம் படைக்கவில்லை, மனோகரனைப் போல!

பாவம், புது அனுபவம்! சட்டசபையில் மிக முக்கிய பொறுப்பான அவை முன்னவர் என்ற பொறுப்பை ஏற்றிருக்கிறோம் என்பதைக் கூட மறந்து விட்டு, நண்பர் - சிருங்கார ரசத்தில் இறங்கியிருக்கிறார்!

நல்லவேளை - எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது கருணாநிதி! கருணாநிதிக்குப் பதிலாக கருணாகரியாக இருந்தால் அல்லது அவை முன்னவர் மனோகரன் என்பதற்குப் பதிலாக மனோகரியாக இருந்தால் மிகச் சுலபத்திலே காதல் வயப்படும் அவை முன்னவரின் கதி என்னாவது?

காதல் காட்சிகளில் நடிப்பதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்கிற அளவுக்குப் புகழ்பெற்ற எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நேரே, மனோகரியும், கருணாநிதியும் - அல்லது கருணாகரியும் மனோகரனும் டூயட் பாட ஆரம்பித்து விட்டால், பாவம் புதிய முதலமைச்சர் மயக்கம் போட்டே விழுந்து விடுவாரே!

ரசிக்கத்தக்க முறையில் சபையில் நடிக்கலாம் என்று சபாநாயகர் அவர்கள் அண்மையில்தான் துரைமுருகனின் சந்தேகம் ஒன்றுக்குத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

பாடல், அனுமதிக்கப்பட்டுள்ளது! இனி ஆடலும் அனுமதிக்கப்பட்டு விட்டால் - மனோகரனின் காதல் மகாத்மியக் காவியத்திற்கு அங்கேயே படப்பிடிப்பையும் தொடங்கி விட வேண்டியதுதான்!

உடன்பிறப்பே, நான் கவர்னர் உரை பற்றிப் பேசியபோது கடைசியாகப் பின்வருமாறு குறிப்பிட்டேன்.

ஊழலை ஒழிப்பதாகக் கூறுகிறீர்கள். நாங்கள் ஒத்துழைக்கத் தயார். ஆனால் ஒன்று, உங்களால் ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பல பேர் இன்று உங்கள் நிழலில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஒன்றைச் சொல்லுவேன், கொடுத்துச் சிவந்த கரம் முதலமைச்சர் கரம் என்று வர்ணிப்பார்கள். அதை ஒத்துக்கொள்ளும் அதே நேரத்தில் கட்சிப்பணத்தை எடுத்துச்

சிவந்த கரமல்ல கருணாநிதியின் கரம் என்பதையும் நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள்.

இப்படி நான் குறிப்பிட்டதை நண்பர் மனோகரன், சென்னைக் கூட்டத்தில் அப்படியே திரித்துக் கூறியிருக்கிறார். சபையின் மரபுகளைக் காத்திடவேண்டிய அவையின் முன்னவரே, நான் பேசியதைக் கூட்டியும் குறைத்தும் - திரித்தும் வெளியிலே பேசி, அவையின் மரபுகளையும் உரிமைகளையும் மீறுவது வேலியே பயிரை மேய்வதற்கு ஒப்பாகும். நண்பர் மனோகரனின் பேச்சு அவரது கட்சி ஏட்டிலேயே வந்துள்ளது.

கருணாநிதி, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசியது ஒரு மணி நேரம்! புரட்சித் தலைவர் பேசியது ஒரு மணி பத்து நிமிடங்கள்!

இப்படி ஒரு கணக்கைச் சொல்லுகிறார். சட்டசபையில் உள்ள அரசுச் சார்புடைய நிருபர்கள் பகுதியிலேயிருந்து எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது பேச்சின் பிரதியில், அவர்களே குறிப்பிடப்பட்டுள்ள நேரம் - மணி 10.35 முதல் மணி 11.55 முடிய என்றுதான் இருக்கிறது. அதன்படி பார்த்தால் 1 மணி 20 நிமிடங்கள் ஆகின்றன. நான் பேசியதில் இருபது நிமிடங்களை அவையின் முன்னவர் ஏன் மறைக்கிறார்?

ஒருவேளை, நான் பேசியபோது அவருக்கு நேரம் போனது தெரியாமல் இருந்திருக்கலாம்! பாவம், அவர்தான் காதல் வயப்பட்டு மெய்மறந்து கிடந்திருப்பாரே! கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து நான் பேசினேனாம்! என்ன விநோதம் பார்த்தாயா? கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து பேச வேண்டியவர்கள் ஆளும் கட்சியினர், அல்லது அவர்களது தோழமைக் கட்சியினர். எதிர்க்கட்சியினர் ஆளுநர் உரையின் மீது திருத்தங்களை Amendment கொடுத்து அந்த அடிப்படையில்தான் பேசுவார்கள். அப்படித்தான் நானும் பேசினேன். அவைமுன்னவருக்கு அதுகூடத் தெரியவில்லை. அவர் என்ன செய்வார்? அவர்தான் விரகதாப வேதனையில் இருந்திருக்கிறாரே!

கருணாநிதி, கையில் குறிப்புகள் வைத்துக் கொண்டு பேசினார். புரட்சித் தலைவரோ, குறிப்பு ஏதுமின்றி மனக்குறிப்போடு மன்றத்தில் பேசினார்.

சட்டப் பேரவை போன்ற மன்றங்களில் குறிப்புகள் வைத்துக் கொண்டு பேசுவது எடுத்து வைக்க எண்ணிடும் கருத்துகளைத்

தொகுத்தளிக்க விரும்புவோரின் செயல்! அறிஞர் அண்ணா, எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோதும் - முதல்வராக இருந்த போதும் - விவாதங்களின் இறுதி உரையிலோ, பதில் உரையிலோ குறிப்புகள் வைத்துக் கொண்டு பேசுவதுதான் வழக்கம். மேலவையிலே எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்த இலட்சுமணசாமி முதலியார் அவர்களின் அருவியோட்டம் போன்ற ஆங்கிலப் பேச்சு, அவர் வைத்திருக்கும் குறிப்புகளைப் பின்னணியாகக் கொண்டே அமைந்தது.

இது போன்ற சிறப்புக்குரிய மன்றங்களில் நீண்ட உரை நிகழ்த்தும் போது குறிப்புகள் வைத்துக் கொண்டுதான் பேச வேண்டும். அப்போதுதான் அவையில் எடுத்து வைக்கப்பட்ட பல்வேறு கருத்துகளுக்கு விளக்கங்களை அளிக்க முடியும். நான் குறிப்புகள் வைத்துக் கொண்டு பேசியதால்தான், 1976 மார்ச் பத்தாம் நாள், நாடாளுமன்றத்தில் நண்பர் மனோகரன் இந்தியை ஆதரித்துப் பேசியதையும், அவரைப் பாராட்டி உள்துறை அமைச்சர் பிர்மானந்த ரெட்டி பேசியதோடு, இந்தியை வளர்க்கும் உங்கள் நோக்கத்தை நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யுங்கள் என்ற மனோகரனைப் பார்த்துக் கூறியதையும் - பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பேடுகளைக் காட்டி என்னால் மெய்ப்பிக்க முடிந்தது!

நான் குறிப்புகள் வைத்துக் கொண்டு பேசியதால்தான், அவசரக் காலச் சட்டத்தை ஆதரிக்கிற எம்.ஜி.ஆரை ஆசிரியராகக் கொண்ட அண்ணா என்ற ஏட்டிலேயே 9-6-1977 ஆம் நாளன்று இன்றைய சட்ட அமைச்சர் நாராயணசாமி முதலியார் அவர்கள், அவசரக் காலச் சட்டம் ஒரு தீய கனவு - அதனைக் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் சர்வாதிகாரம் தலை தூக்கும், நீதித்துறை செயல்படாது என்பன போன்ற கருத்துகளைக் கட்டுரையாகத் தீட்டியிருந்ததையும் படித்துக் காட்ட முடிந்தது!

பாவம்! காதல் குறிப்புகளைப் பற்றி அவையில் சிந்தித்துக் கொண்டிருந்த மனோகரனுக்கு, காகிதக் குறிப்புகளைப் பற்றி அலட்சியம் தோன்றுவது இயற்கைதானே!

பரவாயில்லை, அவருடைய தலைவர் இனியும் தொடர்ந்து குறிப்புகள் இல்லாமலே பேசட்டும்! அந்த வகையில் அவருடைய திறமையைக் காட்டட்டும்!

ஒத்திவைப்புப் பிரேரணையில் கூட ஏதோ அறிக்கை படிப்பது போல அதிகாரிகள் எழுதிக் கொடுத்ததைப் படித்துக் கொண்டிருப்பவர்கள், இப்படியெல்லாம் - சட்டசபை நிகழ்ச்சிகளைப் பற்றி விமர்சித்துக் கொண்டிருப்பார்களேயானால், அதற்குரிய பதிலும் அதே பாணியில் அமையும் என்பதை முன்கூட்டியே எதிர்பார்த்துத்தான் தீர வேண்டும்.

நண்பர் மனோகரனுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன், உடன்பிறப்பே! உன் வாயிலாக!

அவர்களின் கட்சியை மக்கள் ஆளுங்கட்சியாக ஆக்கியுள்ளார்கள். அவர்களது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டது போல வேளாண்மை மின் கட்டணத்தைக் குறைப்பார்கள், வீட்டுக்குரிய மின் கட்டணங்களைக் குறைப்பார்கள். பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கொண்டு வருவார்கள். மூடிய ஆலைகளை அரசின் சார்பில் எடுத்துக் கொள்வார்கள். தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு வழங்கும் திட்டம் நிறைவேற்றப்படும். விவசாயிக்கு தினக்கூலி என்பதை மாற்றி மாதச் சம்பளம் தருவதற்கு சட்டம் வரும். இப்படியெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற மக்கள், மனோகரன் தரும் சட்டசபைக் காதல் காட்சி வர்ணனைகளை நீண்ட நாட்களுக்குப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்! எனவே, அவையின் முன்னவர் மனோகரன்,

ஆசைப் பார்வை!

அன்புப் பார்வை!

காதல் பார்வை!

கடைக் கண் பார்வை!

காதலிப்பதில் யார் வல்லவர் என்ற ஆராய்ச்சிப் பார்வை! இவற்றையெல்லாம் மறந்துவிட்டு - மக்களின் பக்கம், தன் பார்வையைச் செலுத்துவாராக! கடமையை ஆற்றிடும் மன்றங்களில் காதலிக்க நேரமில்லை!

அன்புள்ள,

மு. க.

22-07-1977

445. கழகமும் முஸ்லீம்களும்!

உடன்பிறப்பே,

> “மேலவைத் தேர்தலில் இரண்டு வேட்பாளர்கள் வெற்றி பெற வாய்ப்பு இல்லாத நிலையிலும் தி.மு.கழகம் ஆற்காடு வீராசாமியையும், நீலநாராயணனையும் நிறுத்தியுள்ளது”

என்று மாலைப் பத்திரிகையொன்று செய்தி விமர்சனம் செய்துள்ளது.

அதே தொடர்பில் அந்த ஏடு, தி.மு.கழகத்துக்கும் முஸ்லீம் களுக்கும் விரோத உணர்ச்சியை மூட்டிவிடும் வகையில்;

> “தமிழக மேல்சபைத் தேர்தலில் முஸ்லீம் லீக் வேட்பாளரை ஆதரிக்க ஜனதா கட்சி முன் வருமேயானால், ராஜ்யசபைத்தேர்தலில், ஜனதாவுக்கு நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று தி.மு.கழகம் திட்டவட்டமாக கூறிவிட்டதாம்”

என்பதாக மற்றொரு பொய்த் தகவலையும் வெளியிட்டுள்ளது.

இந்த இரண்டு விஷயங்களையும் சற்று ஆராய்வது நல்லது!

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நாற்பத்தியெட்டு பேர்! முப்பது ஓட்டுகள் பெற்றால் ஒருவர், மேலவை உறுப்பினராக வெற்றி பெற முடியும். நாற்பத்தி எட்டு ஓட்டுகளில் முப்பது போக, மிச்சம் பதினெட்டு ஓட்டுகளை வைத்துக்கொண்டு ஜனதா கட்சி அளிக்கும் பத்து ஓட்டுகளையும் தி.மு.க. பெற்றால் இரண்டாவது இடத்திலும் வெற்றி பெற வாய்ப்பு இருக்கிறது.

எப்படி என்றால் - அ.தி.மு.க. ஓட்டுகள் மொத்தம் நூற்றி இருபத்தி ஆறு! முப்பது ஓட்டுகள் வீதம் நான்கு அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு நூற்றி இருபது ஓட்டுகள் போக மிச்சம் ஆறு ஓட்டுகளைத்தான் இந்தக் கட்சி முஸ்லீம் லீகிற்குக்

கொடுக்கிறது. முஸ்லீம் லீக், தன்னுடைய ஓட்டு ஒன்றையும் சேர்த்து ஏழு ஓட்டுகளுடன் களத்தில் இறங்குகிறது. மார்க்சிஸ்ட் கட்சியின் பனிரெண்டு ஓட்டுகளும், உழைப்பாளர் கட்சியின் இரண்டு ஓட்டுகளும், தேசிய பார்வார்டு பிளாக் கட்சியின் இரண்டு ஓட்டுகளும், மூக்கையாத் தேவரின் ஓட்டும், ஒருவேளை காங்கிரஸ், வலது கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளருக்குப் போக மிச்சம் இரண்டு ஓட்டுகளும் சேர்த்தால் மொத்தம் இருபத்தி ஆறு ஓட்டுகள் ஆகின்றன.

மாலை ஏட்டின் கூற்றுப்படி இருபத்தி எட்டு ஓட்டுப் பெற்றுள்ளவர்களுக்கு வெற்றி வாய்ப்பு இல்லையாம்! இருபத்தி ஆறு ஓட்டுகள் பெற்றுள்ளவர்களுக்கே வெற்றி வாய்ப்பாம்!

அ.தி.மு.க. உண்மையிலேயே முஸ்லீம் லீகிற்கு இதய சுத்தியோடு ஒரு இடம் கொடுக்க எண்ணியிருந்தால், ராஜ்யசபை இடத்தில் ஒன்றை விட்டுக் கொடுத்திருக்கலாமே!

என்றைக்காவது - கடந்த கால வரலாற்றில், தி.மு. கழகத்தால் முஸ்லீம் லீக் இவ்வாறு ராஜ்யசபைத் தேர்தலில் ஏமாற்றப்பட்டது உண்டா?

ராஜ்யசபைக்கும், மேலவைக்கும் எத்தனை முஸ்லீம்லீக் தலைவர்களையும், நண்பர்களையும் தி.மு.க. அனுப்பி வைக்க உதவியிருக்கிறது என்பதை, அந்த மாலை ஏடு எண்ணிப் பார்க்குமேயானால், கழகத்திற்கும் முஸ்லீம்களுக்குமிடையே கலக விதை தூவிட முன் வந்திருக்காது!

ராஜ்யசபைத் தேர்தலில் கழக வேட்பாளருக்குப் போக மிச்சப்படும் கணிசமான வாக்குகளை ஜனதா வேட்பாளருக்கு நாம் வழங்குவதென உறுதி அளித்துள்ளோம்.

அதற்கு மாறாக, மேலவைத் தேர்தலில் நமது வேட்பாளருக்கு ஜனதாவின் ஆதரவைக் கேட்டுப் பெறுகிறோமே தவிர, "முஸ்லீம் லீக் வேட்பாளருக்கு ஜனதா வாக்களிக்கக் கூடாது" என்ற எந்த விதமான நிபந்தனையும் விதிக்கவில்லை.

மேலவையின் தேர்தலில் நமது கழக வேட்பாளர்கள் இருவரும்- அதைப் போல ராஜ்யசபைத் தேர்தலில் நமது கழக வேட்பாளரும், ஜனதா வேட்பாளரும் வெற்றி பெற வேண்டும் என்பது நமது நோக்கமே தவிர, முஸ்லீம் லீகோ, அல்லது வேறு

கட்சி வேட்பாளரோ தோற்கடிக்கப்பட வேண்டுமென்பது நமது எண்ணமல்ல!

தோழமைக் கட்சியான முஸ்லீம் லீகிற்கு நல்லெண்ணத்தோடு உதவி செய்யக் கருதியிருந்தால் அ.தி.மு.க. கட்சி ராஜ்ய சபைத் தேர்தலிலேயே அவர்களுக்கும் ஒரு இடம் தந்திருக்க வேண்டும். அல்லது இப்போது மேலவைத் தேர்தலிலாவது தங்களது கட்சி ஓட்டுகளை முஸ்லீம் லீகிற்கு ஒதுக்கிவிட்டுத் தோழமைக் கட்சியின் ஓட்டுகளைத் தாங்கள் ஒதுக்கிக் கொள்ளவேண்டும்.

இந்த அறிவுரையை அந்த மாலை ஏடு வழங்குமேயானால், அதற்கு முஸ்லீம் லீகிடம் பற்று இருப்பதாக நாம் நம்பலாம்.

அன்புள்ள,

மு.க.

23-07-1977

446. புனித ராஜ்யம் காட்சி - 3!

உடன்பிறப்பே,

புனித ராஜ்யம் நாடகத்தின் மூன்றாவது காட்சியை இன்றைக்குக் காணலாமா?

தெருவில் சொக்கி வந்து கொண்டிருக்கிறாள். ஒரு பையன் பத்திரிகை விற்றுக்கொண்டு போகிறான்... சொக்கி, ஒரு பத்திரிகையை வாங்கிக் கொண்டு காசு கொடுக்கிறாள்

பையன் :- அடிசக்கை! ஆளைப் பார்த்தா பட்டிக்காடு மாதிரி இருக்கிறே! உனக்குப் படிக்கக்கூடத் தெரியுமா?

சொக்கி :- டேய்! முதுகு விறு விறுங்குதா? பட்டிக் காடுன்னா படிக்கத் தெரியாதா? போடா அறையப் போறேன்!

பையன் ஓடி விடுகிறான்

பொடியன் :- வந்துகொண்டே சொக்கீ! சொக்கீ! இன்னைக்கு என்னா பத்திரிகையிலே விசேஷம்?.....

சொக்கி :- வாய்யா! வா! இன்னைக்கு பத்திரிகையிலே பட்ஜெட் வந்திருக்கு! .....

பொடியன் :- ஆகா! பட்ஜெட்டா? எங்களுடைய முதல் பட்ஜெட்டா?.... மன்னிச்சுக்க சொக்கி! நம்பளோட முதல் பட்ஜெட்டு!... உம்!...படி! படி!....

சொக்கி :- பத்திரிகையை சிறிது நேரம் பார்த்துவிட்டு ஆங்! தி.மு.க. ஆட்சியிலே அந்த வள்ளுவர் கோட்டம் கட்டினது, பூம்புகார் எழுப்பினது, கட்டபொம்மன் கோட்டை கட்டினது - அதெல்லாம் தேவையில்லை - அதுக்குப் பதிலா தொழிற்சாலைகள் எத்தனையோ வச்சிருக்கலாம்னு நம்ப தலைவருங்க பேசினாங்கல்லே, ஞாபகம் இருக்கா?

பொடியன் :- ஆமா! ஆமா! அதெல்லாம் என்ன வீண் வேலை?

சொக்கி :- இப்ப இவுங்க பட்ஜெட்டிலே, திருமலை நாயக்கன் மகாலையும் ..... இராமநாதபுரத்திலே உள்ள இராமலிங்க விலாஸ் மாளிகையையும், தரங்கம்பாடி கோட்டையையும் பாதுகாத்து பொருட்காட்சிகள் வைக்கப் போறாங்க!

பொடியன் :- இராமலிங்க விலாஸ்! அது கட்டபொம்மன் சண்டை போட்ட எடம்! அதை ஞாபகமா பாதுகாக்க வேண்டியதுதான்...

சொக்கி :- ஏன்யா! கட்டபொம்மன் சண்டை போட்ட இடத்தையே ஞாபகமாகப் பாதுகாக்க வேணும்னா, அவன் கோட்டை கட்டி கொலுவீற்றிருந்த இடத்தை உழுது போட்டுவிட்டுப் போய்விட்டானே, வெள்ளைக்காரன்! அந்த இடத்திலே ஒரு நினைவுக் கோட்டை கட்டியது தப்பா?

பொடியன் :- தங்கச்சீ! தப்பெல்லாம் அதிலே இல்லே - கோட்டையைக் கட்டினது யாரு? வள்ளுவனுக்கு கோட்டம் கட்டினது யாரு? தி.மு.க. காரனுங்களா இல்லியா? அவனுங்க செஞ்சா அதை நம்ப ஆதரிக்க முடியுமா என்ன?

சொக்கி :- ஓகோ, விஷயம் அப்படிப் போகுதோ?

பொடியன் :- உம்! அதில தான் இருக்கு பாயிண்ட்டு! சரி... சரி... அப்பறம் பட்ஜெட்டிலே என்ன இருக்கு?

சொக்கி :- யோவ்! நம்ப விஷயங்கூட ஒண்ணு இருக்கு...

பொடியன் :- என்னா சொக்கி, என்னா?

சொக்கி :- இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்களுக்கு ஆயத் தீர்வை பதினாலு ரூபாயிலிருந்து பதினேழு ரூபாயாக உயர்த்தப்படும்...

பொடியன் :- அடி சக்கை! இந்தியாவில் தயாரிக்கப்படுகிற சீமைச்சரக்குக்கு தீர்வையை உயர்த்துனா... அப்புறம் நம்ப நாட்டுச் சரக்குக்கு இன்னும் கொஞ்சம் கிராக்கிதான்! பலே! பலே!... ஏன்,

சொக்கி! மதுவிலக்குத் திட்டத்தை ரத்துகித்து செஞ்சிடலியே?

சொக்கி :- இல்லை! ஏன் அதை அவ்வளவு அக்கறையா கேக்கிறே?

பொடியன் :- அந்தத் திட்டத்தை ரத்து பண்ணிட்டா அப்பறம் நம்ப பிசினஸ் என்ன ஆகிறது? புனித ராஜ்யம் லேபிள் வரையிலே போட்டு, பெரிய அளவிலே வியாபாரத்தை தொடங்குறதா, நானும் நம்ப அண்ணாச்சியும், உங்க முதலாளியும் பிரமாண்டமான திட்டம் போட்டிருக்கோமே!

சொக்கி :- பட்ஜெட்டிலே இன்னொரு விசேஷம் பாத்தியா? ஜெயப்பிரகாஷ் நாராயணன் சொன்னாருன்னு தி.மு.க. ஆட்சியிலே லாட்டரி சீட்டு திட்டத்தைக் கைவிட்டாங்களே? அதை இப்ப மறுபடியும் இவுங்க அமல்படுத்தப் போறாங்க!

பொடியன் :- அப்படிப் போடு! ஒரு போடு! ஜெயப்பிரகாஷுக்கு சரியான அடி!... சொக்கி!.... அண்ணாவே உயிரோடு இருந்தா கூட அந்தத் திட்டத்தை இப்ப கைவிட்டிருப்பாரு! நம்பளவரு, விடுவாரா? ஜெயப்பிரகாஷ் ஒன்றைச் சொல்லி அதைக்கேட்டு நடக்கிறதாவுது!...

சொக்கி :- குஜராத்திலே, மது இல்லை! குதிரைப் பந்தயம் இல்லை! லாட்டரி சீட்டு இல்லை! காந்தி பிறந்த மாகாணம் அது! - அது மாதிரி தமிழ்நாடும் இருக்கணும்னு ராஜாஜி நினைச்சார்! ஆனா, மூன்றையும் ஒரே நேரத்திலே செய்ய முடியவில்லை. பயங்கரமான பொருளாதார நெருக்கடியினாலே மதுவிலக்கைக் கூட இடையிலே கொஞ்ச நாள் தி.மு.க. ஆட்சி ஒத்தி வைச்சுது. மறுபடியும் நிலைமை சரியானதும் மீண்டும் மதுவிலக்கு தீவிரமாகக் கொண்டு வரப்பட்டது தி.மு.க. ஆட்சியிலே. ஆனால் இப்போது, ஒழிக்கப்பட்ட பரிசுச் சீட்டை மறுபடியும் கொண்டு வந்திருக்காங்க!

பொடியன் :- பரிசுச் சீட்டைப்பத்தி அண்ணா என்ன சொல்லி இருக்காரு, தெரியுமா?...

சொக்கி :- யோவ் சும்மா இரய்யா! அண்ணா, மாநில சுயாட்சியைப் பத்தி என்னா சொல்லியிருக்காரு? அதைப் படிக்க மாட்டீங்க, விட்டு விடுவீங்க! அண்ணா நெருக்கடி நிலையைப் பத்தி ராஜ்ய சபையிலே என்ன பேசியிருக்காரு? அதை ஏத்துக்க மாட்டீங்க! பரிசுச் சீட்டைப் பத்தி சொன்னதை மாத்திரம் எடுத்துகிட்டு குதிப்பீங்க!

பொடியன் :- ஏ, அப்பா! உனக்கு எவ்வளவு விஷயம் தெரிஞ்சிருக்கு! பொல பொலன்னு புளியங்காய் அடிக்கிற மாதிரி அடிக்கிறியே - நாட்டுக்கட்டை மாதிரி இருந்துகிட்டு ... உலக விஷயம் பூரா பேசுறே!... அடி ஆத்தே! சரி! சரி!.... அப்புறம் என்னா பட்ஜெட்டிலே விசேஷம்!

சொக்கி :- தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கடலிலே மீனவர்கள் இறந்துபோனா - மரமேறிகள் கீழே விழுந்து இறந்து போனா - பூச்சி மருந்து தெளிக்கும்போது விவசாயிகள் இறந்துபோனா - அவுங்க குடும்பத்துக்கு ஆயிரமோ இரண்டாயிரமோ நிதி கொடுத்தாங்களே? அதை இப்ப ஐயாயிர ரூபாயா உயர்த்தி இருக்காங்க!

பொடியன் :- அதாவது - மீனவர், மரமேறிகள், விவசாயிகள் எல்லோருக்குமா?

சொக்கி :- இப்ப விவசாயி படம் ஒண்ணும் புதுசா ரிலீஸ் ஆகலே! அதனால் விவசாயிக்கோ, மரமேறிக்கோ, அந்த நிவாரண நிதி உயர்வு இல்லை! இப்ப உடனடி ரிலீஸ் - மீனவ நண்பன்தான்! அதனால மீனவர்களுக்கு மட்டும் நிவாரண நிதி உயர்த்தப்பட்டிருக்கிறது...

பொடியன் :- சொக்கீ! என்னா? நீ பேசுறது ஒருமாதிரியா - கிண்டலாகவே இருக்கு! பட்ஜெட்டிலே இன்னம் எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கும் அதைப் படியேன்... பயிர் இன்ஷ்யூரன்ஸ்...

சொக்கி :- சே! சே! அது மத்திய சர்க்கார் விவகாரம்னு சொல்லியாச்சு!

பொடியன் :- விவசாயிகளுக்கு தினக்கூலிக்குப் பதிலாக மாதச் சம்பளம்?

சொக்கி :- அதெல்லாம் தேர்தல் வாக்குறுதி! அதாவது ஏட்டுச் சுரைக்காய்.

பொடியன் :- விவசாயத்துக்கும் வீட்டு உபயோகத்துக்கும் மின் கட்டணம் குறைப்பு நிச்சயமா இருக்குமே!

சொக்கி :- மூச்!... இரு, தேடிப் பாக்கிறேன்! இந்த பத்திரிகையிலே போடக்காணும்... - வேற பத்திரிகை வாங்கித்தான் பாக்கணும்...

பொடியன் :- மூடிய மில்களை அரசே ஏற்று நடத்துவது...

சொக்கி :- மூடு வாயை! அதைப்பற்றி பட்ஜெட்டிலே யாரும் வாயே திறக்கவில்லை!... நீ ஏன் உன் வாயைத் திறக்கிறாய்?...

பொடியன் :- போன வாரம் அறிவித்தாரே ஒரு மந்திரி, நெசவாளர் வீடுகளில் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கப்படுமென்று, அதாவது பட்ஜெட்டில் இருக்கிறதா?

சொக்கி :- இல்லை! இல்லை! இல்லை! இந்தா நீயே படிச்சுக்கோ!...

பத்திரிகையை அவன் கையில் கொடுக்கிறாள்

பொடியன் பத்திரிகைகளை வாங்கி ஆவலுடன் பார்த்து .....

பொடியன் :- அடா! அடா! அடா!... எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதோ பத்திரிகையிலே புதுப் பட விளம்பரம் இருக்கே!... சொக்கி! பட்ஜெட்டாவது ஒண்ணாவது!... இந்தப் படத்தை பாத்துகிட்டே இருந்தா போதும்... நம்ப, பாமர ஜனங்களுக்கு...

பார்த்தால் பசி தீரும்!

பொடியன், பாடத் தொடங்குகிறான்

பாட்டு

பார்த்தால் பசி தீரும் - ஒரு படத்தைப்

பார்த்தால் பசி தீரும்!

+

பட்ஜெட் என்பது எதற்கு? அதனால்

பலன்தான் எதற்கு?

+

பார்த்தால் பசி தீரும் - ஒரு படத்தைப்

பார்த்தால் பசி தீரும்!

சொக்கியும் பாடுகிறாள்

பாட்டு

தேர்தல் வாக்குறுதி என்பதெல்லாம் தில்லுமுல்லு தானா?

யார் இதனைக் கேட்பார் என்ற அசட்டுத் தைரியம் தானா?...

சொல்லு நீ! சொல்லு நீ!

ஊரை ஏமாற்றி ஓட்டு கேட்க ஓராயிரம் பொய்யா?

உள்ளதை நான் சொன்னால் ஓடுவீர் அய்யா!

நில்லு நீ! நில்லு நீ!

பொடியன், ஓடுகிறான் - சொக்கி, சிரிக்கிறாள்

காட்சி முடிகிறது. விளக்கு அணைகிறது. அடுத்த காட்சி - நான்காவது காட்சி. அதனைப் பிறகு காண்போம்.

அன்புள்ள,

மு. க.

26-07-1977

447. தமிழ் மகனே! தளராதே!!

உடன்பிறப்பே,

வழக்குகள் வரத் தொடங்கிவிட்டன. நமது முன்னாள் சபா நாயகர் புலவர் கோவிந்தன் அவர்கள் 26.7.77 அன்று பிற்பகல் இரண்டேகால் மணிக்குக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் செய்தி எந்தப் பத்திரிகைக்குக் கிடைப்பதாக இருந்தாலும் கைது செய்யப்பட்ட ஒரு மணி நேரத்திற்குப் பிறகு தான் கிடைக்கக்கூடும். ஆனால் அ.தி.மு.க. கட்சி ஏடுகளிலும், அதன் ஆதரவு ஏடுகளிலும் அரசாங்க அதிகாரியின் நீண்ட பெரும் அறிக்கையுடனும், ஏராளமான விபரங்களுடனும் அன்று மாலை நாலரை மணி அளவிலேயே அச்சியற்றப்பட்டு அந்தச் செய்தி முழு அளவில் வெளியிடப்படுகிறது. இதிலிருந்து என்ன புரிகிறது?

முன்கூட்டியே ஆளுங்கட்சிச் சார்புடைய ஏடுகளுக்குச் செய்திகளை மிக விரிவாகத் தருகின்ற ஏற்பாடுகள் அதிகாரிகளின் வாயிலாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

சாட்டப் பெற்றுள்ள குற்றச்சாட்டுக்களுக்காக முன்னாள் சபாநாயகர் கைது செய்யப்பட்டிருக்க வேண்டுமா? அல்லது கைது செய்யப்படாமலே வழக்கு தொடர்ந்திருக்கக் கூடாதா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை தேடி அலைய நான் விரும்பவில்லை.

இந்திரா அரசின்போது ஆரம்பமான "களங்கம் சுமத்திப் பழி தீர்க்கும் படலம்" இப்போது தொடர்வது மாத்திரமல்ல! அதைவிட மிகத் தீவிரமாக செயல்படத் தொடங்கியிருக்கிறது.

நெருக்கடி காலத்திலே நமது நெஞ்சிலே நெருப்பைக் கொட்டும் காரியங்கள் எத்தனையோ நடைபெற்றன. அவற்றை யெல்லாம் தாங்கிக்கொண்டுதான் நாம் நமது பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மிரட்டுதல், பழி வாங்குதல், அரசியல் வஞ்சம் தீர்த்தல் இவற்றினால் இந்தக் கழகத்தை மாசுபடுத்தி அழித்து விடலா மென்று கனவு கண்ட டெல்லிச் சர்வாதிகாரிகள், இப்போது குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுகிற அளவுக்கு ஓராண்டு காலத்திலே சரித்திரம் திரும்பியிருக்கிறது என்பதைக் கண் எதிரிலே காண்கிறோம்!

> யாராயினும், உண்மையில் குற்றவாளிகளாக இருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே என்பதில் இரண்டு விதக் கருத்துக்கு இடமே இல்லை!

ஆனால் கடந்த பதினேழு மாதக் குடியரசுத் தலைவர் ஆட்சியில் தி.மு.கழகத்தை அவமானப்படுத்தி நசுக்கி விட ஜோடிக்கப்பட்ட வழக்குகளைப் போல இப்போதும் வழக்குகள் முளைத்திடுமேயானால், அதை நிமிர்ந்து நின்று சந்திக்கத் தி.மு.கழகம், தோள் தட்டிக் கொண்டு நிற்கிறது.

உடன்பிறப்பே, ஒன்றுக்கும் நீ கலங்கத் தேவையில்லை. எங்கே நான் கலங்கி விடுவேனோ என்று எண்ணிப் பதினேழுமாத காலம் என் பக்கமிருந்து "அஞ்சாதே! நாங்கள் இருக்கிறோம்!!" என்று சுடர்முகந் தூக்கி என் சோகம் துடைத்து ஆறுதல் கூறிய அடலேறு அல்லவா நீ!

நீ இருக்க, நானும் கலங்கப் போவதில்லை! அதைப் போல எந்த மூலையில் நமது உடன்பிறப்புக்கு ஒரு துன்பம் விளைவிக்கப் பட்டாலும் ஓடோடி வந்து கலக்கம் தவிர்க்க, உயிரையும் கொடுத்துக் காக்க - நானும் கழகமும் தயாராக இருக்கிறோம் என்பதை உனக்கு இன்று நான் பிரகடனப்படுத்துகிறேன்.

> நம்மை வீழ்த்த, வியூகங்கள் அமைக்கப்படுகின்றன! ஆறு மாதம் பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறினோமே, அதற்குக்கூட இடமளிக்க மாட்டார்கள் போலிருக்கிறது! அதற்கிடையிலேயே நமது பொறுமையைச் சோதிக்கத் தொடங்கி விட்டார்கள் என்றுதான் கருதவேண்டும்!

ஒன்றை மாத்திரம் நினைவிலே வைத்துக்கொள்! என்றைக் காவது ஒரு நாள் இந்த உயிர், போகத்தான் போகிறது. அது இன்றைக்கே போகட்டுமே என்ற உறுதியோடு, நம்மீது நடத்தப்படும் பழிவாங்கும் படையெடுப்புகளை எதிர்த்து நிற்பது என்று முடிவு செய்துகொள்வோம்!

வழக்குகளா? ஜோடிக்கிறார்களா? பரவாயில்லை. சந்திப் போம்! சிறைகளைத் திறக்கிறார்களா? சிரித்த முகத்துடன் சென்றி டுவோம்!

தண்டனைகளை வழங்குகிறார்களா? தாங்கிக் கொள்வோம்!

நம்மீது வீசப்படும் கொடுமைகளை எதிர்க்க நாம் வன் முறையின் தயவை நாடப்போவதில்லை. நாடவும் கூடாது! நமது இயல்பும் அதுவல்ல!

ஆனால் பழிவாங்கும் நிகழ்ச்சிகளை எதிர்த்து நாமே நம்மைத் தியாகம் செய்து கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை!

அந்த நாள் விரைவில் வந்து கொண்டிருக்கிறது!

அந்தத் தியாகப் போரில் முதல் களப்பலியாகப் போகிறவனும் நானாகத்தான் இருப்பேன்!

எனவே, எதுவரினும் மனம் தளராது அண்ணாவின் கொள்கை களை முழக்கிக் கொண்டிரு!

தமிழ்ச் சமுதாயத்திற்கு விடப்பட்டுள்ள அறைகூவலை ஏற்றுக் கொண்டு அக்கினியாற்றிலே இறங்குவதற்கும் தயாராக இருப்போம்!

தளராதே!
தமிழ்மகனே! தளராதே!!
தன்மானச்சுடரே! தளராதே!!
தங்கம் நிகர் உடன்பிறப்பே, உன்
சிங்கக் குரல் ஒலிப்பதற்கான
நாள் தொலைவில் இல்லை!
தொலைவில் இல்லை!!

அன்புள்ள,

மு.க.

27-07-1977

448. குருவித் தலையில் பனங்காய்!

உடன்பிறப்பே,

குருவித்தலையில் பனங்காய் வைத்தது போலிருக்கிறது, ஒரு சிலருக்கு அமைச்சர் பதவி கிடைத்திருப்பது!

தாம்பரத்தில் ஒரு அமைச்சர் பேசியதாக அவர்களுடைய கட்சி ஏட்டில் செய்தியொன்று வந்திருக்கிறது.

"சட்டமன்றத்தில் சபாநாயகரைத் தேர்ந்தெடுத்தபோது கருணாநிதி, ஏதோ பெரிய தத்துவத்தையே எடுத்துச் சொன்னதைப் போல் சொன்னார். பிடில் கம்பியில் இந்தப்புறம் இழுத்தாலும் ஓசை வரும். அந்தப்புறம் இழுத்தாலும் ஓசை வரும். அதைப்போல சபாநாயகர் இருக்க வேண்டும் என்றெல்லாம் கூறினார். அதற்குப் புரட்சித்தலைவர் பேசும்போது பதில் கூறினார். "கருணாநிதி பிடில் கம்பியில் எந்தப் பக்கம் இழுத்தாலும் ஓசை வரும் என்றார். சபாநாயகர் அந்தக் கம்பியில் இசை எழுப்புவதற்கு முன்னால் கம்பிகளைத் தயாராக மீட்டி வைத்துக்கொள்ளுங்கள்" என்றார். இப்படி வாதத்திற்கு வாதம் பதிலுரைக்கத் தன்னால் முடியுமென்பதை எடுத்துக் கூறுவதுபோல் இருந்தது அன்று அவர் பேசியது."

உடன்பிறப்பே இதில் வாதம் என்ன இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. புதிதாகப் பொறுப்பேற்கும் சபாநாயகரை வாழ்த்திப் பாராட்டும்போது, அவர் ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்று கூறுவதும், செயல்படுவார் என நம்புகிறோம் என மொழிவதும் இயற்கையான ஒன்றாகும். அப்படி நான் வாழ்த்திப் பாராட்டிப் பேசும்போதுதான் பிடில் என்னும் இசைக்கருவி பற்றிக் குறிப்பிட்டு, அதில் உள்ள "வில்" போன்ற கருவியை இருபுறமும் இழுத்திடும் போது இனிய இசை கிளம்புவது போல இந்த மன்றத்தில் சபாநாயகர், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இரண்டுக்குமிடையே விளங்கிட வேண்டுமென்று குறிப்பிட்டேன். இறுதியாகப் பேசிய முதல்வர் எம்.ஜி.ஆர். "பிடிலை வாசிக்கத் தொடங்குவதற்கு முன்பு

கம்பிகளை மீட்டி சுருதி சேர்த்துக்கொள்ள வேண்டு" மென்று சொன்னதுகூட சபா நாயகருக்காகக் கூறப்பட்டதே தவிர, அதிலே வாதப் பிரதிவாதங்கள் எதுவுமே இல்லை!

இருபுறமும் இனிய இயல்புடன் சபாநாயகர் திகழ்ந்திட வேண்டுமென்பதற்காக நான் சொன்ன அந்த உவமையைச் சரியல்ல என்று கூறி எம்.ஜி.ஆர். விளக்கமளித்திருந்தால், அதுபற்றி இந்தச் "சின்ன அமைச்சர்" ஆகா! ஊஹூ! என்று மார்தட்டிக் கொண்டு எம்.ஜி.ஆரின் புலமையையும், திறமையையும் பாராட்டியிருக்கலாம். ஆனால் நான் கூறிய உவமைக்கு மேலும் அழகு சேர்க்கிற வகையில்தான் முதல்வர் எம்.ஜி.ஆர். "பிடிலை வாசிப்பதற்கு முன்பு சபாநாயகர் சுருதி சேர்த்துக் கொள்ளவேண்டும்" என்று கூறியதாக நான் கருதுகிறேன்.

இப்படிப்பட்ட விஷயங்களை மேலும் நீட்டிக் கொண்டே போகலாம்!

"சுருதி சேர்த்துக் கம்பிகளை மீட்டித்தான் பிடிலை வாசிக்க வேண்டுமென்றாலும்கூட, இசைக் கச்சேரிக்கு வருவதற்கு முன்பு அந்தப் பிடிலை, நல்லதோர் பெட்டியில் வைத்துப் பத்திரமாகக் கொண்டு வரவேண்டும்."

இப்படியும் இன்னொருவர் பேசலாம்!

"நாம் வீணையும் நாதமும் போல் ஆகிவிட்டோம்" என்று காதலன், காதலியைப் பார்த்துச் சொல்வதாக வைத்துக் கொள்வோம்! உடனே, காதலி, அவனைப் பார்த்து "கம்பிகளை யெல்லாம் மீட்டி, சுருதி சேர்த்துவிட்டீர்களா?" என்று கேட்பாளேயானால், இவளிடம் போய் இந்த உவமையை சொன்னோமேயென்று தனக்குத்தானே நொந்துகொள்வான் அந்தக் காதலன்! சில உவமைகளை நீட்டிக்கொண்டே போனால் "விரசம்" தலை காட்டத் தொடங்கிவிடும்.

"நீலக்கடலினிலே - நின்றன்
நீண்ட குழல் தோன்று தடி!"

இது பாரதி பாட்டு! "நீண்ட குழலை நீலக் கடலோடு ஒப்பிடுவதானால், அந்தக் குழலில் திமிங்கிலங்களும், சுறா மீன்களும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமே"யென்று ஒருவன் சொல்வானேயானால் - பாரதி உயிரோடிருந்தால் அதைக் கேட்டுத் தன் தலையிலே மூன்று தடவை அடித்துக்கொள்வார்!

"மனம் கவர்ந்தவளே! மாம்பழ மேனி
உனக்கு!"

என்று வர்ணிக்கும் ஆண் மகனிடம் "அறுத்துப் பார்த்தால் ரத்த மல்லவா கொட்டும்!" என்று அவள் விடையளித்தால், அந்தக் கற்பனையாளன் இடம் தவறி தன்னுடைய வர்ணனையைப் பயன்படுத்திவிட்டதாகத்தானே வருந்துவான்!

தமிழ் கற்ற அந்த அமைச்சர், தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட தலைவரால் தனக்கு ஏதோ பயன் கிடைத்தது என்றால், அந்தத் தலைவரைப் புகழ்வதோடு நிறுத்திக் கொள்வது நல்லது.

அதை விடுத்து நடக்காத விவகாரங்களை கற்பனை நாடகங்களாக்கிக் கூட்டங்களில் கைதட்டல் பெற முயற்சிப்பது கேலிக்குரிய ஒன்றாகும்.

> "எதிர்க்கட்சியில் கருணாநிதியின் நண்பர்கள் வாதம் புரிந்து அடிக்கடி தோல்வி அடைகிறார்கள். அப்படித் தோல்வி அடையும்போது அமளியின் மூலமாக சட்டமன்ற அமைதியைச் சீர்குலைக்க எண்ணுகிறார்கள்"

இதுவும் அமைச்சரின் தாம்பரத்துப் பேச்சுத்தான். தரக்குறைவான பேச்சுக்கூட! உண்மைக்கு மாறானதும்கூட!

இந்தியை ஆதரிப்போம் என்று நண்பர் மனோகரன் பாராளு மன்றத்திலே பேசியதை மன்றத்தில் கூறியபோது, அதை மனோகரன் மறுத்து விளக்கமளித்தார். உடனே பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தை நான் மன்றத்திலேயே படித்துக் காட்டினேன், ஆதாரப்பூர்வமாக!

வாதம் புரிந்து தோல்வி அடைகிறவர்கள் யார் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை!

இப்படி அடிக்கடி வாதம் புரிந்து ஆளுங்கட்சியினர் அடைகிற தோல்வியை எப்படியாவது மறைக்கத்தான் அந்த அமைச்சர், தாம்பரத்தில் சொற்சிலம்பம் ஆடிக் காட்டியிருக்கிறார்!

செய்திகளை, திரிக்காமலோ மறைக்காமலோ வெளியிடுகிற ஏடுகள் தமிழ்நாட்டில் இல்லாமல் இல்லை. அவைகளைப் படித்துப்பார்த்து மக்கள் உண்மைகளைத் தெரிந்து கொண்டு தானிருக்கிறார்கள்.

அமைச்சர்கள், சட்டமன்ற நிகழ்ச்சிகளைத் திரித்துப் பேசி, தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது.

அன்புள்ள,

மு.க.

28-07-1977

449. "விடுதலை"யின் வியப்பு!

உடன்பிறப்பே,

விடுதலை நாளேடு 28-7-1977 அன்று முதல் பக்கத்தில் ஒரு விளிம்பு கட்டிய செய்தியை வெளியிட்டுத் தனது வியப்பைத் தெரிவித்துள்ளது.

கழக ஆட்சி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்கள் உடனடியாக 'மிசா'விலே கைது செய்யப்பட்டு- அப்படிக் கைதானவர்களில் சென்னைச் சிறையிலே இருந்தோர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர் என்பது குறித்து நீதிபதி திரு. இஸ்மாயில் அவர்கள் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு, நாள்தோறும் பலசாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அந்த விவரங்கள் எல்லா ஏடுகளிலும் வெளிவருகின்றன அல்லவா? அது குறித்து இன்றைய ஆளுங்கட்சியின் ஏடுகள் சிறிய அளவுச் செய்திகள் கூட வெளியிடுவதில்லையே, அது ஏன்? என்பதுதான் 'விடுதலை'யின் வியப்புக்குக் காரணம்!

> "இது கட்டுப்பாடான இருட்டடிப்பா? அல்லது யார் மீதாவது காட்டப்படும் அனுதாபமா?"

என்றும் 'விடுதலை' வினா எழுப்பியுள்ளது! வினா எழுப்பிய தோடு நில்லாமல் "இப்படி அந்த ஏடுகள் நடந்து கொள்வது அவர்களது போக்கிற்கும் மனோ நிலைக்கும் ஓர் அடையாளம் என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்வார்கள்" என்றும் விளக்க மளித்துள்ளது. நிர்வாகத்தில் ஊழலை ஒழித்து நீதியை நிலை நாட்டுவோம் என்று "மலைப் பிரசங்கம்" செய்யும் கட்சிக்காரர்கள், சிறையில் நடந்த கொடுமைகளைப் பற்றி- ஒரு உயர்நீதிமன்ற நீதிபதிமுன் நடக்கும் விசாரணை பற்றி எதுவும், தங்கள் ஏடுகளில் வெளியிடாததன் மர்மத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லையே என்று விடுதலை ஆச்சரியத்தைக் காட்டியிருக்கிறது.

இதில் வியப்படைவதற்கு எதுவுமே இல்லை என்பதுதான் என் கருத்து!

தங்களை உத்தமபுத்திரர்களைப் போலவும், உண்மையின் உருவங்களைப் போலவும், நேர்மையின் வடிவங்களைப் போலவும், நீதியின் நிழல்களைப் போலவும் காட்டிக் கொள்வதற்காகச் சிலர் முயற்சிக்கிறார்கள் என்பதைத் தவிர, அவர்களின் மனச்சாட்சிக்கே தெரியும். அவர்கள் எந்த அளவுக்கு ஊழல்பேர்வழிகளுக்குப் புகலிடம் வழங்கி வருகிறார்கள் என்பதும், எந்த அளவுக்கு அநீதிக்குத் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதும்!

என்னவோ, நல்லவேளையென்பார்களே அதைப்போல ஜனதா கட்சி, மத்தியிலே அரசு அமைத்த காரணத்தால் புதிதாக வந்த நமது ஆளுநர் அவர்கள் இந்த விசாரணைக் கமிஷனுக்கு ஆணை பிறப்பித்தார். இல்லாவிட்டால், சென்னை சிறைக் கொடுமைகளும், சிட்டி பாபு சித்ரவதைக்கு ஆளாகிய நிகழ்ச்சிகளும் நாட்டுக்குத் தெரியாமலே போயிருக்கும்.

ஜஸ்டிஸ் இஸ்மாயில் அவர்களின் விசாரணைக் கமிஷன் அமைந்தபிறகு, அ.தி.மு.க. கட்சி ஆட்சிக்கு வந்தது. விசாரணை யின்போது சாட்சிகளைக் கலைக்கிற முயற்சிகளில் ஈடுபடக்கூடும் என்றும், ஈடுபடுகிறார்கள் என்றும் ஆதாரத்துடன் சுட்டிக்காட்டி, அத்தகைய அதிகாரிகளை விசாரணை முடியும் வரையில் தற்காலிக வேலை நீக்கம் செய்திட வேண்டுமென்றும் எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையில் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் முறையீடு ஒன்று அனுப்பி வைத்தேன். அதுபற்றி விசாரித்து நடவடிக்கை மேற்கொள்வதாக நமது கழகத் தலைமை நிலைய வழக்கறிஞரிடம் எம்.ஜி.ஆர். கூறினார் என்றாலும் கூட, அதன் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்போது விசாரணையும் முடியும் கட்டத்திற்கு வந்துவிட்டது. விசாரணைத் தொடக்கத்தின்போதே நாம் வைத்த கோரிக்கையை ஏற்று அந்தச் சிறை அதிகாரிகளைத் தற்காலிக வேலை நீக்கம் செய்ய முதல்வர் முன் வராததில் இருந்தே, சிறையில் நடந்த கொடுமைகளைப் பற்றி விசாரணை நடைபெறுவதில் இந்த ஆட்சி யாளர்கள் அக்கறையற்று இருக்கிறார்களோ என்ற சந்தேகம்தான் ஏற்படுகிறது!

அவசரகாலச் சட்டத்திற்கு ஆலவட்டம் சுழற்றியவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள்!

அரசியல்வாதிகளை எத்தகைய இழிவுக்கும், கொடுமைக்கும் ஆளாக்கலாம் என்ற மூர்க்கத்தனத்தோடு பாய்ச்சல் நடத்திய நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்கு பக்க பலமாக இருந்ததுதான் இன்றைய ஆளுங்கட்சி!

எனவே, இந்த ஆட்சியாளர்கள் நெருக்கடி காலக் கொடுமை களை விசாரித்து அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா? என்பது ஐயப்பாட்டிற்கு உரியதேயாகும்.

ஆளுபவர்களே அவ்வாறு இருக்கும்போது, அவர்களின் கட்சிஏடுகள் சென்னை சிறைக்கொடுமை பற்றி அக்கறை காட்டவில்லையே என்று 'விடுதலை' ஏடு வியப்படையத் தேவையில்லை என்பதே என் கருத்து!

அன்புள்ள,

மு.க.

29-07-1977

450. நெருப்பு வளையம் நீங்கிட...!

உடன்பிறப்பே,

இந்தியத் திருநாடு முழுவதும் மதுவிலக்கினை நடை முறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மத்தியஅரசின் அளவில் மேற்கொள்ளப்படுவதற்கான சூழ்நிலைகள் தோன்றியுள்ளன. இந்தியத் தலைமை அமைச்சர் மொரார்ஜிதேசாய் தெரிவித்துள்ள கருத்துகள் நமக்கு நம்பிக்கையூட்டக்கூடியவை மட்டுமல்ல, வரவேற்கத் தக்கவைகளுமாகும். இந்தியா முழுமையும் மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவராமல், தமிழ்நாடு, குஜராத் போன்ற ஓரிரு மாநிலங்களில் மட்டும் அந்தக் கொள்கையில் வெற்றிபெற இயலாது என்பதைப் பல நேரங்களில் அண்ணா அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மது விலக்குக் கொள்கை சட்டப்படி நிறைவேற்றப்பட்டால் மட்டும் போதாது என்பதற்கு எடுத்துக்காட்டாக 1968-ஆம் ஆண்டு தமிழகத்தில் "வார்னீஷ்" என்னும் போதைப் பொருளை அருந்தி நூற்றுக்கு மேற்பட்டோர் மாண்டு போன நிகழ்ச்சியும், அண்மையில் குடியரசுத்தலைவர் ஆட்சியிலே கூட அதேபோன்ற ஒரு பயங்கர நிகழ்ச்சியும் நடைபெற்றதை நினைவிற் கொள்ளவேண்டும்.

1971-ம் ஆண்டு தமிழகச்சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கையினை வைத்து மதுவிலக்குச் சட்டம் செயற்படுவதை ஒத்திவைப்பதாகக் குறிப்பிட்டபோது எடுத்துச்சொன்ன வாசகங்களை நீ மறந்திருக்க மாட்டாய்.

> "உத்தமர் காந்தியடிகளின் ஒப்புயர்வற்ற திட்டங்களில் ஒன்றான மதுவிலக்குத் திட்டத்தை, அவரது கொள்கைகளைப் பொன்னே போல் போற்றி வந்த பல்வேறு மாநிலங்கள் படிப்படியாகக் கைவிட்டு இறுதியில் தென்னகத்தைப் பொறுத்தவரையில் ஆந்திரத்திலும், கேரளத்திலும், கர்நாடகத்திலும்,

அருகிலுள்ள புதுவையிலும் மதுவிலக்குக் கொள்கை பிடிப்பற்றுப் போய்விட்ட நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி, தமிழகம் மாத்திரம் தனித்து நின்று மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்த இயலாமல் தத்தளிப்பதையும் சுட்டிக்காட்டி, அண்ணல் காந்தியின் மதுவிலக்குக் கொள்கையை அனைத்திந்திய அளவிலே ஏற்கவேண்டுமென்றும், அல்லது நமக்கு ஏற்பட்டுள்ள இழப்பினை ஈடுசெய்ய வேண்டுமென்றும் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறோம். புனித நோக்கத்தோடு, இந்தியப் புவி முழுவதும் எந்தக் கொள்கை விரிவாக்கப்பட வேண்டுமென்று கூறினோமோ, அந்தக் கொள்கை அவர் ஏந்திய கொடி நிழலில் அணிவகுத்து நின்ற அவர்தம் தானைத் தளபதிகளாம் மாநில முதல்வர்களாலேயே பின்பற்ற முடியாமல் போனது மட்டுமல்ல, மத்திய அரசினை நடத்தும் மகாத்மாவின் வாரிசுகளாலும் புறக்கணிக்கப்பட்டது வேதனை தரும் செய்தியாகும். கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ்நாடு எத்தனை நாளைக்குத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்?"

இந்திய நாடு முழுமையும் இந்தக் கொள்கை சட்டமாக்கப் பட்டால்தான், இந்தக் கொள்கையில் தீவிரம் காட்டுகிற இரண்டொரு மாநிலங்கள், சட்டத்தைப் பொறுத்தவரையிலாவது வெற்றியினைப் பெறமுடியும். சட்டத்துடன் நிறுத்தாமல், நாடு தழுவிய வகையில் மது விலக்குப் பிரச்சாரம் நடைபெற்று, மது அருந்துவோரிடையே நிலையான மன மாற்றத்தையும் ஏற்படுத்தியாக வேண்டும்.

டெல்லிப் பட்டினத்திலே கூடுகிற முதல்வர்களின் கூட்டத்திலே மொரார்ஜி அவர்கள், நாட்டோர் அனைவரும் மகிழத்தக்க வகையிலே இந்தியா முழுதும் முழுமையான மதுவிலக்கு நடைமுறைக்கு வரும் என்ற இனிய முடிவினைச் செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

தலைசிறந்த காந்தியவாதிகளில் ஒருவர் எனப் புகழப்படுகிற தேசாய் காலத்தில் அத்தகைய தித்திக்கும் செய்தியை எதிர்பார்ப்பதில் தவறில்லை.

"தீண்டாமை ஒழிப்பு" என்ற காந்தியடிகளின் கொள்கை எப்படி அனைத்திந்திய அளவில் சட்டமாக்கப்பட்டுள்ளதோ, அதேபோல் அவரது "மது விலக்குக் கொள்கையும்" சட்டமாக்கப்படுவதே நியாயமாகும்.

அதைச் செய்யாமல் இந்திய ஒருமைப்பாடு பற்றிப் பேசுவதிலும், அக்டோபர் இரண்டாம் நாள் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாக் கொண்டாடுவதிலும் அர்த்தமிருக்க முடியாது!

எனவே வரும் ஆகஸ்டு பதினைந்து முதல் அல்லது அக்டோபர் இரண்டாம் நாள் முதல் - அனைத்திந்தியாவிலும் மது ஒழிந்திட சட்டம் நடைமுறைக்கு வரட்டும்!

தமிழகத்தைச் சுற்றியுள்ள நெருப்பு வளையங்கள் நீக்கப் படட்டும்.

அன்புள்ள,

மு.க.

30-07-1977

451. சேலைச்சவால் வீரரும், சில செய்திகளும்!

உடன்பிறப்பே,

உலகம் சுற்றும் வாலிபன் படம் வெளிவரவே வராது! அப்படி வெளிவந்தால் நான் சேலை கட்டிக்கொண்டு முத்தம்மாளாகி விடுவேன் என்று ஒரு ஆண்மகன் ஊரெல்லாம் முரசு கொட்டிக் கொண்டிருந்தார். அரசியலில் இந்த மாதிரிப் பேச்சு எல்லாம் வேண்டாமென்று அவருக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் கேட்பதாக இல்லை.

உலகம் சுற்றும் வாலிபன் படம் வெளிவந்து திரையிடப் பட்டு விட்டது. வெளிவந்த நாளன்று எம்.ஜி.ஆரின் ரசிகர்கள் மதுரை மாநகரத்தில் ஒரு ஊர்வலமே நடத்தினார்கள். சேலை இங்கே! அந்த ஆள் எங்கே! என்பதுதான் ஊர்வலத்தின் முக்கிய முழக்கமாக இருந்தது.

அதன்பிறகு என்ன நடந்தது தெரியுமா? தான் கட்டியிருந்த வேட்டியையே சேலையாகப் பாவித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு அந்த வீர தீரப் பிரதாபர், உலகம் சுற்றும் வாலிபனைச் சுற்றி வந்து தெண்டனிட ஆரம்பித்து விட்டார். வெண்முத்துப் பல்வரிசை காட்டி, வெண்சாமரம் வீசி, அடிதொழுது ஆராதனை செய்யும் அடிமையாக, அந்த வீரர் ? தன் வீட்டுப் படிக்கட்டில் தவமிருப்பதுகண்டு உலகம் சுற்றிய வாலிபனுக்கு மனதிற்குள் மகிழ்ச்சியில்லாமல் இருக்குமா? தன்னிடம் தோற்றதுமில்லாமல் தொண்டு செய்யும் அடிமையாகிவிட்ட ஒரு வீரனை ? வீதிக்கு வீதி அழைத்துச் சென்று ஊர்மக்களுக்குக் காட்சிப் பொருளாகக் காட்டுதல், பழைய காலத்தில் வெற்றிபெற்றவர்களின் செயலன்றோ?

அவ்வாறே, தனக்கு எடுபிடியாகி விட்ட அந்த மனிதரை சென்னை நகர மக்களுக்குக் காட்டுகின்ற ஏற்பாட்டை நண்பர் எம்.ஜி.ஆர். செய்துள்ளார் போலும்!

அந்த சேலைச் சவால் மாவீரர், சென்னையில் சில இடங்களில் பேசியதாக நான் கேள்விப்பட்டேன். அந்த அபத்தங்களை, அடுக்கடுக்காகச் சொல்கிறேன் பார்!

தாலி அறுத்த விதவைகள் இட்லி கடை வைத்துத்தான் பிழைக்க வேண்டுமென்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி, பராசக்தி படத்தில் வசனம் எழுதியிருந்தார். ஆனால் அந்த அரசு விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் கொண்டு வந்துள்ளது.

இது அவரது பேச்சில் ஒரு பகுதி.

பராசக்தி படத்தில் அந்த வசனம் என்ன என்பதை முதலில் ஒழுங்காகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு இளம் விதவை, எந்தச் சூழ்நிலையில் அந்த வசனத்தைப் பேசுகிறாள் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். வாழ வழியின்றி இட்லி கடை வைத்துப் பிழைக்கிறாள் ஒருத்தி! அய்யோ! இட்லி கடையா வைத்திருக்கிறாய்? என்று உருக்கமாகக் கேட்கப்படும் கேள்விக்கு அவள் பதில் சொல்கிறாள் - என்ன பதில்?

என் செய்வது, தாலியறுத்தவர்களுக்கு தமிழ்நாட்டில் இதுதானே தாசில் உத்தியோகம்?

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு, தமிழ்நாட்டு விதவைகளின் வேதனைக்குரலை எதிரொலிப்பதுதான் அந்த வசனம்!

அதன் நயத்தையும், நிலைமையையும் புரிந்து கொள்ள முடியாத இந்த மேதை - விதவைகள் இட்லி கடை வைத்துத்தான் பிழைக்க வேண்டும் என்று நான் கொள்கை கொண்டிருந்ததாகச் சொல்லுகிறார்!

கழக ஆட்சிக் காலத்தில் ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் இயந்திரங்களை ஆயிரக்கணக்கில் வழங்கியதை அவர் மறந்து விட்டார் போலும்! இளம் விதவைகளைத் திருமணம் செய்து கொள்ள முன் வருகிற வாலிபர்களுக்கு அவர்களின் முற்போக்கு எண்ணத்திற்குப் பரிசாக ஐயாயிர ரூபாய் சிறுசேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டு, அது ஏழாண்டு காலத்தில் பத்தாயிர ரூபாய் அளவுக்கு அவர்களுக்குக் கிடைக்க வழி வகுக்கப்

பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டதையும் அவருக்கு யாரும் நினைவுபடுத்தவில்லை போலும்!

குற்றாலத்தில் பழத்தோட்டத்தில் அரசினர் தங்கும் விடுதி ஒன்று, கழக அரசு காலத்தில் கட்டப்பட்டதையும், அவரது கற்பனைக்கேற்றவாறும், அவரது தரத்திற்குத் தகுந்தவாறும் திரித்துக் கூறியுள்ளார்.

குற்றாலம், சுற்றுலாப் பயணிகளுக்கென அமைந்துள்ள இடங்களில் ஒன்று! அதுமட்டுமல்ல, வெளியூர்க்காரர்கள் அங்கு சாரல் விழும் காலத்தில் ஏராளமானோர் போய்த் தங்குவதும் உண்டு.

அரசினர் தங்கும் விடுதி, அங்கு ஏற்கனவே ஒன்று இருந்த போதிலும் சில நேரங்களில் அங்கும் நெருக்கடி ஏற்பட்டு விடுகிற காரணத்தால் பழத்தோட்டம் அருவிக்குப் பக்கத்தில் ஒரு விடுதி கட்டுமாறு அனுமதிக்கப்பட்டது.

அந்த பழத் தோட்டம் பெரும்பகுதி, தனியார் ஒருவருக்குச் சொந்தம். ஒரு சிறு பகுதிதான் அரசு இலாக்காவுக்குச் சொந்தம். அந்தச் சிறு பகுதிக்கிடையேதான் தங்கும் விடுதியொன்று இரண்டு அறைகள் கொண்டதாகக் கட்டப்பட்டது. அந்தப் பகுதிக்குச் செல்ல பல ஆண்டு காலமாகவே சாலை இருக்கிறது! புதிதாகச் சாலை எதுவும் போடப்படவில்லை. 1975-ஆம் ஆண்டு முடிய அந்த விடுதியிலிருந்து அங்கே சற்றுத் தொலைவில் உள்ள அருவிக்குச் செல்லும் கரடுமுரடான பாதை மாற்றப்பட்டு தார் ரோடு போடப்படவில்லை யென்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

ஒரு அமைச்சரின் மனைவி சொன்னார். அதற்காக அங்கே பங்களா கட்டப்பட்டது என்றும் - மும்தாஜ்க்காக ஷாஜகான் தாஜ்மகால் கட்டியது போல என்றும் - அந்த சேலைச் சவால் மனிதர் பேசினாராம்! பாவம், அவர் தாஜ்மகாலைப் பார்த்ததில்லை போலும்! தாஜ்மகாலைப் பார்த்திருந்தால், குற்றாலத்தில் கட்டப்பட்ட அரசினர் விடுதியை அத்துடன் ஒப்பிட்டிருக்கமாட்டார்! தாஜ்மகால் புகைப்படங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவற்றையாவது அவரிடம் யாராவது காட்டுவது நல்லது!

குற்றாலத்தில் அமைந்துள்ள புதிய விடுதி - மதுரையில் அவர் கட்டியுள்ள புதிய மாளிகையில் நாலில் ஒன்று கூட இருக்காது என்பதை - மதுரைக்கும் குற்றாலத்திற்கும் சென்று இரண்டையும் பார்ப்பவர்கள் நிச்சயம் உணர்ந்து கொள்வார்கள்.

உடன்பிறப்பே, அந்த விடுதிக்கு ஒருமுறை நான் என் மனைவியுடன் தூத்துக்குடி கூட்டத்தை முடித்துவிட்டு இரவு ஒரு மணி அளவில் சென்றேன். மறுநாள் அங்கிருந்து புறப்பட்டு விட்டேன்.

மொத்தத்தில் இரண்டு அல்லது மூன்று முறை அந்த விடுதிக்கு நான் சென்றிருக்கக் கூடும்! தங்கியதோ நாட்கணக்கில் அல்ல - மணிக்கணக்கில்தான்!

அதே விடுதியைப் பற்றி, இதே மனிதர் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு என்ன பேசினார் தெரியுமா? குற்றாலம் பழத் தோட்டத்தில் கருணாநிதி மனைவிக்கென்று சொந்தத்தில் பங்களா கட்டப்பட்டிருக்கிறது என்று பேசிக்கொண்டிருந்தார்! இப்போது அது அரசாங்கத்திற்குச் சொந்தமானது என்ற உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

தாஜ்மகாலாம்! மனைவி பேச்சைக் கேட்டுக் கட்டப்பட்டதாம்! அவரவர் குடும்பத்துப் பழக்கம். அவர்களைப்போலவே மற்றவர்களையும் நினைக்கச் சொல்கிறது - அல்லது பேசச் சொல்கிறது!

மதுரையிலே மேம்பாலத்திற்குப் பெயர், அவர் திருநாமத்துடன்!

மதுரை மாநகராட்சி நடமாடும் மருத்துவமனை வண்டியிலே அவர் பெயர்தான் கொட்டை எழுத்துக்களில்!

மதுரை மாநகராட்சிக்கு பல லட்ச ரூபாய் செலவிலே கட்டப்பட்ட மாநகராட்சி மன்ற கட்டிடமும் அவர் பெயரால் விளங்கவேண்டுமென்று முயற்சித்தார். அதற்கு அறிஞர் அண்ணா மன்றம் என்று பெயரிடப்பட்டதிலேதான் மிகவும் ஆத்திரம்! பழைய நகராட்சி பைல்களைப் பார்த்தால் தெரியும் அந்தக் கதை!

இவர் பேசுகிறார் கழகத்தின் முன்னாள் அமைச்சர்களின் பெயர் கட்டிடங்களுக்கும், வளைவுகளுக்கும் வைக்கப்பட்டதைக் கண்டித்து!

பூம்புகாரும், கட்டபொம்மன் கோட்டையும் மக்களின் வரிப்பணம் வீணாகச் செலவிடப்பட்ட இடங்களாம்! அதற்கு அடிக்கல் நாட்டியவர்கள், திறந்து வைத்தவர்கள் பெயர்கள் அங்கு இருக்கக் கூடாதாம்! இதுவும் அவரது எரிச்சல் மொழிகள்தான்.

பூம்புகாரில் ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு இலவச வீடுகள்! அவர்கள் தொழில் சிறக்கப் படகுகள்! பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் வாரிசுகளுக்கு இலவச வீடுகள்! இவைகள் எல்லாம் அவர் விழிகளுக்குத் தெரியவில்லையா? அல்லது செவிகளுக்கு எட்டவில்லையா?

தெரியாமலா இருக்கும் - எல்லாம் தெரிந்துதான் இருக்கும்! தன் எஜமானர்களைத் திருப்திப்படுத்தி துண்டுச் சீட்டுப் பரிசுகளைப் பெற ஏதாவது பேசவேண்டும் - அல்லது ரசிகர்களின் கையொலியைப் பெறவேண்டும் - அதற்காகப் பேசித் தொலைக்கிறார், பாவம்!

படம் வராது! வந்தால் சேலை கட்டிக் கொள்கிறேன் என்ற பாணியில் பேசுவதுதான் இதுவும்!

இவர் பேச்சைப் பொருட்படுத்திப் பதில் கூறியிருக்க மாட்டேன். பேசிய இடம் முக்கியமான இடம். அதாவது தலைநகரமாம் சென்னை என்பதால் - உனக்கும் விளக்கம் கிடைக்கட்டுமென்பதற்காக இந்தக் கடிதம் எழுதினேன்.

அன்புள்ள,

மு. க.

01-08-1977

452. சிந்தித்தால் புரியும்!

உடன்பிறப்பே,

சட்டப் பேரவையில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப் பற்றியும், உனக்கு எழுதுகிற கடிதத்தில் குறிப்பிடுவது அவசியமெனக் கருதுவதால் இன்று அவற்றில் சிலவற்றைக் கூறுகிறேன். பேரவை உறுப்பினராக இருக்கிற நமது கழகப் பொருளாளர் சாதிக் பாட்சா அவர்கள் நேற்று காலையில் அவை நிகழ்ச்சியில், நிதி அமைச்சரைப் பார்த்து ஒரு விளக்கத்தைக் கேட்டார். வருவாய்த்துறை, வணிக வரிகள் பற்றிய மானியக் கோரிக்கை விவாதம் நேற்று 4-8-1977 காலை நடைபெற்றது. அதனையொட்டித்தான் நண்பர் சாதிக் அவர்கள் நிதி அமைச்சர் மனோகரன் அவர்களிடத்திலே ஒரு முக்கியமான விளக்கத்தைக் கோரினார்.

நிதிநிலை அறிக்கையில் ஆண்டுக்கு ஒரு லட்சத்துக்குக் குறைவாக விற்பனையுடைய சிறு வணிகர்களுக்கு ஒட்டு மொத்தக் கணிப்பு முறை கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வணிகர்களுக்கு இருக்கிற சந்தேகம்; இப்போது ஐம்பதாயிர ரூபாய் வரையில் டர்ன் ஓவர் இருந்தால் விற்பனை வரி விலக்கு இருக்கிறது. இந்த ஐம்பதாயிர ரூபாயை ஒரு லட்சம் என்று உயர்த்தப் போகிறீர்களா? அல்லது ஒட்டு மொத்தக் கணிப்பு முறைப்படி Compounding System டர்ன் ஓவர் எவ்வளவு இருந்தாலும் வரிபோடுகிற முறையைக் கொண்டு வரப் போகிறீர்களா? காம்பவுண்டிங் முறை, வியாபாரிகளுக்கு மிகுந்த தொல்லையை ஏற்படுத்தக்கூடும்.

ஆகவேதான் கேட்கிறேன், இப்போது ஐம்பதாயிர ரூபாய் வரை வரியில்லை என்றிருப்பதை ஒரு லட்சம் ரூபாய் வரை வரியில்லை என்று உயர்த்தப் போகிறீர்களா? அல்லது காம்பவுண்டிங் முறைப்படி வரி, விதிக்கப் போகிறீர்களா?

இந்த கேள்விக்கு நிதி அமைச்சர் மனோகரன் அளித்த பதில் பின்வருமாறு:-

மன்னிக்க வேண்டும். ஐம்பதாயிர ரூபாய்தான்! ஒரு லட்சம் இல்லை! ஆகவே உங்களுக்கு அந்தச் சந்தேகம் வரவேண்டிய அவசியமில்லை.

இதுதான் நிதியமைச்சரின் பதில்! உடன்பிறப்பே, இந்தப் பதிலுக்குப் பிறகு மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டன. மானியக் கோரிக்கைகள் நிறைவேறியவுடன் அவையை மறுநாள் காலை வரையில் அவைத்தலைவர் ஒத்திவைத்து விட்டார்.

நான் நிதிநிலை அறிக்கையைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறேன் - திருப்பித் திருப்பிப் படிக்கிறேன் - நான்தான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்று பக்கத்திலிருந்த நண்பர் ப.உ.ச. அவர்களிடமும் கேட்டுப் பார்க்கிறேன். நிதிநிலை அறிக்கையில் நிதி அமைச்சர் மனோகரன் என்ன குறிப்பிட்டிருக்கிறார்?

வணிகர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கவும், வரி வசூலைப் பெருக்கவும் அதே நேரத்தில் லஞ்ச ஊழலை ஒழிக்கவும் விற்பனை வரி வழி முறைகளில் சில மாறுதல்கள் செய்ய முடிவு எடுத்துள்ளோம். ஆண்டுக்கு ஒரு லட்சத்திற்கு குறைவாக விற்பனை உடைய சிறு வணிகர்களுக்கு ஒட்டுமொத்தக் கணிப்பு முறை கொண்டுவரப்படும்.

இப்படி மிகத் தெளிவாக நிதிநிலை அறிக்கையின் முப்பத்தி ஆறாம் பக்கத்தில் 54-வது பாராவில் குறிப்பிடப்பட்டு அந்த அறிக்கையைத்தான் அமைச்சர் மனோகரன், ஜூலைத் திங்கள் 25-ஆம் நாள் பேரவையிலே படித்திருக்கிறார். ஆனால் இன்று நண்பர் சாதிக் கேட்ட விளக்கத்திற்கு விடையளிக்கும் போது லட்ச ரூபாய் இல்லை! ஐம்பதாயிரம் தான்! ஆகவே உங்களுக்கு அந்தச் சந்தேகம் வரவேண்டிய அவசியமில்லை என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

நிதிநிலை அறிக்கையில் படித்த வாசகத்திற்கும் - இப்போது நிதி அமைச்சர் அளித்துள்ள விளக்கத்திற்கும் இடையில் ஏன் இந்த முரண்பாடு என்று எனக்குப் புரியவில்லை.

இப்போது டர்ன் ஓவர் ஐம்பதாயிர ரூபாய் வரையில் உள்ள வியாபாரிகளுக்கு வரியில்லை! அந்த ஐம்பதாயிரத்தை லட்ச ரூபாய் என்று வரம்பை உயர்த்தி, லட்ச ரூபாய் வரை டர்ன் ஓவர் ஆண்டொன்றுக்குக் காட்டுகிற வியாபாரிக்கு வரியில்லை என்று கூறுகிறீர்களா? அல்லது லட்ச ரூபாய்க்குக் குறைவாக விற்பனை உடைய வியாபாரிக்குக் காம்பவுண்டு முறையில் வரி வசூலிக்கப் போகிறீர்களா? என்ற மிக முக்கியமான ஐயப்பாடு எழுப்பப்பட்டுள்ளது. ஆனால் நிதி அமைச்சர், அதனைப் புரிந்து கொள்ளுகிற ஆற்றலற்றவர் என்று நான் கூறமாட்டேன். எனினும் அவர் கூறிய பதில், குழப்பத்திற்கு மேல் குழப்பமாகப் போய்விட்டது!

ஒரு லட்சம் இல்லை! ஐம்பதாயிர ரூபாய் தான்! உங்களுக்குச் சந்தேகம் வரவேண்டிய அவசியமே இல்லை என்று அமைச்சர் கூறியிருப்பது அவரே சபையின் முன்னால் படித்த வரவு செலவுத் திட்ட அறிக்கைக்கு நேர் எதிரான கருத்தாக அமைந்திருக்கிறது.

ஒட்டு மொத்த கணிப்பு முறை, ஐம்பதாயிர ரூபாய்க்குக் கீழ் விற்பனை செய்யும் வியாபாரிக்குக் கொண்டு வரப்படும் என்று நிதி அமைச்சர் கூறுகிறாரா? அல்லது நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு லட்ச ரூபாய்க்கு குறைவாக விற்பனை உடைய வியாபாரிக்கு, ஒட்டு மொத்தக் கணிப்பு முறை Compounding System கிடையாது என்று சொல்லுகிறாரா?

ஏற்கனவே கழக அரசில் ஐம்பதாயிர ரூபாய் வரையில் ஆண்டொன்றுக்கு விற்பனை செய்யும் வியாபாரிகளிடம் விற்பனை வரி அதிகாரிகள் போகவே தேவையில்லை.

இந்த அரசின் நிதிநிலை அறிக்கைப்படி லட்ச ரூபாய்க்குக் குறைவாக ஓராண்டுக்கு விற்பனை செய்யும் வியாபாரிகளிடம் காம்பவுண்டு முறையில் விற்பனை வரி வசூல் உண்டு!

நிதி அமைச்சர் 4-8-1977 அன்று நண்பர் சாதிக்கின் கேள்விக்குப் பதில் அளித்துள்ள அடிப்படையில் ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிர ரூபாய் விற்பனை செய்யும் வியாபாரிகளிடம் மட்டுமே காம்பவுண்டு முறையில் வரி வசூலிக்கப்படும் என்று புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது!

இப்போது சிறு வியாபாரிகளிடம் ஏற்பட்டிருக்கிற அச்சமே, கழக அரசு ஐம்பதாயிர ரூபாய் விற்பனை செய்பவர்களுக்கு அளித்திருந்த வரிவிலக்கு நீடிக்காமல் போய்விடுமோ என்பதுதான்!

என்ன உடன்பிறப்பே! உனக்கு இது ஒன்றும் புரிய வில்லையா? கொஞ்சம் சிக்கலான பிரச்சினை தான்! சிந்தித்தால் புரியும்! வார்த்தைகளில் சித்து விளையாடி, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அவசரப்பட்டுப் பேசுகிறவர்களுக்கு அவ்வளவு எளிதாகப் புரியாதுதான்!

நீ, சிந்திக்கத் தெரிந்த உடன்பிறப்பாயிற்றே - கொஞ்சம் சிரமப்பட்டால் புரிந்து கொள்ளலாம்.

அன்புள்ள,

மு. க.

05-08-1977

453. காலம் மாறுகிறது!

உடன்பிறப்பே,

கடந்த ஆண்டு அசாம் மாநிலத்தில் கவுகத்தி என்னுமிடத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் மாநாடு நடைபெற்றதல்லவா? உனக்கு சரியாக நினைவுபடுத்த வேண்டுமானால், ஒரு முக்கியமான செய்தியையும் குறிப்பிடுகிறேன். அந்த மாநாட்டிலே பேசும்போதுதான் இந்திராகாந்தி அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேசுவதற்குத் தனக்குத் தடையில்லை என்பது போல ஒரு குறிப்புக்காட்டினார். அந்தப் பேச்சினையொட்டி எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு என் பெயரால் ஒரு அழைப்பு விடுத்து, டெல்லியில் நண்பர் செழியன் அவர்களின் இல்லத்தில் அத்தகைய கூட்டமொன்றும் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அதனைப் பயன்படுத்திக்கொண்டு பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டிருக்குமேயானால், இன்றைக்கு உருவாகியுள்ள எத்தனையோ சங்கடமான சூழ்நிலைகளுக்கும், அவப்பெயருக்கும் இந்திராகாந்தி அம்மையார் ஆளாகாமலே நல்லதோர் சமரச ஏற்பாடு உதயமாகியிருக்கக்கூடும். தான், கொண்டதே கோலம்-நினைத்ததே முடிவு என்ற எதேச்சாதிகாரப் போக்கினால் இன்றைய தினம் அந்த அம்மையார் உலகத்தின் முன்னால் வேதனையுடன் நின்று கொண்டிருக்கிறார்கள். அவரால் நாட்டுக்கும், குறிப்பாக நமக்கும் தரப்பட்ட தொல்லைகளின் காயங்கள் இன்னும் ஆறிட வில்லை. இருந்தபோதிலும் அந்த அம்மையாருக்கு ஏற்பட்டுள்ள வேதனைகளை எண்ணும்போது, நமக்குப் பழிவாங்கும் உணர்ச்சி தலை தூக்காமல் பரிதாப உணர்வே மேலிடுகிறது.

நான், எதையோ உனக்கு எழுதத் தொடங்கி வேறு எதையோ எழுதிக்கொண்டு போகிறேன். அசாமில் - கவுகத்தியில் நடைபெற்ற அந்த மாபெரும் மாநாட்டைப் பற்றிப் பல சுவையான ? தகவல்கள் வெளிவந்துள்ளன.

அந்த மாநாட்டுக்கு அரசாங்கப் பணம் ஐம்பத்தி ஏழு கோடி ரூபாய் செலவிடப்பட்டது என்ற ஒரு குற்றச்சாட்டை அசாம் மாநிலத்து ஜனதா கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இருபதுக்கு மேற்பட்டோர் மத்திய அரசிடம் தந்துள்ளனர். இந்தக் குற்றச்சாட்டு பற்றி, மத்திய அரசு அசாம் அரசிடம் விளக்கம் கேட்டது. அதற்கு விளக்கமளிக்கும் விதத்தில் அசாம் அரசாங்கம், எண்பது பக்கம் கொண்ட ஒரு கடிதத்தை மத்திய அரசின் உள்துறை அமைச்சர் சரண்சிங்கிற்கு அனுப்பியுள்ளது.

அதில், ஐம்பத்தி ஏழு கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகக் கூறப்படுவது தவறு என்று விளக்கிய அசாம் அரசு, எவ்வளவு செல வழிக்கப்பட்டது என்பதற்கான விவரத்தையும் குறிப்பிட்டுள்ளது.

அந்த விவரத்தைப் பார்க்கும்போது "சே! இவ்வளவுதானே! இதற்கா இவ்வளவு தடபுடல்?" என்று எண்ணத் தோன்றுகிறதா என்றால் அதுதான் இல்லை!

காங்கிரஸ் மாநாட்டுக்காக கவுகத்தியில் அரசாங்கப் பணம் ஐந்து கோடியே முப்பத்தி மூன்று லட்ச ரூபாய் செலவிடப்பட்டதாக அந்த அரசு கணக்கு கொடுத்துள்ளது.

ஐந்து லட்சம், பத்து லட்சமல்ல! ஒரு அரசியல் கட்சியின் மாநாட்டுக்கு அரசாங்கத்தின் பணம் ஐந்து கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

இன்னும் விரிவான விவரங்களைத் தருகிறார்கள், பார்!

தற்காலிக நிர்வாக ஏற்பாடுகளுக்காக சுமார் பத்து லட்ச ரூபாய்! அதுவும் அரசின் பணம்தான்!

காங்கிரஸ் மாநாட்டுக்காக நடைபெற்ற பொருட்காட்சியிலும் பங்கு பெற்று, விளம்பரங்களும் அளித்த வகையில் அரசாங்கத்தின் பல்வேறு துறைகளுக்கும் ஏற்பட்ட மொத்தச் செலவு சுமார் முப்பத்தி இரண்டு லட்ச ரூபாய்!

இந்திரா காந்தி தங்குவதற்காக ஒரு விடுதி கட்டப்பட்டது! மாநாட்டுக்கு வந்திருந்த பிரதமருக்கு அரசாங்கத்தால் கட்டப்பட்ட அந்த விடுதிக்கு அப்படியொன்றும் அதிகச் செலவாகி விடவில்லை. மிகக் குறைவாக ? இருபத்தி ஐந்து லட்ச ரூபாய்தான் ஆகியிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பரூவா அவர்கள் தங்குவதற்கும் அந்த மாநாட்டையொட்டி அரசின் செலவில் பத்து லட்ச ரூபாய்க்கு ஒரு தங்கும் விடுதி கட்டப்பட்டது.

பிரதமர் தங்கிய விடுதிக்கும், காங்கிரஸ் தலைவர் தங்கிய விடுதிக்கும் படுக்கைகள், மேசைகள், நாற்காலிகள் போன்றவற்றிற் காக ஐந்து லட்சத்துப் பதினெட்டாயிர ரூபாய் அரசாங்கச் செலவு!

மாநாட்டுக்கு லாரிகள், தண்ணீர் வசதி வாகனங்கள் வாங்கவும், ஏற்பாடு செய்யவும் அசாம் அரசும், கார்ப்பரேஷன் மூலமும் செலவிடப்பட்ட தொகை அறுபத்தி நான்கு லட்சம் ரூபாய்! இந்திராவும், சஞ்சய் காந்தியும், அவர்தம் பிரதானியரும் சாப்பிட வேண்டாமா? அதற்கும், அவர்களின் போக்கு வரத்துக்கும் ஒன்றரை லட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இந்த விவரச் செலவுகள், முதலில் குறிப்பிட்ட ஐந்து கோடி ரூபாய்க்குள் அடங்கமாட்டா!

இவைகளன்னியில் போலீஸ் பாதுகாப்புச் செலவுகள் தனி!

உடன்பிறப்பே, கவனித்தாயா? ஒரு கட்சியின் மாநாட்டுக்கு, அந்தக் கட்சியின் அரசு செலவழித்த தொகை எவ்வளவு என்பதை!

தேர்தல் நேரத்தில் மலர் வெளியிடுவதாக நடைபெற்ற ஊழலில் முப்பது கோடி ரூபாய், காங்கிரஸ் கட்சிக்கு வசூலிக்கப் பட்டதாக முன்பே செய்திகள் வந்தன.

மாருதி, நகர்வாலா - இப்படிப் புகழ்பெற்ற விவகாரங்கள் வேறு!

கட்சியின் மாநாட்டுக்கு கோடிக்கணக்கில், அரசாங்கப் பணத்தைச் செலவழித்தவர்கள்தான், நமது கழகத்தைச் சேர்ந்த சிலர் மாவட்ட வங்கித் தலைவர்களாக இருந்தபோது, கழக மாநாடு களுக்கு வங்கியின் கார்களை எடுத்துக் கொண்டு போனார்கள் என்பதை மிகப் பெரிய குற்றச்சாட்டுக்களாக "ஜோடனை" செய்து ரேடியோ, டெலிவிஷன், செய்தித்துறை வாயிலாக விளம்பரங்கள் செய்தனர்.

அதிகாரிகளோ, அமைச்சர்களோ, அல்லது பயணிகளோ - வழியில் தங்குவதற்கு நிரந்தரமான தங்கும் விடுதிகளைத் தமிழக அரசு அமைத்ததையேகூட ஒரு பெரிய குற்றமாகக் கூறிக்கொண்டு

திரிகிறவர்கள், நேற்று வரையில் இந்திரா அரசுக்குத் துதிபாடிக் கொண்டிருந்தார்களே! அவர்கள் கவுகத்தி மாநாட்டுச் செலவு விவரங்களைப் பற்றி என்ன சொல்லுகிறார்கள்?

1972-ல் மதுரையில் நடைபெற்ற மாவட்ட தி.மு.க. மாநாட்டிற்கு மீட்டர் கணக்கின்றி மின்சாரம் எடுக்கப்பட்டது என்று ஜனாதிபதி வரையிலே கொண்டு போய்ப் புகார் கொடுத் தார்கள் அல்லவா? அந்தப் புனித?வான்கள்தான் கவுகத்தி மாநாட்டை நடத்திய இந்திரா அரசுக்குப் புகழ்ச் சிந்து பாடிக் கொண்டிருந்தவர்கள் என்பதை மறந்துவிட முடிகிறதா?

ஐந்து அல்லது ஆறு கோடி ரூபாய்க்கு மேல் அரசாங்கப் பணம், ஒரு கட்சி மாநாட்டுக்காக வாரியிறைக்கப்பட்டுள்ளது. அந்தக் காரியத்தை மிகக் களிப்போடு செய்தவர்கள்தான் நம்மீதும், நமது கழகத்தின் மீதும் களங்கம் சுமத்தி அழித்து விடலாமெனக் கனவு கண்டார்கள்!

ஆனால், காலம்! வெகு வேகமாக மாறிவிட்டது பார்த்தாயா?

அன்புள்ள,

மு.க.

06-08-1977

454. இரத்தத் திலகம்!

உடன்பிறப்பே,

ஜூலை 27ஆம் நாள் உனக்கு நான் எழுதிய கடிதத்தில் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தேன்.

> 'இந்திரா அரசின்போது ஆரம்பமான "களங்கம் சுமத்திப் பழி தீர்க்கும் படலம்" இப்போது, தொடர்வது மாத்திரமல்ல அதைவிட மிகத் தீவிரமாகச் செயல்படத் தொடங்கியிருக்கிறது.'

இது, ஏதோ எழுத வேண்டுமென்பதற்காக நான் எழுதியதல்ல. எழுத்துக்கு எழுத்து உண்மை என்பதைப் போல தி.மு.கழகத்தின் மீது தாக்குதல் முடுக்கி விடப்பட்டுள்ளது.

என்னை மிரட்டி, அசிங்கப்படுத்தி, சோர்வுறச் செய்வதின் வாயிலாகக் கழகத்திலுள்ள செயல்வீரர்களை நிலைகுலையச் செய்து விடலாம் என்று இந்திரா அரசு திட்டமிட்டுக் காரியமாற்றி யதை யாரும் மறந்திருக்க முடியாது.

விசாரணைக் கமிஷன்

வீடு சோதனை

அதிகாரிகள் ஆர்ப்பாட்டம்

கிரிமினல் வழக்குகள்

கொலை முயற்சிக் குற்றச்சாட்டு

என்னை மட்டுமல்ல, என்னுயிரினுமினிய கழக உடன் பிறப்புக்கள் பலரையும் இத்தகைய கொடுமைகளுக்கு ஆளாக்கினர். கழகம், ஓய்ந்துவிடும் எனக் கனவு கண்டனர். அது ஓங்கி உயர்ந்து நின்றதே அல்லாமல் ஓடிப் பதுங்கி விடவில்லை.

இதோ ஒரு செய்தி! பரபரப்பான இந்தச் செய்தியை நீ ஏடுகளில் படித்திருப்பாய் – கடந்த ஏழாந்தேதி இரவு கோபாலபுரத்திலுள்ள

என் வீட்டுக்கு முன்னால் ஒருவர் குடித்து விட்டுக் கலவரம் செய்திருக்கிறார். அவர் அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர் என்று சில ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன. கட்சியிருக்கட்டும் பிறகு! கலவரம் செய்த அந்த நபர், எங்களுக்கு உறவினர் வீட்டுப் பிள்ளை, வீட்டிலிருந்த என் மகன்கள் அழகிரியும், தமிழரசும் எவ்வளவோ சொல்லியும் அந்த இளைஞர் குடிபோதையின் காரணமாகத் தொடர்ந்து கலவரத்தில் ஈடுபட்டிருக்கிறார். அவர் கையில் ஒரு அரிவாள்மனையும் இருந்திருக்கிறது. வீட்டிலிருந்த பெண்கள் நடுநடுங்கியிருக்கிறார்கள். வீதியில் உள்ளவர்களும் அந்தக் காட்சியைக் கண்டிருக்கிறார்கள். அந்த இளைஞரை அப்புறப்படுத்த முடியாத காரணத்தால், ராயப்பேட்டைக் காவல் நிலையத்துக்கு தொலைபேசி வாயிலாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. உடனே இரண்டு காவலர்கள் வந்து அந்த இளைஞரை இழுத்துச் சென்றிருக்கிறார்கள். "குடிபோதையில் இருப்பதால் அந்த நபரை ஒன்றும் செய்ய வேண்டாம். எச்சரித்து அவர் வீட்டுக்கு அனுப்பிவிட்டால் போதும்" என்று வீட்டில் உள்ளவர்கள் பெருந்தன்மையுடன் வேறு எந்தப் புகாரும் கொடுக்காமல் இருந்துவிட்டார்கள். போலீசார், அந்த இளைஞரை அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

> நடந்தது இதுதான்! ஆனால் மறுநாள் செய்தி வருகிறது, என் மகன்கள் அழகிரி மீதும், தமிழரசு மீதும் சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக! இருவரையும் போலீசார் தேடுவதாக! இருவரும் தலை மறைவு ஆகிவிட்டதாக!

கலவரம் செய்த இளைஞர், குடித்திருந்தது உண்மைதானாம்! போதை தெளிந்த பிறகு அவர் கொடுத்த புகாரின் மீது என் பிள்ளைகள் மீது வழக்கு தொடுத்துள்ளார்களாம்! இப்படிச் செய்தி வருகிறது! இன்னும் அழகிரியும், தமிழரசும் கைது செய்யப்படவில்லை, ஒருவேளை - இன்றைக்கு அல்லது நாளைக்குக் கைது செய்யப்படலாம்! அல்லது வழக்கை விசாரித்துத் தண்டனை கொடுத்துச் சிறையிலே தள்ளலாம்.

> அ.தி.மு.க. ஏடு செய்தி வெளியிட்டிருப்பது போல அழகிரியும், தமிழரசும் எங்கும் ஒளிந்து மறைந்துவிட வில்லை. வீட்டிலேதான் இருக்கிறார்கள்.

தொலைபேசி மூலம் புகார் கொடுக்கப்பட்டது! பெருந் தன்மையுடன் எச்சரித்து அந்தக் குடிகார இளைஞரை விட்டு விடுமாறும் கோரப்பட்டது! ஆனால் நடந்தது வேறுவிதமாக! பாதிக்கப்பட்டவர்கள் மீது வழக்கு! போதை தெளிந்த இளைஞர் கொடுத்த, புதிய - கற்பனைப் புகார் மீது எந்தவிதமான புலன் விசாரணையும் நடைபெறாமல் நேரடியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு விளம்பரங்கள் கொடுத்தாகிவிட்டது.

உடன்பிறப்பே, என் பிள்ளைகள் மீது வழக்கு என்பதற்காக நான் வருந்தி, வேதனையுற்று இதனை எழுதுகிறேன் என்று நீ எண்ணிட மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்.

இதைபோலப் பல நிகழ்ச்சிகள், கடந்த சில வாரங்களாக நடக்கத் தொடங்கிவிட்டன.

என் மீது வழக்கு

என் மகன்கள் மீது வழக்கு

அடுத்து என் பேரக் குழந்தைகள்தான்

பாக்கி!

குடும்பத்தையே தீர்த்துக்கட்ட இந்திரா ஆட்சிக் காலத்தி லிருந்து திட்டமிட்ட முறையில் பழிவாங்கும் படலம் தீவிரமாக நடத்தப்பட்டு வருகிறது.

எனக்குத் தனிப்பட்ட முறையில் கொடுக்கும் இந்தத் தொல்லைகளைப்போலத்தான், உன்போன்ற உடன்பிறப்புகள் பலரது குடும்பங்களுக்கும் தொல்லைகள் கொடுக்கப்படுகின்றன.

என்னையே மிரட்டி ஒடுக்கிவிட்டால், பிறகு உன்னைப் போன்றவர்களை மிக எளிதாக அடக்கி வீழ்த்திவிடலாம் என்று நினைக்கிறார்கள் போலும்!

உடன்பிறப்பே, உனக்காகவும் - நீயும் ,நானும் சேர்ந்து வளர்த்து வரும் இந்தக் கழகத்திற்காகவும் - உன் நெஞ்சிலும், என் நெஞ்சிலும் ஆழப் பதிந்துள்ள அண்ணாவின் கொள்கைகளுக்காகவும் - எந்தக் கொடுமையையும் ஏற்றுக்கொள்வதென்ற முடிவுக்கு நான் வந்து எத்தனையோ ஆண்டுகளாகின்றன!

இந்தக் கழகத்திற்காக எந்தச் சக்தியையும் எதிர்த்து - எந்தச் சதியையும் பொருட்படுத்தாமல் - என் உயிரின் முடிவுக்கென

வெட்டப்பட்டுள்ள படுகுழியில் விழப் போகிறேன் என்று தெளிவாகத் தெரிந்து நடைபோடுகிற எனக்கு பெண்டு, பிள்ளைகள், பேரக் குழந்தைகள் யார் என் கண் எதிரே அவமானப் படுத்தப்பட்டாலும், அல்லது அழிக்கப்பட்டாலும் அவைகளைப் பற்றிக் கவலைப்பட நினைப்பும் இல்லை! நேரமும் இல்லை!

கடந்த சில ஆண்டுகளில் இந்தக் கழகத்திற்காக நான் சந்திக்காத சோதனைகளே இல்லை!

வாட்டி வதைத்திடப் போடப்பட்ட வழக்குகளுக்கிடையிலே- போட்டி போட்டுக் கொண்டு துரோக நினைப்பினர் என்னைத் துளைத்தெடுத்ததற்கு நடுவிலே - நம்பியிருந்த நண்பர்கள் சிலர் அற்றக்குளத்துப் பறவைகளாகிவிட்ட நிலையிலே - என்னையே அழித்துக் கொண்டாலும் கொள்வேனே தவிர, என்னை ஆளாக்கி - என் விழிகளைத் திறந்துவிட்ட இந்தக் கழகத்தைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். பெரியாரும், அண்ணாவும் போதித்த உறுதியிலிருந்து நழுவிட மாட்டேன் என்று நான் எடுத்துக்கொண்ட சபதத்திலிருந்து அணு அளவும் பின்வாங்கப் போவதில்லை.

இந்திரா அரசில் ஆரம்பமாகி, இடையில் சில நாட்கள் நின்றிருந்த "பழி வாங்கும் படலம்" மீண்டும் படமெடுத்தாடும் பாம்பெனச் சீறிடுவதைக் காண முடிகிறது.

இதில் என்னைப்போல சிலர், உன்னைப் போல சிலர், பலியாகி விடலாம்!

ஆனால் அந்தப் பலிபீடத்தில் உறைந்து கிடக்கும் இரத்தத்தைத் திலகமாக நெற்றியில் இட்டுக்கொண்டு, எஞ்சியிருக்கும் தன்மானச் சீயங்கள் நமது கழகத்தின் வெற்றிக்கொடியை நாட்டியே தீருவார்கள். இதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை!

அன்புள்ள,

மு.க.

11-08-1977

455. தேசீய நீரோட்டமும் திராவிட இயக்கமும்!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் தேர்தல் மிகுந்த பரபரப்புக்கிடையே நடைபெற்று திரு.கருப்பையா மூப்பனார் அவர்கள் அதிக வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அரசியலில் "அடாவடி"ப் பேச்சுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல், மாற்றாரை மதிக்கும் பண்புடன் நடந்து கொள்ளக் கூடிய ஒருவர் அவர் என்பதால் நமக்கு எப்போதும் அவரிடம் ஒரு மரியாதை உண்டு. தலைவர் தேர்தலுக்குப் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்த நண்பர் நெடுமாறனும் காங்கிரஸ் கட்சியில் இளைஞர்களின் இதயம் கவர்ந்தவராக இருப்பவர். இந்தத் தேர்தல் பற்றியோ, "வெற்றி பெற்றவர்-வெற்றி பெறாதவர்" பற்றியோ நான் எந்த விரிவான விமர்சனமும் செய்வதற்காக உனக்கு இந்தக் கடிதத்தை எழுதவில்லை.

தேர்தல் முடிந்தபிறகு நடைபெற்ற பாராட்டுரை நிகழ்ச்சியில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதி எம்.வி. கிருஷ்ணப்பா அவர்களும், மூப்பனார் அவர்களும் தெரிவித்துள்ள கருத்துக்களை, நீ ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்பதற்காகவே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

> "தமிழக காங்கிரஸ் இன்றுமுதல் சிறந்த பணியாற்றி அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும். அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இப்போது நடைபெறுவது, துரதிர்ஷ்டவசமானது. அதற்குப் பிறகு அந்த இடத்திற்கு காங்கிரஸ்தான் வரவேண்டும். தி.மு.க.வுக்கு இடம் கொடுக்கக்கூடாது."

திரு.எம்.வி.கிருஷ்ணப்பாவின் உரையை "மித்திரன்" ஏடு, இவ்வாறு வெளியிட்டுள்ளது. அவரது பேச்சு "அலை ஓசை"யில் பின்வருமாறு வந்துள்ளது.

"விஜயராகவாச்சாரி, ராஜாஜி, காமராஜர் போன்ற மாபெரும் தலைவர்கள் தோன்றியது தமிழ்நாடு. நம்முடைய போக்கால் இங்கே ஒரு சினிமா நடிகர் முதலமைச்சராக ஆகும் நிலை ஏற்பட்டுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியை அகற்றி, ஆனால் அதே இடத்தில் தி.மு.க.வந்து விடாமல் காங்கிரஸ் அந்த இடத்தில் அமரப் பாடுபட வேண்டும்."

வாசகங்கள் வெவ்வேறாக இருந்தபோதிலும் கிருஷ்ணப்பாவின் கருத்து இரண்டு ஏடுகளிலும் சரியாகவே வெளியிடப்பட்டுள்ளது. அவரையொட்டிப் பேசிய மூப்பனார் அவர்களும்,

"தமிழ்நாடு, பத்து ஆண்டுகளாகத் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறது. மீண்டும் அதை தேசிய நீரோட்டத்தோடு இணைக்க நாம் அனைவரும் ஒன்றாகப் பாடுபட வேண்டும்"

என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து என்ன தெளிவாகிறது உனக்கு? என்னதான் "அகில இந்திய" என்ற சொற்களை இணைத்துக்கொண்டு காட்டினாலும் அ.தி.மு.க.வை தேசிய நீரோட்டத்துடன் சேர்த்துக் கொள்ள, காங்கிரஸ் கட்சி தயாராக இல்லை. ஒருவேளை நாடாளுமன்றத் தேர்தலின்போது அ.தி.மு.க.வை, தேசிய நீரோட்டத்தில் பயணம் செய்யும் படகாக அவர்கள் கருதினார்களோ, என்னவோ - கடந்த கால வரலாறுதான் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டும்.

காங்கிரஸ் கட்சியினரின் கூற்றுப்படி பத்தாண்டு காலமாகவே தமிழ்நாடு, தேசிய நீரோட்டத்திலிருந்து விலகி நிற்கிறது! அந்த நீரோட்டம்பற்றி விரிவாக விவாதிக்க வேண்டியிருக்கிறது. பத்தாண்டுக் காலமென்று காங்கிரசார் குறிப்பிடுவது 1967 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து இப்போது அ.தி.மு.க. ஆட்சி நடத்துகிற 1977 ஆம் ஆண்டு வரையில் என்றாகிறது. அதாவது, இனிமேல் தமிழ்நாட்டைத் தேசிய நீரோட்டத்தில் கலந்திடச் செய்ய வேண்டுமென்பது காங்கிரசாரின் திட்டம், அதைத்தான் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்கிற கட்சியானாலும், அல்லது மாநில சுயாட்சியும் மத்தியிலே கூட்டாட்சியும் கோருகிற கட்சியானாலும் இந்திய

ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் பேணிக் காப்பதோடு-இந்திய அரசியல் அமைப்புக்கு உட்பட்ட நிலையிலேயே தங்கள் கொள்கைகளை வலியுறுத்தி வருகின்றன.

தேசிய நீரோட்டமென்பது டெல்லிப் பட்டணத்தைச் சர்வாதிகாரக் கோட்டையாக அமைத்துக்கொண்டு மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பது என்று பொருள் கூறப்படுமேயானால், அந்த நீரோட்டத்தில் விழுந்து, மிதந்து, எங்கேயோ ஒதுங்கிட தி.மு.கழகம் தயாராக இல்லை.

இந்தியா, பல மொழி பேசும் மக்களைக் கொண்ட நாடு என்பதையும் - பல தேசிய இனங்கள் இருக்கின்றன என்பதையும் - மாறுபட்ட கலாச்சாரங்கள் கொண்ட பகுதிகளை உள்ளடக்கிய துணைக் கண்டம் என்பதையும் மறுத்துவிட்டு "வேற்றுமையில் ஒற்றுமை" காண்பதற்கு பதிலாக "எல்லாவற்றையும் ஒன்றாக்கு கிறோம்" என்ற பெயரால் மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரம் போன்ற தனித்தன்மைகளை உருக்குலைப்பதுதான் தேசிய நீரோட்டமென்றால், அந்த நீரோட்டத்தில் எதிர்நீச்சலடிக்கத்தான் தி.மு.கழகம் துணியும் என்பதை, நான் கோவையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் "உறவும் - உரிமையும்" என்ற தலைப்பில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேன்.

"இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரையில் இந்தித் திணிப்பு இல்லை" என்று பாகுமொழி உதிர்த்தவாறு பக்குவ மாகவும், படிப்படியாகவும், நயமாகவும், நளினமாகவும், "இந்திதான் எதிர்காலத்தில் இந்தியாவின் ஒரே மொழி!" என்ற குறிக்கோளில் வெற்றி கண்டிட நடத்தப்படுகிற நாடகத்தின் பெயர்தான் "தேசிய நீரோட்டம்" என்றால் அந்தக் கூத்தரங்கத்தின் பக்கத்திலே தலைகாட்டுவதற்கும் தி.மு.க. தயாராக இல்லை.

நாடு கேடுறக் கூடாது ஒற்றுமையின்மையால்! நமக்கு அதில் அக்கறை மிகவுண்டு.

பகை நுழையத் துளி இடமும் தந்திடலாகாது! அப்படிப்பட்ட நேரத்தில் துள்ளிவரும் வேலாக - ஆவேசத்தை அள்ளி வரும் வாளாக - தி.மு.க. வடிவெடுக்கும்! இதற்கு வரலாறே உண்டு! வெறும் வார்த்தைக் கோவை அல்ல!

இவைதான் தேசிய நீரோட்டமெனில் அட்டியில்லை நமக்கு ஒப்புதற்கு!

இவற்றிற்கு அப்பால் வேறு எதனைக் காங்கிரசார் தேசிய நீரோட்டமென்கின்றனர். பத்தாண்டுக் காலமாகத் தமிழகம் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகி விட்டதாமே!

மறைந்த நண்பர் சம்பத் தொடங்கிய தமிழ் தேசியக் கட்சி அகில இந்தியக் கட்சி அல்லவே! அதன் தளபதிகளாக இருந்த பலர், இன்று காங்கிரஸ் தலைமையிடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்களே!

சிலம்புச் செல்வரைத் தலைவராகக் கொண்ட தமிழரசுக் கழகம் - அனைத்திந்தியக் கட்சி அல்லவே! அவரைத் தேசிய நீரோட்டத்திலிருந்து பிரித்துவிட முடியுமா? தமிழக சட்டப் பேரவையில் நிறைவேறிய "மாநில சுயாட்சி" தீர்மானத்தில் இன்னும் "வேகம்" வேண்டும் என்று தமிழகச் சட்டமன்ற மேலவையில் ஓங்கியடித்துப் பேசியவராயிற்றே சிலம்புச் செல்வர்!

அவரது மேலவைப் பேச்சு, இன்னும் என் காதுகளில் தமிழ்முரசு கொட்டிக் கொண்டிருக்கிறதே!

தேச விடுதலைக்குப் பாடுபட்டவர்கள் இருக்கிற கட்சிதான் தேசிய நீரோட்டத்தில் இணைந்தவை என்று வாதிடுவார்களே யானால், தந்தை பெரியார் எங்கே போய்விட்டார்?

அதிகாரம், ஆதிக்கம், சில இடங்களிலே குவிந்து நாட்டின் பல பகுதிகளும் - சமுதாயத்தில் பெரும் பகுதியினரும் பாதிக்கப்படு வதை எடுத்துரைத்து எல்லாப் பகுதியினரும் சமஉரிமைகளையும், சம வாய்ப்புகளையும் பெறுவதற்காகக் குரல் எழுப்பியதுதான் திராவிடர் இயக்கம்!

அந்த இயக்கத்திற்கு அரசியல் வடிவம் அமைத்து அறிஞர் அண்ணா ஆற்றிய பணியின் விளைவுதான் 1967-ல் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நிகழ்ச்சியாகும்!

அண்ணா, அரியணை ஏறிய காலம் முதற்கொண்டு தேசிய நீரோட்டத்திலிருந்து தமிழ்நாடு விலகி நிற்கிறது என்பது காங்கிரசாரின் குற்றச்சாட்டு!

1969-ல் குடியரசுத் தலைவர் தேர்தலின்போது தி.மு.க. தேசிய நீரோட்டத்திலிருந்து விலகி நிற்கவில்லை யென்பது காங்கிரசார் கருத்து. 1971 பொதுத் தேர்தலின் போதும் தமிழ்நாடு தேசிய நீரோட்டத்தில்தான் இணைந்து இருந்திருக்கிறது! ஏனெனில்

தேர்தல் கூட்டில் தி.மு.க., காங்கிரஸ் இணைந்திருந்தது அப்போது! 1977 நாடாளுமன்றத் தேர்தலின் போதும் காங்கிரஸ் வாதப்படி தமிழ்நாடு, தேசிய நீரோட்டத்திலிருந்து விலகியிருந்திருக்க முடியாது! காரணம் அப்போது அவர்களுடன் அ.தி.மு.க. கூட்டு இருந்ததல்லவா?

திடீரென்று இப்போதுதான் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தது துரதிர்ஷ்டம் என்றும், அந்த ஆட்சிக்குப் பிறகு தி.மு.க. ஆட்சி வந்துவிடக் கூடாதென்றும், மாறாக - காங்கிரஸ்தான் ஆட்சிக்கு வர வேண்டுமென்றும் உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சந்தர்ப்பவாதத்திற்கு மறுபெயர்தான் "தேசிய நீரோட்டம்" என்றால் நாம், அதனை மறுப்பதற்கில்லை.

ஆனால் ஒன்றை உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன். தியாகராயர் ஏற்றி வைத்த திராவிடத் தீபத்தை - பெரியார் உயர்த்திய இன எழுச்சிக் கொடியை - அறிஞர் அண்ணா தொடங்கிய மறுமலர்ச்சி வரலாற்றை - இனி எவரும் அணைத்திடுவர், அழித்திடுவர், மறைத்திடுவர் என்பது வீண் கனவேயாகும்!

அன்புள்ள,

மு.க.

12-08-1977

456. மீண்ட சுதந்திரம்!

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு நாம் கொண்டாடும் சுதந்திர நாளுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு.

“விடுதலை பெறுவீர் விரைவாக நீர்,
வெற்றி கொள்ளுவீர், என்றுரைத் தெங்கும்
கெடுதலின்றி நந் தாய்த் திருநாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய்கின்றான்!
சுடுதலும் குளிரும் உயிர்க் கில்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை!
எடுமினோ அறப்போரினை.....”

என்று பாரதியின் போர் முரசப்பாடல் முழங்கியதற்கேற்ப அணி வகுத்த வீரர்கள் செந்நீர் சிந்தி மீட்டனர் இந்த நாட்டை! மீட்டினர் சுதந்திர வீணையினை! காந்தியடிகள் தலைமையில் நடைபெற்ற அந்த மண் மீட்கும் போராட்டத்தில் ரத்தத் தடாகத்திலே தங்கள் தலைகளைச் செந்தாமரை மொட்டுக்களென மிதக்கவிட்ட வீரர்கள் உறங்கிக்கொண்டிருக்கும் கல்லறைகளை நோக்கித் தொழுகிறோம். விழுப்புண் பெற்று இன்றும் நம்மிடையே உலவிக் கொண்டிருக்கும் தியாக மாணிக்கங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம். விடுதலை பெற்ற வெற்றிக் களிப்புடன் நம்மோடு வாழ்ந்திருந்து மறைந்துவிட்ட தள நாயகர்களை நினைவு கூர்ந்து வணங்குகிறோம்.

இப்படிச் சுதந்திர நாளை எண்ணி மகிழக்கூடிய காலம் நிலைக்குமா? என்ற பயங்கரமான கேள்வியொன்று கடந்த இரண்டாண்டுக் காலமாக நம் இதயத்தைக் குடைந்து கொண்டிருந்தது.

ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராதுபோல வந்த மாமணியைத் தோளுறிபோமோ? என்ற ஐயமும், அச்சமும்-அதே நேரத்தில் “தோற்க மாட்டோம்!” - உறுதியுடன் நின்று,

பெற்ற சுதந்திரத்தைக் காத்தே தீருவோம் என்ற நம்பிக்கையும் கொண்டவர்களாகத்தான் அடக்குமுறையின் சவுக்கடிகளைத் தாங்கிக் கொண்டோம்.

நாடு காக்கக் கேடு சூழ் சிறைக் கோட்டங்களில் ஆண்டுக் கணக்கில் அடைபட்டிருந்த பெரிய தலைவர்கள் எல்லாம் நாடு, வெள்ளையர் கையிலிருந்து விடுபட்ட பின்னரும் - மீண்டும் சிறைக் கைதிகளாக அடைபட வேண்டிய ஒரு காலமும் ஏற்பட்டது!

“எண்ணற்ற நல்லோர் இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதுங் காண்கிலையோ?”

என அந்நியர் ஆட்சிக் காலத்தில் பாரதியார் கேட்ட கேள்வி இந்திரா அம்மையார் ஆட்சிக் காலத்திற்கும் பொருந்தும் என்றாகி விட்டது.

சுதந்திரப் போருக்காகச் சங்கநாதம் செய்த ஏடுகள் எல்லாம், அதற்குத் தண்டனை போல இந்திரா அரசின் தணிக்கை விலங்கிற்கு உட்படுத்தப்பட்டன.

ஏறத்தாழ இரண்டு லட்சம் பேர் அரசியல் காரணத்திற்காக விசாரணையேதுமற்ற ‘மிசா’ கைதிகளாகச் சிறையில் பூட்டப் பட்டனர்.

டெல்லிச் சர்வாதிகாரபுரியின் அட்டகாசங்களுக்கும், அரசியல் வாதிகளைப் பழிவாங்கும் சதிச் செயல்களுக்கும் “இரும்புத்திரை” போடப்பட்டிருந்தது.

ஜனநாயகத்திற்காக வாதிட்டோர், சண்டாளர்கள் எனத் தூற்றப்பட்டனர்.

கொள்கைக் குன்றுகளுக்கு இந்திராவின் கொலு மண்டபத்தி லிருந்து வழங்கப்பட்ட பட்டங்களுக்குப் பெயர் கொள்ளைக் காரர்கள்!

உரிமைக்காகக் குரல் கொடுத்தவர்களை, முன்பு உறவுக்காக கரம் கொடுத்தவர்களாயிற்றே என்றும் பாராமல் ஊழல் குற்றம் சுமத்திக் களித்தது “உத்தம” வேடம் கட்டிக் கொண்ட அந்த அரசு!

விமோசனமில்லை! விடியப் போவதில்லை பொழுது! வைகறை இனி தோன்றாது! எதேச்சாதிகார இருட் குகையிலேதான் இந்திய நாடு மாண்டு மறையப் போகிறது! என்றெல்லாம் மனம்

விட்டு விரக்தியுடன் ஏக்கப் பெருமூச்சு விட்டவர்க்கெல்லாம் ஆறுதல் அளிக்கும் வகையிலேதான் ஜனநாயகப் பேரொளி சர்வாதிகார இருளைக் கிழித்துக் கொண்டு உதயமாயிற்று!

இல்லையேல், இந்த ஆண்டும் நாம் வாயில் மாட்டிய பூட்டோடும் - கையில் போட்ட கட்டோடும் - காலில் இட்ட விலங்கோடும் - "ஆகஸ்டு 15 சுதந்திர நாள்" என்று சொல்ல வைக்கப்பட்டிருப்போம்!

அந்த நிலை வராமல், நொந்த நிலை தொடராமல் - இடையில் ஏற்பட்ட இக்கட்டிலிருந்து இந்தியா மீண்டது!

இந்தக் கால கட்டத்தைத்தான் வருங்கால வரலாற்று ஆசிரியர்கள், இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என வர்ணிக்கப் போகிறார்கள்!

அந்த வரலாற்று நூலில் தி.மு.கழகத்திற்கு ஒரு முக்கியமான இடம் உண்டு!

சர்வ வல்லமை வாய்ந்த சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து இந்தியாவின் தென்கோடி முனையிலிருந்து அமைப்பு ரீதியாக முதல் குரல் கொடுத்தது நமது தி.மு.கழகம்தான் என்கிறபோது எப்படியோ ஒரு பெருமிதம் ஏற்படத்தான் செய்கிறது!

அப்படி எதிர்த்ததன் விளைவை இன்னமும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். என் செய்வது! கிணற்றில் விழப்போன குழந்தையைக் காப்பாற்றியவனுக்கு அப்படிக் காப்பாற்றிய முயற்சியில் ஏற்பட்ட காயங்களில் இருந்து இரத்தம் கசிவது இயற்கைதானே! கசியும் குருதிக்காகக் கவலைப்படாமல் குழந்தையைக் காப்பாற்றினோமே என்று களிப்படைபவனைப் போலத்தான் கழகமும் இந்தச் சுதந்திர நாளில் பங்கு பெறுகிறது! பரவசமுறுகிறது!

அன்புள்ள,

மு.க.

14-08-1977

457. அலட்சியம் கூடாது!

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில் “மீண்ட சுதந்திரம்” குறித்து எழுதியிருந்தேன். இடையில் இரண்டு ஆண்டுக் காலம் “சுதந்திரம்” பேராபத்தில் சிக்கியிருந்தது என்பது உண்மைதான்! அதனைப் பெருந் தியாகங்களுக்குப் பிறகு விடுவித்திருக்கிறோம் என்பதும் உண்மைதான்! எனினும், 1947-ஆம் ஆண்டு முதல் 1977 வரையிலான இந்த முப்பதாண்டுக் கால சுதந்திர இந்தியாவில் சாதித்திருக்க வேண்டிய பல காரியங்கள் எப்படியோ புறக்கணிக்கப் பட்டு விட்டன என்பதை யாரும் மறுத்திட இயலாது.

இன்னமும் ஏழை எளியோர் துயரங்கள் முழுமையாக மறையவில்லை. நடுத் தெருவில் வாழும் குடும்பங்களின் தொகை குறையவில்லை. குடிசைகளில் சுருண்டு கிடக்கும் ஏழை ஜீவன்கள், நெருப்பாலோ வெள்ளத்தாலோ பாதிக்கப்பட்டு மரத்தடிகளில் தங்கள் குழந்தை குட்டிகளுடன் தவித்து நிற்கும் காட்சியினைக் காண முடிகிறது;

என்றோ ஒரு நாள் அல்ல!

இப்படி அடிக்கடி நடைபெறுகிறது.

இரந்தே உயிர்வாழ்தல் வேண்டும் என்ற நிலையில் பிச்சையெடுப்போர் கையேந்தி நிற்கின்றனர் நாடு முழுவதுமே!

வறுமைச் சாவுகள் பெருகிய வண்ணம்தான் இருக்கின்றன. அறிவாரக் கல்வி அனைத்து மக்களுக்கும் கிடைக்கிறது என்று கூற இயலாத நிலை!

நோய்க்கு மருந்துண்ணக் காசின்றி, இறப்புலகிற்கு விரைவினிற் சென்றிடும் பரிதாபத்திற்குரிய தாயும், பதறியழும் சேயும் இன்றைய பாரதத் திருநாட்டின் அன்றாடக் கொடுமை நிகழ்ச்சிகள்!

ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் பசுமைத் திட்டுக்களைப் போல வளம் பொருந்திய வாழ்வினரும், அல்லது அதிகத் தொல்லையில்லா நடுத்தர வர்க்கத்தினரும் தென்படுகிறார்களே தவிர, நாட்டின் புரையோடிப்போன புண்போல ஏழ்மைச் சமுதாயத்தின் அளவு விரிவாகிக் கொண்டு வருகிறது.

இந்தக் கோரக் காட்சிகள் போதாதென்று சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் மக்களில் ஒரு பகுதியினர் நடத்தப்படும் சோகக் கதைகளைக் கேட்டாலே நெஞ்சு நெகிழ்கிறது.

அந்நியப் பிடியிலிருந்து நாடு விடுபட்டதும் "ஆனந்த பாஷ்யம்" பொங்கிடும் என்றுதான் கூறப்பட்டது. அடிப்படைக் காரியங்களில் அக்கறை காட்டாத மனப்போக்கு ஆளவந்தார்களிடம் மண்டிக் கிடந்த காரணத்தால் இந்திய நாடு, இந்த மந்த நிலைக்கு வந்து சேர்ந்தது என்ற குற்றச்சாட்டில் வலிமை வாய்ந்த ஆதாரங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

மத்தியிலே அமைந்திருந்த அரசானாலும் - இப்போது அமைந் துள்ள அரசானாலும், மாநிலங்களில் அமையும் அரசுகளானாலும், மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கத் திட்டங்கள் தீட்டாமல் இல்லை.

எல்லா அரசுகளும் மக்கள் நலனை அறவே அலட்சியப்படுத்தி விட்டன அல்லது அலட்சியப்படுத்துகின்றன என்று கூற முடியாது.

காமராசர், தமிழகத்தை ஆண்ட காலத்தைக் காங்கிரசார், பொற்காலம் எனக் கூறுவர்!

ஒன்பதாண்டுக் கால கழக ஆட்சியிலும் சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள் வாழ்வும், கிராமப்புறத்துத் தேவைகளும் முனைப்பாகக் கவனிக்கப்பட்டன என்று கண்ணுக்கு மெய்யாக சாதனைகள் விளங்குகின்றன!

எனினும் முற்றிலும் முடிந்துவிட்டது என்று சொல்லத் தக்க அளவுக்கு தமிழ்நாட்டிலும் சரி, இந்தியாவில் தமிழகத்தைப்போல் முன்னேற்றமடைந்ததாகக் கூறப்படும் ஏனைய மாநிலங்களிலும் சரி - நிறைவு ஏற்படவில்லை.

திட்டமிடுவதில் ஏற்படும் கோளாறு - முற்போக்கு எண்ண முடன் தீவிரமாகச் சிந்தித்துச் செயல்பட முனைந்திடாத பழைய பத்தாம்பசலித்தனமான அதிகாரிகளின் நிர்வாகத் தன்மை - மக்களைப் பற்றிக் கவலைப்படாமல் தங்களைப் பற்றியே கவலைப்

படும் ஒரு சில அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற செயல்கள் - இவை மட்டுமின்றி இன்னுமொரு முக்கியமான காரணமும் இந்திய மக்களின் நல்வாழ்வுக்குத் தடைக்கல்லாக இருந்து வருகிறது.

அதுதான், அளவுக்கு அதிகமான அதிகாரங்களை மத்திய அரசு, குவித்து வைத்துக் கொண்டிருப்பதாகும்.

மண்ணைக் காக்க மத்திய அரசும், மக்களைக் காக்க மாநில அரசுகளும் என்ற அளவுக்குப் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தி, ஒரு சில மிக முக்கியமான பாதுகாப்பு, வெளிநாட்டுறவு - போன்ற அதிகாரங்களை மட்டும் மத்திய அரசு வைத்துக் கொண்டு உண்மையான கூட்டாட்சி அமைப்பாக இயங்கிட முன்வந்து, மாநிலங்கள் கூடுதலான அதிகாரங்களைப் பெற்று சுயாட்சித் தன்மையை முழுமையாக அடைந்திட வழி வகுக்கப்பட்டால்தான், மக்களிடம் நெருக்கமாக உள்ள மாநில அரசுகளால் மக்களுக்குத் தேவையானவற்றை உடனுக்குடன் செய்து தருவதற்கேற்ற அதிகாரமும், நிதி ஆதாரமும் இருக்க முடியும். அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, நிதி ஆதாரங்களில் மத்திய அரசு, மாநில அரசுகளில் குறுக்கீடு நடத்தாமல்- மக்களின் அருகாமையி லிருக்கிற மாநிலங்கள் சுயாட்சித் தன்மையுடன் விளங்கும் வண்ணம், அரசியல் சட்டம் திருத்தப்பெற்று மத்தியில் கூட்டாட்சி அமையுமேயானால் இழிநிலையில் உள்ள இந்திய மக்களின் வாழ்வில் சுதந்திரத்தின் பயனைப் படிப்படியாக இணைத்திட இயலும்! இல்லையேல், இந்திய மக்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றிய நமக்கு, வறுமையிலிருந்து காப்பாற்ற முடிய வில்லையே என்ற ஏக்கம், நிரந்தரமானதாகிவிடும்!

இதனை மனத்திற்கொண்டுதான் நமது கழகம், மத்தியிலே கூட்டாட்சியையும் - மாநிலத்திலே சுயாட்சியையும் வலியுறுத்தி வருகிறது.

இதனை அலட்சியப்படுத்துகிறவர்கள், முப்பதாண்டுக் கால சுதந்திர வாழ்விலும் சுகம் காண இயலாத இந்நாட்டு ஏழை மக்களை அலட்சியப்படுத்துகிறார்கள் என்றுதான் நாம் கருதிக் கொள்ள வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

15-08-1977

458. வாளும் - கேடயமும்!

உடன்பிறப்பே,

கழகத்தின் வார ஏடாக நம்நாடு செப்டம்பர் 15-ஆம் நாள் வெளிவருகிறது.

இடைவிடாத பணிகளுக்கிடையே இந்தப் பணியையும் நான் ஏற்றுக் கொள்கிறேன் என்றால், அது உன்னை நம்பித்தான் என்பதை மறந்து விடாதே!

பொதுவாக நமது இயக்கத்திற்குப் பத்திரிகைப் பலம் குறைவு என்பது மட்டுமல்ல! பல பத்திரிகைக்காரர்களின் கடுமையான எதிர்ப்பு, முழுமையான புறக்கணிப்பு, தொடர்ச்சியான இருட்டடிப்பு இவைகளுக்கும் நாம் ஈடு கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இப்போதுகூட தமிழகச் சட்டமன்ற நிகழ்ச்சிகளை வெளியிடுகிற சில பத்திரிகை திமிங்கிலங்கள், தி.மு.கழகத்தினரின் பேச்சுகளையும், எடுத்து வைக்கிற வாதங்களையும் வேண்டுமென்றே திரித்தும், மறைத்தும் வெளியிடுகிற போக்கினைக் கண்டு பொதுமக்களே பேசிக்கொள்கிறார்கள். இவர்களுடைய பரம்பரைக் குணம் மாறவே மாறாது என்று!

ஏதோ ஒரு தினகரன், ஒரு அலைஓசை சில நேரங்களில் மாலை முரசு இந்த ஏடுகளில் ஓரளவு கழகச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் தரப்படுகின்றன.

முரசொலியில்தான் முழுமையான கழகத்தின் செய்திகளாயினும், சட்டமன்றத்தில் கழகத்தினர் பேசியதாயினும் - சற்றுத் தாமதமாவது காண முடிகிறது!

தயவுக்குத் தவம் கிடந்து தண்டனிட்டுப் பதவிகளைப் பெற்று அனுபவித்த வரையில் ஆதாயம் எனக் கணக்கிட்டு வாழ்ந்தவர்கள், இன்று தங்கள் ஏடுகளில் நமது செய்திகளை

மறைத்து விடுவதாலேயே கழகத்தை மக்கள் மத்தியிலிருந்து மறைத்து விடலாமெனக் கனவு காணுகிறார்கள்.

பத்திரிகை உலகின் இந்த நிலை நமக்கு நீதிக்கட்சி காலத்திலிருந்து தொடர்ந்து வருகிற நீண்ட கதையாகும்.

இந்த ஏடுகளை நம்பி வாழ்ந்திருந்தால் கழகம், என்றைக்கோ தனது கடையைக் கட்டிக்கொண்டு கலைந்து போயிருக்கும்.

நாளேடுகளாயினும், வார ஏடுகளாயினும் நமது வளர்ச்சிக்குக் குறுக்கே நின்று குதர்க்கம் பேசிடவும், குறும்பு விளைவித்திடவும் முயலுகின்றனவேயன்றி உண்மைகளை ஒழுங்காக வெளியிடுவதேயில்லை.

ஒரு வார ஏடு, தமிழ்நாட்டிலே இருக்கிறது. அது இந்திரா காந்தியின் மீது இன்றைய ஜனதா அரசு சாட்டுகிற குற்றச்சாட்டுகள் எல்லாம் பொய் என்கிறது! அரசியலில் வஞ்சம் தீர்க்கும் முயற்சி என்கிறது!

அதே நேரத்தில் அந்த இந்திரா அரசு, தி.மு.கழகத்தின் மீது சுமத்திய குற்றங்கள் மட்டும் உண்மையானவைகளாம்! அரசியலில் பழிவாங்கும் எண்ணத்துடன் அவை சாட்டப்படவில்லையாம்! பார்த்தாயா அந்த வார ஏட்டின் நடுநிலைப் போக்கினை!

ஊருக்கும் உலகிற்கும் ஜனநாயகம் போதிக்கும் தினமணியானாலும், எக்ஸ்பிரஸ் ஆனாலும் எப்படி நடந்து கொள்கின்றன?

டெல்லியில் சர்க்காரியா கமிஷன் விசாரணை இப்போது நடைபெறுகிறது. வீராணம் புகார் குறித்து குறுக்கு விசாரணை நடத்தப்படுகிறது. அதைப்பற்றி செய்தி வெளியிட்டுள்ள தினமணியானாலும், தினத்தந்தியானாலும், எக்ஸ்பிரஸ் ஆனாலும் - குறுக்கு விசாரணையில் வெளியான முழுத் தகவல்களையும் வெளியிடாமல் வேண்டுமென்றே தவறான கருத்து பொதுமக்களிடையே பரவுகிற வண்ணம் செய்திகளை வெட்டியும் ஒட்டியும் வெளியிட்டுள்ளன.

இந்த ஏடுகளின் அதிபர்கள் எப்படிப்பட்ட உத்தமர்கள்? என்று உலகத்திற்குத் தெரியாமல் இல்லை. அவற்றை நாம் தெரிவிக்க இருக்கும் காலமும் வெகு தொலைவில் இல்லை.

என் செய்வது ஊழல் ஒழிக! என்று உதட்டளவில் சொல்கிறவர்கள் எல்லாம் புத்தர்களாக, ஏசுநாதர்களாக, நபிகள் நாயகங்களாக - தங்களை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், எழுதுகிறார்கள்! பேசுகிறார்கள்!! இவர்களையெல்லாம் பற்றிய விபரங்கள் நம்மிடம் இல்லாமலுமில்லை! அவற்றை வெளியிடாமல் இருக்கப் போவதுமில்லை!

அதற்கிடையே நமது கழக ஏடுகளின் வலிவினைப் பெருக்கிடவும், அவைகள் எங்கணும் பரவிடவும் வழிவகை கண்டாக வேண்டும். நமது கழகத்திற்கென சில வார ஏடுகள் இருக்கின்றன. பொருளாதாரச் சிரமங்களால் அவை தளர்ந்த நடைதான் போடுகின்றன.

நம்நாடு இதழ் கூட அந்தச் சிரமத்தினால்தான் நின்று போக நேரிட்டது.

நமது அண்ணன் சூட்டிய அந்தப் பெயர், நிலை பெற்று விளங்கிட வேண்டும் என்ற ஆசை, அலை மோதுகிற காரணத்தால்தான் நம்நாடு வார இதழாகக் கொண்டு வரப்படுகிற முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

மீண்டும் மீண்டும் சொல்கிறேன்! உன்னை முழுமையாக நம்பித்தான் நான் நம்நாடு ஆசிரியர் பொறுப்பை ஏற்றுள்ளேன்.

நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் கூட நம்நாடு தொடங்க சிறிது தயக்கம் காட்டினார். காரணம், முன்போல நஷ்டக் கணக்கு ஏற்பட்டால் என் செய்வது என்று!

கொள்கை பரப்புச் செயலாளர் நண்பர் கந்தப்பன் கொடுத்த நம்பிக்கையிலும் - கொள்கைக் குன்றம் நீ, நிச்சயம் துணையிருப்பாய் என்ற துணிவிலும்தான் நம்நாடு மலர இருக்கிறது!

நம்நாடு இதழில் வாரந்தோறும் அண்ணா வழங்கிய காஞ்சி ஏட்டின் வாசகம் கமழ்ந்திடும்!

தேவைப்படும்பொழுது பெரியார் நடத்திய குடியரசு இதழின் வாடையும் வீசும்!

நம்நாடு நமக்கோர் வாளாகவும் இருக்கும்! கேடயமாகவும் இருக்கும்!

நல்லோர்க்குத் தென்றலாகவும், பொல்லார்க்குப் புயலாகவும் விளங்கும்!

நாடு முழுதும் விற்பனையாளர்கள் தேவை!

நம் நாட்டின் முழக்கம் கேட்காத பட்டி, தொட்டிகளே இருத்தலாகாது!

ஒவ்வொரு கிளைக்கழகமும் உடனடியாக ஆண்டுச் சந்தா அனுப்பிப் பதிவு செய்து கொள்ள வேண்டும்!

கழக உறுப்பினர் கரங்களில் தவறாமல் இருந்திட வேண்டிய ஏடு, நம்நாடு வார ஏடு!

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் கண்ட மறுநாளே நீ உறுப்பினராக இருக்கும் கிளையின் சார்பில் ஆண்டுச் சந்தா தொகையை அனுப்பி வைப்பாய் என்று எதிர்பார்க்கிறேன்.

நாட்கள் இடையே அதிகமில்லை.

குவியட்டும் விற்பனையாளர் பட்டியல்!

வந்து நிறையட்டும் ஆண்டுச் சந்தா அனுப்புவோர் முகவரிகள்!

அன்புள்ள,

மு. க.

18-08-1977

459. புனித ராஜ்யம் காட்சி - 4!

உடன்பிறப்பே,

புனித ராஜ்யம் நாடகத்தின் நான்காவது காட்சியை இன்றைக்குக் காணுகிறோம்.

ஊர்ப் பொது மண்டபம் - அங்கே அண்ணாச்சி, நொண்டி, மற்றும் ஊர் மக்கள் இருக்கிறார்கள். முடிநரைத்த ஒரு முதியவரும் அமர்ந்திருக்கிறார்.

நொண்டி :- இன்று நமது ஊர்ப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிற இந்தக் கூட்டத்துக்கு நமது ஊர்ப் பெரியவர் நல்லான் அவர்களையே தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இதை நம்ப அண்ணாச்சியார் அவர்கள் ஆமோதிப்பார்.

அண்ணாச்சி :-நான் ஆமோதிக்கிறேன்.

பெரியவர் நல்லான் தள்ளாடியவாறு எழுந்து

நல்லான் :- எனக்கு ரொம்ப வயசாயிடுச்சு! என்னை ஏன் இந்த விவகாரத்திலே எல்லாம் இழுக்குறீங்க? பரவாயில்லை... பொதுவா ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்ப ஊர் வர வர ரொம்ப கெட்டுகிட்டு வருது. நம்ப ஊர்ல உள்ள சின்ன பிள்ளைகளும் பெரியவுங்களும் ரொம்ப நல்லவுங்கன்னு பேரு எடுத்தவுங்க? ஆனா, கொஞ்ச நாளா திருட்டு, கொலை, கள்ளச்சாராயம் காய்ச்சறது, அப்படி இப்படின்னு படு பேஜாராகப் போயிடுச்சு...

நொண்டி :- தலைவர் சொல்றது நூத்துக்கு நூறு உண்மை! சில பசங்க கொள்ளையடிக்கிறானுங்க... சில பசங்க ஊழலிலேயே கிடந்து மிதக்குறாங்க!

அண்ணாச்சி :-ஆமாம்! ஆமாம்! இதோ அதற்கு சாட்சி! என்னால் சரியாகப் பேசமுடியாததால் என் சிநேகிதன்

ஒருத்தன் எழுதிக் கொடுத்ததை அப்படியே படித்துக் காட்டுகிறேன், அதாவது;

கொள்ளைக்காரர்கள் கொழுத்து விட்டார்கள்!

ஊழல் பேர்வழிகள் நிறைந்து விட்டார்கள்!

லஞ்சம் கொஞ்சுகிறது!

மஞ்சம் கொஞ்சுகிறது!

நமது ஊர், வாய்க்கால் மணக்கிறதா?

வரப்பு ஓரங்கள் சுவைக்கிறதா?

குட்டையில் குளிக்க முடிகிறதா?

ஏரிகள் எல்லாம் எரிந்து கருகிவிடவில்லையா?

பாலங்கள் எங்கே?

கோலங்கள் எங்கே?

வீசுகிறது சாராயவாடை வீதியிலே!

வீண் செலவுகள்! விரயங்கள்! ஊழலோ ஊழல்கள்!

அண்ணாச்சி படித்ததும் அனைவரும் கைதட்டுகிறார்கள். பெரியவர் நல்லான் மட்டும் பலமாகச் சிரிக்கிறார். அப்போது பொடியன் சபாஷ்! சபாஷ்! என்று கூறிக் கொண்டு விசில் அடித்தவாறு அங்கே வருகிறான் ஆட்டம் போட்டபடி

நல்லான் :- அடுக்கடுக்காப் படிச்சேப்பா! அழகாகத்தான் இருந்தது! ஆனா ஒண்ணு! இந்த ஊர் மக்கள் மத்தியிலே ஒண்ணு சொல்றேன் ..... டே! அண்ணாச்சீ! டே! நொண்டீ! கொள்ளைக்காரன் - கொலைகாரன் - ஊழல் பேர்வழி - சுரண்டல் பேர்வழி - சமுதாய விரோதி - சாராயம் காய்ச்சறவன் - அப்படின்னு ஆக்ரோஷமாப் பேசுறீங்க! எவனோ ஒருத்தன் எழுதிக் கொடுத்ததை படிக்கிறீங்க! எனக்குத் தெரியும் எல்லா உண்மையும்! இப்பவே, இங்கேயே வெட்ட வெளிச்சமாக்குவேன் - ஊர் ஜனங்களே, கேளுங்க! நாங்கதான் தும்பைப்பூ - தூய்மையானவங்க - மற்றவங்க எல்லாம் களங்கமுள்ளவுங்க - அப்படின்னு

இவுங்க பேசுறதுக்குக் காரணமே - இவுங்க ஊழலை மறைக்கிறதுக்குத்தான்.

நொண்டி :- ஏ, கிழட்டுப் பயலே! என்ன சொன்னே?

அண்ணாச்சி :-டே, வயசான கழுதைக்குத் திமிரைப் பாத்தியா?

நல்லான் :- திட்டுங்கடா! நல்லா திட்டுங்க - ஊர்ஜனங்களே! நீங்க வேடிக்கை பாத்துகிட்டு இருக்கீங்களே, அவனுக என்னைத் திட்டுறது உங்களுக்கு இனிப்பா இருக்கா?

ஊர் மக்களில்

ஒருவர் :- அய்யா! நீங்க பெரியவுங்க! உங்களை கடுமையான வார்த்தை சொல்லி திட்டுனது தப்புதான்! இருந்தாலும் நீங்க, அண்ணாச்சி, நொண்டியப்பன் இரண்டு பேரையும் பார்த்து ஊழல் பேர்வழின்னு சொல்லியிருக்கக் கூடாது!

நல்லான் :- நான் ஆதாரம் இல்லாமல் எதையும் சொல்லலே! ஊர்லே உத்தமன் மாதிரி வேஷம் போட்டுகிட்டு ஜனங்க கிட்ட பெரிய மதிப்பும் மரியாதையும் பெத்துகிட்டு ஜம்பம் அடிக்கிறாங்களேன்னு நான் யோசிச்சு பாத்தேன். நான் யாரு? ரிடயர்டு ஹெட் கான்ஸ்ட்டேபிள் இல்லியா? இந்த மாதிரி ஆளுகளைப் பத்திக் கொஞ்சம் கொஞ்சம் தெரியுமில்லியா? அதுக்காக என் பேத்தி சொக்கியையே இவுங்க கூட்டத்திலே போயி உளவு பார்க்க அனுப்பி வச்சேன்... அவ வந்து எல்லா விவரமும் என் கிட்ட சொல்லிட்டா!

.....

ஊர்மக்கள் :- ஒருமித்த குரலில் அப்படியா? அட அநியாயமே!

இப்படி ஊர்மக்கள் வியப்புடன் கூவியதுதான் தாமதம் - அண்ணாச்சியும், நொண்டியும், பொடியனும், தங்களிடமிருந்த நீண்ட கம்புகளால் ஊர்மக்களை அடிக்கத் தொடங்கினர். அடி தாங்காத ஊர்மக்கள் அய்யோ! அம்மா! என்று அலறிக்கொண்டு சிதறி ஓடுகின்றனர். முதியவர் நல்லான் மட்டும் அப்படியே அசையாமல் நின்று கொண்டிருந்தார். அண்ணாச்சியும், நொண்டியும் அவரது கன்னங்களில் மாறி மாறி அடிக்கின்றனர்.

அடே கிழநாயே! யாரிடம் உன் வாலை ஆட்டுகிறாய்? போனால் போகிறதென்று ஊர் விவகாரம் பேச, உன்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தால், நீ அப்பழுக்கற்ற எங்களைப் பார்த்து, கறைபடியாத எங்கள் கரங்களைப் பார்த்து - குறை சொல்லிக் குரைக்கிறாயா? என்று நொண்டி கர்ச்சனை செய்கிறான்.

அடி தாங்காத முதியவர் கீழே சாய்கிறார். அண்ணாச்சி, நொண்டி, பொடியன் மூவரும் உரக்கச் சிரித்தவாறு அந்த இடத்தை விட்டுச் செல்கின்றனர். அப்போது தாத்தா! தாத்தா! என்று வீறிட்டு அலறியவாறு சொக்கி ஓடிவந்து நல்லானைத் தூக்குகிறாள்.

நல்லான் :- அம்மா! சொக்கி .... எல்லாம் முடிஞ்சுட்டுதம்மா! உன் வருகைக்காகத்தான் என் இறுதி மூச்சு காத்துகிட்டு இருந்ததும்மா! இனி நான் பிழைக்க முடியாது... ஆனா ஒரு மகிழ்ச்சி எனக்கு... ஊரை ஏமாத்திகிட்டு உத்தமனைப்போல நடிச்சவனுங்களை ஊர் மக்களுக்கு அடையாளம் காட்டிட்டேன்... சொக்கி! நான் ஒரு தப்பு பண்ணிட்டேன். உன்னை அவனுக கிட்ட உளவாளியா அனுப்பியிருந்ததை பகிரங்கமா சொல்லிட்டேன். அதனால, உனக்கு ஆபத்து காத்துகிட்டு இருக்கும் அம்மா!... நீ, எங்கேயாவது ஓடிடு!... பட்டணத்திலே உங்க அத்தை வீட்டுக்குப் போய்டும்மா!... அப்பதான், நீ, தப்பிக்கலாம்... சொக்கி! சொக்கி!

சொக்கி :- தாத்தா! தாத்தா!

சொக்கி மடியில் நல்லான் உயிர் விடுகிறார். காட்சி முடிகிறது. திரை விழுகிறது.

ஐந்தாவது காட்சியை இன்னொரு நாள் பார்ப்போம்.

அன்புள்ள,

மு. க.

20-08-1977

460. வணக்கமும், நன்றியும்! வாழ்த்தும், பாராட்டும்!

உடன்பிறப்பே,

ஒருநாள் அறிவிப்புத்தான்! ஓங்குபுகழ் தமிழ்க் குலத்தின் ஒப்பற்ற பேரணியைச் சென்னை மாநகரம் நடத்திக் காட்டிவிட்டது. தமிழ்க்குருதி பாய்ந்தோடும் தமிழ்நிலத்து மாந்தரெல்லாம் இலங்கையிலே கொடுமைகளுக்கு ஆளாகும் தங்கள் உடன்பிறப்புகளுக்காகக் கண்ணீர் சிந்தி, கண்டனம் தெரிவித்து, அர்த்தால் நடத்தி, அண்ணன் வழியில் அமைதி கெடாது ஐந்து லட்சம் பேர் கொண்ட பேரணியையும் நடத்திக் காட்டியுள்ளனர். தி.மு.கழகத்தின் தலைமைக் கழக அறிக்கை 23-8-1977 காலையிலே ஏடுகளிலே வெளியாகிறது. அதுவும் எல்லா ஏடுகளிலும் அல்ல!

அன்று மாலையும் ஏடுகளிலே வெளிவருகிறது!

ஒரே நாள் - சில மணி நேரத்து விளம்பரம்தான் - 24-8-1977 காலையில் கடல் கொந்தளித்ததோ எனும் விதத்தில் பேரணி நடைபெற்றதும், கடைகள் அனைத்தும் மூடப்பட்டு முழுஅளவு அர்த்தால் நடைபெற்றதும் - தமிழர்களின் இதய உணர்வை எடுத்துக் காட்டும் எழுச்சி மிகு நிகழ்ச்சியாகும்.

திராவிடர் கழகத் தலைவர் மணியம்மையார் அவர்களின் அறிக்கைக்கிணங்க அதன் பொதுச்செயலாளர் வீரமணி அவர்களும் திராவிடர் கழகத் தோழர்களும் பேரணியில் திரண்டு வந்தனர்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தினர், ஆசிரியர் மன்றத்தினர், கலந்து கொண்டனர். மாணவமணிகள், தொழிலாளத் தோழர்கள் அணிவகுத்தனர்.

மகளிர் குலத்தினர் ஆயிரமாயிரவர் பேரணியில் வீறுநடை போட்டனர்.

கதராடையும், குல்லாயும் அணிந்த இரண்டு முதியவர்கள் காங்கிரஸ் மூவண்ணக் கொடியுடன் அந்தப் பேரணியில் உணர்ச்சி முழக்கமிட்டதைக் கண்டு உடலெல்லாம் புல்லரித்துப் போயிற்று.

22-8-1977 சட்டப் பேரவையில் அவை முன்னவர் அவர்களிடம், இலங்கைப் பிரச்சினை பற்றி மன்றத்தில் வரம்புக்கு உட்பட்டு கருத்துகளைச் சொல்லலாமே - வேண்டுகோள் விடுத்தேன். முதலில் அதற்கு ஒத்துக்கொண்ட அவை முன்னவர் அவர்கள், அதன்பிறகு என் கோரிக்கையை ஏற்க இயலாத நிலையில் இருப்பதாகக் கூறினார். இலங்கைப் பிரச்சினை, சட்ட சபையில் பேசக்கூடாத ஒரு பிரச்சினை என்ற அடிப்படையில் அந்தத் தயக்கம் காட்டப்பட்டதே தவிர - ஆளுங்கட்சிக்கு அதில் அக்கறையில்லை என்று நான் கருதிடவில்லை. கருதவும் மாட்டேன். கட்சித் தலைவர்கள் யாரும் பேசாமல், அவை முன்னவர் மட்டுமே ஒரு விளக்கம் சுருக்கமாகத் தரலாமே, என்ற யோசனையைக் கூடச் சொன்னேன்.

அந்த யோசனையும் ஏற்றுக்கொள்ளப்படாத காரணத்தால் 22-8-1977 சட்டப் பேரவையில் இலங்கைப் பிரச்சினை பற்றிய ஒலியே எழுப்பப்படாமல் போய்விட்டது. அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து பேசலாமே என்று கூடக் கேட்டேன்! ஒப்பினார்கள்! ஆனால் அன்று முழுதும் அந்த முயற்சி எதுவும் நடைபெறவில்லை.

அன்றிரவு சட்டமன்ற தி.மு.க. கட்சி அலுவலகத்திற்கு ஐம்பதுக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் கண்ணீர் வடிய வந்து எங்களைச் சந்தித்தனர். கொழும்பிலேயிருந்து தொலைபேசிச் செய்திகள் வந்தன. இலண்டன் மாநகரில் உள்ள தமிழ் மக்களின் சார்பில் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். எல்லாமே கதறல் - கண்ணீர்க் கதைகள்! வேறு வழியின்றி உடனடியாக அறிவிக்கப்பட்டதுதான் பேரணியும், அர்த்தாலும் அமைதியாக நடைபெற வேண்டுமென்ற தலைமைக் கழக வேண்டுகோள்.

இந்த அறிக்கை 23-8-1977 காலையிலே ஏடுகளில் வந்த பிறகு, பேரவையில் அவை முன்னவர் அர்த்தாலும் பேரணியும் தேவையில்லையென்று வேண்டுகோள் விடுக்கிறார்.

அதற்குப்பிறகு மறுபரிசீலனை செய்ய எங்களுக்கு நேரமும் இல்லை. அதுமட்டுமல்ல - அவையில் தீர்மானம் கொண்டு வருவதற்கு இணங்கினார்களே, அதற்கு வலுவூட்டுகிற வகையில்தான் பேரணியும் அர்த்தாலும் அமையும் என்பதால் அவற்றைக் கைவிட வேண்டுமென்று தோன்றவுமில்லை.

முதல்வரின் வசதியைக் குறித்து மானியக் கோரிக்கைகளுக்கான பதிலுரைகளைத் தேதிகளையும், நேரத்தையும் மாற்றி மாற்றி மாலை நேரங்களிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு சார்பில் கேட்டபோது தடையின்றி ஒத்துக்கொண்டு ஒத்துழைத்திருக்கிறது எதிர்க்கட்சியான தி.மு.கழகம்!

ஆனால் இலங்கைத் தீர்மானம் நாம் பேரணி நடத்துகிற அதே நேரத்திலேயே பேரவையில் கொண்டுவரப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

காரணம் 24-8-1977 காலையில் மாவட்ட ஆட்சி நிர்வாகம், அறநிலையம் போன்ற முக்கியமான மானியக் கோரிக்கைகளுக்கு அதிக நேரம் தேவைப்படும் என்பதால் அன்று மாலையில் தீர்மானம் பேரவையில் கொண்டு வரப்படும் என்று கருதினோம். தீர்மானம் எப்போது கொண்டு வரலாம் என்பது பற்றிக்கூட எதிர்க்கட்சியைக் கலந்து பேசவில்லை. 23-8-1977 அன்று கூட மாலையில் பேரவையும், மேலவையும் ஒரே நேரத்தில் நடைபெற்றிருக்கின்றன. அதைப்போல 24-8-1977 காலையில் மானியக் கோரிக்கைக்கு நிறைய நேரம் ஒதுக்கி அனைவருக்கும் பேச வாய்ப்பளித்துவிட்டு, மாலையில் தீர்மானத்தைப் பேரவையில் கொண்டு வந்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் தலையாய எதிர்க்கட்சியான தி.மு.க.வும் அரசுடன் இணைந்து அந்தத் தீர்மானத்தை வழிமொழிந்திருக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கும்.

எப்படியோ, 22-8-1977-ல் ஏற்பட்ட தயக்கம் மாறி, 24-8-1977 காலையில் இலங்கைத் தமிழர்களுக்காகத் தீர்மானம் ஒன்றினைச் சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியமைக்காக நமது மனநிறைவைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அந்தத் தீர்மானத்தை அவை முன்னவர் என் அருமை நண்பர் நிதி அமைச்சர் முன்மொழிந்தும், அதனை வழிமொழிந்து காங்கிரஸ் கட்சி, ஜனதா கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய தேசிய பார்வார்டு பிளாக்கட்சி, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி, முஸ்லீம் லீக் கட்சி, ஆகியவற்றின் தலைவர்கள் கருத்துகளை வழங்கியிருப்பதும் இலங்கையில் வேதனைப் புயலில் சிக்கித் தவிக்கும் தமிழர்களுக்கு ஆறுதல் வழங்கும் மாமருந்தாக அமைந்துள்ளது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரணியில் - அதாவது நடுத் தெருவில் - அதாவது அண்ணா சாலையில் இருந்த தி.மு.கழகமும் இலங்கைத் தமிழரைக் காப்போம்! காப்போம்! என்றுதான் முழக்கமிட்டது! பேரவையில் தீர்மானத்தில் உரையாற்றிய மற்ற கட்சித் தலைவர்களும் இலங்கைத் தமிழரைக் காப்போம்! என்றுதான் முழங்கியிருக்கிறார்கள்.

எனவே, இந்தப் பிரச்சினையில் தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் ஒரே குரலைத்தான் எழுப்பியிருக்கிறோம்!

இதில் வேறுபாடு அல்லது மாறுபாடு கொண்ட கருத்து இருக்கக்கூடாது என்ற நிலையில் பேரணியின் எழுச்சியையும், தலைநகரில் முழு அர்த்தால் நடைபெற்ற நிகழ்ச்சியையும் தி.மு.கழகத்திடம் பகை கொண்ட மக்கள் குரல் போன்ற ஏடுகளே கூட வெளியிட்டிருப்பது, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது என்ற வகையில் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை - நமது ரத்தபாசமுள்ள பிரச்சினை! உள்ளத்தை, ஊனை, உயிரை, உயிர்மூச்சைத் தொட்டுக் கொண்டிருக்கிற பிரச்சினை!

மனிதாபிமானமற்ற செயல்கள் எங்கே நடைபெற்றாலும் அதனைக் கண்டிக்கிறோம் - கண்டிப்போம்!

அதிலும் நமது தமிழ் உடன்பிறப்புகள் உலகின் எந்தப் பகுதியில் வன்முறைத் தாக்குதலுக்கு அல்லது இழிவுக்கு ஆளாக்கப்பட்டாலும் அதனைத் தமிழ்ச் சமுதாயத்தின் பாதுகாப்பு அரணாக, அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட தி.மு.கழகம் பார்த்துக் கொண்டு இருக்காது!

அதனால்தான் 1961-ல் இலங்கைத் தமிழர்களுக்காக அண்ணா அவர்கள் எந்த சென்னைத் தெருவிலே குரல் எழுப்பினாரோ, அதே சென்னைத் தெருவில் அவரால் தோற்றுவிக்கப்பட்ட தி.மு.கழகம் நேற்று குரல் எழுப்பியிருக்கிறது!

உலகத்திலே எங்கே தமிழனுக்கு

உயிர்வதை ஏற்படினும் - உதவாதினி

ஒரு தாமதம் - உடனே விழி தமிழா!

என, தியாகத்திற்குத் தயாராக என்றென்றும் இருப்பதே தி.மு.கழகம்!

அந்தக் கழகத்தின் வேண்டுகோளை ஏற்று இலட்சோப லட்சமெனப் பேரணிக்குத் திரண்ட பெருமக்களுக்கும், அத்தால் வெற்றிபெற ஒத்துழைத்த உண்மைத் தமிழர்கள் அனைவருக்கும் வணக்கமும், நன்றியும், வாழ்த்தும், பாராட்டும் உரியதாகுக!

அன்புள்ள,

மு. க.

25-08-1977

461. வானொலி - டெலிவிஷன் திருந்துமா?

உடன்பிறப்பே,

சென்னை வானொலி, டெலிவிஷன் இரண்டும் இன்னமும் இந்திரா காந்திதான் தங்களுக்கு எஜமானியம்மாள் என்று கருதிக் கொண்டு ஒலி, ஒளிகளைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. சட்டப் பேரவை நிகழ்ச்சிகளானாலும், மேலவை நிகழ்ச்சிகளானாலும் - மற்றும் நமது கழகச் செய்திகளானாலும் அவற்றில் எவ்வளவு இருட்டடிப்புச் செய்ய முடியுமோ, அவ்வளவும் செய்து திரித்தும், குறைத்தும் எந்த அளவுக்கு வெளியிட முடியுமோ அந்த அளவுக்கு வெளியிடுவதில் தங்கள் தந்திரத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

பொதுவாழ்வில் உள்ளோர் குற்றத் தடுப்புச் சட்டத்தைக் கழக அரசு, கொண்டு வந்தது! இப்போது அ.தி.மு.க. அரசு, அதனை ரத்துச் செய்துவிட்டது.

அமைச்சர் சவுந்தரபாண்டியன் மீது அந்தச் சட்டப்படி அமைந்துள்ள கமிஷன் முன்பு ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அந்தச் சட்டத்தையே ரத்து செய்வது என்பது உள்நோக்கம் கொண்டதாக ஆகிவிடும் என்பது நமது கருத்தாகும்.

இந்திராவின் வழக்கு உச்சநீதி மன்றத்தில் இருந்தபோது பாராளுமன்றத்தில் தேர்தல் விதிமுறைகளும், சட்டங்களும் மாற்றப்பட்டது எந்த பாணியோ, அதே பாணிதான் இப்போதும் தமிழ்நாடு அரசாங்கத்தால் பின்பற்றப்பட்டுள்ளது. அமைச்சர் சவுந்தரபாண்டியன் மீதுள்ள வழக்கு பற்றி, இந்தக் கமிஷனில் நீதிபதியாக இருந்த வெங்கடாத்திரி அவர்களே ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார். அதன் ஆங்கில வடிவமும், தமிழ் மொழி பெயர்ப்பும் பின்வருமாறு:-

"Adverting to the case of Thiru Soundrapandian, the police report revealed certain allegations in the complaint are true. The case against him is that he received gratification of Rs.500/- from one Thiru Kalianna Gounder to get admission in Teachers Training Pulavar for his daughter, that he received Rs.500/- each from one Ramaswamy Chettiar and Rathnam Naicker for getting their sons passed in S.S.L.C. Examination. I examined one witness Thiru Kalianna Gounder who narrated the entire event leading to the payment of amount to Thiru Soundra Pandian. The two other witnesses who were summoned to appear since failed to appear. warrants of arrest have been ordered. In the meantime, my term expired on 9.6.1977 a.m. and investigation could not be proceeded with. Now, it is desirable a Commissioner has to be appointed to pursue and complete the investigation"

அதாவது தமிழில்;

"திரு சவுந்தரபாண்டியன் வழக்குத் தொடர்பாக காவல் துறையின் அறிக்கைப் புகாரில் கூறப்பட்டிருந்த சில குற்றச் சாட்டுகள் உண்மையானவை என்று வெளிப்படுத்தின. அவர் மீதுள்ள வழக்கு யாதெனில் திரு. காளியண்ண கவுண்டர் என்பவரிடமிருந்து அவரது மகளை புலவர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ப்பதற்காக ரூபாய் 500 லஞ்சம் வாங்கினார் என்பதும், ராமசாமி செட்டியார், ரத்தினம் நாய்க்கர் ஆகியோரது மகன்களை எஸ்.எஸ். எல்.சி தேர்வில் தேர்வு பெறச் செய்வதற்காக ரூபாய் 500 அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் லஞ்சமாகப் பெற்றார் என்பதுமாகும். நான் திரு.காளியண்ண கவுண்டரை சாட்சியாக விசாரித்தேன். திரு.சவுந்தரபாண்டியனுக்கு பணம் கொடுக்கப்பட்டது வரை நடந்தவைகளை அவர் விளக்கினார். மற்ற இருவர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டு அவர்கள் வராமையால் அவர்கள் கைதுக்கான வாரண்டு பிறப்பிக்கப்பட உத்தரவிட்டேன். இதற்கிடையில் 9.6.1977 காலை முதல் எனது பதவிக் காலம் முடிவடைந்தது. இந்த விசாரணையைத் தொடரவும் முடித்திடவும் ஒரு ஆணையர் நியமிக்கப்படுவது விரும்பத்தக்கதாகும்"என்பதாகும்.

இதைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள ஆவல் இல்லாத டெலிவிஷன் நிலையத்தார் அல்லது தெரிந்து கொண்டிருந்தும் திசை திருப்பும் நோக்கத்துடன் இந்தச் சட்டம் பற்றி ஒரு கருத்தரங் கத்தை நடத்தியிருக்கிறார்கள்.

சரி, போகட்டும்! சட்டத்தை ரத்து செய்தது நியாயம்தான் என்பதற்குக் கருத்தரங்கம் நடத்தியவர்கள், ரத்து செய்தது நியாய மல்ல என்பதற்குக் கருத்தரங்கம் நடத்துவார்களா? நடத்திடத் தயாரா?

உடன்பிறப்பே, டெலிவிஷன் - ரேடியோ - சில பத்திரிகைகள் - தி.மு.க.வை வீழ்த்தியே தீருவதென்று கச்சை கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றன. ஆளுங்கட்சியின் தவறுகளை மறைத்துவிட்டு அவைகள் ஆரத்தி எடுக்கட்டும்! ஆலவட்டம் சுழற்றட்டும்! அதற்குரிய வெகுமானங்களைப் பொதுவாகவோ - தனியாகவோ பெற்றுக் கொள்ளட்டும். அதுபற்றி நமக்குக் கவலையில்லை. ஆளுங்கட்சியை எதிர்ப்பதையே அவைகள் நோக்கமாகக் கொள்ள வேண்டுமென்று நாம் கூறுகிற அளவுக்கு குறுகிய மதி கொண்டவர்களுமல்ல!

அதே நேரத்தில் எதிர்க்கட்சிகளுக்கு விரோதமாகச் செயல் படும் வானொலி ஆனாலும் - டெலிவிஷன் ஆனாலும் - செய்தித் துறை ஆனாலும் - வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை களாகும்!

மத்தியில் உள்ள அரசுக்கு, இங்கே மாநிலத்தில் இந்த நிறுவனங்களில் நடைபெறும் மாய்மாலங்கள் தெரியாமல் இருக்கக்கூடும்!

தேவைப்பட்டால் மத்திய அரசின் கவனத்திற்கு இந்த விவகாரத்தை எப்படிக் கொண்டுவருவது என்பது பற்றி விரைவில் கூட இருக்கிற கழகத்தின் செயற்குழு, பொதுக்குழுவில் விவாதித்து முடிவுகளை மேற்கொள்வோம்.

அன்புள்ள,

மு.க.

31-08-1977

462. கோழைகளின் கூடாரமல்ல இது!

உடன்பிறப்பே,

பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் நடத்துகிற வேலை நிறுத்தத்திற்கு எல்லா அரசியல் கட்சிகளும் ஆதரவு தரவேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிச் சார்புடைய தொழிற்சங்கம் உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், தி.மு.க., காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ஜனதா ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும், தலைவர்களும் கலந்துபேசி அனைத்துத் தொழிற் சங்கத்தினர் C.I.T.U. உட்பட அறிவித்துள்ளவாறு 6-9-1977 அன்று மாநில முழுதும் பொது வேலை நிறுத்தத்தை ஆதரிப்பதென்று முடிவெடுத்து அந்த அடிப்படையில் அறிக்கையும் அனைத்துக் கட்சி சார்பில் விடப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் உள்ள சங்கடங்களை எடுத்து விளக்கக் கடமைப்பட்டுள்ள முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., அதனை விடுத்து அரசியல் கட்சிகளின் மீதும் - தொழிலாளர்களின் மீதும் சீறிப் பாய்ந்து பல் உடைக்கும் படலம் வரையில் தனது பேச்சில் ஆவேசத்தைக் காட்டியிருக்கிறார்.

வெளியூர் கூட்டங்களில் அவர் நேற்று பேசிய போது, மாணவர் போராட்டங்களைக் கருணாநிதி தூண்டிவிடுகிறார் என்று கூறியுள்ளார். சட்டப்பேரவையில், நேருக்கு நேர் இந்தக் குற்றச்சாட்டைக் கூறமுடியாமல் குமாரபாளையம் திருமண விழாவுக்குப் போன நேரத்தில் வழியில் ஒரு கூட்டத்தில் இவ்வாறு ஒரு கடைந்தெடுத்த பொய்யைக் கூறியிருக்கிறார்.

விவசாயிகள் சங்கத் தலைவர்களான நாராயணசாமி நாயுடுவையும், கிருஷ்ணசாமிக்கவுண்டரையும் நான் தூண்டிவிட்டு விவசாயப் போராட்டம் நடத்தச் சொல்லியிருக்கிறேனாம். அவர் குறிப்பிடுகிற அந்த இரண்டு பெரியவர்களையும் நான் பார்த்தே

ஒரு வருடத்துக்கு மேலாகிறது! இருந்தாலும் எம்.ஜி.ஆர். அவர்கள் என்மீதும், கழகத்தின் மீதும் வீண்பழி சுமத்துகிறார்.

பல்லவன் பஸ் தொழிலாளர் போராட்டத்துக்கு நோட்டீஸ் கொடுத்ததே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற் சங்கம்தான் என்று சட்டப் பேரவையிலேயே அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால் எம்.ஜி.ஆர். சொல்லுகிறார், பஸ் தொழிலாளர் போராட்டத்தையும் கருணாநிதிதான் தூண்டிவிட்டார் என்று!

30-8-1977 அன்று போக்குவரத்து அமைச்சரிடம் நான் தொடர்பு கொண்டு தொலைபேசியில் பேசும்போதுகூட இந்த பஸ் தொழிலாளர் பிரச்சினையை விரைவில் முடிப்பது நல்லது என்றும் - தனியார்த் துறை பஸ்களை பயன்படுத்தி தொழிலாளர் போராட்டத்தை முறியடிக்க முனைவது முறையாக இருக்காது என்றும் - பிரச்சினை சுமுகமாகத் தீர வேண்டுமென்ற அக்கறையுடன் விளக்கங்களை அளித்தேனேயல்லாமல், இந்தப் போராட்டத்தைப் பெரிதாக்க விரும்பவில்லை. ஆனால் அதே 30-8-1977 அன்று கலைவாணர் விழாவில் முதல்வர் எம்.ஜி.ஆர். பேசியதும், தொடர்ந்து வெளியூர்க் கூட்டங்களில் பேசி வருவதும் வேண்டுமென்றே தி.மு.கழகத்தின் மீது பழிபோடுவதற்கானத் தீய நோக்கம் கொண்டதாகத் தெரிகிறது.

தொழிலாளர் இயக்கத்தை அறவே நசுக்குகிற எண்ணத்துடன், எம்.ஜி.ஆரின் அரசு தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தை எதிர்த்து நின்று தொழிலாளர் அணிக்கு வெற்றி தேடித்தரும் எண்ணத்துடன் அனைத்துக் கட்சிகளும் இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டிருக்கின்றன.

முதல்வர், மிரட்டல் கணைகளைத் தொடுத்த வண்ணமிருக்கிறார்!

கோழைகளின் கூடாரமல்ல இது என்பதை அவருக்கு நாம் தெரிவிக்கிற நாள்தான் செப்டம்பர் ஆறாம் நாள், என்பதை அவர் மறந்திட வேண்டாம்.

அன்புள்ள,

மு. க.

03-09-1977

463. கழக வரலாற்றில் முக்கியமான கட்டம்!

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். ஆட்சியின் மிரட்டல்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. அமைச்சர்களும் சரி, முதலமைச்சரும் சரி – விடுக்கின்ற அறிக்கைகளானாலும், ஆற்றுகின்ற உரைகளானாலும் தி.மு.கழகத்தை அழித்து ஒழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பது என்ற பாணியில் அமைந்திருக்கின்றன.

கழகத்தின் முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும், கழகத்தின் முன்னணித் தலைவர்கள் மீதெல்லாம் வழக்குகள் போடப்படுமென்றும், குறிப்பாக என்னை விரைவில் கைது செய்வது நிச்சயமென்றும் ஒரு அமைச்சர் திருச்சியிலே பேசியிருக்கிறார்.

முதலமைச்சரும் ஒவ்வொரு கூட்டத்திலும் - அது நினைவு நாள் நிகழ்ச்சியாக இருந்தாலும், மணவிழா நிகழ்ச்சியாக இருந் தாலும், நடனவிழா நிகழ்ச்சியாக இருந்தாலும் இதே மாதிரியான அச்சுறுத்தல்களைக் கூறி – 'என்னிடம் கோப்புக்கள் இருக்கின்றன' என்று ஒரு நாளைக்கு நூறு தடவையாவது சொல்லிக் கொண் டிருக்கிறார்.

இந்திரா காந்தியின் ஆட்சியிலேயே நம்மால் எதிர்பார்க்கப் பட்டவைதான் இந்தக் கைதுப் படலங்கள்!

இப்போது இந்திராகாந்தி, தான் கைதாகக் கூடும் என்று கூறுகிற காலத்தையும் பார்க்கிறோம்.

எம்.ஜி.ஆர். ஆட்சியின் மிரட்டல்களுக்கு நாம் பயப்படவில்லை. எத்தனை வழக்குகள் வேண்டுமானாலும் போடட்டும்!

அறுபது நாள் ஆட்சியிலே நூறு ஊழல்களைப் புரிந்திருப்ப வர்கள், தி.மு.கழகத்தைப் பொய் வழக்குகளிலே சிக்க வைத்து வீழ்த்திவிடலாம் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

அண்மையில் டெல்லி மாநகரத்தில் சில காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் மிக முக்கியமான புள்ளி!

அவர்தான் ஆறு மாதங்களுக்கு முன்பு நாற்பது லட்ச ரூபாயைக் கொண்டு வந்து முழுவதும் கறுப்புப் பணம் சென்னையில் இன்று மிக முக்கியப் பொறுப்பில் உள்ளவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றவர். அந்தத் தொகையில் சில ஆயிர ரூபாய் நோட்டுகளை நூறு ரூபாய் நோட்டுகளாக மாற்றுவதற்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் உட்பட அனைத்து விபரங்களையும் விரைவில் வெளிக் கொணர முடியும்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ப்பதற்கு ஐநூறு ரூபாய் லஞ்சம் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு வெங்கடாத்திரி கமிஷனில் விசாரணை நடைபெறும்போதே புகாருக்குரியவர் அமைச்சராக்கப்படுகிறார். அந்த அமைச்சரைக் காப்பாற்றுவதற் காகவே "வெங்கடாத்திரி கமிஷன்" கலைக்கப்படச் சட்டப் பேரவையில் சட்டம் கொண்டு வரப்பட்டு "கமிஷன்" கலைக்கப் பட்டு, அமைச்சர் பாதுகாக்கப்படுகிறார்.

இன்றைய அமைச்சர் ஒருவர், முன்பும் அமைச்சராக இருந்த போது பஸ் அதிபர்களிடம் இரண்டு லட்சத்து ஐம்பதாயிர ரூபாய் வசூல் செய்து கொண்டார் என்று, வேறொரு வழக்கில் அப்ரூவர் ஆக்கப்பட்ட ஒரு சாட்சி '164' வாக்குமூலமே மாஜிஸ்டிரேட் முன்னிலையில் கொடுத்திருக்கிறார்.

மருத்துவக் கல்லூரி தேர்வில் அறிவிக்கப்பட்ட எண்கள், பிறகு மாற்றப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுத்ததாக அறிவிக்கப்பட்டவர்கள், இரண்டொருவர் கல்லூரியில் சேர அனுமதியின்றி இப்போது நீதிமன்றத்தின் துணையை நாடியிருக்கிறார்கள்.

திருத்தணி கோயில் விளம்பரங்கள் அ.தி.மு.க. கட்சி ஏடு களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

யாருக்கும் பதவி நீடிப்பே கிடையாது என்று முதல்வர், அவையில் அறிவித்ததற்கு மாறாக பதவி நீடிப்பு ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவைகள் அறுபது நாள் அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றுள்ள ஊழல்களுக்குச் சில உதாரணங்கள்!

தொழிலாளர்களுக்காக முரட்டுக் குரல் எழுப்பும் ஒருவர் முதலாளிகளிடம் இரகசிய பேரம் நடத்துகிறார் என்ற செய்தி, சந்திக்கு வந்து விட்டது.

எந்தக் குமாரபாளையத்தார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு எம்.ஜி.ஆர். அவர்களை வழக்கிலே சிக்க வைப்பதற்கு மத்திய அரசுக்கு ஆதாரங்களைத் திரட்டித் தந்தாரோ, அந்தக் குமார பாளையத்தார் வீட்டுத் திருமண விழாவிலே இன்றைக்கு எம்.ஜி.ஆர். கலந்து கொள்கிறார். அது அவரது பரந்த உள்ளத்தைக் காட்டுகிறது.

ஆனால் குமாரபாளையத்தார் "அலைஓசை"யில் வெளியிடச் சொல்லி அன்றைக்கு அனுப்பிய ஆதாரக் கடிதங்கள் அப்படியே இருக்கின்றனவே! அதுவும் மிகவும் பத்திரமாக!

இத்தனை ஊழல்களுக்குச் சொந்தக்காரர்களாக ஆக்கப் பட்டிருப்பவர்கள், நாள் தவறாது நம்மை நோக்கி "விட்டேனா பார்!" என்று தொடை தட்டுகிறார்களே, அதை நினைத்தால்தான் விலா நோகச் சிரிப்பு வருகிறது!

நன்றாக மிரட்டட்டும்! நாராச நடையில் முழங்கட்டும்! கைது! விலங்கு! சிறைச்சாலை! எத்தனை பயமுறுத்தல் அம்புகள் உண்டோ அத்தனையும் விட்டுப் பார்க்கட்டும்!

பழிவாங்கும் படலம் தொடரட்டும்!

அரசியல் வஞ்சம் தீர்க்கும்

அத்தியாயங்கள் புரளட்டும்!

உடன்பிறப்பே,

ஒன்றுக்கும் அஞ்சாதே! எதுவரினும் எதிர்த்து நிற்போம். இமயமே நம்மீது சாய்ந்தது! நசுங்கவில்லை நாம்! இந்தக் குன்றங்கள் என்ன செய்துவிடும்?

தொல்லை தருவது கழகத்திற்கு என்ற திட்டம் எல்லை
மீறிப் போவது பற்றி விவாதித்து முடிவெடுக்கத் தில்லை
யிலே கூடுகிறோம் செப்டம்பர் 9, 10 ஆகிய நாட்களில்!

வீண் பழி சுமத்தி நம்மை வீழ்த்திட முனைவோரைக் கண்டு கழகம் அஞ்சாது - கலங்காது - என்பதைத் தெளிவுபடுத்தும் தீர்மானங்களை நிறைவேற்றிடத் தில்லையிலே சந்திப்போம்! விரிவாகப் பேசுவோம்.

சிதம்பரம் செயற்குழு, பொதுக்குழு அதனையொட்டிய பொதுக்கூட்டம் - இவை இந்த நேரத்தில் நமது கழக வரலாற்றில் மிக முக்கியமான கட்டமாகும்!

அன்புள்ள,

மு.க.

05-09-1977

464. நாமும் தயாராகிக் கொள்வோம்!

உடன்பிறப்பே,

சென்னை சிறைச்சாலைக் கொடுமைகள் பற்றி விசாரிப்ப தற்காக ஆளுநர் பட்வாரி அவர்கள் அமைத்த கமிஷனின் நீதிபதி இஸ்மாயில் அவர்கள், விசாரணையின் இறுதிக் கட்டத்தில் ஒருநாள் சென்னை சிறைச்சாலையை நேரில் பார்வையிடுவதற்காகச் சென்றார்.

அப்போது அங்கிருந்த கைதிகள் பலரும் "சிறைச்சாலையில் அரசியல் கைதிகளை அடித்தது உண்மைதான்" என்ற செய்தியை அவர் காதில் போட்டிருக்கிறார்கள்.

நீதிபதி அவர்கள் திரும்பி வந்த பிறகு அந்தக் கைதிகள் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படியொரு செய்தி எங்களுக்குக் கிடைத்து அதனைச் சட்டப்பேரவையில் எடுத்துக் கூறினோம். யாராவது அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் சரியான தகவலை அரசுக்குத் தரமாட்டார்கள். எனவே, ஒரு அமைச்சர் சிறைச்சாலைக்கு உடனடியாகச் சென்று அங்கு நடந்த விபரங்களைத் தெரிந்து வருவது நல்லது என்று நான் குறிப்பிட்டேன்.

உடனே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். எழுந்து, அமைச்சர் களைவிட, ஒரு நீதிபதியையே அனுப்பி என்ன நடந்தது என்பதைத் தெரிந்து வரச் செய்கிறேன் என்று உறுதி அளித்தார். ஆனால் இதுவரையில் எந்த நீதிபதியும் சென்னை சிறைச்சாலைக்குச் சென்று எதையும் விசாரித்து அறிந்ததாகத் தெரியவில்லை.

சட்டப்பேரவையில் நாம் கேட்டது, நீதிபதி இஸ்மாயில் அவர்கள் சென்றபோது அங்குள்ள கைதிகள் 1976 பிப்ரவரியில் நடந்த கொடுமைகளை வெளியிட்டதற்காகச் சிறை அதிகாரிகளால் தாக்கப்பட்டார்கள் என்று நம்பகமான செய்திகள் வந்துள்ளனவே, அதனை விசாரித்தறிய ஒருவரை அனுப்புவீர்களா? என்பதுதான்!

உடனே தங்கு தடையின்றி தாராளமாக வாக்குறுதி வழங்கப் பட்டது. அதற்குப் பிறகு மாதமும் ஒன்று முடியப் போகிறது.

மறுநாளே விசாரித்துத் தெரிவிக்கப்பட வேண்டிய ஒரு விவகாரத்தைப் பற்றி இன்னமும் இந்த அரசு அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

இது மட்டுமல்ல, சென்னைச் சிறையில் 1976 பிப்ரவரி திங்களில் "அரசியல் மிசா" கைதிகளின் மீது நடைபெற்ற மிருகத் தனமான தாக்குதலைப் பற்றி அமைக்கப்பட்ட நீதிபதி இஸ்மாயில் கமிஷன் பற்றிக்கூட இந்த அரசுக்கு எந்தவிதமான அக்கறையும் கிடையாது.

அந்தக் கமிஷனேகூட, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு அமைக்கப்பட்டதல்ல! அமைத்திருக்கவும் மாட்டார்கள்!

ஆளுநர் மேதகு பட்வாரி அவர்கள் தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்று அந்தக் கமிஷனை நியமித்தார்கள். அதற்குப் பிறகு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. கொடுமை புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள அதிகாரிகள் சாட்சிகளைக் கலைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே அந்த அதிகாரிகளில் குறிப்பிடத்தக்கவர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்வதே முறையாகும் என்று முதலமைச்சருக்கு நான் ஒரு முறையீடே எழுதிக் கொடுத்தேன்.

உடனடியாக விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்களித்தார்.

அது குறித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்படி எடுக்கப்படாமைக்கு யார் யாருடைய பரிந்துரைகள் காரணம் என்றும் நமக்குப் புரியவில்லை.

நேர்மையான ஆட்சி! தூய்மையான ஆட்சி! கண்டிப்பான ஆட்சி! கோப்புகளைக் கையிலேயே வைத்திருக்கிற ஆட்சி! என்று அவர்களே அடிக்கடி சொல்லிக் கொள்கிறார்கள்!

இப்படிச் சொல்லிக்கொண்டே எண்ணிறைந்த ஊழல்களையும், நேர்மையற்ற செயல்களையும், நாணயமற்ற காரியங்களையும் நாள்தோறும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சட்டப் பேரவையில் அளித்த வாக்குறுதியே காற்றில் பறக்கிறது என்றால், இவர்கள் மேடைகளில் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை எங்கே நினைத்துப் பார்க்கப் போகிறார்கள்?

எதையாவது குறிப்பிட்டுக் கேட்டால், அல்லது எதிர்க்கட்சி தனக்குரிய கடமையைச் செய்தால் "ஆகா! ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டம் தீட்டுகிறார்கள்!" என்று அலறுவதும், அறிக்கை விடுவதும், முதல்வருக்கு வழக்கமாகி விட்டது.

இவரோடு சேர்ந்து ஒத்துப்பாடுவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தமிழ்நாட்டில் மார் தட்டிக் கொண்டு நிற்கிறார்கள். அதன் தென் சென்னை நகரத் தலைவர் ஒருவர் கேட்கிறார்! நெருக்கடி காலத்தில் இந்திராவை ஆதரித்த கல்யாண சுந்தரத்தோடும், கருப்பையா மூப்பனாரோடும் தொழிலாளர் பிரச்சினைக்காகக் கருணாநிதி சேரலாமா? என்று!

நாங்கள் தொழிலாளர்களின் பொதுநலப் பிரச்சினைக்காக குரல் கொடுக்க ஒன்று சேர்ந்தோம்!

இந்த மார்க்சிஸ்டு தோழர், தொழிலாளர்களின் முதுகில் குத்துவதற்காக இப்போது எம்.ஜி.ஆர். அவர்களுடன் சேர்ந்தாரே! அந்த எம்.ஜி.ஆர். என்ன, நெருக்கடி நிலையை எதிர்த்தவரா?

நாங்களாவது தொழிலாளர் போராட்டத்தில் இணைந்தோம்! தமிழ்நாட்டு மார்க்சிஸ்டுகள் தேர்தல் போராட்டத்திலேயே எம்.ஜி.ஆருடன் கைகுலுக்கிக் கொண்டார்களே!

எம்.ஜி.ஆர். அவசரக்காலச் சட்டத்தை எதிர்த்தவரா? நெருக்கடியைக் கண்டித்தவரா?

என் செய்வது! தமிழ்நாட்டுக்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர்!

தொழிலாளர் அமைச்சர் என்று ஒருவர் பெயரைச் சொல்லுகிறார்கள்!

ஆனால் உண்மையிலேயே வேறு ஒருவர்தான் திரைமறைவில் தொழிலாளர் அமைச்சராக இருந்து வருகிறார்!

அவர்தான், பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர் போராட்டக் குழுவின் முதுகிலே குத்தியவர்!

உடன்பிறப்பே, தமிழ்நாட்டில் முதுகிலே குத்துகிறவர்களின் காலம் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஊழலற்றோர்!

உத்தமர்!

தூய்மையாளர்!

என்ற அடைமொழிகளை அவர்களாகவே இணைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்! நடக்கட்டும் இந்த நாடகம்! விரைவில் வேடம் கலையும்! உத்தமர்களாக நடித்தவர்கள் எப்படிப்பட்ட ஊழல் நாயகர்கள் என்பதை ஊர் அறியும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது!

அதற்கிடையே நடைபெறும் பழிவாங்கும் படலங்களுக்குப் பரிகாரம் காண நாமும் தயாராகிக் கொள்வோம்!

அன்புள்ள,

மு.க.

06-09-1977

465. முடவன் குடித்த தேன்!

உடன்பிறப்பே,

நேற்றும், நேற்றைக்கு முன் தினமும் ஏறத்தாழ எழுபத்தைந் துக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டபோது இடையிலே சேலம் அரசினர் பொறியியல் கல்லூரியிலும், பட்டாபிராம் கலவல கண்ணன் செட்டியார் இந்துக் கல்லூரியிலும் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியது பயணக் களைப்பு நீக்கும் இளநீர்பானமாக அமைந்தன என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த இனிய நினைவுகளுடனேயே இன்றைய கடிதத்தை இலக்கியக் கடிதமாக எழுதுகிறேன்.

முகில் மந்தைகள் மேய்கின்ற மலைத் தொடர் ஒன்று! வளம் கொஞ்சுகிறது - வனப்பு தழைத்துக் கிடக்கிறது. முகில் கூட்டத்தை விரட்டுவது போல கிளைக்கரம் ஆட்டுகின்ற செழித்த மரங்கள் உயர்ந்து நிற்பதில் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன. அந்த மரக்கும்பலின் கொம்பு ஒன்றில் தேனடையொன்று தென்படுகிறது. கடும் உழைப்பைத் தொழிலாகக் கொண்ட தேனீக்கள் நறுமண மலர்களில் இருந்தும், திருமிகுபூக்களில் இருந்தும் பறந்து பறந்து மொண்டு வந்த தேன் நிறைந்த குடமாக அந்தத் தேன்கூடு மரக்கொம்பில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. எத்தனை நாள் பாடுபட்டு, எத்தனை ஆயிரம் தேனீக்கள் உருவாக்கிய இன்சுவை மாளிகை அது! தேன்நாடி, மலர்தேடி பூங்காக்கள்தோறும் பறந்தோடிய அந்தத் தேனீக்களுக்கல்லவா தெரியும் தங்கள் உழைப்பின் வடிவம் அந்தக் கொம்புத் தேன் கூடு என்று!

அந்த மலைப்பகுதியில் உடலால் நகர்ந்தவாறு ஒருவன் தென்படுகிறான், பாவம்! இரண்டு கால்களுமற்ற முடவன். மேகப்புகை மரங்களைச் சேலை போல சுற்றிக் கொள்கிற அழகையும் பார்க்கிறான். சில மேகங்கள், மங்கையர் மேனியிலிருந்து தானாகவே நழுவிடும் மெல்லிய ஆடைகளைப்

போல மரங்களை விட்டு அகலுவதையும் காண்கிறான். மானினம், தேன்சிட்டு, மயில், குயில், மாடப்புறா இவையனைத்தும் அந்த மலையின் அழகுக்கு அழகு செய்வதை உணருகிறான். அவன் விழிகள் விண்ணோக்குகின்றன. வீறுகொண்டு நிற்கும் மரத்தின் கொம்பிலே நமது தென்னாட்டின் வடிவத்தில் தேனடை ஒன்று இருப்பதை அவன் கண்கள் காணத் தவறவில்லை. கண்டவுடன் அவன் நாவில்நீர் ஊறுகிறது. அடடா! அந்தத் தேன் கூட்டை எடுத்துவிட்டால்... அதுவும் மலைத்தேன்! அதிலும் கொம்புத்தேன்! எப்படியும் அந்தத் தேனடையை அடைந்தே தீர வேண்டும் என்று எண்ணுகிறான். அதற்கு அந்த மரத்தில் அல்லவா ஏறிட வேண்டும்? மரம் ஏறிடக் காலில்லாதவனால் எவ்வாறு இயலும்? கீழேயிருந்து ஒரு கல்லையெடுத்துக் குறிபார்த்து வீசினால் தேனடை உடையும்! தேன் கொட்டும்! வாய்பிளந்து அதனை அருந்தி இன்புறலாம்! இப்படியும் ஒரு ஆசை அந்த முடவனுக்கு.

கல் எறிந்தால், தேன் கூட்டிலிருந்து தேனீக்கள் படையல்லவா கிளம்பும்! அந்தத் தாக்குதலில் இருந்து தப்பிட, அந்த முடவனால் ஓடிடவும் முடியாதே!

இறுதியாக, அவன் மனம் திடமான ஒரு முடிவுக்கு வருகிறது. மரம் ஏறித் தேன் கூட்டைக் கவர்ந்திடவும், இயலாது! கல் எறிந்து அதனைச் சிதைத்து, சிந்துகின்ற தேனருவியைக் குடித்திடவும் இயலாது! எனவே இன்னலற்ற ஒரு வழியை அவன் கண்டு பிடிக்கிறான். கண்களால் தேனடையைப் பார்க்கிறான். தன் இரு வெறுங்கைகளையும் குழித்து வைத்துக் கொண்டு அதில் தேன் கொட்டுவது போலக் கற்பனை செய்து கொண்டு, தேனருந்தும் பாவனையில் வெறுங்கையை நக்கி, நக்கி இன்பமடைகிறான்.

இந்த வேடிக்கையான காட்சியை காதலால் துன்புறும் ஒரு பெண்ணுக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார் “குறுந்தொகை”யில் புலவர் பரணர் என்பார்.

காதலைத் தற்போதைக்குச் சற்றுத் தள்ளி வைத்து விட்டு, பரணரின் பாடலை அரசியல் ரீதியாக அணுகுவோமா?

கழகமெனும் தேன்கூட்டை, கடும்பணியால் தேனீக்கள் போலத் தொண்டர்கள் அமைத்த அந்தக் கொம்புத்தேனாம் கொள்கைக் கூட்டை, உடைத்திடச் சில பேர், உடைத்துத்

தேன் பருகச் சில பேர், அண்ணாந்து பார்த்துப் பார்த்துக் கழுத்து வலிகண்ட காரணத்தால், அந்தக் காலில்லா முடங்கள் வேறு வழியின்றி வெறுங்கையைக் குழித்துக் கொண்டு தேனை நக்குவது போல் நடித்து மகிழ்கின்றன.

“குறுந்தாட் கூதளி ஆடிய நெடு வரைப்
பெருந்தேன் கண்ட இருங்கால் முடவன்
உட்கைச் சிறு கடை கோலி, கீழ் இருந்து
சுட்டுபு நக்கியாங்கு...”

எத்துணை அழகு செறிந்த, பொருள் பொதிந்த நயமிகு பாடல் கண்டாயா?

முடவன், தேனைச் சுவைக்க முடியவில்லை. சுவைப்பது போல் பாசாங்கு செய்து ஆறுதல் அடைகிறான். ஆனால் நாமோ இந்த இலக்கியச் சுவையாம் இன்பத் தேனை அள்ளிக் குடித்துத் துள்ளிக் குதித்து மகிழ்கிறோம். இல்லையா? உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு.க.

09-09-1977

466. பாரீர்; இதோ ஒரு பண்பாளரை!!!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தன்னை உலகத்திலேயே இல்லாத பண்பாளராகக் காட்டிக் கொள்வதற்கு மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்கிறார். செயல் மூலம் அல்ல! பேச்சு மூலம்தான்!

பாரதி விழா நடத்தும்போது பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் நம்மை அழைத்த நேரங்களில் நாம் பொள்ளாச்சி யாருக்கு அடிமையாகிவிட்டவர்கள் என்று எம்.ஜி.ஆர். அவர்களும், அவரது கட்சியினரும், அவரது ஏடுகளும் நம்மை விமர்சித்ததை மறந்துவிட வில்லை. "சக்தி பைப்" விவகாரம் வரையில் கொண்டுபோய் ஊழல் புகாராகக் கொடுத்தார்கள்.

இன்று அதே மகாலிங்கனார் அழைக்கிற பாரதி விழாவில் எம்.ஜி.ஆர். கலந்துகொண்டு அளவளாவுகிறார். சிலம்புச் செல்வர் அவர்கள் தி.மு.க. ஆட்சியின் சாதனைகளையும், தமிழ்த் தொண்டுகளையும் புகழ்ந்தபோதெல்லாம் அவரை கருணாநிதிக்கு "ஒத்து ஊதுபவர்" என்றும் "பக்க வாத்தியக்காரர்" என்றும் அந்தப் "பண்பாளர்கள்"? கேவல மொழி கூறவும், கேலிச் சித்திரங்கள் தீட்டிடவும் தவறியதில்லை.

இன்று சிலம்புச் செல்வரைப் பற்றியோ, நண்பர் மகாலிங் கத்தைப் பற்றியோ அவர்களும், எம்.ஜி.ஆரும் விழாக்களில் கலந்துகொள்வது பற்றியோ, ஏற்கனவே கடந்த காலத்தில் அ.தி.மு.க.வினர் அவதூறுக் கணைகள் - ஆபாச அர்ச்சனைகள் - பொழிந்ததைப்போல நாம் பொழிந்திடவும் மாட்டோம். அது முறையுமல்ல என்பதை உணர்ந்தவர்கள் நாம் என்பதால் இன்று நடைபெறுகிற விழாக்களில் அவர்கள் கலந்துகொண்டு கூறுகிற நற்கருத்துக்களை வரவேற்கவும் செய்கிறோம். ஆனால் எதற்கெடுத்தாலும் 'பண்பு' பற்றி பேசுகிற நண்பர் எம்.ஜி.ஆர்.,

கடந்த காலத்தில் எப்படியெல்லாம் நடந்து கொண்டார்? ஏன், இப்போதுதான் எப்படி நடந்து கொள்கிறார்?

எதிர்க் கட்சியினர் அவரைக் குறை கூறிப் பேசுவதை அவரது வெற்றிக்கான படிக்கட்டுகளாக அமைத்துக் கொள்வாராம் - அவ்வளவு பண்பாளராம் அவர்! அதனால் தான் கலைவாணர் விழாவில் பேசும்போது "பல்லை உடைப்போம்" என்ற பண்பார்ந்த பேச்சைப் பேசியிருக்கிறார்.

பல்பொடிக்கு வரி தேவையில்லை என்று சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினர் விடுத்த வேண்டுகோளுக்கு, மறுநாள் கலைவாணர் விழாவிலே, பல்லின் தன்மை, பற்குச்சியின் மேன்மை, இவற்றைப் பற்றிய தத்துவங்களை?க் கூறியதோடு தனது கட்சிக்காரர்களை விட்டால் பற்களைக் கழற்றிவிடுவார்கள் என்றும் முண்டா தட்டிக்கொண்டு முழங்கியிருக்கிறார்!

"என்னாடே!...கொழுப்பு கும்மாளம் போடுதா? நம்மக் கிட்டே வச்சுக்கினே, நெஞ்சிலே இருக்கிற மஞ்சாச் சோத்தை எடுத்துடுவேன், ஆமாம்!"

இந்த பாஷையை சென்னை நகரில் சில பகுதிகளில் எப்போதாவது கேட்க முடியும், அதாவது அந்தி சாய்ந்த பிறகு!

அதே பாஷையில் பல்லை உடைக்கும் பேச்சை ஒரு முதலமைச்சர் பேசி, அது 'தினமணி' போன்ற ஏடுகளிலே கூட வெளிவந்திருக்கிறது என்றால், அந்தப் பேச்சு பகைவரையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டு பண்பாகப் பேசப்படுகிற பேச்சு என்றுதானே கூற வேண்டும்!

என்ன உடன்பிறப்பே! இந்த விளக்கத்தைக் கேட்டு சிரிக்கத் தோன்றுகிறதா? உஷ்! சிரிக்காதே! அவர் முதலமைச்சர்! நடிகர் சங்க விழாவில் அவரே சொல்லியிருக்கிறார்! மாண்புமிகு முதலமைச்சர்! அவரிடம் கோப்புகள் வேறு இருக்கின்றன. அதனால் சிரிக்காதே! சிந்தித்தாலே போதும் காலம் எப்படியெல்லாம் மாறுகிறது என்று!

பண்புக்கும், பெருந்தன்மைக்கும் மொத்த உருவமே தானே தான் என்று பறைசாற்றிக் கொள்கிற அவர் அதற்கோர் எடுத்துக் காட்டாக அண்மையில் ஒரு அரிய காரியத்தைச் செய்திருக்கிறார்.

தந்தை பெரியார் சிலையை செப்டம்பர் 15-ஆம் நாள் சென்னையில் திறக்கப் போவதாக கடற்கரைக் கூட்டத்தில்

அறிவித்தார். பிறகு சட்டசபை நடந்தபோது பெரியார் சிலை செப்டம்பர் 17-ஆம் நாள் திறக்கப்படும் என்று செய்திகள் வந்தன. ஏன்? எதிரில் உட்கார்ந்திருந்த என்னிடம்கூட பெரியார் சிலை திறப்புவிழா 17-ஆம் தேதி என்று கூறினார். பிறகு திடீரென ஒருநாள் 18-ஆம் தேதி என்று அறிவிக்கப்பட்டது.

தி.மு.க. சார்பில் அண்ணா சிலை திறப்பதற்கு செப்டம்பர் 18 - என்று நாள் குறித்திருந்தோம் நாம்! எம்.ஜி.ஆரின் அறிவிப்பு வந்ததும் அண்ணா சிலையைத் திறப்பதற்கான தேதியை நாம் மாற்றிக் கொண்டோம். பெரியார் சிலையைத் திறக்கும் அதே நாளில் அண்ணா சிலையைத் திறந்து இருவிழாக்களில் தேவையற்ற மோதுதல் வேண்டாமெனக் கருதியதே அதற்குக் காரணம்! 18-ஆம் தேதி என்றிருந்த முப்பெரும் விழாப் பொதுக் கூட்டத்தைக்கூட 17-ஆம் தேதிக்கு மாற்றிக் கொண்டு விட்டோம். ஆனால் இந்த நேரத்தில் ஒன்றை மறந்துவிடக் கூடாது!

1974-ஆம் ஆண்டு நமது கழகச் சார்பில் அண்ணா சாலையில் தந்தை பெரியார் சிலையைத் திறந்தபோது அதே நாளில், நமது விழாவுக்குப் போட்டியாக அண்ணா மேம்பாலத்தருகே பெரியார் சிலைக்கான பீடங்கட்ட ஒரு அடிக்கல் நாட்டு விழாவை நடத்தியவர்தான் எம்.ஜி.ஆர்.! இதற்குப் பெயர்தான் பண்பாடு! பெருந்தன்மை! அது மட்டுமல்ல, "அண்ணா பாலத்தின் ஒரு பக்கத்தில் பெரியார் சிலையை வைத்தால் மற்ற பகுதிகளில் பார்வையாக இராது- வேறொரு பொருத்தமான இடம் தேர்ந்தெடுங்களேன்" என்று அரசின் சார்பில் கூறியபொழுது "முடியாது அங்கேதான் இடம் வேண்டும்" என்று அவர்களே "வரைபடம்" கொண்டு வந்து கொடுத்து அனுமதி கேட்டார்கள். அவ்வாறே அன்றைய கழக அரசு அனுமதியும் கொடுத்தது.

1974-ல் அனுமதியைப் பெற்று நாம் பெரியார் சிலை திறந்த அதே நாளில் போட்டிக்குக் கல்நாட்டு விழா நடத்தி- அதன் பிறகு ஓராண்டு கழித்துப் பீடம் கட்டி சுமார் மூன்றாண்டு கழித்து இப்போது சிலையைத் திறக்கப் போகிறார்கள்! பரவாயில்லை! வரவேற்கிறோம்!

ஆனால் நாம் அண்ணா அறிவாலயத்துக்கு அருகே தியாகராயர் சாலை முனையில் அண்ணா சாலை ஓரத்தில் போக்குவரத்திற்கோ, எதிர்காலத்தில் சாலை விரிவுபடுத்தும் திட்டம் இருந்தால் அதற்கு இடையூறு இல்லாமலோ ஒரு இடத்தில் அண்ணா சிலை வைக்க

சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பாகக் கேட்டோம். முதல்வரிடம் நமது துணைப் பொதுச்செயலாளர் ப.உ.ச. அவர்களும் அது குறித்துப் பேசியிருக்கிறார்!

அவர்கள் 1974-ல் போட்டி விழா நடத்தியது போல அல்லாமல் நமது விழாவை செப்டம்பர் 25-ஆம் நாள் வைத்துக் கொள்வ தென்றும் முடிவு செய்தோம். பொறியாளர்கள்கூட முதலில் நேரில் அந்த இடத்திற்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. இப்போது எழுத்து மூலமாக அண்ணா சிலை அமைக்க அனுமதி மறுக்கப்பட்டு தகவல் தரப்பட்டுள்ளது.

இதற்குப் பெயர்தான் பண்பாடு, பெருந்தன்மை என்று யாராவது வாதிடுவார்களேயானால், அந்த "சிறப்பு அகராதி" நம் கைவசமில்லை. அப்படியொரு பொருள் கொள்வதற்கு!

கைவிலங்கு - கால் விலங்கு-போலீஸ் ஜீப்பிலே ஊர்வலம் - இப்படிப்பட்ட பண்பாடு மிகுந்த பேச்சுக்களை அவரும், அவரது அமைச்சர்களும் பொது மேடைகளில் நாள்தோறும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.

உடன்பிறப்பே, கடந்த ஆண்டுகளில் என் பிறந்த நாள் விழாக்களில் எனக்குக் கொடும்பாவி கட்டி எரிக்குமாறு அவரது கட்சி ஏடுகளில் அறிக்கைவிட்ட எம்.ஜி.ஆர். அவர்களிடத்தில், நான் பண்பாடு, பெருந்தன்மை எதையும் எதிர்பார்க்கவில்லை.

எனக்கு உதட்டிலே ஒன்றும், உள்ளத்திலே ஒன்றும் வைத்துக் கொண்டு பேசத் தெரியாது! அப்படிப் பேசக் கற்றவர்கள்தான் இன்று உத்தமர்களாக - பண்பாளர்களாக - போற்றப்படுகிறார்கள் என்பது நாமறிந்த உண்மை!

எனினும், நமக்கு வேண்டாம் அந்தப் போக்கு!

தன்னைப் பண்பாளர் என்பதைக் காட்டிக் கொள்வதற்காவது, அண்ணா சிலை வைத்திடச் சென்னை மாவட்டக் கழகம் கோரியுள்ள இடத்தினை எம்.ஜி.ஆர். அவர்கள் உடனடியாக அனுமதிக்க வேண்டுமென்று, அவரது உற்ற தோழர்கள் அவருக்கு உபதேசம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

13-09-1977

467. பெரியார் தந்த துணிவுண்டு!

உடன்பிறப்பே,

சுண்டெலி வந்ததென்று சூரப்பூனை அடுப்பின் அண்டையில் பதுங்குவதுண்டோ?

அரவமொன்று ஆடிவர - கண்ட கீரிப்பிள்ளை கலங்கியே வியர்த்து நிற்பதுண்டோ?

நண்டுக்குப் பயந்தொளிந்து நரிக்கூட்டம் நடுங்குதல்தான் கேட்டதுண்டோ?

குள்ளநரியின் கோபங்கண்டு சிங்க ஏறுதான் கோழை போல் ஓடிடுமோ?

முதுகெலும்பில்லாப் பேடிகட்குப் போர்க்களத்து மாவீரன் மண்டியிட்ட வரலாறுண்டோ?

பெரியாரின் "குடியரசு" அலுவலகத்தில் முப்பது ஆண்டுகட்கு முன்பு துணையாசிரியர் பொறுப்பினை ஏற்றிருந்த போது இந்தக் கருத்தமைந்த கவிதையொன்றினை எழுதிய நினைவு எனக்கு இன்று எழுந்தது. பெரியார் பிறந்த நாளன்றோ இன்று! அதனால் அந்தக் கவிதை நினைவுக்கு வந்தது. அவரின் அலுவலகத்தில் ஈரோடு நகரில் வாழ்ந்ததும் - அவர் இல்லத்தில் அவரோடு அமர்ந்து உண்டதும் - அன்னை மணியம்மையார் எங்கட்கு உணவு பரிமாறியதும் - இரவு நெடுநேரம் வரையில் பெரியார் வீட்டு மேல் மாடியில் அவருக்கு எதிரே அமர்ந்து அரசியல், சமுதாய சீர்த்திருத்தப் பாடங்களைக் கேட்டதும் - எல்லாமே நேற்று நடந்ததுபோல் இருக்கின்றன.

எத்தனையோ எதிர்ப்புகள் அவருக்கு! நாலா திசையிலிருந்தும் வசைமாரி பொழிந்த வண்ணமிருந்தனர், தங்கள் வாழ்வுக்கு வழிதேடிக் கொண்டு தன்மான இயக்கத்தைத் தகர்ப்பதற்கு முனைந்திட்ட தன்னலச் சிறு மனிதர்கள், குறுமதியினர்! பெரியார்

ஒரு நச்சாறு என நவின்றோரும் உண்டு - பின்னர் அவர்கள் எவ்வாறு அடங்கினர் என்று சரிதமும் உண்டு! கொல்லுவேன் - குடலைப் பிடுங்குவேன் - என்று மிரட்டல் கடிதம் வராத நாள் இருக்காது! எங்களூர் கூட்டத்திற்கு வந்தால் திரும்பிப் போக முடியாது என்று எச்சரிக்கை மடல் எத்தனை எத்தனையோ! அனைத்தையும் சிரித்தபடி படித்து - மடித்து வைத்திடுவார்!

அவரின் எதிர்ப்புக்கு ஆளானவர்கள் - அல்லது இலக்கான வைகள் - சொத்தை சோடைகளா? அல்ல! அல்ல! வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், அவை அறிமுகப்படுத்திய ஆயிரம் ஆயிரம் கடவுளர்கள் - சர்வ வல்லமை வாய்ந்ததாகக் கூறப்பட்ட அவற்றை எதிர்க்கத்தான் அவர் சல்லடம் கட்டி நின்றார். அவர் கையிலிருந்த போர்வாளின் பளபளப்பு கண்டு வைதிகபுரி அஞ்சி நின்றது. சாதி சமய வெறியர்களின் தலையில் ஓங்கி விழும் சம்மட்டியடியாக அவரது பேச்சும் எழுத்தும் அமைந்தன.

எதிர்ப்பு இல்லாத நாளை அவர் வீணான நாளாகக் கருதினார். ஊழலிலே ஊறித்திளைத்தவர்கள் அவர் உருவாக்கி வளர்த்த உணர்வுகளை அழிக்க, அவர் மீதே ஊழல் புகார்களை அடுக்கினர். அவற்றைக் காலால் உதைத்துத் தரைமட்டமாக்கி வெண்தாடி நிமிர, வேங்கையென எழுந்து நின்றார்.

அவதூறுக் கணைகளின் முனைகளைத் தன் கூரிய விழிப் பார்வையாலேயே மழுங்கிப் போகச் செய்தார்.

அவர் கண்ட அரசியலிலும் சரி, அவர் புகுந்த களங்களிலும் சரி, முதுகில் குத்துவோர் இருந்தனர். துரோகம் புரிவோர் இருந்தனர். நன்றி மறந்தோர் இருந்தனர். அவரை அழிப்பதொன்றே குறிக்கோள் எனத் திட்டமிட்டோரும் இருந்தனர். அவரைவிட்டு அண்ணா தலைமையில் நாம் பிரிந்து வந்த பிறகும் அவரால் நாம் உருவானோம் என்பதை மறந்ததுமில்லை. அந்தத் தாய்க் கழகமாம் திராவிடர் கழகத்தை அழித்திட எண்ணியதுமில்லை. அந்தப் பெருந்தன்மையும், அரசியல் பண்பாடும் அற்றவர்கள் இன்றுபோல் அன்றும் இருந்தனர். அவர்களின் வெத்துவேட்டுப் பேச்சுக்கள், வாய் வீச்சுக்கள் அனைத்தும் பெரியார் முன்னே எரிதழல் வீழ்ந்த வைக்கோல்களாயின.

அவர் காணாத களங்கள் இல்லை. எந்தக் களத்திலும் அவர் எவனுக்கும் பயந்ததுமில்லை. சிறைச்சாலைப் பிரவேசம்

அவருக்குப் பொழுதுபோக்காகவே இருந்தது! போர் முழக்கம் அவரது இதயத் துடிப்பு! முன் வைத்த காலைப் பின் வைக்காத துணிவும் உறுதியும் அவரின் கூடப் பிறந்தவைகள்!

அவருக்குத்தான் இன்று பிறந்த நாள்!

இந்த நாளில் அவர் பெற்றிருந்த துணிவையும், உறுதியையும் பெறுவோம் - ஊளையிடும் எதிர்ப்புகளை ஊதி எறிவோம் என்ற தெம்புடன் பீடுநடை போடுவோம்! வாழ்க பெரியார்! வாழ்க! வாழ்க!

அன்புள்ள,

மு.க.

17-09-1977

468. சென்னையில் அண்ணா சிலை - மேலும் சில விளக்கங்கள்!

உடன்பிறப்பே,

இத்துடன் உள்ள வரைபடம் சென்னையில் அண்ணா சிலை அமைப்பதற்காக இடத்திற்கு அனுமதி கேட்டு அரசாங்கத்திற்கும், தலைமைப் பொறியாளருக்கும் அளிக்கப்பட்டதாகும்.

சர்.தியாகராயர் சாலை என்றுள்ள இடத்தில் சதுர வடிவமாகக் காட்டப்பட்டுள்ள இடத்தைத்தான் நாம் கேட்டுள்ளோம்.

“அண்ணா சாலை” என்ற வார்த்தையில் “லை” என்ற எழுத்து வரைபடத்தில் காணப்படுகிறதல்லவா, அந்த இடத்தில் அதாவது சாலையின் மையமாகச் சிலைவைக்க அனுமதி கிடைக்குமா என்று தலைமைப் பொறியாளரிடம் முதலில் கேட்கப்பட்டது. அதற்குத் தலைமைப் பொறியாளர் கூறிய பதில் பின் வருமாறு-

“ஏற்கனவே கவர்னர் ஆட்சியில் காமராஜர் சிலை வைக்கக் கேட்டபோது அந்த இடம் மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே நீங்கள் அண்ணா சாலையும் தியாகராயர் சாலையும் சந்திக்கும் அகலமான பகுதியில் தியாகராயர் சாலையின் நடுப் பகுதியில் இடம் குறித்துக் கேட்டால் அனுமதி தருவதற்கு வசதியாக இருக்கும்”

இப்படித் தலைமைப் பொறியாளர் விளக்கமாகப் பதில் சொன்ன பிறகுதான் அவர் குறிப்பிட்டவாறே “வரைபடம்” தயாரித்து அனுப்பி வைக்கப்பட்டு அனுமதி கோரப்பட்டது.

தியாகராயர் சாலையின் அகலம் அறுபத்தி ஐந்து அடிகள்! அதிலும் சிலை வைக்கிற இடத்தில் தியாகராயர் சாலை மேலும் அகன்று இருக்கிற காரணத்தால் தொண்ணூறு அடிகளுக்கு அதிகமாகவே அகலம் இருக்கும்.

முழு உருவச் சிலை வைப்பதற்கு அனுமதி கிடைத்து விட்டால் ஏற்கனவே அந்தச் சாலையின் ஒரு மூலையில் வைக்கப்பட்டுள்ள அண்ணாவின் மார்பளவுச் சிலையை அங்கிருந்து வேறிடத்துக்கு மாற்றிவிடுகிறோம் என்றும் கூறியிருக்கிறோம்.

உலக வங்கியின் உதவியோடு, சாலையை அகலப்படுத்தப் போகிறோம் என்று கூறுகிறார்கள். அது, சிலை அங்கே வைப்பதற்கு மேலும் ஒரு தக்க காரணமாக அமைகிறதே அல்லாமல் அனுமதி மறுப்பதற்குரிய காரணமாக அமையவில்லை.

அண்ணாவின் பெயரால் ஆட்சி நடத்துகிறோம் என்று கூறுகிறவர்கள், அண்ணா பெற்றிருந்த பரந்த மனப்பான்மையைப் பெற்றிராதது விந்தையானது! வேதனையானதும் என்றுதான் கூறவேண்டியுள்ளது.

உலகத் தமிழ் மாநாட்டின்போது கடற்கரையில் சிலைகள் பலவற்றை அமைத்த நேரத்தில் கம்பருக்கும் சிலை அமைக்க வேண்டுமென்று திரு.கருத்திருமன் அவர்கள் அண்ணா அவர்களை அணுகிக் கேட்டார். அட்டியின்றி அன்றைய முதல்வர் அண்ணா அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்டார்.

அந்த விழாவினையொட்டி நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், அண்ணா சிலை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, அந்தச் சிலையை பூக்கடைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில்தான் அமைக்க வேண்டுமென்றார். நான்தான் அவருக்கு எடுத்துச் சொல்லி, அன்றைய தினம் 'மௌண்ட் ரோடு' என்ற பெயரில் இருந்த இப்போதுள்ள அண்ணா சாலையில் அண்ணா சிலை அமைந்திட வேண்டுமென்பதை வலியுறுத்தி, அவ்வாறே சிலையும் வைக்கப்பட்டது.

கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது விருத்தாசலத்தில் பெருந் தலைவர் காமராஜர் சிலையை போக்குவரத்துக்குச் சங்கடமான இடத்திலே வைப்பதற்கு அனுமதி கேட்டார்கள். அதுபற்றி அதிகாரிகள் கூறிய கருத்துகளை மறுத்துவிட்டு அவர்கள் கோரிய இடத்திலே காமராஜர் சிலை வைக்க அனுமதி வழங்கப்பட்டது.

சென்னை சைதாப்பேட்டைப் பகுதியில், ஒரு குறுகிய தெரு முனையில் அண்ணாவின் சிறிய உருவச் சிலையொன்று இருக்கிறதே, அதைப் பார்த்திருக்கிறாயா?

1974-ஆம் ஆண்டு நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால் அ.தி.மு.க. சார்பில் திறந்து வைக்கப்பட்ட சிலையாகும் அது! அதற்கு ஏதாவது தொடர்புடைய இலாகாக்களிடமோ, அரசிடமோ முன் அனுமதி பெற்றார்களா என்றால், இல்லவே இல்லை - என்று தெரிய வருகிறது! அப்படியிருந்தும் நாம் அதை அப்போது தடுக்கவில்லை. நேற்று திறந்த பெரியார் சிலையை அண்ணா மேம்பாலத் தருகே தான் வைக்க வேண்டுமென்று அ.தி.மு.க.வினர்

கோரியதைக் கழக அரசு ஏற்றுக் கொண்டு மூன்றாண்டுகட்கு முன்பே அனுமதி அளித்தது என்பதையும் சுட்டிக் காட்டுவது இந்த நேரத்தில் பொருத்தமுடையதாகும்.

சிலை வைப்பதை பெரிய பிரச்சினை ஆக்க வேண்டுமா? என்ற கேள்வியை நான் அலட்சியப்படுத்த விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில், இதனைப் பெரிய பிரச்சினை ஆக்கி விட்டது இன்றைய அரசுதான் என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அனுமதி மறுக்கப்பட்ட பிறகு மாவட்டக் கழகச் சார்பில் மாவட்டச் செயலாளர் நண்பர் சீதாபதி, முதலமைச்சரை நேரில் சந்தித்து ஆவன செய்திடப் பலமுறை முயன்றும் 'பேட்டி'யே கிடைக்கவில்லை அவருக்கு!

இத்தனையும் பார்க்கும்போது தி.மு.கழகம் சென்னையில் அண்ணா சிலை வைப்பதைத் திட்டமிட்டே அரசினர், மறுக்கிறார்கள் என்றுதானே எண்ணிட வேண்டியுள்ளது.

ஒரு எதிர்க்கட்சி, தனக்குரிய வேதனையை வெளிப்படுத்த - பிரச்சினையை மக்களுக்குப் புரிய வைக்க - பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்துகின்ற சாதாரண ஜனநாயக உரிமைகளைக் கூட வன்முறைச் செயல்களின் மூலம் தடுப்பதற்கு ஆளுங்கட்சி திட்டங்களைத் தீட்டுவது எந்த வகையில் நியாயமென்று புரியவில்லை.

"பொது மக்கள் பார்த்துக் கொள்வார்கள்" என்று பொறுப்பிலே உள்ள முதல்வர் பேசுவது எத்தகைய வன்முறைகளுக்கும், சட்டம் - ஒழுங்கு, அமைதியற்ற தன்மைகளுக்கும் நாட்டைக் கொண்டு போய் விடும் என்பது கடந்த கால வரலாறுகள் காட்டும் பாடம்!

எனவே, காழ்ப்புணர்ச்சியின்றி இந்தப் பிரச்சினையை அணுகி அண்ணா சிலை அமைக்கும் அனுமதியைத் தி.மு. கழகத்திற்கு அரசு அளித்திடுமென்று எதிர்பார்க்கிறேன்.

இல்லையேல் நாங்களாகத் தேடிச் செல்லாத ஒரு போராட்டத்தை, இந்த அரசினர் எங்கள் மீது திணிக்கிறார்கள் என்பதை மக்களுக்கு விளக்கிடுவதற்கு, வருகிற 25-ஆம் நாள் ஞாயிறன்று நாடெங்கும் கண்டன ஊர்வலங்களும் - பொதுக் கூட்டங்களும் நடத்திட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அன்புள்ள,

மு.க.

19-09-1977

469. பிறக்கவுமில்லை பிறக்கப்போவதுமில்லை!

உடன்பிறப்பே,

பெரியாரைப் பற்றிய வரலாறோ, அவரது கொள்கைகளைப் பற்றிய அரிச்சுவடியோ தெரியாத குழப்பவாதியான நண்பர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள், "பெரியார் சிலை திறப்பு விழா" என்ற பெயரால் நடத்திய போலி நாடகத்தில் அவர் உதிர்த்த அடாவடித்தனமான கருத்துக்கள் சிலவற்றுக்கு நான் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா பிறந்தநாள் விழாவை இந்த ஆண்டு முதல் அரசாங்க விழாவாக நடத்தப் போவதாக அறிவித்து, அந்த விழா நிகழ்ச்சிகளில் என்னையும், தி.மு.கழகத்தையும் ஏசிப் பேசுவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு அவரும், அவரது சீடர்களும், அவரிடம் ஆதாயம் பெறும் சில நண்பர்களும் உரை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

அரசாங்கப் பணம் செலவழிக்கப்படுவது அண்ணா விழாவுக்காக!

அதில் அர்ச்சனைகள் - ஆபாசத் தாக்குதல்கள் நடத்துவது - தி.மு.கழகத்தின் மீது!

ஒரு மாபெரும் தலைவரின் விழாவைக் கொண்டாட மக்களின் வரிப் பணத்தைச் செலவிடுவது தவறல்ல!

அவரே அறிவித்திருப்பதுபோல், பெரியார் பிறந்தநாள், ராஜாஜி பிறந்தநாள், காமராஜர் பிறந்தநாள், காயிதேமில்லத் பிறந்த நாள், அம்பேத்கர் பிறந்தநாள், பசும்பொன் தேவர் பிறந்தநாள், சிதம்பரனார் பிறந்தநாள், திரு.வி.க. பிறந்தநாள், பாரதியார் பிறந்தநாள், பாரதிதாசன் பிறந்தநாள் அனைத்தையும் அரசாங்க விழாக்களாக நடத்த முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு காரியமாகும்.

ஆனால் அந்த விழாக்களில் விழாக்களுக்குரிய கதாநாயகர் களின் அருமை பெருமைகளையும், தியாகச் செயல்களையும் எடுத்துச் சொல்லி அவர்தம் வாழ்க்கை, மற்றவர்க்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என்ற அளவில் பேச்சுக்களோ, நிகழ்ச்சிகளோ இருக்க வேண்டுமேயல்லாமல் மக்களின் வரிப் பணத்தில் எதிர்க் கட்சிகளைத் திட்டுவதற்கும், குறிப்பாகத் தி.மு.கழகத்தைத் தரக் குறைவாகத் தாக்குவதற்கும் அந்த விழாக்கள் பயன்படுமேயானால் அவற்றைப் பொறுத்துக் கொள்வது என்பது இயலாத ஒன்றாகும்.

எந்த இடத்தில் என்ன பேசுவது என்பது முதலமைச்சருக்குத் தெரியாது என்பதற்குச் சுற்றுலா கருத்தரங்கத்தில் அவர் ஆற்றிய பேருரையே சான்று பகரும்! கலைவாணர் அரங்கில் அவர் பொழிந்த சொற்பொழிவே எடுத்துக்காட்டாகும்.

அதைப்போலத்தான் அரசு நடத்திய அண்ணா விழாவிலும் பேசியிருக்கிறார். அனைத்துக் கட்சியினரையும் அழைத்து நடத்தியதாகக் கூறப்படும் அ.தி.மு.க. ஏற்பாடு செய்த பெரியார் சிலை திறப்பு விழாவிலும் பேசியிருக்கிறார்.

அந்தப் பேச்சை ஒரு மத்திய அமைச்சர் பங்கேற்ற விழாவில் பேசியதும், மற்ற கட்சித் தலைவர்களை வைத்துக் கொண்டு பேசியதும் அரசியல் நாகரிகமல்ல என்று சாதாரண அறிவு படைத்தவன்கூடப் புரிந்து கொள்வான்.

அவர் பெரியார் விழாவில் ஆற்றிய உரை குறித்து பகுதி பகுதியாக விடையளிக்க விரும்புகிறேன்.

“சட்டமன்றத்தில் கலைஞர் கருணாநிதியிடம் அய்யா சிலை திறப்பு விழா இம்மாதம் 18-ந் தேதி நடைபெறுகிறது என்று சொன்னேன்.”

இது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறுகிற பெரிய பொய். செப்டம்பர் 17-ஆம் நாள் பெரியார் பிறந்த நாளில் சிலை திறக்கப்படும் என்று அவர் என்னிடம் சட்டமன்றத்தில் கூறி, அதை நான் உடனே டைரியில் குறித்துக் கொண்டிருக்கிறேன்.

அவர் 17-ஆம் தேதி என்று சொன்ன காரணத்தினால் தான் தி.மு.க. நடத்தும் முப்பெரும் விழாவை 18-ஆம் தேதிக்கு மாற்றி வைத்துக் கொண்டேன். பிறகு அவர் பெரியார் சிலை திறப்பு விழா

18-ஆம் தேதி என்று அறிவித்ததும் தி.மு.க. முப்பெரும் விழாவை 17-ஆம் தேதியே நடத்தி முடித்தோம்.

"முதலில் அழைத்தேன். ஆனால் அவர்கள் சட்டமன்றம் முடிந்த பிறகு ஏறத்தாழ ஒருமாத காலமாக மாறுபட்ட கருத்துக் களை மேடைகளில் பேசி வருகிறார்கள். அவர்களை தி.மு.க.வை இந்த விழாவுக்கு அழைத்தால் ஏதாவது மாறுபட்ட கருத்துக்களைக் கூறி, நல்ல விழாவை போட்டி விழாவாக மாற்றிவிடக் கூடாதே என்ற அச்சத்தில்தான் தி.மு.க.வினரை அழைக்கவில்லை."

இவர் அழைப்புக்காக யாரும் தவம் கிடக்கவில்லை. அய்யோ அழைக்கமாட்டாரா என்று ஏங்கித் தவிக்கவும் இல்லை.

பெரியார் விழா என்ற பெயரால் மத்திய அமைச்சர் கலந்து கொள்ளும் விழாவில் மற்ற கட்சிகளின் சாட்சியாக நாவலர், தன் கட்சியை மூடிவிட்டு இவரது கட்சியில் இணைவதற்காக மனுப்போடுகிற விழாவில் தி.மு.க. கலந்து கொள்வதும் முறையாக இருக்காது.

ஆனால் ஒன்று! சட்டமன்றம் முடிந்த பிறகு தி.மு.க. மாறுபட்ட கருத்துக்களைப் பேசி வந்ததாகக் கூறுகிறாரே! அது என்ன என்பதை விளக்குவாரா?

ஆகஸ்டு 29-ஆம் தேதி சட்டமன்றம் முடிகிறது. ஆகஸ்ட் 30-ஆம் தேதி கலைவாணர் விழாவில் கருணாநிதி கூட்டம் கடற்கரையில் சதி செய்கிறது என்று பேசியது யார்? இவரல்லவா?

"பல்பொடிக்கு வரியா? என்று கேட்கிறார்கள். என் தொண்டர் களை விட்டால் பற்களையே கழற்றி விடுவார்கள்" என்று நாலாந்தர நடையில் கலைவாணர் விழாவில் பேசியது யார்? இவரல்லவா?

எதிர்க் கட்சியென்றால் மாறுபட்ட கருத்துக்களைப் பேசக் கூடாதா? போகாத இயக்கத்துக்குப் படிச் செலவு நூற்றி ஐம்பது ரூபாய் வாங்கியதாக ஒருவரைக் கைது செய்து வழக்கு போடுகிறீர்களே? நீங்கள் வராத சட்டசபைக்கு வந்ததாகப் பொய் சொல்லி ஏமாற்றிச் சம்பளமும் படியும் வாங்கினீர்களே, அதற்கு எப்போது வழக்கு? என்று கேட்பது தவறா?

சட்டசபையில் எதிர்த்தரப்பு வினாக்களுக்கு விளக்கமளிக்க முடியாமல் விழித்துக் கொண்டிருந்துவிட்டு சட்டசபை முடிந்ததும், விலங்கு மாட்டுவோம், போலீஸ் ஜீப்பில் ஊர்வலம் விடுவோம்

என்று எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் உள்ள அனைவரும் பேசினார்களே! அதற்குப் பதில் சொல்லும் உரிமை கூடத் தி.மு.கழகத்திற்குக் கிடையாதா?

தொழிலாளர் பிரச்சினைக்காக நடைபெற்றக் கடற்கரைக் கூட்டத்தில், "எந்தக் கொம்பனுடைய ஆட்சியாலும் தொழிலாளர் போராட்டத்தை நசுக்க முடியாது" என்று திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கர்ச்சித்தாரே, அவர் காலில் விழுந்து மட்டும் அழைக்கலாமோ பெரியார் சிலை திறப்பு விழாவுக்கு!

"ஒரு கட்சி நடத்தும் விழாவுக்கு மேடை அமைக்க அரசு அதிகாரிகளைப் பயன்படுத்தியது குற்றம் - அது ஊழல் - அதை நான் மறுக்கவில்லை. மறைக்கவுமில்லை. மேடை அமைத்துக் கொடுக்கத் தமிழக அரசுக்கு 14 ஆயிரம் ரூபாய் கட்சிச் சார்பில் வாடகை செலுத்தியிருக்கிறோம்."

இது முதலமைச்சர் தருகிற விளக்கம். மேடை மட்டுமல்ல, ஒலி பெருக்கிகளைக் கட்டுவதற்காக அரசாங்கத்தின் பைப்புகள் ஏராள மாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அண்ணா மேம்பாலத்தில் விழாவுக்கான பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வளவுக்கும் 14 ஆயிர ரூபாய் தான் செலவாகியிருக்கிற தென்றால் எதிர்காலத்தில் தி.மு.கழகமோ, அல்லது மற்ற கட்சிகளோ நடத்துகிற விழாக்களுக்கு வாடகை அடிப்படையில் அரசாங்கத் துறையின் உதவிகள் தரப்படுமா? அரசுத் துறை சார்பில் மேடை அமைத்துக் கொடுப்பார்களா? ஒலி பெருக்கி கட்டுவதற்கும், கட்சிக் கொடிகள் பறப்பதற்குமான அரசாங்க "பைப்பு"கள் தருவார்களா?

வாடகைக்குத்தான் கேட்கிறோம். அப்படி ஒரு கோரிக்கை கட்சிகளின் சார்பில் எழும்போது, அதில் வேறுபாடு பார்க்காமல் எல்லாக் கட்சிகளுக்கும் வாடகைக்குக் கிடைக்குமா?

கோவை மாநாட்டில் நடக்கவில்லையா? என்கிறார். அது நடந்ததோ இல்லையோ, மதுரை மாநாட்டில் நடந்ததாக மதுரை மேயராக இருந்த முத்து மீது இவர்தான் ஊழல் புகார் கொடுத்திருக்கிறார் - அந்த மாநாடுகளில் அதுபோல ஊழல் நடக்கவில்லை என்பது நமது வாதம்!

எம்.ஜி.ஆர். வாதப்படி ஊழல் நடந்தது என்று கூறுவாரேயானால், 18-ஆம் தேதி விழாவில் நடந்தது ஊழல் இல்லாமல் வேறு என்ன?

கோவை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு அதுபற்றி அவர் உத்தரவிட்ட கோப்பையும் குறிப்பிட்டுப் பெரியார் விழாவில் பலதடவை சொல்லியிருக்கிறார்.

அரசாங்க 'கோப்பு' ரகசியங்களை இவ்வளவு வெளிப்படையாக அதுவும் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டதற்கு மாறாக - ஒரு கட்சிக் கூட்டத்தில் விரிவாகக் குறிப்பிட்ட முதலமைச்சர் இவர்தான்! பரவாயில்லை.

கோவை மாநாட்டில் தவறு நடந்திருந்தால் விசாரிக்கட்டும் - அதைப்போல் பெரியார் சிலை திறப்பு விழாவில் அரசாங்கச் சாதனங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற குற்றச் சாட்டையும் பகிரங்க விசாரணைக்குக் கொண்டுவர வேண்டும்.

பெரியார் சிலை திறப்பு விழாவை அரசாங்க விழாவாகவே நடத்தியிருந்தால் இதில் பிரச்சினைக்கே இடமில்லை! சொந்தக் கட்சி விழாவாக நடத்தியதால்தான் இவ்வளவு பிரச்சினை!

சாதி கூடாது என்று சொல்லியவர் அய்யா! அப்படிப்பட்ட அய்யா அவர்களைச் சாதியின் பெயரால் அழைக்கப்படும் "மூப்பனார்" அவர்கள் பாராட்டியுள்ளார்கள்"

அழைப்புக்கிணங்க வந்த மூப்பனார் அவர்களுக்கு முதலமைச்சர் சூட்டிய மணிமுடி இது! ஆம்! நன்றிக் கடன்!

"அண்ணா மேம்பாலத்தருகே இருபுறமும் குதிரைச் சிலைகள் வைக்க ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டு விட்டதால், குதிரைச் சிலையுள்ள இடத்தில் பெரியார் சிலை வைக்க கருணாநிதி, அனுமதி மறுத்துவிட்டார்."

-இப்படி ஒரு குற்றச்சாட்டு என்மீதும் கழக அரசு மீதும்! பாலத்தின் எந்தப் பக்கத்திலே பெரியார் சிலை வைத்தாலும் பாலத்தின் இன்னொரு பகுதி, சிலையை மறைத்துவிடும். அதனால் பாலத்திற்கு ஏற்ற வகையிலும், குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுகிற தீர்மானத்தை நினைவு கூர்கிற வகையிலும் குதிரைகளின் சிலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. உயர்ந்த பாலத்தின் அடியில் பெரியார் சிலையை வைத்து யாரும் பார்க்க

முடியாமல் செய்வதில் பயன் என்ன என்றுதான் 1974-ஆம் ஆண்டு எடுத்துக் கூறப்பட்டது.

அவர்கள் பாலத்தருகேதான் இருக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்து அதற்கேற்ப ஒரு "வரைபடமும்" கொடுத்தார்கள்.

அந்த இடத்தை மறுக்காமல் கழக அரசு, அனுமதி கொடுத்து விட்டது.

பெரியார் சிலை திறந்தால் தேர்தலில் ஓட்டுகள் குறைந்து விடலாம் என்று அவரது நெருங்கிய நண்பர்கள் கூறியதைக் கேட்டுக்கொண்டு மூன்று ஆண்டுகள் சிலை வைப்பதைத் தள்ளிப்போட்டவர், இப்போது சமாளிக்கிறார்! இவர் செய்யத் தவறிய காரியத்துக்கு யார் மீதோ பழி போடுகிறார்.

1972-ஆம் ஆண்டு இவர் கட்சியின் கட்டுப்பாட்டைக் குலைத்தமைக்காக வெளியேற்றப்பட்டபோது, இவரது கட்சிக்காரர்கள் திண்டுக்கல்லிலே உள்ள பெரியார் சிலைக்குத் தீ வைத்ததும், அந்தச் சிலையை ஆபாசப்படுத்தியதும் மறந்துவிட்ட செய்தியல்ல!

இப்போதும் பெரியார் சிலையைத் திறந்து வைத்து விட்டு அடுத்த வாரம் சங்கராச்சாரியாரின், ஆசிபெறப்போகிறார்! எனவே இவர், பெரியாரையும் ஏமாற்றுகிறார், சங்கராச்சாரியாரையும் ஏமாற்றுகிறார்!

கோயிலே வேண்டாமென்று சொன்ன பெரியார் அவர்கள் கோயிலில் எல்லா சாதியினரும் அர்ச்சகராக இருக்கலாம் என்று எப்படிச் சொல்லியிருப்பார்?

புரட்சித் தலைவர் அல்லவா? கேட்டாரே ஒரு கேள்வி! புரட்சிகரமான கேள்வி! வைக்கம் போராட்டத்தில் வெற்றி பெற்ற பெரியாருக்குப் பாராட்டு விழா நடந்தபோது பெரியார் என்ன சொன்னார் தெரியுமா?

''உயர் ஜாதிக்காரர் தெருவிலே நாமும் நடந்து செல்ல வேண்டும் என்ற விருப்பத்தால் அங்கு பிரவேசித்திடவில்லை. நமது போராட்டம் எல்லா இடங்களிலும் மனித உரிமை மதிக்கப்பட வேண்டும் என்பதுதான்! தெருவிலே எல்லா மனிதனுக்கும் சம

உரிமை என்று நாம் சத்தியாக்கிரகம் செய்து வெற்றி பெற்றது-கோயில்களுக்கும் பொருந்தும். அங்கும் மனிதனின் உரிமைகள் பறிக்கப்படக் கூடாது.”

இந்தக் கருத்துகளையெல்லாம் எம்.ஜி.ஆர். தெரிந்திருக்க நியாயமில்லை. பழைய “குடியரசு” பத்திரிகைகளைப் பார்த்தால் புரியும்.

ஆண்டவனை பூஜிக்கும் அர்ச்சனை முறைகளில் தேர்ச்சி பெற்ற அனைத்து வகுப்பினருக்கும் அர்ச்சகராக உரிமை வேண்டும் என்பதுதான் கழக அரசின் சட்டமாகும்!

நீதிமன்றத்தில் தமிழில்தான் நடவடிக்கையிருக்க வேண்டு மென்றால், அதைச் சொல்லுகிறவர்கள் எல்லாம் நீதிபதிகளாகவோ - வழக்கறிஞர்களாகவோ - குற்றம் சாட்டப்பட்டவர்களாகவோ - நீதிமன்றத்திற்குச் செல்பவர்களாகவோ இருக்க வேண்டுமென்று அவசியமில்லை.

கோயில்கள் இருக்கும் வரையில், அங்கு அர்ச்சனைகள் நடைபெறும் வரையில் அங்கே மனித சமூகத்தின் சமநீதி காக்கப்பட வேண்டுமென்பதுதான் பெரியாரின் கருத்து. அதற்காகவே அவர் கழக அரசின் அர்ச்சகர் சட்டத்திற்கு ஏற்ப மத்திய அரசு, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று போராட்டம் நடத்தத் தயாரானார். இந்த விபரங்களையெல்லாம் எம்.ஜி.ஆர். அவர்கள் மற்றவர்களிடம் கேட்டுக் கொண்டாவது பேசுவது நல்லது.

அதை விட்டுவிட்டு, அன்னை மணியம்மையாரை அழைப்பது! அவருக்கு பதில் சொல்வது - டாக்டர் சந்தோஷத்தை அழைப்பது! கிறிஸ்தவ மதத்திலும் சாதிபேதம் இருக்கிறது என்று அவருக்கு ஒரு விளக்கம் வழங்குவது - பெரியார் சிலை கடவுள் சிலை அல்ல என்று கூறிய முஸ்லீம் லீக் நண்பரைப் பார்த்து “எதிர்காலத்தில் பெரியாரும் கடவுளாக வணங்கப்படுவார்” என்ற கொள்கைத் தத்துவம் கூறுவது - இதெல்லாம் யாருக்கும் எதுவும் தெரியாது தனக்குதான் எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தின் விளைவாகும்.

முதலமைச்சரல்லவா? முதலமைச்சரென்றால், எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்று ஒரு தவறான நினைப்பு! இசையிலிருந்து இன்ஜினீயரிங் வேலை வரையில் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டுமென்ற ஒரு சுபாவம்! அய்யோ பாவம்!

"விலங்கு - ஜெயில் - தண்டனை - ஊழல் -" இந்த விழாவிலும் அவர் பேசத் தவறவில்லை. ஊழல் குற்றச்சாட்டு, கைது, விலங்கு, தண்டனை, சிறை - இவைகள் எல்லாம் என்றைக்குமே தன்னையோ, தன் கட்சியினரையோ அணுகாது என்று அவர் மனப்பால் குடிக்கிறார்!

சென்ற ஆண்டு சென்னை நகர் வந்து இவரோடு குலவி மகிழ்ந்து, கழகச் செயற்குழுவில் கலகம் விளைவிக்கத் தூண்டிவிட்டுச் சென்றவரும், அதற்குப் பெருந்தொகை செலவிட்டவருமான யஷ்பால் கபூர், இப்படித்தான் விலங்கு, சிறை - தண்டனை - என்று பேசிவிட்டுச் சென்றார். கிரிமினல் குற்றம் சாட்டப்பட்ட கருணாநிதி இன்னும் தற்கொலை செய்து கொள்ளாதது ஆச்சர்யம் என்றுகூட யஷ்பால் கபூர் ஆர்ப்பரித்தார்.

இந்த ஆண்டு நிலைமை என்ன? அவரே கைது! அவர் மீதே கிரிமினல் குற்றச்சாட்டு! அவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல் எதுவுமில்லை.

அவரது உறவினர்தான்.. மற்றொருவர்.. கைது செய்யப்பட்டிருப்பவர். அவர்தான் நாற்பத்தி ஐந்து இலட்ச ரூபாயை நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் முழுவதும் கறுப்புப் பணமாக சென்னையில் கொண்டு வந்து தோட்டத்தில் கொடுத்தவர். அதில் இருபது இலட்சம் ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக இருக்கவே - அவற்றை மாற்றிடச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் உட்பட எல்லாம் இப்போது டெல்லி வட்டாரத்தின் பரிசீலனையில் இருக்கின்றன.

ஊழல் பற்றி அடிக்கடிப் பேசும் இந்த உத்தமர்? வெங்கடாத்திரி கமிஷன் விசாரித்துக் கொண்டிருந்த ஒரு ஊழல் வழக்கு அரைகுறையாக இருக்கும்போது அமைச்சர் சௌந்தர பாண்டியனைக் காப்பாற்ற அந்தக் கமிஷனையே கலைத்தது ஊழல் இல்லையா?

பூலாவரி கொலை வழக்கில் அப்ரூவராக்கப்பட்ட சந்தானம் என்பவர் மாஜிஸ்டிரேட்டிடம் கொடுத்த 164 வாக்குமூலத்தில் சேலம் மாவட்டத்தில் பஸ் முதலாளிகளிடம் வசூலித்த ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்தை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனிடம் தானே கொண்டு வந்து கொடுத்ததாகக்

கூறியிருக்கிறாரே! உத்தமராம் பத்தரை மாற்றுத் தங்கம், சத்திய புத்திரர் ஆட்சியிலே பண்ருட்டி ராமச்சந்திரன் அமைச்சராக இருப்பது ஊழல் இல்லையா?

அன்றாடம் லஞ்சம் வாங்கும் அமைச்சர் என்று புகார் கூறப்பட்ட சத்தியவாணி அம்மையாருக்கு எம்.எல்.சி. பதவி கொடுத்தது ஊழல் இல்லையா?

மிசாக் கைதிகளை மீட்க லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கினார் ராஜாராம் என்று ஆறு மாதத்திற்கு முன்புதானே சவால் விட்டார் எம்.ஜி.ஆர். இப்போது அந்த ராஜாராமை இணைத்துக் கொண்டது ஊழல் இல்லையா?

பழைய நெக்லஸ் புகார் மட்டுமல்ல, சென்ற ஆண்டு புதிய புகாரும் கொடுத்தார்களே கவர்னரிடம்-நாவலர் மீது! அந்த நடமாடும் பல்கலைக் கழகத்தை இணைத்துக் கொண்டதும் ஏற்கனவே படமெடுத்தாடிய ஊழல் பாம்பு பெட்டிக்குள் அடங்கி விட்டதா?

இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி தேர்வில் எண்கள் மாற்றப்பட்டு ஊழல் நடைபெறவில்லையா?

நாவலரும், எம்.ஜி.ஆரும் என்னைச் சர்வாதிகாரி என்று கூறிவிட்டு - பெரியார் விழாவில் இரு கட்சியையும் இணைத்து விட்டதாகச் சொன்னார்களே! அ.தி.மு.க. பொதுக்குழுவின் முடிவுக்கு முன்னால் இப்படியொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவை - பொதுச் செயலாளர் எம்.ஜி.ஆர். அறிவிப்பது ஜனநாயகமா?

உடன்பிறப்பே,

இதற்கெல்லாம் எம்.ஜி.ஆர். நேரடியாகப் பதில் சொல்லப் போவதில்லை. அவருக்கு நான் உனக்கெழுதும் இந்தக் கடித வாயிலாக ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்வேன்.

அண்ணா சாலையில் உள்ள என் சிலையைப் பற்றிப் பேசியிருக்கிறார். அந்தச் சிலை வைத்தது திராவிடர் கழகத்தார். பெரியாரின் ஆணையை அவர்கள் நிறைவேற்றினார்கள். நான் அந்தச் சிலை வேண்டாமென்று அப்போது எவ்வளவோ வாதாடினேன். அன்னை மணியம்மையாரும், நண்பர் வீரமணியும் கேட்கவில்லை.

அந்தச் சிலை வைத்ததை எதிர்த்து அ.தி.மு.க. நண்பர் ஒருவர் வழக்கு தொடுத்துள்ளார்.

தீர்ப்பு வந்ததும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எம்.ஜி.ஆர். பெரியார் விழாவில் கூறியிருப்பது மறைமுகமாக நீதிமன்ற உரிமையில் தலையிடுவது போல் தோன்றுகிறது வேண்டாம்! நீதிமன்றத்துக்கு அப்படியொரு சங்கடமான நிலைமை வேண்டாம்!

நான் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தீர்ப்புக்காக காத்துக் கொண்டிருக்கத் தேவை யில்லை - தயவு செய்து இப்போதே அண்ணா சாலையில் உள்ள என் சிலையை அப்புறப்படுத்திவிட்டு அவரது ஆசையைத் தீர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அந்தச் சிலை வைப்பதை நான் எந்த அளவுக்குத் தடுத்தேன் என்பது மனசாட்சியுள்ள அனைவருக்கும் தெரியும்.

எனவே, எனது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் என் சிலையை அண்ணா சாலையிலிருந்து அகற்றி எறிவது பற்றி எந்தவிதச் சங்கடமும் எனக்கு ஏற்படாது. மனமகிழ்ச்சியோடு அதனை நான் ஏற்றுக் கொள்வேன்! ஆனால் ஒன்று!

அண்ணாசாலையில் இருந்துதான் என் சிலையை அகற்றலாமே தவிர, "அண்ணாவின் தம்பிகளில் ஒருவன்" என்ற அந்தப் பட்டியலில் இருந்தும் "அய்யாவின் மாணவர்களில் ஒருவன்" என்ற அந்தப் பட்டியலில் இருந்தும் என்னை அகற்றுவதற்கு எவனும் இந்த நாட்டில் பிறக்கவுமில்லை - பிறக்கப் போவதும் இல்லை!

அன்புள்ள,

மு.க.

20-09-1977

470. பாவம்! தத்துவம் - பிழைத்துப் போகட்டும்!

உடன்பிறப்பே,

சென்ற மாதம் சொன்னதை இந்த மாதம் மக்கள் மறந்து விடுவார்கள் என்பதில் அசையாத நம்பிக்கை படைத்தவர் நண்பர் எம்.ஜி.ஆர்.

“மந்திரிசபை அமைப்பதாக இருந்தால் எல்லா மந்திரிகளையும் என் கட்சியின் சாதாரண உறுப்பினர்கள் ஓட்டுப் போட்டுத்தான் தேர்ந்தெடுப்பார்களே தவிர, மந்திரிகள் நியமனமுறை என்பதே என் கட்சி ஆட்சியில் இருக்காது”

இப்படியொரு கருத்தை 1973-ஆம் ஆண்டு முதல் சொல்லிக் கொண்டேயிருந்தார். ஆனால் அந்த முறையை புதுவை மாநில அமைச்சரவையை அமைக்கும்போதோ அல்லது தமிழ்நாடு அமைச்சரவையை அமைக்கும் போதோ கடைப்பிடித்தாரா என்றால் இல்லை; இல்லவே இல்லை! ஏன் சொன்னபடி செய்யவில்லையென்று கேட்டால், அதற்கு அவர் கூறுகிற விளக்கத்தைப் புரிந்துகொள்கிற சக்தி யாருக்கும் இல்லை - புரியவைக்கிற சக்தி அந்த விளக்கத்திற்கும் இல்லை. அதனால் விளக்கம் கேட்டவர் “ஆளை விட்டால் போதும் - விளக்கம் தேவையில்லை” என்று ஓட்டம் பிடிப்பதைத் தவிர, வேறு வழியில்லை.

‘‘என் கட்சியில் பிற கட்சிகளில் இருந்து யார் வந்து சேருவதாக இருந்தாலும் அவர்களை விசாரணைக் கமிஷனுக்கு உட்படுத்தி அந்தத் தீக்குண்டத்திலே குளித்து அவர்கள் ‘பத்தினி’கள் என்று நிரூபிக்கப்பட்ட பிறகுதான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்”

என்று மூன்று நான்கு ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார். பத்திரிகைக்காரர்களும் அந்தப் ‘பேட்டி’யை விடாமல் வெளியிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படி,

யார் மீதாவது விசாரணை நடைபெற்று அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்களா? என்று கேட்டால் - உடனே தத்துவங்கள் பாய ஆரம்பிக்கும்! அந்தத் தாக்குதலை சமாளிக்க முடியாமல் - "அய்யா! நீங்கள் யாரையாவது சேர்த்துக் கொண்டு போங்கள். விசாரணையும் வேண்டாம் வெங்காயமும் வேண்டாம். - உங்களைக் கேள்வி கேட்டதே தப்பு என்று 'தோப்புக்கரணம்' போட்டுத் தோல்வியை ஒப்புக்கொண்டு தீருவார்களே தவிர, அந்தத் தத்துவ விளக்கத்தைத் தாங்கிக் கொள்ள யாரும் தயாராக இல்லை!

மதுரை முத்து மீது, எம்.ஜி.ஆர். தானே ஜனாதிபதியிடம் புகார் கொடுத்தார்? அதுபற்றி விசாரணை நடைபெற்று மதுரை முத்து "புடம்போட்ட தங்கம்" என்ற விருதினைப் பெற்றுவிட்டாரா? எம்.ஜி.ஆர். எந்த நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்தி மதுரை முத்துவைக் கட்சியில் சேர்த்துக் கொண்டார்?

அன்றாடம் லஞ்சம் வாங்கும் அமைச்சர் சத்தியவாணி முத்து என்று ஜனாதிபதியிடம் புகார் கொடுத்தவர் எம்.ஜி.ஆர்.தானே! அதற்கு எம்.ஜி.ஆர். ஒரு நீதிபதியை நியமித்து விசாரணை நடத்தித்தான் கட்சியிலே சேர்த்துக் கொண்டாரா? எப்போது விசாரணை நடைபெற்றது? கமிஷன் அமைக்கப்பட்ட தேதி என்ன? வாதாடிய வழக்கறிஞர்கள் யார் யார்? கமிஷன் அமைக்கப் பட்டிருக்கிறதென்றும், அத் தகவல்கள் தருவோர், சாட்சியம் கூறுவோர் வாக்குமூலங்கள் அளிக்கலாம் என்றும் ஏடுகளில் விளம்பரம் எதுவும் கொடுக்கப்பட்டதா?

பாவம்! வெங்கடாத்திரி கமிஷன். விசாரணையில் வழக்கு ஒன்று நடந்து சாட்சியம் விசாரிக்கப்பட்டு முடிந்திருந்த போதே அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த அமைச்சர் சௌந்தர பாண்டியனைக் காப்பாற்ற அந்த சட்டத்தையே ரத்து செய்து, கமிஷனையே கலைத்துவிட்ட "சத்திய புத்திரர்" அல்லவா அவர்!

சர்க்காரியா கமிஷன் எட்டுக் குற்றச்சாட்டுகள் பற்றி அளித்துள்ள முதற்கட்ட அறிக்கையில், நாவலர் மீதும், நண்பர் மாதவன் மீதும் கூறப்பட்டுள்ள புகார்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன என்றுதானே நீதிபதி சர்க்காரியா அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்.

எங்களைப் பொறுத்தவரையில் நாவலர், மாதவன் உட்பட்டதான் கூறுகிறேன் சர்க்காரியா கமிஷன் அமைத்தது

அரசியல் வஞ்சம் தீர்க்கும் முயற்சி என்ற கருத்துடையவர்கள். ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களைப் பொறுத்தவரையில் சர்க்காரியா கமிஷனுக்கு "சபாஷ்" போட்டு வரவேற்றவர்! குறுக்கு விசாரணைக்கு வரமுடியாது என்று ஓடிவிட்டார் என்றாலும் - விசாரணைக் கமிஷனை வேடிக்கை பார்க்க அவர் போகாமல் இருந்ததே இல்லை. எனவே அவரது நம்பிக்கைக்குரிய அந்தச் சர்க்காரியா கமிஷன் - நாவலர் மீதும், மாதவன் மீதும் கூறப்பட்ட புகார்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன என்ற அறிக்கையைத் தந்திருக்கும்போது அவர்கள் இருவரையும் தன்னுடைய கட்சியில் எம்.ஜி.ஆர். எப்படி இணைத்துக் கொண்டார் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

உஷ்! உடன்பிறப்பே! கேட்டுவிடாதே! உடனே நமது முதலமைச்சர் "இப்படியெல்லாம் பதில் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டால் பல்லை உடைக்கச் சொல்வேன்" என்று பண்பார்ந்த முறையில் விடையளித்தாலும் அளிப்பார்!

தி.மு.கழகத்தின் மீது ஏதாவது புகார் பற்றிய விசாரணை என்றால் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வேண்டும்- அடுத்த மாநில - ஹைகோர்ட் நீதிபதி வேண்டும். தமிழ்நாடு ஹைகோர்ட் நீதிபதி கூட விசாரிக்கக் கூடாது என்று ஆர்ப்பரித்த எம்.ஜி.ஆர். அவர்கள், அவரது கட்சிக்காரர் மீது புகார் இருந்தால் மட்டும், அதை விசாரிக்க அவருக்கு மிகவும் வேண்டிய, அவர் கிழித்த கோட்டைத் தாண்டாத அதுவும் ஓய்வு பெற்ற ஒரு மாவட்ட நீதிபதி, எப்போதும் தோட்டத்தில் வந்து காத்திருக்கும் ஒருவர் விசாரிப்பாராம்! இப்படி நிருபர்களுக்குச் சொல்கிறார். அவர்களும் அதனை எழுதிக் கொண்டு பத்திரிகையில் டெலிவிஷனில், வானொலியில் 'சாங்கோபாங்கமாக' வெளியிட்டு மகிழ்கிறார்கள்.

இந்த ஓய்ந்த நீதிபதியாவது இதுவரை எத்தனை பேரை விசாரித்து அ.தி.மு.க.வில் சேரலாம் என்று "சர்டிபிகேட்" கொடுத்தார்? அந்த நற்சான்று இதழுக்குப் பிறகுதான் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்களா? அந்தப் புகார்கள் என்ன? என்ன? விசாரிக்கப்பட்டவர்கள் யார்? யார்? இதற்கெல்லாம் விடை கிடையாது! அப்படியொரு விசாரணை நடந்தால் தானே விடையளிப்பதற்கு!

இதோ எம்.ஜி.ஆரைப் பார்த்து ஒரு நிருபர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஒரு கேள்வியைக் கேட்கிறார்.

நிருபர்:- "மக்கள் தி.மு.க. உங்கள் கட்சியோடு இணைந்துவிட்டது. அதில் உள்ள சிலர் மீது புகார் இருக்கிறது. அதுபற்றி விசாரணை நடத்துவீர்களா?

எம்.ஜி.ஆர்.:- கட்சியில் அதுபற்றிப் பிரச்சினை எழுந்தால் அதுபற்றி யோசிக்கப்படும்."

பார்த்தாயா உடன்பிறப்பே! நாவலர், மாதவன், ராஜாராம், அரங்கண்ணல் ஆகியோர் மீது புகார்கள் எழுதி பிரச்சினை எழுப்பியதே இதே எம்.ஜி.ஆர். தான்! இப்போது இவரே சொல்கிறார், அதுபற்றிக் கட்சியில் பிரச்சினை எழுந்தால் யோசிக்கப்படும் என்று. அப்படியானால் எம்.ஜி.ஆர். அந்தக் கட்சியில் இல்லையா?

இன்னொரு வேடிக்கை! நிருபர் கேள்வி கேட்டு எம்.ஜி.ஆர். பதில் கூறுவதற்குள்ளாக நாவலர் குறுக்கிட்டு விளக்கமளித் துள்ளார்.

"ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டால்தான் விசாரணை நடத்தப்படும் என்று தீர்மானத்தில் தெளிவாக்கப்பட்டுள்ளது"

இது நாவலர் அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நேராகவே நிருபருக்கு அளித்த விளக்கம்.

இதிலிருந்து எம்.ஜி.ஆர். ஜனாதிபதியிடம் கொடுத்த புகார்கள் ஆதாரமற்றவை என்று எடுத்துக் கொள்வதா?

அல்லது கடந்த ஆண்டுகூட தமிழகக் கவர்னரிடம் அ.தி.மு.க.வினர் நாவலர் குறித்தும், மாதவன் குறித்தும், பண்ருட்டி ராமச்சந்திரன் குறித்தும் கொடுத்தார்களே குற்றச்சாட்டுக்கள் - அவைகளும் ஆதாரமற்றவை என்று எடுத்துக் கொள்வதா?

அப்படியானால் ஆதாரமற்ற புகார்களைக் கொடுப்பதுதான் எம்.ஜி.ஆருக்கும், அவரது கட்சியினருக்கும் வாடிக்கை என்பதையாவது ஒத்துக் கொள்ள வேண்டுமல்லவா?

உடன்பிறப்பே! உனக்கும் எனக்கும் மட்டுமல்ல, உலகத்திற்கே ஒன்று நன்றாகப் புரிகிறது. - தி.மு.கழகத்தில் ஒருவன் இருந்தால் அவன் மீது கூடை கூடையாக ஊழல் புகார்களை - அவதூறுகளைக் கொட்டுவார்கள். அந்த நபர் தி.மு.கழகத்தை விட்டு வெளியேறி அ.தி.மு.க.வுக்குச் சென்றுவிட்டால் அவன் மீது கூடை கூடையாகப் பூமாரி பொழிவார்கள்.

அரசியலிலே இது சகஜம் என்று வாதிடுவோரை நானறிவேன். அந்த வாதம் உண்மையானதும்கூட!

ஆனால், குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளை எழுத்து வடிவிலே கொண்டு போய்க் கொடுத்துவிட்டு, பிறகு தன்னால் குற்றம் சாட்டப்பட்டவர்களையே தன் கட்சியிலே இரண்டறக் கலக்குமாறு இணைத்துக் கொள்வதும் - அதுபற்றிக் கேட்டால் ஊராரை முட்டாள்களாக எண்ணிக் கொண்டு பதில் அளிப்பதும் இத்தகைய இரட்டைவேடப் போக்கு, நீடித்த வெற்றியைத் தராது என்பதை மட்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு வேடிக்கை! கடிதத்தை முடிப்பதற்குள் கூறி விடுகிறேன்.

நிருபர்:- "திருவாரூர் தங்கராசின் திராவிடர் கழகம் அ.தி.மு.க.வில் இணைகிறதா?"

எம்.ஜி.ஆர்.:- அவர் நல்ல அமைப்பு ரீதியாகக் கட்சியை வைத்திருக்கிறார். அவர் இணையத் தேவையில்லை. அவர் அப்படியே இருக் கட்டும்.

இந்தக் கேள்வியும், பதிலும் உணர்த்துகின்ற உண்மையை நாவலர் புரிந்து கொள்ளாமலா இருந்திருப்பார்!

நல்ல அமைப்பு இல்லாத கட்சிகள் எல்லாம் நண்பர் எம்.ஜி.ஆருடன் இணைகின்றனவாம்!

இது எம்.ஜி.ஆர். அவர்களே தருகிற விளக்கம் நிருபருக்கு!

இதுபற்றிக் கேட்டால், இதற்கும் ஏதாவது தத்துவ விளக்கம் கிடைக்கக் கூடும்!

பாவம்! தத்துவம் பிழைத்துப்போகட்டும்! அதிகமாக அதைத் தண்டிக்க வேண்டாம் என்பதே நமது "பிரார்த்தனை!"

அன்புள்ள,

மு.க.

22-09-1977

471. உடன்பிறப்புக்கு உருக்கமான வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

அன்புடன் அழைக்கப்படுகிறேன் கூட்டங்களுக்கு! ஆர்வத்துடன் விழா எடுக்கிறார்கள், பட்டிதொட்டிகளில் கூட! கழக வளர்ச்சி நிதிக்கென நான் கேட்டிடும் தொகையைக் கூட அளித்திடுகின்றனர் - எழுச்சி மிகு வரவேற்புகள்! எங்கணும் கொடிகள் - பதாகைகள்! எல்லாம் சரி! ஆனால்! ஒன்றை மட்டும் நான் சொல்லாமல் இருக்க முடியவில்லையே! திரும்பத் திரும்ப பலமுறை நான் வேண்டியும் விழா நிகழ்ச்சிகளிலும், கொடியேற்றும் இடங்களிலும் உடன்பிறப்புகள் காட்டுகிற உணர்ச்சி காட்டாற்று வெள்ளமாக அன்றோ பெருக்கெடுத்து விடுகிறது. உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாக - எங்களை நிற்கச் சொல்கிறாயா? என்று உடன்பிறப்புகள் கேட்பர். புரிகிறது எனக்கு! ஆனால், அளவு கடந்த அன்பு அமளிக்காடாக அல்லவோ நிகழ்ச்சிகளை மாற்றி விடுகிறது. எடுத்துக்காட்டாக, நேற்று நடைபெற்ற சம்பவத்தைக் கூறுகிறேன் கேள்!

குடியேற்றம் நகரில் கூட்டம். மாலை 7 மணி அளவில் வந்து விடுவதாகச் சொன்னேன். நகரைச் சுற்றிப் பல இடங்களில் கொடியேற்று விழாக்கள் வைத்திருப்பதாகக் கூறினர். குடியேற்றம் கூட்டத்திற்குச் செல்கிற வழியில் உள்ள கொடிகளை மட்டும் ஏற்றலாம். நகரைச் சுற்றி எல்லா இடங்களிலும் வேண்டாம். நேரமிருக்காது என்று கூறினேன். என் கருத்தை ஒப்புக் கொண்டவர்கள் போல விடைபெற்றுச் சென்று விட்டார்கள்.

மாலை 7 மணிக்கு குடியேற்றம் செல்கிறேன். என்னுடன் வீராசாமி, மாவட்டச் செயலாளர் முருகையன், துரைமுருகன் ஆகியோர்!

கூட்டத்திற்கானச் சிறப்பான ஏற்பாடுகளை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரைசாமி, நகரச் செயலாளர் சாமினாதன்,

நண்பர் ராஜு மற்றும் ஒன்றியக் கழகத்தினர், ஒன்றியச் செயலாளர் ஆகியோர் ஒருங்கிணைந்து செய்திருந்தனர்.

நண்பர் கங்காதரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. நகரைச் சுற்றிப்பல பகுதிகளில் கொடியேற்ற என்னை அழைத்தனர். கூட்டத்திற்கு நேரமாகிவிடும் எனக்கூறி நண்பர்கள் வீராசாமி, முருகையன் இருவரையும் அனுப்பி வைத்தேன்.

கூட்டம் தொடங்கியது. துரைமுருகன் பேசி முடித்தார். அதுவரை முருகையனோ, வீராசாமியோ கொடியேற்று விழாவிலிருந்து திரும்பி வரவில்லை. பிறகு நான் பேசிடத் தொடங்கினேன். நூற்றுக்கணக்கான மாலைகள்! மேடை ஆட ஆரம்பித்தது. மேடையில் உள்ளோர் தயவு செய்து கீழிறங்க வேண்டுமென்று வேண்டுகோள் விடப்பட்டது. பத்து பேர் அமரக்கூடிய மேடையில் நூறு பேர் ஏறி நின்றால் - ஆர்வத்தால் அலைமோதினால் என்ன ஆகும்? எஞ்சியுள்ள மாலைகளைப் பிறகு போட்டுக் கொள்ளலாம் என்று கூறிவிட்டு நான் பேசினேன். இரவு 9.30 மணிக்கு என் பேச்சு முடிந்தது. அதுவரை கொடியேற்றச் சென்றவர்கள் திரும்பி வரவில்லை. அத்தனை நிகழ்ச்சி!

நான் பேசி முடித்து மேடையில் அமர்ந்தேன். உடனே மேடையில் கழகத் தோழர்களின் படையெடுப்பு!

மாலை!

ரூபாய் நோட்டு கிரீடம்!

மலர்மாலை!

கரன்சி மாலை!

குழந்தைக்குப் பெயர்!

இவைகள், வரிசையாக நின்று ஒழுங்கான முறையில் அல்ல! ஒருவர் மீது ஒருவர் விழுந்து அனைவரும் சேர்ந்து என் மீது விழுந்து - சுமார் இரு நூறு பேர் மேடையில்! அவ்வளவு ஆர்வம்! அவ்வளவு எழுச்சி! அதன் விளைவு? மேடை முறிந்திடும் ஒலி கேட்டேன். அண்ணே கீழே இறங்குங்க! என்று துரைமுருகன் என்னை அழைத்துச் செல்ல முயலுகிறார். அருகில் இருந்த ஆம்பூர் சம்பங்கியும், பன்னீர்செல்வமும் துணைபுரிய வருகிறார்கள்! ஒரு வாழ்க முழக்கம்! ஒரு வலுவான தள்ளுதல்! நான் மேடையிலிருந்து கீழே குதிக்கத்தான் முடிந்தது!

அந்த நேரம் பார்த்து என் பின்னாலிருந்தவாறு ஒரு உடன்பிறப்பு என் கழுத்தில் ஒரு மாலையை ஆசையோடு வீசுகிறார்! வீசியவர் மாலையவிடவுமில்லை. மாலை என் கழுத்தைப் பிடித்துப் பின்புறமாக இழுக்கிறது. நான் அப்படியே மல்லாந்தவாறு கீழே சாய்கிறேன்.

இன்னும் சிறிது தவறி கீழே விழுந்திருந்தால் வாழ்த்தொலி முழங்கியவர்களின் கால்களால் மிதிபட்டுப் போயிருப்பேன். துரைமுருகன் ஓடி வந்து தாங்கிக் கொள்கிறார். அவரும் என்னுடன் சேர்ந்து கீழே விழுகிறார். அதற்குள் போலீசார் புகுந்து, நான் காருக்குச் செல்ல உதவி புரிகிறார்கள்.

இத்தனையும் முடிந்தபிறகுதான் கொடியேற்றச் சென்ற நண்பர்கள் வருகிறார்கள்!

குடியேற்றம் மட்டுமல்ல, நான் கூட்டத்திற்குச் செல்கிற பல இடங்களில் இப்படித்தான் நடைபெறுகிறது.

சென்ற வாரம் கடம்பத்தூர் திருமணத்திற்குச் சென்றோம். நண்பர்கள் சி.வி.எம்., மதுராந்தகம் ஆறுமுகம் உடன் வந்தனர். மணவிழா மேடைக்குச் செல்வது வெள்ளம் பெருக்கெடுத்தோடும் ஆற்றில் எதிர்நீச்சல் போடுவதுபோல் இருந்தது.

வேடிக்கை என்னவென்றால், மேடைக்கு வர முடியாமல் மாப்பிள்ளை, கூட்டத்தில் சிக்கிக் கொண்டார். மாப்பிள்ளை எங்கிருந்தாலும் உடனே மேடைக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார் என்று ஒலிபெருக்கி மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடற்ற ஆர்வம்!

நான் ஆர்வத்தை, அன்பை, பற்று பாசத்தைக் குறை கூறவில்லை. எத்தனையோ துன்பங்கள், துரோகங்களால் துளைக்கப்பட்டுள்ள எனக்கு உடன்பிறப்புகள் காட்டுகிற அன்புதான் என்னை வாழவைக்கிற மாமருந்தாக இருக்கிறது என்பதை உணருகிறேன்.

எனினும், நிகழ்ச்சிகளில் அந்த அன்பும், ஆர்வமும் கட்டுக்கடங்காது போவதால் அவைகள் சிறப்புற - செம்மையாக - நடைபெற முடியாமல் போய் விடுகிறது.

இந்த வேண்டுகோளுக்குப் பிறகாவது நான் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிற மாவட்டச் செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், அல்லது கிளைச் செயலாளர்கள் கலந்து பேசி - என்னிடமும் நேரில் விவாதித்து நிகழ்ச்சிநிரலை வகுத்துக் கொண்டு அப்படி வகுக்கப்பெற்ற நிகழ்ச்சிகளில் புதிய மாறுதல் செய்யாமலும் - கூட்டம் நடைபெறும் மேடைகளில் ஒழுங்குமுறையைக் காத்திடும் பொறுப்பை ஏற்றும் - நிகழ்ச்சிகளின் நோக்கம் ஈடேற வழி செய்து தருமாறு வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

23-09-1977

472. புனித ராஜ்யம் காட்சி - 5!

உடன்பிறப்பே,

புனித ராஜ்யம் நாடகத்தின் ஐந்தாவது காட்சியை இன்றைக்குக் காணுகிறோம்.

போலீஸ் சூப்பிரண்டெண்டண்ட் ஆபீஸ். எஸ்.பி. ஏதோ கோப்புகளைப் படித்தவாறு, கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார். அப்போது தொலைபேசியின் மணி அடிக்கிறது.

எஸ்.பி. :- ஹலோ! ஹலோ! நான் எஸ்.பி. பேசுகிறேன்... யார் பேசுவது? யாரு? சொக்கியா?.... என்ன?... என்ன வேணும்? ஆ! கொலையா? உங்க தாத்தாவா? அண்ணாச்சி! நொண்டி! பொடியன்! பேர்களே வேடிக்கையாயிருக்கே! அவுங்கதான் கொலை செய்தார்கள் என்பதற்கு நேரில் கண்ட சாட்சி இருக்கா? ஓகோ? நீயே சாட்சியா? ஊர் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அடித்துக் கொலை செய்தார்களா? அம்மா, சொக்கி!... நான் இப்பவே புறப்பட்டுவர்றேன்... உன் அட்ரஸ் என்னா?... கொஞ்சம் இரு எழுதிக் கொள்கிறேன். தொலைபேசியைக் காதில் வைத்தவாறே ஒரு தாளில் எழுதிக் கொள்கிறார்.

சரிம்மா! நான் இப்பவே நடவடிக்கை எடுக்கிறேம்மா! அதெல்லாம் பயப்படாதே - புனித ராஜ்யம் நடக்கிறது என்பதை மறந்து விடாதே! குற்றவாளிகள் தப்பிக்கவே முடியாது என்பதுதான் புனித ராஜ்யத்தின் புனித முழக்கம். ஆல்ரைட்! போனை வச்சிடு! நான் ஆகவேண்டியதைக் கவனிக்கிறேன்.

தொலைபேசியில் பேசி முடித்த எஸ்.பி. அவசரமாக எழுந்து தொப்பியை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே போக ஆயத்தமாகிறார். அப்போது மீண்டும் தொலைபேசியின் மணி அடிக்கிறது.

எஸ்.பி. :- ஹலோ! ஹலோ! நான் எஸ்.பி. பேசுகிறேன். குட்மார்னிங் சார்.

எஸ்.பி.யின் உடலில் ஒரு குழைவு, முகத்தில் ஒரு பரபரப்பு.

எஸ்.பி. :- ஆமாம் சார்! இப்பதான் ஒரு லேடி டிரங்கால் பேசுனாங்க சார்! அவுங்க பேரு சொக்கி! சொக்கின்னு சொன்னாங்க! அவுங்க தாத்தாவாம் - பேரு நல்லானாம்! அய்விட்னசே இருக்கு சார்! ஊர் ஜனங்களுக்கு நேராகவே அடிச்சு கொலை செய்ததாக... ஆமாம் சார்! எனக்குத் தெரியாது சார்! அந்தப் பெண் சொன்னதுதான் சார்! நடவடிக்கை எடுக்க வேண்டாம்னு சொல்றீங்களா சார்? எப்படி சார் முடியும்? மன்னிச்சுடுங்க சார்! தெரியாம பேசிவிட்டேன் சார்! டிரங்காலில் கம்ப்ளைண்ட் கொடுத்த பிறகு நாம் பேசாம இருந்தா சட்டப்படி சரியில்லைன்னு நினைக்கிறேன் சார்! அப்புறம் உங்க இஷ்டப்படியே செய்றேன் சார்! எஸ் சார். அப்படியே சார்! தேங்க்யூ சார்!

எஸ்.பி. பேசி முடித்ததும், குழப்பத்துடன் தொலைபேசியைக் கீழே வைத்துவிட்டு அங்குமிங்கும் உலவுகிறார்...

எஸ்.பி. :- தனக்குள்ளாகவே இது என்ன அக்கிரமம்? இவ்வளவு பெரிய அதிகாரி இப்படி ஒரு தவறு செய்யும்படியாகச் சொல்கிறாரே! கொலை நடந்திருக்கிறது. கொலை செய்தவர்கள் யார் என்பதைத் தானே கண்ணால் கண்டதாக அந்தப் பெண் சொல்கிறாள். கொலை நடக்கும்போது ஊர்மக்களும் பார்த்திருக்கிறார்கள்... தடயங்களோ, சாட்சியங்களோ இல்லாத கேஸ் என்றால் கூட இவர் சொல்வது ஒரு வகையில் நியாயம்!

ஆதாரப்பூர்வமான ஒரு கொலை வழக்கை எப்படி மறைக்க முடியும்? சே! என் மனச்சாட்சி என்னைக் கொல்லுகிறதே! என்னால் நியாய விரோதமாக நடக்க முடியாது! நடக்கவே முடியாது! அய்யோ! உத்தரவிடுவது பெரிய அதிகாரி அல்லவா!

தலையில் கைவைத்தவாறு அப்படியே உட்கார்ந்து விடுகிறார். கடிகாரத்தில் மணி ஆறு அடிக்கிறது. ஒரு காவலர் உள்ளே வந்து...

காவலர் :- சார்! சார்!

எஸ்.பி. :- குழப்பத்துடன் திடுக்கிட்டு என்னப்பா?

காவலர் :- சுமார்... மூன்று மணி நேரத்துக்கு மேலாக நீங்கள் என்னைக் கூப்பிடவே இல்லை. அதனால்தான் நானே உள்ளே வந்து பார்த்தேன்... மணி ஆறு... பொழுதுகூட போய்விட்டது சார்!

எஸ்.பி. :- எனக்கு மனதே சரியில்லை, ஒரே குழப்பமாக இருக்கிறதப்பா!

காவலர் :- கல்யாண விஷயம்தானே சார்! நேத்திக்கு மாப்பிள்ளை வீடு பார்க்க வந்தாங்களே சார்! அந்தப் பெண்ணும் முடிவாகவில்லையா சார்!

எஸ்.பி. :- பெண்ணும் வேண்டாம் - மண்ணும் வேண்டாம்!

காவலர் :- சார்! நான் சொல்றேன்னு கோபிக்கக் கூடாது! நீங்களும் ஒரே பிடிவாதமா சீர்திருத்தக் கல்யாணம்தான் செய்துக்குவேன்னு ஒத்தக் காலிலே நிக்கக் கூடாது சார்! பஞ்சாங்கம் பார்த்து அய்யரை வச்சே கல்யாணம் பண்ணிக்கிறதா ஒத்துக்கிட்டீங்கன்னா இன்னேரம்... கல்யாணமாகி... வீட்டிலே மூணு நாலு குவா! குவா! சப்தம் கேட்டிருக்கும் சார்!

எஸ்.பி. :- உஸ்! சும்மா இருப்பா!...

வெளியிலிருந்து காலிங் மணி அடிக்கிறது

எஸ்.பி. :- யார் என்று பார்!

காவலர் வெளியில் சென்று திரும்பி வந்து

காவலர் :- சார்! பெயர் அண்ணாச்சியாம் - புனித ராஜ்யத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவராம்... தங்களைப் பார்க்க வேண்டுமாம்.

சொல்லிக் கொண்டிருக்கும் போதே அண்ணாச்சி உள்ளே வந்து விடுகிறான்.

அண்ணாச்சி :-மிஸ்டர் எஸ்.பி.சார்! வணக்கம். நம்ம ஊர் நல்லான் மாரடைப்பிலே மரணமடைந்தது சம்பந்தமாக... யாரோ உங்களுக்கு தவறான தகவல் கொடுத்து...

எஸ்.பி. :- அதிருக்கட்டும், நீங்கள் யார்?

அண்ணாச்சி :-என்னைத் தெரியாதா? கேள்விப்பட்டது கூடக் கிடையாதா? அண்ணாச்சி என் பெயர்!

எஸ்.பி. :- ஓ! அந்த அண்ணாச்சியா? நல்லான் கொலை சம்பந்தமாக உங்கள் மீது தானே புகார் கூறப்பட்டது...

அண்ணாச்சி :-கொலையாவது ஒன்னாவது - அது சாதாரண இயற்கையான சாவு!

எஸ்.பி. :- இல்லை என்கிறேன் நான்.

அண்ணாச்சி :-ஆமாம் என்கிறேன் நான். செத்தவனைச் சுடுகாட்டில் வச்சு கொளுத்தியாச்சு!

எஸ்.பி. :- என்ன?

அண்ணாச்சி :-ஒரு மரியாதைக்காக உம்மைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போக வந்தேன். அவ்வளவுதான். தேவையில்லாமல் அலட்டிக் கொள்ள வேண்டாம். சிகரெட்! சிகரெட் தேவையா? என்ற பாவனையில் சிகரெட் டப்பாவை நீட்டுகிறான்.

எஸ்.பி. :- வேண்டாமென்று தலையசைத்தவாறு மிஸ்டர் அண்ணாச்சி! ஒரு போலீஸ் அதிகாரியிடம் எப்படி நடந்து கொள்வது என்பது கூட உமக்குப் புரியவில்லை. தயவுசெய்து போகலாம்! நான் என் கடமையைச் செய்தாக வேண்டும்.

அண்ணாச்சி :-எஸ்.பி. சார்! சொக்கி என்று ஒருத்தி உமக்கு போன் செய்திருப்பாள்! அவள் சொன்னதெல்லாம்

பொய்! நம்பாதீர்கள்! நான் சொன்னதை மீறி ஏதாவது நடந்தால்... நினைவிருக்கட்டும் நடப்பது புனித ராஜ்யம்! உமது வேலை காலியாகி விடும்... வருகிறேன்.

அண்ணாச்சி போனதும்... எஸ்.பி.... குழப்பமான நிலையில் சிறிது நடக்கிறார். பிறகு ஒரு திடமான முடிவுடன்... தாளை எடுத்து ஏதோ எழுதிக் கவரில் போட்டுக் காவலரிடம் கொடுக்கிறார்.

காவலர் :- என்ன சார் இது?

எஸ்.பி. :- என் ராஜினாமா கடிதம்! போஸ்ட் செய்து விடு...

காவலர் :- சார்! சார்!

எஸ்.பி. ஆபீசிலிருந்து வெளியேறுகிறார்

ஐந்தாவது காட்சி முடிகிறது. ஆறாவது காட்சியை அடுத்தொரு நாள் காண்போம்.

அன்புள்ள,

மு. க.

24-09-1977

473. இளைஞர் அணியினர்க்கு இரக்கம் காட்டுக!

உடன்பிறப்பே,

கழக ஆட்சி நடைபெற்ற போது, பெருந்தலைவர் காமராஜர் ஒரு கருத்தினை வெளியிட்டு அதனைக் கழக அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கூட்டங்களில் கூறிவந்தார்.

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் வேலையின்றி வேதனைப்படுகிறார்கள். அத்தகையோருக்கு வேலை வாய்ப்புகள் கிட்டும் வரையில், பட்டதாரி இளைஞர்களுக்கு அரசின் சார்பில் மாதம் இருநூறு ரூபாய் இடைக்கால உதவியாக வழங்க வேண்டும் என்பதே அவர் கூறிய கருத்தாகும். அந்தக் கருத்தை அலட்சியப்படுத்தாமல் கழக அரசு அதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்து 1971-ஆம் ஆண்டு இளைஞர் அணியை உருவாக்கியது. அதில் நாலாயிரம் பட்டதாரிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

அந்தப் பணி தற்காலிகமானதே என்றும், இளைஞர் அணியில் இருப்பவர்கள் எப்போது தங்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைத்தாலும் அதற்குச் செல்லலாம் என்றும் தெரிவித்து அந்த அணியில் உள்ளோர் பல்வேறு சமூக சேவைகளைச் செய்வதற்காக மாதம் 175 ரூபாயும் அளிக்கப்பட்டு வந்தது.

தீண்டாமை ஒழிப்பு

முதியோர் கல்வி

குழந்தைகள் படிப்பு

கிராமச் சுகாதாரம்

சமூகச் சீர்திருத்தம்

இப்படிப் பல்வகையான சமுதாயப் பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். அந்த அணியில் சேர விரும்புவோரை மாவட்ட அளவில் குழுக்கள் அமைத்து சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இளைஞர் அணியில் கட்சிச் சார்பற்றவர்கள் இருந்தார்கள் என்று கூறுவதைவிட, எல்லாக் கட்சியைச் சேர்ந்த இளைஞர்களும் இருந்தனர். மாணவப் பருவத்திலேயே அவர்கள் தங்களுக்கென சில அரசியல் கட்சிகளின் கருத்துகளைக் கொண்டவர்களாக விளங்குவது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்பதை மறுக்க முடியாதல்லவா?

எனினும், இளைஞர் அணியின் பணிகளில் எவ்விதக் கட்சிச் சாயலும் இல்லாமல் கழக அரசு, எச்சரிக்கையுடன் அந்த அணியினை நடத்தி வந்தது.

சில பகுதிகளில் இளைஞர் அணியினர், ஒழுங்குறத் தங்கள் கடமைகளைச் செய்யவில்லை என்றும், மாதந்தோறும் 175 ரூபாய் தொகையை மட்டும் பெற்றுக் கொள்கின்றனர் என்றும் அப்போதே குறைபாடுகள் அரசின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டன. அவ்வாறு கடமையாற்றாத சில பட்டதாரி இளைஞர்கள் மீது கழக அரசுக் காலத்திலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டது. சிலரை வேலைநீக்கம் கூட செய்ய வேண்டியதாயிற்று.

அதன் பிறகு இளைஞர் அணியை மேலும் செம்மையாக நடத்திட கழக அரசு, திட்டங்களை வகுத்துச் செயல்படத் தொடங்கியது.

அதற்கிடையே கழக அரசு கலைக்கப்பட்டு - அதனைத் தொடர்ந்து இளைஞர் அணியும் செயலற்றுப் போகுமாறு செய்யப்பட்டு - இப்போது அந்த அணியில் உள்ள அனைவருமே வேலைநீக்கத்திற்கு ஆட்படுத்தப்பட்டு அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

அவர்கள் முதலில் இரண்டாண்டு காலத்திற்குத்தான் என்று பணியில் சேர்க்கப்பட்டிருந்தாலும் கூட, கழக அரசு அவர்களுக்கு வேலை நீடிப்பை ஆண்டுதோறும் செய்து கொண்டே இருந்தது. ஆனால் அதற்கு மாறாக, அவர்கள் அனைவரும் இப்போது வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

சட்டப்பேரவையில் அனைத்து எதிர்க்கட்சிகளும் - ஏன்? ஆளுங் கட்சியினரின் தோழமைக் கட்சிகளும் கூட இளைஞர் அணியினருக்காகக் குரல் கொடுத்திருந்தும் ஆளுங்கட்சியினர் அதுபற்றி ஒரு சிறிதும் அக்கறை காட்டவில்லை.

இளைஞர் அணியிலிருந்து விலக்கப்படுகிறவர்களுக்கு மாற்று வேலைத்திட்டமாக 16000 நியாய விலைக் கடைகள்

ஏற்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறீர்களே! அந்த நியாய விலைக் கடைகளில் இவர்களுக்கு வேலை தரலாமே - என்றும் ஆக்கபூர்வமான கருத்துகளை எடுத்துக் கூறினோம்.

எதையும் அரசு, செவியில் போட்டுக்கொள்ளவில்லை. இளைஞர் அணியினர் வேறுவழியின்றி அறப்போர் முறையில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு ஆண்களும் பெண்களுமாகத் தொடர்ந்து நாள்தோறும் சிறைபட்டு வாடுகிறார்கள்.

எல்லாக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் இளைஞர் அணியினர்க்கு இரக்கம் காட்டுமாறு அரசினரை வேண்டியுள்ளனர். வேண்டுகோள் - முறையீடு - அனைத்தும் வேக வேகமாக அரசினரின் குப்பைத் தொட்டிகளுக்குத்தான் போய்க் கொண்டிருக்கின்றன.

ஏறத்தாழ நூற்றிஐம்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பத்தாயிரம் பேரைக் காவல் துறைக்கு புதிதாக சேர்க்கப் போவதாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அடிக்கடி அறிவித்து வருகிறார். இப்போது 46 ஆயிரம் பேர் உள்ள காவல் துறைக்கு உடனடியாகப் புதிதாக பத்தாயிரம் பேரைச் சேர்ப்பதைவிட அதிலே ஒரு நாலாயிரம் பேரைக் குறைத்துக்கொண்டு - இருந்த வேலையிலிருந்து விரட்டப்படுகிற இளைஞர் அணியினர்க்கு அதே இளைஞர் அணியிலோ, அல்லது வேறு ஏதாவது அரசுப் பணியிலோ - வேலைவாய்ப்பு வழங்குவதே முறையாக இருக்கும்! அதுதான் மனிதாபிமானமும் கூட!

இதைச் சொல்வதால் உடனே நாம் இளைஞர் அணியினரைத் தூண்டி விடுகிறோம் என்று கூறி அரசினர், பிரச்சினையை மூடி மறைத்து விட முனையக் கூடாது.

ஒரு எதிர்க்கட்சிக்குரிய கடமையைப் பொறுப்புணர்ச்சியுடன் செய்கிறோம் என்ற நிலையில் எடுத்துக் கொண்டு அந்த இளைஞர்களுக்கு வாழ்வளிக்க அரசு முன்வருமா? என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி!

அன்புள்ள,

மு. க.

25-09-1977

474. புனித ராஜ்யம் காட்சி - 6!

உடன்பிறப்பே,

புனித ராஜ்யம் நாடகத்தின் ஆறாவது காட்சியை இன்று காண்போம்.

ஊர்ப் பொது மண்டபம். இரவு நேரம், தெரு விளக்கின் உதவியால் வெளிச்சம் மண்டபத்திற்கு வெளியேயும் உள்ளேயும் ஓரளவு பரவியிருக்கிறது. மண்டபத்துத் தூண் ஒன்றில் சாய்ந்த வாறு சொக்கி, விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கிறாள். அப்போது, நொண்டியும் பொடியனும் குடி போதையுடன் கலகலவென சிரித்துக் கொண்டு வருகிறார்கள். அது கண்ட சொக்கி, அஞ்சி நடுங்கி மண்டபத்துத் தூண் மறைவில் ஒளிந்து கொள்கிறாள்.

நொண்டி :- பொடியா!... ஹ ஹ ஹ! எப்படி நம்ப வேலை - நல்லான் கதையை ஒரு வழியா முடிச்சாச்சு!... நம்பளும் நல்லவனா ஆகியாச்சு... ஆமாம்.... அண்ணாச்சி எங்கே ஆளைக் காணோம்...

பொடியன் :- அண்ணாச்சியா? அவரு... எஸ்.பி.யை சரிக்கட்ட போனாரே... அந்த வேலையா அலைஞ்சு கிட்டிருப்பாரு!...

நொண்டி :- புனிதமான ஒரு தொழிலை நடத்துகிறோம் நாம்... நம்மகிட்டே அந்த நல்லான் புலி மாதிரி பாஞ்சான் பாத்தியா?

பொடியன் :- புலிகளை எலிகளாக்குவோம் - எலிகளை, எறும்புகளாக்குவோம்... அப்படிப்பட்ட அதிகாரம் படைத்தவர்கள் நாம் என்பதை கூரை மீது நின்று கொண்டு கூவுவோம்!

நொண்டி :- அப்படிச் சொல்லு!... நம்பளை எதிர்த்து சவால் விட்டாரு ஒருத்தரு!... சேலை கட்டிக்கு வேன்னாரு! அவரே இப்ப வந்து காலில விழுந்து கிடக்கிறாரு!

பொடியன் :- யாரு அவரு?... இன்னமும் வேட்டிதான் கட்டியிருக்காரா?

நொண்டி :- தொலையட்டும்னு பர்மிஷன் கொடுத்துட்டேன்! இல்லேன்னா பாவாடை கட்டி... அனுப்பியிருப்பேன்...

பொடியன் :- நம்மக்கிட்டே மோதுனவுங்க... மூஞ்சி முகரக் கட்டையெல்லாம் கரிபூசிகிட்டு... நம்ப காலிலேயே விழுந்து சாமீ! சரணம் அய்யப்பா!ன்று பூஜை பண்றாங்களே! அது வல்லவா பெரிய விசேஷம்!

நொண்டி :- அவுங்களுக்குன்னு ஒரு கொள்கையில்லாதவுங்க... வாழுற வீட்டுக்கு மாரடிக்கிறவுங்க... இக்கரைக்கு அக்கரை பச்சைன்னு தாண்டுறவுங்க... அப்படிப்பட்ட ஆளுங்களுக்கு நமக்கு இருக்கிற ஸ்டடினஸ் கூட இருக்காது தெரியுமா?

பொடியன் :- நம்ப, எவ்வளவோ ஸ்டடியா இருக்கிறோமே! ஆளுக்கு மூணு பாட்டிலு அடிச்சுட்டு... ஆடாம... அசையாம... அப்படியே நிக்கிறோமே...

இருவரும் தடுமாறுகிறார்கள்

நொண்டி :- குறுக்கே பேசாதே... நான் நமக்கு கிடைக்கிற வெற்றிகளை நினைச்சு நினைச்சு பூரிச்சுப் போய்க்கிட்டு இருக்கேன்! பொடியா! ஒண்ணு கவனிச்சியா?... இந்த ஊர்ல நம்பளை ஓவரா திட்டினவங்க எல்லாம் இன்னைக்கு நம்ப ஆட்டிவைக்கிற குரங்குமாதிரி ஆடுறாங்க!... நேற்று ஒருத்தன் என்னை வாயில வந்தபடி பேசுனான்... கேள்விப்பட்டேன்... இன்னைக்கு என் வாசல்ல வந்து நிக்கும்படியா பண்ணிட்டேன்...

இதெல்லாம் யார் பண்ற வேலை... யார் பண்ற வேலை?

பொடியன் :- நீங்க பண்ற வேலை!

நொண்டி :- சே!... நான் என்ன சாதாரண மனுஷ ஜென்மம்... என்னால என்ன முடியும்? கடவுளைவிட சக்தி வாய்ந்தது... காசுடா! காசு! அந்தக் காசு பண்ற வேலை! புனித ராஜ்யத்திலே நான் ஒரு முக்கியமான புள்ளி... நான் விரல் அசைத்தால்... வேங்கை மாதிரி சீறுகிறவுங்க எல்லாம் வெள்ளாடு மாதிரி அடங்கணும், தெரியுமா?... அதிகாரம், பணம், பதவி... அந்தஸ்து... இப்படிப்பட்ட எலும்புத் துண்டுகளுக்கு ஆசைப்படாத இரும்பு நெஞ்சம் படைச்சவுங்க யாருடா இருக்கா உலகத்திலே?...

அப்போது ''நான் இருக்கிறேன்'' என்று ஒரு குரல் கேட்கிறது. ஆண் குரல்தான் அது!

நொண்டியும், பொடியனும் திடுக்கிட்டு மண்டபத்துக்குள் ஓடிப்போய் சுற்றுமுற்றும் பார்க்கிறார்கள். அங்கே ஒளிந்திருந்த சொக்கியை நொண்டி - இழுத்துக்கொண்டு வெளியே வருகிறான்.

நொண்டி :- ஓகோ! நீதான் ஒளிந்துகொண்டு அசரீரி போலப் பேசி, ஆளைப் பயமுறுத்துறியா? இதிலவேற ஆண் குரல் மாதிரி மாத்திக் கத்துறியா?

பொடியன் :- பல குரலரசின்னு பட்டம் கொடுக்க வேண்டியதுதான்!

சொக்கி :- நான் கத்தவுமில்லை... சத்தம் போடவுமில்லை... என்னை விட்டு விடுங்கள்!

நொண்டி :- கோப்பையிலே இருக்கிற சாராயத்தை எந்த முட்டாளாவது கீழே ஊத்துவானா?... என்ன பொடியா? இவளை விட முடியுமா?

பொடியன் :- ஆமாங்க! மளமளன்னு சாப்பிட்டு ஏப்பம் விட வேண்டியதுதான்...

நொண்டி :- அதிருக்கட்டும் சொக்கி... அதிகாரம், அந்தஸ்து, பணம், பதவி... இவைகளுக்கு ஆசைப்படாதது யாருன்னு நான் கேட்ட போது நானிருக்கேன்னு சொன்னியே! உனக்கு அதிகாரம் வேண்டாமா? என்னையே நீ அதிகாரம் செலுத்தலாம், நீ இஷ்டப்பட்டால்! அந்தஸ்து உனக்கு அடிமை யாகும் நீ மட்டும் சரி என்று சொன்னால்! பணம்... பதவி.... இரண்டும் உனக்குப் பராக்குக் கூறும்... உன் பார்வையை மட்டும் என் மீது வீசினால்... என்ன சொல்கிறாய்?...

அவளைத் தொட்டிழுக்கிறான்.

குரல் :- தொடாதே அவளை!

நொண்டி :- விழிப்புடன் என்னடா இது?... இது வேறு யார் குரலோதான் - பொடியா!

பொடியன் :- என் குரல் இல்லீங்க!...

நொண்டி :- எங்கே சொல்லுடா! தொடாதே அவளைன்னு சொல்லுடா!

பொடியன் :- தொடாதே அவளை!

நொண்டி :- சே! சே! உன் குரலும் இல்லை!... கனைத்துக் கொண்டு யார் கத்துவது? இந்த வீரனிடமா வேடிக்கை காட்டுறே? என் பக்கத்திலே ஒரு பெண் நிற்கும்போது நான் கோழையாக இருக்கமாட்டேன் என்பதைப் புரிந்து கொள்... தைரியமிருந்தால் நேருக்கு நேர் வா!....

நொண்டி, சுற்றுமுற்றும் பார்த்துக் குரல் கொடுத்ததும் - எஸ்.பி. எதிரே வருகிறார், கம்பீரமாக நடந்தவாறு! அவர், போலீஸ் உடையில் இல்லை. கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு வீரநடை போட்டு வரும் அந்த வாலிபரைக் கண்டதும் நொண்டியும், பொடியனும் வியப்படைந்து நிற்கிறார்கள்!

நொண்டி :- நீ யார்? ஒரு பெண் தனியாக இருக்குமிடத்தில் வந்து தகராறு செய்கிறாய்...

எஸ்.பி. :- ஆகாகா!... பெண்கள் குலத்துப் பாதுகாவலரே! ஒரு பெண் தனியாக இருக்கும்போது தகாத முறையில் நடந்துகொள்வது நீங்களா? நானா?...

நொண்டி :- அதிருக்கட்டும். நீ யார்?...

எஸ்.பி. :- நானா? என் பெயர் சுந்தரம்! எனக்குரிய அடைமொழியுடன் சொல்லட்டுமா? சுயமரியாதை சுந்தரம்! சூப்பிரண்டெண்டண்ட் சுயமரியாதை சுந்தரம் என்று கேள்விப்பட்டிருப்பாயே! அந்த ஆள் நான்தான்!... சற்றுமுன் கேட்டாயே! அதிகாரம் - அந்தஸ்து - பதவி - பணம் ஆகிய எலும்புத் துண்டுகளுக்கு ஆசைப்படாதவன் எவனாவது இருக்கிறானா? என்று அலட்சியத்தோடு கேட்டாயே! அப்படி சுயமரியாதையோடு இருக்கிற உண்மையான மனிதர்களின் பட்டியலில் இடம் பெற்றவன்தான் இந்த சுந்தரம்!

நொண்டி :- ஓ... சூப்பிரண்டு சாரா?... சார்! சார்!... வாங்க நம்ப பங்களாவுக்குப் போகலாம்... பசியோடு இருப்பீங்க... இன்னைக்கு அருமையான மான் கறி!...

சுந்தரம் :- முதல்ல நீங்க போங்க...

நொண்டி :- நீங்க பின்னால வர்றீங்களா?... வீடு அட்ரஸ் தெரியுமா?... சொக்கி! வா! போகலாம்!....

சுந்தரம் :- உஸ்!... தொடாதே!... மரியாதையா போறீங்களா? இல்லை...

என்று மிரட்டியவாறு கைத்துப்பாக்கியை நீட்டவே - நொண்டியும் பொடியனும் அலறிக்கொண்டு ஓடுகிறார்கள்!

சுந்தரம் :- சொக்கியிடம் வந்து ஏம்மா! கொலை செய்யப்பட்ட நல்லானுடைய பேத்திதானே நீங்க?...

சொக்கி ஆம் என்று தலையசைக்கிறாள்

சுந்தரம் :- அதோ.... ஜீப்... இருக்கிறது... என்னோடு கொஞ்சம் வரமுடியுமா?...

சொக்கி வருவதாக தலையசைக்கவே இருவரும் புறப்படுகிறார்கள். ஜீப் கிளம்பும் ஒலியுடன் காட்சி முடிகிறது. திரை விழுகிறது.

ஏழாவது காட்சியைக் காணவேண்டுமென்று ஆசை, அலைமோதுகிறதல்லவா? கொஞ்சம் பொறுத்துக் கொள்க! விரைவில் காணலாம், அந்தக் காட்சியை!

அன்புள்ள,

மு. க.

26-09-1977

475. "அண்ணா சுழற்கோப்பை" யாருக்கு?

உடன்பிறப்பே,

சிதம்பரத்தில் நடைபெற்ற பொதுக்குழுவில் நமது கழகத்தின் சட்டதிட்டங்களில், சில முக்கியமான திருத்தங்கள் கழக அமைப்புகள் மேலும் விறுவிறுப்புடன் இயக்குவதற்கேற்ற வகையில் செய்யப்பெற்று, பொதுக்குழுவின் ஒப்புதலோடு நிறைவேற்றப்பட்டுள்ளன. அதற்கேற்ற வகையில் எதிர்காலத்தில் கழக அமைப்புகளின் தேர்தல்கள் நடைபெற்று எல்லா அமைப்புகளிலும் பொறுப்பேற்பவர்கள் தங்கள் பணியினை இடைவிடாது கடமையுணர்ச்சியுடன் ஆற்றிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இலட்சக்கணக்கில் உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர் என்ற செய்தி செந்தேனாகப் பாய்கிறது நெஞ்சில்!

ஐம்பதுக்கு மேற்பட்ட எழுத்தர்களை வேலைக்கு அமர்த்தி உறுப்பினர் தாள்களை சரிபார்க்கும் பணியும், உறுப்பினர் அடையாளச் சீட்டுக்களை அனுப்புகிற பணியும் அறிவகத்தில் மிக்க பரபரப்புடன் நடைபெறுகிற காட்சியைக் காணும்போது மெய்சிலிர்க்கிறது. பூரிப்பு பொங்குகிறது.

கழகம், தனக்கென ஒரு தலைமை நிலையக் கட்டிடத்தை அமைத்துக்கொள்ள விரும்பியபோது வாங்கியதல்லவா அறிவகம்!

அந்த அறிவகத்தில் நமது அண்ணன் அமர்ந்து எத்தனை எத்தனைத் திட்டங்களை தீட்டியுள்ளார். இந்தி எழுத்துகளை அழிக்கின்ற போராட்டத்தை அறிவித்த செயற்குழு, அந்தப் பாசறையிலேதான் கூடியது. அண்ணாவும் கழக முன்னணியினர் பலரும் கைது செய்யப்பட்டது அறிவகத்திலேதான்! அரசியல் சட்டத்தில் மொழிப்பிரிவுக்குத் தீயிடுவேன் என்று சூளுரைத்து கடற்கரை நோக்கி அண்ணாவும் மற்றவர்களும் புறப்பட்டது அறிவகத்தில் இருந்துதான்!

அறிவகத்தைத் தொடர்ந்து அன்பகமும் கழகத்தின் உடைமை ஆயிற்று. இப்போது அந்த இரு பணிமனைகளிலும் ஓய்வின்றிக் கழக அலுவல்கள் நடைபெற்ற வண்ண மிருக்கின்றன.

அன்பகம் நம்நாடு இதழின் அலுவலகமாகத் திகழ்கிறது. உன்னைப் போன்ற உடன்பிறப்புகளின் ஆர்வத்தையும், இலட்சியப் பற்றினையும் நம்பி, தொடங்கப் பெற்றுள்ள நம்நாடு வார இதழ் நாங்கள் எதிர்பார்த்ததைவிட அமோகமான ஆதரவைப் பெற்றுள்ளது. விற்பனையாளர்கள் பிரதிகள் போதவில்லையென்று எழுதுகிற கடிதங்கள் குவிந்த வண்ணமுள்ளன. விரைவில், நான் எழுத இருக்கிற தொடர் ஓவியமும் நம்நாட்டில் இடம்பெற இருக்கிறது என்பதை இப்போதே உனக்குச் சொல்லி வைக்கிறேன்.

அறிவகமும், அன்பகமும் காட்டுகிற சுறுசுறுப்பு - உடன்பிறப்பே உன் உழைப்பின் எதிரொலி என்பதை நான் உணருகிறேன். உன்னை வாழ்த்துகிறேன்.

ஒன்றை மறந்துவிடாதே! உறுப்பினர் சேர்ப்பது - புதுப்பிப்பது இரண்டு வேலைகளும் இந்தத் திங்கள் முப்பதாம் நாளுக்குள் முடிவடைந்தாக வேண்டும் என்று பொதுக்குழு தீர்மானித்துள்ளது. இனிமேல் உறுப்பினர் சேர்ப்பதற்கான கால நீடிப்பு நிச்சயமாகத் தரப்பட மாட்டாது. உறுப்பினர் சேர்த்தல் குறித்து ஏற்கனவே நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் விளக்கமான அறிக்கை கொடுத்துள்ளார். எனவே இந்தக் கடிதம் கண்டவுடன் இதுவரை சேர்த்துள்ள உறுப்பினர் பட்டியல் தாள்களையும், அதற்குரிய உறுப்பினர் கட்டணத்தையும், முறைப்படி தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கத் தவற வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

செப்டம்பர் 30-ஆம் நாளுக்குள் கழக உறுப்பினராகச் சேருவோர் - புதுப்பித்துக் கொள்வோர் ஆகியோர் மட்டுமே, கழகப் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களாவார்கள் என்பதை மறந்து விடாமல், தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஏராளமான இளைஞர்கள், மகளிர், தொழிலாளத் தோழர்கள் கிராமப்புறத்தில் உள்ளோர், இதுவரையில் எந்தக் கட்சியிலும் இல்லாதிருந்தோர் அல்லது வேறு கட்சிகளில் இருந்து விடுவித்துக் கொண்டு நமது கழகத்திற்கு வருவோர் - இந்த எண்ணிக்கை, நாளுக்கு நாள் பெருகிய வண்ணமிருக்கிறது.

அப்படிப் புதிதாகச் சேருகிறவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கமளித்து, ஒற்றுமையுடன் கழக ஆக்கப் பணிகளை ஆற்றிடல் வேண்டும்.

புதிதாக வருகிறவர்கள் உறுதியாக இருப்பார்களா?

இப்படியொரு சந்தேகத்தைக் கிளப்புவாய், என்று எனக்குத் தெரியும்!

உறுதியானவர்கள் - உறுதியற்றவர்கள் - என்ற இந்த இரண்டு வகையினரும், புதிது - பழசு என்ற இரு பட்டியலிலும் காணப்படுகிற பெயர்கள்தான்!

ஆகவே, பழமையானவர்கள்தான் உறுதியானவர்கள் என்று கூறிவிடவும் முடியாது - புதியவர்கள் உறுதியற்றவர்கள் என்று முடிவு செய்திடவும் கூடாது!

பழையவர்களிலும் உறுதியற்றவர்கள் உண்டு - புதியவர்களிலும் ஓடுகாலிகள் உண்டு - இரண்டுக்கும் நம்மிடம் அனுபவ ரீதியான எடுத்துக்காட்டுகள் உண்டு.

நமது கழக உறுப்பினர் எண்ணிக்கை பதினைந்து இலட்சத்தை எட்டியது என்ற கணக்கைக் காட்டிட வேண்டும். அதற்கு உனது அயராத உழைப்புத் தேவை. இடையில் சில நாட்கள்தான்.

கழக அமைப்புகள் அனைத்திலும் கழக உறுப்பினர்களில் உடல் வலிவுமிக்கவர்களும், நமது கூட்டங்களைப் பாதுகாப்புடன் நடத்திடும் பயிற்சி பெற்றவர்களும் அடங்கிய தொண்டர் அணியினை ஆங்காங்கு உருவாக்கி அந்த அணியினர், கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு காத்திடும் வண்ணம் செயலாற்றுமாறு செய்திடல் வேண்டும்.

பொதுக்குழுவிலேயே பெரும் ஆரவாரத்திற்கிடையே அறிவிக்கப்பட்ட ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை மறந்து விடாதே!

அதிக உறுப்பினர்களைச் சேர்த்திடும் மாவட்டத்திற்கு அண்ணா சுழற் கோப்பை காத்துக் கொண்டிருக்கிறது.

அதைப்போலவே ஒவ்வொரு மாவட்டக் கழகச் செயலாளர்களும் ஒன்றியக் கழகங்களை ஊக்குவித்து உறுப்பினர் சேர்க்கும் பணியில் பெரும் வெற்றியினை ஈட்டித் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

உடன்பிறப்பே, அடுக்கடுக்காகப் படையெடுக்கும் தொல்லைகள் - சீறிப் பாயும் துரோகச் செயல்கள் - அனைத்தையும் உன் உழைப்பினை எண்ணித்தான் இந்த உடலும், உள்ளமும் தாங்கிக் கொண்டிருக்கிறது.

மேலும் பெருகிடும் எதிர்ப்புகளைத் தாங்கிடும் வலிமையை உன்னிடம்தான் நானும், நமது கழகமும் எதிர்பார்த்து நிற்கிறோம்.

நானிருக்க பயமேன்? என்ற ஆணவ மொழியல்ல! நீயிருக்க பயமேன்? என்ற ஆறுதல் உணர்வுதான் எங்களை இந்த இலட்சியப்பயணத்தில் தளராது நடைபோடச் செய்கிறது.

விடுத்த வேண்டுகோள் எதனையும் நீ அலட்சியப்படுத்தியதில்லை! இந்த வேண்டுகோளையும் ஏற்று வெட்டிவா என்றுரைத்தால் கட்டிவரும் வீரனாக விளங்கிடுக உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

27-09-1977

476. சிறைச்சாலை என்ன செய்யும்?

உடன்பிறப்பே,

"கருணாநிதி, சிறைக்குச் சென்று வெளியே வரும்போது இங்கு தி.மு.கழகம் இருக்காது. கருணாநிதி உள்ளே போய்விட்டால் தி.மு.கழகம் என்ற கட்சி இராது. அத்தனை பேரும் அனைத்து இந்திய அண்ணா தி.மு.கழகத்திற்கு வரத் தயாராக இருக்கிறார்கள்"

நாஞ்சில் மனோகரன், நஞ்சில் நெஞ்சைத் தோய்த்துப் பேசிய பேச்சு இது! ஆம், பொதுக்கூட்டத்தில் வட சென்னையில் நிதி அமைச்சர் - சட்டப் பேரவையின் முன்னவர் ஆற்றிய உரைதான்!

என்னைக் கைது செய்து, வழக்கு நடத்தி, சிறைவாசம் அனுபவிக்கச் செய்ய வேண்டுமென்று இன்றைய ஆளுங்கட்சியினர் தீவிரமான முயற்சிகள் மேற்கொண்டிருப்பதன் உள்நோக்கம் என்ன என்பதை நண்பர் மனோகரன் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கி விட்டார்.

தி.மு.கழகம் இல்லாமல் போய்விட வேண்டும் - தி.மு.கழகத்தினர் அனைவரும் அ.இ.அ.தி.மு.க.வுக்கு வந்துவிட வேண்டும் - அதற்கு ஒரே வழி கருணாநிதியைக் கைது செய்து நான்கைந்து ஆண்டுகள் சிறைக்குள்ளேயே வைத்திருப்பதுதான், என்று திட்டமிட்டு முடிவெடுத்திருக்கிறார்கள் என்பது மனோகரனின் பேச்சிலிருந்து உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளங்கிவிட்டது.

ஆனால் ஒன்று, ஆளுங்கட்சியினரும், அந்தக் கட்சியின் அமைச்சர்களில் ஒருவரான நண்பர் மனோகரன் அவர்களும் மிகத் தவறான ஒரு கணக்கைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கருணாநிதி என்பவன் சாகாவரம் பெற்றவனல்ல! இயற்கை, அவனைச் சில ஆண்டுகாலம் உலகில் வாழ வைக்கவும் கூடும். அல்லது திடீரென அடித்திடும் காற்றில் உதிரும் பூவாக ஆக்கிடவும்

கூடும். எனவே ஐந்தாண்டு காலம் கருணாநிதியைச் சிறையிலே தள்ளுவதால் கழகம் அழிந்துவிடுமென்று கருதுவார்களேயானால் - கருணாநிதி, சாவின் சன்னிதானத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டால் இந்தக் கழகம் என்ன ஆகும் என்பதையும் எண்ணிப்பார்த்திட வேண்டும்.

கருணாநிதியின் வாழ்வே முடிந்துவிட்டாலும், கழகத்தின் வாழ்வு முடியாது என்கிற அளவுக்கு வலிமை வாய்ந்த அமைப்பு இது!

அத்தகைய ஒரு அமைப்பு கருணாநிதி சிறையில் முடக்கப்பட்டு விடுகிற காரணத்தால் அழிந்துவிடும் என்று யாராவது கனவு காண்பார்களேயானால், அவர்களை உடனடியாக மனநோய் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க வேண்டியது உடனிருக்கும் உற்ற நண்பர்களின் பொறுப்பாகும்.

உடன்பிறப்பே,

அரசியல் ரீதியாக என்னைப் பழிவாங்கி, அவதூறுகளை வாரியிறைத்துக் கழகத்தின் தளபதிகளைக் கைது செய்து இழிவுபடுத்தி, தி.மு.க. என்ற சொல்லையே இருந்த இடம் தெரியாமல் ஆக்கிவிடுவதற்கு இந்திரா அம்மையார் எந்த முறைகளைத் தேர்ந்தெடுத்தாரோ, அதே முறைகளைத்தான் எம்.ஜி.ஆர். அரசும் பின்பற்றத் தொடங்கியுள்ளது.

நெருக்கடி நிலையை எதிர்த்தோம் என்பதால் நெருப்புமிழும் பார்வையை டெல்லி ஆட்சி, நம்மீது திருப்பியது! மிசாவுக்குத் தப்பித் தலைமறைவாக இருந்த அரசியல் தலைவர்கள் பலர், தமிழகத்தில் அடைக்கலம் புகுந்திருந்தார்கள் என்று வெளிப்படையாகவே குற்றம் சாட்டி, கழக ஆட்சியைக் கவிழ்க்க டெல்லிச் சர்வாதிகாரம், வெகுண்டெழுந்ததை நாடு மறந்துவிடவில்லை.

சர்வாதிகாரத்தை எதிர்த்து, ஜனநாயகத்தைக் காத்திட நாம் கொடுத்த உரிமைக் குரலுக்கு அன்றைய ஆட்சியினர் வழங்கிய தண்டனைகள்தான், கிரிமினல் வழக்குகள் - விசாரணைக் கமிஷன்கள்!

இன்றைக்கும் அவை தொடருகின்றன! தொடர்ந்தபடி இருக்கின்றன! அன்று இந்திராவின் சர்வாதிகாரத்திற்குச் சாமரம் வீசி, ஆலவட்டம் சுழற்றி, ஆராதனைகள் செய்து கொண்டிருந்த எம்.ஜி.ஆர். கட்சியினர் இன்று தமிழகத்தின் ஆளுங்கட்சியினராக மாறி, இந்திரா காந்தியின் மனங்குளிரும் வகையில் அந்த அம்மையார் நம்மீது தீர்க்க விரும்பிய வஞ்சத்தை நிறைவேற்றி வைப்போம் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்கள். வாழ்க அவர்களது பழைய எஜமானி அம்மாளின் பக்தி என்று வாழ்த்துவோமாக!

காலை முதல் மாலை வரையில் நாள் தவறாமல், கழகத் தலைவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று காட்டு ராஜாக்களின் பாணியில் பேசிக் கொண்டேயிருப்பதால், கழகம் கலகலத்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

எங்கள் மீது எந்தக் குற்றம் சுமத்தினாலும், அது அரசியலில் பழிவாங்கும் நோக்கத்துடன் செய்யப்படும் காரியம் என்பதை நாட்டு மக்கள் மிக நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.

கைது செய்தல்,

போலீஸ் ஜீப்பில் ஊர்வலம் விடுதல்,

சிறையில் தள்ளுதல்

இந்த வார்த்தைகளையே அசைபோட்டுக் கொண்டிருப் பவர்களுக்கு வேண்டுமானால், சிறை என்பதும், கைதாவது என்பதும் அச்சம் தரும் சொற்களாக இருக்கக்கூடும். கழகம் எதிர்க்கட்சியாக இருந்து விலைவாசிப் போராட்டம் நடத்தியபோது குமரி மாவட்டத்தில் அப்போதிருந்த அரசாங்க வழக்கறிஞரிடத்தில் கெஞ்சிக் கூத்தாடி, இரண்டு மூன்று வாரத்திற்கு மேற்படாமல் சிறைத் தண்டனை பெறுவதற்குச் சிபாரிசு செய்து எப்படியாவது தியாகமுத்திரை குத்திக் கொண்டால் போதுமென்கிற அளவுக்கு நாடகம் நடத்திய மேனாமினுக்கிகள் இன்று, தமிழ் நாட்டு மக்களின் ஏமாளித்தனத்தின் காரணமாக அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கக்கூடும். அவர்களால் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளைத் தாங்கிக் கொள்ள இயலாது. நமக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகளில் ஒரு துளியளவு அவர்களுக்கு ஏற்பட்டிருக்குமேயானால், அரசியல் துறவறமே பூண்டிருப்பார்கள்!

அத்தகையோர், எதையும் தாங்கிடத் தயாராக நிற்கும் நம்மை அச்சுறுத்துகின்றனர்.

சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் அளவு என்பதுபோல - எத்தகையக் கொடுமையான தண்டனைகள் கிடைத்தாலும் அவற்றைச் சிரித்த முகத்துடனும் - உறுதி குலையா உள்ளத்துடனும் ஏற்று - இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக நாம் செய்யும் இறுதித் தியாகம் என்ற மகிழ்ச்சியுடன் சிறையானாலும் - அல்லது சித்திரவதைக் கூடமானாலும் அவற்றை நோக்கிச் செல்லத் தயாராக இருக்கிறோம்.

எங்களை அழித்துவிடலாம் - நாங்கள் தூக்கிப் பிடித்திருக்கிற கழகக் கொடியை - நாங்கள் நெஞ்சிலே ஏந்தியிருக்கிற கழக இலட்சியங்களை - எங்கள் உயிரினும் மேலான கழகத்தை - எவராலும் அழிக்க முடியாது! இது உறுதி!

அன்புள்ள,

மு. க.

28-09-1977

477. விழித்துக் கொண்டேன்!
சிரித்துக் கொண்டேன்!

உடன்பிறப்பே,

எனக்கா பதவி ஆசை? என்னைப் பார்த்தா அப்படிச் சொன்னான் அந்த ஆணவக்காரன்? அவனை என்ன பாடு படுத்துகிறேன் பார்! பதவியைக் கால் தூசுக்குச் சமானமாகக் கருதுகிற என்னைப் பார்த்துப் பதவிக்காக வேறிடம் பாய்ந்து விட்டேன் என்று கூறியவனின் நாக்கு எங்கே? இப்போதே அதனை ஒட்ட நறுக்குகிறேன்! கொண்டு வா அரிவாள்மணையை!

இப்படி ஓங்காரக் கூச்சலிட்டு வேங்கையென உறுமிக் கொண்டிருந்த ஒருவரை, அருகில் இருந்த அவரது நண்பன் ஆசுவாசப்படுத்தி அமைதியாக உட்கார வைத்துக் கேட்டான்.

உமக்குத்தான் பதவி ஆசை இல்லையே! பிறகேன் சுமார் பத்தாண்டுக் காலம் பதவியில் இருந்து விட்டு, இப்போது பதவி போனதும் அந்த இடத்தை விட்டு வேறிடத்துக்குச் சென்றீர்?

என்பதாக!

நண்பனின் இந்தக் கேள்வி செவியில் நுழைந்ததும் மீண்டும் அவர் சிலிர்த்துக் கொண்டு எழுந்தார்.

அப்போதே என் கையைக் காலைப் பிடித்துத்தான் பதவியென்னும் மலரை என் பாதரட்சையில் வைத்துவிட்டுப் போனான். என்னடா இது பெரிய தொல்லையாகப் போயிற்றே! என்றுதான் வேண்டாவிருப்பாக அதனை ஒத்துக்கொண்டு தொலைத்தேன். அவருக்குப் பிறகு, நானா - அவனா என்று எழுந்த கேள்விக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பதில் நான் என்பதுதானே! நான்தானே பதவியில் முதல் இடத்தில் அமரவேண்டும். அதனால்தான் அந்தப் பதவியைத் தூக்கி எறிந்தேன். பிறகு காலைப் பிடித்துக்கொண்டு கதறினான். ஏற்றுக் கொண்டேன்.

இந்த விளக்கத்தைக் கேட்டு நண்பன் விடுவதாக இல்லை!

சரி! நீர் கூறுவது உண்மையாகவே இருக்கட்டும். அவனுக்கு அடுத்த இடத்தில் அமருவதா என்று கேட்டுப் பதவியை உதறித்தள்ளினீர்! பிறகு அவன் கெஞ்சிய பிறகு ஏற்றுக் கொண்டீர்! இச்சையின் காரணமாக அல்ல! இரக்கத்தின் காரணமாக! அந்த அவன் இருக்கிறானே, அவன் உம்மோடு சேர்ந்து வளர்ந்தவன். நீரும் அவனும் ஒரு தலைவரின் பக்கமே இருந்து அவரது கட்டளைகளை நிறைவேற்றினீர்கள்! அப்படியிருந்த அவனுக்கு அடுத்த இடத்தில் அமருவதே அவமானம் எனக் கருதியே நீர், இப்போது யாருக்கு அடுத்த இடத்தில் அமரப் போகிறீர் தெரியுமா? யாரைத் தலைவர் என்று அழைக்கப் போகிறீர் தெரியுமா? நண்பனின் கேள்வி அவரது முகத்தைப் பொங்கும் எரிமலை போல் ஆக்கியது. பூகம்பம் கிளம்பியது போல் பேசத் தொடங்கினார்.

இப்போதும் நிச்சயமாகச் சொல்கிறேன். நான் எந்தப் பதவிக்கும் ஆசைப்பட்டு எங்கேயும் போய்விடவில்லை. அவருடைய ஆட்சியைக் காப்பாற்றுவது - அந்தப் பயலுடைய சர்வாதிகாரத்தைச் சாய்ப்பது - மக்களை வாழவைப்பது - இவைதான் என் குறிக்கோளே தவிர, எந்த மடையன் சொன்னான்? நான் பதவிக்கு ஆசைப்பட்டவன் என்று! அப்படிச் சொன்னவனைச் சோற்றால் அடித்த பிண்டம் என்பேன். பணிபுரிவேன் நாட்டுக்கு! பதவி வேண்டேன்! அதனைத் தீண்டேன்! இரண்டாவது இடத்தில் இருந்தவனை, எனக்கு மேலே முதல் இடத்துக்குக் கொண்டு வந்தார்களே! அதையே ஏற்றுக்கொள்ளாமல் பதவியை எச்சில் இலைக்குச் சமமாகக் கருதி வீசி எறிந்த நானா? எங்கள் வரிசையிலேயே இல்லாத ஒருவர் என்று என்னாலேயே வர்ணிக்கப்பட்ட ஒருவரின் கீழே போய்ப் பதவியிலே அமர்ந்து விடுவேன்?

கனல் தெறித்த இந்தப் பதிலைக் கேட்டு நண்பன் அயர்ந்து போனான். அவரது கண்கள் நெருப்பை உமிழ்ந்து கொண்டிருந்ததைப் பார்த்த அந்த நண்பனுக்கு அடுத்த கேள்வி கேட்க அச்சமாகத்தானிருந்தது. எனினும் அவன் விடுவதாக இல்லை. நிதானமாக கேட்கத் தொடங்கினான்.

பதவிக்காகப் போகவில்லை!

இதுதானே உமது வாதம்?

வாதமென்ன? இதுதான் என் முடிவு!

பதவி வந்தாலும் தொட மாட்டீர். ஏனெனில் முன்பே காலைப் பிடித்துக் கெஞ்சியல்லவா உம்மை ஏற்றுக்கொள்ள வைத்தனர்! இல்லையா?

ஆமாம்! ஆமாம்! ஆமாம்!

அப்படியானால் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்பதுபோல் - நான் பதவி எதையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று சொல்லுகிறீர்?

அதிலென்ன சந்தேகம்?

ஆட்சிக்குத் துணையாக இருப்பேன். கட்சியைக் கட்டிக் காப்பேன். பதவி எதையும் ஏற்கமாட்டேன். இப்படித்தானே இருக்கவேண்டும் உமது பதில்?

அதிலென்ன வேறுபாடு கண்டாய்?

பத்திரிகை நிருபர்கள் கேட்கிறார்கள் உம்மை. பதவி எதுவும் கிடைக்குமா? என்று! அதற்கு நீர் சொன்ன பதில் கிடைத்தாலும் ஏற்கமாட்டேன் என்றல்லவா இருக்கவேண்டும், உமது கூற்றுப்படி!

பிறகெப்படியடா இருந்தது? பித்தனே! பிறகெப்படி இருந்தது?

பதவி எதுவும் கிடைக்குமா என்று பத்திரிகையாளர் கேட்கும்போது, இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை என்று இழுத்து மழுப்பி கிடைக்கும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போலல்லவா பதில் அளித்துள்ளீர்!

ஏய்! வாயை மூடிக் கொண்டு சும்மா கிட! எனக்குப் பதவி ஆசை கிடையாது! கிடையாது!

இப்படியல்லவா நிருபர்களிடம் பதில் கூறியிருக்க வேண்டும். இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லையென ஏன் கூறினீர்?

சரி! என் கோபத்தை மேலும் கிளறாதே! வேறு ஏதாவது பேசு!

வருகிற பதவியை சீக்கிரமே பெற்றுக் கொள்க! ஏனென்றால் உம்மையும் உமது சகாக்களையும் இன்று ஆட்சியில் இருப்பவர் சேர்த்துக் கொண்டதே தவறு என்று வார ஏடுகள் கேலிச் சித்திரம் போடுகின்றன. நாள் ஏடுகள் கட்டுரை தீட்டுகின்றன இத்தனைக்கும் அவைகள் அவரை ஆதரிக்கும் ஏடுகள்!

ஆங்! அங்கே ஏற்கனவே இருக்கிறவன் எல்லாம் மகா யோக்கியனுங்க! மதுரையை முழுங்கியவன்! கப்பலைக் கவிழ்த்தவன்! அவுங்களையெல்லாம் அந்தப் பத்திரிகைக் காரனுங்களுக்கு கண்ணிலே தெரியலியா? ஒரு மந்திரிக்காக - அந்த ஆளைக் காப்பாத்துறதுக்காக - வெங்கடாத்திரி கமிஷனையே கலைச்சு, சட்டத்தையே உடைச்சுப் போட்டானுங்களே! அந்த ஊழலைக் கண்டிக்காம இந்த வார ஏடும், நாள் ஏடும் எங்கய்யா போயிருந்தன? எங்கமேல இருக்கிற குற்றச்சாட்டு, ஊழல் புகார் - இதெல்லாம் என்ன அந்நியச் செலாவணி மோசடியை விடப் பெரிசா? பல லட்ச ரூபாய் வரி ஏய்ப்பை விடக் கொடுமையானதா?

வேண்டுமென்றே அரசியலில் பழி வாங்குவதற்காக எங்கள் மீது புனைந்து வரையப்பட்ட குற்றச்சாட்டுகள்தானே அந்தப் புல்லர்களால் - கயவர்களால் கொடுக்கப்பட்டது? இவனுங்க மகா மகா யோக்கியன் மாதிரி என்மேல் புகார் சொல்ல வந்துட்டானுங்களா? இன்னைக்கு மந்திரியா இருக்கிற யாரையும்விட நான் ஒண்ணும் மட்டமானவன் இல்லை! சட்டசபையிலே சொத்துக் கணக்கைக்கூட கொடுக்காமல் சட்டசபைக்கே வராமல் சம்பளத்தை மட்டும் வாங்கிக்கொண்டு.....

இப்படி கோடையிடியென முழங்கிக் கொண்டிருந்தவரை, நண்பன் தடுத்து -

போதும்! போதும்! நீர் பழைய இடத்திலே இருப்பதாக ஞாபகமா? புது இடம் வந்தாச்சு! முன்பு பேசியதையே பேச ஆரம்பித்து விட்டீரே! ஜாக்ரதை! எதையாவது பேசி ஏமாந்து விடாதீர்! பதவியைப் பற்றி இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை, என்று நேற்றுதான் நிருபர்களிடம் கூறியிருக்கிறீர் - அதை மறந்துவிட வேண்டாம்.

உடன்பிறப்பே! யார் என்று தெரியவில்லை - இப்படி இரண்டு உருவங்கள் கனவிலே தோன்றி உரையாடின! பிறகு விழித்துக் கொண்டேன். கண்ட கனவை நினைத்து எனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டேன்.

அன்புள்ள,

மு. க.

29-09-1977

478. பச்சைக் கொடியும் - சிவப்புக் கொடியும்!

உடன்பிறப்பே,

நண்பர் மனோகரன் அவர்களுக்கு நம்மை நோக்கி அறைகூவல் விடவும் தெரியும். அந்த அறைகூவலை ஏற்றுக்கொள்ள நாம் முன்வந்தால் அறைகூவல் விட்ட வேகத்திலேயே ஆமைபோல் அடங்கி ஒடுங்கி - தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் தெரியும்.

செப்டம்பர் முதல் வாரத்தில் ஒரு அறைகூவலை விடுத்துவிட்டு, அக்கம்பக்கம் பார்த்து அருகில் உள்ள அத்யந்த நண்பர்களிடம் தன் வீரப்பிரதாபத்தைத் தோளைக் குலுக்கிக் காட்டிவிட்டு, எங்கே பதில்? எங்கே? எங்கே? கருணாநிதி, தயாரா? என்று கேட்டார்!

என்ன அறைகூவல் தெரியுமா? தி.மு.கழகத்தினர் மீதுள்ள ஊழல் புகார்கள் பற்றி ஏராளமான கோப்புகள் இருக்கின்றன. அவைகளை முதலமைச்சரும் - நிதி அமைச்சரான நானும் - எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதியிடம் காட்டுவதற்குத் தயார்! கருணாநிதி பார்க்கத் தயாரா?

இதுதான் அந்த வீராதிவீரரின் அறைகூவல். அடுத்த நாளே சிதம்பரம் பொதுக்கூட்டத்தில் நான் அந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டேன். எல்லாக் கோப்புகளையும் பார்க்கத் தயார்! அத்துடன் சர்க்கார் நிலத்தை சத்தியா ஸ்டுடியோவுக்குக் குத்தகைக்கு வாங்கியது பற்றிய அனைத்துக் கோப்புகளையும் கொண்டு வர வேண்டும்! எந்தத் தேதி? என்ன நேரம்? எந்த இடம்? குறித்தனுப்புக! என்று பதில் அளித்தேன்.

பிறகு மனோகரன் ஒரு வார காலம் மூச்சு விடவில்லை. வெளிநாடு போயிருப்பாரோ என்று எண்ணினேன். அப்படி எதுவுமில்லை. தமிழ்நாட்டிலேதான் இருந்தார். ஆனால் பதில்தான் சொல்லவில்லை.

பிறகு, கடந்த வாரம் தான் இருக்கிறேன் என்பதைக் காட்டிக்கொள்ள வடசென்னையில் ஒரு கூட்டத்தில் மீண்டும் ஒரு அறைகூவல்! கருணாநிதி, தி.மு.க.வை, அ.தி.மு.க.வுடன் இணைத்து விடத் தூதுவர்களை அனுப்பினார். அந்தத் தூதுவர்கள் எம்.ஜி.ஆருடன் பேசியதற்கு டேப்புகள் இருக்கின்றன என்று கூறி இதைக் கருணாநிதி மறுக்க முடியுமா? என்று கேட்டார்.

அடுத்தநாள் வில்லிவாக்கத்தில் பேசிய நான் - அப்படி டேப்புகள் இருந்தால் சட்டசபையில் ஒலிபரப்பத் தயாரா? அல்லது சபாநாயகர் அறையில் ஒலிபரப்பத் தயாரா? என்னிடமும் சில முக்கியமான டேப்புகள் இருக்கின்றன. இரண்டு பேரிடம் உள்ள டேப்புகளை ஒலிபரப்பலாமா? அல்லது சபாநாயகர் அறையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் முன்னிலையில் ஒலிபரப்ப நான் தயார்! நீங்கள் தயாரா? என்று கேட்டேன்.

இதற்கு மனோகரன் ஒரு மழுப்பலான விடையை அளித்து ஓடிப்போக முயலுகிறார் - கருணாநிதியிடமுள்ள டேப்புகளை கண்ணப்பர் திடல் பொதுக்கூட்டத்தில் போட்டுக் காட்டட்டும் என்று கேலி செய்வதன் மூலம் தப்பித்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறார். கண்ணப்பர் திடல் கூட்டத்திலும் என்னிடமுள்ள டேப்புகளை போட்டுக் காட்டத் தயார்! அந்தக் கூட்டத்திலேயே மனோகரன், நான் எம்.ஜி.ஆர். அவர்களிடம் தூது அனுப்பியதற்கான ஆதாரமுள்ளதாகக் கூறப்படுகிற டேப்புகளைப் போட்டுக் காட்டத் தயாரா?

தயார் என்றால் கண்ணப்பர் திடல் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இப்போதே தொடங்கிவிடலாம்! மனோகரன் அவர்களின் பதிலுக்காகக் காத்திருக்கிறேன்.

விலங்கு மாட்டுதல்

சிறையில் அடைத்தல்

போலீஸ் ஜீப்பில் ஊர்வலம் விடுதல்

இவை போன்ற பேச்சுகளைக் கடந்த இரண்டு மாத காலமாக முதலமைச்சர் எம்.ஜி.ஆரும், மற்ற அமைச்சர்களும் ஊருக்கு ஊர் - கூட்டத்திற்குக் கூட்டம் - எந்த நிகழ்ச்சியானாலும் - பேசி வருவதைக் குறிப்பிட்டு, பத்திரிகை நிருபர்கள் மனோகரனை நோக்கி சரமாரியான கேள்விகளைத் தொடுத்திருக்கின்றனர்.

பதில் சொல்ல இயலாமல் திணறிப்போன அமைச்சர் மனோகரன், பிரச்சினையை ஒருவாறு முடித்து நிருபர்களிடம் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள புதிதாகத் தானும், மற்ற அமைச்சர்களும் பெற்றுள்ள ஞானோதயத்தை எடுத்துக் கூறியுள்ளார். இனிமேல் இதுபோன்ற சாதாரண விஷயங்களைக் குறித்து முக்கியமாகப் பேசுவதை விடுத்து, நாட்டு நன்மைக்கான காரியங்களைப் பற்றி மட்டும் பேசுவது என்று வைத்திருக்கிறோம்.

என்று அறிவித்திருக்கிறார். இப்போதாவது இந்த அறிவோதயம் ஏற்பட்டதே என்று பாராட்டத்தான் வேண்டும்.

காவிரிப் பிரச்சினை

தொழிலாளர் பிரச்சினை

அனைத்து மாநிலங்களுக்கும்

உணவு தானியம் சென்றிட

கதவு திறக்கப்படுவதால்

ஏற்படக்கூடிய பிரச்சினை

இப்படிப் பலப் பிரச்சினைகளை சமாளித்து வெற்றி காண வேண்டும்.

16,000 நியாய விலைக்கடைகள் ரெவின்யூ கிராமம் ஒன்று தவறாமல் வைக்கப்படும் என்று கவர்னர் உரையில் அறிவித்த அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்குவதைப் பற்றி சிந்திப்பதற்கு, ஆரம்பிக்கக் குறைந்தபட்சம் ஒரு துவக்க விழாவுக்கான ஏற்பாடுகளையாவது கவனிக்க முயற்சியெடுப்பது பற்றி யோசித்துப் பார்க்க முடிவெடுப்பது பற்றிப் பரிசீலனை செய்தாக வேண்டும்.

10,000 போலீஸ்காரர்களை நியமிப்பதில் கலந்து ஆலோசிப்பது பற்றி அதிகாரிகளிடம் பேசிப் பார்த்து, அதில் என்ன வகையான முறைகளைக் கடைப்பிடிக்கலாம் என்பதற்கு வழிவகைகள் இருக்கிறதா என்பதைக் கூடிப் பேசிட, ஒருநாள் நிச்சயிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லாமல் இருக்க முடியாது என்பது பற்றியும் தீர்மானிக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்குத் தினக்கூலியை மாற்றி மாதச் சம்பளம், அதன் தொடர்பாக போனஸ்கள் கொடுக்கும் ஏற்பாட்டுக்கு, நெல் பயிரிடும் விவசாயிகளையும், நெல்லைத் தவிர மற்ற

பயிர்கள் விளைவிக்கும் விவசாயிகளையும் கொண்ட ஒரு மாநாடு கூட்டுவதற்கு முன்கூட்டி எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதற்கு ஒரு குழு அமைக்கலாமா என்பதை அறிந்து கொள்ளவும், அறிந்ததைச் சொல்லவும் ஒரு பூர்வாங்கக் குழுவை நியமிப்பது பற்றியும், அமைச்சரவைக் கூட்டத்தில் பேசுவது பற்றி எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டாக வேண்டும்.

தபால் நிலையங்களில் கடன் கொடுப்பதை தனிப் பிரிவாக ஆக்கலாமா? அல்லது தபாலாபீஸ் திண்ணைகளில் வாடகைக்கு இடம் பிடித்து வட்டிக்குக் கொடுத்து வாங்கலாமா என்பது பற்றி மத்திய அரசு அமைச்சர்களிடமோ, மாநில அரசு அதிகாரிகளிடமோ, பேசுவது எப்படி என்பதற்கான தகவல்களைக் கோப்புகளில் பார்த்து; முடியுமானால் அந்தக் கோப்புகளை யாரையாவது உரக்கப் படிக்கச் சொல்லி, டேப்புகள் எடுத்து அந்த டேப்புகளை கேப்புக்குள் வைத்து டெல்லிக்கு எடுத்துச் சென்று விவாதிப்பது பற்றி விரிவாகப் பேசுவது குறித்து மனிதாபிமான கண்ணோட்டத்துடன் அண்ணாயிசம் என்ன சொல்லுகிறதோ அந்த அமரர் அண்ணாவின் நாமம் வாழ்க என்று கூறி தபாலாபீஸ் கடன்களை வழங்கிட முடிவு செய்வதாக முடிவு செய்யவேண்டும்.

இப்படி தேர்தல் நேரத்தில் அறிவிக்கப்பட்ட எத்தனையோ வாக்குறுதிகளைப் பற்றிப் பேசாமல், கைது - விலங்கு - ஜீப் ஊர்வலம் - என்று பேசிக் கொண்டிருந்தது தவறு என்பதை மனோகரன் இப்போதாவது உணர்ந்து கொண்டாரே! அதற்கு அனைவரும் அவரது திறமையைப் புகழத்தான் வேண்டும்!

திருப்பதியில் பிரதமர் மொரார்ஜி கூறியதாக அனந்தசயனம் அய்யங்கார் கூறியபிறகுதான் இவர்கள், கருணாநிதியைக் கைது செய்வது பற்றிய விவகாரத்தையே பேசினார்களாம்!

திருப்பதிக்கு பிரதமர் மொரார்ஜி அவர்கள் சென்றது செப்டம்பர் 22-ஆம் நாள்! பிரதமர் கூறியதாக அவசர அவசரமாக ஏடுகளுக்கு அங்குள்ள அய்யங்கார் சுவாமிகள் அறிக்கை விடுத்தது செப்டம்பர் 23-ஆம் நாள்!

அய்யங்கார் சுவாமிகளுக்கு இந்திரா காந்தி மீது தூசிபடக் கூடாது என்று கவலை! ஆந்திர முதல்வர் வெங்கல்ராவ் மீதுள்ள விசாரணையைப் பற்றி நினைவு வரவில்லை! அந்தப் பற்று இருக்கிறதே! அது சுவாமிகளின் கண்ணை மறைத்து

விட்டது! சும்மாவா சொன்னார் பெரியார்? சில பேருக்கு உடம்பெல்லாம் விஷம் என்று! எல்லோருக்குமல்ல! திருப்பதியாரைப் போல சில பேருக்குத்தான்!

பிரதமர், சர்க்காரியா கமிஷன் பற்றி கூறிய கருத்து செப்டம்பர் 23-ந்தேதி அனந்தசயனம் அவர்களால் வெளியிடப்படுகிறது.

பிரதமர் சொன்னதைத்தான் நான் சொல்லுகிறேன் - சொன்னேன் - அல்லது அ.தி.மு.க. அமைச்சர்கள் சொன்னோம் - என்று மனோகரன் கூறுகிறார்.

ஆகஸ்டு 31-ஆம் நாள் அமைச்சர் ராகவானந்தம் திருச்சி உறையூரில் தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கருணாநிதி உட்பட கைது செய்யப்படும் நாள் விரைவில் வருகிறது என்று பேசியிருக்கிறார்.

செப்டம்பர் 9 - நாகர்கோயிலில் பேசிய மனோகரன், கருணாநிதியைக் கைது செய்து ஜீப் காரில் வைத்து ஊர்வலம் விடுவோம் என்று பேசியிருக்கிறார்.

செப்டம்பர் 18 - சென்னை பெரியார் சிலை திறப்பு விழாவில் முதல்வர் எம்.ஜி.ஆர்., கருணாநிதி சிறை செல்வது என்பது நடக்கத்தான் போகிறது என்று முழக்கமே செய்திருக்கிறார்.

இவ்வளவுக்குப் பிறகு, நிருபர்களிடம் மனோகரன் சொல்கிறார். பிரதமர் மொரார்ஜி திருப்பதியில் பச்சைக்கொடி காட்டிய பிறகுதான் தாங்கள், இதைப் பேசினோம் என்று!

திருப்பதியில் பச்சைக்கொடி காட்டியது, ஸ்ரீமான் அய்யங்கார்!

அய்யங்காரின் பச்சைக்கொடியைப் பார்த்து இங்குள்ள ஆட்சியாளர் தங்கள் பயணத்தைத் தொடருவார்களேயானால், தமிழ் மக்களின் சிவப்புக் கொடியையும் சந்திக்கத் தயாராகத்தான் இருக்க வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

01-10-1977

479. வீ“ரப்பர்” பாம்பு சீறுகிறது!

உடன்பிறப்பே,

★ புரட்சித் தலைவர் அவர்கள் கருணாநிதியை நோக்கித் தர்மயுத்தத்திற்குப் போர்க்குரல் எழுப்பினார்.

★ அண்ணாவின் பெயர் மறைக்கப்பட்டு விட்டது என்று சொன்னவர்கள் மீது கருணாநிதி பாய்ந்தார். இறுதியில் அண்ணாவின் இதயக்கனி எம்.ஜி.ஆர். மீதே பாய்ந்தார். விஷப்பாம்பு பால் வார்த்தவனை நோக்கியே படமெடுத்தாட ஆரம்பித்தது.

★ வரம் கொடுத்தவன் தலையிலேயே கைவைக்க எண்ணிய பஸ்மாசூரனைப் போல கருணாநிதி, புரட்சித் தலைவர் மீது பாய்ச்சலைக் காட்டினார்.

★ அரசியல் கோமாளியாகத்தான் இன்றைக்குக் கருணாநிதி நடந்து வருகிறார்.

“வீரப்பர்” என்று ஒரு அமைச்சர் இருக்கிறாரே! சென்னை நாகப்பையர் தெருவில் நடந்த கூட்டத்தில் பேசியபோது அவர் உதிர்த்த வாசகங்கள்தான் இவைகள்!

பேசிய இடம் நாகப்பையர் தெருவல்லவா? அதனால் நாகம் - பாம்பு - விஷம் - இவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேசி யிருக்கிறார்.

என்னை அரசியல் கோமாளி என்கிறார் வீரப்பர். அந்தப் பட்டம் யாருக்குரியது என்பதை தமிழக மக்கள் நன்கறிவார்கள். ஏன் அகில இந்திய அரசியல்வாதிகளும் அறிவார்கள்.

நான் பஸ்மாசூரனாம்! எனக்கு வரம் கொடுத்த சிவ பெருமானாம், எம்.ஜி.ராமச்சந்திரன். இதுவும் வீரப்பருடைய காலட்சேபத்தில் ஒரு பகுதிதான்!

பஸ்மாசூரன் கதையை வீரப்பர் முழுமையாகப் படித்திருப்பார் என்று நம்புகிறேன்.

சிவன் பஸ்மாசூரனுக்கு வரம் கொடுக்கிறார் - "யார் தலையில் கை வைத்தாலும் எரிந்து விடுவார்கள்" என்பதாக!

சிவன் தலையிலேயே கைவைக்க பஸ்மாசூரன் பாய்கிறான். சிவன் ஓடுகிறார்! மகாவிஷ்ணு சிவனைக் காப்பாற்றுவதற்காக மோகினி அவதாரமெடுத்து பஸ்மாசூரனை மயக்குகிறார். மோகினியின் தந்திரத்தில் ஏமாந்த பஸ்மாசூரன், தன் தலையில் கைவைத்துக் கொண்டு எரிந்து போய்விடுகிறான். அந்த மோகினியின் மீது சிவனுக்கு ஆசை ஏற்படுகிறது. ஆண் மோகினியும் சிவனும் காதல் கொண்டு கலவியில் ஈடுபடுகிறார்கள். அதில் சிந்திய விந்தினை, மோகினி அவதாரம் கையால் ஏந்துகிறது. அந்தக் கையிலே பிறக்கிறது ஒரு குழந்தை! அதுவே கையனார்! ஆம் ஐயனார்! அதாவது ஐயப்பன்! சாமீ சரணம் ஐயப்பா! இப்படிப் போகிறது. அந்தக் கதை, பல கிளைகளாக!

வீரப்பரின் கதைப்படி நான் பஸ்மாசூரன் - எம்.ஜி.ஆர். சிவபெருமான்! அந்த மோகினி அவதாரம் யார்? ஒருவேளை வீரப்பர்தானோ, அவர்தான் விளக்க வேண்டும்!

தர்மயுத்தம் செய்தாராம் எம்.ஜி.ஆர்! வீரப்பர் கூறுகிறார்!

பல கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்வேன், என்னை யாரும் கேட்க முடியாது என்று நடத்தினாரே! அதற்குப் பெயர்தான் தர்மயுத்தமா?

கறுப்புப் பணம் வாங்குவதை பகிரங்கமாக ஒப்புக் கொண்டாரே; அதற்குப் பெயர்தான் தர்மயுத்தமா?

முதல்வரான பிறகு விசாரணைக் கமிஷன் முன்னால் குற்றம் சாட்டப்பட்டு நின்ற ஒரு அ.தி.மு.க. அமைச்சரைக் காப்பாற்ற சட்டத்தையே தூக்கியெறிந்து அதனை ரத்து செய்தாரே! அதற்குப் பெயர் தர்மயுத்தமா?

யார் யார் மீது ஊழல் புகார் சொன்னாரோ, அவர்களை யெல்லாம் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டிருக்கிறாரே! அதற்குப் பெயர் தர்மயுத்தமா?

வீரப்பர்தான் விளக்க வேண்டும். அண்ணாவின் பெயரை நான் மறைத்துவிட்டேனாம். அண்டப் புளுகன் - ஆகாயப் புளுகன் - இவனெல்லாம் தோற்றுவிடுவான், இந்த அமைச்சரின் முன்னே!

★ சென்னையிலே அண்ணாசாலை

★ அண்ணா மேம்பாலம்

★ அண்ணா பிறந்தநாள் போலீஸ் பதக்கம்

★ அண்ணா நகர்கள்

★ தமிழகமெங்கும் அண்ணா சிலைகள்

★ தெ.ஆ.மாவட்டத்தில் அண்ணா கிராம ஊராட்சி ஒன்றியம்

★ அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரிகள்

★ அண்ணா பண்ணை திருச்சியில்

★ அண்ணா நினைவு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம் காஞ்சிக்கருகே!

இப்படி எழுதவே ஏடு கொள்ளாத அளவுக்கு அண்ணன் பெயரால் நினைவுச் சின்னங்கள் எழுப்பிய நம்மைப் பார்த்து வீரப்பர் "அண்ணாவை மறந்தவர்கள்" என்று கூறுகிறார்.

கருணாநிதிக்கு வரம் கொடுத்தவர் எம்.ஜி.ஆர்., பால் வார்த்தவர் எம்.ஜி.ஆர். என்கிறார் வீரப்பர்!

'மந்திரி குமாரி' படத்தில் கதாநாயகனாக நடித்த எம்.ஜி.ஆர். முகவாய்க்கட்டையில் ஒரு சிறு தாடி வைக்கப்பட்டு நடித்தாரே! ஏன் என்று எம்.ஜி.ஆரைக் கேட்டால் யார் யாருக்கு, பால் வார்த்தார் என்பது தெரியும்! விபரம் புரியும் வீரப்பருக்கு!

- விளக்க விரும்பவில்லை நான்! நானும் எம்.ஜி.ஆரும்- விவாதிக்க வேண்டிய விஷயங்கள் அவை! அவர் சும்மாயிருக்கும்போது சுற்றியிருக்கிற வீரப்பர்களின் கூச்சலுக்காக நான் அவற்றையெல்லாம் விளக்கி நேரத்தை வீணாக்கப் போவதில்லை!

உடன்பிறப்பே!

விஷப்பாம்பாம் நான் -

வீ-"ரப்பர்" பாம்பு கூறுகிறது!

இல்லை, சீறுகிறது!

என் செய்வது! ஏன் கருடா? சுகமா? என்ற கதைதான்!

அன்புள்ள,

மு.க.

02-10-1977

480. முரண்பாட்டின் சிகரம்; முதல்வரின் பேச்சு!

உடன்பிறப்பே,

நிறைவேற்ற முடியாத அறிவிப்புகளைச் செய்து விட்டு, அதற்கோர் ஆரம்ப விளம்பரத்தைப் பெற்றுக் கொள்வதில் எப்போதுமே எம்.ஜி.ஆர். அவர்கள் மிகவும் திறமைசாலி!

திடீரென்று ஏடுகளில் ஒரு லட்ச ரூபாய் எம்.ஜி.ஆர். நன்கொடை அறிவிப்பு என ஒரு செய்தி வரும். மக்களின் வாழ்த்துகள் குவியும். அதன்பிறகு அந்த நன்கொடை கொடுக்கப்பட்டதா? பாதியளவு தரப்பட்டதா? ஐயாயிரம் அல்லது பத்தாயிரம் என்ற அளவோடு நின்று விட்டதா? இந்தச் செய்திகள் எதுவும் வராத காரணத்தால் எம்.ஜி.ஆர்., அந்த லட்ச ரூபாய் நன்கொடையைத் தந்துவிட்டார் என்றே எல்லோரும் எண்ணிக் கொண்டிருப்பார்கள். இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளின்போது அறிவிக்கப்பட்ட நன்கொடைகளில் நான்கில் ஒரு பகுதி அறிவிப்புகள்தான் அவரால் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.

அந்த அறிவிப்புகள், மக்களிடத்தில் தன்னையொரு குமண வள்ளலாகவும், பாரி வள்ளலாகவும் காட்டிக்கொண்டு - திரைப்படத்துறையில் வெற்றிக் கொடி நாட்டுவதற்காகத் தனிப்பட்ட முறையில் செய்யப்பட்டவைகளாகும்.

ஆனால், இன்றைக்கு இந்த மாநிலத்தின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும், அதே மாதிரியான அறிவிப்புகளின் மூலம், மக்களை ஏமாற்றலாம் என்று எண்ணுவது முறையாகாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பேசும்போது, மனதில் நினைத்ததையெல்லாம் - மன்னிக்கவேண்டும் வாயில் வந்ததையெல்லாம் அரசாங்க அறிவிப்புகளாகச் செய்துவிட்டு - அதை நிறைவேற்ற முடியாமல்

தவிக்கும்போது தனக்கு ஏற்படுகிற எரிச்சலை எதிர்க்கட்சியின்மீது கொட்டித் தீர்த்துக் கொள்வது இன்றைய முதலமைச்சரின் தொடர்பணியாக இருக்கிறது.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையெனப்படும் ஆளுநர் உரையில், ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் தலா ஒரு நியாய விலைக்கடை திறக்கப்படும் என்றும், அந்தக் கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற எல்லா மளிகைச் சாமான்களும் நியாய விலையில் கிடைக்குமென்றும் அறிவிக்கப்பட்டது, சட்டப்பேரவை மண்டபத்தில்! அப்போது மண்டபமே அதிரும்படி ஆளுங்கட்சியினர் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தில் ஆளுங்கட்சியினர், அவர்தம் தோழமைக் கட்சியினர் எல்லோருமே அந்த 16,000 ரெவின்யூ கிராம நியாய விலைக் கடைகளைப் பாராட்டி, புகழ்ந்து, வரவேற்று, சிறப்புப் பாயிரம் பாடினர். இதுவரையில் இப்படியொரு கவர்னர் உரையைக் கண்டதேயில்லை என்றுகூடப் பேசினர். அதாவது அண்ணா காலத்தில் படிக்கப்பட்ட கவர்னர் உரையையும் சேர்த்துத்தான் அப்படிச் சொன்னார்கள். இதுவரையில் இப்படியொரு உரை வந்ததே இல்லையென்று!

அந்த உரை மீது நான் பேசியபோது ஒரு நியாயவிலைக் கடை வைப்பது என்றாலே மாதமொன்றுக்கு நிர்வாகச் செலவே ஆயிரம் ரூபாய் ஆகுமே! அஃதன்னியில் முதலீடு வேறு கோடிக்கணக்கில் செய்ய வேண்டியிருக்குமே! அவற்றைப் பற்றியெல்லாம் நிதித்துறை மற்றும் அரசு அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து விட்டுத்தான் அறிவித்திருக்கிறீர்களா? என்று கேட்டேன். இறுதியாகப் பேசிய முதலமைச்சர், என் உரையைக் குறிப்பிட்டு எல்லா அதிகாரிகளையும் கலந்து பேசிய பிறகுதான் நியாய விலைக்கடைகள் பற்றிய அறிவிப்பைச் செய்திருப்பதாகக் கூறினார்.

பிறகு சில நாட்கள் கழித்து அவையில் நிதிநிலை அறிக்கை படிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் 16000 நியாய விலைக் கடைகளைப் பற்றிய குறிப்பே இல்லை! அந்தக் கடைகளை அமைக்க முறையாக ஒரு தொகையினை, பட்ஜெட்டில் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். அப்படியும் எந்தக் தகவலும் அந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை. நிதி நிலை அறிக்கை

மீது நான் பேசுகிற வாய்ப்பைப் பெற்றபோது கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்ட 16,000 நியாய விலைக்கடைகள் என்ன ஆயின? அதற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு எங்கே? என்று கேட்டேன். முதல்வர் குறுக்கிட்டு விளக்கமளித்தார். சட்டசபை முடிந்தவுடன் அதிகாரிகளுடன் கலந்துபேசி, உடனடியாக அந்தக் கடைகள் அமைக்கும் வேலை தொடங்கும் என்பதுதான் அவர் அளித்த விளக்கம்.

சட்டசபை முடிந்து ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. எதிர்க்கட்சியாக விளங்கும் தி.மு.கழகம், அந்த 16,000 நியாய விலைக்கடைகள் எங்கே? என்று ஏடுகள் வாயிலாகக் கேட்பதும் - மேடைகள் வாயிலாக முழக்குவதும் - அந்தக் கட்சிக்குரிய பொறுப்பு வாய்ந்த கடமையாகும்!

அதற்கு ஒரு மாத காலமாய்ப் பதில் கூற முடியாமல் தவித்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆருக்கு, இப்போது தன்னை மறைத்துக்கொள்ள ஒரு போர்வை கிடைத்திருக்கிறது.

இரண்டொரு நாட்களுக்கு முன் இந்திய அரசு, மாநிலங்களுக்கிடையே இருந்த அரிசிப் போக்குவரத்துத் தடையை நீக்கிவிட்டதல்லவா? அதைப் பிடித்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்.!

ஆகா! நான் நியாய விலைக்கடை எப்படி திறக்க முடியும்? தமிழ்நாட்டு அரிசியெல்லாம் வெளிமாநிலத்துக்குப் போய் விடுமே! இதைப்பற்றி கருணாநிதி கவலைப்படுகிறாரா? எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும், முன்னாள் முதல்வர் என்ற முறையிலும் அவர், பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கக்கூடாதா?

அரிசிப் போக்குவரத்துத் தடையை அகில இந்திய அளவில் எல்லா மாநிலங்களிலும் நீக்கியிருக்கும் செயல், உண்மையிலேயே தமிழ்நாட்டைப் பெரிதும் பாதிக்கக் கூடிய ஒன்றாகும்.

இப்படியொரு உத்தரவு செப்டம்பர் 28-ஆம் நாள் வெளிவந்தது. மறுநாள் செப்டம்பர் 29-ஆம் நாள் நான் பொன்னேரி கூட்டத்திலும், திருவள்ளூர் கூட்டத்திலும் இந்த உத்திரவால் தமிழ்நாட்டுக்கு ஏற்படும் தீமையைச் சுட்டிக்காட்டி இருக்கிறேன். நான் மட்டுமல்ல அந்தக் கூட்டங்களில் பேசிய நண்பர்கள் வீராசாமி, மதுராந்தகம் ஆறுமுகம் ஆகியோரும்

பேசினார்கள்! இந்த மாதிரியொரு முடிவுக்குத் தமிழக அரசு எப்படி ஒப்புதல் தெரிவித்தது? என்றுகூட நண்பர் வீராசாமி அந்தக் கூட்டத்தில் வினா எழுப்பினார். நேற்று முன்தினம் நான் எழுதிய கடிதத்தில்கூட அதைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன். ஆனால் 28-ந் தேதி உத்திரவு பற்றி எம்.ஜி.ஆர்.; ஆம் - ஒரு மாநில முதலமைச்சர் - அக்டோபர் முதல் தேதிதான் கருத்து தெரிவிக்கிறார். இதற்கிடையே அவர், டெல்லிக்கு நமது அரசின் மறுப்பினைத் தெரிவித்தாரா? கடிதமா? தந்தியா? நிருபர்களிடம் கூறினாரா? நிருபர்களையாவது சந்தித்தாரா? அமைச்சரவைக் கூட்டத்திலாவது டெல்லியின் உத்திரவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளதா?

இந்த உத்தரவு நடைமுறைக்கு வருவதால், நியாய விலைக்கடைகளின் அவசியம் அதிகமாகிறதே தவிர, எம்.ஜி.ஆர். கூறுவது போல எப்படி அந்த நியாயவிலைக் கடைகள் அமைக்கும் திட்டத்தை கைவிடமுடியும்? நியாயவிலைக் கடைகள் என்றால் அரசாங்கமே உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்து அவற்றை நியாய விலையில் விற்பதுதானே! அதை இப்போதும் செய்யலாமே! விவசாயிகளுக்குக் கழக ஆட்சியில் தரப்பட்டது போல பத்து ரூபாய் போனசும், ஐந்து ரூபாய் போக்குவரத்து செலவுமாக மொத்தம் பதினைந்து ரூபாய் கொள்முதல் விலையில் அதிகம் தரப்படுமா? என்று கேட்டேன்! அதைவிட அதிகமாகக் கொடுக்கப் போகிறோம் என்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் அறிவித்து அப்போதும் ஒரு கரகோஷத்தைப் பெற்றார் - அறிவித்ததைப் போல போனசும், போக்குவரத்துச் செலவும் அதிகமாகவே கொடுத்து அரிசிக் கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகளில் விற்க வேண்டியது தானே! யார் தடுக்கிறார்கள்!

அரிசி, வெளி மாநிலங்களுக்குப் போய்விட்டால் தமிழ்நாட்டில் அரிசி கிடைக்காது என்பதை வாதத்திற்காக ஒத்துக்கொண்டாலும் - 16,000 கடைகளில் அரிசி மட்டுமல்ல, உப்பு, புளி, மிளகாய், எண்ணெய் போன்ற மளிகைச் சாமான்கள் அனைத்தும் நியாய விலையில் கிடைக்கும் என்று சபையில் அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பொருள்களை விற்கவாவது உடனடியாக நியாய விலைக்கடைகளைத் திறக்க வேண்டாமா?

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். பேச்சில் உள்ள முரண்பாட்டைக் கொஞ்சம் கவனி!

நிலைமையின் கடுமையை உணர்ந்து முன்னாள் முதல்வர் கருணாநிதி, ஒரே அரிசி மண்டலத்தை ஏற்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி எச்சரித்து பிரதமர் மொரார்ஜிக்கு, கடிதம் எழுதியிருக்க வேண்டும்.

எம்.ஜி.ஆர். பேச்சு,

தினமணி - அக்டோபர், 2.

அதே உரையில் அடுத்தபடியாக அவரே கூறுகிறார் பார்!

ஒரே அரிசி மண்டலத்தை ஏற்படுத்தும் முடிவினால் எழக்கூடிய எந்த நிலைமையையும் அ.இ.அ.தி.மு.க. அரசு சமாளிக்கும்.

எம்.ஜி.ஆர். பேச்சு,

தினமணி - அக்:- 2.

நிலைமையைச் சமாளிக்க முடியும். எந்தத் தீமையும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும் என்று பொறுப்பிலே இருக்கிற முதலமைச்சரே தைரியமாக இருக்கிறபொழுது, நான் போய் பிரதமருக்கு அபாய அறிவிப்பு கடிதம் எழுதினால் பிரதமர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்.

சுடச்சுடப் பதில் எழுதமாட்டாரா?

பைத்தியக்காரா! அரிசி மண்டலம் ஒரே மண்டலமாக ஆவதால் ஏற்படக்கூடிய எந்த நிலைமையையும் எம்.ஜி.ஆர். சமாளிப்பதாகக் கூறியபிறகு, நீ எதற்காக அதிர்ச்சி அடைகிறாய்? என்று அந்தக் கடிதத்தில் என்னைத் தலைகுனிய வைக்கும் விதத்தில் கேள்வி கேட்கமாட்டாரா?

அறைகூவல்களையும், அறிவிப்புகளையும் வெளியிடும் போதே அவற்றை நிறைவேற்றுவதில்லையென்று சத்தியம் செய்து கொண்டு விடுகிறவர்கள், எத்தகைய முரண்பாடான கருத்துகளையும் கூறத் தயங்க மாட்டார்கள்!

அதற்குச் சிகரம் போன்றதுதான் அக்டோபர் முதல் தேதி எம்.ஜி.ஆர். சென்னையில் ஆற்றிய உரை!

அன்புள்ள,

மு. க.

03-10-1977

481. பக்கத்து நாடுகள் தரும் பாடம் பாரீர்!

உடன்பிறப்பே,

பாகிஸ்தானில் சர்வாதிகாரத்திற்கென அமைக்கப்பட்ட அடித்தளத்தில் என்னதான் ஜனநாயக மாளிகையைக் கட்டுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், ஒரு சிறு காற்றையோ அல்லது சிறு மழையையோகூட தாங்க முடியாமல் அந்த மாளிகை மண்மேடாகி விடுகிறது பார்த்தாயா? அடிக்கடி மாளிகை விழுகிறது. அடித்தளமே மிஞ்சுகிறது. காரணம், ஜனநாயகக் கோட்டத்தை சர்வாதிகாரத் தளத்தின் மேலேயே கட்டவேண்டுமென்று அங்குள்ள அரசியல்வாதிகளாயினும், அதிபர்களாயினும், அதிகாரிகளாயினும் விரும்புகின்றனர்.

பாகிஸ்தான் அமைந்தது இந்திய நாட்டு விடுதலையோடு இணைந்து! ஜனாப் ஜின்னா உயிர் வாழ்ந்த வரையில் பெரும் பிரச்சினைகள் அங்கே எழவில்லை. அவருக்குப் பின் லியாகத் அலிகான் பொதுநிகழ்ச்சியொன்றில் சுட்டுக் கொல்லப்பட்டார். கொன்றவனை அங்கு சூழ்ந்திருந்த மக்கள் கிழித்தெறிந்து விட்டார்கள். கொலைக்கு, யார் தூண்டுதல் என்பது தெரியாமலே போய்விடவேண்டுமென்றுதான் கொலைகாரனையும் அங்கேயே கொன்று தீர்த்தார்கள் என்றும் கூறுவோர் உண்டு. அதற்குப் பிறகு பாகிஸ்தானில் குழப்பமான அரசுகள்தான்! அந்தக் குழப்பத்திற்கிடையிலேயும் அந்த நாடு, இந்தியாவின் மீது பாய்ச்சல் நடத்தவும் - பகை கக்கவும் தொடங்கியது. இந்தியா, பாகிஸ்தானின் எதிர்ப்பைச் சமாளித்தது. தாஷ்கண்டில் சமாதான ஒப்பந்தம் நடந்தபோதுதான் இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியை இழந்தோம்.

தொடர்ந்து அமளிக் காடாகவே பாகிஸ்தான் இருந்து வந்திருக்கிறது.

பாகிஸ்தானுக்குப் பெரும் தலைவலியாகக் கிழக்கு பாகிஸ்தான் விளங்கியது. கிழக்கு பாகிஸ்தானின் எதிர்ப்புக் குரல், முஜிபூர் ரகிமான் வடிவிலே பாகிஸ்தானை மிரட்டியது. முஜிபூரையும் அவரது இயக்கத்தையும் எப்படியும் அடக்கியே தீருவதென்று பாகிஸ்தான் அதிபர் யாகியாகான் முடிவு கட்டினார். அதன் விளைவாக, முஜிபூர் கைது செய்யப்பட்டு பாகிஸ்தான் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார். சிறைக் கொட்டடிக்கு அருகே அவரைப் புதைப்பதற்கான மரணக் குழியும் அவர் கண் எதிரே தோண்டப்பட்டது. கிழக்கு பாகிஸ்தானிலிருந்த மக்கள் அகதிகளாக இந்தியா நோக்கி வருகிற அளவுக்கு அங்கே உள்நாட்டுப் போர் உருவாயிற்று. இந்தியாவும் அதில் தலையிடவேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டது. இந்திராகாந்தியம்மையார் பிரதமர் என்ற பொறுப்பிலே இருந்து எடுத்த நடவடிக்கைகள் வெற்றிபெற்றன. பாகிஸ்தானிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிந்து விடுதலை பெற்றது.

"பங்களாதேஷ்" உதயமாயிற்று. யாகியாகானின் வீழ்ச்சியை யொட்டி அவருக்குப் பிறகு பொறுப்பேற்ற பூட்டோவின் உதவியால் முஜிபூர் ரகிமான் விடுதலை பெற்று பங்களாதேஷ் திரும்பினார். மரணத்தின் வாயிலில் நின்று கொண்டிருந்த அவர் மண்டலாதிபதியானார்! பொதுத் தேர்தலில் முஜிபூர் கட்சி பெரும்பான்மையான இடங்களைப் பெற்று முஜிபூர் பங்களாதேஷின் அதிபரானார்!

சர்வாதிகாரச் சாயல் கொண்ட ஜனநாயகத் தேர்தலாக அது அமைந்துவிட்டதன் விளைவாகவும் - ஒரே கட்சிதான் இருக்க வேண்டுமென்ற எண்ணம், அந்த ஆட்சியில் செயல்படுத்தப் பட்டதன் காரணமாகவும் - மிக விரைவில் பங்களாதேஷில் கசப்பு வளர்ந்தது.

1975 ஜூன் திங்களில் இந்தியாவில் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்டதல்லவா? அதற்கு அடுத்த இரண்டு மாதங்களில் அதாவது ஆகஸ்டு 15-ஆம் நாளில் இந்தியா ஒப்புக்காகச் சுதந்திரநாளைக் கொண்டாடிக் கொண்டிருந்தபோது, முஜிபூர் ரகிமானும் அவரது குடும்பத்தினரும் பூண்டோடு

அழிக்கப்பட்டனர் எனும் விதத்தில் கொலை வெறிக்கு ஆளாக்கப்பட்டு, ராணுவத்தினர் ஆட்சியைப் பிடித்துக்கொண்டனர்.

அதற்குப் பிறகும் அதிபராக, யார் இருப்பது என்பதிலே பல குழப்பங்கள்!

முஜிபூரின் நண்பராக இருந்த முஸ்தாக் அகமது என்பவர் புதிய அதிபராகப் பொறுப்பேற்றார். மூன்றே மாதங்களில் அவர் மீது லஞ்ச ஊழல் குற்றங்களைச் சுமத்தி, ராணுவம் அவரைச் சிறைக்கு அனுப்பியது.

பிறகு அங்குள்ள உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சயீம் என்பவர் அதிபரானார்!

அவரும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு கட்டாய ஓய்வு எடுக்குமாறு செய்யப்பட்டு, அதிபர் பொறுப்பை ராணுவ தளபதி ஜியாவே ஏற்றுக்கொண்டார். இல்லை! இல்லை! எடுத்துக் கொண்டார்!

என் செய்வது! ஜனநாயகத்தை ஓட்டுமுறையில் காணலாம்! சர்வாதிகாரத்தை வேட்டுமுறையால்தான் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

கட்சிகள், ஆட்சியை மாற்றும் ஜனநாயகத்தில்!

கத்திகள், ஆட்சியை மாற்றும் சர்வாதிகாரத்தில்!

இரண்டாவது குறிப்பிட்ட முறைப்படி தான் பாகிஸ்தானும், அதிலிருந்து விடுதலை பெற்ற பங்களாதேஷும் இயங்கி வருகின்றன.

உலகில் சர்வாதிகார நாடுகள் அனைத்திலும் இப்படித்தான் ஆட்சி மாற்றங்கள் நடந்திடக் காண்கிறோம்.

ஒன்றாக இருந்த இந்தியாவில் இப்போது பாகிஸ்தான் - பங்களா தேஷ் ஆகிய இரண்டு சர்வாதிகார நாடுகளைக் காணுகிறோம். நல்லவேளை, இந்தியா தப்பித்துக் கொண்டது! இரண்டாவது சுதந்திரப் போர் இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றிவிட்டது.

இன்னமும் பங்களாதேஷிலும் பாகிஸ்தானிலும் அமைதி இல்லை. பூட்டோவின் ஆட்சியில் இடையில் சில ஆண்டுகள், பாகிஸ்தான் நிம்மதியாக இருந்ததுபோல் தோன்றியது! இப்போதுதான் புரிகிறது அது மௌனமாக இருந்த எரிமலையே தவிர - ஊமையாகிவிட்ட எரிமலை அல்ல என்பது! பாகிஸ்தான் எரிமலையின் பேச்சு அங்கே மீண்டும் நெருப்பைவாரி இறைத்துக் கொண்டிருக்கிறது.

பூட்டோ நடத்திய தேர்தல் செல்லாது என ஒரே புரட்சி! அதன் விளைவாக ராணுவம், ஆட்சியைக் கைப்பற்றியது! ராணுவமே ஒழுங்கான தேர்தலை நடத்தி நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டப்போவதாக அறிவித்தது.

கொக்கு, குளத்திலே மீனை நீந்தவிட்டு வேடிக்கை பார்க்கப் போகிறேன் என்று சொன்ன கதைதான். ராணுவம், ஜனநாயகத்தை நிலைநாட்டப் போகிறேன் என்ற கதையும்!

பூட்டோ மூன்றாவது முறையாகக் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது ராணுவ கோர்ட் விசாரணை! பூட்டோ மகள் கைது!

இதற்கிடையே, பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகளுக்குத் தடை! எல்லா உரிமைகளும் பறிமுதல்! தேர்தல் இப்போது இல்லை! அதாவது கொக்கு இருக்கிறது-குளத்தில் மீனைக் காணவில்லை.

பங்களாதேஷ் விவகாரம் திடீரென வெடித்துக் கிளம்பி, தற்போதைக்கு அடங்கியிருக்கிறது.

ஐந்தாறு தளபதிகள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதிபர் ஜியா தப்பிப் பிழைத்தார் என்று கூறப்படுகிறது. இப்போது அமைதி நிலவுவதாக ஜியா வானொலி மூலம் அறிவிக்கிறார்.

பாம்பு படமெடுத்துச் சீறியது. இப்போது புற்றுக்குள் புகுந்து விட்டது. அதனால் புற்றுக்குள்ளே பாம்பு இல்லையெனக் கூறிவிட முடியாதல்லவா?

சர்வாதிகாரம், அனுபவரீதியாகத் தருகிற பாடம் இதுதான்!


எனவே, சர்வாதிகாரம் எந்த உருவிலே வந்தாலும் - எத்தனை சாகசங்கள் புரிந்து நுழைந்தாலும் - "சத்தியமாக நான் ஜனநாயகம்

தான்" என்று சொல்லிக்கொண்டு தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாலும் - அதனை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பது மட்டுமல்ல! எட்டி உதைப்பதே நம் கடமையாக இருக்கவேண்டும் என்பதைப் பக்கத்து நாட்டு நிகழ்ச்சிகள் உணர்த்துகின்றன அல்லவா?

அன்புள்ள,

மு.க.

04-10-1977



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022